# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பதினேழு

## (VOLUME SEVENTEEN)

**1960 - 1962**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஜனவரி 2024
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/29.07.2025

# நிகழ்வுகளின் காலவரிசை

**1960**
- (மார்ச் 20) - ஜூன் 20, பூனா குருபிரசாத் தரிசன நிகழ்ச்சி தொடர்ச்சி
- மே 15, குருபிரசாத் பொது தரிசன நிகழ்ச்சி

**1960**
- ஜூன் 04 , 06 - அகில இந்திய காங்கிரஸ் அரசியல் கட்சி தலைவர்கள் - ஜக்ஜீவன் ராம், சஞ்சீவ ரெட்டி தரிசனத்திற்காக குருபிரசாத் வருகை

**1960**
- ஜூன் 19, குருபிரசாத்தில் 160 'ஏழை'களுக்கான தரிசன நிகழ்ச்சி
- ஜூன் 20, குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை

**1960**
- ஜூன் 21, மெஹராபாத் விஜயம்
- ஜூன் 30, ஆறு மாத கால ஏகாந்தவாசம் குறித்த சுற்றறிக்கை வெளியீடு

**1960**
- ஜூலை 1, ஆறுமாதகால ஏகாந்தவாசம் ஆரம்பம்
- அடுத்த பதினைந்து நாட்களுக்கு மஸ்த் நீல்கந்த்வாலாவுடன் பணி

**1961**
- பிப்ரவரி 25, மெஹர் பாபாவின் 67ஆவது பிறந்தநாள் - சிறப்புப் செய்தி வெளியீடு
- மார்ச் 22, பூனா, குருபிரசாத் வருகை - ஏகாந்தவாசம் தொடர்ந்தது

**1961**
- மே 15 - ஜூன் 1, குருபிரசாத் - இரண்டு வார தரிசன நிகழ்ச்சி ஆரம்பம்
- ஜூலை 12, பூனா, பந்த் கார்டன் பாலம் வழியாக பாபாஜானின் இருப்பிடம் வருகை

**1961**
- ஜூலை 12, பூனா நகரில் வரலாறு காணாத திடீர் வெள்ளப்பெருக்கு
- ஆகஸ்ட் 7 - 1962 மார்ச் 31, பாபா மெஹராஸாத் வருகை; ஏகாந்தவாசம் தொடர்ந்தது

**1962**
- மார்ச் 31, பூனா, குருபிரசாத் வருகை
- மே 13 , மெஹர் பாபாவின் நெருங்கிய மண்டலியில் ஒருவர் விஷ்ணு காலமானார்

**1962**
- ஜூலை 8, பூனா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை
- ஆகஸ்ட் 9, மெஹர் பாபாவின் ஆன்மீகத் தாயார் குல்மாய் காலமானார்

**1962**
- ஆகஸ்ட் 23, மெஹராஸாத் - கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான சிறப்புக் கூட்டம்
- அக்டோபர் 23, பாபா மண்டலியுடன் பூனா, குருபிரசாத் வருகை

**1962**
- நவம்பர் 01 - 04, பூனா குருபிரசாத்தில் கிழக்கு-மேற்கு சகவாசம்
- நவம்பர் 10, பூனாவிலிருந்து மெஹராஸாத் வருகை

**1962**
- தொடரும்...

# பொருளடக்கம்

குருபிரசாத் தரிசனம்........................................................................ 3

மெஹராஸாத் - ஆறுமாதகால ஏகாந்தவாசம்................ 53

குருபிரசாத் - ஏகாந்தவாசம், தரிசனம் .................................. 89


மெஹராஸாத் - தொடர் ஏகாந்தவாசம்.............................137

மெஹராஸாத் & பூனா .............................................................157

மெஹராபாத் இறுதி விஜயம் ..................................................196

கிழக்கு-மேற்கு சகவாசம் – பாகம் 1 .......................................206

கிழக்கு-மேற்கு சகவாசம் – பாகம் 2 .......................................269



மெஹர்  பாபா, குருபிரசாத், **1960**
(MEHER BABA, GURUPRASAD, 1960)

# குருபிரசாத் தரிசனம்

(**Darshan At Guruprasad**)

இளமைப் பருவத்திலிருந்தே, மெஹர் பாபா மீது அன்பு கொண்டிருந்த கல்லூரி பட்டதாரி ஒருவர், 1960 மே 12 வியாழன் அன்று, தனது இரு மகன்களுடன் தரிசனத்திற்காக வந்தார். பாபா அவரிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: **"ஒரு காலத்தில் நீங்கள் குழந்தையாக இருந்தீர்கள், இப்போது குழந்தைகளுடன் வந்துள்ளீர்கள். ஒருவர் வளர வளர, வாழ்வில் இடையறாத திடமான ஆசைகள் ஓடிக்கொண்டே இருக்கும். 'எனக்கு இது வேண்டும்… எனக்கு அது வேண்டும்… எனக்கு மனைவி வேண்டும்… எனக்குக் குழந்தைகள் வேண்டும்… எனக்குப் பதவி வேண்டும்… எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும், வேண்டும்!'**

**"இந்த ஆசைகளை நிறைவேற்றுவதில் நீங்கள் வெற்றி அல்லது தோல்வியடைந்தாலும், பிற்காலத்தில் எதிர்மறையான ஆசைகளின் அலை எழுகிறது; அதாவது, 'எனக்கு இது வேண்டாம்… எனக்கு அது வேண்டாம்… நான் எனது மனைவியால் சலிப்படைந்து விட்டேன்… எனது பதவியால் நான் சோர்வடைந்து போனேன்… எனக்கு வேண்டாம், எனக்கு வேண்டாம், இப்படிப் பல.**

**"உண்மையான விஷயம் என்னவெனில், நீங்கள் இன்பங்கள் என்று அழைக்கப்படுபவற்றால் உணர்ச்சிவசப்படவோ அல்லது சலிப்படையவோ கூடாது. கடவுளுடைய சித்தத்தில், முழு நம்பிக்கையுடன் ஒவ்வொரு சூழ்நிலையையும் நீங்கள் எதிர்கொள்ள வேண்டும்."**

அன்று கத்தோலிக்க பாதிரியார், தந்தை அந்தோணி எலன்ஜிமித்தம் (FATHER ANTHONY ELENJIMITTAM, 45), பாபாவை தரிசனம் செய்ய வந்தார். பாதிரியார், மும்பை பான்ட்ராவில் அமைந்த 'ஸெயின்ட் கேத்தரின் ஆஃப் ஸியனா' பள்ளிக்கூடத்தின் (ST. CATHERINE OF SIENNA SCHOOL IN BANDRA) நிர்வாகி ஆவார்; இதன் நோக்கம் சாதி, மதம் மற்றும் சமூகத்தைப் பொருட்படுத்தாமல், ஏழை, அனாதை குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது. மெஹர் பாபா அவரிடம் கூறினார்:

**ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் மத்தியில், உங்கள் பணி எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. கைவிடப்பட்டவர்களுக்கு சேவை செய்வதன் மூலம், நீங்கள் உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவிற்கு சேவை செய்கிறீர்கள், ஏனெனில் அவர் அனைவராலும், அவருடைய சொந்த அப்போஸ்தலர்களாலும் கைவிடப்பட்டார். கைவிடலின் சின்னம் சிலுவை. எனவே, கைவிடப்பட்டவர்களுக்கு சேவை செய்வது, கிறிஸ்துவிற்குச் செய்யும் சேவையாகும் - சந்தேகத்திற்கு இடமின்றி நானே அவர்.**

**நான் உங்களில் நானாக இருப்பது போல், உங்கள் பணியிலும் நான் உங்களுடன் இருக்கிறேன். உங்கள் பணியில் சிரமங்கள், அனுதாபமின்மை**

**மற்றும் விரோத எதிர்ப்பு ஆகியவை இருக்கும், ஆனால் நான் உங்களுக்கு உதவுவேன். உங்களுக்கு என் அன்பும் ஆசிர்வாதமும்.**

**கிறிஸ்துவின் சிலுவை தியாகத்தின் சின்னமும் கூட. எனவே, நீங்கள் உங்கள் முழு சுயத்தையும் தியாகம் செய்து, ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவும் பணியில் தடையின்றி, தளராத உற்சாகத்துடன் மூழ்க வேண்டும் என்று நான் கூறுகிறேன். உங்கள் அனைத்தையும் தியாகம் செய்வதன் மூலம், நீங்கள் எல்லாவற்றையும் கண்டுகொள்வீர்கள்.**

பாபாவிடமிருந்து இந்தத் தன்னிச்சையான செய்தியை அடையப் பெற்றதில் பாதிரியார் மிக்க மகிழ்ச்சியடைந்தார், அவர் அதை 'அடிப்படை கல்வி' (BASIC EDUCATION) எனும் தனது காலாண்டு இதழில் வெளியிட அனுமதி கோரினார். பாபா அதற்கு ஒப்புக்கொண்டு, (குறிப்பெடுக்கப்பட்ட) செய்தியை மீண்டும் வாசிக்குமாறு கூறினார். "**முதல் பத்தியின் கடைசி வாக்கியத்தை - மிகவும் குறிப்பிடத்தக்க பகுதியை விட்டுவிட்டீர்கள்**" என்று பாபா கூறி, அதை மீண்டும் எடுத்துரைத்தார்: "**சந்தேகத்திற்கு இடமின்றி நானே அவர்.**"

ஒரு மாதத்திற்கு முன்னர் (ஏப்ரல் 4ஆம் நாள்) ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, மண்டலிக்கு இயேசுவைப் பற்றி கருத்துத் தெரிவித்திருந்தார்:

**இயேசு சில நேரங்களில், தம்முடைய சீடர்களால் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களைச் சொல்வதுண்டு. ஆனால் அதையெல்லாம் கடந்து, அவர்கள் அவரை முழு மனதுடன் ஒட்டிக்கொண்டு, இறுதி வரை பின்பற்றினர், ஏனெனில் இறை-மனிதனின் செயல்பாடு மனித புரிதலுக்கு அப்பாற்பட்டது என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர்.**

**எனக்கும் அப்படித்தான். சில நேரங்களில், நீங்கள் புரிந்து கொள்ள முடியாத விஷயங்களை நான் சொல்கிறேன். இது கால சுழற்சிகளின் கடைசி சுழற்சி, எனவே அது தக்க பலனைத் தரும் என்று நான் மௌனத்தைக் கடைப்பிடிக்கிறேன். நான் ஒரே 'இறை வார்த்தை'யை மொழிவேன். இதுபோன்ற எண்ணற்ற கால சுழற்சிகள் கடந்துவிட்டன, நான் அவதார புருஷராக வெளிப்பட்ட காலங்கள் எண்ணற்றவை. நான் மௌனம் கடைப்பிடிப்பது இது முதல் முறையல்ல. அப்படிக் கடைப்பிடிப்பதும், அதைத் தொடர்ந்து, மௌனத்தைக் கலைப்பதும் நித்தியத்தில் அவ்வப்போது நிகழும் நிகழ்வாகும்.**

**அணுவைப் பிளக்கும் போது, அதிக அளவு ஆற்றல் வெளிப்படும். அதுபோலவே எனது மௌனத்தைக் கலைத்து, நான் 'இறை வார்த்தை'யை உச்சரிக்கும்போது, எல்லையற்ற ஞானம் வெளிப்படும். ஒரு அணுகுண்டு பூமியைத் தாக்கும் போது, மிகப்பெரிய பேரழிவின் உருவில் மாபெரும் எழுச்சி ஏற்படுகிறது. அதேபோல், அந்த 'இறை வார்த்தை' பிரபஞ்சத்தைத் தாக்கும் போது, பொருள் அழிவின் உருவில் மாபெரும் எழுச்சி ஏற்படும்; ஆனால், அனைத்திற்கும் மேலாக, மிகப்பெரிய ஆன்மீக எழுச்சியும் உருவாகும்.**

1960 மே 13 அன்று, டாக்டர் தேஷ்முக்கின் மகள் சஞ்ஜீவனியிடம் (இரண்டு முதுகலை பட்டம் பெற்றவர்), **"'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?"** என்று பாபா கேட்டார். அந்த இளம் பெண்ணிடமிருந்து 'நேரமில்லை' என்ற சாக்குப்போக்கு பதிலாக வந்தபோது, பாபா வினவினார், **"உண்மையில் அப்படியா? உங்கள் பதிலில் நீங்கள் நேர்மையாக இருக்கிறீர்களா? பாசாங்குத்தனம் மிகவும் மோசமான விஷயம், வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அது உணர்வுப்பூர்வமாக தெரிந்தோ, தெரியாமலோ நீடித்திருக்கும்."**

சஞ்ஜீவனி முடிவுறாத பல வேலைகள் இருப்பதாக மற்றுமொரு காரணத்தை முன்வைத்தார்.

பாபா தொடர்ந்தார், **"அனைத்து விஷயங்களிலும் ஒளிவு மறைவின்றி நேர்மையாக இருப்பது நல்லது; அது மிகவும் சாதாரணமானதாக அல்லது முக்கியமானதாக இருந்தாலும் சரி; பாசாங்குத்தனம் என்பது இம்மியளவும் இருக்கக்கூடாது; ஒவ்வொரு மூச்சிலும் அதை தூரத்தில் வைக்க முயற்சிக்க வேண்டும்."**

அந்த இளம் பெண்ணிடம் இன்னுமொரு காரணம் இருந்தது: "எனது தந்தைக்குத் தத்துவத்தில் ஆர்வம் இருப்பது போல், எனக்கு இல்லை."

அதற்கு பாபா, **"இந்தப் புத்தகத்தில் எந்தத் தத்துவமும் இல்லை. எளியதொரு விஷயத்தை கடினமாக்குவது தத்துவம். இதில் மூளைக்கு உணவும், இதயத்திற்கு விருந்தும் உள்ளது"** என்று பதிலளித்தார்.

கூட்டத்தில் யாரோ ஒருவர் குறுக்கிட்டு, "ஒரு குறிப்பிட்ட கொள்கையை விளக்குவது தத்துவம்" என்று கூறினார்.

பாபா, **"உண்மைகளின் கூற்றும் தத்துவமும் ஒன்றல்ல. கீதையை தத்துவம் என்று சொல்ல முடியுமா?"** என வினவினார்.

அந்த நபர் உடனே, "அதை அப்படி அழைக்கலாம்" என்றார்.

"அப்படியானால் இதோ எனது தத்துவம்: **நான் அனைத்திலும், அனைவரிலும் இருக்கிறேன்; நான் அனைத்திற்கும் அப்பாற்பட்டவனாகவும் இருக்கிறேன். என்னை எனது சுய ரூபத்தில் கண்டறிய, என்னில் உங்களின் அனைத்தையும் இழக்க வேண்டும்.**

**"நான் ஆதிகாலத்தவன்; இது வெறும் தத்துவம் அல்ல, அனுபவத்தின் அடிப்படையிலான உண்மையின் கூற்று என்பதை நினைவில் கொள்ளுங்கள்."**

மெஹர் பாபா, கல்லூரி ஒன்றில் கற்றறிந்த விரிவுரையாளராகப் பணிபுரிந்த கோவிந்த் ஜோஷி (GOVIND JOSHI) என்பவரை, ஒரு குறிப்பிட்ட தேதியில் தரிசனத்திற்காக வருமாறு அறிவுறுத்தியிருந்தார்; அதை கோவிந்த் தவறவிட்டார். அவர் சில வாரங்களுக்குப் பிறகு (மே 19 அன்று) பாபாவை சந்திக்க வந்த வேளையில், **'அவருடைய புத்தகங்களைப் படித்தாரா?'** என்று

பாபா அவரிடம் கேட்டதற்கு ஜோஷி, “ஆம், பாபா. அவை உண்மையிலேயே முழு உலகத்திற்கும் ஆசீர்வாதம்” என்று பதிலளித்தார்.

பாபா வினவினார், **“ஆனால் உங்களுக்கு? படித்து அனைத்தையும் ஜீரணித்து விட்டீர்களா? புத்தகங்களை படிக்க வேண்டிய விதத்தில் படித்து ஜீரணித்திருந்தால், என்னுடன் முந்தைய சந்திப்பிற்கான தேதியை, உங்கள் கைகளில் எந்த வேலை இருந்திருந்தாலும், அதை விட்டுவிட்டு என்னிடம் வந்திருப்பீர்கள். அது உங்கள் நன்மைக்காகத்தான். எனது அன்பு தன்னலமற்றது மட்டுமின்றி நிபந்தனையற்றது. முந்தைய சந்திப்பை நீங்கள் தவற விட்டிருந்தாலும், நான் உங்களை நேசிக்கிறேன்.”**

ஜோஷி அப்போது வினவினார்: “பாபா, அடுத்த மே மாதத்திலும் பூனாவிற்கு வருகிறீர்களா?”

பாபா பதிலளித்தார், **“எனக்கு நாளை என்பது இல்லாத போது, அடுத்த மே மாதத்தைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்! அப்படியிருந்தும், நாளை என்ற நாள் உட்பட, அளவிறுதியற்ற எதிர்காலத்தில், எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதை நான் அறிவேன். நான் ‘நிகழ்காலத்தில்’ வாழ்பவன். அதற்குள் நித்தியமும் அடங்கியுள்ளது. காலம், நேரம் என்று எதுவும் இல்லை. கடந்த காலமும் எதிர்காலமும் உங்களுக்காகவே உள்ளன.**

**“நிகழ்காலத்தின் நேரமற்ற தன்மையைத் தக்க வைத்துக் கொண்டு, இந்தப் பௌதீகத் தளம் - அன்னபூமிகா உட்பட அனைத்து ஆன்மீகத் தளங்களையும் நான் ஒரே நேரத்தில் அறியும் உணர்வுநிலையில் இருக்கிறேன். பௌதீகத் தளத்திலிருந்து, இன்று நான் இதைக் கூறுகிறேன்: ஜூன் 20ஆம் தேதி பூனாவிலிருந்து மெஹராஸாத் சென்று, 1960 ஜூலை 1ஆம் தேதி தொடங்கி ஆறு மாதங்கள் அங்கு ஏகாந்தவாசம் மேற்கொள்வேன்.”**

ஹமிர்பூரிலிருந்து கிட்டத்தட்ட இருநூறு அன்பர்கள் மே 13 அன்று (96 பேர் பயணிக்க வேண்டிய ரயில் பெட்டியில்), பூனாவிற்கு வந்தனர். பாபா அவர்களின் அன்பால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அன்று பிற்பகல் 3:00 மணிக்கு, பாபா, அவர்கள் தங்கியிருந்த உயர்நிலைப் பள்ளியின் தர்மசாலையில் (சரஸ்வதி வித்யாலயா, SARASWATI VIDYALAYA) அவர்களை சந்திக்கச் சென்றார். ஆந்திராவிலிருந்தும் பல அன்பர்கள் வந்திருந்தனர்; மறுநாள் காலை மற்றும் மதிய வேளையில் குருபிரசாத்தில் இரு குழுக்களுக்கும் பாபா தரிசனம் வழங்கினார். அன்று காலை, முதன்முறையாக, குருபிரசாத்தின் பிரதான வாயில்களுக்கு பாபா தானாக நடந்து சென்று, (அங்கு, காலை 8:30 மணிக்கு வாயில்கள் திறக்கப்படும் வரை, அனைவரும் காத்திருந்தனர்), அவர் குழுக்களை உள்ளே அழைத்து வந்தார். மண்டபத்தில் அனைவர் முன்னிலையிலும் பாபா இவ்வாறு அறிவித்தார்:

**ஹமிர்பூரைச் சேர்ந்த என் அன்பர்களால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அனைத்தும் நான் அறிவேன்; ஆயினும்கூட, உங்களால் அவ்வப்போது எனக்கு அனுப்பப்படும் செய்திகளுக்கு நான்**

**செவிமடுக்கிறேன், மேலும் என் அன்பின் செய்தியை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு நீங்கள் செய்துவரும் பணியில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

**கடந்த ஆண்டு ஹமிர்பூரில் இடைவிடாத ஜபத்திற்கான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டபோது, என் அன்பர்களுக்கு இது ஒரு கடினமான நேரமாக இருந்ததை நான் அறிவேன். அந்தக் காலகட்டத்தில் நீங்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டாலும், எனது மீதான உங்கள் அன்பில் நீங்கள் வெற்றி கண்டது என்னைப் பெரிதும் மகிழ்வித்தது. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பகவான்தாஸ் என்றழைக்கப்பட்ட என் அன்பரின் அழைப்பின் பேரில், ஹமிர்பூரில் வாழும் பிற அன்பர்கள், சாதி, சமயம், வகுப்பு, நிறம் எதையும் பொருட்படுத்தாமல், ஸர்ஸாய்** (SARSAI) **கிராமத்தில் ஒன்றுதிரண்டு, பாபாவின் அன்பில் அவரது உறுப்பினர்களாக ஒன்றாக வாழ்ந்தது மிகவும் மெச்சத்தக்க விஷயம்.**

**இன்று மீண்டும் ஒரு முக்கியமான விஷயத்தை உங்களுக்குச் சொல்கிறேன். அனைத்திற்கும் அப்பாற்பட்டவன் நான். நான் இந்தப் பௌதீக உடலைக் கைவிடும்போது, ஹமிர்பூரின் அன்பர்களாகிய நீங்கள், என் மீது கொண்ட ஆழ்ந்த அன்பினால் என்றென்றும் நினைவுகூரப்படுவீர்கள், அழியா புகழுடையவர்களாக இருப்பீர்கள். எதிர்கால தலைமுறைகள் உங்கள் அன்பைப் பாடி, உங்கள் புகழை நீடித்து நிலைத்திருக்கச் செய்வார்கள்.**

**ஜூலை 1 முதல் டிசம்பர் இறுதி வரை, நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறேன். அந்தக் காலக்கட்டத்தில் யார் ஒருவரும் என்னைப் பார்க்க முயற்சிக்கக் கூடாது. இந்த வருடத்தின் எஞ்சிய மாதங்களில் எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். என் அன்பில் மகிழ்ச்சியாக முகமலர்ச்சியுடன் இருப்பதோடு, என் மீதான தைரியம் மற்றும் நம்பிக்கையுடனும் எல்லா சூழ்நிலைகளையும் துணிச்சலுடனும் எதிர்கொள்ளுங்கள். எனது மௌனத்தைக் கலைக்கும் நேரம் நெருங்க நெருங்க, எனது தாமன்** (மேலங்கி) **உங்களது பிடியிலிருந்து பறிக்கப்படும் அபாயம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.**

**என் மீதான உங்கள் அன்பில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

நௌரங்காவைச் சேர்ந்த பாபு ராம்பிரசாத், ஜெய்ப்பூர் நகரில் வாழும் ஒரு சிற்பியுடன் வந்தார். பாபாவை அந்த சிற்பக் கலைஞருக்காக அமரும்படி அவர் கேட்டுக் கொண்டார், மேலும் ராம்பிரசாத்தின் அன்பு பாபாவை இணங்கச் செய்தது. பாபா அவ்வப்போது அவருக்காக அமர்ந்திருந்தாலும், அதே நேரத்தில் அவர் 'புகார்' கூறி முறையிட்டார்: **"என்ன வகையான அன்பை நான் தாங்கவேண்டியதாகிறது? உண்மையிலே இது ஒரு தொல்லையாக இருந்தாலும், என் அன்பர்களின் அன்பை என்னால் ஏமாற்றமுறச் செய்ய முடியாது."**

1960 மே 15 ஞாயிற்றுக்கிழமை பூனாவில் பொது தரிசனத்தின் மற்றுமொரு நாளாகும்; அன்று பலர், காலை 7:30 முதல் 11:00 மணி வரை

தரிசனத்திற்காக வருகை தந்தனர். ஹமிர்பூரிலிருந்து ஆண்களும் பெண்களும் அடங்கிய பெரிய குழு ஒன்று குருபிரசாத்தின் உள்ளே நுழைந்து, பாபாவின் புகழைப் பாடிக்கொண்டிருந்தது.

சமூக சேவை நிறுவனத்தில் பல வருடங்களாக பணியாற்றி வந்த நஸர்வான் ஸட்டா, ஒருமுறை குருபிரசாத்திற்கு வந்தபோது, பாபா அவரிடம் கூறினார்: **தாழ்த்தப்பட்டோரின் சேவைக்காக ஒருவர் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும்; கைவிடப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்டவர்களில் நிலைகொண்டுள்ள கடவுளுக்காக சேவை செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுபவர்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள். ஏறக்குறைய** 35 **ஆண்டுகளுக்கு முன்பு மெஹராபாத்தில், நான் ஹரிஜன** (தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த) **குழந்தைகளை நீராட்டி, உணவளித்து, உடை அணிவித்தேன். நான் அவர்களின் கழிவறைகளைக் கூட சுத்தம் செய்தேன்.**

**சமீபத்தில், ஹமிர்பூர் மாவட்டத்தில் ஒரு சிறப்பான சம்பவம் நிகழ்ந்தது. என் அன்பர்கள், இனம், நிறம், மத வேறுபாடின்றி, ஒரு துப்புரவுத் தொழிலாளியின் அழைப்பின் பேரில், ஓரிடத்தில் ஒன்று கூடி, ஒரே பாபா குடும்பமாக வாழ்ந்து வந்தனர். என் மீதுள்ள அன்பின் மூலமாக பல ஆண்டுகளில், பலர் சாதிக்க முடியாததை அவர்கள் சாதித்துள்ளனர்.**

பாபாவின் சித்திரத்தை தவறாமல் வணங்கி வந்த பக்தர் ஒருவரிடம், பாபா கூறினார், "**எனது சித்திரத்தை உங்கள் இதயத்தில் வழிபடும் வரை, முழு மனதுடன் உங்கள் பூஜையைத் தொடருங்கள். உங்களுக்குள் என்னைக் காணும் வரை மேலும் மேலும் பாபாவை நேசிக்கவும்.**"

சமஸ்கிருத அறிஞர் ஒருவர், ஒரு நாள் பாபாவிடம் வந்து, சங்கராச்சாரியாரின் சில கீர்த்தனைகளைப் பாடினார். பாபா கூறினார், "**வரிகளை மொழிபெயர்க்க வேண்டாம். அது தேவையில்லை. நான் பாடல்களின் நாதத்தைக்** (மந்திர ஒலி) **கேட்க விரும்புகிறேன். அது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது, ஏனெனில் அது என்னிடமிருந்து வெளிவந்தது.**"

இதற்கிடையில், மெஹராபாத்தில், பாவ் கல்சூரியின் மகள் ஷீலா, அம்மை நோயால் பாதிக்கப்பட்டிருந்ததைப் பற்றி பாபாவிடம் பாதிரி தெரிவித்தார். பாபா, பாவ் கல்சூரியிடம் குழந்தையைப் பார்க்க வேண்டுமா என்று கேட்ட போது அவர் பதிலளித்தார், "நான் அங்குச் செல்வதால் என்ன பயன்? இங்கே எனது கடமையை விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை." சில நாட்களில் ஷீலா குணமடைந்த செய்தி பாதிரியிடமிருந்து வந்தது.

பாவ் கல்சூரியிடம் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**நீங்கள் ஷீலாவைப் பார்க்கச் சென்றிருந்தால் அவள் உயிரைத் துறந்திருப்பாள்.**"

பின்பு, பாவ் கல்சூரியின் குடும்பத்தைப் பூனாவிற்கு அழைத்து வருமாறு பாபா கூறி அனுப்பினார்; அவர்கள் உள்ளூர் விடுதி ஒன்றில் சில நாட்கள்

தங்கினர். பாபா ஒவ்வொரு நாளும் அவர்களுக்காகக் காரை அனுப்பி, குருபிரசாத்திற்கு அழைத்து வந்தார். பாபா, ஷீலாவிடம், "**மெஹர்நாத் நாள் முழுவதும் என்ன செய்கிறார்?**" என வினவினார்.

"அவர் பாடல்களை இயற்றி, இசையமைத்து அவரே பாடுகிறார்," என்று பதிலளித்தார்.

"**என்ன மாதிரியான பாடல்கள்?**"

மெஹர்நாத் இந்தப் பாடலை (இந்தியில்) பாடினார்: "ஒவ்வொரு வீடும் துன்பத்தால் எரிகிறது! இங்கே ஒருவர் நோயுற்றிருக்கிறார், அங்கே வேறொருவர்; எங்கும் நோய் பரவலாக உள்ளது!"

பாபா சிரித்துக்கொண்டே, "**ஓ, நீங்கள் எல்லோரையும் நோய்வாய்ப்படச் செய்கிறீர்களே? அதற்குப் பின்னால் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?**" என்று கேட்டார்.

"இருக்கிறது," என்று அவர் அறிவித்தார். "அம்மா இங்கே உடல்நலமின்றி படுக்கையில் இருந்தார், மாமாஜி (அவரது தாய் மாமா) அங்கே அவருடைய இடத்தில் இருந்தார்."

"**ஆனால் எல்லா இடங்களிலும் யார் நோயுற்றிருக்கிறார்கள்?**" என்று பாபா கேட்டார்.

"இங்கே அனைவருக்கும் உடல்நலம் சீரில்லை, சிலருக்கு ஜலதோஷம், சிலருக்கு இருமல். எதுவுமே சீரில்லை, எல்லாமே சீரற்ற நிலை!"

பாபா சிரித்தார், "**நீங்கள்தான் இக்கால சூழ்நிலைகளின் கவிஞர்! வேறு ஏதேனும் பாடல்களை இயற்றியுள்ளீர்களா?**"

"ஆமாம்" என்று பெருமிதத்துடன் பாடினார், "ஷங்கரை நினைவில்கொண்டு, முரசு முழங்குகிறது...தானானனா, தானானனா, தானானனா.

பாபா மகிழ்ச்சியில், "**இதற்கு என்ன அர்த்தம்?**" என்று கேட்டார்.

"நீங்களே ஷங்கர் (கடவுள்) மற்றும் உங்கள் நினைவில் முரசு முழங்குகிறது தானானனா!"

"**உங்கள் பாடல் எனக்கு மிகவும் பிடிக்கும்**" என்று பாபா அவரிடம் கூறினார். "**நீங்கள் பாடல்களை இயற்றுகிறீர்கள், அவற்றின் அர்த்தத்தையும் விளக்குகிறீர்கள்! உங்களுக்கு ஏழு வயதுதான், ஆனால் ஏற்கனவே ஒரு கவிஞர்**" என்று கூறி, பாபா அந்த சிறுவனைத் தழுவினார்.

பாபா, ரமா கல்சூரியிரிடம் உங்களுக்குப் பாடல் தெரியுமா என்று கேட்டபோது, பல ஆண்டுகளுக்கு முன்பு, பகவான் ராமரைப் பற்றி ஒரு பாடலை இயற்றியதாக அவர் கூறினார். பாபா, "**அதைப் பாடுங்கள். இது எனக்காகப் பாடிய பாடல்; ஆனால் நீங்கள் என்னை அப்போது சந்திக்கவில்லை**" என்று குறிப்பிட்டார்.

ரமா அந்தப் பாடலைப் பாடினார்:

"எனது படகோ சிறியது, உனது பாதங்களோ அற்புதம்!
உன்னை எப்படி எனது படகில் அமர வைப்பேன்?
ஏது நடக்குமோ என்னவாகுமோ என்று அஞ்சுகிறேன்!"

ரமாவின் பாடலைக் கேட்ட பாபா இந்த சம்பவத்தை எடுத்துரைத்தார்:

**ஒருமுறை, பெண்டுவுடன் ஒரு சிறிய படகில் நதி ஒன்றைக் கடந்து கொண்டிருந்தேன். படகு நதியின் நடுவே கவிழ்ந்தது. தண்ணீரில் மூழ்க இருந்த பெண்டுவின் கழுத்தைப் பற்றிப்பிடித்து, பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டுவந்தேன். அப்போது பெண்டுவின் தலை வழுக்கையாக இருந்ததால் அவரது கழுத்தைப் பற்றிப்பிடித்து இழுக்க வேண்டியதாயிற்று. நான் அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால், அவர் நிச்சயமாக நீரில் மூழ்கியிருப்பார்.**

மும்பையின் ஜிம் மிஸ்திரி அந்த ஆண்டு குருபிரசாத்தில் சில நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். அவர் தங்கியிருந்த காலத்தில், '**ஒரு நாளைக்கு பத்து சிகரெட்டுகளுக்கு மேல் புகைக்கக் கூடாது**' என்று பாபா கட்டளையிட்டார். ஜிம் முயற்சி செய்தாலும், அது அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது. பாபாவின் கட்டளையைத் தந்திரமாக வெல்லும் நோக்கத்தில், அவர் ஒரு சிகரெட்டை இரண்டாக உடைத்து, ஒரு நாளைக்கு 20 முறை புகைத்தார். ஆனால் அவருடைய புத்திசாலித்தனம் அவரைத் தொந்தரவு செய்தது, அவருடைய செயல் பாபாவின் கட்டளையை சமரசம் செய்வதாக உணர்ந்தார். ஒரு நாள் பாபா அதைப் பற்றிக் கேட்டபோது, ஜிம் தனது பலவீனத்தை ஒப்புக்கொண்டார். பாபா, இது விஷயத்தில் அவருக்குக் கீழ்ப்படிவதைப் பொறுத்தவரை, தன்னால் இயன்றவரை முயற்சி செய்யுமாறு கூறினார். அதாவது, ஜிம் ஒரு நாளைக்கு பத்து முறைக்கு மேல் புகைபிடித்தால், அவர் கவலைப்பட வேண்டாம்.

ஜிம், மனைவி ரோடா இருவரும் தங்கள் மூன்று மகன்களான மெஹர்வான், ஃபாலு, ஸரோஷ் ஆகியோரின் நவ்ஜோத் (NAVJOT, SACRED THREAD CEREMONY, பொதுவாக ஸொராஸ்ட்ரியன் பாதிரியார் ஒருவரால் செய்யப்படும் புனித நூல் சடங்கு) முறைசார்ந்த பொது நிகழ்ச்சியை நடத்தி வைக்குமாறு பாபாவிடம் கேட்டுக் கொண்டதற்கு, அவர் ஒப்புக்கொண்டார். விழாவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, மே 14 அன்று, பாபா மூன்று சிறுவர்களையும் அரவணைத்தார். ஃபாலுவிற்கு சளி இருந்ததால், அந்தத் தொற்று பாபாவைத் தாக்கியதாகப் புகார் கூறி, ரோடா, அவரது சகோதரி நர்கிஸ் இருவரையும் கடிந்துகொண்டார், "**உங்களுக்கு என் மீது அன்பு இருந்திருந்தால், ஃபாலு என் அருகில் வராமல் தவிர்த்திருப்பீர்கள்! நீங்கள் என்னை விட அவனை நேசிக்கிறீர்கள் என்பது நிரூபணமாகிறது! என் உடல்நலத்தில் அக்கறை இல்லாத, என்ன வகையான அன்பு இது?**"

ஃபாலுவிற்கு சளி பிடித்திருந்ததால், பொதுவாக அவரது உடல்நிலை குறித்த பாபாவின் தொடர்ச்சியான புகார், தீவிரமான திருப்பத்தை எட்டியது; நவ்ஜோத் நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் ஜிம், ரோடா, நர்கிஸ், அர்னவாஸ், நரிமன் ஆகியோரிடம் பாபா, "**அதைத் தள்ளிப் போடாதீர்கள்; ஆனால் ஃபாலுவை என்னிடமிருந்து வெகு தூரத்தில் இருக்கச் செய்யுங்கள்**" என்று தெரிவித்தார்.



மிஸ்திரி சிறுவர்களின் நவ்ஜோத் - முறைசார்ந்த புனித நூல் சடங்கு - பொது நிகழ்ச்சி, குருபிரசாத், **16** மே **1960**
ரோடா & மேர்வான் மிஸ்திரி, அர்ன்வாஸ், ஸரோஷ் & ஃபாலு மிஸ்திரி, நர்கிஸ் தாதாசாஞ்சி
மெஹரா, ரானோ, கோர்ஷெத், மணி - படுக்கை அறையிலிருந்து நிகழ்ச்சியைப் பார்க்கும் காட்சி
(NAVJOT CEREMONY OF MISTRI BOYS, GURUPRASAD, 16 MAY 1960
RODA & MERWAN MISTRY, ARNAVAZ, SAROSH & FALU MISTRY, NARGIS DADACHANJI
MEHERA, RANO, KHORSHED, MANI – WATCHING FROM THE BEDROOM)

1960 மே 16 அன்று காலை மும்பை, பூனா மற்றும் பிற இடங்களிலிருந்து பல அன்பர்கள் குருபிரசாத்தில் ஒன்றுகூடினர். பாபா அவரது கைகளால், மூவரில் ஒவ்வொரு சிறுவருக்கும் ஒரு சத்ரா மற்றும் புனித நூலை வழங்கி, கீழ்வரும் பாபாவின் செய்தியை ஆங்கிலத்தில் எரச்சும், மராட்டியில் ஸோமனும் வாசித்தனர்:

**அஹுரமஸ்தா, ஸொராஸ்டர், மெஹர் பாபா சடங்கு சம்பிரதாயங்களின் அளவுகடந்த பிணைப்பிலிருந்து உங்களை விடுவித்து, நல்லெண்ணங்கள், நல் வார்த்தைகள் மற்றும் நற்செயல்களைக் கொண்ட வாழ்க்கையை நடத்த உதவுவதோடு, அன்பான பாபாவின் அருளை உங்களுக்கு வழங்கட்டும். இந்தப் பிணைப்பிலிருந்து உங்களை விடுவித்து, அன்பின் உண்மையான பிணைப்பை உங்களுக்கு வழங்குவதற்காக, மேலோட்டமான பிணைப்பின் சின்னத்தை நான் உங்களுக்கு வழங்கியுள்ளேன்.**

**சடங்கு சம்பிரதாயங்களின் பிணைப்புகளிலிருந்து உங்களை விடுவித்து, கடவுளை நேசிக்க வேண்டிய முறையில் நேசிக்கத் தொடங்காத வரை, நீங்கள் ஒருபோதும் ஏக இறைவனான உண்மைப்பொருளை அறிய முடியாது.**

பாபா சிறுவர்களை (ஃபாலு உட்பட) அரவணைத்துக் கொண்டார், மேலும் குஜராத்தி ஆரத்தி பாடப்பட்டது. கடந்த இரண்டு நாட்களாக அவரது உடல்நிலை குறித்து புகார்கள் இருந்தாலும், அன்று அவர் ஓராயிரம் மலர்ந்த ரோஜாக்களைப் போல, புத்துணர்ச்சியுடன் பிரகாசமாக இருந்தார்; அவரது புன்னகை மண்டபத்தை நிரப்பியது. கூடியிருந்த 150க்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு ஜிம், ரோடா இருவரும் மதிய உணவை வழங்கினர். ஹமிர்பூரிலிருந்து வந்த குழுவினர் மறுநாள் காலையில் தரிசனத்திற்கு பின்பு புறப்பட்டுச் சென்றனர்; பாபா அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஜிம் மற்றும் ரோடாவிடமிருந்து ஒரு பொட்டலம் சிற்றுண்டியை வழங்கினார், மேலும் தேநீரும், ஐஸ்கிரீமும் வழங்கப்பட்டது.

பாபா எப்பொழுதுமே இதுபோன்ற மதச் சடங்குகளில் பங்கு கொள்ள விரும்பியதில்லை. மற்றுமொரு சந்தர்ப்பத்தில், ஒரு செல்வந்தர் தனது குழந்தைக்கு ‘உறுதிப்படுத்தும் விழா’வை (CONFIRMATION CEREMONY) நடத்துமாறு கெஞ்சினார். பாபா பதிலளித்தார், “**நான் இந்தக் கோட்பாடுகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தையும் அகற்றுவதற்காக வந்துள்ளேன், எனவே நான் எப்படி அதில் பங்கேற்பது?**”

ஒரு வாரத்திற்கு முன்பு மே 9 அன்று, பாபா வேறொரு நபரிடம் கூறினார்: **உலக மக்களில் பலர் ‘கடவுள் உளதாயிருக்கிறார்’ என்று கூறுகிறார்கள். ஒவ்வொரு மதமும், மத நூல்களும் ‘கடவுள் உளதாயிருக்கிறார்’ என்பதை பறைசாற்றுகிறது. கடவுள் ‘ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளாக உளதாயிருக்கிறார்’. மக்கள் இதை நம்புகிறார்கள். நீங்களும் நம்புகிறீர்கள். இதையெல்லாம் மீறி, கடவுளைக்**

காண வேண்டும் எனும் உறுதியான தீர்மானத்தை ஒருவர் எடுப்பது என்பது அரிது. வீடு, குடும்பம் போன்ற அனைத்தையும் துறந்து, 'எப்பாடு பட்டேனும், எந்த விலை கொடுத்தேனும் நான் கடவுளைக் காண்பேன்' என்று கூறுபவர் அதை விட அரிது.

ஒருவர் கடவுளைக் காணும் பொருட்டு, நீரிலிருந்து வெளியே வந்த மீனைப் போல மாறினால் - அவரது தரிசனத்திற்காக முழு மனதுடன் ஏங்கினால் - நிச்சயமாக அதை அடையப் பெறுவார். நீங்கள் இங்கு ஒருவரையொருவர் பார்ப்பதை விட, அவர் கடவுளை மிகத் தெளிவாகப் பார்க்கிறார்.

சடங்கு சம்பிரதாயங்கள், கோட்பாடுகள் மற்றும் தினசரி மத பழக்க வழக்கங்களுக்கு தரிசனத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. நல்லெண்ணங்கள், நல் வார்த்தைகள் மற்றும் நற்செயல்களால் யார் வேண்டுமானாலும் ஸொராஸ்டரைப் போல் ஆக முடியும் என்பதை அவரே காட்டியுள்ளார். மேலும் இப்போதைய நிலைமை என்ன? ஸொராஸ்டர் நல்லெண்ணங்கள், நல் வார்த்தைகள் மற்றும் நற்செயல்களை வலியுறுத்தி கூறினாலும், இன்று அவரைப் பின்பற்றுபவர்கள், புனித நூல் அணிவதற்கு முக்கியத்துவம் வழங்குகிறார்கள். தினமும் காலையில் சிலர் புனித நூல் சடங்கை செய்யத் தவறினால் அவர்கள் எரிச்சலடைகிறார்கள். ஸொராஸ்டர் வழங்கிய பெரு மதிப்பு வாய்ந்த கட்டளைகளைப் பற்றி அவர்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. ஒருமுறை புனித நூலை அணிய மறந்தால், அதை நினைத்து வருந்துவார்கள் ஆனால் பொய் சொல்ல நேர்ந்தால், அதைக் குறித்து வருந்துவதில்லை!

எனவே, தூய்மையற்ற எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் போன்ற பொய்களைக் கைவிடாத வரையில், நீங்கள் எந்த ஓர் உள்ளார்வத்துடன் புனித நூல் அணிந்து, மிகுந்த உற்சாகத்துடன் அதிகாலையில் முணுமுணுத்து பிரார்த்தனை செய்தாலும் - ஆன்மீகப் பாதையில் முன்னேறுவது என்பது சற்றும் இயலாத ஒன்று. உங்களால் இயன்றவரை பல மத புத்தகங்களைப் படிப்பதும், கடவுளைக் காண வழிவகுக்காது! புழுக்கள் கூட புத்தகங்களை அழிக்கின்றன! எனவே கடவுளைக் காணும் உண்மையான ஏக்கத்தை உங்களுக்குள் உருவாக்குங்கள்.

வழிபாட்டு மரபுகளுக்கும், மதங்களுக்கும் முக்கியத்துவம் இல்லை. அன்பு ஒன்றுதான் திறவுகோலைத் தன்வசம் கொண்டுள்ளது. உங்கள் கடமையைச் செவ்வனே செய்யுங்கள், ஆனால் இதெல்லாம் மாயா, பாபா மட்டுமே 'ஏக இறைவனான உண்மைப்பொருள்' என்ற எண்ணத்தை உங்கள் மனதின் பின்புறத்தில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்.

1960 மே 17 செவ்வாய் அன்று, ஆந்திரா அன்பர்களின் குழு ஒன்று குருபிரசாத்திற்கு வந்தது. அவர்களில் ஒருவர் பாபாவின் புகைப்படத்தை வழிபட

விருப்பம் தெரிவித்து, பாபாவிடம் 'இதற்கு ஏதேனும் சிறப்பு வழிமுறைகள் உள்ளதா' என்று கேட்டார். **'எனது பெயரை முழு மனதுடன் நினைவில்கொள்வதே எனது வழிபாடு'** என்றார் பாபா.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், ஆந்திராவைச் சேர்ந்த ஹிந்து பண்டிதர் (மத போதகர்) கரே (KHARE) என்பவரை அறிமுகப்படுத்தியபோது, பாபா அவரிடம், **"நீங்கள் எல்லா வகையிலும் உண்மையான பண்டிதரா? என் அன்பிலும் நீங்கள் ஒரு பண்டிதரா?"** என வினவினார்.

ஒருவர் பல கவிதைகளைப் படித்ததைத் தொடர்ந்து, பாபா, **"இது கவிதையல்ல, உங்கள் பார்வையின் சிந்தனைப்போக்கு. அன்பின் அனுபவம் எதில் உள்ளதோ, அதுவே கவிதை!"** என்றார்.

மே 18ஆம் தேதி, பாண்டுரங்க ஷாஸ்திரி கோஸ்வாமி (PANDURANG SHASTRI GOSWAMI) என்றழைக்கப்பட்ட இந்து புரோகிதர் பாபாவை வணங்கிவிட்டு, அவரது இருக்கைக்கு அருகில் அமர்ந்தார். முந்தைய நாள், பாபா, ஹமிர்பூர் அன்பர்களுடன் இருந்தபோதும் கோஸ்வாமி வந்திருந்தார். அந்த நேரத்தில், தக்வான் (DHAGWAN) கிராமத்தின் விஷ்ணு ஷர்மா, பாபாவின் கதையான 'தேநீர் புராணம்' ('சாய் புராணம்' - TALE OF TEA என்ற தலைப்பில் - தேநீர் குறித்த ஒரு நகைச்சுவை படைப்பு) கதையைச் சொல்லி அனைவரையும் மகிழச் செய்தார். கோஸ்வாமி பாராயணத்தின் நடுவில் அங்கிருந்துச் சென்றுவிட்டார்.

இந்த நாளில், பாபா அவரிடம், **"ஏன் நேற்று திடீரென மண்டபத்தை விட்டு வெளியே சென்றீர்கள்?"** என்று கேட்டதற்கு, கோஸ்வாமி தனக்கு ஒரு வேலை இருந்ததாக பதிலளித்தார். **"சாய் புராணத்தால் நீங்கள் அசௌகரியமாக உணர்ந்தீர்களா? என்ன தொந்தரவாக இருந்தாலும், நீங்கள் அமைதியாக இருக்க முயற்சிக்க வேண்டும்"** என்று கூறினார்.

"தொந்தரவு எதுவும் இல்லை. நேற்று, எனது வீட்டு விருந்தினர்கள் சிலருக்கு விடையளிக்க வேண்டியிருந்ததால், நான் சீக்கிரம் சென்றேன்."

**"சாய் (தேநீர்) புராணம் சமஸ்கிருத வசனங்களில் இயற்றப்பட்டதால் அதைக் கேட்டு அசௌகரியமாக உணர்ந்தீர்களா? சமஸ்கிருதத்தை அவமதிப்பதாக எடுத்துக் கொண்டீர்களா?"**

"ஒருவேளை அவ்வாறு இருக்கலாம், ஆனால் நான் சீக்கிரமாக வெளியேறியதற்கு அது காரணமல்ல" என்று கோஸ்வாமி தற்காப்பு தொனியில் பதிலளித்தார்.

**"அவமானப்படுத்தப்பட்டாலும் உங்களை அது பாதிக்கக் கூடாது. நான் பரமாத்மா; ஒவ்வொரு கணமும் நான் அவமதிக்கப்படுகிறேன், ஆனால் நான் அன்புடன் பதிலளிக்கிறேன். இறுதி வரை நீங்கள் அமர்ந்திருந்தால், நீங்கள் அன்பின் விருந்து ஒன்றில் பங்கெடுத்தது போல வித்தியாசமாக உணர்ந்திருப்பீர்கள். ஹமிர்பூரின் அன்பர்களுக்கு விநியோகம் செய்வதற்கான பிரசாத பொட்டலங்கள் இன்னும் தயாராகாத நேரத்தில், இது ஒரு நல்ல பொழுது போக்கு."**

எனக்கு விருப்பமில்லாத விஷயங்கள் மற்றும் சுற்றுப்புற சூழல்களை நான் பொறுத்துக்கொள்ள முயற்சிக்கிறேன்," என்று கோஸ்வாமி கூறினார். "தேநீர் பற்றிய வசனங்களைப் பொறுத்தவரை, தேநீரின் நன்மை, தீமைகள் குறித்த பதினெட்டு காண்டங்கள் அடங்கிய பகவத் கீதையின் பாணியில் எழுதப்பட்ட சாய் (தேநீர்) கீதையை நான் படித்திருக்கிறேன்."

இந்த நிகழ்வு பாபாவை தனிமனித அகந்தையின் தந்திரமான இயல்பைப் (EGO'S TRICKY NATURE) பற்றி உரை நிகழ்த்தத் தூண்டியது:

**நமது அகந்தை, பரமாத்மாவாகிய 'நான்' எனும் உண்மையான உறுதிப்பாட்டிலிருந்து நம்மை விலக்கி வைக்கிறது. அகந்தை மிகவும் சக்தி வாய்ந்தது, அது நம்மை ஏமாற்றமடையச் செய்கிறது. இது ஆரம்பத்திலிருந்தே தனிமனித சுயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது நமது சுயத்தின் ஓர் அங்கமாக, மிகவும் இயல்பானதாகத் தோன்றச் செய்யும் வேளையில், நாம் ஒன்றைப் புரிந்துகொண்டதன் சாக்குப்போக்கில், இந்த அகந்தை, தன்னைத்தானே உடனடியாகக் குஷியடையச் செய்த அடுத்த கணமே மனச்சோர்வடைகிறது.**

**தேஷ்முக், 'நீங்கள் ஓர் அற்புதமான மனிதர்' என்று நான் சொல்வதானால், அது உங்களை உடனடியாகக் குஷிப்படுத்தும். ஆனால் நீங்கள், 'பாபா, நான் உங்கள் அடிமை' எனக் கூறி வெளிப்படுத்தும் இந்தத் தாழ்மையான கூற்று, பணிவு என்பதைத் தவிர வேறு எதையும் குறிக்கலாம்.**

**அடுத்த கணம், உங்கள் பலவீனங்களில் ஒன்றை நான் சுட்டிக்காட்டுவதானால், நீங்கள் உடனடியாக மனச்சோர்வடைவீர்கள், ஆனால் நீங்கள் அதை வெளிப்படுத்த மாட்டீர்கள். நீங்கள் கூறுவீர்கள்: 'பாபா, அனைத்திற்கும் மேலாக, நான் ஒரு மனிதன்.' இந்தக் கூற்றின் மூலம், நீங்கள் உங்களுக்குள் என்ன உணர்கிறீர்கள் என்பதை மறைக்க முயற்சிக்கிறீர்கள், ஏனெனில் அகந்தை, பொய்யும் போலியுமான தோற்றத்தைக் கொண்டுள்ளது. இயற்கையாக இருப்பதும், உள்ளுக்குள் நீங்கள் உணருவதை வெளிப்படுத்துவதும் மிகவும் கடினம். பொய்யும் போலியுமான அகந்தை ஒரு முட்டுக்கட்டை.**

**'அகந்தையை அழித்தல்** (நிர்மூலமாக்குதல்)**' என்றால் என்ன? 'ஆழ்ந்த தூக்கத்தில் முழு உணர்வுடன் இருத்தல்' என்பதே இதன் பொருள்: முழுமையான உணர்வற்ற நிலையில் முழு உணர்வோடு இருத்தல்! ஒரு சத்குரு, அருள் மழை பொழிவது வரை இது சாத்தியமில்லை.**

"இறை உணர்வை எய்திய ஒருவருக்கு அகந்தையே இல்லையா?" என்று பண்டிதர் ஒருவர் கேட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்: **உள்ளது, அவரிடம் அகந்தை உள்ளது. ஆனால் இறை-உணர்வை எய்திய ஒருவரின் அகங்காரம் முற்றிலும் வேறுபட்டது. "நான் இன்னவன், எனது பெயர் இது, அது…" என்று நீங்கள் கூறும்போது, பொய்யும், போலியுமான அகந்தையே தவறான 'நான்' எனும் சுயத்தை உறுதிப்படுத்துகிறது. நீங்கள் இறைவனோடு ஐக்கியமாகும்**

**போது** (ஒரு மஜ்ஜூப் நிலையில்) **உங்களுக்கு மனம் என்ற ஒன்று இல்லை; நீங்கள் கடவுள் என்பதை மட்டுமே உணர்ந்திருக்கிறீர்கள். இதுவே அதீத உணர்வு நிலை** (SUPERCONSCIOUSNESS). **ஆனால், அந்த நிலையைத் தக்க வைத்துக் கொள்ளும் வேளையில், நீங்கள் சாதாரண உணர்வு நிலைக்கு வரும் தருணத்தில், உங்களுக்கு அகந்தை உள்ளது, ஆனால் அது 'பரமாத்மா எனும் உண்மையான அகந்தை'. நீங்கள் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தால், உணர்வுகளின் வெவ்வேறு நிலைகள் பற்றிய விவரங்கள் உங்களுக்குத் தெரியும்.**

**மேலும், அறிவார்ந்த புரிதலுக்கு மிகக் குறைவான மதிப்பே உள்ளது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆன்மீகப் பாதையின் விவரங்களை ஒருவர் புரிந்து கொண்டாலும் புரியாவிடிலும், இரண்டும் ஒன்றே! அன்பு ஒன்றுதான் முக்கியம்.**

**கடவுளைக் கற்றறிவது என்பது உங்களைக் குறித்த எண்ணங்களைக் களைவது. சத்குருவை சந்திப்பது ஓர் அரிய பாக்கியம், அதைவிட அரிது மனித உருவில் இருக்கும் கடவுளை நேசிப்பது. "ஒருவர் கடவுளைக் குறித்த ஞானத்தை அடையப் பெற்றது பிறருக்குத் தெரியாது" என்று** அருமையாகக் கூறப்படுகிறது.

**"கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்"** என்று பாபா முடித்தார்.

கோஸ்வாமி, "அப்படியானால், அறியாமை எங்கிருந்து ஊடுருவுகிறது?"

பாபா விளக்கினார்: **கடவுள் ஒருவரே, பிரிக்க முடியாதவர். நீங்கள் பார்க்கும் பல பிரிவுகள் வெறும் மாயத் தோற்றம். அவை அறியாமையின் விளைவு. இதை எப்படி விளக்க முடியும்? அறியாமை, தன்னை அறியாமை என்று எப்படி அறிய முடியும்? நீங்கள் அனுபவிக்கும் கனவு நிலை இதைக் குறித்த சில யோசனைகளை நல்கும்.**

**நீங்கள் தூங்கச் செல்வதாக வைத்துக்கொள்வோம், உங்கள் கனவில் நான் தோன்றி, 'ஷாஸ்திரி, இது வெறும் கனவு' என்று கூறுவதானால், நீங்கள் பதிலளிப்பீர்கள்: 'இது எப்படி இருக்க முடியும்? நான் சூரியனை, வானத்தை பார்க்கிறேன்... நீங்கள் என்னிடம் மிகவும் அன்பாகப் பேசுவதை நான் காண்கிறேன். இது ஒரு கனவென நம்பமுடியாத அளவுக்கு மிகவும் உண்மை!" ஆனால் நீங்கள் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்ததும், 'பாபா கனவில் கூறியது உண்மை' என்று நீங்களே சொல்லிக் கொள்கிறீர்கள்.**

**இந்த நேரத்தில், நான் உங்களுடன் அமர்ந்திருப்பதைப் பார்க்கிறீர்கள். இப்போது நான் சொல்கிறேன்: "இந்த 'விழிப்பு' நிலையில் நீங்கள் பார்ப்பது, உணர்வது அனைத்தும் கனவுதான்!"** முழுப் பிரபஞ்சமும் **ஒரு கனவு மட்டுமே. அதை 'விழிப்பு-கனவு'** (WAKING-DREAM) **என்று அழைக்கவும். என் அருளால் நீங்கள் கடவுளை உணரும்போது, நான் இப்போது சொல்வது உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள்.**

1960 மே 20 அன்று, பாபாவின் அறிவுறுத்தலின்படி, குமார் ரிஷிகேஷிலிருந்து நீல்கந்த்வாலா மஸ்துடன் வந்தார். குணாதாய் காடேக்கரின் வீட்டில் மஸ்த் தங்க வைக்கப்பட்டார்; பைதூல், குமார் இருவரும் அவரை கவனித்துக் கொண்டனர். மறுநாள் முதல், பாபா தினமும் மதியம் 2:00 மணிக்கு (கடுமையான கோடை மதிய வெப்பத்தில்) அவருடன் பணிபுரிய அங்குச் செல்லத் தொடங்கினார். பூனாவில் மஸ்த் தங்கியிருந்த ஐந்து நாட்களும், நீல்கந்த்வாலா ஹிமாலயன் வணிக உரிமைப் பெயரில் (HIMALAYAN BRAND) வெளிவந்த டால்கம் பவுடரைத் தலையிலும் உடலிலும் தூவி மகிழ்ந்தார்.

பிரேம் கில்னானி (PREM KHILNANI) ஒரு நாள் தனது மனைவி கிரிஜா (GIRIJA) மற்றும் உறவினரான மற்றுமொரு பெண்மணியுடன் குருபிரசாத்திற்கு வந்தார். அவர்கள் தங்கள் உறவினரை அழைத்து வருவதற்கு முன்பு, பாபாவின் அனுமதியைக் கோரவில்லை. கில்னானியிடம் பாபா கேட்டார், **“ஏன் அவர்களை** (உறவினரை) **அழைத்து வந்தீர்கள்?”**

கில்னானி, “கிரிஜா அவரை அழைத்து வந்துள்ளார்” என்று பதிலளித்தார்.

**“கிரிஜாவையும் அந்தப் பெண்மணியையும் உடனே திருப்பி அனுப்புங்கள்!”**

ஏன் என்று புரியாத பட்சத்தில் கில்னானி, பாபாவின் விருப்பத்திற்கு இணங்கினார். உறவினர் திடுக்கிட்டு, “என்ன ஒரு சாது இவர், தரிசனத்திற்காக வரும் பக்தர்களை அவமானப்படுத்தி இப்படி நடந்துகொள்கிறார்? நான் இங்கு வந்தது எனது தவறு” என்று குறிப்பிட்டார். மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவராக இருந்ததால், பாபாவை கடவுளாக ஏற்றுக்கொள்ள அந்தப் பெண்மணி தயாராக இல்லை என்பதை கிரிஜா உணர்ந்தார்.

கிரிஜா கவலைப்பட வேண்டாம் என்று கூறி பாபா, அலோபாவை (அவ்வப்போது வந்து சென்றார்) அனுப்பினார்; பின்பு பாபா, கில்னானியிடம் கிரிஜாவை குருபிரசாத்திற்கு அழைத்து வருமாறு கூறினார்.

பிரேம், கிரிஜா இருவரும் இடைவிடாமல் சண்டையிட்டுக் கொள்வது வழக்கம். அவர்கள் குருபிரசாத்திற்கு வந்ததும், தம்பதிகள் பாபாவிற்கு முன்பாக ஒருவரோடொருவர் தவறாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவதும், பாபா அவர்களை சமாதானப் படுத்துவதும் தவறாமல் நடந்து வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், பாபா இருவரையும் நோக்கி கூறினார், **“நான் முழுப் பிரபஞ்சத்தையும் கட்டுப்படுத்துகிறேன், நிர்வகிக்கிறேன், ஆனால் உங்கள் இருவரையும் என்னால் நிர்வகிக்க முடியாது! நான் அனுதினமும் விளக்கங்கள் தந்தபோதிலும், நீங்கள் தொடர்ந்து மோதிக் கொள்கிறீர்கள்.”**

மற்றொரு சந்தர்ப்பத்தில் பிரேம், கிரிஜா, பத்து வயது மகன் வினோத் (VINOD) ஆகியோர் குருபிரசாத்திற்கு விஜயம் செய்தனர். பிரேம், பாபாவைத் தழுவிக்கொண்டபோது அவர் **“உங்கள் இளைய மகன் ராஜ் எங்கே?”** என வினவினார்.

கில்னானி கூறினார், “அவரை சின்னம்மை நோய் தாக்கியுள்ளது.”

**“அவரை யார் கவனிக்கிறார்கள்?”**

“நான் அதைச் செய்கிறேன்.”

**“அப்படியானால், சின்னம்மை நோயாளியை கவனிக்கும் நீங்கள் என்னை ஏன் தழுவிக் கொண்டீர்கள்? என்னையும் தொற்று நோய் பற்றிக்கொண்டால் என்னவாகும்? இதைப் பற்றி ஏன் சிந்திக்கவில்லை?”**

“நீங்கள் கடவுள், உங்களை எப்படி சின்னம்மை தாக்கும்?” கில்னானி கேட்டார்.

**“நான் கடவுள், மேலும் நான் மனிதன். நான் உண்டு, அருந்துவது போல் ஒரு சாதாரண மனிதன் செய்யும் அனைத்தையும் செய்கிறேன். அந்த எண்ணம் ஏன் உங்கள் தடித்த மண்டைக்குள் நுழையவில்லை? இப்போது நான் பலரை அரவணைக்க வேண்டும். அவர்களுக்கு என் அன்பைக் கொடுப்பதற்கு பதிலாக, நான் அவர்களுக்கு சின்னம்மையைக் கொடுக்க வேண்டும்!”**

சிறுவன் ராஜிற்கு சில ஹோமியோபதி மருந்துகள் கொடுக்கப்பட்டதாக தம்பதிகள் கூறியபோது, பாபா, **“ஹோமியோபதி ஒரு சிறப்பான விஞ்ஞானம், ஆனால் அதை சரியாகப் பரிந்துரைக்கத் தேவையான நல்ல மருத்துவரைக் கண்டுகொள்வது கடினம்.”**

வினோத், ராஜ் இருவரும் ஒரு தனியார் கிறிஸ்தவ பள்ளியில் பயின்றனர், அங்கு அவர்கள் இயேசுவைப் பற்றிய பல கதைகளைக் கேட்க நேர்ந்தது. வினோத் குழப்பமடைந்து ஒருமுறை பாபாவிடம் கேட்டார், “நீங்கள் உங்களை கடவுள் என்று கூறுகிறீர்கள், ஆனால் பள்ளியில் கன்னியாஸ்திரிகள் இயேசு கிறிஸ்துவை கடவுள் என்று கூறுகின்றனர், உண்மையான கடவுள் யார்?”

அதற்கு பாபா, **“இயேசு, கிறிஸ்துவாக இருந்தார்; நான் கிறிஸ்துவாக இருக்கிறேன்!”**

வினோத் நினைவு கூர்ந்தார், “பாபாவின் எளிமையான மற்றும் தெளிவான பதிலில் நான் திருப்தி அடைந்தேன், மீண்டும் ஒருபோதும் எனது மனம் குழப்பத்தில் ஆழ்ந்ததில்லை.”

1960 மே 22 ஞாயிறு காலையில் குருபிரசாத்தில் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. பூனாவைச் சேர்ந்த அகில இந்திய வானொலியின் (ALL INDIA RADIO) புகழ்பெற்ற இசைக்கலைஞரான மதுகர் எம். கோல்வால்கர் (MADHUKAR M. GOLWALKAR), ஸாரங்கியில் (கம்பி இழையால் உருவாக்கப்பட்ட இந்திய இசைக்கருவி) அற்புதமான நிகழ்ச்சியை வழங்கினார். ஒரு தபேலா கலைஞர், சந்திரகாந்த் காமத் (27) பக்கவாத்தியத்துடன் இணைந்தார்.

அதற்குப் பிறகு, பாபா பார்வையாளர்களை நோக்கி, **“இன்று அதிகாலை நான்கு மணிக்கு ஒருவர் ஸாரங்கியில் இவ்வளவு நேர்த்தியான இசையுடன், தபேலா வாசித்திருந்தால், நான் மிக்க மகிழ்ச்சியடைந்திருப்பேன்; யாருக்குத் தெரியும், ஒருவேளை என் அருளால் நான் அவருக்கு இறையுணர்வை வழங்கியிருப்பேன்!”**

இசைக்கலைஞர்களிடம் பாபா, “**நீங்கள் ஸாரங்கியை வாசிப்பதன் மூலம் என்னை மகிழ்ச்சியடையச் செய்தீர்கள், பாபா எளிதில் மகிழ்ச்சியடைவதில்லை. இன்று நீங்கள் உண்மையில் என்னை மிகவும் மகிழச் செய்தீர்கள்**” என்று குறிப்பிட்டார்.

அடுத்த நாள், பாபா சில அன்பர்களுக்கு, ஏற்கனவே வழங்கிய உரையை மீண்டும் விளக்கிக் கூறினார்: “**உங்கள் இதயம் தூய்மையாக இருக்கட்டும். நீங்கள் உள்ளளவில் இல்லாததை வெளியளவில் செயலில் காட்டாதீர்கள்.**

**“முழு நேர்மையுடன் இருங்கள். கடவுள் எல்லையற்ற நேர்மையாளர். பக்திமான் என்று காட்டிக் கொள்ளாதீர்கள், ஏனெனில் கடவுள் எங்கும் இருக்கிறார்; அவரை ஏமாற்ற முடியாது - அப்படியானால் நீங்கள் இல்லாத ஒன்றை இருப்பதாக ஏன் காட்ட வேண்டும்?**

**“உங்களின் கீழ்ப்படிதல் எனும் அன்பளிப்பைத் தவிர, வேறு எதையும் உங்களிடமிருந்து நான் விரும்பவில்லை. அதை எனக்குக் கொடுக்கும் வேளையில், அறியாமையின் அடிமைத்தனத்திலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள்.**”

ஆதி, ரோடா துபாஷ், அவர்களின் 13 வயது மகன் மேர்வான் மற்றும் கராச்சியைச் சேர்ந்த ஆதி & டாலி அர்ஜானி (ADI & DOLLY ARJANI) ஆகியோர் மே 14 முதல் பூனாவில் தங்கியிருந்தனர். பாபா பல நாட்களாக ரோடாவின் மீது அதிக கவனம் செலுத்தாததால், மேலும் மனச்சோர்வடைந்த நிலையில், பனிப்பாறைகள் சரிந்து வருவதுபோல் எண்ணற்ற எண்ணங்கள் அவரை ஆட்கொண்டது. “ஒருவேளை அவர் என்னை நேசிக்கவில்லையா?” பதற்றத்தில் மனப் புகைச்சலுக்கு ஆளானார்.

ஒரு நாள் பாபா ஏதேனும் நகைச்சுவை நயம் நிறைந்த வார்த்தைகளுடன் ஒவ்வொருவருக்கும் ஐஸ்கிரீம் வழங்கிக் கொண்டிருந்தார். அன்று பாபா தன்னுடன் நிச்சயமாக பேசுவார் என்று ரோடா நினைத்தார். அவர் அருகில் வந்ததும், பாபா வேறு எங்கோ தனது பார்வையைத் திருப்பிக்கொண்டு, ஐஸ்கிரீமைக் கொடுத்தபோது, ரோடா மிகவும் பரிதாபமாக உணர்ந்தார், அவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

மறுநாள் பாபா அவரை அழைத்து, எந்த விளக்கமும் வழங்காமல், அவரது கவலையால் மூடியிருந்த மேகங்கள் அனைத்தும் கலைந்து போகும் விதத்தில், அன்புடன் தழுவிக் கொண்டார்! பாபா தனது மனதிலிருந்த இதுபோன்ற எண்ணங்களை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்பதற்காகவே அப்படி நடந்து கொண்டார் என்பதை ரோடா உணர்ந்தார்.

பூனா நகரில் நெரிசல் மிகுந்த பகுதியில் உறவினர்களுடன் துபாஷ் குடும்பத்தினர் தங்கியிருந்தனர். அவர்கள் குருபிரசாத்திற்கு சைக்கிளில் சென்று மதிய உணவை முடித்து வீடு திரும்புவதும், அதன் பின்னர் ஆதி, மேர்வான் இருவரும் குருபிரசாத் வந்து செல்வதும் வழக்கமாக நடந்து வந்தது. மே 22 அன்று, குறுகிய வீதி வழியாக சைக்கிளில் குருபிரசாத் வரும் வழியில், திடீரென

எதிர் திசையிலிருந்து வேகமாக வந்த கார் ஒன்று மேர்வான் மீது மோத இருந்தது, அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். அந்த வழியே நடந்து சென்ற முதியவர் ஒருவர் நடந்ததைப் பார்த்து, “கடவுள் அவரைக் காப்பாற்றினார்!” என்றார்.

குருபிரசாத்தை சென்றடைந்த இருவரும், பாபா அமர்ந்திருந்த பக்கத்து அறைக்குள் நுழைந்ததும், பாபா உடனடியாக ஆதியின் பக்கம் திரும்பி, “**மேர்வான் தனது சைக்கிளை எப்படி ஓட்டுகிறார்?**” என்று கேட்டார். அவன் ஒரு பெரிய விபத்திலிருந்து தப்பியதாக ஆதி குறிப்பிட்டதும், பாபா மிகவும் தீவிரமாக, சீற்றத்துடன் பார்த்து, மேர்வானிடம் வினவினார், “**எனது பார்வையை உங்கள் மீது வைத்திருப்பதைத் தவிர, நான் வேறு எதுவும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?**”

அன்று முதல், இந்தியாவில் இருக்கும் போது மேர்வான் சைக்கிள் ஓட்டுவதை பாபா தடை செய்தார். அன்று மதியம் பாபா ஓய்வு பெற்ற பின்னர், அந்த அறையில் இருந்த மண்டலியும் பிற அனைவரும், கடந்த ஒரு வாரமாக பாபா அனைவரிடமும் மேர்வான் எப்படி சைக்கிள் ஓட்டினார் தெரியுமா என்று கேட்டுக்கொண்டிருந்ததாக குறிப்பிட்டனர். ‘**அவர் கவனமாக ஓட்டுகிறாரா அல்லது அவசரமாக... வேகமாக ஓட்டுகிறாரா?**’ என்பதை பாபா அறிய விரும்பினார். பாபாவின் கவலையின் காரணத்தை அவர்கள் இப்போது புரிந்து கொண்டனர்.

டாக்டர் தேஷ்முக், பூனாவின் நன்கு அறியப்பட்ட சிற்பியான நரேஷ் மான்ஸிங் டோண்ட்ஃபாலே (NARESH MANSING DHONDPHALE) என்பவரை குருபிரசாத்தில் சந்திக்க ஏற்பாடு செய்தபோது, கலைஞர் பாபாவைக் குறித்த ஒரு பெரிய ஆய்வை மேற்கொண்டார். மே 23 அன்று, அவருடைய கைவண்ணத்தை பாபா மற்றும் மண்டலியிடம் காட்டுவதற்காக அவர் சிற்பத்துடன் திரும்பிவந்தார். பாபா கருணை கூர்ந்து அவருக்காக (ஜூன் 12 அன்று) அமர இணக்கம் தெரிவித்தார், இதனால் அவர் வடித்த சிற்பத்தில் சில இறுதி மாற்றங்களைச் செய்ய முடிந்தது.

இதற்கிடையில், பாபாவின் உடல்நிலை குறித்து தேஷ்முக் மிகவும் கவலைப்பட்டார். தினமும் அவர் பாபாவிடம் சத்தான உணவு மற்றும் ஏராளமான பழவகைகளை எடுத்துக் கொள்வதன் சிறப்புகளை எடுத்துரைத்தார். ஒருமுறை நடைபாதை வியாபாரி ஒருவரிடம் இருந்து 25 ஆரஞ்சு பழங்களை வாங்கினார். அவை சிறியதாகவும் உலர்ந்ததாகவும் இருந்தன, ஆனால் மலிவானவை. அவற்றை குருபிரசாத்திற்குக் கொண்டுவந்து பாபாவிடம், “உங்களுக்காக நான் ஆரஞ்சு பழங்களை வாங்கி வந்துள்ளேன், வேறு எவரும் இவற்றை சாப்பிட வேண்டாம்” என்று கூறினார்.

மெஹர்ஜி இடைமறித்து, “எங்கே, நாங்கள் அவற்றைப் பார்க்கட்டும்” என்றார்.

“நான் பாபாவிற்காக கொண்டு வந்துள்ளேன், அவற்றை வேறு எவருக்கும் காட்ட மாட்டேன்” என்று தேஷ்முக் எதிர்ப்புத் தெரிவித்தார்,

முதலில் மெஹர்ஜி அவை மிகச் சிறந்த வகையாக இருக்க வேண்டும் என்று நினைத்தார், ஆனால் தேஷ்முக்கின் பையிலிருந்து ஒன்றை வெளியே எடுத்தபோது, பாபா உட்பட அனைவரும் திடீரென உணர்ச்சி பொங்க சிரித்தனர். மீண்டும் தேஷ்முக், “பாபா, நீங்கள் மட்டுமே அவற்றை உண்ண வேண்டும், வேறு எவருக்கும் கொடுக்கக்கூடாது” என்று வலியுறுத்திக் கூறினார்.

அங்கிருந்தவர்களிடம் கண் ஜாடையால் தெரிவித்த பாபா, “**நான் அவற்றைச் சாப்பிடுவேன், வேறு எவருக்கும் கொடுக்கமாட்டேன். அவற்றில் முற்றிலும் பழரசம் இல்லை, எனவே நான் அவற்றை இப்படி மென்று சாப்பிட வேண்டும்**” என்று பதிலளித்து, நகைச்சுவையான முகபாவத்துடன் வாயை மேலும் கீழும் அசைக்கத் தொடங்கினார்.

“ஆனால் அவை உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது பாபா!” தேஷ்முக் வலியுறுத்திக் கூறினார்.

இந்துமதியின் (தேஷ்முக்கின் மனைவி) பக்கம் திரும்பிய பாபா, “**இந்தப் பித்தனைத் தவிர, உங்கள் தந்தை உங்களுக்காக ஒரு சிறந்த பொருத்தத்தைக் கண்டுபிடித்திருக்க முடியாதா?**” என்று கேட்டார்.

இந்துமதி சிரித்துக்கொண்டே இருந்தபோது, பாபா அவரிடம், “**தேஷ்முக் மிகவும் நல்ல மனிதர், ஆனால் அவர் என் மீதான அன்பில் பித்தராகிவிட்டார்!**” என்றார்.

இந்துமதி ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தை மராட்டியில் மொழிபெயர்த்து, தான் மொழிபெயர்த்த பகுதியை தினமும் பாபா முன்னிலையில் வாசித்தார். அவரது மகள்களான ஜெய்ஸ்ரீ (JAISHREE), பிரக்னியா (PRAGNYA) இருவரும், இந்துமதி இயற்றிய பாடல்களுக்கு இசையமைத்து, பாபாவின் முன்னால் அந்தப் பாடல்களைப் பாடினர்; மேலும் அவரது மகன் பிரணவ் (PRANAV) வேடிக்கையான கதைகளை எடுத்துரைத்தார்.

பாபா தேஷ்முக்கிடம், “**நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! உங்கள் மனைவி கற்றறிந்தவர், உங்கள் குழந்தைகள் மிகவும் புத்திசாலிகள், அனைவரும் என்னை நேசிக்கிறார்கள்**” என்று குறிப்பிட்டார்.

1960 மே 24 அன்று, ஹைதராபாத்திலிருந்து 20 அன்பர்கள் பாபாவின் தரிசனத்திற்காக குருபிரசாத்தை வந்தடைந்தனர். அன்றைய தினம், பாபா, கபட சாதுக்களைப் (துறவிகள் போல பாசாங்கு செய்பவர்கள்) பற்றி பேசினார். சத்குரு துக்காராமின் குறுங்கவிதை ஒன்று சத்தமாக வாசிக்கப்பட்டது, அதில் துக்காராம் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: “ஒரு பாசாங்குத்தனமான துறவியை அடித்து உதைக்கும் செயலை ஒரு பாவமாகக் கருத முடியாது.”

அத்தகைய நயவஞ்சகர்கள் தொடர்பான ஹாஃபீஸின் ஈரடிக் கவிதைகளும் பாரசீக மொழியில் வாசிக்கப்பட்டன. ஹாஃபீஸின் ஒரு கவிதை பின்வருமாறு: “இந்த முரடர்கள் ஒரு வகையில் தைரியமானவர்கள்; அவர்கள்

கடவுளை ஏமாற்ற முயற்சிக்கிறார்கள்! அவர்கள் சவுக்கால் அறையப்பட வேண்டும்!"

இதற்கு முன்னதாக (1960 ஏப்ரல் 13) பாபா இது குறித்து கருத்துத் தெரிவித்திருந்தார்: "**கடவுள் மன்னிக்காத ஒரே பாவம் பாசாங்குத்தனம். நயவஞ்சகன், தன்னையும் பிறரையும் ஏமாற்றுகிறான். இந்த நாட்களில் பாசாங்குத்தனம் படைத்த துறவிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது, நான் இரக்கம் நிறைந்த இறைப் பெருங்கடலாக இருந்தாலும், எனக்கே வெறுப்பாக இருக்கிறது!**"

மேலும், "**கடவுளை நம்பாதது கூட பாவம் இல்லை, நயவஞ்சகனாக இருப்பது பாவம்! நம்பிக்கை இல்லை என்றாலும் பரவாயில்லை, என்னிடம் வருவதன் மூலம் எனது உண்மை நிலையை தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது. நீங்கள் என்னிடம் வரவில்லையென்றாலும் அது ஒரு பொருட்டல்ல, ஆனால் நீங்கள் வரும் வேளையில், தொடர்ந்து கபடநாடகம் போடுவதானால், அது எனக்கு அதிருப்தி அளிக்கிறது, நீங்கள் என்னை எதிர்த்துப் பேசினாலும் அல்லது என்னிடம் வரவில்லையென்றாலும் நான் அதிருப்தியடைய மாட்டேன், ஆனால் பாசாங்குத்தனத்தை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. நயவஞ்சகர் தனக்குத் தானே தீங்கு விளைவிப்பது மட்டுமின்றி, பிறரின் நம்பிக்கையையும் சீர்குலைக்கிறார்.**"

கலிஃபோர்னியாவைச் (CALIFORNIA) சேர்ந்த லட் டிம்ப்ஃபில் (LUD DIMPFL) என்பவர் ஈரானுக்கு வணிக நிமித்தமாக பணிமாற்றம் செய்யப்பட்டதால், சில நாட்கள் இந்தியாவில் தங்கிச் செல்ல அனுமதி கோரி கடிதம் எழுதியிருந்தார். பாபா அதற்கு ஒப்புதல் அளித்தார்; மேலும் லட், மெஹர்ஜியால் 25ஆம் தேதி பிற்பகல் 2:00 மணிக்கு குருபிரசாத் அழைத்து வரப்பட்டார். பாபா ஏறக்குறைய ஒரு மணி நேரம் லட் டிம்ப்ஃபிலை சந்தித்தார்.

லட், மறுநாள் திரும்பி வந்து, காலையும் மதியமும் பாபாவின் சகவாசத்தில் நேரத்தைக் கழித்தார். ஒரு கட்டத்தில், பாபா அவருக்கு விளக்கினார், "**நான் அன்பின் இறைப் பெருங்கடல். எனவே நீங்கள் அன்புடன் எதைச் செய்தாலும் அது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அன்பு உங்களை என்னிடம் ஈர்க்கும் போது எதையும் கேட்காதீர்கள். அன்பை மட்டுமே கேளுங்கள். நீங்கள் என்னிடம் கேள்விகள் கேட்க விரும்பினால், கடிதங்கள் மூலமாக அவ்வாறு செய்திருக்கலாம். ஆனால் இப்போது நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள், அமைதியாக அனைத்தையும் பெற்றுக்கொள்பவராக இருங்கள்.**

"**ஒன்றைக் கேட்கும் வேளையில் அதை நீங்கள் இழக்கிறீர்கள்! அன்பைப் பொறுத்தவரை கேள்விகளுக்கு இடமில்லாததால், பதில்கள் எதிர்பார்க்கப்படவில்லை. அன்பிற்குரியவரின் ஒரு குறுகிய விருப்பத்திற்குக் கூட பதிலளிக்க அன்பு எப்பொழுதும் ஆர்வமாக உள்ளது. குருநாதருக்குக் கீழ்ப்படிந்து இருப்பதில் ஏன், எதற்காக என்ற எண்ணம் எதுவும் இல்லை.**

**குருநாதரைப் பின்பற்ற விரும்புபவர்களுக்கு ஹாஃபீஸ் கூறுகிறார்: "குருநாதர் கூறுவதை நீங்கள் கேட்பதைக் குறித்து, அதை ஒருபோதும் தவறு என்று கூறாதீர்கள், ஏனெனில், என் அன்பரே, அவரைப் புரிந்துகொள்ள முடியாததன் தவறு உங்கள் சுய இயலாமையில்தான் உள்ளது."**

மற்றுமோர் ஈரடிக் கவிதையில், பொறுமையற்ற அன்பர் ஒருவரிடம் ஹாஃபீஸ் கூறுகிறார்:

**ஓ அன்பரே, பிரிவதும், இணைவதும் பற்றிக்**
**கவலையடைய வேண்டியதில்லை நீங்கள்;**
**அன்பானவரின் விருப்பத்திற்கு உங்களை**
**முற்றிலும் விட்டுக்கொடுக்க மட்டுமே முயலுங்கள்.**

லட் டிம்ப்ஃபில் வந்த அதே நாளில், ஆந்திரா, ஷோலாபூர் மற்றும் நவ்ஸாரியிலிருந்து பல அன்பர்கள் வந்தனர். நவ்ஸாரியைச் சேர்ந்த ஒருவர், "பாபா, நான் உங்களை எங்கும் பார்க்கிறேன்!" என்று வெளிப்படையாகத் தெரிவித்தார்.

பாபா பதிலளித்தார், "**நல்லது. என்னை எப்பொழுதும் பார்க்க முழு மனதுடன் முயற்சி செய்யுங்கள். ஆனால் என்னைப் பார்க்கும் உங்களின் தற்போதைய உணர்வு 'உண்மையான பார்வை' அல்ல என்பதை நன்கு நினைவில் கொள்ளுங்கள்.**

**"கடவுள் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையைக் குறித்து, அறிவார்ந்த, உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருப்பது கூட மிகவும் கடினம். இதற்கு, கடவுள் எங்கும் நிறைந்திருப்பதில் பாறை போன்ற திட நம்பிக்கை தேவை. நீங்கள் அறிவின் தடையைக் கடக்கும்போது, 'கடவுளை நேருக்கு நேர் எங்கும் பார்க்கும் உறுதியான நம்பிக்கையின் தருணம் வரும். அப்போது கடவுள், ஒவ்வொரு கணமும், எங்கும் பார்க்க வேண்டிய விதத்தில் பார்க்கப்படுகிறார்.**


**"இது உண்மையான பார்வை, ஆனால் இதுவும் இருமைத்தன்மையைத்தான் குறிக்கிறது.**

**"தனிப்பட்ட வாழ்க்கையின் எஞ்சியுள்ள கடைசி சுவடுகளைக் கிழித்தெறிந்து, இந்த இரண்டாவது வகை நம்பிக்கையின் தடையை நீங்கள் கடக்கும்போது, மூன்றாவது வகையான திடநம்பிக்கை, அதாவது 'கடவுளாக மாறும் உறுதிப்பாடு' தானாகவே உதயமாகிறது. இதுவே மிகவும் அரிதான சந்தர்ப்பம், பரிபூரண குருநாதரிடமிருந்து அடையப்பெறும் அருளின் அன்பளிப்பு."**

பாபா 25ஆம் தேதி, மஸ்த் நீல்கந்த்வாலாவுடனான தமது பணியை நிறைவு செய்த போது, மஸ்தை மீண்டும் ரிஷிகேஷிற்கு அழைத்துச் செல்லுமாறு குமார் அறிவுறுத்தப்பட்டார். இருவரும் மறுநாள் ரயிலில் புறப்பட்டுச் சென்றனர்.



**பூனா பாபா-அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம், மே 1960**
**பாபாவுடன் லட் டிம்ப:ஃபில்** (POONA HOUSE VISITS WITH LUD DIMPFL, MAY 1960)



**பூனா பாபா-அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம், மே 1960**
(POONA HOUSE VISITS, MAY 1960)

**1960** மே **26** அன்று, பாபா மூன்று இல்லங்களுக்கு விஜயம் செய்தார். அடுத்த நாள், அவர் லட் டிம்ப்ஃபிலுடன் மேலும் இரண்டு இல்லங்களுக்குச் சென்றார். அன்று விஜயம் செய்த வீடுகளில் ஒன்று, பூனா, கோர்படி, ஷிவ் கீர்த்தியில் (SHIV KIRTI, GHORPURI) அமைந்த பல்வந்த் மற்றும் லக்ஷ்மிபாய் தாடே, BALWANT & LAXMIBAI THADE (லக்ஷ்மிபாய், 'அம்மா' - AMMA என்ற செல்லப்பெயரால் அழைக்கப்பட்டார்). தாடே தம்பதியருக்கு நான்கு மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர்; குடும்பத்தில் அனைவரும் பாபாவிற்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்கள். அம்மா உணவு தயார் செய்வதில் சிறந்து விளங்கினார்; பாபா விரும்பிய சிறப்பு உணவுகளைத் தயார் செய்து, குருபிரசாத்திற்கு அனுப்புவது வழக்கம். பாபாவின் இந்த வருகையை ஒட்டி, அவர் பல சுவையான உணவுகளைத் தயார் செய்திருந்தார், பாபாவும் மண்டலியும் அதை சுவைத்தனர். குடும்பத்தினர் பாபாவுக்காக ஒரு இந்தி பாடலையும் பாடினர், 'ஆஜ் ஓ சுதின் ஆயே' (AAJ OH SUDIN AAYE), அதாவது: 'எங்கள் வாழ்வில் நாங்கள் ஏங்கிக் கொண்டிருந்த அந்த மங்களகரமான நாள் இன்று வந்துவிட்டது.'

பாபா, லட் டிம்ஃபிலிடம் கூறினார், "**தாடே குடும்பம் இந்தியாவில் வாழும் எனது பக்திமிக்க குடும்பங்களில் ஒன்றாகும். அவர்களின் அன்பு என் இதயத்தை மிகவும் ஆழமாகத் தொடுகிறது.**"

அன்று மாலை, பாவ் கல்சூரி வழக்கம் போல பாபாவின் அறையில் கண்காணிப்புப் பணியில் இருந்தார். திடீரென ஒரு வாடகைக் கார் வெளியே வந்து நின்றது. பாபா, வந்தவர் யார் என்று அறிய பாவ் கல்சூரியை அனுப்பினார். பாவ் கல்சூரி பயின்று வந்த நாக்பூர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஆர்.பி. அஸ்தானா (DR. R.P. ASTHANA) காரிலிருந்து வெளியே வந்தார். ஆனால் இருவரும் தங்களை அறிமுகப்படுத்தும் வரை, ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அஸ்தானா, "கல்சூரி, இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நான் ஓர் இரவு காவலாளி," பாவ் கல்சூரி கூறினார்.

ஆச்சரியமடைந்த கல்லூரி முதல்வர் அஸ்தானா, "இரவு காவலாளி? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" பாவ் கல்சூரி சிரித்துக்கொண்டே அவர் எங்கே தங்கியிருக்கிறார் என்று விசாரித்தார். அதற்கு அஸ்தானா, "நான் ஆகா கான் பங்களாவில் (AGA KHAN'S BANGALOW) தங்கியிருக்கிறேன்" என்று கூறினார், அது ஒரு பிரமாண்டமான குடியிருப்பு.

பாவ் கல்சூரி அவரை அமருமாறு கூறி, பாபாவிற்குத் தெரிவிக்கச் சென்றதும், அவர், "**நாளை காலை எட்டு மணிக்கு அவரை வரச் சொல்லுங்கள், ஆனால் அவர் உங்கள் முதல்வர் என்பதால், அவரை நமது காரில் ஆகா கான் பங்களாவிற்கு அனுப்புங்கள்; அவரது முன்னாள் மாணவர் அவரை மிகவும் நன்றாக கவனித்துக்கொள்கிறார் என்பதை நினைத்து அவர்**

**மகிழ்ச்சி அடைவார். அவரை அங்கே இறக்கிவிட்டு உடனடியாக திரும்பி வருமாறு ஓட்டுநரிடம் கூறுங்கள்.**"

கல்லூரி முதல்வர் அஸ்தானாவிடம், பாவ் கல்சூரி சென்று கூறியதற்கு, அவர் எதிர்ப்புத் தெரிவித்தார்: "இல்லை, இல்லை, அது தேவையில்லை. நான் நடந்து செல்கிறேன். அதை மனதில் வைத்துக்கொண்டுதான் காரைத் திருப்பி அனுப்பினேன்" என்று கூறினார்.

பாவ் கல்சூரி, "ஆகா கான் பங்களா வெகு தொலைவில் உள்ளது, நீங்கள் காரில் செல்வதை பாபா விரும்புகிறார்" என்று அவரைத் தடுக்க முயன்றார். அதற்கு செவி சாய்க்காமல், முதல்வர் அஸ்தானா நடந்து சென்றார்.

பாவ் கல்சூரி திரும்பி வந்ததும், பாபா அவரை கிண்டல் செய்தார், "**நீங்கள் ஒரு முட்டாள்! குறைந்த பட்சம் உங்கள் கல்லூரி முதல்வரை காரில் அனுப்பியிருக்கலாம். அவரை நீங்கள் இங்கிருந்து இவ்வளவு தூரம் நடந்து செல்ல அனுமதித்தது, சரியாகத் தோன்றவில்லை. உண்மையிலே நீங்கள் ஒரு மூடன்!**"

மறுநாள் காலை, பாபாவை தரிசனம் செய்ய வந்த முதல்வர் அஸ்தானா, அவரை சந்தித்ததில் வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

ஆனால், அதற்குப் பிறகு, பாவ் அவரது சக தோழர்களில் ஒருவரிடமிருந்து, முதல்வர் அஸ்தானா அவரிடம் கூறியதற்கு மாறாக, அவர் ஆகா கான் பங்களாவில் தங்காமல், மிகவும் தரம் குறைந்த ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்ததை பாவ் கல்சூரி கண்டுபிடிக்க நேர்ந்தது. பாவ் கல்சூரியின் மனதில் நன்மதிப்பைத் தூண்டும் நோக்கத்தில் அவர் ஆகா கான் பங்களாவைக் குறிப்பிட்டிருந்தார். பாபாவிற்கு இது தெரியும் ஆதலால் அஸ்தானா காரைப் பயன்படுத்துமாறு வற்புறுத்தினார்; அவரது வஞ்சகத்தை பாபா வெளிப்படுத்த விரும்பினார்; இதனால் பாபா அனைத்தும் அறிந்தவர் என்பதை அஸ்தானா உடனடியாக உணர்ந்தார்.

இதையறிந்த பாவ் கல்சூரி, பாபாவிடம் தெரியப்படுத்தியதும் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**உலகில் நான் மட்டுமே ஏமாற்றுப் பேர்வழி என்று நினைத்தேன், ஆனால் உங்கள் முதல்வர் கூட அதே வழியில் பயணிக்கிறார்!**"

அதே நாளில், பாபாவின் தரிசனத்திற்காக, முதல்வர் நிரஞ்சன் ஸிங் (PRINCIPAL NIRANJAN SINGH) பேராசிரியர் ஜகிந்தர் ஸிங் (PROFESSOR JAGINDAR SINGH) மற்றும் லாலா தெஹல்ராம் (LALA TEHLRAM) ஆகியோர் டெல்லியிலிருந்து வந்தனர். பாபா கேட்டார், "இன்று எத்தனை முதல்வர்கள் இங்கே இருக்கிறார்கள்?" பள்ளி நிர்வாகிகள் பூனாவில் ஒரு மாநாட்டில் கலந்துகொள்ள வந்ததால் அவர்களில் பலர் பாபாவை சந்திக்க நேர்ந்தது.

1960 மே 28 சனிக்கிழமை அன்று பாபா குருபிரசாத்தில் தரிசனம் வழங்கினார், அதைத் தொடர்ந்து மதியம் 2:00 முதல் 3:30 மணி வரை, மூன்று அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். லட் டிம்ப்ஃபில் அன்றைய

தினம் திரும்பிச் சென்றார். கொல்கத்தாவிலிருந்து 50 அன்பர்கள் அடங்கிய குழு ஒன்று, இரண்டு நாட்களுக்குப் பிறகு, 30ஆம் தேதி குருபிரசாத் வந்தடைந்தது.

ஒருமுறை ஸ்ரீநகரைச் சேர்ந்த கல்லூரி மாணவர் அவ்தார் கிஸான் டிக்கு (AVTAR KISAN TIKU), பாபாவின் தரிசனத்திற்காக அவருக்கு தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்; அவர் குருபிரசாத் வந்ததும் பாபா அவரைத் தழுவினார்; ஆனால் சிறிது நேரத்தில், மீண்டும் குருபிரசாத்திற்கு திரும்பி வரவேண்டாம் என்ற கட்டளையுடன், டிக்குவிடம் புறப்படுமாறு கேட்டுக் கொண்டார். அந்த இளைஞன் எழுந்து நிற்காமல், "உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இன்னும் சிறிது நேரம் அமர்ந்திருக்கிறேன் பாபா," என்றான்.

பாபா, புக்காருக்கு சைகையால் தெரிவித்ததும், உடனே அவர் கத்தினார், "நீங்களாகச் செல்கிறீர்களா, அல்லது நான் உங்களைத் தூக்கிச் செல்லட்டுமா? மீண்டும் குருபிரசாத்திற்கு வந்தால் உங்கள் கால்கள் உடைக்கப்படும்! நீங்கள் ஒன்றும் புரியாத கழுதை!" பாபாவின் அறிகுறிகளின்படி, புக்கார், டிக்குவை கடுமையாகக் கண்டித்தார், இறுதியாக, டிக்கு அரண்மனைக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.

சாதாரணமாக இதுபோன்ற நடத்தை, ஒரு பாதகமான விளைவை உருவாக்கியிருக்கும், ஆனால் இந்த விஷயத்தில், மாறாக, கிஸன் டிக்கு இறுதியில் பாபாவின் அன்பில் மிகவும் நெருக்கமாக வந்தார். பாபாவின் விருப்பப்படி, அதே நாளில் புக்கார் தனிப்பட்ட முறையில் டிக்குவை காஷ்மீருக்கு ரயிலில் அனுப்பிவைத்தார்; ஆனால், பாபா தனது 'இதயத்தை' அவருக்கு அள்ளி வழங்கினார். அவர் முதல் முறையாக தரிசனத்திற்கு வந்திருந்தாலும், இதுவரை எந்த ஒரு புதிய நபரும் இதுபோன்ற உபசரிப்புக்கு உட்படுத்தப்படவில்லை!

கிஸன் டிக்கு மீண்டும் பாபாவிற்கு எழுதத் தொடங்கினார், மேலும் பாபாவின் ஏகாந்தவாசத்தின் பிற்பகுதியில் (1965 டிசம்பர்), அவர் வெளி நபர்கள் எவரையும் சந்திக்காதபோதும், பாபா அவரை மெஹராஸாத்திற்கு அழைத்தார். டிக்கு மீண்டும் காஷ்மீரிலிருந்து விரைந்து வந்தார்; இந்த முறை பாபா அவரை மிகவும் அன்புடன் வரவேற்று, அதே நாளில் அவரை திருப்பி அனுப்புவதற்கு முன்னர் அன்புடன் தழுவினார்.

காலம் பதிவு செய்தது போல், "அத்தகைய செயல்பாடுகளை அவதானிப்பதன் மூலம், இறை-மனிதனின் திருவிளையாடலை யார் ஒருவர் புரிந்து கொள்ள முடியும்?"

ஃபுளோரிடா, மியாமியைச் (MIAMI, FLORIDA) சேர்ந்த 22 வயதான இர்வின் லக் (IRWIN LUCK), நியூயார்க் நகர பொது நூலகத்திற்கு (NEW YORK CITY PUBLIC LIBRARY) வருகை தந்த தனது இளைய சகோதரர் எட்வர்டிடமிருந்து (EDWARD) பாபாவைப் பற்றி, முந்தைய ஆண்டு, அறிந்துகொண்டதைத் தொடர்ந்து, 'தற்செயலாக', 'லிஸன் ஹியுமானிட்டி' (LISTEN HUMANITY) என்ற புத்தகத்தைப் பார்க்க நேர்ந்தது. எட்வர்ட், இர்வினை தொலைபேசியில் தொடர்புகொண்ட போது, "நான் இந்தியாவில் ஒரு ஆன்மீக குருநாதரைப் பற்றிய புத்தகத்தைப் படித்தேன்.

இவரைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்" என்று கூறினார்.

இர்வின் ஏற்கனவே இறை நாட்டம் மிக்கவராக இருந்தார், மேலும் பாபா தன்னை உள்நோக்கி வழிநடத்துவதாக உணர்ந்தார். அவர் நியூயார்க் சென்று, அந்தப் புத்தகத்தைப் படித்த பிறகு, பாபாவின் அன்பாலும், அவர் பறைசாற்றிய 'உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவர்' (THE HIGHEST OF THE HIGH) என்ற உரையாலும் வெகுவாக ஈர்க்கப்பட்டார். இர்வின், எட்வர்ட் இருவரும் பாபாவை சந்திக்கவும், அவரைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளவும் தீர்மானித்தனர்.

1959இன் பிற்பகுதியில், ஃப்ரெட், எல்லா வின்டர்ஃபெல்ட் (FRED & ELLA WINTERFELDT) இருவரையும் இர்வின் தொடர்பு கொண்டார். அவர்களது இல்லத்தில் நுழைந்த அந்த கணமே 'நம்பமுடியாத அளவுக்கு மகிழ்ச்சியும், மனநிறைவையும் உணர்ந்தார். பாபாவின் பிரசன்னம் அதி தீவிரமாக இருந்தது.' அவர் பாபாவிற்கு கடிதம் எழுதி, தன்னிடம் சிறிதளவே பணம் இருந்தபோதிலும், அவரை சந்திக்க ஒரு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். இரண்டு வாரங்களுக்குள் பாபாவிடமிருந்து பதில் கடிதம் வந்தது; அதில் '**நீங்கள் ஒரு மணி நேரம் மட்டும் என்னை வந்து பார்க்கலாம்**' என்றும், '**அவர் மும்பை வந்தடைந்ததும் நரிமன் தாதாசாஞ்சியைத் தொடர்பு கொள்ளுமாறும்**' அறிவுறுத்தப்பட்டார்.

ஆறு மாதங்கள் கடந்த பின்னர், அவர் கடுமையாக முயன்றும், இர்வினால் விமானப் பயணத்திற்குப் போதுமான கட்டணத்தை சேமிக்க முடியவில்லை. இந்தியாவுடனான அவருடைய கடிதப் பரிமாற்றம் தொடர்ந்தது, மேலும் பாபாவை சந்திக்க விரும்பிய எட்வர்டையும் அழைத்து வர அனுமதி பெற்றார். 1959 ஏப்ரல் 5 அன்று, பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**உங்கள் தந்தையார் அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொள்ள இணக்கம் தெரிவித்தால், பூனாவில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருந்து பாபாவை சந்திப்பதற்கு, மே மாதத்தின் நடுப்பகுதியில் நீங்கள் இருவரும் உங்கள் தந்தையுடன் அல்லது தனியாக இந்தியாவிற்கு வர பாபா அனுமதிக்கிறார். உங்கள் முடிவையும் மேலும் வழிமுறைகளுக்காகவும், மெஹர் பாபா, குருபிரசாத் பூனா, முகவரிக்கு தொலைத்தந்தி அனுப்பவும்.**

1960 மே மாதத்தின் நடுப்பகுதியில் இர்வின் லக் குடும்பக் கடிதத்தைப் (FAMILY LETTER) படித்தார்; அதில் மே 7ஆம் தேதி வெளியிடப்பட்ட மெஹர் பாபாவின் சுற்றறிக்கைக்கு இணங்க, ஜூன் 10ஆம் தேதியிலிருந்து தரிசனம் நிறுத்தப்படுவதாகவும், பாபா ஆண்டு இறுதி வரை முழு ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இர்வின் நம்பிக்கை இழந்த நிலையில் அவரது வாய்ப்பு, கைகளைவிட்டு நழுவியது போல் உணர்ந்தார். அவர் மற்றுமொரு கடிதத்தை பாபாவிற்கு அனுப்பினார்; அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

உங்கள் அன்பு, வழிகாட்டுதல் மற்றும் உறுதுணையின் பலனை அடையப்பெற நான் ஆவலாய் இருக்கிறேன், ஆனால் உங்களைப் பார்க்க வருவதைத் தடுக்கும் ஒரே விஷயம் இந்தப் பயணத்தை மேற்கொள்ள என்னிடம் போதிய பணம் இல்லாததுதான். அத்தகைய உயர்ந்த இலட்சியத்தின் பாதையில் பணம் ஏன் தடையாக இருக்க வேண்டும் என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை; ஆனால் உங்கள் விருப்பம் இருந்தால் நான் உங்களை வந்து பார்க்க முடியும் என்று எனக்குத் தெரியும்.

பாபா இந்த பதிலை அனுப்பினார்: "**கவலைப்படாதீர்கள். சூழ்நிலைகள் அவற்றைத் தானே மாற்றிக் கொள்ளும்.**"

பாபாவின் வாக்குறுதிக்கு இணங்க, சூழ்நிலைகள் சீராயின: இர்வின் தேவையான பணத்தைப் பெற்று, ஒரே நாளில் அங்கிருந்து இந்தியா புறப்பட நேர்ந்தது. அவர் முதலில் தனது இளைய சகோதரருடன் பயணம் செய்ய திட்டமிட்டிருந்தாலும், எட்வர்ட் புறப்படுவதற்கு சற்று முன்பு, நியூயார்க் காவல்துறையினர் அவரை, ஐடில்வைல்ட் விமான நிலையத்தில் (IDLEWILD AIRPORT) தடுத்து நிறுத்தியதன் மூலம், அவர்களின் தந்தை, எட்வர்டின் வருகைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர்களின் பெற்றோர் ஆட்சேபனை தெரிவிப்பார்கள் என்று தெரிந்திருந்ததால், பயணத் திட்டத்தைக் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை, மேலும் எட்வர்ட் சட்டப்பூர்வ வயதிற்கும் (21) குறைவாக இருந்ததால், அவரது தந்தையை விட்டுச் செல்வதை அவரால் தடுக்க முடிந்தது. பாபா அவர்களை ஒன்றிணைந்து வரச் சொன்னதால், எட்வர்டுடன் மியாமிக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று இர்வின் நினைத்தார். ஆனால் எட்வர்ட் அவரைப் பின்தொடர்வதாகக் கூறி, இர்வினை முதலில் செல்லுமாறு அறிவுறுத்தினார். (இந்தக் கதையைக் கேட்ட பாபா, "**ஒருவருக்கு அதிர்ஷ்டம்** (LUCK) **அதிகம், மற்றொருவருக்கு துணிச்சலும் மன உறுதியும் அதிகம்** (PLUCK)!" என்று கிண்டல் செய்தார்.

இர்வின் 1960 ஜூன் 1 அன்று அதிகாலையில் மும்பை வந்தடைந்ததும், அதே நாளில் ஹோமா தாதாசாஞ்சி அவரை பூனாவிற்கு அழைத்துச் சென்றார். பூனாவில் தங்கியிருந்து இர்வினை கவனித்து, வழிகாட்டி உதவுவதற்காக, மெஹராபாத்திலிருந்து டாக்டர் டான் அழைக்கப்பட்டார். டான் தங்கியிருந்த நேப்பியர் ஹோட்டலில் (NAPIER HOTEL) இர்வினையும் தங்க வைத்து, இரவில் நன்றாகத் தூங்குமாறும், மறுநாள் காலை 7:30 மணிக்கு பாபாவைப் பார்க்க அழைத்துச் செல்வதாகவும் கூறினார்.

அடுத்த நாள், ஜூன் 2 அன்று, இர்வின், மெஹர்ஜியால் குருபிரசாத்திற்கு அழைத்து வரப்பட்டார். கார் உள்ளே நுழைந்ததும், ஓர் அறையின் வாசலில் பாபா நின்றுகொண்டிருந்ததை இர்வின் கவனித்தார்; அவரை தன்னிடம் வருமாறு பாபா சைகையால் அழைத்தார். காரில் இருந்த ஒருவர், "பாபா உங்களை அழைக்கிறார்" என்றதும், வெளியே இறங்கி, பாபாவை நோக்கி விரைந்தார். பாபாவிற்கு ஒரு பெரிய மலர் மாலையை வாங்கிச் செல்லுமாறு மெஹர்ஜி பரிந்துரைத்த வேளையில், இர்வின் மனதில் "ஏன் மலர் மாலை, நானே பாபாவின் மாலையாகி

விடுவேன்!' என்ற எண்ணம் உதயமானது; எப்படியும் வாங்கிய மலர் மாலையை பாபாவிற்கு அணிவித்ததும், பாபா, உடனே அதைக் கழற்றி, இர்வினை இறுக்கமாக அணைத்து, இரு கன்னங்களிலும் முத்தமிட்டு, அவரைத் தன் அருகில் அமர வைத்தார். இர்வின் லக், பாபாவுடனான தனது முதல் சந்திப்பை இவ்வாறு விவரிக்கிறார்:

சாதாரணமாக நான் பதட்டமடைபவன் அல்ல, ஆனால் நான் பாபாவைப் பார்க்க வாசலில் நுழைந்தபோது, சற்று தடுமாறினேன். நான் உள்ளே எட்டிப்பார்த்தேன், அவர் என்னைப் பார்த்தார்; என்னை உள்ளே அழைத்துத் தழுவினார். அவர் மிகவும் பாசமாக இருந்தார். அவர் என்னை ஏற்றுக்கொண்ட விதம், என்னால் மறக்க முடியாத ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. யாரோ ஒருவர் நாய்க்குட்டியை அள்ளி அணைப்பதை அவர் எனக்கு நினைவூட்டினார். அவர் என்னை மிகவும் இதமாக, சௌகரியமாக உணர வைத்தார். நீண்ட காலமாகத் தொலைந்துபோன மகன், ஒரு நாள் வீட்டிற்குத் திரும்பி வந்ததுபோல் உணர்ந்தேன்.

பாபா மிக்க பாசமாகவும், நேசமாகவும் இருந்தார். ஒருவர், அவரிடம் மிகவும் சௌகரியமாக உணர்ந்தார். அவர் மிகவும் அன்பானவர், அவர் உங்களை மிகவும் நேசித்தது மட்டுமின்றி, உங்கள் சொந்த நலன்களை இதயத்தில் கொண்டிருந்தார். எந்த சுயநலமும் அவரிடம் இல்லை. அவர் மக்களுக்கு ஒன்றை எடுத்துரைத்தபோது, அது அவர்களின் சொந்த நலனுக்காக இருந்தது. அவர் அற்புதமான செயல் வல்லமையும், அனைத்தையும் கட்டுப்படுத்தும் தன்மையையும் கொண்டிருந்தார். நீங்கள் அவருடன் மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தீர்கள். கவலை என்பதற்கே இடமில்லை.

நான் முதலில் வந்தபோது மிகுந்த பதட்டமாக இருந்தேன். ஆனால் பாபா, அவரது வழியில் ஒருவரை மீண்டும் அமைதிப்படுத்தும் வழிகளைக் கையாண்டார். அப்படியானால் அவர் என்னுடன் எப்படிச் செய்தார்? அவர் என்னை விட பதட்டமாகத் தோன்றினார்! அவர் மிகவும் பதட்டமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்! நான் உள்ளே வந்ததும் அவர் பதற்றமடைவது போல கால்கள் நடுங்கின. நான் மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்: "நானல்லவா பதட்டப்பட வேண்டியவன், அவர் அல்லவே! அவர் ஏன் பதற்றமாக இருக்க வேண்டும்?" சிறிது நேரத்தில் நான் அமைதியானதும், அவர் அமைதியாகத் தோன்றினார், மீண்டும் அனைத்தும் சரியாகிவிட்டது.

பாபா கேட்டார், **"உங்களால் எப்படி வர முடிந்தது?"**

இர்வின் கூறினார், "பாபா, உங்கள் விருப்பம் என்பதால் என்னால் வர முடிந்தது".

பாபா, இர்வினை எழுந்து நிற்கக் கூறி, **"இங்கே இருக்கும் அனைவருக்கும் அதையே திரும்பச் சொல்லுங்கள்"** என்று சைகையால் தெரிவித்தார்.

இர்வின் எழுந்து நின்று, "பாபாவின் விருப்பம் என்பதால் நான் இங்கே இருக்கிறேன்" என்றார்.

பின்னால் இருந்த ஒருவர் கையை உயர்த்தி, “ஆனால், இங்கு வரத் தேவையான பணத்தை எப்படிப் பெற்றுக்கொண்டீர்கள்?” என வினவினார்.

இர்வின் நினைத்தார் அந்த மனிதர் முக்கிய கருத்தைத் தவறவிட்டார். இதை உறுதிப்படுத்துவது போல, பாபா உடனே, “**அது முக்கியமல்ல. அவர் எப்படி வந்தார் என்று கூறிய விதம்தான் முக்கியம்**” என்று சுட்டிக் காட்டினார்.

சிறிது நேரம் கழித்து, இர்வின் பக்கம் திரும்பி, “**எவ்வளவு காலம் இங்கே இருப்பீர்கள்?**” என்று பாபா கேட்டார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு பாபா, அவருக்கு எழுதிய முதல் கடிதத்தை நினைவு கூர்ந்து, “ஒரு மணி நேரம்” என்று இர்வின் பதிலளித்தார்.

பாபா தனது மணிக்கட்டைச் சுட்டிக்காட்டி, நேரத்தைக் கேட்டு, இர்வினை வேடிக்கையான மற்றும் குழப்பமான முகபாவத்துடன் பார்த்தார். “**நீங்கள் இங்கு வந்து ஏற்கனவே இரண்டரை மணி நேரமாகி விட்டது, நீங்கள் ஒரு மணி நேரம் என்று சொன்னீர்கள், ஆனால் இப்போது கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் ஆகிவிடும்! அது எப்படி?**”

இர்வினுக்கு பாபா கூறியது என்னவென்று தெரியாது. பாபா தொடர்ந்தார், “**நீங்கள் தினமும் காலை 7:30 மணிக்கு இங்கே இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மெஹர்ஜி உங்களை ஹோட்டலிலிருந்து அழைத்து வருவார், பகலில் முழு நேரமும் நீங்கள் என்னுடன் இருப்பீர்கள். அவர் உங்களை மதிய உணவிற்கு அழைத்துச் சென்று, திரும்ப அழைத்து வருவார். நான் அனைவரையும் அவரவர் இருப்பிடத்திற்கு அனுப்பும் வரை நீங்களும் என்னுடன் இருப்பீர்கள். அதன் பின்னர், அவர் உங்களை இரவு உணவிற்கு அழைத்துச் சென்று, ஒவ்வொரு நாளும் பூனாவின் வெவ்வேறு பகுதியை உங்களுக்குக் காண்பிப்பார்.**” அன்று மாலை பாபாஜானின் சமாதிக்கு இர்வினை அழைத்துச் செல்லுமாறு பாபா, மெஹர்ஜியிடம் அறிவுறுத்தினார்.

இர்வின், பாபாவிடம் தனது சகோதரர் எட்வர்ட் வர அனுமதிக்கப்படாததால் பெரும் ஏமாற்றமடைந்ததாகக் கூறினார். பாபா அவருக்கு உறுதியளித்தார், “**எட்வர்ட் உன்னதமான காரியம் ஒன்றைச் செய்துள்ளார். நான் அவரை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் எழுதியதற்கு இணங்க, இருவரும் ஒன்றாக வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், ஏனெனில் உங்களுக்கு அதனால் அதிக பலன் கிடைத்திருக்கும். ஆனால் எட்வர்ட் கவலைப்பட வேண்டாம்; அவருக்கும் அதே நன்மை பயக்கும். உங்களைப் போலவே, ஆன்மீக நன்மைகளைப் பொறுத்த வரை, அவர் இங்கே இல்லாமல் இருந்தாலும் அவரும் அதையே அடையப்பெறுவார்.**”

எட்வர்டுக்கு இது குறித்த தொலைத்தந்தி ஒன்றை அனுப்புமாறு பாபா அறிவுறுத்தினார். பாபாவைத் தவிர வேறு எதிலும் கவனம் செலுத்துவது இர்வினுக்கு கடினமாக இருந்ததால், அந்தச் செய்தியை வரைவதில் அவருக்கு, ஃபிரான்சிஸ் உதவ வேண்டியிருந்தது.

இர்வின் அமெரிக்கா திரும்பிச் சென்றதும், எட்வர்ட் அவருக்குத் தெரிவித்ததற்கு இணங்க, பாபாவிடமிருந்து வந்த தொலைத்தந்தி, அந்த வேளையில், அவர் எதிர்கொண்ட அற்புதமான அனுபவத்தை உறுதிப்படுத்தியது. இர்வின் இந்தியாவில் பாபாவுடன் இருந்தபோது, எட்வர்ட், பாபாவின் பிரசன்னத்தை மிகவும் வலுவாகவும், பாபாவின் அன்பையும் உணரத் தொடங்கினார், அவர் வீதியில் அல்லது கடற்கரையில் நடந்து செல்லும்போது, மக்கள் அடிக்கடி அவரைத் திரும்பிப் பார்த்தனர். அவர்களும், அவர் கடந்து செல்லும்போது ஏதோ அற்புதமான அதிர்வலைகளை உணர்ந்து, எட்வர்டை பார்த்து, அதன் ஆதாரத்தை அடையாளம் காண முயன்றனர்.

அடுத்த ஏழு நாட்களுக்கு, இர்வின் தினமும் காலை 7:30 மணிக்கு குருபிரசாத்திற்கு வந்து, மாலை 5:00 மணி வரை, நாள் முழுவதும் பாபாவின் சகவாசத்தில் இருக்கும் வாய்ப்பைப் பெற முடிந்தது. பிற்பகல் வேளையில், களிப்பூட்டும் 'லா ரிஸ்க்' (LA RISQUE) சீட்டு விளையாட்டுகளின் போது, இர்வின் மிகவும் குழப்பமடைந்து, பாபாவைப் பார்த்து, "இந்த விளையாட்டை என்னால் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை!" என்றார்.

பாபா அவரது தலையைத் தட்டிக் கொடுத்து, "**பரவாயில்லை**" என்று சைகையால் தெரிவித்தார். ஃபிரான்சிஸ் அவருக்கு அதை விளக்க முயன்றார், ஆனால் அவர் மேலும் குழப்பமடைந்தார்.

1960 ஜூன் 2 வியாழன் அன்று, ஆந்திராவிலிருந்து பல அன்பர்கள் தரிசனத்திற்காக வந்ததால், அனைவரின் சௌகரியத்தைக் கருத்தில் கொண்டு, அடுத்த நாள் இரண்டு நிகழ்ச்சிகள், ஒன்று காலை 9:00 முதல் 11:00 வரையிலும், மற்றொன்று மதியம் 1:00 முதல் 3:00 வரை நடத்தவும் திட்டமிடப்பட்டது.

ஆந்திரா அன்பர்கள் பாபாவுக்காக பல பரிசுப் பொட்டலங்களைக் கொண்டு வந்திருந்தனர். பாபா அவர்களிடம் கூறினார்: "**ஏன் இந்தப் பழக்கூடைகளையும் இனிப்புப் பண்டங்களையும் கொண்டு வருகிறீர்கள்? வெறும் கைகளுடன் நீங்கள் வருவது நல்லது - ஆனால் நிச்சயமாக வெறுமையான இதயங்களுடன் அல்ல! மலர் மாலைகளுக்கும் இதர பிரசாதங்களுக்கும் எந்தத் தேவையும் இல்லை.**"

அவர் மேலும் விளக்கினார், "**நீங்கள் எனது முன்னிலையில் அமர்ந்தால், உங்கள் சிந்தனைகள் மலர் மாலைகள் மற்றும் பிற பிரசாதங்களை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளது. நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், ஆனால் உங்கள் மனம் அந்தக் கூடைகளின் பின்னால் ஓடுகிறது. எனவே 'பாபாவிற்கு மாலை அணிவித்து, அதைப் பற்றிய சிந்தனை இல்லாமல் இருங்கள்!' என்று நான் சமிக்ஞை வழங்க வேண்டும்!'**

"**மேலும் நீங்கள், பல பொருட்களைப் பிரசாதமாக கொண்டு வருகிறீர்கள், ஆனால் நான் அவற்றை ருசிப்பதில்லை; எனது எளிய உணவுமுறை உங்களுக்குத் தெரியும்; எனவே நான் எனது மண்டலிக்கு இந்த இனிப்பு மற்றும் பழங்களை பகிர்ந்தளிக்க வேண்டும்.**"

மின்னும் கண்களுடன், பாபா மேலும் கூறினார், "**மண்டலி அதற்கு முழு நியாயம் செய்யும் வேளையில், எனது வயிறு வலிக்கும்!**"

ஒரு நாள் தாதி கேரவாலா, பாபாவிற்கு ஒரு கேக் கொண்டு வந்தார். பாபா அதை அங்கிருந்த அனைவருக்கும் பகிர்ந்தளித்தார்; ஆனால் தாதியைக் கடிந்துகொண்டார், "**எவரேனும் எனக்கு அன்பளிப்பாக எதையேனும் வழங்குவதானால், அவர் எனது தலையில் ஒரு சுமையை வைக்கிறார் என்று அர்த்தம்; நீங்கள் எனது தலை மீது வைக்கோல் குவியல் ஒன்றை வைப்பதாக நினைக்கிறீர்கள், ஆனால் அது முழுக் கூரையையும் கீழே வீழ்த்திவிட போதுமானது! இனிமேல், நீங்கள் எனக்கு எதையும் வழங்குவதைத் தடை செய்கிறேன், ஏனெனில் அது எனக்கு பெரும் பாரமாக உள்ளது.**"

ஜூன் 3ஆம் தேதி, சில நாட்களுக்காக அழைக்கப்பட்ட ஆதி சீனியர், அலோபா, ஹோமி ஸட்டா (HOMI SATHA), கைக்கோபாத் உட்பட சுமார் 15 அல்லது 20 நெருங்கிய மண்டலி உறுப்பினர்கள் குருபிரசாத் வந்தனர். பச்சூபாய் (BACHOOBHAI), மதுசூதனன் இவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அன்று, டெல்லியில் வாழும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஸர்தார் அமர் ஸிங் ஸைகல் (SARDAR AMAR SINGH SAIGAL, 57), முதல் முறையாக பாபாவை சந்தித்தார்; மூன்று வருடங்களுக்கு முன்னர், அவர் பார்க்க நேர்ந்த பாபாவின் சித்திரம் அவரை வெகுவாக ஈர்த்தது. அவர் குருநானக் மீது அதீத பற்றுமிக்கவர், அவர் பாபாவின் சித்திரத்தில் கவனம் செலுத்திய அந்த கணம், குருநானக்கின் முகம் வெளிப்பட்டது, அமர் ஸிங்கிற்கு போதிய அத்தாட்சியாக இருந்தது. அதன் பின்னர், அவர் பாபாவின் பணியில் தன்னை முழு உற்சாகம் மற்றும் ஆர்வத்துடன் அர்ப்பணித்தது, பலருக்கு ஒரு முன்னோடியாக இருந்தது. அவர் பாபாவுடன் மிகவும் நெருக்கமாகிவிட்டார், பாபா அவரை அடிக்கடி நினைவு கூர்ந்தார்.

ஒரு மரியாதைக்குரிய மனிதர், பாபாவின் பக்தர் ஒருவரின் நண்பர், அவருடைய உபதேசத்தின் பேரில் பாபாவை சந்திக்க வந்தார். ஒரு நாள் முன்னர், அந்த நபர் கேள்விகளின் நீண்டதொரு பட்டியலை வரைந்தார்: "நீங்கள் ஏன் உங்களை அவதார புருஷர் என்று அழைக்கிறீர்கள்?"

அவர் மனதில் இருப்பதை அறிந்த பாபா, "**என்னிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள்?**" என வினவினார்.

அதற்கு அந்த நபர், "நீங்கள் அவதார புருஷர் என்பதால், எனது கேள்வியை வெளிப்படுத்தாமல் அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று கிண்டலாக பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே கூறினார்: **குருநாதரிடம் ஏன் பேரம் பேச வேண்டும்? அவரிடமிருந்து பல்வேறு கேள்விகளுக்கு அறிவுபூர்வமான பதில்களை எதிர்பார்ப்பது அவரை சிறுமைப்படுத்துவதாகும்.**

**ஆரம்பத்திலிருந்தே, ஒவ்வொரு தனிமனிதனும் எதிர்கொள்ளும் ஒரே கேள்வி 'நான் யார்?', இது எண்ணற்ற வழிகளில் வெளிப்படுத்தப்படும் மூல முதலான அசல் கேள்வி. இந்தக் கேள்வியின் உள்ளளவிலான உந்து சக்தியே உணர்வு நிலையின் முழு பரிணாமத்தையும் கொண்டு வந்தது, மேலும் எண்ணற்ற மறுபிறப்புகளுக்குப் பிறகும், உட்சுழற்சி செயல்முறையின் மூலம், மூல முதலான அசல் கேள்விக்கான உண்மையான அறுதியும் இறுதியுமான பதில் 'நான் கடவுள்' என வெளிப்பட்டது.**

**வேதாந்தத்தைப் படிப்பதன் மூலம், 'நான் கடவுள்' மற்றும் 'அனைவரும் கடவுள்' என்ற தர்க்கரீதியான அனுமானங்களைப் பற்றி நீங்கள் அறிவுபூர்வமாக நம்பலாம். ஆனால் இப்படிப்பட்ட உலர்ந்து போன அறிவினால் என்ன பயன்? அன்புதான் ஒரே வழி, எல்லா கேள்விகளுக்கும் ஒரேயடியான தீர்வாக இருப்பது, 'நான்-கடவுள்' என்ற நிலையின் அனுபவம் மட்டுமே.**

**அத்தகைய அனுபவத்தை அடையப்பெறுவது குழந்தைகளின் விளையாட்டு அல்ல. ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் உண்மையான பதிலை அனுபவிப்பதற்கு, ஒருவர் அதற்குரிய தகுதியை அடையப்பெறும் முன்பு, கால சுழற்சிகளுக்குப் பின் சுழற்சிகளாகக் கடந்து வர வேண்டும்.**

ஜூன் 4ஆம் தேதி ஹமிர்பூரிலிருந்து (முந்தைய நாள் பூனா வந்தவர்கள்) ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மொத்தத்தில் 148 பேர் பாபாவின் தரிசனத்திற்கு வந்தனர். ஆந்திராவைச் சேர்ந்த சந்தா சுப்பா ராவும் (CHANDA SUBBA RAO) அன்று வந்து பாபாவின் முன்னிலையில் கவிதை ஒன்றை வாசித்தார். அவர் பாபாவிடம் வருவது இதுவே முதல் முறை, ஒரு கட்டத்தில் அவருக்குத் தொல்லை தரும் எண்ணங்கள் பல தோன்றின: 'எரச், பாபாவின் சைகைகளை சரியாக வெளிப்படுத்துகிறாரா' என்ற சந்தேகம் மனதில் எழுந்தது, 'மேலும் எரச், பாபா இருவரும் ஒருவருக்கொருவர் கூட்டாக இணைந்து பொதுமக்களை ஏமாற்றுகிறார்களா' என்றும் ஆச்சரியப்பட்டார்.

சுப்பா ராவ் மனதில் இத்தகைய எண்ணங்கள் அலைபாய்ந்த வேளையில், பாபா ஏதோ சைகையால் தெரிவித்ததைப் புரிந்துகொள்ள முடியாமல் "என்ன பாபா?" என்று கேட்க, பாபா அதே சைகையை திரும்பத் திரும்ப செய்தார், ஆனால் பாபா வெளிப்படுத்தியதை இன்னும் எரச்சால் புரிந்துகொள்ள முடியவில்லை. இறுதியாக, பாபா, "அதை விட்டுவிடுங்கள்!" என்று கூறியதும், பாபா அனைத்தும் அறிந்தவர் என்பதை சுப்பா ராவ் புரிந்துகொண்டார், அவருடைய சந்தேகம் நீங்கியது.

அன்று காலை மத்திய அமைச்சரவை குழுவில் ஒருவரான ஜக்ஜீவன் ராம் (JAGJIVAN RAM) என்ற அமைச்சருக்கு பாபாவுடனான பேட்டி வழங்கப்பட்டது. 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' (ஹரிஜனங்கள்) என்று அழைக்கப்படுபவர்களின்

முன்னேற்றத்திற்காக ஜக்ஜீவன் ராம் உழைத்துக் கொண்டிருந்தார், பாபா அவருக்கு உதவி செய்வதாக உறுதியளித்தார்.

1960 ஜூன் 5 ஞாயிற்றுக்கிழமை, அந்தக் கடுமையான கோடையில் மிகப்பெரிய பொது தரிசனம் நடைபெற்றது. சுமார் 10,000 நபர்கள் இறை-மனிதனின் ஸ்பரிசத்தை நாடி குருபிரசாத்தில் ஒன்றுதிரண்டனர். கூட்டம், காலை 8:30 முதல் 11:00 வரை மற்றும் மதியம் 2:00 முதல் 3:30 மணி வரை இரண்டு பாகங்களாக நடைபெற்றன. யோகி ஷுத்தானந்த் பாரதியும் கூட்டத்தில் பங்கெடுத்தார்; அன்று நானா கேர், ஹர்ஜிவன் லால், தோடி ஸிங், குருந்த்வாடி மஹாராஜா, பீலாமாய் மற்றும் அவரது குடும்பத்தினர், நாரி-டாலி கான்ட்ராக்டர், பாலி-டினு உம்ரிகர் (POLLY & DINOO UMRIGAR), ஸூனாமாசி, நாகு, ஹரிபாய் பட்டேல், ஜகன்னாத் மஹாராஜ், மணிபேன் பாரேக், நிரஞ்சன் ஸிங், மும்பையின் ஆதி பி. கஸ்வாலா (ADI P. GHASWALA), ஸாக்கோரியிலிருந்து யஷ்வந்த் ராவ் மற்றும் அஹமதுநகர் பஜன் மண்டலி போன்ற பலர் வருகை தந்தனர். ஆஸ்திரேலியா மற்றும் ஸ்காட்லாந்து நாடுகளின் இரண்டு நபர்களுடன் சுவாமி ஆனந்த் என்பவரும் வந்திருந்தார். நிகழ்ச்சி நிறைவடையும் வரை பாபாவின் அருகில் அமர்ந்திருந்த இர்வின் லக், தரிசனத்திற்காக அவரைக் கடந்து சென்ற மக்கள் வெள்ளத்தைத் கண்டு வியப்பில் ஆழ்ந்தார்.

உள்நாட்டுக் குழு ஒன்றிடம் பாபா இவ்வாறு கூறினார்: “**நீங்கள் நாளை 6ஆம் தேதி புறப்பட உள்ளீர்கள், அப்படித்தானே? எனவே இன்று விடைபெறும் நாள். ஆனால் எந்த நேரத்திலும் பாபாவிடமிருந்து விடைபெற முடியாது! எனது சுய ரூபத்தில் என்னை உணரும் வேளையில், நீங்கள் அனைத்து நன்மைக்காகவும் இம்மூவுலகிற்கும் விடையளிப்பீர்கள்.**”

புறப்பட்டுச் செல்லும் போது, அழுகையைக் கட்டுப்படுத்த இயலாத ஒருவருக்கு, பாபா ஆறுதல் கூறினார், “**ஏன் கண் கலங்குகிறீர்கள்? நீங்கள் என்னை உடல் ரீதியாகப் பார்க்கவில்லை என்றாலும், நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன் என்பதை உறுதிப்பட நம்புங்கள். என்னைத் தாங்கும் ஒரே இடம் இதயம். என்னை உங்களுடன் நெருக்கமாக வைத்துக்கொள்ளுங்கள் - நான் எப்பொழுதும் அங்கே இருக்கிறேன்.**”

தரிசன நிகழ்ச்சி அடுத்த நாள் காலை, ஜூன் 6 அன்றும் தொடர்ந்தது. தரிசனத்திற்காக வருகை தந்தவர்களில் புகழ்பெற்ற சஞ்ஜீவ ரெட்டி (SANJIVA REDDY), அகில இந்திய காங்கிரஸ் அரசியல் கட்சியின் தலைவரும் பின்னர் இந்திய ஜனாதிபதியாக இருந்தவரும் ஆவார். பாபா அவருக்கு இந்தச் செய்தியை வழங்கினார்:

**கடவுளை எதிர்ப்பதை விட கடவுளை மறுப்பதே மேல். சில சமயங்களில் நமது பலவீனம் பலமாகக் கருதப்பட்டு, இரவல் வாங்கிய இந்த மகத்துவத்தில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். கடவுளை நேசிப்பவன் என்று சொல்லிக் கொள்வதும், பிறகு கடவுளோடும், உலகத்தோடும், தன்னோடும்**

**நேர்மையற்றவனாக இருப்பதும், இணையற்ற பாசாங்குத்தனம். சிரமங்கள் அவற்றைக் கடந்து, நமது மகத்துவத்தை நிரூபிக்க வாய்ப்பளிக்கிறது.**

**தாயின் மீதான ஒரு குழந்தையின் நம்பிக்கை முழுமையானது, ஏனெனில் அந்தக் குழந்தை தனது கவலைகள் அனைத்தையும் தாயிடம் விட்டுவிடுகிறது. தாய் குழந்தையை கவனித்துக் கொள்ள வேண்டும். ஆகவே, நாம் கடவுளை முழுமையாக நம்பி, அவர் நமக்காக கவலைப்பட அனுமதித்தால், நாம் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ முடியும். ஒரு தேசத்தின் தலைவர் கடவுள் மீது முழு நம்பிக்கை வைக்கும் போது, கடவுள் அவரை சரியான முறையில் வழிநடத்தும் கருவியாக மாற்றுகிறார்.**

**நம்மைத் தவறாக நினைப்பவர்களைப் பற்றி நாம் நல்ல முறையில் சிந்திக்க வேண்டும்.**

பாபா தமது அன்பர்களில் உயர் கல்வியறிவு படைத்த ஒரு குழுவிடம் இதேபோன்ற ஒன்றைக் கூறினார்:

**பக்தியுடன் இருப்பதைப் போலப் பாசாங்கு செய்வதை விட, கடவுளை மறுப்பதே மேல். நீங்கள் அதி புத்திசாலியாக இருக்கலாம்; ஆனால், பாசாங்குத்தனத்தில் ஈடுபட்டால், கடவுளின் பார்வையில் உங்கள் புத்திசாலித்தனத்திற்கு எந்த மதிப்பும் இல்லை. அதற்கு மாறாக, நீங்கள் மிகவும் கல்வியறிவற்றவராகவும், பாசாங்குத்தனத்தின் எந்தத் தடயமும் இல்லாதவராகவும் இருந்தால், நீங்கள் கடவுளின் பார்வையில் ஞானியாக இருப்பீர்கள்.**

அன்று மதியம் 1:00 மணிக்கு, பாபா, மும்பையைச் சேர்ந்த ஸொராப்ஜி ஸிகன்போரியாவிற்கும், அமெரிக்க பயணம் மேற்கொள்ள இருந்த யோகி ஷுத்தானந்த் பாரதிக்கும் ஒரு நேரடிப் பேட்டி வழங்கினார்.

அவர்களுடன் வந்த இராணுவ கேப்டன் (CAPTAIN) ஏ.வி. ராஜகோபால் ராணுவத்தில் இன்னமும் பணிபுரிந்தாலும், சாதுவைப் போல காவி நிற அங்கியை அணிந்து வந்த அவருக்கும் அன்றைய தினம் தனிப் பேட்டி வழங்கப்பட்டது. பாபா அவரிடம், **"இறுதி நேர்காணலுக்கு** (இறைவனோடு ஐக்கியம்) **ஒரு நொடி கூட தேவையில்லை, அந்தக் குறுகிய நேரத்தில் நீங்கள், அனைத்தும் அறிந்தவராகி விடுவீர்கள். இறுதி நேர்காணலுடன் ஒப்பிடுகையில், இதர எல்லா நேர்காணல்களிலும் ஒன்றுமே இல்லை" என்று கூறி**, இறுதியாக அவரைத் தழுவியதும் விடைபெற்றுச் சென்றார்.

அதைத் தொடர்ந்து கேப்டன் ராஜகோபால் துரதிர்ஷ்டவசமாக, யோகி ஷுத்தானந்த பாரதி, ஆதி சீனியர் மற்றும் சிலருக்கு சில அவதூறான கடிதங்களை எழுதினார்; இது கர்னல் எம்.எஸ். ஈரானி 1930 ஆண்டுகளின் பிற்பகுதியில் பாபாவிற்கு எதிராக நெருப்பைத் தூண்டிய முயற்சிகளை நினைவுபடுத்தியது. பாபாவின் பணிக்கும், அவரது அன்பர்களுக்கும் இத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று பாபாவால் எச்சரிக்கப்பட்ட ராஜகோபால், அதன் விளைவாக, பாபாவை 'சர்வதேச மோசடி... இந்தியாவின் ஏழைக் குழந்தைகளை

ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் ஒரு அனுபவமிக்க குற்றவாளி... ஒரு நேர்மையற்ற அயோக்கியன்" மற்றும் பிற வருந்தத்தக்க சொற்களைப் பயன்படுத்தி அவதூறு பரப்பினார்.

இத்தகைய வதந்திகளை பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவந்த போது, **"கடவுளின் உண்மையான அன்பர்களின் இதயங்களையும் மனதையும் புண்படுத்தும் வகையில் எந்த வாய்ப்பையும் விட்டுவிடாத இத்தகைய நபர்களிடம் ஜாக்கிரதையாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும்**" என்று யோகி ஷுத்தானந்த் பாரதியை நினைவூட்டுமாறு எரச்சிடம் கூறினார்.

பாபா மேலும் கூறியதாவது: "**ராஜகோபாலுக்கான எனது அரவணைப்பு வீண் போகாது, அது அவர் மீதான எனது தெய்வீக அன்பின் வெளிப்பாடாகும்; மேலும் ஒரு நாள் தனது எண்ணங்களின் குறைபாடுகள் மறைந்து, எனது கருணைமிகு அரவணைப்பை அவர் உணர்ந்தாக வேண்டும்**."

1960 ஜூன் 5 அன்று, புகழ்பெற்ற சமஸ்கிருத அறிஞரும், தத்துவஞானியுமான டாக்டர். கோபிநாத் கவிராஜ் (DR. GOPINATH KAVIRAJ, 73), அந்த நேரத்தில் அவர் பூனாவில் இருந்ததால், பாபா அவருக்கு தரிசனம் வழங்குவாரா என்பதைத் தெரிந்துகொள்ள, குருபிரசாத்திற்கு தனது நண்பரான அமியா ஹஸ்ராவை (AMIA HAZRA) அனுப்பினார். மறுநாள் காலை 8:00 மணிக்கு கவிராஜைப் பார்ப்பதாக பாபா, ஹஸ்ராவிடம் தெரிவித்தார். வாரத்தில் இரண்டு நாட்கள், திங்கள் மற்றும் வியாழக்கிழமைளில் கவிராஜ் மௌனம் கடைப்பிடிப்பதால், செவ்வாய்கிழமை அவரைப் பார்க்க பாபா அனுமதித்தால் நல்லது என்று ஹஸ்ரா விளக்கினார். ஆனால் பாபா, "**நானும் தொடர்ந்து மௌனம் காக்கிறேன்**" என்று பதிலளித்தார்.

எனவே, ஜூன் 6 திங்கள் அன்று கோபிநாத் கவிராஜ், பாபாவை சந்திக்க வந்தார்; கவிராஜ் மௌனம் அனுஷ்டித்ததால், பாபா அவரை மறுநாளும் வர அனுமதித்தார். மறுநாள் கவிராஜ் மீண்டும் வந்தபோது, பாபா அவரை ஆரத்தழுவி நெற்றியில் முத்தமிட்டார். பாபா அவரை பக்கத்து அறைக்குள் அழைத்துச் சென்று கதவை மூடினார். பாபாவின் சைகைகளை எடுத்துரைக்க மண்டலியில் ஒருவர் மட்டுமே இருந்தார். உலகின் எதிர்காலம் (THE FUTURE OF THE WORLD), வாழ்க்கையின் இறுதி நோக்கம் (LIFE'S ULTIMATE PURPOSE) மற்றும் ஒரு தனிநபரின் கடமைகள் (AN INDIVIDUAL'S DUTIES) பற்றி பாபா, கவிராஜிடம் நீண்ட நேரம் விளக்கினார், இவை அனைத்தும் பாபாவின் சர்வ ஞானத்தை கவிராஜுக்கு உணர்த்தியது.

கவிராஜ் தன்னைப் பற்றிக் கேட்க, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நீங்கள் ஒவ்வொரு நாளும் நள்ளிரவில் செய்யும் ஆன்மீகப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதைத் தவிர நான் வேறு எதுவும் சொல்ல விரும்பவில்லை**."

இதைக் கேட்ட கவிராஜ் வியப்பில் ஆழ்ந்தார், ஏனெனில் அவர் நள்ளிரவில் என்ன ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபடுகிறார் என்பது எவருக்கும்

தெரியாது, அது குறித்து எங்கும் குறிப்பிடப்படவும் இல்லை. இதனால், பாபாவின் சர்வ ஞானத்தைக் குறித்த நம்பிக்கை அவர் மனதில் மேலும் வேரூன்றியது. புறப்படும்போது, பாபா அவரிடம் ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் ஒரு பிரதியைக் கொடுத்து, **“எனக்கு உங்களுடன் உள்ளார்ந்த தொடர்பும், தோழமையும் உள்ளது, அது நாளடைவில் உங்களுக்குப் புரியும் விதத்தில் உதயமாகும்”** என்று கூறினார்.

அன்று மதியம், ஸர்தார் ராஸ்தே, பூனாவின் பிரபல பாரம்பரிய மரபு வழியைச் சார்ந்த பாடகர் ஒருவரை அழைத்து வந்து, இசை நிகழ்ச்சியை நடத்தினார். 62 வயதான பாடகர் புகழ்பெற்ற விநாயக் நாராயண் பட்வர்தன் (VINAYAK NARAYAN PATWARDHAN). அவருடைய குரலின் தரத்தில் பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். தனது கழுத்தில் இருந்த மாலையை கழற்றி பாடகரிடம் கொடுத்தார். அதற்குப் பிறகு, பட்வர்தன் தனது வாழ்நாளில் இதுபோலப் பாடியதில்லை என்றார்.

அன்று குவாலியர் மஹாராணியும் வந்திருந்தார்.

பெய்லியின் (BAILY) மைத்துனி டாலி பஸ்தானி, DOLLY BASTANI, 38 (1952இல் பிந்த்ரா ஹவுஸில் பாபாவை முதன்முதலில் சந்தித்தவர்), ஒரு நாள், மும்பையிலிருந்து ஷாபூர் ஈரானி (SHAPOOR IRANI) என்ற இளைஞருடன் வந்தார். ஷாபூர் விரைவில் இந்தியக் கடற்படையில் இணைய இருக்கும் வாய்ப்பை எண்ணி அச்சத்தில் கண்கலங்கினார். பாபா கேலி செய்தார், **“மக்கள் சந்திரனை நோக்கிப் பறக்கிறார்கள், நீங்கள் கடலில் பயணம் செய்ய அஞ்சுகிறீர்களா? அஞ்சாதீர்கள்; கடற்படையில் இணைந்து, நான் சொல்வதைச் செய்யுங்கள். மனம் தளராதீர்கள், ஆனால் என்னை உங்கள் இதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; நான் என்றும் உங்களோடு இருப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.”** பாபா அவரை ஆரத்தழுவி தைரியம் கொடுத்தார்.

சகனின் மகள் ஷகுந்தலா, 26, மே மாதம் திருமணம் செய்து, பாபாவின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக தனது குடும்பம் மற்றும் கணவர் சுரேஷ் கீர்த்தனே (SURESH KIRTANE) என்பவருடன் ஜூன் மாதம் குருபிரசாத்திற்கு வந்தார்.

காவல்துறை அதிகாரியாகப் பணிபுரிந்த துரேக்கர் (TUREKAR ), கண்களில் கண்ணீர் ததும்ப மீண்டும் பாபாவிடம் வந்தார். அவருடைய குடும்பப் பிரச்சினைகள் குறைந்தபாடில்லை. பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், **“ஏன் கவலைப்பட வேண்டும்? தைரியமாக இருங்கள். என்னையே மேலும் மேலும் நினைவில் கொள்ளுங்கள். உங்களை சோர்வடையச் செய்யாதீர்கள். என் மீதான உங்கள் அன்பையும், நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலையையும் நான் நன்கு அறிவேன். உங்களுக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு நன்றி கூறுங்கள்.”**

பாபா பின்வரும் பாரசீக ஈரடிக் கவிதையை மேற்கோள் காட்டினார்:

**நான் என் எதிரிகளை செழிப்படையச் செய்து,**

**எனது நண்பர்களை சித்திரவதை செய்கிறேன்.**

**ஆனால் ஏன் என்று கோர யார் ஒருவருக்கும்**

**உரிமை இல்லை, இதை நான் செய்கிறேன்.**

விரக்தியில் மூழ்கிய அன்பர் ஒருவரிடம், ஹ:ஃபீஸ் கூறியதாவது:

**இறுதி இலக்கை அடைவதில் நம்பிக்கை இல்லை என்பதை**

**சாதாரணமாக எடுத்துக் கொண்டாலும்,**

**தைரியத்தை இழக்காதீர்கள்.**

**தைரியமாக இருக்கவும். உங்கள் சுயத்தை இழக்கும் வரை**

**குருநாதரை சந்தேகிக்காதீர்கள்.**

**“எனது தொடர்பில் வரும் வேளையில், சில நேரங்களில், நீங்கள் 100 சதவிகிதம் பரிதாபமான நிலையை சந்திக்கிறீர்கள். ஆனால் நான் அனைத்தும் அறிவேன் என்பதை உறுதியாக நம்புங்கள். நான் அன்பு மற்றும் கருணையின் இறைப் பெருங்கடல். ஒவ்வொரு தனிமனிதனும் உள்ளளவில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், ஏனெனில் எல்லையற்ற பேரின்பமான கடவுள் உள்ளே இருக்கிறார். ஒவ்வொருவரும், கடவுளை நேசிக்க வேண்டும், கடவுளைப் பார்க்க வேண்டும், கடவுளாக மாற வேண்டும்.”**

ஆறுதல் அடைந்த துரேக்கர் அங்கிருந்துச் சென்றார்.

இர்வின் லக் ஒவ்வொரு நாளும் குருபிரசாத்தில் பாபாவுடன் நடந்த கூட்டங்களில் கலந்துகொண்டார். ஒரு நாள் பாபா அவரிடம், “**நான் உங்களுக்கு அறிவைக் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**” என்று கேட்டார்.

இர்வின் கூறினார், “பாபா, எனக்கு அறிவு இருக்கும்போது, என்ன செய்ய வேண்டும் என்பதை நான் அறிவேன்.”

இன்னொரு முறை பாபா அறையில் இருந்த அனைவரிடமும் வெளியே செல்லுமாறு கேட்டுக்கொண்டார். இர்வின் எழத் தொடங்கியதும், பாபா அவரை அமர்ந்திருக்குமாறு சைகையால் தெரிவித்தார். பாபாவின் சைகைகளை மொழிபெயர்க்க ஒரே நபர் எரச்சும் உடனிருந்தார். பாபா, இர்வினிடம் கேட்டார், “**நான் அவதார புருஷர் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?**”

இர்வின் தலையசைத்தார்.

**“பேசுங்கள்.”**

“ஆம்.”

**“நீங்கள் எனக்குக் கீழ்ப்படியத் தயாரா?”**

“ஆம்.”

**“நான் உங்களை வீதியில் நிர்வாணமாக நடக்கச் சொன்னால் நீங்கள் அதைச் செய்வீர்களா?”**

“ஆம்.”

**“உங்களுக்குப் பிடிக்காத உணவை உண்ணச் சொன்னால் அதை உண்பீர்களா?”**

“ஆம்.”

**“உங்கள் தலையை எனக்காகக் கொடுக்கச் சொன்னால், அதற்கும் நீங்கள் தயாரா? எனக்காக உங்கள் தலையைக் கொடுப்பீர்களா?”**

அதற்கும் இர்வின் யோசனை செய்யாமல், எதுவாக இருந்தாலும் ‘சரி’ என்று மனதை தேற்றிக் கொண்டவர், ‘முடிந்தால் கீழ்ப்படிவேன்’ என உணர்ந்தார். மீண்டும் கதவுகளைத் திறக்குமாறு பாபா சைகையால் தெரிவிக்கவே, அனைவரும் உள்ளே திரும்பி வந்தனர். கைக்கோபாத்தும் மெஹராபாத்திலிருந்து வந்திருந்தார்; பாபா அவரை நோக்கி, “**அனைவரையும் வெளியே அனுப்பிய பின்னர், உங்கள் அனுபவத்தை நீங்கள் இர்வின் லக்கிடம் எடுத்துரைக்க வேண்டுமென விரும்புகிறேன். இருவரும் வெளியே இருக்கையில் அமருங்கள்**” என்றார். இர்வினுக்கு கைக்கோபாத் யார் என்று தெரியாது, ஆனால் அவர் மிகவும் மெலிந்து காணப்பட்டதால் அவர் மீது பரிதாபப்பட்டார்.

கைக்கோபாத், இர்வினிடம் வெளிப்படுத்தினார்: “ஓர் இருண்ட அறையில் கூட, சில நேரங்களில் அத்தகைய அற்புதமான ஒளி என்னிடமிருந்து வெளிவருகிறது, நான் விரும்பினால் அந்த வெளிச்சத்தில் ஒரு செய்தித்தாளைப் படிக்க முடியும். கிரகங்கள், சூரிய குடும்பங்கள் மற்றும் உலகங்கள் என்னில் சுழல்வதை நான் காண்கிறேன். சில நேரங்களில் நான் எந்த சூரியனை விடவும் அதிக பிரகாசமாக இருக்கும் ஓர் ஒளியைப் பார்க்கிறேன், அந்த ஒளியிலிருந்து வெளிவரும் பாபாவின் முகத்தையும் நான் காண்கிறேன், பாபா இல்லாதபோதும் என்னால் அவரை உடல்ரீதியாகப் பார்க்க முடிகிறது; ஆனால், அவரில் உருவமில்லா கடவுளைக் காண்பது எளிது.”

மற்றொரு நாள், பாபா, ஃபிரான்சிஸிடம் கூறினார், “**இர்வினிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால், அதற்கு நீங்கள் பதிலளிக்க வேண்டும்**”, பின்னர் அவர், இருவரும் ஒன்றாக அமர்ந்து கருத்துக்களைப் பரிமாறுமாறு அறிவுறுத்தினார். இர்வினிடம் உண்மையில் எந்தக் கேள்வியும் இல்லை, ஆனால் பாபாவை மகிழ்விக்க அவர் சிலவற்றைப் பற்றி யோசனை செய்தார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா அறையிலிருந்து வெளியேறும்போது, இர்வின் அவரைப் பின்தொடர்ந்து, அவரது முதுகில் லேசாக வருடத் தொடங்கினார். பாபா அதைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. ஒரு பெரிய கொள்கலனில் ஆரஞ்சு பழரசம் வைக்கப்பட்டிருந்த பக்கத்து அறைக்குள் நுழைந்து, பாபா கரண்டியில் பழரசத்தை ஒரு வாய் எடுத்து, சுழற்றி அதை மீண்டும் கொள்கலனில் கலந்தார். ஒவ்வொருவருக்கும் அந்தப் பழரசத்தை கண்ணாடி டமளர்களில் ஊற்றி வழங்குவதற்கு முன்னர், அவர் அதை நீள கரண்டியால் கவனமாகக் கலக்கினார்.

ஒரு நாள் பாபா, இர்வினிடம், “**நீங்கள் வேறொரு குருநாதரால் என்னிடம் அனுப்பப்பட்டீர்கள்**” என்பதை வெளிப்படுத்தினார். அவர் இதைச் சொல்லும்போது, கடந்த பல யுகங்களில், பாபா, ஆத்மாக்களின் பின்புலத்தைத்

திரும்பிப் பார்ப்பது போல் இர்வின் உணர்ந்தார். ஆனால் குருநாதர் யார் என்று பாபா குறிப்பிடவில்லை.

ஒவ்வொரு நாளும் இர்வின் குருபிரசாத்திற்கு வரும்போது, பாபா, அவர் தன் அருகில் அமர்வதை விரும்பினார். மேலும் அவர்கள் சிறிது தூரம் நடந்து செல்லும் வேளையில், பாபா இர்வினின் தோளில் கை வைத்த படி நடந்தார். அவர்களுக்கிடையே எவரேனும் வர நேர்ந்தால், பாபா அவரைத் தடுத்து நிறுத்தி இர்வினை தனது பக்கம் இழுத்தார். ஒருமுறை பாபா தன் அன்பர் ஒருவரின் இல்லத்திற்கு, இர்வின் மற்றும் சிலருடன் விஜயம் செய்து, திரும்பி வரும்போதும் காரில் இதுவே நடந்தது. பாபா, இர்வின் இருவருக்கும் இடையே, ஒருவர் காரின் பின் இருக்கையில் அமர்ந்தார். கார் புறப்பட்ட அதே வேகத்தில் பாபா ஓட்டுநரின் தோளைத் தட்டி, காரை நிறுத்துமாறு சைகையால் தெரிவித்தார். பாபா கதவைத் திறந்து வெளியே வந்து, பின்னர் இர்வின் பக்கத்தில் இருந்த கதவைத் திறந்து அவர் அருகில் அமர்ந்தார்.

ஒருமுறை அவர்கள் காரில் சென்று கொண்டிருந்தபோது, இர்வினுக்கு பாபாவைப் பார்க்க வேண்டும் என்ற திடீர் ஆர்வம் ஏற்பட்டது. அவரது எண்ணங்களை அறிந்த பாபா, பின் ஜன்னல் வழியாக வரும் சூரிய ஒளியிலிருந்து தனது தலையை பாதுகாக்க வேண்டும் என்று சைகையால் தெரிவித்தார். காரில் ஒருவர் வைத்திருந்த கைவிசிறியை, சூரிய ஒளியைத் தடுக்கும் விதத்தில், இர்வின் தனது தலைக்குப் பின்னால் வைக்குமாறு பாபா அறிவுறுத்தினார். இதைச் செய்யும் வேளையில், அவர் பாபாவின் முகத்தைப் பார்த்து, அவரிடம் வெகுவாக லயிக்கப்பட்டார்.

அவர்கள் காரில் சென்று கொண்டிருந்தபோது, இர்வின் மனதில் ஓர் எண்ணம் அலைமோதியது. அது, அவர் பாபாவைப் பற்றி முன்னர் ஒருமுறை படித்த புத்தகத்துடன் தொடர்புடையது. அந்தப் புத்தகம் யோகானந்தாவின் (YOGANANDA) கைவண்ணத்தில் உருவான 'ஒரு யோகியின் சுயசரிதை' (AUTOBIOGRAPHY OF A YOGI). அதில், யோகானந்தா, ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி (SHRI YUKTEASHWAR GIRI) என்ற குருநாதரைப் பற்றி குறிப்பிடுகிறார். இர்வின் திடீரென்று பாபாவிடம் கேட்டார், "ஸ்ரீ யுக்தேஸ்வர் ஒரு பரிபூரண குருநாதரா (PERFECT MASTER)**?"**

பாபாவின் பதில்: "**என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்பதற்காகவா இவ்வளவு தூரம் வந்துள்ளீர்கள்? நீங்கள் எனக்கு எழுதியிருந்திருக்கலாம், அதற்கு நான் பதில் அளித்திருந்திருப்பேன்**."

இர்வின் தனது தவறை உணர்ந்து, "நீங்கள் சொல்வது முற்றிலும் சரி" என்றார். பாபா சிரித்துக்கொண்டே பயணத்தைத் தொடர்ந்தார்.

மறுநாள் காலை, அனைவரும் பாபாவைச் சுற்றி ஒன்றுதிரண்டதும், '**எவரேனும் ஏதேனும் கேள்விகள் கேட்க விரும்புகிறீர்களா?**' என்று கேட்டார். யுக்தேஸ்வர் பற்றிய இர்வினின் கேள்வி மீண்டும் எழுந்தது, ஆனால் அவர் அதை, முக்கியமற்றது என்று நிராகரித்தார். அனைவரும் அமைதியாக இருந்தனர். '**எவரிடமும் ஏதேனும் கேள்விகள் இருந்தால், இப்போது கேட்க**

**வேண்டிய நேரம் இது**' என்று பாபா மீண்டும் கூறினார். பாபா, தன்னிடம் அதைக் கூறுவது போல் இர்வினுக்கு ஒரு தனி உணர்வு இருந்தது, ஆனால் என்ன கேள்வி கேட்பது என்று அவரால் யோசிக்க முடியவில்லை. மீண்டும் நிசப்தம் நிலவியது.

பிறகு, பாபா இர்வினை நேரடியாகப் பார்த்து, அவரிடம் ஏதேனும் கேள்வி உள்ளதா என்று கேட்டார். இர்வின் லக் நினைவு கூர்ந்தார்: "எனது மனம் அதிவேகமாக வேலை செய்வதால் என்னைப் பொறுத்தவரை அது ஒரு நீண்ட இடைவெளி என்று நான் நினைத்தேன். என்னிடம் ஒரே ஒரு கேள்வி இருந்தால் அது பிற அனைவருக்கும் பதிலளிக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். ஆனால் அது என்ன கேள்வி?"

பாபா பொறுமையாக அவருடைய கேள்விக்காக காத்திருந்தார். ஒருமுறை பாபா கூறியதை தான் படித்ததை இர்வின் நினைவு கூர்ந்தார்: "பாபாவின் அன்பைக் கேட்பவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பார்." அவர் பாபாவைப் பார்த்து, "பாபா, உங்கள் அன்பு முழுவதும் எனக்கு கிடைக்குமா?" என வினவினார்.

பாபா உடனே மண்டலியிடம் கேட்டார், "**என் அன்பை நீங்கள் அனுபவிக்கிறீர்களா?**"

"அன்பின் இறைப் பெருங்கடலாக அல்ல," எரச் கூறினார்.

"உங்கள் அன்பின் ஒரு குறுகிய பகுதி" என்று பிரேம் கில்னானி கூறினார்.

"ஒரு குறுகிய பகுதி கூட இல்லை!" ராம்ஜூ பதிலளித்தார்.

"**நான் அன்பின் இறைப் பெருங்கடல் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**"

"நம்பிக்கையை விட மேலானது, பாபா" என்று ராம்ஜூ பதிலளித்தார்.

"**அரிதாகவே ஒருவருக்கு அந்த அன்பு வழங்கப்படுகிறது**" என்று பாபா கூறினார்.

பாபா, இர்வினைத் திரும்பிப் பார்த்து, "**நான் ஏன் இதை அவருக்கு அல்லது அவளுக்குக் கொடுக்கக் கூடாது? அது ஏன் நீங்களாக இருக்க வேண்டும்?**" என்று கேட்டார்.

இர்வின், "பாபா, நீங்கள் யார் ஒருவருக்கு வேண்டுமானாலும் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆனால் நானும் அதை அனுபவிக்க ஏங்குகிறேன்" என்றார்.

பாபா கூறினார், "**நான் ஏன் எவருக்கேனும் அந்த இறைப் பெருங்கடலைக் கொடுக்க வேண்டும்? அது இருந்துகொண்டே இருக்கிறது. அனைவரும் அதை ஒரு நாள் அனுபவிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. அதைக் கொடுப்பதற்கு உகந்தது என்று நான் பார்க்கும்போது, நான் கொடுக்கிறேன் - உண்மையான அனுபவத்தை, இறைப் பெருங்கடலை அல்ல.**"

பாபா அப்போது சாக்லேட்களை விநியோகித்து முடிக்கவே, காலியான பிளாஸ்டிக் ஜாடி அவரது மடியில் கிடந்தது. அவர் ஜாடியை எடுத்து, அதைச்

சுற்றி கையை அசைத்தபடி, விளக்குவதற்கென பின்வரும் உவமையைப் பயன்படுத்தினார்:

**நான் எல்லையற்ற, எல்லாம் வல்ல அன்பின் இறைப் பெருங்கடல்; நீங்கள் இந்த ஜாடியின் எல்லைக்குள் - அதாவது அறியாமையில் - அதுவும் என் இறைப் பெருங்கடலில் ஓர் அங்கமாக உள்ளீர்கள். ஆனால் ஜாடியில் ஒரு மூடி உள்ளது. எனவே நீங்கள் அன்பின் இறைப் பெருங்கடலில் இருந்தாலும், உங்களை இறைப் பெருங்கடலிலிருந்து அந்த மூடி தனியாகப் பிரித்து வைத்திருப்பதால், நீங்கள் அதை அனுபவிக்க முடியாது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அந்த மூடியை அகற்றிவிடுவது ஒன்றுதான், பின்பு நான் நிலைகொண்டிருக்கும் இறைப் பெருங்கடல் அதனுள்ளே பாய்ந்தோடும், நீங்கள் உடனடியாக என் எல்லையற்ற அன்பை அடையப் பெறுவீர்கள், அனுபவிப்பீர்கள், என்னை எனது உண்மையான ரூபத்தில் அறிவீர்கள்.**

**எனது தவிர்க்க முடியாத இறை அன்பின் ஒருமைப்பாட்டில், நான் மூடியைத் திறக்கவும், அதில் ஊற்றவும் செய்வேன் என்ற இரண்டு விஷயங்களை எதிர்பார்க்க முடியாது. அதுபோலவே உங்கள் இதயத்தைத் திறந்து என்னிடமிருந்து அன்பை அடையப்பெறுவது உங்களைச் சார்ந்தது.**

இர்வின் சிந்தனையில் ஆழ்ந்தார்: 'என்னால் மூடியை அகற்ற முடிந்திருந்தால், நான் அவ்வாறு செய்திருந்திருப்பேன்; ஆனால் மூடியை, உள்ளே இருந்த வண்ணம் எப்படி அகற்ற முடியும்? மூடியை அகற்றுவதற்கு வெளியில் சுதந்திரமாக இருக்கும் ஒருவர் தேவை.' அதனால் தான் அவர் பாபாவிடம் வந்ததாக உணர்ந்தார். பாபா சுதந்திரமாக இருப்பதன் மூலம் அனைவரையும் விடுவிக்க முடியும்.

பாபா தொடர்ந்து கூறினார்: **"மேலும், நான் ஏன் உங்களுக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அன்பின் இறைப் பெருங்கடலைக் கொடுக்க வேண்டும்? அது, நிச்சயமாக நானாக இருக்கும் தருவாயில், பிறருக்கு அல்லது முழுப் படைப்புக்கும் கிடைக்காமல் இருக்க வேண்டும்? இது ஒரு பரிசு, எப்பொழுதும் கருணையின் வரமாகவே இருக்கும்!"**

கூட்டத்தில் யாரோ ஒருவர், "நான் முயற்சிப்பேன்..." என்றார்.

**"முயற்சி செய்யாதீர்கள்"** என்று பாபா குறுக்கிட்டார்.

**நீங்கள் எந்த அளவுக்கு அதிகமாக முயற்சி செய்கிறீர்களோ, அந்த அளவுக்கு அன்பை அடையப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு. அன்பை அடைய விரும்புபவர்கள், வாழ்க்கையின் நடுவே காது கேளாதவர்களாகவும், ஊமைகளாகவும், குருடர்களாகவும் மாற வேண்டும் என்பது ஐதீகம்! இது படிப்படியாக நீங்கள் நிறைவேற்ற விரும்பும் விருப்பங்களிலிருந்தும், நீங்கள் விரும்பாதவற்றிலிருந்தும் உங்களை விடுவிக்கும்.**

**இறுதியில், 'எனக்கு அன்பு வேண்டும்' அல்லது 'நான் அன்பிற்குரியவருடன் ஒன்றிணைய வேண்டும்' என்ற தேவையிலிருந்தும் உங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக, அத்தகைய**

விருப்பம் உங்களை பிற அனைத்து விருப்பங்களிலிருந்தும் விடுவிக்கிறது; ஆனால் இந்த ஒரே ஆசை கூட அன்பின் மகிமையைக் குறைத்து, அது அன்பிற்குரியவருக்கு சுமையாக இருக்கிறது.

இது சாத்தியமில்லை என்றால், குறைந்தபட்சம், அன்பானவரின் காலடியில் தூசி போலாக வேண்டும். இதற்கு நீங்கள் எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும்.

குருநாதருக்குக் கீழ்ப்படிவது எந்த அளவுக்கு சாத்தியமற்றது என்பதை பின்வரும் வரிகளில் அன்பன் ஒருவன் கூறுகிறான்:

அன்பே! நீங்கள் எனது கைகளையும் கால்களையும்
பலகையில் கட்டிவிட்டீர்கள்!
மேலும், கொந்தளிக்கும் கடலின் நடுவில்
என்னைத் தூக்கி எறிந்து விட்டீர்கள்,
அதே வேளையில் நான் என் ஆடைகளை ஈரமாக்கக் கூடாது
என்றும் எனக்குக் கட்டளையிடுகிறீர்கள்!

இதன் அர்த்தம் என்னவெனில், குருநாதர் உங்களுக்கு உதவும் வேளையில், நீங்கள் அவரை 100 சதவீதம் நம்பினால் ஒழிய, நீங்கள் அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிவது சாத்தியமில்லை.

நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். அனைத்து விருப்பத்துடனும் எனக்குக் கீழ்ப்படியத் தயாராக இருங்கள். நான் விரும்பும் வேளையில் அன்பின் பரிசை வழங்குகிறேன். அதை எனது விருப்பத்திற்கும் மகிழ்ச்சிக்கும் விட்டுவிடுவது நல்லது.

கவலைப்படாதீர்கள், மகிழ்ச்சியாக இருங்கள்.

வேறொரு நாளில், பாபா இதே பாணியில் விளக்கினார்:

ஒருவன், செவிடன், ஊமை, குருடனைப் போல் என்னை அணுக வேண்டும். நாவிருந்தும் 'பேசாமல்', காதிருந்தும் 'கேளாமல்' கண்கள் இருந்தும் 'பாராமல்' இருக்கும் ஒருவர், என்னைப் பார்த்து, என்னைப் பின்பற்றி, என்னைப் பற்றி பேச முடியும்! பிறருக்கு செவிமடுக்காமல், எவரைப் பற்றியும் பேசாமல், எவரையும் பார்க்காமல் இருப்பவனால் மட்டுமே கடவுளில் மூழ்கியிருக்க முடியும்!

நீங்கள் செயலற்று அல்லது சோம்பேறியாக இருக்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, எங்கும் நிறை இறைவனின் வெளிப்படையான அழகை நோக்கி நீங்கள் மிகவும் உன்னிப்பான கவனத்துடன் இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

ஹாஃபீஸ் அவரது ஈரடிக் கவிதை ஒன்றில் கூறியதாவது:

ஓ ஹாஃபீஸ்! உங்கள் அன்பிற்குரியவர்
உங்களோடு இருக்க வேண்டுமெனில்,
அவர் முன்னிலையில் இருந்து
விலகி விடாதீர்கள் ஒரு கணமேனும்.

**இதன் பொருள் என்னவெனில், உங்கள் அன்பிற்குரியவர் மீது உங்களுக்கு அதீத ஏக்கம் இருந்தால், பிற அனைத்தையும் விட்டுவிட்டு அவருக்கு அருகிலேயே இருக்கவேண்டும். உங்கள் மனதை ஒரு கணம் கூட அலைய விடாதீர்கள்; அவர் மீது மட்டும் கவனம் செலுத்துங்கள்.**

**எனவே எச்சரிக்கையாக இருங்கள், தெய்வீக அன்பானவர் உங்கள் இதயக் கதவைத் தட்டும்போது, அவர் உங்களைக் கண்டுகொள்வதை ஊர்ஜிதம் செய்யுங்கள்!**

1960 ஜூன் 8 அன்று பாபா, மற்றுமோர் இல்லத்திற்கும், மேலும் 9 அன்று, புறக்கணிக்கப்பட்ட பெண்கள் மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான இந்து மகளிர் மீட்பு இல்லத்திற்கும் விஜயம் செய்தார். முதலில் ஆசிரியைகள் பாபாவை வணங்க, பின்னர் அனாதை சிறுமிகளும் அதையே செய்தனர். பாபா சிலரை அரவணைத்து கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**அன்பும் புரிதலும் ஒருபோதும் கண்டனம் செய்வதில்லை; ஆனால் உதவிக் கரங்களை நீட்டி, உற்சாகப்படுத்தும் நோக்கத்தில் தம்மை முன்னிறுத்திக் கொள்ளும். ஆண், பெண் அனைவரும் 'சத்தியம்', 'நற்பண்பு' இவற்றின் நடைமுறை பழக்கவழக்கங்கள் மற்றும் சட்டங்களிலிருந்து விலகிவிட்டனர், ஆனால் கடவுள் ஒருபோதும் நம்மைக் கண்டிப்பதுமில்லை அல்லது நமக்காக அவரது வாசற்கதவை மூடுவதுமில்லை. எனவே, நம்மைக் கண்டிப்பவர்களைக் கூட நாம் கண்டிக்கக் கூடாது.**

**அவருடைய மனித குலத்திற்கு சேவை செய்வதன் மூலம், கடவுளின் பணியில் உங்கள் பங்கைச் செய்ய, உங்களுக்கு உதவ முயற்சிப்பவர்களை புரிந்துகொண்டு, நேசிக்கும் வகையில் முயற்சியைத் தொடர, நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**


இர்வின் லக், பாபாவுடன் இருந்தார், நிகழ்ச்சியின் முடிவில் பாபா, "**இது ஒரு குறுகிய ஆனால் இனிமையான வருகை**" என்று குறிப்பிட்டார்.

காரில் குருபிரசாத் திரும்பும் வழியில், பாபா, இர்வினிடம் '**என்ன நினைக்கிறீர்கள்**' என்று கேட்க, அவர் இவ்வாறு பதிலளித்தார், "பாபா, நான் உங்களை அறிய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் 'ஏக இறைவன் எனும் உண்மை நிலை'யை அறிய விரும்புகிறேன்."

பாபா கேட்டார், "**நீங்கள் அதற்குரிய விலையைக் கொடுக்கத் தயாரா?**"

இர்வின் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்: "அதன் விலை எனது அகந்தையா?" நெருப்பில் எரிக்கப்படும் அச்சுறுத்தும் சித்திரங்கள் எனது மனக்கண் முன்னால் தோன்றின. ஆனால் பாபா அவரது முழங்காலில் தட்டி, இனிமேல் இதுகுறித்து கவலைப்பட வேண்டாம் என்று சைகையால் தெரிவித்தார்.

இர்வின் உரையாடலின் தலைப்பை மாற்றி, "நீங்கள் இங்கே இருப்பது இந்த அனாதைகளுக்கு மிக்க பலனை நல்க வேண்டும்" என்றார்.



பூனா பாபா-அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம், ஜூன் **1960**
**?,** மேர்வான் துபாஷ், இர்வின் லக், ஜி.எஸ்.என். மூர்த்தி, எரச், ஃபிரான்சிஸ்
(POONA HOUSE VISIT, JUNE 1960
**?**, MERWAN DUBASH, IRWIN LUCK, G.S.N. MOORTY, ERUCH, FRANCIS)



இந்து மகளிர் மீட்பு இல்லம், பூனா
(HINDU WOMEN'S RESCUE HOME, POONA)

பாபா பதிலளித்தார், "**அவர்களுக்கு பெருமளவிலான நன்மை செய்யப்படுகிறது.**"

இர்வின் முதன்முதலில் இந்தியா வந்தபோது, பாபா, அவர் நலமாக இருப்பதாக அவரது தந்தைக்கு எழுதுமாறு அறிவுறுத்தினார். இர்வின் அதைச் செய்ய கடினமாக உணர்ந்ததால், பாபா அதை இரண்டு அல்லது மூன்று முறை அவருக்கு நினைவூட்ட வேண்டியிருந்தது.

அவர் ஒவ்வொரு நாளும் பாபாவின் முன்னிலையில் அமரும்போது, சில நேரங்களில் அவர் மனதில் இது போன்ற எண்ணங்கள் தோன்றின: "நான் இங்கேயே தங்கி பாபாவுடன் வாழ விரும்புகிறேன். ஆனால் நான் எனது தந்தையுடன் மியாமியில் இருந்தால், அது பாபாவுடன் இருப்பது போல் இருக்கும்."

ஒரு நாள், இந்த எண்ணம் மீண்டும் மனதில் எழவே, பாபா கேட்டார், "**நீங்கள் இங்கே என்னுடன் இருப்பீர்களா அல்லது திரும்பிச் சென்று உங்கள் தந்தையுடன் வாழ்வீர்களா?**"

"நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன், பாபா," இர்வின் கூறினார்.

"**நீங்கள் இங்கே இருந்தாலும் சரி, அங்கே இருந்தாலும் சரி, ஒரே பலனை அடைவீர்கள். ஆனால் அதை நீங்கள் இந்த நிமிடத்தில் முடிவு செய்ய வேண்டியதில்லை. அதைப் பற்றி சிந்தித்து பின்பு சொல்லுங்கள்.**"

இர்வினுக்கு இது குறித்து பரிசீலிக்க நேரம் தேவையில்லை; அவர் பாபாவுடன் இருப்பதையே விரும்பினார். இருப்பினும், அதைக் குறித்து மேலும் எதுவும் கூறப்படவில்லை; பாபா இந்த எண்ணங்களை, ஏதோ ஒரு நோக்கத்திற்காக தனது மனதில் அலைபாய விட்டதை அவர் உணர்ந்தார். காலையில் இர்வின் விடைபெறும் போது, பாபா கூறினார், "**தொலைவு, தூரம் என்பது எனக்கு ஒன்றும் இல்லை. நேரமும் இடமும் எனக்கு ஒரு தடையுமில்லை. நீங்கள் எங்கிருந்தாலும் நான் உங்களுடன் இருப்பேன். கவலைப்பட வேண்டாம், மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் இருங்கள். நினைவில் கொள்ளுங்கள்: நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்.**"

பாபா, இர்வினை தன்னிடம் அழைத்து, அவரைத் தழுவினார். இர்வின் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் பின்வாங்கும்போது எனது கைகள் வீழ்வது போல் உணர்ந்தேன். உணர்வு மிகவும் வலுவாக இருந்தது, ஏதேனும் கீழே வீழ்ந்ததா என்று பார்க்கத் தோன்றியது! நான் உணர்ச்சிவசப்பட்டு நின்றேன்."

பாபா தொடர்ந்தார், "**அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்று, நீங்கள் பார்த்ததையும் கேட்டதையும் நியூயார்க் குழுவிற்கு எடுத்துக் கூறுங்கள். மெஹர்ஜி உங்களுக்கு எல்லா வகையிலும் உதவுவார். இப்போது புறப்படுங்கள். உங்கள் இல்லம் சென்றடைந்ததும் எனக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்புங்கள்.**"

இர்வின் ஜூன் 10ஆம் தேதி அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். பாபாவிற்கு அவர் அனுப்பிய தொலைத்தந்தி: "நியூயார்க் வந்தடைந்தேன். வழி நெடுகிலும் உங்களையே நினைத்தேன்."

ஜூன் 10ஆம் தேதி முதல், குருபிரசாத்திற்கு வெளிநபர்கள் வருவது தடை செய்யப்பட்டாலும், பாபா பூனாவில் தங்கியிருந்த கடைசி பத்து நாட்களில், ஜூன் 13 அன்று தமது நெருங்கிய இரண்டு அன்பர்களின் இல்லங்களுக்கும், நான்கு நாட்களுக்குப் பிறகு பிந்த்ரா ஹவுஸுக்கும் விஜயம் செய்தார்.

1951இல் டாக்டர் கனி காலமானபோது, அவர் குடும்பத்தை ஏதோ கடன் சுமையில் விட்டுச்சென்றார். அவருடைய மனைவி காதுன்பி (KHATUNBI) கடனை அடைக்க முயன்றும் முடியாமலாயிற்று, அது அவருக்குப் பெரும் கவலையளிப்பதாக இருந்தது. ஜூன் 14 அன்று, திருமணமாகாத தனது மகள் நூர்ஜெஹானுடன் (NURJEHAN) குருபிரசாத்திற்கு வந்து, இந்தப் பிரச்சினையை பாபா முன் வைக்க அனுமதிக்கப்பட்டார். கடனை அடைக்கும் நோக்கத்தில் சில சொத்துக்களை விற்க அவர்கள் ஒன்பது ஆண்டுகளாக முயற்சித்ததையும், அது முடியாமல் போனதையும் பாபாவிடம் அழுதுகொண்டே கூறினார்.

அவர் கூறியதைக் கேட்டு, பாபா, அவரால் எதையும் செய்ய இயலாது என்று குறிப்பிட்டு, "**இது போன்ற பிரார்த்தனைகளுக்கு எனது காதுகள் செவிடாகி விடுகின்றன; ஆனால் நீங்கள் உங்கள் ஆழ் இதயத்திலிருந்து அல்லாவிடம் பிரார்த்தனை செய்வதானால், அவர் நிச்சயமாக செவிமடுப்பார்; எனவே, இங்கே எனது முன்னிலையில், உங்களுக்கு உதவ அல்லாவிடம் முழு மனதுடன் பிரார்த்தனை செய்யுங்கள்**" என்று கூறினார். ஆதலால் அவர்களின் குடும்ப சொத்துக்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்றும், மறைந்த கணவரால் ஏற்பட்ட கடனிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் காதுன்பி கடவுளிடம் பிரார்த்தனை செய்தார்.

மறுநாள் பாபா மண்டலியிடம் வந்தபோது, காதுன்பியிடமிருந்து, அவரது சொத்து, விரும்பிய விலைக்கு விற்கப்பட்டதாக செய்தி வந்தது. அவர் முழு மனதுடன் பிரார்த்தனை செய்திருக்க வேண்டும், ஆதலால் கடவுள் அவருடைய பிரார்த்தனைக்கு செவிமடுத்தார். பாபா, "**நான் அவரது பிரார்த்தனைக்கு செவிடாக இருந்ததால் கடவுள் அதைக் கேட்டார்**" என்று கூறி முடித்தார்.

கிஷன்சந்த் கஜ்வானி முந்தைய நாள் குருபிரசாத்திற்கு வந்தவர், 15ஆம் தேதியும் வந்தார். அவர் பாபாவிடம் இவ்வாறு முறையிட்டார்: "பாபா, இது என் புரிதலுக்கு அப்பாற்பட்டது. கடவுளுக்கும், பாபாவிற்கும் என்ன வித்தியாசம்? சில நேரங்களில் உங்களை அவதார புருஷர் என்று அழைப்பதோடு நீங்கள் கடவுள் என்று கூறுகிறீர்கள், ஆனால் திருமதி காதுன்பியிடம் நீங்கள் காது கேளாதவர், கடவுள் மட்டுமே அவருடைய பிரார்த்தனையைக் கேட்க முடியும் என்று கூறினீர்கள்!"

பாபா பதிலளித்தார், "**கடவுள், பிரபஞ்சத்தின் மாலிக்** (அதிபதி, உரிமையாளர்), **நான் கடவுளின் மாலிக். நான் இறை-மனிதன்** (நார-நாராயணன்). **கடவுள் ஒருவரே உண்மையானவர், நானும் கடவுளும் ஒன்றுதான். இருப்பினும், கடவுள், கடவுளாகச் செயல்படுவது வேறு; கடவுள், அவதார**

**புருஷராகச் செயல்படுவது வேறொன்று, கடவுளை விடவும் மகத்துவம் மிக்க ஒன்று."**

கஜ்வானி கேட்டார், "கடவுளுக்கும் பாபாவிற்கும் உள்ள வித்தியாசம் - கடவுள், 'நிர்குண நிராகார்' (NIRGUNA NIRAKAR - ATTRIBUTELESS, FORMLESS, பண்புக்கூறுகள் மற்றும் உருவமற்ற) அதே வேளையில் பாபா, 'ஸகுன ஸாக்கார்' (SAGUNA SAKAR - QUALITIED, MANIFEST IN FORM, பண்புக்கூறுகளும் உருவமும் உள்ளவர்) ஆவார்."

பாபா விளக்கினார், **"நான், உருவம் மற்றும் அனைத்து பண்புக்கூறுகளுடன்** (FORM & ATTRIBUTES) **இருக்கிறேன். நான், உருவம் மற்றும் பண்புக்கூறுகள் இல்லாமலும் இருக்கிறேன்; நான் பண்புக்கூறுகளுக்கு அப்பாற்பட்டவன், மேலும் அதற்கும் அப்பாற்பட்டவன். நான் உருவத்துடனும் பண்புக்கூறுகளுடனும் வெளிப்படும் போது, எப்பொழுதும் வெளியளவில் இருப்பதன் அனுபவத்தைப் பேணும் அதே வேளையில், பண்புக்கூறுகளுக்கு அப்பாற்பட்டவனாகவும் இருக்கிறேன். அதனால்தான் நான் கடவுளை பிரபஞ்சத்தின் அதிபதி (மாலிக்) என்றும், நான் கடவுளின் அதிபதி (மாலிக்) என்றும் கூறுகிறேன்.**

**"உதாரணமாக: நீங்கள் மூக்குக்கண்ணாடி அணிந்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்கள் கண்ணாடியை நீங்கள் யார் ஒருவருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். அது உங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது; அதை நீங்கள் யார் ஒருவருக்கும் எளிதாகக் கொடுக்கலாம். அதேபோல, நான் எனது கண் இமைகளைத் தாழ்த்தியோ அல்லது அவற்றை அசைக்காமலோ, யார் ஒருவருக்கும் எந்த நேரத்திலும் எனது விரும்பத்திற்கிணங்க கடவுளை வழங்க முடியும்."**

இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்த போது, மெஹர்ஜி, பாபாவிடம், நீண்டகாலமாக நிலுவையில் இருந்த நீதிமன்ற வழக்கில் விஷ்ணு வெற்றி பெற்றதாகத் தெரிவித்தார். பாபா கூறினார், **"இவை அனைத்தும் தானாக, இயற்கையாகவே நடப்பவை. இதில் என்னுடைய அதிசயம் எதுவும் இல்லை. நல்லது நடந்தால், பாபாவின் விருப்பப்படி தான் என்று மக்கள் கூறுகிறார்கள்."**

ஜூன் 18ஆம் தேதி மதியம் 2:00 மணிக்கு, சதாஷிவ் பாட்டீலின் இல்லத்திற்கு பாபா 40 நபர்களுடன் விஜயம் செய்தார். அன்று பிற்பகல் குருபிரசாத்தில் ஜால்பாய், பாபாவின் மூன்று திரைப்படங்களை மாலை 4:00 முதல் 6:00 மணி வரை திரையிட்டார்.

ஜூன் 19 ஞாயிற்றுக்கிழமை, குருபிரசாத்தில் 'ஏழைகளுக்கான' ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. 160 ஏழை ஆண்களும் பெண்களும் முன்கூட்டியே தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுமதிச் சீட்டுகளும் வழங்கப்பட்டது. இந்த ஏழைகள் வீதிகளில் யாசிப்பவர்கள் அல்ல, ஆனால் தாழ்த்தப்பட்ட தொழிலாளி வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அன்று காலையில் வந்த ஒவ்வோர் ஏழையின் கால்களில் பாபா தலைவணங்கி, ஐந்து ரூபாயை வழங்கினார். பாபாவிடம்

தங்கள் நன்றி உணர்வையோ, வணக்கத்தையோ, சைகையிலோ வார்த்தையிலோ தெரிவிக்க வேண்டாம் என்று அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். ஒரு குறிப்பிட்ட தனிநபர், மிகவும் அத்தியாவசிய தேவையில் இருந்த நடுத்தரக் குடும்பத்தின் தலைவருக்கு ரூ.200 வழங்கப்பட்டது.

1960 ஜூன் 20 திங்கட்கிழமை அதிகாலை பாபா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத்திற்குப் புறப்பட்டார். பகீரத்தின் சரக்கு வாகனம் அனைத்து சாமான்களையும் எடுத்துச் சென்றது. பாபாவும் மண்டலியும் நான்கு கார்களில் வரிசையாகச் சென்றனர் - நரிமனின் டிஸோட்டோ (DeSOTO) மற்றும் அவரது ஷெவர்லே ஃப்ளீட்மாஸ்டர் (CHEVROLET FLEETMASTER), மெஹர்ஜி மற்றும் ஆதியின் இரண்டு கார்கள். அதைத் தொடர்ந்து ஸிகன்போரியா மற்றும் துபாஷ் குடும்பத்தினரும் கஜ்வானியின் காரில் பாபாவுடன் மெஹராஸாத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். வழியில், பூனா அன்பர்கள் ஒன்றுகூடிய பந்த் கார்டனில் பாபா சிறிது நேரம் நின்றார். பூனா அன்பர்களில் பாடகர் பட்வர்தனும் ஒருவர். அரை மணி நேரத்திற்குப் பிறகு, பாபாவின் ஆரத்தியை நிகழ்த்திய பின்னர், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற கோஷங்களுடன் அவர் விடைபெற்றார். அனைவரும் காலை 10:45 மணிக்கு மெஹராஸாத் வந்தடைந்தனர். பாபா சோர்வாகக் காணப்பட்டார், ஆனால் டாக்டர் கென்மோரின் ஆலோசனையின் பேரில் புதுப்பிக்கப்பட்ட மண்டலி மண்டபத்தின் தரையின் மாற்றங்களை அவர் ஆய்வு செய்து, காக்காவின் முயற்சிகளைப் பாராட்டினார்.

அந்த ஆண்டு குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த காலகட்டத்தில், நாடு முழுவதிலுமிருந்து, அனைத்து தரப்பிலிருந்தும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் பூனாவிற்கு வந்து, அன்பின் இறைப் பெருங்கடலில் நீராடிச் சென்றனர். அதன் மகிமை அனைவருக்கும் பெரியதொரு சாட்சியாக இருந்தது! தரிசனத்திற்காக வந்தவர்கள் உண்மையில் பிரியமானவரின் தோட்டத்துப் பறவைகள் (ஆன்மாக்கள்), ஏனெனில், அவர்களின் அன்பு ஒன்றுதான் அவர்களை இத்தகைய நீண்ட நெடிய பயணங்களை மேற்கொள்ளவும், ஒப்பீட்டளவில் குறுகிய காலத்திற்கு இறைவனின் சந்நிதியில் இருக்கவும் தூண்டுதலாக அமைந்தது. ஆனால் அந்த ஆண்டு, பாபா தன் இதய வாயிலைத் திறந்து, அனைவருக்கும் அன்பின் பரவசத்தின் ஓட்டத்தை அனுமதித்ததாகத் தோன்றியதால், வந்தவர்கள் அனைவருக்கும் போதுமான வெகுமதி வழங்கப்பட்டது!



சதாஷிவ் பாட்டீலின் இல்லத்தில் உணவு உண்ணும் காட்சி
(LUNCH AT SADASHIV PATIL'S HOME)



குருபிரசாத்தில் 'ஏழைகளுக்கான' நிகழ்ச்சி **19 ஜூன் 1960**
(GURUPRASAD POOR PROGRAM, 19 JUNE 1960)



**குருபிரசாத்** (GURUPRASAD) **1960**

# மெஹராஸாத் - ஆறுமாதகால ஏகாந்தவாசம்

(**Six Months Of Seclusion In Meherazad**)

1960 ஜூன் 21 அன்று, பூனாவிலிருந்து திரும்பிய மறுநாள் காலையில், பாபா, மெஹராபாத்திற்கு வருகை தந்தார். அங்குக் குடியிருந்த மண்டலி மற்றும் குடும்பத்தினரை சுமார் மூன்று மணிநேரம் சந்தித்த பிறகு, பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஜூன் 26 ஞாயிற்றுக்கிழமை, காலை 7:00 மணிக்கு, எரச், பெண்டு, ஃபிரான்சிஸ் ஆகியோருடன் பாபா, குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு வருகை தந்தார். அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை (TRUST) அலுவலக அறையில் (வடக்குப் பக்கம், ஆதியின் படுக்கையறைக்கு அருகில்) அவருக்காக பிரத்யேகமாக போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தார். ஸரோஷின் மூத்த மகள் குல்னாருக்கு (GULNAR) அன்று திருமணம் நடக்கவிருந்தது, அவரும், அவரது வருங்கால கணவர் டாக்டர் ஹிர்ஜி எஸ். அடன்வாலாவும் (DR. HIRJI S. ADENWALA), பிற குடும்ப உறுப்பினர்களுடன் பாபாவிற்கு மாலை அணிவித்து ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர். நரிமனும் அன்றைய நிகழ்ச்சியில் பங்கெடுத்தார்.

அன்று காலை 9:00 மணிக்கு, திறந்தவெளி வளாகத்தில் அமைந்த ஆதியின் அலுவலகத்திற்கு முன்னால், ஏழைகளுக்கான நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. பாபாவின் விருப்பத்திற்கிணங்க, ஆதி, சகன், ரங்கோலே, ருஸ்தம் காக்கா, வாமன், பகீரத் ஆகியோர் 106 தொழுநோயாளிகளைக் கண்டுபிடித்து அழைத்து வந்தனர். 44 ஆதரவற்ற நபர்களும் அழைத்து வரப்பட்டனர். பாபா, தொழுநோயாளிகள், ஆதரவற்றவர்கள் அனைவரின் கால்ளைக் கழுவி, சுத்தம் செய்து, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார். ஒவ்வொரு தொழுநோயாளியின் கால்களைத் துடைக்கப் பயன்படுத்திய துண்டு அவரிடமே கொடுக்கப்பட்டது. பாபா, முதல் சில நபர்களை தலைவணங்கியபோது, அவர்கள் நிற்கவைக்கப்பட்ட உயரமான மர மேடை, பாபாவிற்கு அசௌகரியமாக இருந்ததால், பிரோஜாவின் வீட்டு வராண்டாவிற்கு மாற்றப்பட்டது. நிகழ்ச்சி நிறைவடைய ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் ஆனது; அதற்குப் பிறகு, பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார். நிகழ்ச்சியைப் பார்வையிட அனுமதிக்கப்பட்ட ஒரே பெண்மணி திருமதி டாக்கேஃபால்கர் ஆவார்.

அஹமதுநகரின் பிரபல கவாலி பாடகர் ஹபீப் நிஸாமி (HABIB NIZAMI), ஜூன் 28 அன்று காலை 8:30 முதல் 10:30 வரை மெஹராஸாத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார்; அஹமதுநகரிலிருந்து பல நபர்கள் அழைக்கப்பட்டனர். இதற்கு முன்னதாக நடந்த ஹபீபின் இசை நிகழ்ச்சியில், அவரது சில பதிவுகளைக் கேட்டு, பாபா கஸல்களை மிகவும் ரசித்தார். 1952இல் பாடகர்,

மெஹராபாத்தில் ஒருமுறை இசை நிகழ்ச்சியை நடத்தினார். ஹபீப் இலவசமாக இந்த நிகழ்ச்சியை நடத்த ஒப்புக்கொண்டாலும், அவருக்கு பிரசாதமாக ரூ.50 வழங்கப்பட்டது.

ஒவ்வொரு முறையும் பாபா குருபிரசாத்தில் தங்கியிருந்த போது, கைக்கோபாத் தனது குடும்பத்துடன் மெஹராபாத் மேல்மலையில் தங்குவது வழக்கம். 29ஆம் தேதி காலை, கைக்கோபாத்தை மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துவர, பாபா மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வழியில் அக்பர் பிரஸ் மற்றும் குஷ்ரு குவார்ட்டர்ஸில் சுமார் பதினைந்து நிமிடங்கள் நின்று, காலை 10:30 மணியளவில் மெஹராஸாத் திரும்பினார்.

அடுத்த நாள், 1960 ஜூன் 30 அன்று கீழ்வரும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது:

**இந்த அறிக்கை, என்னை நேசித்து எனக்குக் கீழ்ப்படியும் உங்கள் அனைவருக்கும், அதே போல் அதையே செய்ய விரும்பும் அனைவருக்காகவும் வெளியிடப்படுகிறது. மிகவும் குறிப்பாகச் சொல்லப்போனால், உறுதிமொழியாக 'ஆம்' என்று பதிலளித்த உங்கள் அனைவருக்கும் - அதாவது எனக்குக் கீழ்ப்படிந்து, எந்த சூழ்நிலையிலும் எனது மேலங்கியை** (தாமன்) **உறுதியாகப் பற்றிக் கொண்டு, என்ன நடந்தாலும் நடக்காவிட்டாலும், இறுதிவரை என்னுடன் ஒட்டிக்கொள்வது என்ற உங்கள் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது.**

**நான் மேற்கொள்ளவிருக்கும் இந்த ஏகாந்தவாசத்தின் காலகட்டத்தை, எல்லா கோணங்களிலிருந்தும் மிக முக்கியமானதாக, என் அன்பர்களாகிய நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**எல்லோரிடமும், உங்களில் சினத்தைத் தூண்டுபவர்களிடம் கூட அதிக சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிப்பதன் வழியாகவும், நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலமும் எனக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் இதை அன்பின் மூலமாகச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன், கட்டாயத்தால் அல்ல.**

**நீங்கள் ஒவ்வொருவருடனும் இணக்கத்துடன் வாழவும், அனைவருடனும் அன்பான உறவைப் பேணவும் விரும்புகிறேன், குறிப்பாக நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் இந்த ஆறு மாதங்களில், இது உங்கள் சகிப்புத்தன்மையை வெகுவாக சோதிக்கும்; இதனால் என் மீதான உங்கள் அன்பின் ஆழத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தும்.**

**நான் நிச்சயமாக எனது மௌனத்தைக் கைவிடுவேன் என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன், நான் பேசினாலும் பேசாவிடிலும், அதைப் பொருட்படுத்தாமல், நீங்கள் இறுதிவரை எனது தாமனை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன், எந்த ஆன்மீக அல்லது பொருள் நலனுக்காகவோ, விரைவில் எனது மௌனத்தைக் கலைத்து நான்**

**வெளிப்படுவேன் என்பதற்காகவோ, நீங்கள் என்னை நேசிக்கக் கூடாது என்றும், ஆனால், நான் மனித உருவில் கடவுளாக இருப்பதால் என்னை நீங்கள் நேசிக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்.**

**வாழ்க்கையின் உயிரோட்டங்களின் தாக்கத்தால் நீங்கள் இடையூறு எதுவும் இல்லாமல், உறுதியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**என் ஆறுமாதகால ஏகாந்தவாசத்தில், உங்களை என்னிடமிருந்து விலக்கி வைக்கும் அளவுக்கு சூழ்நிலைகள் உருவாகும் வேளையில், நீங்கள் முடிந்தவரை என்னை நினைவுகூர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். குருபிரசாத்தில் இருந்த போது நான் பலமுறை வலியுறுத்தியதற்கு இதுவே காரணம் - நீங்கள் அனைவரும் எனது தாமனை** (மேலங்கி) **இரு கைகளாலும் திடமாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பும் நேரம் வந்துவிட்டது - ஒரு கை, பிடிப்பை இழந்தால் மற்றொன்று கைகொடுக்கும்.**

**கடைசியாக, நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் போது, எந்த வகையிலும் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இதை ஒப்புக்கொள்வதற்காகவும் அல்லது எனது மீதான உங்கள் அன்பை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காகவும் எழுத வேண்டாம்.**

**உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.**

மெஹர் பாபாவின் ஆறுமாதகால ஏகாந்தவாசம் 1960 ஜூலை 1 வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. அன்று மதியம் மெஹராஸாத்திற்கு வந்த எரச்சின் தாயார் கெய்மாய் 20 நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார்.

பாபாவிற்கு உடல்நிலை சீரில்லை. அவர் வெளிறிப் போய், சோர்வாகக் காணப்பட்டார். அவர் சரியான ஊட்டச்சத்தை எடுத்துக் கொள்ளாததாலும், ஏகாந்தவாச வேளையில் உபவாசம் மேற்கொள்ளப் போவதாக மண்டலிக்குத் தெரிவித்ததாலும், கோஹெர் அவருக்கு 'வைட்டமின் பி12' (500 மி.கி.) ஊசி மற்றும் கல்லீரல் இணைச்சேர்க்கை (2 சி.சி.) ஊசி போட அனுமதிக்குமாறும் கூறி, இறுதியில் அவரை இணங்கச் செய்தார். இந்த ஊசிகள் அதீத வலியை ஏற்படுத்துவதால், ஜூலை 4 அன்று ஒன்றிற்கும், 8 அன்று மற்றொன்றிற்கும் பாபா இணங்கினார்.

ஜூலை 5 முதல், பாபா ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு கைக்கோபாத்துடன் தனிமையில் அமரத் தொடங்கினார்; இது அவரது ஏகாந்தவாசத்தின் இறுதி வரை நீடித்தது.

1960 ஜூலை 10 ஞாயிறு அன்று, மெஹர் பாபாவின் 35ஆவது ஆண்டு மௌன நாள் அனுசரிக்கப்பட்டது. அன்று பாபா உபவாசம் கடைப்பிடித்தார்; மேலும் மண்டலி உட்பட கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் அவரது அன்பர்கள் அனைவரும், ஜூலை 9 இரவு 8:00 மணி முதல், 10ஆம் தேதி இரவு 8:00 மணி வரை மௌனம் காக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஜூலை 12 அன்று குமார், ரிஷிகேஷிலிருந்து மஸ்த் நீல்கந்த்வாலாவுடன் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு வந்து, மறுநாள் காலை அவரை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். அடுத்த பதினைந்து நாட்களுக்கு, பாபா, மஸ்த் தங்கியிருந்த பாவ் கல்சூரியின் அறையில், ஒரு நாளைக்கு இரண்டு முறை அவருடன் அமர்ந்தார். நீல்கந்த்வாலா, பொதுவாக மிகவும் நல்ல மனநிலையில் காணப்பட்டார் - சிரிப்பு ஆரவாரத்துடன் பல்வேறு விஷயங்களை இந்தி மொழியில் பேசினார் - ஆனால் ஜூலை 27 அன்று ரிஷிகேஷுக்குத் திரும்பிச் செல்லும் தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தினார். குமார், பைதூல், எரச் மூவரும் தங்களால் இயன்றதைச் செய்து, மஸ்தைத் தங்க வைக்க வற்புறுத்தினர்; ஆனால் அவர் அதற்கு செவிசாய்க்கவில்லை. அவர் உடல், நெருப்பில் எரிவது போல், அமைதியற்றவராகத் தோன்றினார்! எனவே, ஜூலை 28ஆம் நாள் மஸ்த் நீல்கந்த்வாலாவை பாபா, ரிஷிகேஷுக்கு குமாருடன் ரயிலில் திருப்பி அனுப்பினார்.

1960 ஆகஸ்ட் 1, திங்கள் முதல், பாபா, கைக்கோபாத்துடன் தமது தீவிர பணிகளைத் தொடங்கினார். ஞாயிறு தவிர தினமும் காலையில், அவருடன் அரை மணி நேரம் பணிபுரிந்தார். ஒவ்வொரு நாளும் குருநாதருக்கான பிரார்த்தனை (MASTER'S PRAYER) மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை (REPENTANCE PRAYER), மண்டலி மண்டபத்தில் அனைத்து ஆண்களாலும் உரத்த குரலில் மொழியப்பட்டது. ஆகஸ்ட் 2ஆம் தேதி கோஹெர், பாபாவிற்கு மற்றுமொரு வைட்டமின் ஊசியை வழங்கினார். (ஜூலை 20 அன்று, பாபாவின் பாதங்கள் வீங்கத் தொடங்கின.)

ஆகஸ்டு தொடக்கத்தில் எரச் நான்கு நாட்கள் உபவாசம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டார். பாபா ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உணவு உண்டார். ஆனால், ஆகஸ்ட் 4 முதல், பாபா வியாழன் தோறும், மூன்று வாரங்களுக்கு திரவ ஆகாரத்தில் உபவாசத்தைத் தொடர்ந்தார்: இரண்டு முறை இரண்டு அவுன்ஸ் தேநீர், ஒரு முறை நான்கு அவுன்ஸ் மோர் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர் உபவாசம் இருந்ததால், ஆகஸ்ட் 12, 22 தேதிகளில் கோஹெர் தனது வைட்டமின் ஊசி மருந்துகளின் அளவை அதிகரித்தார்.

இதற்கிடையில், மண்டலியில் ஃபிரான்சிஸ், பாபாவின் பல்வேறு சொற்பொழிவுகளைத் திருத்தம் செய்வதில் முழு முனைப்பில் ஈடுபட்டார், முக்கியமாக 1959 மற்றும் 1960 ஆண்டுகளில் குருபிரசாத்தில் வழங்கப்பட்டது, இது பின்பு 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிடப்பட்டது. மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்கும் நோக்கத்தில், வேண்டிய அனைத்தையும் ஃபிரான்சிஸ் சேகரித்துக் கொண்டிருந்தார்.

1960 செப்டம்பர் மாதத்தில் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியும், பிற விளக்கங்களும்

இந்தியில் மொழிபெயர்க்க பாவ் கல்சூரிக்கு வழங்கப்பட்டது. காலம் செல்ல செல்ல, பாவ் கல்சூரி பிற மொழிபெயர்ப்பு பணிகளையும் செய்யத் தொடங்கினார்.

1960 ஆகஸ்ட் 6 சனிக்கிழமை, ஸொராஸ்டரின் பிறந்த நாள் (கோர்டத் ஸால் - KHORDAD SAL) கொண்டாடப்பட்டது. பிரார்த்தனைகளில் பங்கேற்க பாபா பெண்மணிகளை அன்று காலையில் மண்டலி மண்டபத்திற்கு அழைத்தார்.

பாபாவின் தற்போதைய ஏகாந்தவாசத்தின் போது, அவர் சொற்பொழிவுகளையும் தொடர்ந்தார். செப்டம்பர் 6ஆம் தேதி, அவர் ஒரு வரைபடத்தை வரைந்து, பரமாத்மாவில் (OVERSOUL அல்லது கடவுள் - GOD) அடங்கியுள்ள எண்ணற்ற ஆத்மாக்கள் (SOULS) பற்றி விளக்கினார்; மேலும் அவதார புருஷரின் செயல்பாட்டைக் குறித்த சில கருத்துக்களையும் வழங்கினார். அவர் 'ஆழ் மன உணர்வு நிலை' (MENTAL CONSCIOUSNESS) குறித்து வழங்கிய சொற்பொழிவின் ஒரு பகுதி பின்வருமாறு:

**ஆழ் மனத் தளங்களில் நிலை கொண்டிருப்பவர்களுக்கு, பௌதீக அல்லது சூட்சும தளங்களின் உணர்வு இராது. அப்படியென்றால், ஆழ் மனத் தளத்தில் இருப்பவர் எப்படிப் பேசுவது, உண்பது, அருந்துவது போன்ற பலவற்றைச் செய்ய முடியும் - சுருக்கமாகச் சொன்னால், பௌதீகத் தளத்தில் ஒரு சாதாரண மனிதனைப் போன்ற செயல்களைச் செய்வது எப்படி?**

**மக்கள் தூக்கத்தில் நடப்பது, அல்லது உண்பது, அருந்துவது, எழுதுவது, திருடுவது போன்ற பலவற்றைப் பற்றி நாம் கேள்விப்படுவதைப் போலவே உள்ளது, ஆனால் அவர்கள் இந்தப் பௌதீகச் செயல்களைப் பற்றி முற்றிலும் உணர்வற்ற நிலையில் உள்ளனர். ஒருவர் தூக்கத்தில் பேசுவது வழக்கத்திற்கு மாறானது அல்ல. அவரை சூழ்ந்திருப்பவர்கள் தூக்கத்தில் அவர் பேசுவதைக் கேட்க முடியும், ஆனால் அந்த நபர் தனது சொந்தப் பேச்சைப் பற்றி அறிவதோ அல்லது உணர்வதோ இல்லை. அதே போலவே, ஆழ் மனத் தளங்களில் நிலை கொண்டிருப்பவர்கள் சூட்சும செயல்கள் மற்றும் கோளங்களைப் பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருக்கிறார்கள், இருப்பினும் அவர்களின் பௌதீக மற்றும் சூட்சும செயல்கள் அனைத்தும் அவர்களின் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின் விளைவு - மனதின் செயல்பாடுகள்...**

**ஆழ் மனத் தளங்களில் ஒருவரால் செய்யப்படும் எந்தவொரு செயலும், பௌதீக உணர்வு அல்லது சூட்சும உணர்வு உள்ள ஆத்மாக்களின் பார்வையில், அது ஆழ் மன நடவடிக்கையின் பௌதீக அல்லது சூட்சும** (நுட்பமான) **வெளிப்பாடே தவிர வேறொன்றுமில்லை. ஆன்மீகத் தளத்தில் நீங்கள் காணும் வெளிப்படையான பௌதீகச் செயல், ஆழ் மனத் தளத்தில் நிலைகொண்டுள்ள ஒருவரால் செய்யப்படும் போது, உங்கள் சுய பௌதீக உணர்வின் திரையில் பிரதிபலிக்கச் செய்யப்பட்ட ஆழ் மனச் செயல்பாட்டின் வடிவமாகும். எனவே, ஆழ் மனத் தளத்தில் நிலைகொண்டிருப்பவர், பௌதீக மற்றும் சூட்சும தளங்களிலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டவராக இருக்கும்**

போது, அவர் பேசுவது, உண்பது அல்லது அருந்துவது போன்ற செயல்பாடுகள், பௌதீக தளத்தில் இருப்பவர்கள் உண்பது, அருந்துவது, பேசுவது போன்றது என்று பொருள்படாது. அப்படிப்பட்ட ஒருவர் உண்பது, அருந்துவது, பேசுவது போன்றவற்றைப் பார்க்கும்போது, அது அவருடைய ஆழ் மனச் செயல்பாடுகளின் பிரதிபலிப்புக்கான உங்களின் சொந்த விளக்கத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

உதாரணமாக, ஓர் ஏரியில் சந்திரன் பிரதிபலிப்பதை நீங்கள் பார்க்கும்போது, உங்கள் பார்வை ஏரியின் மீது இருக்கும் வரை, சந்திரன் உண்மையில் தண்ணீரில் இருப்பதாகவே நினைக்கிறீர்கள். ஆனால், சந்திரன் தண்ணீரில் இல்லை; சந்திரனின் பிரதிபலிப்பு மட்டுமே தண்ணீரில் உள்ளது, அதே வேளையில், சந்திரன் தண்ணீரில் இருப்பது போலத் தோன்றும். எனவே ஆழ் மனத் தளங்களில் நிலைகொண்டிருப்பவரின் உணர்வு இங்கே இல்லை. அவரது உணர்வின் பிரதிபலிப்பு மட்டுமே இங்கே உள்ளது; ஆனால் அவர் பௌதீகத் தளத்தின் உணர்வை கொண்டுள்ளவர் போலத் தோன்றுகிறார்.

ஆழ் மனத் தளத்தில் நிலைகொண்டுள்ள ஒருவர் எந்த ஒரு செயலிலும் ஈடுபடும்போது, அந்தச் செயலை சூட்சும அல்லது பௌதீக உணர்வு நிலையில் இருக்கும் எவராலும் புரிந்து கொள்ள முடியாது. அதே செயல், சூட்சும மற்றும் பௌதீகத் தளங்களில் நிலைகொண்டிருப்பவர்களால், அவரவர் உணர்வுகளின் வெளிச்சத்தில் வெவ்வேறு விதமாக விளக்கப்படுகிறது.

சுருக்கமாகச் சொல்வதானால், ஆழ் மனத் தளங்களில் நிலைகொண்டுள்ள ஒருவரால் வெளிப்படுத்தப்படும் மனதின் செயல்பாடு, பௌதீகத் தளத்தில் நீங்கள் உணரும்போது, உங்கள் பௌதீக உணர்வின் வழியே வந்து, உங்கள் விழிப்புணர்வு மற்றும் புரிந்துகொள்ளும் திறனுக்கு உகந்த முறையில் அல்லது வடிவத்தில் உங்களைச் சென்றடைகிறது.

1960 ஆகஸ்ட் 16 அன்று பாபா கூறியது ஒரு கட்டளையா, இல்லையா என்ற விவாதம் எழுந்தபோது, பாபா அதைத் தெளிவுபடுத்தினார்:

நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று நான் வேண்டினால், உங்களால் முடிந்தால் நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதாவது, இது ஒரு வேண்டுகோள். நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று நான் ஆசைப்படுவதானால், உங்களால் முடிந்தாலும் அல்லது முடியாவிட்டாலும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதாவது, இது ஓர் உத்தரவு. இது போன்ற சந்தர்ப்பங்களில் கீழ்ப்படியாமல் இருப்பதன் மூலம் இந்த ஆர்வம், ஆசை முறியடிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. நான் விரும்புவதை நீங்கள் செய்ய வேண்டும் என்று கூறுவதானால், அதன் அர்த்தம், நீங்கள் நிச்சயமாக, தானாகவே அதைச்

**செய்வீர்கள், நான் அதைச் செய்ய வைப்பதால் உங்களால் அதைச் செய்ய முடிகிறது - ஏனெனில் அது எனது விருப்பம்.**

மேலும் ஒருமுறை பாபா விளக்கினார்:

**நான் உத்தரவு ஒன்றை வழங்கும்போது, போர்க்களத்தில் தளபதி ஒருவர் வழங்கும் ஆணை போல் இருக்காது. மாறாக, நான் உத்தரவு ஒன்றை வழங்கும்போது, அது என் மகிழ்ச்சியைக் குறிக்கிறது. இதை ஒரு போர் தளபதி வழங்கும் உத்தரவுக்கு சமமாகப் பார்க்கக்கூடாது. எனது விஷயத்தில், இது எனது மகிழ்ச்சியின் வெளிப்பாடு. எனவே, என்னை மகிழ்விக்க உங்களின் அதிகபட்ச முயற்சியின் வாய்ப்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன்.**

ஆகஸ்ட் 23 அன்று பாபா கூறினார்:

**'தேடுங்கள், கிடைக்கும்' என்பது மிகவும் பொதுவான குரல் முழக்கமாக மாறிவிட்டது; ஆன்மீக ஆர்வலர்கள் அதன் அர்த்தம் என்ன என்ற ஆச்சரியத்தில் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு நான் சொல்கிறேன்: "தேடாதீர்கள், நீங்கள் கண்டுகொள்வீர்கள்."**

**பொருளுலகின் இன்பத்தைத் தேடாதீர்கள், நீங்கள் ஆன்மீகப் பொக்கிஷத்தைக் கண்டுகொள்வீர்கள். பொருளுலகின் இன்பத்தைத் தேடாமல் கடவுளை மட்டும் தேடுங்கள், நீங்கள் கடவுளைக் காண்பீர்கள் என்பதே இதன் பொருள்.**

**சுய மறுப்பு மூலம்தான் கடவுளைத் தேட முடியும். வெறும் கையை நீட்டுவதால் மட்டுமே ஆன்மீகப் பொக்கிஷத்தை அடையப்பெற முடியாது. சுய மறுப்பின்** (ஆத்ம தியாகத்தின்) **முழுமையில் மட்டுமே ஆன்மீகப் பொக்கிஷம் சுயமாக வெளிப்படும்.**

**ஆன்மீகப் பொக்கிஷத்தை அடையப்பெறுவதற்கு மூன்று வழிகள் உள்ளன:**

- **முதலாவது: சுய மறுப்பின் மூலம், தக்க தகுதியால் அதைத் தனக்கு உரியதாக்கிக் கொள்ளவேண்டும்.**
- **இரண்டாவது: தனது அன்பிற்குரியவருக்கான ஏக்கத்தின் தீவிரத்தில் தன்னைத்தானே அழித்துவிட்ட அன்பனுக்கு, கடவுள் கொடுத்த தன்னிச்சையான அன்பளிப்பாக அதை அடையப்பெறுவது.**
- **மூன்றாவது: அன்பிற்குரியவரின் விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்தவர்களுக்கு, பரிபூரண குருநாதரின் விருப்பத்தின் அடிப்படையில் நேரடியாக வழங்கப்படுவது.**

**எனவே நீங்கள் ஆன்மீகப் புதையலைக் கண்டுகொள்ள விரும்பினால், பொருளுலக இன்பத்தைத் தேடுவதை நிறுத்துங்கள். இப்பூவுலக ராஜ்யத்தைத் தேடாமல் சொர்க்கலோகத்தைத் தேடுங்கள், நீங்கள் அதைக் கண்டுகொள்வீர்கள்.**

1960 ஆகஸ்ட் 26 வெள்ளிக்கிழமை இரவு நேரக் கண்காணிப்பின் போது, பாபா இந்த கஸலை பாவ் கல்சூரிக்கு இந்தி மொழியில் எடுத்துரைத்தார்:

**மாய உலகின் காதலில் வீழாதே, அது உன்னை அழித்துவிடும்.**
**அது உன்னை அன்பிலிருந்து இழுத்து, ஏழ்மையில் தள்ளிவிடும்.**
**பரிபூரண குருநாதரிடம் சரணடையுங்கள்,**
**அவர் உங்கள் நிலையை மேம்படுத்துவார்,**
**ஆன்மீகத்தின் ஆபரணங்களால் உங்களை அலங்கரிப்பார்,**
**மேலும் உங்களை செல்வந்தர்களில் செல்வந்தராக மாறச்செய்வார்.**
**அப்படியானால், மரணத்தின் தேவதை உங்கள் மீது**
**எந்தவிதமான சக்தியைக் கொண்டிருப்பார்?**
**இதை நீங்கள் எப்பொழுதும் நினைவில் கொண்டிருப்பீர்!**

இரண்டு நாட்களுக்குப் பின்னர், இரவு கண்காணிப்பு வேளையில், பாபா மற்றுமொரு கஸலை, பாவ் கல்சூரிக்கு பின்வருமாறு எடுத்துரைத்தார்:

**அன்பின் அமிர்தத்தைப் பருகி, (பிரியமானவரின்)**
**மஸ்தைப் போல மாறுங்கள்.**
**இதயத்தை கபாபாக** (KABOB) **மாற்றி அதை உண்ணுங்கள்;**
**பின்னர் அதன் உதிரத்தைப் பருகுங்கள்;**
**மேலங்கியில்** (தாமன்) **பாவங்களின் கறை படிந்த திட்டுகளை**
**எவ்வளவு காலம் தைப்பீர்கள்?**
**அன்பின் தையல்கார-குருநாதர் உங்கள்**
**இதயத்தின் துண்டுகளை தைக்கட்டும்.**
**உயிரைத் துறந்த பிறகு வாழ வைக்கும்**
**அந்த மரணத்தை சந்திக்கட்டும்.**
**சுயத்திற்காக உயிரைத் துறந்து பிறருக்காக மட்டுமே வாழுங்கள்.**
**உங்கள் அனைத்தையும் பரிபூரண குருநாதரிடம் ஒப்படைத்து,**
**அவரிடமிருந்து அனைத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.**
**நீங்கள் எதையும் பேச விரும்பினால், பாவ் கூறுகிறார்,**
**அன்பைப் பற்றி மட்டுமே பேசுங்கள்.**

ஆகஸ்ட் மாத இறுதியில் சில பிற்பகல்களில் பாபா, ஏழு ஓடுகளின் (SEVEN TILES) விளையாட்டை மண்டலியுடன் விளையாடினார். இந்த ஆறுமாதகால ஏகாந்தவாசத்தில், ஆதி சீனியர் தினமும் மெஹராஸாத்திற்கு வருவதை பாபா தடைசெய்தார். எவ்வாறாயினும், ஆகஸ்ட் 27 அன்று பாபாவை சந்திக்க ஆதி அனுமதிக்கப்பட்டார், அவர் மெஹர்ஜியையும் உடன் அழைத்து வந்தபோது, அவர் அங்கு இரவு தங்க அனுமதிக்கப்பட்டார். ஆகஸ்ட் 23 அன்று கோர்ஷெத் ஒரு வாரத்திற்காக மெஹராஸாத் வந்தார்.

1960 செப்டம்பர் 1 முதல் மெஹர் பாபா, தமது உபவாசம் மற்றும் ஏகாந்தவாசத்திற்கு மூன்று நாள் ‘விடுமுறை’ அறிவித்தார். 4ஆம் தேதி, அவர் தமது பணியைத் தொடர்ந்து, ஒரு வார கால உபவாசத்தை - ஒரு நாளைக்கு ஒரு கப் காஃபி, தேநீர் மற்றும் மோர் மட்டுமே அருந்தி தொடங்கினார்.

இடைவிடாத உபவாசம் பாபாவின் உடலை பாதித்தது: அவரது இரத்த அழுத்தம் அதிகரித்தது; அவருக்கு சளி பிடித்தது, கடுமையான தலைவலி இருந்தது; மேலும் அவர் சில நேரங்களில் உடல் நடுக்கத்தையும் உணர்ந்தார். இருந்தாலும், பாபா அவரது உலகளாவிய பணியில் அயராது மூழ்கி, ஒவ்வொரு நாளும் கைக்கோபாத்துடன் அமர்ந்தார்.

அவரது உபவாசத்தின் இறுதி நாளான செப்டம்பர் 10 அன்று, ஏழைகளுக்கான மற்றுமொரு நிகழ்ச்சி மெஹராஸாத் மண்டலி மண்டபத்தில் காலை 8:45 முதல் 10:15 வரை நடைபெற்றது. சுற்றுப்புறங்களில் அமைந்த எட்டு கிராமங்களைச் சேர்ந்த 220 ஏழைகளைத் (167 ஆண்கள், 53 பெண்கள்) தலைவணங்கி, பாபா ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார். நோஷிர் ஈரானி (NOSHIR IRANI), அவரது சகோதரர் போமன் (BOMAN) இருவரும், பாபாவின் வேண்டுகோளிற்கு இணங்க, ஏழைகளுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்ட ரூ.2,200 தொகையை நன்கொடையாக வழங்கியதால், நிகழ்ச்சிகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். ("ஏழைகளுக்குப் பிரசாதமாக வழங்க பாபாவிடம் பணம் இல்லை, ஆதலால், அவர்கள் அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும்!" என்று எரச் எழுதியிருந்தார்.)

மூன்று நாட்களுக்குப் பிறகு செப்டம்பர் 13 அன்று, பாபா இவ்வாறு அறிவித்தார், **"நான் எனது மௌனத்தைக் கலைக்கும் வரை ஏகாந்தவாசத்தைக் கைவிட மாட்டேன்."**

பாபா உபவாசத்தை நிறுத்தினாலும், அவரது உடல்நிலை தொடர்ந்து பலவீனமடைந்தது. 14ஆம் தேதி, மயக்கம் ஏற்பட்ட நிலையில், அவரது இரண்டு கைகள் மற்றும் கால்களில் லேசான வீக்கம் தென்பட்டது; இது மாத இறுதி வரை தொடர்ந்தது. டாக்டர் கோஹெர் அவருக்கு வைட்டமின் பி12 ஊசி (1,000 மி.கி.) மற்றும் கல்லீரல் இணைச்சேர்க்கை ஊசியை (2 சி.சி) வழங்கினார்.

செப்டம்பர் 17ஆம் தேதி காலை பாபா, விநாயக் பட்வர்தனைக் குறித்தும், குருபிரசாத்தில் தனக்கு முன் எவ்வளவு சிறப்பாகப் பாடினார் என்றும் குறிப்பிட்டார். ராமகிருஷ்ணன் இந்தத் தகவலை பட்வர்தனுக்குத் தெரிவிக்க, எரச் அவருக்கு எழுதுமாறு அறிவுறுத்தப்பட்டார்: "பாபா இன்று காலை தமது ஏகாந்தவாசத்தில் உங்களை நினைவுகூர்ந்ததால், நீங்கள் அவருடன் தொடர்பில் இருப்பது நல்லது."

1960 செப்டம்பர் 18 அன்று, 'உலகம், எப்படி ஒரு சிறைச்சாலையாக உள்ளது!' (HOW THE WORLD IS A PRISON!) என்பதை பாபா விளக்கினார்:

**முழு உலகமும் ஒரு சிறைச்சாலை, ஏனெனில், பரமாத்மா அதன் 'பௌதீக-சூட்சும-ஆழ் மன'க் கூண்டின் கம்பிகளுக்குப் பின்னால் இருப்பதை அனுபவிக்கிறது. மாயையின் பிடி மிகவும் வலுவானது, அது நிரந்தர அடிமைத்தனத்தின் உணர்வைப் பதிவு செய்கிறது. நித்திய சுதந்திரத்தை அனுபவிக்கும் பரமாத்மா - ஒன்றே உருவான இறையாண்மை மிக்க**

**மேல்நிலை இறைவன் என்றாலும் - தன்னை கொத்தடிமையாக அனுபவிக்கிறது.**

**மாயையானது, ஏக இறைவனின் சிறைவாசத்தை அதி கச்சிதமாகவும், அவரது அடிமைத்தனத்தை மிக்க உறுதியுடனும் நிலைநிறுத்தும் அந்த வேளையில், பரிபூரண குருநாதர், உயர்நிலை ஆத்மாவின் (SOUL) மீது தனது அருளை வழங்கும் தருணத்தில் கூட, அது ஒருபோதுமே மெய்யானதாக இல்லாத சிறைக்கம்பிகளை உடைத்து வெளியேறுவதை அனுபவிக்கிறது.**

**(உடல் வடிவங்களுடன் இருக்கும்) உயர்நிலை ஆத்மாவின் வெளியளவில் தோற்றமளிக்கும் சிறைச்சாலை, அதீத மூச்சுத் திணறலால் தாங்க முடியாததாகி விடும் வேளையில், குருநாதரின் அருளால், அது தன்னைப் பிணைப்புகளிலிருந்து விடுவிக்கும் ஒரு காலம் வரும். இறுதியாக விடுவிக்கப்படும்போது, மூச்சுத்திணறலின் உணர்வைப் போலவே, ஆனந்தக் களிப்பின் உணர்வும் அதி சக்தி வாய்ந்ததாக இருக்கும். சிறைவாசம் மற்றும் விடுதலை ஆகிய இரண்டு அனுபவங்களும் மாயை, ஆனால் இறுதி சுதந்திரத்தின் அனுபவம் யதார்த்தமானது, என்றென்றும் நிலைத்திருப்பது. விடுவிக்கப்பட்ட ஆன்மா அதன் சுயமான அளவிறுதியற்ற சுதந்திரத்தை தொடர்ந்து, நித்தியமாக அனுபவிக்கிறது.**

**உயர்நிலை ஆத்த்மா அடிமைத்தனத்தை அனுபவிக்கும் வரை மட்டுமே இப்பூவுலகம் இருக்கும். உயர்நிலை ஆத்த்மா தன்னை நிஜமாக உணரும்போது, இவ்வுலகம் மறைந்துவிடும் - ஏனெனில் அது ஒருபோதும் இருந்ததில்லை, எனவே உயர்நிலை ஆத்த்மா தன்னை எல்லையற்றதாகவும் நித்தியமாகவும் உணர்கிறது.**

அப்போது மெஹராபாத்தில் தங்கியிருந்த விஷ்ணுவுடன் டாக்டர் டான், பாதிரி, சிது ஆகியோர் செப்டம்பர் 19ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டதால், ஆதி அவர்களை அழைத்துச் சென்றார். பாபா அவர்களின் பணிகளைப் பற்றி விவாதித்தார், பிஸ்கட், சாக்லேட் மற்றும் பதார்த்தங்கள் விநியோகிக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பின்னர், இஸ்லாமியர்களின் 'ஈத்-இ-மிலாத்' (ID-E-MILAD) பண்டிகைக்காக, நபிகள் நாயகத்தைப் பற்றி ஸோமன் எழுதிய முழு உரையையும் கேட்கும் மனநிலையில் பாபா இருந்தார். எரச் அதை வாசிக்கும் போது, பாபா அடிக்கடி சைகைகளால் தெரிவித்தார்: "**இது மிகவும் அருமை, மிகச் சிறப்பாக உள்ளது.**" பாபா அதற்கு செவிமடுத்ததை ஸோமனுக்குத் தெரிவிக்குமாறு ராமகிருஷ்ணனுக்கு எழுத எரச் அறிவுறுத்தப்பட்டார்.

தாமதமான பருவமழை இறுதியாக வந்தது; 1960 செப்டம்பர் 25 ஞாயிற்றுக்கிழமை அன்று, நிரம்பி வழியும் பிம்பல்காவ்ம் ஏரியைப் பார்வையிட, ஆண், பெண் மண்டலியுடன் (தனியாக காரில் அழைத்துச் செல்லப்பட்டனர்) பாபா டிஸோட்டோவில் சென்றார். '**வருண தேவன் இந்திரன் எனது துன்பத்தில் என்**

**மீது இரக்கம் காட்டாமல், கண்ணீர் சிந்த மறுத்ததே மழை பொழியாததற்குக் காரணம்!**' என்று பாபா முன்பு குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில், அவரது கை கால்களில், குறிப்பாக வலது பாதத்தில் வீக்கம் நீடித்தது. 26ஆம் நாள், அவரது விதைப்பையின் வலது பாதியில் லேசான தடிப்பும், முகத்தில் வீக்கமும் தென்பட்டது; ஆயினும்கூட, அன்று பாபா அனைவருடன் மெஹராஸாத் தோட்டத்தைச் சுற்றி, மெஹராவின் தோட்டத்தில் இருந்த பழ மரங்களைப் பார்க்க அவர்களை அழைத்துச் சென்றார். அவரது உடல்நிலை மோசமாக இருந்தபோதிலும், பாபா வழக்கம் போல கைக்கோபாத்துடன் பணிபுரிவதில் ஆர்வமாக இருந்தார், மேலும் அவரது பணி திருப்திகரமாக நடப்பதாகக் கூறினார்.

பாபாவின் சகோதரனின் மகன் ஷெரூ (SHEROO) செப்டம்பர் 30 அன்றும், மறுநாள் காலை மனு ஜெஸவாலா, மெஹர்ஜியுடனும் மெஹராஸாத் வந்தனர்; மனு அக்டோபர் 22 வரை அங்குத் தங்க அனுமதிக்கப்பட்டார். மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை, 2ஆம் தேதி), மஹாராணி ஷாந்தாதேவி, பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், மெஹராஸாத்தில் தங்கினார். மெஹர்ஜி அக்டோபர் 4 அன்று புறப்பட்டுச் சென்றார்.

1960 அக்டோபர் 5 முதல் பாபா, இனிப்பு கலந்த நீர் மட்டுமே அருந்தி, ஏழு நாட்கள் உபவாசத்தைத் தொடங்கினார்; எரச்சும் அவ்வாறே உபவாசம் கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டது. மெஹராஸாத்தில் வாழ்ந்த பிற ஆண்களும் பெண்களும் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவும், பகலில் இரண்டு முறை தேநீரும் அருந்தி குறுகிய உபவாசத்தைக் கடைப்பிடித்தனர். அன்றைய தினம் பாபாவிற்கு 100° ஜுரமும், இரத்த அழுத்தம் சற்று அதிகமாகவும் இருந்தது. ஆனால், அவரது முகத்தின் வலது பக்கத்தில் அதைவிடவும் எரிச்சலூட்டும் ஓர் உணர்வு இருந்து வந்தது. அவரது நாக்கில் தோன்றிய புண் காரணமாக, வாய் வீங்கி, சிவந்து, அடிப்பகுதியில் வலிமிகுந்த கொப்பளங்கள் உருவாயின.

அடுத்த நாள், டாக்டர் டான், டாக்டர் கோஹெர் ஆகியோரால் அவரது உடல் அக்கி அம்மை (HERPES ZOSTER) நோயால் தாக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டது; மேலும் செப்டம்பர் மாதம் தொழுநோயாளிகள் மற்றும் ஏழைகளுடன் பணிபுரிந்தபோது, அவருக்கு இந்த நோய்த்தொற்று தாக்கியிருக்கக் கூடும் என இருவரும் யூகித்தனர். பாபா, அடுத்த ஒன்றரை மாதங்கள் தொடர்ந்து இந்தத் துன்புறுத்தலைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. அவர் மிகவும் அசௌகரியமாக உணர்ந்தபோதிலும், அவரது ஏகாந்தவாச பணியில் முழுமையாக மூழ்கியிருந்தார்.

அக்டோபர் 6ஆம் தேதி பாபாவிற்குச் சளி பிடித்திருந்ததால், விழுங்கும் போது வலி ஏற்பட்டது. 7ஆம் தேதி ஜுரம் இல்லையெனிலும், பாபாவின் முகத்தில் வெடிப்புகளும், வீக்கமும் அதிகரித்து, வலி கடுமையாக இருந்தது. கண்களுக்குக் கீழ்ப்பகுதியில் முகத்தின் வலது புறம் முழுவதும் வலித்தது. கன்னம், காது, கன்னத்தின் அடிப்பாகத்தில் உள்ள சுரப்பிகள், அவரது வாயின்

உட்புறம் மற்றும் தொண்டை அனைத்தும் பாதிக்கப்பட்டது. பாபாவால் வாய் திறக்கக்கூட முடியாத அளவுக்கு கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார். சிறுநீரக சுரப்பிக்கான (CARTISONE) களிம்புகள் வெளிப்புறமாகப் பயன்படுத்தப்பட்டு, ‘டெக்காட்ரான்’ நோய் எதிர்ப்பு அழர்ச்சி (DECADRON - STEROIDS) மாத்திரைகளும், பென்சிலின் ஊசி மருந்தும் எடுத்துக்கொண்டாலும், பாபா உபவாசம் கடைப்பிடித்ததால் போதிய அளவில் வலிமை மிக்க மருந்துகளை உள்ளே செலுத்த முடியவில்லை.

அக்டோபர் 8ஆம் தேதிக்குள், பாபாவின் உடல்நிலை மேலும் மோசமடைந்தது, டாக்டர் டான், பாதிரி இருவரின் ஆலோசனை வழங்கப்பட்டது. காயங்கள் அதிகரித்தன. பாபா தமது உபவாசத்தைத் தொடர்ந்த போதிலும், கொப்பளங்கள் மற்றும் வலிக்கு ஏதேனும் நோய்த்தொற்றுகளை எதிர்க்கும் மருந்தை (ANTIBIOTIC) எடுக்க ஒப்புக்கொண்டார். அடுத்த நாள் எந்த முன்னேற்றமும் தென்படவில்லை, மேலும் பாபா போதுமான திரவ ஆகாரங்களை எடுத்துக் கொள்ளாததால், இரத்த நாளம் வழியாக ஊட்டச்சத்தும், தனியாக வைட்டமின் ஊசியும், தூக்கத்திற்கான மாத்திரையும் வழங்கப்பட்டது.

மெஹரா பிற பெண் மண்டலியுடன் இணைந்து, சிறிதளவேனும் ஊட்டமளிக்கும் உணவு உண்ணுமாறு அவரிடம் கெஞ்சி, வற்புறுத்தியதற்கு பிறகு, பாபா 10ஆம் தேதி சிறிதளவு உண்ண இணக்கம் தெரிவித்து, ஒரு டம்ளர் மோர் மற்றும் சிறிதளவு சூப்புடன் தமது உபவாசத்தை நிறைவு செய்தார். (எரச்சும் தனது உபவாசத்தைக் கைவிட்டார்.) ஆனால் பாபாவின் முகத்தின் வலது பக்கம், கண்ணிமை, உதடு மற்றும் நாக்கின் கீழ் வீக்கம் தொடர்ந்து அதிகரித்து, விழுங்குவது இன்னும் வேதனையாக இருந்தது.

மறுநாள் பாபா சூப், மோர், ரொட்டி, பிஸ்கட் போன்றவற்றை உட்கொண்டார். அவரது முகத்தின் வலது பக்கத்தில் வலி அதிகமாக இருந்தது, நாக்கில் கொப்பளங்கள் தணிந்திருந்தாலும், வலி அதிகமாகி, இறுதியில் வலது காது மற்றும் நாக்கின் வேர் பகுதிகளில் ஊடுருவியது. டாக்டர் கோஹெரின் தினசரி சிகிச்சை தொடர்ந்தது, டாக்டர் டான் ஒவ்வொரு நாளும் உதவிக்கு வந்தார்.

இந்த நேரங்களில், பாபா படுக்கையில் இருக்குமாறும், அல்லது குறைந்த பட்சம் தம்மை அறைக்குள் அடைத்துக்கொண்டு ஓய்வெடுக்குமாறும், அருகில் இருந்தவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு செவிமடுக்க மறுத்துவிட்டார். எல்லாம் வழமையாக நடக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் பிரதான வீட்டில் நடந்து சென்று, தூக்கு நாற்காலியில் ஆண்கள் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் தமது உலகளாவிய பணியைத் தொடர்ந்தார்.

1960 அக்டோபர் 12 அன்று (அவரது உபவாசத்தை நிறைவு செய்வதற்கான அசல் தேதி), பாபா சிறிது சாதம், பருப்பு, மோர், சூப் போன்றவற்றை உட்கொண்டார். ஆனால் உணவு உண்பது அவருக்கு மிகுந்த வலியை ஏற்படுத்தியது, ஏனெனில் விழுங்குவது சிரமமாக இருந்தது.

விசித்திரமாக, பாபா அன்று இரவு நன்றாகத் தூங்கினார். இருப்பினும், அடுத்த நாள், அக்டோபர் 13 அன்று, அவரது முகம் முழுவதிலும், குறிப்பாக இது வலது நெற்றிப்பொட்டு, காது மடல், நாக்கின் கீழ்ப்பகுதி ஆகியவற்றில் அதே வலி இருந்தது. இந்தப் பகுதிகளில் இருந்த கொப்பளங்களில் களிம்பு பயன்படுத்தப்பட்டது. இரண்டு ஊட்டச்சத்து ஊசிகளும் போடப்பட்டன. பாபா தனது வலது காதுக்குள் ஒரு 'முறுகல்' போன்ற உணர்வு இருப்பதாகப் புகார் செய்தார், அது இப்போது காது செவிடாகிவிடுவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

அன்றைய தினம் மண்டலியுடன் மண்டபத்தில் பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்த போது, 'ஏக இறைவனாக உளதாயிருக்கும் உண்மைப்பொருள் எல்லையற்றது என்பதில் எந்த நோக்கமும் இல்லை' (PURPOSELESSNESS IN INFINITE EXISTENCE) என்று பாபா விளக்கினார்:

**ஏக இறைவனாக உளதாயிருக்கும் உண்மைப்பொருள் என்பது எல்லையற்றது, நித்தியமானது. என்றாலும், அவ்வாறு உளதாயிருப்பதில் எந்த நோக்கமும் இல்லை. உளதாயிருப்பது இருந்துகொண்டிருக்கும். அதுவும் அவ்வாறே இருக்க வேண்டும். எனவே, உளதாயிருக்கும் உண்மைப்பொருள் எந்த நோக்கத்தையும் கொண்டிருக்க முடியாது. அது அப்படியே, தானாக, சுயமாக உள்ளது.**

**எல்லாவற்றிற்கும் - எல்லா பொருட்களுக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் - உளதாயிருக்கும் ஏக இறைவனில் ஒரு நோக்கம் உள்ளது. எல்லா பொருட்களுக்கும் உயிரினங்களுக்கும் ஒரு நோக்கம் உள்ளது, மேலும் ஒரு நோக்கம் இருந்தாக வேண்டும், இல்லையெனில் அந்தப் பொருட்களும் உயிர்களும் இருப்பதைப் போலவே இருக்கவோ, வாழவோ முடியாது. அவை/அவர்கள் உலகில் வாழ்வதே அவற்றின்/அவர்களின் நோக்கத்தை நிரூபிக்கிறது; மேலும் அவற்றின்/அவர்களின் ஒரே நோக்கம் தற்போதைய நோக்கத்திலிருந்து விடுபடுவது - அதாவது பொருளுலக நோக்கமற்றதாக மாறுவது.**

**நோக்கமின்மை என்பது யதார்த்தம் (அதாவது உண்மைப்பொருளுக்கு உரித்தானது); ஒரு நோக்கத்தைக் கொண்டிருப்பது பொய்யும் போலியுமான மாய உலகில் தொலைந்து போவதாகும். எல்லாமே அதற்கு ஒரு நோக்கம் இருப்பதால் மட்டுமே உள்ளது. அந்த நோக்கம் நிறைவேறிய அடுத்த கணமே அனைத்தும் மறைந்து, ஏக இறைவனான உண்மைப்பொருள் எனும் பரமாத்மாவாக வெளிப்படுகிறது.**

**நோக்கம் ஒரு திசையை நோக்கிய அனுமானத்தில் நகர்கிறது, அதே வேளையில் எங்கும் நிறை இறைவன் எனும் உறுதிப்பாடு, எல்லாமாக எல்லா இடங்களிலும் உளதாயிருப்பதால், எந்த ஒரு குறிப்பிட்ட திசையையும் கொண்டிருக்க முடியாது - திசைகள் எப்பொழுதும் ஒன்றுமில்லாத ஒன்றில் இருக்க வேண்டும் மேலும் அவை எங்கும் வழிநடத்தாது.**

**எனவே, ஒரு நோக்கம் இருப்பது என்பது தவறான இலக்கை உருவாக்குவதாகும்.**

**அன்பு ஒன்றுதான் எந்த நோக்கங்களும் இல்லாமல் இருப்பது, மேலும் தெய்வீக அன்பின் தீப்பொறி அனைத்து நோக்கங்களையும் சுட்டெரித்து விடுகிறது. படைப்பில் வாழ்வின் குறிக்கோள், நோக்கமற்ற நிலையை அடைவதாகும், இதுவே ஏக இறைவனின் யதார்த்த நிலை.**

பாபாவின் கடுமையான உடல் ரீதியான துன்பத்தைத் தவிர, மெஹராஸாத் மண்டலிக்கு அந்தக் காலத்தை, மேலும் தாங்க முடியாத சோதனைக்குள்ளாக்கிய மற்றுமோர் அம்சமும் இருந்தது, அதுவே பாபாவின் மனோபாவம். அவர் ஆர்வமின்றி இருப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டுவது போல் இருந்தது. அவரிடம் எதையாவது சொன்னால், அவர் அதில் சிறிதும் கவனம் செலுத்தாமல், தன்னைச் சுற்றி நிகழும் எதைக் குறித்தும் எந்தக் கவலையும் அடைந்ததாகத் தெரியவில்லை. அவர் தமது உள் பணியில் மிகவும் தீவிரமாக ஆழ்ந்திருந்தார்; முதல் முறையாக அவர் அன்றாட நடவடிக்கைகளில் அலட்சியமாக இருந்தது போலத் தோன்றினார்.

அவரது கவனத்தை, அன்றாட விஷயங்களை நோக்கித் திசைதிருப்ப முயன்ற ஆண், பெண் மண்டலி அனைவரும், அவரை சீட்டாட்டம், கேரம், ஏழு ஓடுகள் போன்ற விளையாட்டுகளில் பங்கெடுக்குமாறு வற்புறுத்தினர், ஆனால் அவர் அதற்கு இணங்கி விளையாடினாலும், ஆர்வமின்றி காணப்பட்டார். சீட்டாட்டத்தின் போது, அவர் திடீரென அட்டைகளை கீழே வீசி விட்டு வெளியேறுவதை வழக்கமாகக் கொண்டார்; ஏழு ஓடுகள் விளையாட்டின் நடுவில், அவர் பந்து வீசும் முறை வரும் வேளையில், பந்தை விட்டுவிட்டு விலகிப் போவது வழக்கம். கேரம் விளையாட்டை விளையாடும்போதும், எங்கு வேண்டுமானாலும் குறிவைத்து விளையாடினார். அவர் மிகவும் விசித்திரமான, மனச்சோர்வடைந்த நிலையில் காணப்பட்டார். அவருடைய அவதாரப் பணியின் காலகட்டத்தில் இதற்கு முன்னதாக பாபா இப்படி இருந்ததே இல்லை. வெளியளவில் அவர் முழு கவனக்குறைவாகவும், எல்லாவற்றுடனும் எந்தவித தொடர்பில்லாதவராகவும் தோன்றினார்.

அத்தகைய நிலையில் பாபாவைக் கண்ட மண்டலி, அவரை மகிழ்விக்க பல்வேறு வகையான கேளிக்கைகளில் ஈடுபட்டனர் - அனைத்தும் வீண். அவர்கள் பாபாவை அவரது தூக்கு நாற்காலியில் அமரச் செய்து, நீண்ட தூரம் அழைத்துச் சென்றனர், வேடிக்கையான கதைகளை மொழிந்தனர், ஆனால் அவரது ஆர்வமின்மை குறைந்தபாடில்லை; மாறாக, அதிகரித்தது. அந்த வருட தீபாவளி பண்டிகை நாளில் (அக்டோபர் 20), மெஹராஸாத் பெண்மணிகள் தங்கிய வளாகம், மெஹரு மற்றும் ஆண்கள் பக்கத்தில் மெஹர்தாஸ் ஆகியோரால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டாலும், பாபா அவரைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய விழிப்புணர்வை ஒரு குறுகிய நேரத்திற்கு மட்டுமே

காட்டினார்; விரைவில் அவர், அதே உள்வாங்கப்பட்ட நிலைக்குத் திரும்பிச் சென்றார்.

ஒரு நாள் இரவு, பாபாவின் படுக்கையறையில், பாவ் கல்சூரி கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, அவர் ஒரு தேளைக் கண்டார். பாபா படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க, குறைந்த அளவிலான சத்தமும் அவரைத் தொந்தரவு செய்யும் என்பதால், பாவ் கல்சூரியால் அதைக் கொல்ல முடியவில்லை. அவர் அதையே பார்த்துக் கொண்டிருந்தார், தேள் இருந்த இடத்திலேயே இருந்தது. மூன்று மணி நேரம் கடந்தது. கடைசியாக பாபா படுக்கையில் அமர்ந்ததும், பாவ் கல்சூரி தேளைக் கொன்றார்.

பாபா ஒன்றும் கூறவில்லை. இது அவரது அலட்சிய நிலைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

பாவ் கல்சூரி நள்ளிரவு வரை கண்காணிப்பதும், அதைத் தொடர்ந்து விஷ்ணு (அவர் அங்குத் தங்கியபோது), பெண்டு, ரானோ ஆகியோர் காலை ஆறு மணி வரை, தலா ஓரிரு மணிநேரங்களுக்காகக் கடமையைப் பகிர்ந்து கொண்டனர். ஒருமுறை பெண்டு கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, ஒரு தேள் அவரைக் கொட்டியது, ஆனால் பாபா ஒரு வார்த்தை கூட பேசவில்லை. பெண்டு மௌனமாக மிகவும் சிரமப்பட்டு சமாளித்தார்; கடமை முடிந்த பிறகுதான் சிகிச்சை பெற முடிந்தது. பாபா பொதுவாக சிறிய விஷயங்களில் கவனத்துடன் இருப்பதுண்டு, ஆனால் இந்தக் காலக்கட்டத்தில் அவருடைய கவனக்குறைவு, எந்த ஒரு சம்பவமும், எவ்வளவுதான் பேரிடராக இருந்தாலும், அவரில் அசைக்க முடியாத அளவுக்கு அதிகரித்தது.

அந்த நேரத்தில், பாபா, நீர் அருந்த அல்லது இயற்கையின் அழைப்பிற்கு பதிலளிக்க அவரது கழிவுக் கலத்தைக் கேட்கவில்லை. இவை அனைத்தும் அவர் கேட்காமலேயே கொடுக்கப்பட வேண்டும். ஓர் இரவு பாவ் கல்சூரி, ஒரு கண்ணாடி டம்ளர் நிரம்ப ஷர்பத்தை அவரிடம் கொடுக்க, பாபா அதை அவர் சிறுநீர் கழிக்கும் கண்ணாடி டம்ளரில் ஊற்றி, பாவ் கல்சூரியைப் பார்த்த வேளையில், அவர் அதை அருந்த வேண்டும் என்று பாபா விரும்பியதை உடனடியாகப் புரிந்துகொண்டார். எனவே பாவ் கல்சூரி இனிப்பான நீரை அருந்தியபோது, பாபா அவரை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பாவ் கல்சூரி உடனே அந்த டம்ளரைக் கழுவி சிறுநீர் கழிப்பதற்காக பாபாவிடம் கொடுத்தார். பாபா அங்கே ஒரு சிலை போல் அமர்ந்திருந்தார், பாபா தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொள்ள பாவ் கல்சூரி, பாபாவை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியிருந்தது. இறுதியாக, அவர் அதைச் செய்தார்.

அந்த நாட்களில், இடியுடன் கூடிய மழை ஒன்று தனது தலைக்கு மேல் வீழ்ந்தது போல பாவ் கல்சூரி உணர்ந்தார். பாபா, அவரிடம் வெறுப்பைக் காட்டி, அவரைத் தன் அருகில் வர அனுமதிக்கவில்லை. இரவு வேளையில் பாவ் கல்சூரி கண்காணிப்புப் பணிபுரிவதும், பகலில் அவர் தன் அறையில் எழுத்துப் பணியில் ஈடுபடுவதும் வழக்கமாக நடந்தது. அவர் அந்த நேரத்தில் இந்தி மொழியில் கஸல்களையும் எழுதி வந்தார் (பின்பு மெஹர் கீத் சுதா - மெஹர் எனும் இறை

பானத்தின் கீதங்கள் என்று பெயரிடப்பட்டது), ஆனால் அவரது முயற்சிகளில் பாபா முற்றிலும் அலட்சியமாக இருந்தார். பாபாவின் நாட்கள் எண்ணப்பட்டு, அவரது வாழ்க்கை ஒரு முடிவுக்கு வருவதைப் போல பாவ் கல்சூரி உணரத் தொடங்கினார். அனைத்து மண்டலியும் இதையே உணர்ந்தனர்.

அனைவரையும் அலட்சியப்படுத்திய பாபா, தமது ஆர்வமின்மையில் அவர்களுக்கு ஆர்வத்தை உருவாக்கினார். அவர் எவ்வளவு செயலற்றவராக இருந்தாரோ, அதைவிட அதிக கவனத்துடன் இருந்தனர். அவரது அலட்சிய மனப்பான்மையின் காரணமாக, மண்டலி அவருக்கு எரிச்சலூட்டும் குறைந்தபட்ச காரணத்தைக் கூட தவிர்க்கும் நோக்கத்தில், அவரது கட்டளைகளைப் பின்பற்றுவதில் முன்னெப்போதையும் விட அதிக உறுதியுடனும் எச்சரிக்கையுடனும் இருந்தனர்.

சில வாரங்களுக்குப் பின்னர் 1960 நவம்பரில், எரச்சின் சகோதரர் மெஹர்வான் மெஹராஸாத்திற்கு வந்தபோது, அவரும் பாபாவின் நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அவர் இவ்வாறு விவரித்தார்:

பாபா தனக்குள்ளேயே முழுவதுமாக உள்வாங்கப்பட்டிருப்பதை நான் முதன்முறையாகப் பார்த்தேன். அந்த நேரத்தில் ஆண்கள் பக்கத்தில், வராண்டா இல்லை. திறந்த வெளியில் வைக்கப்பட்ட பாபாவின் நாற்காலியைச் சுற்றி மண்டலி அமர்ந்தனர், ஆனால் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

எரச் சில உரையாடலைத் தொடங்க முயற்சித்தாலும், பாபாவிடமிருந்து பதில் எதுவும் இல்லை, முகத்தை கீழ் நோக்கி வைத்த வண்ணம், எப்போதேனும் ஒரு குறுநகையை மட்டும் கட்டாயத்தின் பேரில் வெளிப்படுத்தினார்.

அது எங்களுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. நாங்கள் அவரை இப்படிப் பார்த்ததில்லை; பாபாவின் நகைச்சுவை உணர்வை இதுவரை கண்டிராத அளவுக்கு, அவர் முதன்முறையாக இழந்துவிட்டதைப் போல் உணர்ந்தோம். இது மிகவும் பதட்டமான சூழ்நிலையாக இருந்தது. அவர் பணியின் அழுத்தத்தில் இருப்பதாகக் கூறினார், “**நான் எவ்வளவு சிரமப்படுகிறேன் என்று உங்களுக்குத் தெரியாது**.” இது போன்ற பிறழ்ந்துபோன கருத்துக்களை அவர் அவ்வப்போது எடுத்துரைத்தார். இது, எங்களுக்கு ஒருவித நரம்புகளை சிதைக்கும் அனுபவமாக இருந்தது.

ஒருமுறை, அது மிகவும் தாங்க முடியாததாக மாறியது, முதல் முறையாக எரச் உணர்ச்சி வேகத்துடன் கூறுவதை நான் கேட்டேன், “பாபா, உண்மையில் இது இப்போது, எங்கள் அனைவருக்கும் தாங்க முடியாததாகிவிட்டது. உங்கள் மீது நீங்களே எடுத்துக்கொண்ட இந்தத் துன்பத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறோம். எங்களுக்காக எந்த நன்மையையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை; இறை உணர்வை அடையப் பெறுவதிலும் எங்களுக்கு அக்கறை இல்லை. எங்களை எல்லாம் அழித்து விடுங்கள்! உங்கள் மீதுள்ள சுமையை சற்று குறைக்குமாறு வேண்டுகிறோம். நீங்கள் இப்படி அவதிப்படுவதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.”

அங்கு முழு அமைதி நிலவியது, இதையெல்லாம் மீறி பாபா நிமிர்ந்து பார்த்தார். அவர் உதடுகளில் லேசான புன்னகையின் நிழல் படர்ந்தது, பாபா அவரையே புறக்கணித்தது போலத் தோன்றியது, **“உங்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள், உணர்ச்சிவசப்பட்டு எதையும் செய்யாதீர்கள்!”** பாபா கூறிய ஒரே பதில் அதுதான். அந்த நேரத்தில் அவர் என்ன மன அழுத்தத்தில் இருந்தார் என்பதை நாங்கள் கற்பனை செய்து பார்க்க முடிந்தது.

பாபா மீண்டும் 1960 அக்டோபர் 13 அன்று இரவு, ஜுரத்திலிருந்து விடுபட்டு நன்றாகத் தூங்கினார். ஆனால் அடுத்த நாள், அதே தொடர்ச்சியான வலியால் துடித்துக் கொண்டிருந்தார், குறிப்பாக நாக்கின் அடிப்பகுதி மற்றும் வலது காதில் அதீத வலி இருந்தது. 18ஆம் தேதி, பாபாவை பரிசோதிக்கவும் சில சிகிச்சைகளைப் பரிந்துரைக்கவும் டாக்டர் டான், பாதிரி இருவரும் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர்.

மறுநாள் இரவும் பகலும் பாபாவின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. தொண்டை புண் குறைந்தபாடில்லை, பாபாவால் தூங்க முடியவில்லை. அவரது காதில் வலி தீவிரமாக இருந்தது, மேலும் உமிழ்நீரை விழுங்குவது கூட கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகத் தோன்றியது. கண் நரம்பின் செயலிழப்பு பாபாவின் வலது கண்ணைப் பாதிக்கலாம் என்று கோஹெர் அஞ்சினார். பூனாவில் ஒரு தோல் நிபுணரிடம் ‘அக்கியால் விளையும் நரம்புத் தளர்ச்சி’க்கான (POST-HERPETIC NEURALGIA) சிகிச்சைக்காக அவர் ஆலோசனை நடத்தினார், ஏனெனில் வலி மிகவும் நரம்பியல் தொடர்புடைதாக மாறியது, குளிர்ந்த காற்று கூட அதை காயப்படுத்தும். வெதுவெதுப்பான காலநிலை மட்டுமே அதற்கு உதவும். இந்தியாவில் குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது, ஆனால் பெண் மண்டலி விரும்பியபடி பாபா தமது அறையில் இருக்க மாட்டார், அதனால் அவர்கள் இந்த வலியைத் தடுக்க, அவரது முகத்தை வெதுவெதுப்பான ஆடை மற்றும் துணிகளைப் போர்த்துவதன் மூலம் பாதுகாக்க முயன்றனர். பாபா, அவரது பணியைத் தொடர வேண்டுமென்று வற்புறுத்தியதால், முகத்தின் மீது போர்த்த முடியாமல் போனது.

பாபா ஒருமுறை அவர்களுக்கு விளக்கியதற்கு இணங்க: **“அறியாமையால் மனிதகுலம் அனுபவிக்கும் துன்பங்களின் பாரத்தைத் தாங்க, கடவுள் மனித உருவம் எடுக்கிறார்.”** அதற்கு மேலும் அவரிடம் எந்த வாக்குவாதத்திலும் ஈடுபட முடியவில்லை. அவர் ஓய்வெடுப்பதை எளிதாக்க, கோஹெர் அன்று மாலை தூங்கும் வேளையில் பாபாவிற்கு தூக்க மாத்திரையைக் கொடுத்தார்.

அக்டோபர் 20 அன்று, டாக்டர் டான் மற்றும் பாதிரி மீண்டும் கலந்தாலோசிக்கப்பட்டனர். பாபாவின் உடல் நிலையில் எந்த மாற்றமும் தென்படவில்லை. தொண்டை மற்றும் காதில் இருந்த புண்கள் தொடர்ந்து வலியைத் தந்தன, ஆனால் தோல் பிளவுகள் காய்ந்து கொண்டிருந்தன. அவர் மிகவும் அமைதியற்றவராக இருந்தார். அவருக்கு பல ஊசிகள் போடப்பட்டன.

அன்று இரவு பாபா நன்றாகத் தூங்கினார், ஆனால் அடுத்த நாள் அவருக்கு வலது காது மற்றும் தொண்டையில் கடுமையான வலி ஏற்பட்டது.

அவரது நாக்கில் கொப்பளங்கள் இருந்ததால் விழுங்குவது மிகவும் வேதனையாக இருந்தது; மெஹர்ஜியிடம் ஒரு 'காது-மூக்கு-தொண்டை' (E.N.T) மருத்துவ நிபுணரை அழைத்துவருமாறு அறிவுறுத்தப்பட்டது. பூனாவைச் சேர்ந்த மருத்துவர் டாக்டர் வாமன் ஜி. அட்ரே (DR. WAMAN G. ATRE), என்பவரை அவர் அக்டோபர் 24ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். டாக்டர் அட்ரே, பாபாவை பரிசோதித்தபோது டாக்டர் டானும் உடனிருந்தார். அட்ரே வேறு மருந்துகளைப் பரிந்துரைத்து, பாபாவின் தொண்டையில் சில்வர் நைட்ரேட் (SILVER NITRATE) அமிலத்தின் உதவியால் சிகிச்சை அளித்தார். பாபாவின் முகத்தின் வலது பக்கம் வலுவிழந்து வருவதால், பாபா சில முகப் பயிற்சிகளைச் செய்யுமாறும் மருத்துவர் பரிந்துரைத்தார்.

வலி அடுத்த நாளும் தொடர்ந்தது; முக வாதமும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. கோஹெர், மெஹரா இருவரும் அந்தப் பகுதியை லேசாக மஸாஜ் செய்து பாபாவின் நாக்கிலும், மேல்வாய் பகுதியிலும் சில்வர் நைட்ரேட் அமிலத்தைத் தடவினர்.

அடுத்த சில நாட்களில், பாபாவின் முகச் செயலிழப்பு அதிகரித்து, வலி மேலும் அதிகமானது. அவர் கண்களில் நீர் வழிய ஆரம்பித்தது, மூக்கடைப்பும் மிகையாக இருந்தது. கோஹெர் அவரது நிலை குறித்த கவலையில் ஆழ்ந்தார்: "என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை," என்று அவர் ஒப்புக்கொண்டார்.

நரிமனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, 1960 அக்டோபர் 30 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு, அவர் மும்பையிலிருந்து, உலகப் புகழ்பெற்ற நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராம் கிண்டே (DR. RAM GINDE, 48), என்பவரை அழைத்து வந்தார். டாக்டர் கிண்டே, மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, மும்பையில் வாழும் அவரது நண்பர்களான நகர்வாலா (NAGARWALA) குடும்பத்தினரின் இல்லத்தில் அவருடைய புகைப்படத்தைப் பார்க்க நேர்ந்தது. பாபாவை மிகவும் மென்மையாக (குழந்தைக்கு சிகிச்சை அளிப்பது போல) பரிசோதனைக்கு உட்படுத்தி, கிண்டே, பாபாவிற்கு ஆல்கஹால் (ALCOHOL) ஊசியைப் பரிந்துரைத்தார். இதற்கு, வலது நெற்றியில் துல்லியமாக உள் நரம்புப் பகுதியைத் தொட்டு, வலியை மட்டுப்படுத்த வேண்டும். ஊசி மருந்தை இரண்டு அங்குலம் உள்ளே செலுத்தி, நரம்பின் குறிப்பிட்ட இடத்தை அணுகி, வலியை அகற்ற வேண்டும். ஊசியைச் செலுத்தவும், வலியைப் போக்கவும் எக்ஸ்ரே (X-RAY) வசதிகள் அவசியம் என்று கூறி, டாக்டர் கிண்டே இதையெல்லாம் விளக்கினார்; ஆனால் பாபா, "**இல்லை, உங்களால் செய்ய வேண்டிய அனைத்தையும் நீங்கள் இங்கே செய்யுங்கள்**" என்று சுட்டிக்காட்டினார்.



டாக்டர் ராம் கிண்டே (DR. RAM GINDE)

“அது எப்படி சாத்தியம்?” கிண்டே எதிர்ப்புத் தெரிவித்தார். “எக்ஸ்-ரே இயந்திரத்தின் உதவியின்றி, நான் கண் பார்வையற்ற மனிதனைப் போல் அனைத்தையும் செய்யவேண்டும்!”

பாபா உடனே, “**அப்படியே செய்யுங்கள்**!” என்று சைகையால் தெரிவித்தார்.

டாக்டர் கிண்டே இறுதியாக ஒப்புக்கொண்டார். அவர் துல்லியமான அளவீடுகளை எடுத்து, இரண்டாவது மற்றும் மூன்றாவது முக்கோண நரம்பை அணுகும் வரை, ஊசியை வலது நெற்றிக்குள் செலுத்தினார். பாபாவின் நாவில் ஏதேனும் உணர்வு தென்பட்டால் அதை உடனடியாகத் தெரிவிக்குமாறு பாபாவிடம் கூறினார். பாபா அதைத் தெரிவித்த அடுத்த கணமே, கிண்டே ஆல்கஹால் துளியை ஊசி வழியாகச் செலுத்தி, நரம்பை செயலிழக்கச் செய்தார். கிண்டே வெளியளவிலான எந்த உதவியும் இல்லாமல் ஒரு சிறப்பான பணியைச் செய்து முடித்தார்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக எந்த ஆக்கப்பூர்வமான விளைவும் இல்லை. இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று பாபா கேட்டதற்கு, அது நிரந்தரமானது என்று டாக்டர் கிண்டே கூறினார். ஆனால் அவர் புறப்பட்டுச் சென்ற அடுத்த கணமே, பாபாவின் வலி திரும்பியது. அத்துடன், ஆழமாக ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஏற்பட்ட வலியும் பாபாவிற்கு கடுமையான தலைவலியை ஏற்படுத்தியது.

இன்றிலிருந்து ஒரு மாதம் காத்திருப்பதாகவும், வலி குறையவில்லை என்றால், கிண்டே மூலம் சிகிச்சைப் பெற மும்பைக்குச் செல்வதாகவும் பாபா கூறினார். இதுபோன்ற டாக்டரின் வருகை மற்றும் சிகிச்சைக்கு, பொதுவாக ரூ.1,000 முதல் 2,000 வரை செலவாகும் என்றாலும், அவருடைய கட்டணத்தை ஆதி அவரிடம் கேட்டபோது, கிண்டே தனது சேவைகளுக்கு எந்தப் பணத்தையும் ஏற்க மறுத்துவிட்டார். மிகவும் பிரபலமான ஒரு அறுவை சிகிச்சை நிபுணர், ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஒரு நாள் முழுவதும் தொலைதூர இடத்திற்குச் செல்வது மிகவும் அசாதாரணமானது, ஆனால் எப்படியோ அவர் ஒப்புக்கொண்டார். டாக்டர் கிண்டே இதற்கு முன்பு மெஹர் பாபாவை சந்தித்ததில்லை, ஆனால் அவரைப் பார்த்ததும், அந்த மாபெரும் மருத்துவர் மிகவும் நெகிழ்ந்து போனார், அவர் தனது முழு அர்ப்பணிப்புடன் மெஹர் பாபாவின் உண்மையான அடிமையானார். அவர் அடிக்கடி பாபாவிடம் வரத் தொடங்கினார் - மேலும் பாபா மீதான அவரது பாசமும் அன்பும் பல ஆண்டுகளாக ஆழமாக வேரூன்றின. பாபாவிற்கு சிகிச்சை அளிக்க மருத்துவராக வந்தவர், அவருடைய நோயாளியாகவே திரும்பிச் சென்றார்! பாபாவின் அக்கறையற்ற நிலையில், டாக்டர் ராம் கிண்டே மீது, தம்மைப் பற்றிய ஆர்வத்தை உருவாக்க அவர் இத்தகைய துன்பங்களை அனுபவித்ததாகத் தோன்றியது.

அந்த முதல் சந்திப்பின் டாக்டர் கிண்டேயின் விளக்கம் இதோ:

பாபா மிகுந்த வேதனையில் இருந்தார். அவரது முகத்திலும், காது, நாக்கு, உதடுகளிலும் பல புண்கள் இருந்தன; பிரியமான பாபா அவர் அனுபவித்த

கடுமையான வலியின் காரணமாக, மூன்று வாரங்களுக்கு மேலாக ஒரு வாய் உணவு கூட உண்ணவில்லை என்பதை அறிந்தேன். எனவே, இயல்பாகவே, நான் அவருடன் பேச முயற்சித்தேன், பாபா பேசுவதில்லை என்பதைக் கண்டேன்! நான், 'கடவுளே! நான் எதற்காக வந்தேன்? நான் என்ன ஒரு கால்நடை மருத்துவரா?' என்று என் மனதிற்குள் சொல்லிக்கொண்டேன். 'இங்கே பேச முடியாத ஒரு நோயாளி இருக்கிறார், நான் எனது முடிவை எடுத்தாக வேண்டும்.'

நான் அவரை சோதனை செய்ய முயற்சித்தேன். அவர் கடுமையான வலியை அனுபவித்த போதிலும், மிகவும் மென்மையாக இருந்து, முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்.

பாபா மிகவும் அன்பாகப் புன்னகைத்தார்.

நான் அவரை பரிசோதித்தேன், நான் அவரது நோயின் காரணத்தை சரியாகக் கண்டறிந்ததாக நினைத்தேன். உடனடியாக, டாக்டர் டான், டாக்டர் கோஹெர் இருவரும் உள்ளே நுழைந்து என்னிடம், 'நீங்கள் ஏன் எங்களுடன் வரக்கூடாது, நாம் அடுத்த அறையில் அமர்ந்து பேசலாம்' என்றனர். எனவே, அடுத்த அறையில் நாங்கள் சென்றபோது, உடற்கூறியல் (ANATOMY), நோயைக் கண்டறிதல், நோயியல், சிகிச்சை பற்றிய சுமார் ஆறு அல்லது எட்டு புத்தகங்கள், குறிப்புகளுடன் எனது முன்னிலையில் வாசிப்பதற்காகத் திறக்கப்பட்டன. பின்னர் அவர்கள் எனது சோதனையில் நான் என்ன கண்டுபிடித்தேன், அதைக் குறித்து நான் என்ன செய்யப் போகிறேன் என்பதைப் பற்றி என்னிடம் பல கேள்விகளை எழுப்பத் தயாராக இருந்தனர். என்னிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டனர்.

எனவே, இது 'ராம்ஸி ஹன்ட் நியூரால்ஜியா' (RAMSEY HUNT NEURALGIA) எனப்படும் கடினமான வகையைச் சார்ந்த நோயின் அடையாளம் என்று நான் அவர்களிடம் கூறினேன் - முகத்தின் இரண்டு நரம்புகள் - ஏழாவது மற்றும் ஐந்தாவது - பாதிக்கப்பட்டுள்ளன, இதன் விளைவாக அவருடைய முகப் பரப்பீடு மற்றும் காதில் கடுமையான வலி இருந்தது. ஆனால் காது வலி அவ்வளவு மோசமாக இல்லை என்று நினைத்தேன், ஏனெனில் பாபாவால் எதுவும் உண்ண முடியவில்லை மற்றும் முகம், நாக்கு, கன்னத்தின் உட்புறம், கடினமான மேல் உள் வாய் ஆகியவற்றில், புண்கள் மிகுந்த வேதனையைத் தந்தன. ஒருவர் உண்மையில் புண்களையும், அவற்றிலிருந்து இரத்தம் கசிவதையும் காண முடிந்தது. எனவே, ஊசி மருந்தால் முகத்தில் நரம்பை அடைப்பதுதான் ஒரே வழி என்று நினைத்தேன், குறைந்தபட்சம், வாய் மற்றும் நாக்கு உட்பட முகம் முழுவதும் வலி உடனடியாக நின்றுவிடும். இந்த நரம்பைத் தடுப்பதில் நான் வெற்றி கண்டால், பாபா உடனடியாக ஏதாவது உண்ண முடியும்.

ஆமாம், எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை, ஏனெனில் என் மனதில் வேறு எந்த எண்ணமும் இல்லை, இப்போது நான் மும்பையை மறந்துவிட்டேன், நான் அஹமதுநகரை மறந்துவிட்டேன், இதர அனைத்தையும் மறந்துவிட்டேன். உண்மையில், நான் என்னையே மறந்துவிட்டேன்! மேலும் நான் பாபாவிடம், 'உங்களுக்கு ஒரு நரம்பின் உள்ளே ஆல்கஹால் ஊசி போட முடிவு செய்துள்ளேன்' என்று கூறினேன்.

அவர் உடனே, '**அதைச் செய்யுங்கள்! எதற்காகக் காத்திருக்கிறீர்கள்?**' என வினவினார். டாக்டர் டான், டாக்டர் கோஹெர் இருவரும் என்னைப் பார்த்தனர். அவர்கள் மிகுந்த கவலையில் ஆழ்ந்தனர், ஆனால் பாபா கூறுகிறார், '**அதை உடனடியாகச் செய்யுங்கள்!**'

'நான் என்னுடன் மின்னோட்டக் கருவியை (ELECTRICAL SIMULATOR) கொண்டு வந்துள்ளேன், அதன் உதவியால் பாதிக்கப்பட்ட நரம்பை, அதனால் உருவாகும் வலி முகத்தில் வெளிப்படுவதன் மூலம், துல்லியமாகக் கண்டறிய முடியும்.'

'சாதாரணமாக, அனுபவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவருக்கு, வெற்றிகரமாக ஊசியை செலுத்தி, பாதிக்கப்பட்ட நரம்பைக் கண்டறிய ஏறக்குறைய 20 அல்லது 25 நிமிடங்கள் ஆகும். எனது ஆசிரியர்கள் உட்பட, மிகவும் அனுபவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்களையும் நான் பார்த்திருக்கிறேன்; அவர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்டது என்னவெனில், நரம்புகளைத் துல்லியமாகக் கண்டறிவதற்கான முயற்சி, தோராயமாக ஒன்றரை முதல் இரண்டு மணி நேரம் பிடிக்கும். எனவே, மெஹராஸாத் போன்ற இரண்டு குடிசைகள் அமைந்த இந்த இடத்தில், என்னிடம் இருந்த இந்தச் சிறிய மின் கருவிகளுடன், இது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் அந்த எண்ணமே என் மனதில் வரவில்லை. நான் இந்த நரம்பை துல்லியமாகக் கண்டுகொள்வேன், பாபா சரியாகிவிடுவார்' என்றேன். அந்த ஒரே எண்ணம்தான் எனது மனதில் உதயமானது. மேலும், 'என்னை நம்புங்கள், இது எனது வாழ்க்கையில் நான் எடுத்த முயற்சியில் மிக விரைவான ஒன்று! நான் இதுவரை 700 முதல் 800 ஊசிகளுக்கு மேல் போட்டிருக்க வேண்டும், ஆனால் நான் ஊசியை உள்ளே செலுத்தி, அரை நிமிடத்தில் ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்து நான்கைந்து சென்டிமீட்டர் அளவுக்கு ஊசியை தொடர்ந்து உள்ளே செலுத்தினேன், பாபா சற்று முணுமுணுத்தார். நான் மறுபடியும் தூண்டினேன், அதே வலியை உணர்ந்த பாபா, '**ஆம்**' என்று கூறவே, நான் ஆல்கஹாலைச் செலுத்தினேன், ஒரே நிமிடத்தில் பாபா மகிழ்ச்சி பொங்க சிரித்தார்.'

மேலும் பாபா, '**எனக்கு பசியாக உள்ளது. ஏதேனும் உண்ண கொடுங்கள்!**' என்றதும், அவர்கள் ஒரு பெரிய தட்டு நிறைய மாமிசத்துடன் இந்தியன் புலாவ் கொண்டு வந்தனர்; அகோரப் பசியுள்ள மனிதர், தட்டு நிரம்ப புலாவ் உண்பதை நான் பார்த்ததில்லை. இந்த மனிதர் தனது வாழ்நாள் முழுவதும் உணவைப் பார்த்ததில்லை என்று நினைத்தேன். இரண்டு நிமிடங்களுக்குள், முழு தட்டும் முற்றிலும் காலியானது. ஆனால், உங்களுக்குத் தெரியும், பாபா அவ்வளவு சுயநலவாதி அல்ல! கடைசியாக அவர் வைத்திருந்த ஒரு வாய் உணவை, எனது வாயைத் திறக்கச் சொல்லி, அதை என் வாயில் திணித்ததும், நான் மிக வேகமாக விழுங்கினேன். அனைவரும் சிரித்தனர், அவர் மிகவும் திருப்தி அடைந்தவர் போல வயிற்றில் கைகளை வைத்தார், அருந்த தண்ணீர் கேட்டார், இரண்டு டம்ளர் தண்ணீர் அருந்தினார்.

நான் என்ன செய்தேன் என்று மிகவும் ஆச்சரியப்பட்டேன். உண்மையில், அவர் தன்னைக் தானே குணப்படுத்திக் கொண்டார்! நீங்கள் என்னை நம்புவதானால், நான் அந்த நேரத்தில் அவரது கைகளில், என்னை ஒரு தனித்துவம் மிக்கவனாகக் கருதாமல், முற்றிலும் அவருடைய ஊடகமாக மாறினேன்; நான் அதை எப்படிச் செய்தேன், என்ன நடந்தது என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. இந்த நாள் வரைக்கும் என்ன நடந்தது என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை, ஏனெனில், ஊசி மட்டும் உள்ளே நுழைந்த அரை நிமிடத்தில் அது துல்லியமாக நரம்பைக் கண்டுபிடித்து, ஆல்கஹாலை செலுத்தி, நரம்பு தடைசெய்யப் பட்ட அனைத்து நிகழ்வும், மேடை நாடகம் போல், ஐந்தே நிமிடங்களில் நிறைவடைந்தது.

டாக்டர் கிண்டே மதியம் 2:30 மணிக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னர், அக்டோபர் 30 அன்று இரவு, பாபா நன்றாகத் தூங்கிவிட்டார்; ஆனால் மறுநாள் ஜுரமும், தொண்டை, நாக்கு மற்றும் காது பக்கத்தில் அதிக வலியும் இருந்தது. அவருடைய தலைவலியும் தொடர்ந்தது. இது தவிர, அவரது தோலில் ஊசி செலுத்தப்பட்ட பாகம் வீக்கமாக இருந்தது. டாக்டர் கிண்டேக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் 'வலி தணியும்' என்றார்; 'இல்லையெனில், பின்னர் ஒரு நாள் மும்பையில் மற்றுமொரு சிகிச்சை அளிக்கப்படும்' என்று கூறினார்.

1960 நவம்பர் 2 அன்று, ஆல்கஹால் ஊசி போடுவதற்கு முன்னர் இருந்ததை விட அதிக வலி ஏற்பட்டது. தற்காலிக மயக்க மருந்துகள் மற்றும் தூக்க மாத்திரைகள் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. முக வாதம் அதிகரிக்கவில்லை என்றாலும், முகம் மென்மைத் தன்மையுடன் 70 சதவிகித உணர்வு இழப்பு ஏற்பட்டது, மேலும் தசை பலவீனம் நீடித்தது. டாக்டர் அட்ரே பரிந்துரைத்த முகப் பயிற்சிகளை பாபா தொடர்ந்தார். பாபாவின் நிலை குறித்த அவசரக் குறிப்புகள் தொலைபேசி மூலம், டாக்டர் கோஹெர் (மெஹராஸாத்தில்), ஆதி (அஹமதுநகரில்), மற்றும் நரிமன், அர்னவாஸ் ((மும்பையில்) டாக்டர் கிண்டேயுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. டாக்டர் டான் ஒவ்வொரு நாளும் மெஹராஸாத்திற்கு வந்து சென்றார்.

4ஆம் தேதி பாபாவின் வலி மிகவும் கடுமையானது, அவர் நாள் முழுவதும் ஓய்வின்றி இருந்தார். பாதிரி பரிந்துரைத்த சில ஹோமியோபதி மருந்துகளை அவர் உட்கொள்ளத் தொடங்கினார். அன்றிரவு, பாபா மீண்டும் தூங்க முடிந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, நவம்பர் 6 அன்று, பாபாவின் உடல்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தென்பட்டது. வலியின் தீவிரம் சற்று குறைவாக அவ்வப்போது இருந்தது. பாபாவின் முக வாதத்திலும் சிறிய முன்னேற்றங்களைக் காண முடிந்தது, மேலும் அவரது முக வடிவமும் சீராக இருந்தது. பல நாட்களில் முதல் முறையாக வலது கண்ணை முழுவதுமாக திறந்து மூட முடிந்தது. மண்டலி மீண்டும் டாக்டர் கிண்டேயை வரவழைக்க நினைத்தனர், ஆனால் சிறிது முன்னேற்றம் இருந்ததால் சற்று காத்திருக்குமாறு பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

டாக்டர் கிண்டே வழங்கிய சிகிச்சைக்குப் பிறகு, சிறிதளவு நல்ல மாற்றம் ஏற்பட்டாலும், பாபாவின் அலட்சிய மனநிலை மாறவில்லை. அதே மனச்சோர்வடைந்த நிலையில், அவர் எப்போதேனும் சில அறிவுரைகளை வழங்கினார். நவம்பர் 10 வியாழன் அன்று, அவரது அன்பர்கள் 1960 டிசம்பர் 26 முதல் 1961 ஜனவரி 15 வரை, தொடர்ந்து 21 நாட்களுக்கு, தினமும் 500 முறை இறை நாமத்தை உச்சரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். மேலும் அவர் கூறினார்: **"எந்த சூழ்நிலையிலும், அவர்கள் இந்த 21 நாட்களில் 24 மணிநேரம் உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும்."**

**21 நாட்களில், ஆண்கள் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் உபவாசம் கடைப்பிடிக்கலாம், ஆனால் பெண்மணிகள் ஐந்து நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் பாபா அவரது விருப்பத்தைத் தெரிவித்தார்: "ஒருவர் 24 மணிநேரம் அல்லது அதற்கு மேல் உபவாசம் இருந்தாலும், அதை, தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் - உபவாசத்திற்கு இடையில் எந்த இடைவெளியும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.**

**உபவாசம் இருக்கும் ஒருவர், ஒரு நாளைக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் நீர், பழரசம், அல்லது பலவீனமான தேநீர்** (பால் இல்லாமல்) **அருந்த வேண்டும்."**

அன்பர்கள், ஜனவரி 16ஆம் நாள் உபவாசத்தை எந்த நேரத்தில் தொடங்கி, நிறைவு செய்தனர் போன்ற விபரங்களுடன், தங்கள் பெயர் மற்றும் முகவரியை 'வாழ்க்கை சுற்றறிக்கை'யுடன் இணைக்கப்பட்ட அட்டையில் குறிப்பிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

10ஆம் தேதி முதல், விஷ்ணு மெஹராஸாத்தில் தங்கத் தொடங்கினார், அங்கு அவர் பெண்டுவின் இரவுக் கண்காணிப்புப் பணியை சில நாட்களுக்காகத் தொடர்ந்தார்.

அடுத்த ஐந்து நாட்கள், டாக்டர் கோஹெர் மூலம் பாபாவிற்கு மேலும் அதிக ஊசிகள் போடப்பட்டன; மீண்டும் அவரது வலி தீவிரமடைந்தது. நவம்பர் 12 அன்று நரம்பு பாதிக்கப்பட்டதால், புதிய சிகிச்சை எதுவும் அளிக்க வேண்டாம் என்று டாக்டர் கிண்டேயின் கடிதத்துடன் நரிமன் மெஹராஸாத்திற்கு வந்தார். அடுத்த எட்டு முதல் பத்து நாட்களுக்கு, வைட்டமின் பி1, பி12 இவற்றின் பெரிய தினசரி அளவுகளை கிண்டே பரிந்துரைத்தார்.

இந்தக் காலகட்டத்தில், சகன் மெஹராஸாத்திற்கு வந்து பாபாவிற்கு ஆயுர்வேத மருந்துகளை வழங்கத் தொடங்கினார். மெஹர்தாஸ் நவம்பர் 15 அன்று அவரது இல்லம் சென்று, பாபாவின் செய்தியை வழங்குவதற்காக ஹமிர்பூர் மற்றும் பிற மாவட்டங்களில் நடைபெறும் வெவ்வேறு மேளாக்களில் கலந்துகொள்ளுமாறு உத்தரவு வழங்கப்பட்டது. மெஹர்வான் ஜெஸவாலா 16ஆம் தேதி வந்து ஒரு மாதம் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார்.

நவம்பர் 15ஆம் தேதிக்குள், பாபாவின் முகத் தசைகள் மீண்டும் பழைய பொலிவைப் பெற்ற நிலையில், முகம் சாதாரணமாகத் தெரிந்தது. ஆனால்

இரண்டு நாட்களுக்குப் பிறகு, வலி மிகவும் கடுமையானது, குறிப்பாக பாபாவின் கன்னத்தின் வலது பக்கத்தில், வலியுடன் முகத் தசைகளில் இழுப்பும் ஏற்பட்டது. சகன் பரிந்துரைத்த களிம்பு தினமும் பூசப்பட்டது, ஆனால் பாபா அதிலிருந்து நிவாரணம் பெறவில்லை, நான்கு நாட்களுக்குப் பின்னர் அது நிறுத்தப்பட்டது.

நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை முதல் முறையாக, வலி தொடர்ந்து அரை நாளுக்கு இல்லாமல் இருந்தது. ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு, லேசான ஜுரத்துடன், உடல் மற்றும் நரம்பு சோர்வு இருப்பதாக பாபா புகார் கூறினார்.

24ஆம் தேதி பகலில் மிகவும் அமைதியற்ற நிலையில் இருந்த அவர், அன்று இரவு நன்றாகத் தூங்கினார். அடுத்த நான்கு நாட்களுக்கு அதே நிலை நீடிக்கவே, அவர் மிகவும் அசௌகரியமாக உணர்ந்தார். அவர் அப்படித் துன்பப்படுவதைப் பார்ப்பது - பாபாவிற்கு ஒரு பயங்கரமான தொல்லை மிகுந்த அனுபவமாகவும், மண்டலிக்கு நடுக்கமூட்டும் காலகட்டமாகவும் இருந்தது. மண்டலி, அவரது துன்பத்தைத் தணிக்கவோ அல்லது அவராகவே தம் மீது ஏற்றுக்கொண்ட பாரத்தைப் பகிர்ந்துகொள்ளவோ மிகவும் உதவியற்றவர்களாக உணர்ந்தனர். மணி கூறியதற்கு இணங்க: "மீண்டும் ஒருமுறை, உடல் ரீதியான துன்பத்தின் மூலம், அவரது உள் பணியின் வெளியளவிலான வெளிப்பாட்டின் கண நேரப் பார்வை எங்களுக்குக் கிடைத்தது."

ஒரு முறைக்கு மேல், பாபா அவர்களிடம் கூறினார்: "**வலி மிகவும் மோசமானது, ஆனால் உள் பணியின் அளவும், விளைவும் சிறப்பாக உள்ளது**." இந்த நேரத்தில், அக்கியால் விளைந்த துன்பத்தைத் தவிர, பாபாவின் இடுப்புப் பாகத்தில் ஏற்பட்ட வலியால் மேலும் அவதியுற்றார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

பாபாவின் ஏகாந்தவாச காலக்கட்டத்தில், இந்த அளவுக்கு உடல் ரீதியான இடர்பாடுகள் இருந்தபோதிலும், அவர் டிசம்பர் 4ஆம் தேதி மெஹராஸாத்தில் ஒரு கூட்டத்திற்காக இந்தியா முழுவதிலுமிருந்து 138 நெருங்கிய ஆண் அன்பர்களை அழைக்க விரும்பினார். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தனிப்பட்ட முறையில், அந்தந்த இடங்களில் வழங்குவதற்காக ஒரு செய்தியை பாபா அவர்களுக்கு அனுப்பிவைக்க விரும்பினார். அதற்கிணங்க, ஒவ்வொருவரும் எதைக் கடைப்பிடிக்க வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அதைக் குறிப்பிடும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன; அதில் ஒவ்வொரு பங்கேற்பாளரும் விருப்பத்துடன் இணக்கம் தெரிவித்தனர். பாபாவின் உடல்நிலை மோசமடைந்ததால், நவம்பர் 1ஆம் நாள் அனைத்து ஆண்களுக்கும் தெரிவிக்குமாறு ஆதி சீனியருக்கு அறிவுறுத்தப்பட்டது: "**பாபாவின் ஏகாந்தவாசத்தால் ஏற்பட்ட மிக முக்கியமான காரணிகளால், பாபா இந்த சந்திப்பை ஒத்திவைக்க ஒரு சதவீதம் வாய்ப்பு உள்ளது**." ஒரு குறுகிய கால இடைவெளிக்கு பிறகு, மற்றுமொரு கடிதம் அனுப்பப்பட்டது: "**ஏகாந்தவாச**

**பணிகள் அவரது உடல்நிலையை வெகுவாக பாதித்த போதிலும், பாபா நிச்சயமாக டிசம்பர் 4 அன்று மெஹராஸாத்தில் இந்தக் கூட்டத்தை நிகழ்த்துவார்.”** ஆனால், நவம்பர் 21 அன்று, **கூட்டம் ரத்து செய்யப்பட்டதாகவும், பாபாவின் ஏகாந்தவாசம் காலவரையின்றி தொடரும் என்றும் மூன்றாவது கடிதம் அனுப்பப்பட்டது.**

1960 நவம்பர் 25 அன்று பாபா கூறினார்:

**எனது மௌனம் கலைய வேண்டும். அதிலிருந்து தப்பிக்க முடியாது. நான் உலகத்திற்கு ‘இறை வார்த்தை’யை வழங்கும் வரை, என் உடலைக் கைவிட மாட்டேன்.**

**நானாக, எனது மௌனத்தைக் கலைக்க மாட்டேன்; உலகளாவிய நெருக்கடி என்னை அவ்வாறு செய்ய வற்புறுத்தும். நெருக்கடி அதன் முழுமையில், உச்சகட்டத்தை எட்டும் அந்த நேரத்தில் என்னை, ‘இறை வார்த்தை’யை உச்சரிக்க வைக்கும்.**

**சரியான தருணத்தைத் துரிதப்படுத்தும் நோக்கில் சூழ்நிலைகள் ஒன்றிணைந்து, எந்த நேரத்திலும், எந்த நிமிடத்திலும், எந்த நாளிலும் முன்னறிவிப்பின்றி வர உள்ளன. அந்தத் தருணம் வெகு தொலைவில் இல்லை.**

**நான் பிரபஞ்சத்தின் ‘மையப்புள்ளி’யாக இருப்பதால், உலகளாவிய எழுச்சியின் முழு அழுத்தமும் என்னைத் தாங்கும்; அதற்கேற்ப எனது துன்பம் எல்லையற்றதாக இருக்கும், அந்த ‘இறை வார்த்தை’ எனது மௌனத்திலிருந்து வெளிப்படும்.**

**எனது விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்து இருங்கள், எந்த சூழலிலும் அல்லது சூழ்நிலையிலும் எனது தாமனிலிருந்து** (மேலங்கி) **உங்கள் பிடியை தளர்த்தி விடாதீர்கள். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் வரை, ஏகாந்தவாசத்தை விட்டு வெளியே வரமாட்டேன். நான் ‘இறை வார்த்தை’யை வழங்கும் தெய்வீகத் தருணம் வெகு தொலைவில் இல்லை.**

இந்தக் காலகட்டத்தில், பென் ஹேமன் (BEN HAYMAN), ஜோஸஃப் ஹார்ப் (JOSEPH HARB) இருவரும் (அவர்களுக்கு பாபா வழங்கிய செல்லப்பெயர் ‘பென்-ஜோ’, BEN-JO) கிட்டத்தட்ட ஒரு வருடமாக பாபாவைப் பார்க்க இந்தியாவிற்கு பயணம் செய்ய திட்டமிட்டிருந்தனர். தொலைதந்திகள் முன்னும் பின்னும் விரைந்தன. பாபா இப்போது ஐந்து நாட்களுக்கு அல்லது பிப்ரவரியில் பத்து நாட்களுக்கு அவர்களை சந்திப்பதற்கான விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்.

அவர்கள் ‘நாளை கிடைக்கும் பலாக்காயை விட, இன்று இருக்கும் களாக்காய் மேல்’ என்ற பழமொழியை நினைவுகூர்ந்து, நவம்பர் இறுதியில் இந்தியா வரவிருந்தனர். பாபா அவர்களின் வருகையை அதற்கு முன்னர் அடிக்கடி ஒத்திவைத்திருந்தார், உடல் அசௌகரியம் இருந்தபோதிலும், அவர் மீண்டும் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. பென், ஜோஸஃப் இருவரும்,

பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியருடன் 1960 நவம்பர் 28 அன்று அதிகாலை மும்பை விமான நிலையத்தை வந்தடைந்தனர் (ஆதி, லண்டனில் அவர்களுடன் இணைந்து, கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவிற்கு வருகிறார்). மெஹர்ஜி அவர்களை தனது காரில் அழைத்து வந்து, பூனா வழியாக அஹமதுநகருக்குச் செல்லவிருந்தார். அன்று பிற்பகல் நான்கு மணிக்குள் பென், ஜோஸஃப் இருவரையும் பாபா கண்டிப்பாகப் பார்க்க விரும்புவதாக மெஹராஸாத்திலிருந்து மெஹர்வான் ஜெஸவாலா, மெஹர்ஜிக்கு அவசர தொலைபேசி தகவலை அனுப்பிவைத்தார்.

விமான நிலையத்தில் பைகளில் ஒன்றை மறந்துவிட்டதால், குழு பூனா வந்தடைய தாமதமானது, ஆனால் அவர்கள் மெஹராஸாத்தை நோக்கி விரைந்து, மாலை 5:15 மணிக்கு வந்து சேர்ந்தனர். கடந்த மாதங்களில் பாபாவின் உடல் நிலை மிகவும் மோசமாக இருந்ததால், அவரது சிரிப்பின் வெளிப்பாட்டை மண்டலி பார்க்கவில்லை. அவருடைய புன்னகையே அவர்களுக்கு உயிர்நாடியாக இருந்தது; பாபாவின் புன்னகையின்றி அனைத்தும் உயிரற்றதாகத் தோன்றியது. ஆனால் பென், ஜோஸஃப் இருவரும் மண்டபத்திற்குள் நுழைந்ததும், பாபா அவர்களைத் தழுவுவதற்காகத் தனது கைகளை விரித்த அவ்வேளையில், அவர் முகத்தில் புன்னகை பரவியது. பாபா அவர்களிடம், **“உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்”** என்று சைகையால் தெரிவித்தார்.

அதற்கு அவர்கள், “நாங்களும் மிக்க மகிழ்ச்சியாக உள்ளோம், உங்கள் ஏகாந்தவாச காலகட்டத்தில் இங்கே உங்களுடன் இருப்பதற்கான பாக்கியத்தை எங்களுக்கு வழங்கியதற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்” என்று பதிலளித்தனர்.

பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **“இந்த நாட்களில் மண்டலி எப்பொழுதும் மகிழ்ச்சியற்ற நிலையில் இருக்கின்றனர். ஆனால் ஒருவேளை உங்கள் வருகை அவர்களை உற்சாகப்படுத்தும்.”**

பென், ஜோஸஃப் இருவரும் பல பரிசுகளை கொண்டு வந்தனர்: ஐவி டியூஸ் (IVY DUCE) உணவு பரிமாற ஒரு மடிப்பு சேவை ஊர்தியும், மணிக்காக ஒரு சிறிய கடிகாரத்தையும் அனுப்பியிருந்தார்; ஹெர்மன் அல்வாராடோ (HERMAN ALVARADO), பாபாவிற்கு ஒரு புதிய கோட்டுக்கான பொருட்களை அனுப்பியிருந்தார்; ஃபிரெட் ஃப்ரேயின் (FRED FRAY) குடும்பம் வைட்டமின்களையும், எலிஸபெத் பேட்டர்ஸன் (ELIZABETH PATTERSON), கோஹெருக்கு ஒரு நுண்ணோக்கி மற்றும் தட்டச்சு இயந்திரத்தையும் அனுப்பியிருந்தனர்.

மேலும் சிறிது நேர உரையாடலுக்குப் பிறகு, பென், ஜோஸஃப் இருவரிடம் பாபா அவரது கைகளை நீட்டி, எழுந்து நின்று அவர்களுடன் மண்டபத்தில் முன்னும் பின்னும் நடந்தார். பின்னர் அவர்களை விடுவித்து, தனியாக விறுவிறுப்பாக நடந்தார் (இருப்பினும் ஒரு தளர்வு தென்பட்டது). பாபாவின் கடுமையான பணியின் காரணத்தால் அசையாமல் இருந்த பாபா,

மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

பாபா அமெரிக்காவில் வாழும் தமது அன்பர்களைப் பற்றி விசாரித்து ஒவ்வொருவரிடமும் தமது அக்கறையை வெளிப்படுத்தினார். பின்னர் அவர்களிடமிருந்து விடைபெற்று, மறுநாள் அவர்களை சந்திப்பதாகக் குறிப்பிட்டு, தமது அறைக்குச் சென்றார்.

மெஹர்ஜியுடன் பென், ஜோஸஃப் இருவரும் மெஹராபாத்திற்குச் சென்றனர், அங்கு அவர்கள் தங்கியிருந்தனர். இந்தியாவில் இருக்கும் ஐந்து நாட்களும், ஒவ்வொரு நாளும் காலை 9:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை, மெஹராஸாத்தில் இருக்க வேண்டும். ஆதி ஜூனியர் அஹமதுநகரில் தங்கியிருந்தார், ஆனால் அவர் ஒவ்வொரு நாளும் மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டார்.

'பென்-ஜோ'வின் வருகை இந்த நேரத்தில் மெஹராஸாத்தில் நிலவிய தீவிரமான சூழ்நிலையை நிச்சயமாக மாற்றியது; மேலும், பாபா அவர்களை வர அனுமதித்ததில் மண்டலி மிக்க மகிழ்ச்சியடைந்தனர். எரச் அவர்களிடம் கூறினார், "இந்த நேரத்தில் இங்கு வந்து, பாபாவை மிகவும் அழகாக, ஆரோக்கியமாக காணும் வாய்ப்பை எங்களுக்குத் தந்தமைக்கு நாங்கள் நன்றி சொல்ல வேண்டும், ஏனெனில் நாங்கள் அவரை நீண்ட காலமாக இப்படிப் பார்க்கவில்லை." உண்மையில், அவரது உடல்நிலை சீரில்லாத போதிலும், பென்-ஜோ அங்கு இருந்த ஐந்து நாட்களில் பாபா பிரகாசமாகத் தென்பட்டார். இந்தத் திடீர் மாற்றத்தால் மண்டலி திகைத்துப் போயினர், ஆனால் பாபா அவர்களிடம், **"நீங்கள் என்னைப் பிரகாசமாகவும், வியக்கத்தக்க விதத்திலும் பார்க்கிறீர்கள், ஆனால் நான் உள்ளளவில் எதைக் கடந்து செல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது**" என்று கூறினார்.

அடுத்த நாள் நவம்பர் 29 செவ்வாய்க் கிழமை, பென்-ஜோ வந்ததும் பாபா அவர்களை சந்தித்து, நலம் விசாரித்து, தோட்டத்தைச் சுற்றி வர அவர்களை அழைத்துச் சென்றார். "**இது அனைத்தும் மெஹராவின் கைவண்ணம்**" என்று பூக்களையும், பழங்களையும் சுட்டிக்காட்டினார். ஜோஸஃப், பாபாவின் பல புகைப்படங்களை எடுத்தார்.

அவர்கள் மண்டலி மண்டபத்திற்குத் திரும்பி வந்ததும், அடுத்த செப்டம்பரில் ஜோஸஃப் இந்தியாவில் தங்க வருவதைப் பற்றி பாபா அவரிடம் விவாதித்தார்.

**"அடுத்த எட்டு மாதங்களுக்கு நான், யார் ஒருவரையும் பார்க்காமல் ஏகாந்தவாசம் மேற்கொள்வேன். கடிதப் பரிமாற்றம் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளது; நான் தற்போதைய ஏகாந்தவாசத்தைத் தொடரும் வரை இது நிறுத்தப்படும். 1960 டிசம்பர் 4ஆம் தேதி, எனது நெருங்கிய அன்பர்களின் சந்திப்பை நான் நிகழ்த்தவிருந்தேன், ஆனால் அது இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது; அதற்கு பதிலாக டிசம்பர் 2ஆம் தேதி 100 ஏழைகளைத் தலைவணங்கி பிரசாதம் வழங்குவேன்"** என்று பாபா கூறினார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா அவர்களுக்கு சமீபத்தில் எடுத்துரைத்த (வெளியிடப்படாத) சில சொற்பொழிவுகளை வழங்கினார். ஒன்று அவரது 'இறை-விருப்பமும் கவலையும்' (WILL & WORRY) என்ற தலைப்பில் அமைந்தது.

**இருமைத்தன்மை என்பது பிரிவினையின் அறிகுறியாக இருக்கிறது. பிரிவினை பயத்தைக் குறிக்கிறது. பயம் கவலையை விளைவிக்கிறது.**

**ஒருமையின் வழி, மகிழ்ச்சிக்கான வழி; பல எனும் பன்முகத்தன்மையின் வழி, கவலைக்கான வழி. நான், இரண்டாவதாக இல்லாத அளவுக்கு, ஏக இறைவனாக ஒன்றானவனாக இருப்பதால், நித்திய ஆனந்தத்தில் இருக்கிறேன். நீங்கள் பரமாத்மாவிலிருந்து பிரிந்து இருப்பதால், எப்பொழுதும் கவலைப்படுகிறீர்கள். உங்களைப் பொறுத்தவரை, நீங்கள் பார்ப்பது முற்றிலும் உண்மையானது; என்னைப் பொறுத்தவரை, இது முற்றிலும் தவறானது.**

**நான் மட்டுமே உண்மையானவன்; என்னுடைய சித்தம் பிரபஞ்சம் எனும் மாயையை ஆளுகிறது. எனது விருப்பமின்றி அலைகள் நகராது, இலைகள் அசையாது என்று நான் சொல்வது உண்மை.**

**எனது விருப்பத்தின் மீதான உங்களது நம்பிக்கையின் தீவிரம், அதன் உச்சத்தை எட்டும் தருணத்தில், என்றென்றும் கவலைக்கு விடையளிக்கிறீர்கள். நீங்கள் கடந்த காலத்தில் அனுபவித்த அனைத்து இன்பமும், துன்பமும், அத்துடன் எதிர்காலத்தில் நீங்கள் அனுபவிக்கக்கூடிய அனைத்தும், எனது 'இறை' விருப்பத்தின் மிகவும் அன்பான மற்றும் தன்னிச்சையான வெளிப்பாடாக இருக்கும்; மேலும், எதுவும் உங்களை மீண்டும் கவலையடையச் செய்ய முடியாது.**

**நிகழ்காலத்தில் மட்டுமே மேலும் மேலும் வாழுங்கள், அது எப்பொழுதும் அழகாகவும், கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தின் எல்லைகளுக்கு அப்பாலும் நீடித்து நிற்கும்.**

**நீங்கள் கவலைப்பட வேண்டும் என்றால், என்னை எப்படி எப்பொழுதும் நினைவில் கொள்வது என்பது மட்டும் உங்கள் கவலையாக இருக்கட்டும். இது பயனுள்ள கவலையாகும்; ஏனெனில், இது கவலைக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும்.**

**என்னை மேலும் மேலும் தொடர்ந்து நினைவில் கொள்ளுங்கள்; எதுவுமே இல்லாத உங்கள் கவலைகள் அனைத்தும், உண்மையில் மறைந்துவிடும். இதை நோக்கி உங்களை எழுச்சியுறச் செய்ய எனது சித்தம் (இறை-விருப்பம்) செயல்படுகிறது.**

பென், ஜோஸஃப் இருவரும் மாலை 5:00 மணிக்கு அஹமதுநகர் திரும்பினர். ஆதி சீனியர், ஸரோஷ் ஆகியோரை சந்தித்த பின்பு, மீண்டும் மெஹராபாத் சென்றனர். பாபாவின் உடல்நிலை இன்னும் சீரானபாடில்லை, அவர்கள் சென்ற பிறகு பாபா, மிகவும் அமைதியற்றவராக இருந்தார், வலி தொடர்ந்து இருந்தபோதிலும், அவர் நாள் முழுவதும் அவர்களுடன் கழித்தார்.

அடுத்த நாள், நவம்பர் 30 அன்று காலை, பிரதான வீட்டின் வராண்டாவில் பாபா கவாலி பதிவுகளை இசைக்கச் செய்து, அதை அவர் பென், ஜோஸஃப் இருவருக்கும் விளக்கினார். அவர்கள் மண்டபத்திற்குத் திரும்பிச் சென்ற வேளையில், லா ரிஸ்க் (LA RISQUE) சீட்டு விளையாடப்பட்டது. ஜோஸஃப் அணி பெரும்பாலான நேரங்களில் வெற்றி பெற்றதாகத் தோன்றியது. பாபா அவரது கையிலிருந்த சீட்டுகளைப் பார்க்கச் சொல்லி, அது நன்றாக இருப்பதைக் கண்டு, அவருடன் அட்டைகளை பரிமாறிக்கொண்டார். பாபாவின் அணி வென்ற அடுத்த கணமே, ஜோஸஃப், பாபாவின் பாதங்களில் ஒரு முறை மூக்கை உரசி கூறினார், "பாபா, நான் விளையாட்டில் தோல்வியை சந்தித்தாலும், நான் வென்றுவிட்டேன்." பாபா, ஜோஸஃபின் தலைமுடியை அன்புடன் வருடி அலங்கோலப் படுத்தினார்.

டிசம்பர் 1 அன்று அவர்கள் மெஹராஸாத்திற்கு வந்தபோது, காலை 9:00 மணியளவில் பாபா அவர்களை மீண்டும் மண்டபத்திற்கு அழைத்தார். அவர் ஸூஃபியிஸம் (SUFISM), ஹஃபீஸ் (HAFIZ), அன்பர், அன்பிற்குரியவர் இவர்களின் ஆன்மீக உறவு (THE MYSTICAL RELATIONSHIP OF THE LOVER AND THR BELOVED) போன்ற விஷயங்களைப் பற்றி, கடந்த கோடையில் குருபிரசாத்தில் கூறியதை, உரை நிகழ்த்தி அவர்களுக்கு விளக்கினார்.

1960 டிசம்பர் 2ஆம் தேதி சனிக்கிழமை காலை பிம்பல்காவ்ம் (PIMPALGAON) கிராமத்திலிருந்து 100 ஏழைகள் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பாபா அவர்களின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார். பென் ஹேய்மன், ஜோஸஃப் ஹார்ப் இருவரையும் பணியில் உதவ அனுமதித்தார். நிகழ்ச்சியின் முதல் பாதியில், பென்னை வலதுபுறத்திலும், ஜோஸஃபை இடதுபுறத்திலும் நிறுத்தினார். பென் ஒவ்வோர் ஏழைக்கும் பத்து ரூபாய் நோட்டை பாபாவிடம் கொடுக்க, அதை பாபா அவர்களிடம் வழங்கினார். ஜோஸஃப், பாபாவிற்கு தண்ணீர் மற்றும் துண்டுகளைக் கொடுப்பதில் மும்முரமாக இருந்ததோடு, அவர் பணி நிறைவு செய்யப்பட்ட ஏழைகளின் எண்ணிக்கையை கவனமாகக் கண்காணித்துக் கொண்டிருந்தார்; சரியாக 50 (முதல் பாதி) நிறைவடைந்ததும், பாபா, ஜோஸஃப், பென் இருவரின் நிலைகளை மாற்றியபோது அவர் ஆச்சரியமடைந்தார். நிகழ்ச்சி நிறைவடைந்ததும், குனிந்து செய்த பணியால் பாபாவின் தலை வலித்தது, பாபா ஓய்வெடுக்க தமது அறைக்குச் சென்றார்.

மதியம் 2:00 மணிக்கு, பென், ஜோஸஃப் இருவருடன் இறுதி மதியத்தைக் கழிக்க, பாபா மண்டபத்திற்குத் திரும்பி வந்தார். ஜோஸஃப் தனது மனைவியுடன் இந்தியாவில் நிரந்தரமாக குடியேற எண்ணி, அவர் பாபா மற்றும் மண்டலியிடம் இதற்கான வழிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்தார். மேலும் சொற்பொழிவுகள் வாசிக்கப்பட்டு நகைச்சுவையான சம்பவங்களும் பரிமாறப்பட்டன. ஏழு ஓடுகள், சீட்டு விளையாட்டுகள் விளையாடப்பட்டன. பாபா ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது, எலும்பு, தசை வர்ம நிபுணராக (OSTEOPATHY)

இருந்த பென், ஆண் மண்டலியின் முதுகெலும்புகளை, குறிப்பாக பெண்டுவின் இடுப்புப் பாகத்தை சரிசெய்தார். அவர்கள் இருவரும் (பென்-ஜோ) பாபாவின் அரவணைப்பைப் பெற்று, மாலை 4:00 மணியளவில், மெஹர்ஜியுடன் காரில் புறப்பட்டுச் சென்றனர்; ஆனால், பெண்டுவை நினைவுகூர்ந்த பென், ஓட்டுநரிடம் காரை நிறுத்தச் சொல்லி, பெண்டுவிற்கு மேலும் சிகிச்சை தேவையா என்பதைக் கண்டறிய வெளியே வந்தார். அவரும் மண்டலியும் விடைபெற்ற பின்னர் அவர்களில் ஒருவர் இறங்கியதால், பாபா அவர்களை மீண்டும் அரவணைத்துக் கொண்டார்.

ஆதி ஜூனியர் டிசம்பர் 12 அன்று பூனாவிற்குத் திரும்பிச் செல்லும் வரை, தினமும் மெஹராஸாத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டார். பென், ஜோஸஃப் இருவரும் பூனாவில் சில நாட்களைக் கழித்த பிறகு, டிசம்பர் 17 அன்று அமெரிக்கா திரும்பினர், மேலும் நரிமனுடன் எல்லோரா குகைகள் (ELLORA CAVES) மற்றும் மஹாபலேஷ்வர் போன்ற இடங்களையும் பார்வையிடச் சென்றனர். அவர்கள் ஆதி ஜூனியருடன் மும்பையிலிருந்து புறப்படுவதற்கு சற்று முன்பு, பாபாவிடமிருந்து இந்த விரைவுத் தொலைத்தந்தி வந்தது: **“பாபாவின் பிரியமான பென்-ஜோ, பாபாவின் மெல்லிசையை கடல்கள் மற்றும் கண்டங்கள் கடந்தும் இசைக்கட்டும். பென்-ஜோ-ஆதி மற்றும் அனைவருக்கும் எனது அன்பும் ஆசிகளும்.”**

1960 டிசம்பர் 3 அன்று கோர்ஷெத் மும்பையிலிருந்து வந்து சில வாரங்கள் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார். 1960 ஜூன் மாதம் பாபா விஜயம் செய்த, பூனாவின் இந்து பெண்கள் மீட்பு இல்லத்தின் (THE HINDU WOMEN’S RESCUE HOME) வெள்ளி விழாவையொட்டி, பாபாவிடம் ஒரு செய்தியைக் கோரியது. 1960 டிசம்பர் 8 அன்று, பாபா அவர்களுக்குக் கீழ்வரும் கவிதையை அனுப்பிவைத்தார்:

**இந்த நேரத்திலிருந்து நான் புறப்படும் வரை என்றால்,**
**நீங்கள் என்னை ஒரே இதயத்துடன் நேசிப்பதானால்,**
**அனைத்து கறைகளும் அப்பழுக்கற்றதாகி விடும்,**
**உங்கள் ஆன்மா, பகல் போலப் பிரகாசமாக இருக்கும்.**
**உலகை இழந்தால், கடவுளின் ஆதாயம் கிடைக்கும்;**
**உலகம் மீண்டும் மீண்டும் ஆன்மாவை ஈர்க்கும்.**
**அன்பின் உழைப்பால் உலகின் கடனை அடைப்போம்,**
**வாழ்க்கை எனும் கடல்களைக் கடந்து எனது**
**பாதுகாப்பான கரையோரம் சென்றடைவோம்.**

பென், ஜோஸஃப் இருவரும் புறப்பட்டுச் சென்ற பிறகு, மெஹராஸாத்தின் சூழ்நிலை - பாபாவின் அக்கறையின்மை மற்றும் இருள் நிறைந்த பழைய நிலைக்குத் திரும்பியது. டிசம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை, அக்பர் பிரஸ்ஸில் அவரது குடும்பத்தினருக்கு எரச் எழுதிய கடிதம், பாபாவின் நிலையைப் பொருத்தமான முறையில் விவரித்தது:

பிரியமான பாபாவின் உடல்நிலை முற்றிலும் சரியில்லை. அவருக்கு உடல் முழுவதும் பயங்கர வலி உள்ளது, ஆனால் அது என்னவென்று அவர் எங்களிடம் கூறுவதில்லை. அனைத்து வெளியளவிலான தோற்றங்களிலிருந்தும், அவர் மிகவும் வேதனையில் இருப்பதாகத் தெரிகிறது, மேலும் அவர் ஆர்வமின்றி இருப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறார் என்பதை அவர் நமக்கு உணர வைக்கிறார். அவர் எதிலும் ஆர்வம் காட்டாமல் அனைத்தையும் கைவிட்டுவிட்டார். மௌனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர் பேசுவதை மட்டும் நிறுத்தவில்லை, ஆனால் இப்போது வெளிப்படையாக கேட்பது, பார்ப்பது, உணர்வது, உண்பது, அருந்துவது, தூங்குவது மற்றும் சுவாசிப்பது அனைத்தையும் கைவிட்டது போலத் தெரிகிறது! அவர் மெஹராஸாத் வளாகத்தில் நகர்வது கூட இல்லை.

சுருக்கமாகச் சொன்னால், அவர் எந்த உடற்பயிற்சியும், நடைபயிற்சியும் மேற்கொள்ளாததால், உணவு மற்றும் தண்ணீருக்கான அவரது தேவை தற்போது 100 சதவீதம் பூஜ்ஜியமாக உள்ளது. உடல் ரீதியாக அவரைப் பொறுத்த வரை அனைத்தையும் ஒரு ஸ்தம்பித்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார். அவருக்குள் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் நிச்சயமாக அறிய முடியாதவர்களாக இருக்கிறோம். ஒரு எரிமலை முழுமையான செயல்திறனுடன் உள்ளே இருக்கலாம்!

அவர் மிகவும் தீவிரமான ஏதோவொன்றில் மூழ்கியிருப்பதாகத் தோன்றுகிறது, மேலும் அவரது தனித்துவமான அமைதியுடன், அவர் தன்னைச் சுற்றியுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைக்கு அமைதியாக்கியுள்ளார். அவர் எதையும் கேட்க விரும்பவில்லை, அவர் எதையும் பார்க்க விரும்பவில்லை, அவர் அருகில் அமர்ந்திருக்கும் வேளையில் வழக்கமாக நிகழும் உரையாடல்களிலும் கலந்துகொள்ளவில்லை.

மெஹராஸாத்தில் நிலவும் சூழ்நிலை ஒரு வகையான தீவிர 'அமைதியால்' ஆட்கொள்ளப்படுகிறது - செயலற்ற தன்மை அல்ல (அதிலிருந்தும் வெகு தொலைவில்!) ஆனால் மொத்தத்தில் ஒரு வகையான 'நிசப்தம்' உருவாகியுள்ளது.

பிரியமான பாபா, நான் யார் ஒருவருக்கு எழுதினாலும், எதிர்காலத்தில் அவர் எந்த கடிதப் பரிமாற்றத்திலும் கவனம் செலுத்த மாட்டார், அவராகவே அழைக்காத வரையில், யார் ஒருவரையும் பார்க்க மாட்டார் என்பதை என்னிடம் தெளிவுபட தெரிவிக்க விரும்புகிறார். மேலும், 1961இல் அவர் பூனாவிற்கோ அல்லது வேறு எங்குச் சென்றாலும், அவரது மௌனத்தைக் கைவிடும் வரை அவர் ஏகாந்தவாசம் மேற்கொள்வார்.

சுருக்கமாகச் சொன்னால், அவருக்குப் பிரியமானவர்கள், பாபாவின் 'இறை' விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்து இருக்க வேண்டும் என்றும், அவர்களின் சுய மகிழ்ச்சியைத் தேடுவதைக் காட்டிலும், தொடர்ந்து பாபாவின் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தேட வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்! அன்பான பாபா, கண்ணுக்குப் புலப்படாத வழியில், அவருடைய

‘இறை’ விருப்பத்திற்குப் பூரணமாக சரணடையும் மனப்பான்மையை, இப்போது தமது அன்பானவர்களின் இதயங்களில் பதியவைத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

இரக்கமுள்ள நம் இறைவன், அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் நிலைப்பாட்டில், நம் அனைவருக்கும் உதவுவதற்காக நம்மை அவரது கைகளில் எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. இந்த நோக்கத்திற்காக அவர் பயன்படுத்த விரும்புவதாகத் தோன்றும் ஆயுதம், மேலே குறிப்பிட்டது போல தற்போதைய சூழ்நிலை. நாமும், பிற அனைவரும் முற்றிலும் உதவியற்றவர்களாக உணரும் அளவுக்கு அவர் தம்மை விலக்கிக் கொண்டார். இந்த உதவியற்ற தன்மை அதன் உச்சத்தை எட்டும் போது, எந்த விதமான ஆதாயம் அல்லது வெகுமதியையும் எதிர்பாராமல் அவருடைய ‘இறை’ விருப்பத்திற்கு சரணடைவதே ஒரே வழி.

- எரச்

மணியின் குடும்பக் கடிதத்தில் (FAMILY LETTER, 1961 ஜனவரி 1) இவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தது:

ஏகாந்தவாசத்தின் எல்லா காலகட்டங்களிலும், பாபாவின் பணியின் முக்கியத்துவத்தை யூகித்து, அதன் ஈர்ப்பு சக்தியை அறிந்தால், வெளியிலிருந்து பார்க்கையில் அனைத்து செயல்பாடுகளும் நின்றுவிட்டதாகத் தோன்றுவது, அவரது உள்ளார்ந்த பணியின் மிகையான அருஞ்செயல் - பெரும் வேகத்தில் சுழலும் எதுவும், பார்வையாளருக்கு நிலையாக இருப்பது போலாகும்.

1960 டிசம்பர் 19 அன்று, பாபாவின் வலது முழங்காலுக்கு மேலே, ஒரு சீழ் ஏற்பட்ட பிறகு, டாக்டர் கோஹெர் அவருக்கு சிகிச்சை செய்தார்; ஜுரமும் 101.8 டிகிரியாக இருந்தது. டாக்டர் டான் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டபோது, பாதிரியும் உடன் சென்றார். ஜால்பாய் சமீபத்தில் ஹமிர்பூர் மேளாக்களில் எடுத்த புகைப்படங்களை 23ஆம் தேதி மெஹராஸாத்திற்குக் கொண்டு வந்தார்; ருஸ்தம் காக்கா அவற்றை பாபா மற்றும் மண்டலிக்குக் காட்டினார்.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க டிசம்பர் 24ஆம் தேதி, ரமா கல்சூரி, பாபாவிற்கும், மண்டலிக்கும் கத்தரிக்காய் கறியை அனுப்பி வைத்தார். இதற்கு முன்னர் அவர், ‘சக்லி’ (CHAKOLI) என்று அழைக்கப்படும் ஒரு வித முறுக்கு பதார்த்தத்தை அனுப்பியிருந்தார்; பாபா அதை தினமும் சிறிதளவு சுவைத்தார்.

1960 டிசம்பர் 26 திங்கட்கிழமை அன்று ஆண்களும் பெண்களும் 24 மணி நேரம் தண்ணீரும், இரண்டு கப் தேநீரும் இரண்டு முறை அருந்தி உபவாசம் கடைப்பிடித்தனர். ஏழு நாட்கள் இனிப்பு கலந்த நீர் மட்டுமே உட்கொண்டு உபவாசம் மேற்கொள்ளுமாறு பாபா, எரச்சிடம் கேட்டுக் கொண்டார்.

நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட ‘வாழ்க்கை சுற்றறிக்கை’க்கு (LIFE CIRCULAR) இணங்க, பாபா கூறிய அறிவுரைகளை அன்பர்கள் கடைப்பிடிக்கத்

தொடங்கியதால், டிசம்பர் 26ஆம் தேதி முதல், அடுத்த 21 நாட்களுக்கு இறை நாமத்தை உச்சரிக்கும் இனிமையான இசை, உலகம் முழுவதும் ஒலித்தது. 'மெஹர் பாபாவின் ஈடுபாடற்ற தன்மை, அவர் மீது அன்பர்களின் ஆர்வத்தைத் தூண்டியது,' என்று காலம் விவரித்தது. "ஒவ்வொரு மையத்திலும், இறை அன்பின் மகிமை தலைசிறந்து நின்றது! உலகில் அவரது அன்பர்களின் கவனம் அவர் மீது குவிந்திருந்தது, அன்பின் கீதங்களின் எதிரொலி அதி தீவிரமாக இருந்தது. இந்த நேரத்தில் தெய்வீக மதுபானத்தின் தாக்கம் பூத்துக் குலுங்கியது, இதனால் பலர் பாபாவைப் பற்றி தெரிந்துகொள்ளும் வாய்ப்பை அடையப் பெற்றனர்."

இரவில், பாபா அமைதியின்றி படுக்கையில் அமர்ந்து, "**எனக்கு மிகவும் பசியாக உள்ளது**!" 21 நாள் உபவாசத்தின் முழுக் காலகட்டத்திலும் அவர் ஒவ்வோர் இரவும் இதையே கூறி வந்தார், அவரது அன்பர்கள் வெவ்வேறு இடங்களில் உபவாசம் கடைப்பிடித்தனர்.

உலகில் எங்கேனும் வெள்ளம், பஞ்சம், பசி, பட்டினி நிலவும் போதெல்லாம், பாபா அதன் பாதிப்பால் அவதிப்படுவது போல், இரவில் அமைதியாகக் கண்கலங்கி அழுவதை பாவ் கல்சூரி கண்கூடாகப் பார்த்து, அனுபவத்தில் அறிந்திருந்தார். இது போன்ற நெருக்கடி நிலைகளின் போது, இரவில் சாக்லேட் அல்லது சில இனிப்புப் பண்டங்களை பாபா பல முறை உண்பதை வழக்கமாகக் கொண்டார். இவற்றை ஊடகமாகப் பயன்படுத்தி, அவதார புருஷர், பசியால் வாடும் மக்களுக்கு 'உணவு' வழங்கினார் என்பதே நிதர்சனம்.

இந்தக் காலகட்டத்திலும் அதுவே உண்மையாக இருந்தது. உபவாசத்திற்குப் பின்னர், அன்பர்கள் மீண்டும் பாபாவைப் பார்க்கவும், தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பு கிடைத்ததும், அவர்கள் இரவில் பசியால் வெறித்தனமாக உணர்ந்ததையும், ஆனால் திடீரென - விவரிக்க முடியாத அளவில் அவர்களின் வயிறு நிரம்பி, பசி அடங்கியது போல் உணர்ந்ததையும் வெளிப்படுத்தினர். உண்மையில், பாபா அவர்களின் பசியைத் தணித்து, அமைதியற்ற நிலையில் இருந்து, தாமே எதையேனும் உண்ட வண்ணம் இருந்தார். இது அவருடைய திருவிளையாடல் (தெய்வீக லீலை); ஆனால் அவர்கள் அதை எப்படி அறிந்து கொள்ள முடியும் அல்லது புரிந்து கொள்ள முடியும்? அவர் அருகில் இருந்தவர்கள் மட்டுமே அதற்கு சாட்சி.

டிசம்பர் 28 அன்று மெஹராஸாத் பிரதான வீட்டில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது, அன்று முதல், பெண்மணிகள் தினமும் பாபாவிற்கு துருக்கிய (ஈரமான துணி) நீராவிக் குளியலை (TURKISH STEAM BATH) வழங்கத் தொடங்கினர்.

30ஆம் தேதி, ஒட்டகத்தின் பின்புறத்தில் பொருத்தப்பட்ட லைலாவின் இருக்கையைப் போல மெஹரு இருக்கை ஒன்றை பாபாவுக்காக உருவாக்கினார். நீராவிக் குளியல் வெற்றிகரமாக முடிந்தது, அதற்குப் பிறகு, பாபா ஏறக்குறைய ஒன்றரை மாதங்கள் நீராடவில்லை.

ஃபிரான்சிஸ் இடைவிடாத ஜுரத்தால் இந்த நேரத்தில் நோய்வாய்ப்பட்டார்; இருந்தும் 1961 ஜனவரி 5 அன்று மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு, 22ஆம் தேதி ஃபிரான்சிஸ் மெஹராஸாத் திரும்பி வரும் வரை, டாக்டர் டான் அவரை கவனித்துக் கொண்டார்.

1961 ஜனவரி 15 ஞாயிற்றுக்கிழமை 21ஆவது நாள் உபவாசம் மற்றும் இறை நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் இறுதி நாள். அன்று, பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, மெஹராஸாத்தில் வாழ்ந்த ஆண், பெண் அனைவரும் 24 மணிநேரம் உபவாசம் மேற்கொண்டனர். உபவாசம் நிறைவடைந்தது, ஆனால் பாபா வெளிப்படுத்திய ஆர்வமின்மை முன்பை விட குறைவாக இருந்தாலும், தொடர்ந்து இருந்து வந்தது.

அன்று பாபா நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஆதி சீனியர், ராம்ஜூ இருவரையும் பார்த்தார். அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை தொடர்பான சட்டம் மற்றும் வரி விலக்கு சிக்கல்களில் ராம்ஜூ அயராது உழைத்துக்கொண்டிருந்தார்; மேலும், பாபா அவர்களுடன் மீண்டும் 19, 23ஆம் தேதிகளிலும், பிப்ரவரி 2ஆம் தேதியும் ஆலோசனை செய்தார். ஜனவரி 27 அன்று பாதிரி, டாக்டர் டான் இருவரும் அழைக்கப்பட்டனர்.



மெஹராஸாத் (MEHERAZAD), **1960**

பாவ், காக்கா**,** ஃபிரான்சிஸ், அலோபா, மெஹர்வான் ஜெஸவாலா, பென் ஹேய்மன், பெண்டு, எரச், மெஹர்ஜி, விஷ்ணு, பைதூல் (BHAU, KAKA, FRANCIS, ALOBA, MEHERWAN JESSAWALA, BEN HAYMAN, PENDU, ERUCH, MEHERJEE, VISHNU, BAIDUL)

# குருபிரசாத் - ஏகாந்தவாசம், தரிசனம்

(**Seclusion & Darshan At Guruprasad**)

1961 பிப்ரவரி 9 வியாழன் ஸொராஸ்ட்ரியன் நாட்காட்டியின்படி, மெஹர் பாபாவின் பிறந்தநாளாக இருந்தாலும், 25ஆம் தேதி பாபா தனது பிறந்தநாளை முன்னிட்டு கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**நான் எப்பொழுதும் மனிதர்களிடையே தொலைந்துபோய், கண்டுகொள்ளப்படுபவன். உங்கள் மீதான உங்களின் அன்பு ஒன்றுதான் என்னை இழக்கச் செய்வது, அதே வேளையில் என் மீதான உங்கள் அன்புதான் என்னைக் கண்டுகொள்வது. எல்லாவற்றிற்கும் மேலாக என்னை நேசிக்கும் தருணத்தில், இப்போது நான் உங்கள் மத்தியில் இருக்கும்போது, நான் உண்மையில் இருப்பதைப் போலவே, மிகவும் எளிதாகக் கண்டுகொள்ளப்படுகிறேன்.**

பாபா, மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில் பூனாவிற்குப் பயணம் செய்வதாக இருந்தாலும், அங்கு பல மாதங்கள் தங்குவதற்கு, சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று ஒரு சுற்றறிக்கை பிப்ரவரி 15ஆம் தேதி வெளியிடப்பட்டது:

**அவர் பூனாவில் தங்கியிருக்கும் போது, எந்த நோக்கத்திற்காகவும் ஒருவர் அவரைப் பார்க்க வரக்கூடாது; குறிப்பாக குருபிரசாதத்திற்கு, தரிசனத்திற்காகவோ அல்லது தனிப்பட்ட சந்திப்பிற்காகவோ எவரும் தம்மை அணுகக் கூடாது என்பதை, அன்பர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.**

**மிகவும் கடினமான ஏகாந்தவாசம் மற்றும் மோசமான உடல்நிலை காரணமாக, பாபா அவரது பணியின் நிமித்தம், மெஹராஸாத் அல்லது பூனாவில் எவரையும் பார்க்க அழைக்கும் வரை, பூனாவில் தங்கியிருக்கும் காலம் முழுவதும், எக்காரணத்தைக் கொண்டும் தம்மைத் தொந்தரவு செய்யாமல் இருக்க, அனைத்து அன்பர்களும் உதவ வேண்டும் என்று பாபா திட்டவட்டமாக தமது விருப்பத்தைத் தெரிவிக்கிறார்.**

**சுருக்கமாகச் சொல்வதானால், மெஹராஸாத்-அஹமதுநகர், பூனா அல்லது வேறு எந்த இடத்தில் அவர் தங்கி இருந்தாலும், பிரியமான பாபா கடுமையான ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்து மேற்கொள்வார் என்பதை நினைவில் கொள்ளவும்.**

**1960 டிசம்பர் 26 மற்றும் 1961 ஜனவரி 16க்கு இடைப்பட்ட காலத்தில், உபவாசம் கடைப்பிடித்த அனைவருக்கும் பாபா, அவரது ஏகாந்தவாசத்திலிருந்து அன்பையும், ஆசிகளையும் வழங்குகிறார்.**

கடிதப் போக்குவரத்து மீதான தடை தொடர்ந்தது, இருந்தாலும் சிலருக்கு பாபா, அவர்கள் ஏன் எழுதவில்லை என்று கேட்டு மணி எழுதியிருந்தார்! எடுத்துக்காட்டாக, அலென் ஏல் (ALAIN YOUELL) தனது ஆக்ஸ்ஃபோர்டு

தேர்வுகளுக்குத் (OXFORD EXAMS) தோன்றவிருந்தார், மேலும் சிறிது காலமாக எதுவும் கேட்காமல் இருப்பதைப் பற்றி பாபா கவலைப்படுவதாக மணி அவருக்கு எழுதினார். அலென் இவ்வாறு பதிலளித்தார்: “அது ஒரு தீவிரமான அவசரநிலையாக இல்லாவிட்டால் நாங்கள் எழுதக்கூடாது என்று நினைத்தேன்.”

அதற்கு மணி நகைச்சுவையாக பதிலளித்தார், “பாபா கேட்கிறார், உங்களை அவர்களில் உள்ளடக்கியது யார்?”

குறிப்பாக மெஹராஸாத் மற்றும் அஹமதுநகர் தண்ணீர் மிகவும் கடினமாக இருந்ததால், பாபா நீராடுவதை விரும்பியதில்லை. (அதில் அதிக அளவு சுண்ணாம்பு கலந்திருந்தது மேலும் பாபாவின் சருமம் மிகவும் உணர்திறன் மிக்கது.) மண்டலியின் வற்புறுத்தலின் பேரில், பூனாவிலிருந்து மென்மையான நீர் அனுப்பப்பட்டால், வாரத்திற்கு ஒரு முறை நீராடுவதற்கு பாபா ஒப்புக்கொண்டார். 1961 பிப்ரவரியின் நடுப்பகுதியிலிருந்து, ஒவ்வொரு வாரமும் (சில நேரங்களில் தினமும்), ஜெஸவாலா குடும்பத்தினர், பூனா கண்டோன்மென்ட் நகராட்சி தண்ணீரை (POONA CONTONMENT MUNICIPAL WATER) இரண்டு பெரிய கொள்கலன்களில் அனுப்பத் தொடங்கினர், அதில் பாபா நீராடத் தொடங்கினார்.

பூனாவிலிருந்து மெஹராஸாத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல சிக்கலான ஏற்பாடுகள் தேவைப்பட்டன. ஆரம்பத்தில் மெஹர்வான் அஹமதுநகரிலிருந்து பூனாவிற்கு ஆடுகளை ஏற்றிச் சென்ற பகீரத்தின் சரக்கு வாகனம் திரும்பிச் செல்லும் வேளையில் தண்ணீரை அனுப்பினார். பின்பு மெஹர்வான் பல்வேறு தனியார் கார்களிலோ அல்லது பொதுப் பேருந்துகளின் மேற்கூரையிலோ இடத்தைக் கண்டுகொண்டார். அது வந்து செல்வது குறித்த விபரங்களை (பேருந்து எண், மற்றும் பல) ஆதிக்குத் தெரிவிக்க, ஆதி அதை மெஹராஸாத்திற்கு கொண்டு செல்வதும், பின்பு காலி கொள்கலன்களை பூனாவிற்கு திருப்பி அனுப்பும் ஏற்பாடுகளையும் செய்தார். பாபா குருபிரசாத் வரும் வரை இது தொடர்ந்தது.

75 மைல் தூரத்திலிருந்து நீராடுவதற்கான தண்ணீர் அனுப்பப்பட்டதை காலம் விசித்திரமாகப் பார்த்தது. ஆனால், இவை அனைத்தும் பிரியமான பாபாவின் பணியின் ஒரு பகுதி என அது நியாயப்படுத்தியது. இந்த சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம், அவர் வேறு பலவற்றுடன், சம்பந்தப்பட்ட நபர்களை ‘நீர்-விநியோக-சங்கிலி’ (WATER SUPPLY CHAIN) மூலமாக இந்த சேவையில் ஈடுபடுத்தி, பாபாவை நினைவில் கொள்ளும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்கினார்.

எரச் ஒருமுறை மாவு, ஷேவிங் கிரீம், பால் போன்ற கலவையால் தயார் செய்த ஒரு சிறப்பு களிம்பை பெண்டு, காக்கா இருவரும் பாபாவின் உடலில் பூசி அவரை நீராட்டினர்.

மண்டலியின் வற்புறுத்தலின் பேரில், பிப்ரவரி 19 அன்று ராம்ஜூ, ஆதி சீனியர் இருவரும் மீண்டும் மெஹராஸாத் வந்தபோது, பாபாவை ஒரு சிறிய நடைப்பயணத்திலும், காரில் சவாரி செய்யவும் அழைத்துச் சென்றனர். பாபாவின்

சிகிச்சை குறித்து டாக்டர் கோஹெருக்கு ஆலோசனை வழங்க 22ஆம் தேதி டாக்டர் டானும், பாதிரியும் அழைக்கப்பட்டனர்.

பாபாவின் 67ஆவது பிறந்தநாள், 1961 பிப்ரவரி 25 சனிக்கிழமையன்று இந்தியா முழுவதும் அமைந்த பல்வேறு மையங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது; ஆனால் மெஹராஸாத்தில் வழக்கம் போல் அமைதியாகவும் எளிமையாகவும் அனுசரிக்கப்பட்டது. ஆண், பெண் அனைவரும் அதிகாலையில் எழுந்து, நீராடி, காலை 5:00 மணிக்கு - அவரது படுக்கையறையில் பாபா முன்னிலையில் அனைவரும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என ஏழு முறை குரல் கொடுத்தனர். மெஹரா, பாபாவிற்கு மாலை அணிவிக்க, அவர் ஒவ்வொரு பெண்மணியையும் அரவணைத்த அவ்வேளையில், இசைத்தட்டில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஒலித்துக் கொண்டிருந்தது! காலை உணவு மேஜையில், மணி, அன்பர்களிடமிருந்து அடையப்பெற்ற வாழ்த்துகள், தொலைத்தந்திகள், கடிதங்கள் மற்றும் அட்டைகள் அனைத்தையும் வாசித்தார். இந்த நிகழ்ச்சிக்காக நாஜா பிரத்யேகமாகத் தயார் செய்த இனிப்பு பதார்த்தத்தை (ரவா) பாபா அனைவருக்கும் பரிமாறினார்.

பணிக்கார சிறுவர்கள் மண்டலி மண்டபத்தையும் சுற்றுப்புறங்களையும் அலங்கரித்தனர், பாபா ஆண் மண்டலியிடம் வந்து, ஒவ்வொருவரையும் தழுவினார். ஃபிரான்சிஸ் அவர் எழுதிய பிறந்தநாள் கவிதையையும், பாவ் கல்சூரி அவருடைய கவிதைகளில் ஒன்றையும் வாசித்தனர். எரச் தொலைத்தந்திகள், வாழ்த்து அட்டைகளை ஆங்கிலத்திலும், பாவ் கல்சூரி இந்தியில் இருந்ததையும் வாசித்தனர். (கடிதப் பரிமாற்றம் தடை செய்யப்பட்டிருந்தாலும், பாபா அவரது பிறந்தநாளை ஒட்டி தொலைத்தந்தி, அல்லது வாழ்த்துச் செய்திகளை அனுப்ப அனுமதித்திருந்தார்.) இவ்வாறு அந்த நாள் முழுவதும் கடந்து, பிறந்தநாள் வாழ்த்துக்கள் அனைத்தையும் படித்து முடிக்க சில நாட்கள் ஆனது.

பிறந்த நாள் வாழ்த்துக்களுக்கு பதிலளிக்கும் விதமாக, பாபா, கீழ்வரும் செய்தியை வழங்கினார்: **"இந்த நாளில் என் அன்பில் எனக்கு நெருக்கமான அனைவருக்கும், என் அன்பான ஆசீர்வாதங்களைத் தெரிவியுங்கள்."**

பிற்காலங்களில், பாபாவின் பிறந்தநாளில் மெஹராஸாத்தில் அவருடன் இருக்கும் வாய்ப்பை அடையப்பெற்ற எவரும் இருந்தால், அந்த நாளில் பிற இடங்களில் கொண்டாட்டங்கள் நடப்பது போல் இங்கு எதுவும் இல்லாமல், முற்றிலும் எளிமையாக இருந்த சூழல் அவர்களை வெகுவாகத் தாக்கியது. பாபா அவர்களிடம் கூறியதாவது: **"எனது மகிமையைக் கண்டுகளிக்க, ஹமிர்பூர் அல்லது ஆந்திராவிற்குச் செல்லுங்கள்; அங்கே நீங்கள் அதைக் காண்பீர்கள்!"**

சில சமயங்களில், பாபா தமது பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள, சில நபர்களை ஹமிர்பூர் அல்லது ஆந்திராவிற்கு அனுப்புவது வழக்கம். அங்கு அவர்கள் கண்ட அன்பும் மகிமையும் அவர்களின் வாழ்க்கையில் மிகையான மாற்றத்தைக் கொண்டுவர வழிவகுத்தது. இந்த அவதார

காலகட்டத்தில், ஹமிர்பூர், ஆந்திரா இரண்டு பாகங்களும் முறையே, மதுரா மற்றும் பிருந்தாவனமாக மாறியுள்ளன - கிருஷ்ணரோடு தொடர்புடைய இரண்டு புனித இடங்கள். இனி வரும் காலங்களில், ஹமிர்பூரும், ஆந்திராவும் அவதார் மெஹர் பாபாவின் அன்பை உலகிற்கு நினைவூட்டும்.

1961 மார்ச் 3 அன்று காலை, பாபா, டிஸோட்டோவில் பிங்கர் கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். டாக்டர் டானும், பாதிரியும் 6, 12ஆம் தேதிகளில் மெஹராஸாத்திற்கு வந்தனர், அதைத் தொடர்ந்து, 15ஆம் தேதி ஆதி, ராம்ஜூ இருவரும் அறக்கட்டளையின் வரி நிலையைப் பற்றி விவாதிக்க வந்தனர். அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் தலைவரான குடும்ப சாஸ்திரியும் இந்த நேரத்தில் அஹமதுநகரில் பல்வேறு வருமான வரித்துறை அதிகாரிகளை சந்தித்துப் பேசினார்.

மார்ச் 22 புதன்கிழமை காலை 7:30 மணிக்கு, பாபா, ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத்திலிருந்து மூன்று கார்களில் பூனாவிற்குப் பயணம் செய்தார்: டிஸோட்டோ (DeSOTO), மெஹர்ஜியின் ஷெவர்லே (CHEVROLET) மற்றும் ஆதியின் கார். அந்த ஆண்டு தொடக்கத்தில் குருபிரசாத்தில் ஓர் அமைதியான சூழ்நிலை நிலவியது, ஏனெனில் பார்வையாளர்கள் எவரும் (மெஹர்ஜியைத் தவிர) அங்கு வர அனுமதிக்கப்படவில்லை. அர்னவாஸ், கேட்டி, நரிமன் தாதாச்சாஞ்சி, ஜிம் மிஸ்திரி ஆகியோர் வார இறுதி நாட்களில் தங்க அனுமதிக்கப்பட்டனர் - ஆனால் பாபாவின் அக்கறையின்மையும், அலட்சிய மனப்போக்கும் தொடர்ந்தது.

பாபாவை இன்புறச் செய்வதற்கு பதிலாக, நாம் தனிமனித இன்பத்தை நாடுவதுதான் அவருடைய ஆர்வமின்மைக்குக் காரணம். நம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை அவரது விருப்பத்திற்கு இணங்க நடைமுறைபடுத்தி, அவரை மகிழச்செய்வதன் மூலம் மட்டுமே, அவருடைய ஆர்வமற்ற மனநிலையிலிருந்து அவரைக் காக்க முடியும். பாபாவின் ஏகாந்தவாசத்தின் போது அவரது மௌனம், படிப்படியாக தனிநபர் ஒருவரின் இன்பத்தை மௌனமாக்கியது; மேலும் அவரது விருப்பம், அன்பர்களின் இதயங்களில் அதன் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தியது.

காலம் விவரிப்பது போல், “இந்தக் காலகட்டத்தில், பாபா, அவரது ஏகாந்தவாசத்தில் இடையூறு விளைவிக்கக்கூடாது என்று விதித்த கட்டுப்பாடுகள் அனைத்தும் உண்மையில் கட்டுப்பாடுகள் அல்ல, மாறாக, அவரது விருப்பத்தின் அழகான பிரதிபலிப்பு, அதன் ஒவ்வோர் அம்சத்தையும் நாம் நம் வாழ்வில் உள்வாங்க வேண்டும். அவருடைய விருப்பத்தைப் பின்பற்றி, அவரது ஏகாந்தவாசத்தில் தொந்தரவு செய்யாமல் இருப்பதன் மூலம், அன்பர்கள் அவருடைய ஆர்வமின்மையையும், அதைத் தொடர்ந்து வரும் துன்பத்தைக் குறைக்கவும் உதவியாக இருந்தனர்.”

பாபாவின் கவனத்தை திசை திருப்பும் விதத்தில், ஃபிரான்சிஸ், பெண்டு, மெஹர்தாஸ், விஷ்ணு அனைவரும் அவருடன் பிங்-பாங், சீட்டாட்டம், கேரம்

போன்ற விளையாட்டுகளில் பங்கெடுத்தனர். பிங்-பாங் விளையாட, பாபா உயரமான மர நாற்காலியில் அமர்ந்திருப்பதை விரும்பினார்; நீண்ட நேரம் நின்றுகொண்டிருந்தது, அவரது காயமடைந்த இடுப்பை சோர்வடையச் செய்தது. மாலையில், பெண்மணிகளுடன் முன் வராண்டாவில் அமர்ந்திருப்பதையும், அல்லது வாகனத்தில் உலாவச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டார்.

மார்ச் 26 முதல், மண்டலி, பாபாவை காரில் 40 நிமிட சவாரிக்கு அழைத்துச் செல்லத் தொடங்கினார். அவர் தினமும் காலை 8:00 மணிக்கு ஆண்களுடனும், மாலை 6:30 மணிக்கு பெண் மண்டலியுடனும் சவாரியில் இணைந்தார். பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், பொதுப் பூங்காக்களில் பாபாவை மிகக் குறுகிய தூரம் நடக்க வைத்த வேளையில், எவரேனும் பாபாவை அடையாளம் கண்டுகொண்டால், அவரை சிறிதும் தொந்தரவு செய்யக்கூடாது என்ற எண்ணத்தில், மிகுந்த மரியாதையுடன் ஒதுங்கி நடக்கச் செய்தனர். இவ்வாறு பாபாவின் 'மனநிலை' படிப்படியாக மேம்பட்டது, மேலும் அவரது உடல்நிலை குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் கண்டது. ஸஸூன் மருத்துவமனையின் (SASSOON HOSPITAL) கதிரியக்க நிபுணர் டாக்டர் தீக்ஷித் (RADIOLOGIST DR. DIKSHIT), 1961 ஏப்ரல் தொடக்கத்தில் அவரை பரிசோதனை செய்து, எக்ஸ்ரே எடுத்து, பாபாவின் இரைப்பைக் குழாயின் பேரியம் (BARIUM) உணவுப் பரிசோதனையும் செய்தார்.

குருபிரசாத்தில் பாபாவிற்கு நெருக்கமானவர்களில் பலர் தடைசெய்யப்பட்டிருந்தாலும், ஆதி, ஏப்ரல் 7, 16 தேதிகளிலும், 23ஆம் தேதி அவர் ராம்ஜூவுடனும் அறக்கட்டளை பணி நிமித்தம் அழைக்கப்பட்டார். பாபாவே சில நேரங்களில் தமது கட்டளைகளை மீறுவதுண்டு. உதாரணமாக, பாபா அந்த நேரத்தில் வராண்டாவில் இருக்கக்கூடும் என்பதால், தமது அன்பர்கள் குருபிரசாத்தை கடந்து செல்லும் வேளையில், உள்ளே உற்று நோக்கக்கூடாது என்ற கட்டளையும் அமலில் இருந்தது. அவரது உத்தரவை மீறும் அபாயத்தால், பலர் பந்த் கார்டன் சாலை வழியாக பயணம் செய்வதை முற்றிலும் தவிர்த்தனர்.

ஒரு நாள் மாலையில் சில இளம் சிறுமிகள் உள்ளே நுழைந்து உல்லாசமாக உலாவத் தொடங்கினர். அவர்கள் அத்துமீறி உள்ளே நுழைந்ததைக் கண்டு, எரச் அவர்களைக் கண்டிப்பதற்காக வெளியே வந்து "உங்களுக்கு என்ன வேண்டும்?" என வினவினார்.

"நாங்கள் உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்க விரும்பினோம்," என்று அவர்கள் கூறினர்.

"வாசல் மூடியிருக்கும் வேளையில் உள்ளே நுழையும் நேரமா இது? இங்கே என்ன இருக்கிறது? இது என்ன மிருகக்காட்சிசாலையா?"

சிறுமிகள் பிரதான கட்டிடத்தை நோக்கி, தயக்கமின்றி நடந்து வந்தனர், ஏனெனில், எரச்சின் பின்னால் நின்று, பாபா அவர்களை அருகில் வருமாறு கை சைகையால் அழைத்துக் கொண்டிருந்தார். எரச்சைச் சுட்டிக்காட்டி, பாபா, "**ஆம்**,

**இது ஒரு மிருகக்காட்சிசாலை, இதோ விலங்குகளில் ஒன்று!**" எனக் கூறி, சிறுமிகளை வாழ்த்தினார், பின்னர் அவர்கள் விரைவாக ஓடி மறைந்தனர்.

பாபா, இரக்கமுள்ள தந்தை, இறுதியில் தமது அன்பர்களுக்கு தரிசனம் வழங்க முடிவு செய்தார். 1961 மே மாதத்தில் மணி தனது குடும்பக் கடிதத்தில் எழுதியது போல:

முழு அமைதியை விரும்பிய பாபா, எவரும் தொந்தரவு செய்யக்கூடாது என்ற எண்ணத்தில், முற்றிலும் கண்ணுக்குத் தெரியாத கயிற்றால் தமது அன்பர்களைக் கட்டிப் பிணைத்த அவர், மே முதல் வாரத்தில், தமது ஏகாந்தவாசத்தின் வாசலை ஒரு கீற்றளவு திறந்து, குறுகிய பார்வை ஒன்றை வழங்கும் மனநிலையில் இருப்பதைக் கண்டார்.

முதலில் நுழைவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மஹாராணி ஷாந்தாதேவி, 1961 மே 4 அன்று மாலை 5:00 மணிக்கு, ஒரு மணி நேரம் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். இரண்டு நாட்களுக்குப் பின்னரும் மஹாராணி திரும்பி வர அனுமதி வழங்கப்பட்டது. அது போலவே, குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்ட மெஹர்வான் ஜெஸவாலா மற்றும் இரட்டையர்களான ஸொராப், ருஸ்தம் ஆகியோர் பாபாவை மாயாஜால வித்தைகள் மூலம் மகிழ்வித்தனர்.

அடுத்த நாள், பாபா, இந்தியா முழுவதும் இந்த சுற்றறிக்கையை வெளியிட்டார்:

**அவதார் மெஹர் பாபா, அவரது கடுமையான ஏகாந்தவாசத்தில் முற்றிலும் தடையின்றி இருக்க, தமது அன்பர்கள் தங்களால் இயன்றதைச் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறார். அவரது ஏகாந்தவாசம் தொடரும் என்றும், அவர் பூனா, அஹமதுநகர், அல்லது வேறு எங்கேனும் ஏகாந்தவாசத்தில் இருந்தாலும், அவருக்குப் பிரியமானவர்கள் எந்த இடையூறும் விளைவிக்காமல், தொடர்ந்து உதவ வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். பாபா, பூனா குருபிரசாத் பங்களாவில் ஜூலை 1961 இறுதி வரை தங்க உள்ளார்.**

**அவரைப் பார்க்க வேண்டும் என்ற அவரது அன்பர்களின் இதயங்களில் இருந்த மௌன ஏக்கத்திற்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா, அவரது ஏகாந்தவாச காலகட்டத்தில் ஒருமுறை, 1961 மே 15 முதல் 31ஆம் தேதி வரையிலான இரண்டு வாரங்களில், மாலை 4:30 - 5:30 மணிக்குள் மட்டுமே அவரைப் பார்க்க அனுமதிக்க அன்புடன் இணக்கம் தெரிவித்தார். அன்பர்கள், எந்த ஒரு நாளிலும் குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கும் அதே வேளையில், ஒவ்வொருவரும் பாபாவின் பின்வரும் விருப்பங்களை கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும்:**

**குறிப்பிட்ட பதினைந்து நாட்களில், மாலை 4:30 முதல் 5:30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில், அன்பர்கள் ஒரு நாளில் ஒருமுறை மட்டுமே அவரைப் பார்க்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார். பாபா யார் ஒருவரையும் தனித்தனியாக பார்க்க மாட்டார்.**

**பூனாவிலிருந்து வெகு தொலைவில் வாழும் தமது அன்பர்கள், அதிக அளவில் பணம் செலவு செய்து, நீண்ட, கடினமான பயணத்தை மேற்கொண்டு, 'ஒரு முறை' மட்டுமே, அதுவும் குறுகிய நேரத்திற்காக வருவதை விரும்பவில்லை என்று, பாபா கூறுகிறார். இந்த நேரத்தில் அவரைப் பார்க்க முடியாதவர்கள் கவலைப்பட வேண்டாம், ஏனெனில் அவர் தமது சொந்த வழியில், அவர்களுக்கு இதைவிட சிறந்ததொரு வாய்ப்பை வழங்குவார் என்று பாபா கூறுகிறார்.**

**குருபிரசாத்திற்கு பாபாவை சந்திக்க வரும் அன்பர்கள் அவரது ஏகாந்தவாசத்தில், எந்த இடையூறும் விளையாத வகையில் முழுமையாக உதவ வேண்டும் என்று பாபா விரும்புகிறார்:**

- **எந்த விதமான அன்பளிப்பு, காணிக்கையையும் கொண்டு வரவேண்டாம்;**
- **மாலை அணிவிக்க முற்படக்கூடாது;**
- **அவரை வணங்கக்கூடாது;**
- **அவருடன் நேர்காணலுக்கான விருப்பம் ஆகாது;**
- **ஒருவரின் அல்லது மற்றொருவரின் தனிப்பட்ட பிரச்சினைகளில் அவருடைய ஆலோசனையை நாடாமல் இருக்க வேண்டும்;**
- **ஆன்மீகம் அல்லது வேறு எதையேனும் சம்பந்தப்பட்ட கேள்விகளை எழுப்பவோ, எந்த ஆன்மீக சொற்பொழிவையும் எதிர்பார்க்கவோ கூடாது;**
- **குருபிரசாத்தில் தங்க அனுமதி கோருவது, மீண்டும் வருகை தருவது - இரண்டையும் தவிர்க்க வேண்டும்.**

**மேற்கூறிய அனைத்து விஷயங்களையும் கவனத்தில் கொள்வதன் மூலம் அவரது அன்பர்கள், பாபாவின் ஏகாந்தவாசத்தில் எவ்வித இடையூறும் விளையாமல் பாதுகாப்பாக இருக்க உதவுவார்கள் என்று பாபா கூறுகிறார், மேலும் அவரை தரிசனம் செய்ய முடிவு செய்பவர்கள், பாபாவின் விருப்பங்களைக் கருத்தில்கொண்டு, அவரை மகிழ்விக்கும் முழு உறுதிப்பாட்டுடன் வர வேண்டும்.**

**பூனாவிற்கான இந்த விஜயம், பாபாவின் அன்பில் நெருங்கிய தொடர்புடையவர்களுக்கு மட்டுமே என்றும் பொது மக்களுக்கு அல்ல என்பதும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.**

1961 மே 7 ஞாயிற்றுக்கிழமை, பாபாவின் அக்கறையற்ற தன்மை, அளப்பரிய ஆர்வம் நிறைந்த நாளாக மாறியது; அன்று அவர் 300க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு குருபிரசாத்தில் தரிசனம் வழங்கினார். அவர் தமது அன்பர்களின் இதயங்களில் இறை ஆர்வத்தின் மகத்துவத்தை 'மாலை'யாகப் பின்னிக்கொண்டிருந்த நேரத்தில், அனைத்தையும் சார்ந்திருக்கும் இதயங்களைப் படைத்த அன்பர்களின் குழந்தைகள், பாபாவின் இதயத்தை ஆழமாகத் தொட்டனர். குழந்தைகள் தங்கள் பெற்றோரை முழுமையாகச் சார்ந்திருப்பது,

அவர்கள் குழந்தைகளைப் பேணி, பாதுகாத்து, பராமரிக்கும் பொறுப்புடன் பிணைக்கிறது. இதுபோலவே, எல்லா வழிகளிலும் இறை-மனிதனின் விருப்பத்தை முழுமையாகச் சார்ந்திருக்கும் பெற்றோரின் பொறுப்பு நிறைவேற்றப்படுகிறது.

எனவே, அந்த ஆண்டு பாபா, குழந்தைகளுக்கு தரிசனத்தை முதலில் அனுமதித்து, அவர்களின் மத்தியில் இருந்தபோது, அவரைச் சுற்றியிருந்த அனைத்திலும் அவரது வெளிப்படையான சலிப்பு, வழக்கமான ஆர்வத்தின் மகிழ்ச்சியால் மாற்றப்பட்டது. விழா மாலை 4:30 முதல் 6:00 மணி வரை நடைபெற்றது. பூனா அன்பர்களின் குழந்தைகள் (பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்கள்) அழைக்கப்பட்டனர். சின்னஞ்சிறு குழந்தைகளை கவனிக்க, ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு பெரியவர் அவர்களுடன் இணைய அனுமதிக்கப்பட்டார். எனவே பெரும்பாலும் தாய்மார்கள் மற்றும் ஒரு செவிலித்தாய்க்கு, அவர்களது குழந்தைகளுக்கும் பாபாவிற்கும் இடையே நிலவும் மகிழ்ச்சிகரமான உறவை அனுபவிக்கும் அதிர்ஷ்டம் கிடைத்தது. (வந்தவர்களில் இருவர் ஏறக்குறைய இரண்டு மாதக் குழந்தைகள்.)

மிட்டாய் மற்றும் சாக்லேட்டுகள் பிரசாதமாக வாங்கப்பட்டன, மேலும் ஒவ்வொரு மிட்டாயும் விசில் அடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. விழாவைத் தொடங்கி, பாபா மிட்டாயில் ஒன்றை எடுத்து, விசில் அடித்து எழுப்பிய சத்தம் அனைவரின் கவனத்தையும் அவர் பக்கம் ஈர்த்தது. ஓர் அனாதை சிறுவனை அழைத்து வந்த ஸர்தார் ராஸ்தே (SARDAR RASTE), பாபாவை ஆச்சரியத்துடன் பார்த்தபோது, பாபா கூறினார், "**முதல் பிரசாதம் எல்லோரிலும் பெரிய குழந்தைக்குச் செல்ல வேண்டும்**!" தொடர்ந்து ஆரவாரம் மற்றும் கைதட்டல்களுக்கு மத்தியில், பாபா அந்த மிட்டாயை ராஸ்தேயிடம் கொடுத்து, "**இதை எடுத்து விசில் அடித்து, குழந்தைகளோடு குழந்தையாக இருங்கள்**!" என்று சைகையால் தெரிவித்தார். மிட்டாயைக் கையில் எடுத்து ஸர்தார் சத்தமாக ஊதினார், அங்கிருந்த பிற குழந்தைகளில் ஒருவரும் அவருக்கு இணையாக இல்லை.

பாபாவின் பேத்தி, குல்னாரின் ஒன்பது மாத மகள், மெஹர்னாஸ் (MEHERNAZ), நிகழ்ச்சியில் பங்கெடுத்த இளையவர்களில் ஒருவர்; ஆனால் அவரது சகோதரரின் மகன்களான ஸொராப், ருஸ்தம் இருவரும், கிட்டத்தட்ட பதினாறு வயது இளைஞர்களாக இருந்ததால், அழைக்கப்படவில்லை. ஆனால், நிகழ்ச்சியில் கலந்துகொள்ள, பாபாவின் அனுமதியை அடையப்பெறும் நோக்கத்தில், அவர்கள் ஒரு தாயாகவும், தாயின் குழந்தையாகவும் உடை அணிய முடிவு செய்தனர். புடவை அணிந்து, ஸொராப் தாயாகவும், ருஸ்தம் அவளது அழகான ஆண் குழந்தையாகவும் நடித்தனர். ஸொராப், தாயாக, தனது 'குழந்தையை' முதுகில் சுமந்த வண்ணம் குருபிரசாத் மாளிகையில் நுழைந்து, பாபாவை நோக்கி சென்றாள். ருஸ்தம் தனது கையில் ஒரு பாட்டிலை ஏந்திய வண்ணம், பல நாட்களாக பட்டினியால் வாடும் குழந்தையைப் போல், அதை அவ்வளவு ஆர்வத்துடன் உறிஞ்சிக்கொண்டிருந்தான் (மேலும் ஓலமிட்டு

கதறினான்). அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து சிரித்தனர், ஆனால் ருஸ்தத்தின் பளுவைத் தாங்க முடியாமல் ஸொராப் கீழே சரிந்த அந்தக் காட்சி, நிகழ்ச்சியின் உச்சகட்டமாக இருந்தது. குழந்தை தொங்கிக்கொண்டு இருந்தபோது, ருஸ்தம் உடனடியாக தனது நிலையை மாற்றி ஸொராபின் மடியில் சாய்ந்தான். ஸொராப் அவனுடைய பாட்டிலைக் கொடுத்ததும் குழந்தை அடங்கினான். அங்கிருந்த அனைவரும் அவர்களின் நடிப்பை ரசித்தனர், பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு மிட்டாயை பரிசாக வழங்கினார்.

பாபா 300 குழந்தைகளையும் சந்தித்தார்; சிலரை முத்தமிட்டு, சிலரை வருடிக் கொடுத்து, சிலரை மடியில் வைத்து, அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். இந்த நிகழ்ச்சி முதலில் ஒரு மணி நேரம் நீடிக்கும் என்று திட்டமிடப்பட்டது, ஆனால் அது ஒன்றரை மணி நேரம் தொடர்ந்தது. பாபாவிற்கு மாலை அணிவிப்பதும், அவரை வணங்குவதும் அனுமதிக்கப்படவில்லை, ஆனால் நிகழ்ச்சியின் முடிவில், அனைத்து 300 குழந்தைகளும் "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்று ஒலி எழுப்பிய வேளையில், பாபா எழுந்து நின்று, ஷாந்தாதேவியின் கையைப் பற்றிக்கொண்டு, எந்த மண்டலியின் துணையும் இல்லாமல், அவர் வராண்டாவிலும், வீட்டைச் சுற்றிலும் வேகமாக நடந்து, சிரித்து, ஆரவாரம் செய்து கொண்டிருந்த குழந்தைகளால் சூழப்பட்டார் - அவரும் மகிழ்ச்சி பொங்க, அனைவரின் மத்தியில் ஒரு குழந்தையைப் போல சிரித்தார்.

காலம் இதை இவ்வாறு பதிவு செய்தது: "பல மாதங்களுக்குப் பிறகு, பாபா அன்று மகிழ்ச்சியான மனநிலையில் தோன்றினார். அவரது முகம் தெய்வீக அழகால் பிரகாசித்தது, அவரது புன்னகை மகிழ்ச்சியின் செய்தியைப் பரப்பியது. அவரது தோற்றத்தைப் பார்த்து, அவர் எவ்வளவு மோசமாக அவதிப்பட்டார் என்பதை எவராலும் கற்பனை செய்ய முடியவில்லை; அவருடைய புன்னகையின் திரைக்குப் பின்னால் என்ன இருந்தது என்பதை அவர்களால் பார்க்க முடியவில்லை! அவருடைய தெய்வீக நாடகம் அப்படித்தான் இருந்தது."

மே 10 அன்று, பாபா மீண்டும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார்; அப்போது ருஸ்தம், ஸொராப் இருவரும், அவர்களது பணிக்காரர் நர்யாவுடன் இணைந்து, ஒரு தந்தை தனது மகளுக்குப் பொருத்தமான ஒரு வரனைத் தேடி கண்டுபிடிக்க வேதனைப்படுவதைப் பற்றிய நகைச்சுவையான குறும் நாடகத்தை நிகழ்த்தினர். பாபா அதை மிகவும் ரசித்து, இவ்வாறு குறிப்பிட்டார்:

**உலகம் ஒரு நாடக மேடை. நீங்கள் அழுகிறீர்கள், சிரிக்கிறீர்கள் - மீண்டும் அழவும், சிரிக்கவும் செய்கிறீர்கள். இது ஒரு தமாஷா** (வேடிக்கை நிகழ்ச்சி). **அகக்கண் திறக்கும் தருவாயில், இதை நீங்கள் தெளிவாகக் காண்பீர்கள்.**

**மனம் எப்பொழுதும் ஒருவித பற்றுதலின் பிடியில் உள்ளது. நீங்கள் ஒன்றிலிருந்து உங்களை விடுவித்து, மற்றொன்றுடன் இணைந்திருக்கிறீர்கள். மாயையின் பிடியை நீங்கள் தளர்த்தும்**

**முயற்சியிலேயே அது இறுகிவிடுகிறது. ஒரு நொடியில் அது அவிழ்க்கப்படலாம் அல்லது பல கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் அது தளர்த்தப்படாமல் போகலாம். இந்த மாய தந்திரத்தின் பின்னால் உள்ள தெய்வீகத்தை நீங்கள் கூர்ந்து கவனிக்கும் வரை, மாயாவின் குறும்புத்தனம் தொடரும்.**

ஆதி சீனியர், ராம்ஜூ, மனோகர் - மோனா ஸாக்கரே, திகம்பர் காடேக்கர், கிரிஜா கில்னானி ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை ரசித்தனர்.

ஏற்கனவே அறிவித்ததற்கு இணங்க, குருபிரசாத்தின் நுழைவாயில்கள் மே 15 முதல் மீண்டும் திறக்கப்படும், ஆனால் அதற்கு முன்னர் 1961 மே 14 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:00 மணிக்கு, பாபா உள்ளூர் அன்பர்களையும், ஏற்கனவே பூனாவிற்கு வந்திருந்தவர்களையும் அழைத்தார். சுமார் 50 நெருங்கியவர்கள் தெய்வீக அன்பானவருடன் இரண்டு மணிநேரம் மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

அன்று முதல் முறையாக பாபாவை சந்தித்தவர்களில் ஒருவர் ஹமிர்பூரைச் சேர்ந்த ஷாலிகிராம் ஷர்மா (SHALIGRAM SHARMA, 33). புக்கார் அவரை அறிமுகப்படுத்திய போது பாபா கேட்டார், **“நீங்கள் மிகவும் விரும்புவது என்ன?”**

ஷாலிகிராம் உண்மையாக பதிலளித்தார், “உங்களிடம் சரணடைவது, பாபா.”

பாபா இவ்வாறு அவதானித்தார்:

**அவர் இன்றுதான் என்னை சந்தித்தார், அவராகவே சரணடைய விரும்புகிறார். அதை ஏன் செய்ய வேண்டும்? அதை அடையப்பெற்றால் உலகத்திற்கு நீங்கள் பயனற்றவர் ஆகிவிடுவீர்கள்.**

**என்னிடம் எப்படி சரணடைவது என்று எவருக்கும் தெரியாது. அவர்கள் என்னை நேசிக்கிறார்கள், ஆம், எனக்குக் கீழ்ப்படிகிறார்கள், ஆனால் என்னிடம் முழுமையாக சரணடைவது எப்படி என்று எவருக்கும் தெரியாது. மாறாக, நான் உங்கள் அனைவரிடமும்** (பார்வையாளர்களை சுட்டிக்காட்டி) **சரணடைய வேண்டும். மனம் உங்களை, உங்கள் உடலையும் சந்தேகங்களையும் உணர வைக்கிறது. நீங்கள் ஒரு மனிதனின் உணர்வுடன் இருக்க வேண்டும், ஆனால் ஒரு கல்லைப்போல் ஆக வேண்டும். அப்போதுதான் தூசியாக மாற முடியும். நூறு வருடங்களுக்குப் பின்னர் உங்கள் உடல் இங்கே இருக்காது, ஆனால் மனம் உங்களை விட்டு விலகாது. பற்றுதல்களை விரும்புவதும், உலக விஷயங்களில் உங்களை சிக்க வைப்பதும் மனம். எனது விருப்பத்திற்கு முற்றிலும் சரணடைய, உங்கள் இதயம் தூய்மையாகவும், உங்கள் மனம் எல்லா எண்ணங்களிலிருந்தும் வெறுமையாகவும் இருக்க வேண்டும்.**

பாபா ஒரு தடித்த மரத்துண்டின் உவமையை எடுத்துரைத்தார். **நீங்கள் அதை அடித்தால், அது அதிக ஒலியை உருவாக்காது. ஆனால் நீங்கள் அதில் துளையிட்டால், அது ஒரு மத்தளம் போல மாறும். “அதேபோல்** (ஆன்மீகப்

பாதையில் அனைத்து தடைகளையும் கடக்க), **நீங்கள் எல்லா எண்ணங்களிலிருந்தும் உங்கள் மனதை வெறுமையாக்க வேண்டும்**."

ஷர்மா திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார், "நீங்கள் எனக்கு எதையேனும் வழங்குவதாக இருந்தால், எனக்கு முழு சுயசரணாகதியை வழங்குங்கள். உங்களில் வாழ இடம் கொடுங்கள், அதை ஏற்றுக்கொள்ளும் திறனையும் எனக்குக் கொடுங்கள்."

பாபா அவரது வலது கரத்தை உயர்த்தி, இரண்டு விரல்களை மேல்நோக்கிக் காட்டிய அந்த கணத்தில், வெளியே ஒரு பெரிய மின்னலுடன் கூடிய இடி முழங்கியது. "**கடவுள் உங்கள் குரலுக்கு செவிமடுத்தார்**; **அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது**, **இதுவே அதற்கு ஆதாரம்**!" என்று பாபா கூறினார்.

அன்றைய தினம் அங்கு ஒன்றுதிரண்டவர்களில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டயானா ஸ்னோ (DIANA SNOW) என்ற பெண்மணியும் இருந்தார். 52 வயதான டயானா, 1953 அக்டோபரில் ஃபிரான்சிஸ் பிராபஸோன் மூலமாக பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார், மேலும் அவர் 1956 மற்றும் 1958 ஆண்டுகளில் பாபாவின் ஆஸ்திரேலியா விஜயத்தின்போது அவரை சந்தித்தார். அவர் இங்கிலாந்திற்குச் சென்று, ஆஸ்திரேலியா திரும்பும் வழியில், இந்தியாவில் ஒரு நாள் தங்கவேண்டி இருந்தது; பாபா, பார்வையாளர்களை அனுமதித்த அந்தக் காலகட்டத்தோடு ஒத்துப்போனது. இங்கிலாந்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, டயானா, ஃபிரான்சிஸூக்கு கடிதம் எழுதினார், 'மும்பையில் கப்பலை விட்டு வெளியேறி, அவர் ஒரு நாள் ஃபிரான்சிஸைப் பார்க்க வர பாபா அனுமதிப்பார் என்று நினைக்கிறீர்களா?' என்று கேட்டார். 'பாபாவைப் பார்ப்பதற்கு' என்று அவர் கடிதத்தில் குறிப்பிடவில்லை, உண்மையில் அது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று அவருக்குத் தெரியும் என்பதால், டயானா அதை எதிர்பார்க்கவில்லை.

ஃபிரான்சிஸ், டயானாவின் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார், ஒரு நாள் பாபாவுடன் இருந்தபோது, வேண்டுமென்றே அதைத் தனது சட்டைப் பையிலிருந்து கீழே நழுவ விட்டார். "**அந்தக் கடிதம் யாரிடமிருந்து வந்தது**?" என்று பாபா கேட்க, நடந்ததைக் கூறியதும் பாபா, "அவர் என்ன சொல்கிறார்?" என்று கேட்டார். டயானாவின் கதையை எடுத்துரைத்த போது, பாபா அவரை 14ம் தேதி மாலை 4:00 மணிக்கு ஐந்து நிமிடங்கள் சந்திக்க ஒப்புக்கொண்டார்.

டயானா ஸ்னோ மும்பைக்கு வந்து, நரிமன், அர்னவாஸ், கேட்டி ஆகியோருடன் பூனாவிற்குச் சென்று, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்து சேர்ந்தார். நேப்பியர் ஹோட்டலில் (NAPIER HOTEL) அவருக்காகக் காத்திருந்த ஃபிரான்சிஸ், டயானாவை குருபிரசாத்திற்கு அழைத்துச் சென்றார். மே மாத இறுதி வரை, ஒவ்வொரு மாலையும் ஒரு மணிநேரம் தரிசனம் வழங்கினாலும், பாபா, தமது ஏகாந்தவாசத்தைப் பற்றி அவருக்கு விளக்கினார். "**கடந்த சில மாதங்களில் நான் எவ்வளவு சிரமப்பட்டேன்**, **இன்னும் நான் எப்படித்**

**துன்பங்களுக்கு ஆளாகிறேன் என்று உங்களுக்குத் தெரியாது**," என்று அவர் குறிப்பிட்டார்.

பாபா, அன்று கூடியிருந்த மக்களை சந்தித்த பிரதான அறையில், டயானா சிறிது நேரம் அமர்ந்த பிறகு, மெஹரா, மணி மற்றும் பிற பெண்மணிகளை சந்திக்க உள்ளே அனுப்பப்பட்டார். அன்று இரவை பூனாவில் கழித்த டயானா, மறுநாள் காலை, பாபா தொடர்பிலான பல்வேறு இடங்களைப் பார்வையிட்டு, பின்னர் அவர் மும்பைக்கு ரயிலில் பயணம் செய்து, அங்கிருந்து விமானத்தில் கொழும்பு சென்று, ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் கப்பலில் மீண்டும் பயணம் செய்தார்.

1961 மே 15 திங்கள் மாலை 4:30 மணிக்கு தரிசனம் தொடங்கியது. இந்தியா முழுவதிலுமிருந்து அன்பர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள ஒன்றுதிரண்டனர். புக்காரின் தலைமையில் ஹமிர்பூர் மற்றும் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த அன்பர்கள் பலர் வருகை தந்தனர். மேலும், டாக்டர் தேஷ்முக், பால் நாத்து மற்றும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் கலந்து கொண்டனர். பாபா முன்னிலையில் சில குழந்தைகளின் நடனம் மற்றும் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. மஹாராணி ஷாந்தாதேவி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். ஒரு கட்டத்தில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், சிறிய எரிவாயு விளக்குகளை கொண்டு வர வேண்டியிருந்தது.

பயணம் மற்றும் ஆரோக்கியம் குறித்த வழக்கமான கேள்விகளுக்குப் பிறகு, பாபா இவ்வாறு தெரிவித்தார்: "**நீங்கள் என்னைப் பார்க்க இங்கு வந்துள்ளீர்கள்; ஆனால் உண்மையில் என்னைப் பார்க்கத் துணிந்தவர் யார் என்பதைப் பார்க்க, நான் இங்கே இருக்கிறேன்!**"

அவர் உருது மொழியில் இதயத்திற்கு நெருக்கமான ஈரடிக் கவிதைகளில் ஒன்றை மேற்கோள் காட்டினார், அதில் குருநாதர் தனது பக்தரிடம் கூறுகிறார்: "**எனது மகிமை இங்கிருந்து அங்கு வரை உள்ளது; அதற்கு முடிவே இல்லை. எனவே, எனது மகிமையைக் காண, நீங்கள் எவ்வளவு தூரத்திற்குச் செல்லத்** (தியாகம் செய்யத்) **தயாராக இருக்கிறீர்கள், அதை எந்த அளவுக்கு உங்களால் செய்ய முடியும் என்பதை நான் பார்க்கட்டும்.**"

பாபா இந்த ஈரடிக் கவிதையை விளக்கினார்: "**ஒவ்வொருவரும் எனது மகிமையை அவரவர் திறனுக்கு ஏற்ப - சிறிய அல்லது பெரிய அளவில் உணர முடியும்**.

"**எனது மகிமை எல்லையற்றது, நான் கரையில்லா இறையன்பின் மாபெரும் கடல்; அசுத்தம் அல்லது அமிர்தம் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. யார் வேண்டுமானாலும் என்னிடம் வரலாம், ஆனால் ஒருவர் எவ்வளவு அன்பை அள்ள முடியும் என்பது அவர் கொணரும் கொள்கலனைப் பொறுத்தது. அது ஒரு கோப்பை என்றால், கோப்பை நிரம்ப எடுக்க முடியும். ஒரு வாளி என்றால், வாளியளவு மட்டுமே கிடைக்கும்.**

**ஆனால் நீண்ட காலத்திற்கு ஒரு முறை மட்டுமே, கடலையே விழுங்கக் கூடிய மாபெரும் அன்பின் உண்மை நாயகன் வருகிறார்!"**

மே 16ஆம் தேதி மாலை 4:30 மணிக்கு தன்னார்வ தொண்டர்கள் (ராமகிருஷ்ணன் போன்றவர்கள்) மற்றும் இதுவரை பாபாவை சந்திக்காதவர்கள் மட்டுமே குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். புக்கார், டாக்டர் தேஷ்முக், பால் நாத்து போன்றவர்கள், பாபா அவர்களை உள்ளே அழைக்கும் நம்பிக்கையில் வாயிலுக்கு வெளியே காத்திருந்தனர். தேஷ்முக் கூறினார், "நாம் இங்கு வாயிலுக்கு வெளியே அமர்ந்திருப்பது நல்லது. பாபா, நமக்கு ஒரு பாடம் புகட்ட விரும்புகிறார் - அவர் உடலளவில் இல்லாத நிலையில் அவர் உளதாயிருப்பதை உணர வேண்டும்."

சில நிமிடங்களில் அலோபா, மூவரும் உள்ளே அழைக்கப்படுவதாக செய்தியைக் கொண்டு வந்தார்.

அவர்கள் உள்ளே நுழைந்ததும் பாபா, "**தரிசனம் குறித்த சுற்றறிக்கைக்கு இணங்க, நீங்கள் வெளியில் அமர்ந்திருக்கிறீர்களா?**" என்று கேட்டதும், தேஷ்முக் அவர்களைக் குறித்து மன்றாடினார்; இதன் விளைவாக, பாபா, மூவரும் ஒவ்வொரு மதியமும் குருபிரசாத்திற்கு வர அனுமதித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு, சமீபத்திய சுற்றறிக்கையைக் குறித்த சில குறிப்புகள் கூறப்பட்டபோது, பாபா மூவரையும் பார்த்து, "**ஒருவருக்கு பதிலாக மூன்று பேர் மகிழ்ச்சியடைவது நல்லது**" என்று சைகையால் தெரிவித்தார் (ஒருவர் என்று கூறுவதன் மூலம் பாபா, அவரையே அர்த்தப்படுத்தினார்.)

பாபாவின் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படியாததால், பால் நாத்து, குற்ற உணர்வுடன், "பாபா, நாளையிலிருந்து நான் வராமலிருக்க அனுமதி கோருகிறேன்" என்று கூறினார்.

அதற்கு பாபா, "**ஏன்? ஒரு முறை அல்லது பத்து முறை திருடினாலும் திருடன் திருடன்தான். எனவே தொடர்ந்து வாருங்கள்**" என்று பதிலளித்தார்.

ஒரு கற்றறிந்த நபருக்கு பாபா அறிவுரை வழங்கினார், "'**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகத்தைப் படியுங்கள். அது உங்கள் புத்திசாலித்தனத்தை சோதித்து, இதயத்தைத் திறக்கும். அது மனம், இதயம் இரண்டிற்கும் உணவாகத் திகழும்.**"

மாலையில் நிகழ்ந்த தினசரி சந்திப்புகள் அன்பர்களுக்காக மட்டும் இருந்தன, பொது நபர்களுக்காக அல்ல; இருந்தாலும் ஒரு பிற்பகல், பாபா, பூனா மேயரை, இரண்டு முன்னாள் மேயர்களுடன் வர அனுமதித்தார். மாயாவைப் பற்றி பாபா அவர்களுக்கு விளக்கியதாவது:

**கடவுள் ஒருவரே நித்தியமாக உளதாயிருக்கிறார், பிற அனைத்தும் மாயை - அது மாயாவின் கைவண்ணத்தில் உருவானது. மாயா என்றால் என்ன? மாயா என்பது அறியாமையின் கொள்கை வடிவம். உண்மையில் இல்லாததை இருப்பது போல மாயா உணரச் செய்கிறது. உண்மையில், ஆண் அல்லது பெண், உயிரினங்கள் அல்லது உயிரற்றவை என்று**

**அழைக்கப்படுபவை எதுவும் இல்லை. மாயாதான் உண்மை அல்லாததை, உண்மையாக இருப்பதாகச் தோன்றச் செய்கிறது.**

**மாயாவின் வெளிப்பாடாக இருக்கும் மனம், எல்லையற்ற பிரிவுகளைக் கற்பனை செய்து, அதனால் எண்ணற்ற கவலைகளின் உலகங்களை உருவாக்குகிறது. மனம் இருக்கும் வரை, அறியாமை நிலைத்திருக்கும். வெற்றுக் கனவாகிய ஆவேசமான சிந்தனை மற்றும் கவலையின் மூலம், மனம் பேரின்பத்தை அடைய முயற்சிப்பது என்ன ஒரு வேடிக்கை! பேரின்பத்தை உணர்வுப்பூர்வமாக அனுபவிக்க மனம் அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பேரின்பத்தை எங்கிருந்தோ கொணர முடியாது. அது எப்பொழுதும், எங்கும் நிலைகொண்டிருப்பது.**

1961 மே 17 அன்று ஸரோஷ் குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தார். அன்று பாபாவின் தரிசனத்திற்காக மும்பையிலிருந்து வந்த டாலி தஸ்தூரிடம் (DOLLY DASTOOR) பாபா கேட்டார், "**ரோஷன்** (டாலியின் சகோதரி) **ஏன் உங்களுடன் வரவில்லை?**" பாபா அப்போது நினைவுகூர்ந்து, "**அவர் கர்ப்பிணியாக இருக்கிறார் தானே?**" என்று அப்பாவித்தனமாகக் கேட்டார். டாலி அதற்கு 'ஆம்' என்றார். அன்று மும்பைக்குத் திரும்பிச் சென்ற அவர், அன்றைய தினம் அதிகாலையில் ரோஷனுக்கு மெஹர்னாஸ் என்ற பெண் குழந்தை பிறந்ததை அறிந்தார்.

பத்து நாட்களுக்குப் பிறகு, ரோஷன் குழந்தையுடன் பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். "**குழந்தையை பத்திரமாக மூடி வைத்துள்ளீர்களா**" என வினவி, "**இல்லையேல் சளி பிடிக்கும்**" என்று எச்சரித்தார்.

பாபாவின் நிபந்தனைகளின்படி, அவரை தரிசனம் செய்ய வருபவர்கள் ஒரு மணி நேரத்தில் ஒருமுறை மட்டுமே தரிசனம் செய்ய முடியும். பாபா, தமது சுற்றறிக்கையில் இதைக் குறிப்பிட்டு, விரைவில் அவருடனான சகவாசத்திற்கான சிறந்ததொரு வாய்ப்பு வழங்கப்படும் என அறிவுறுத்தியிருந்த போதிலும், பலர் நீண்ட தூரம் பயணம் செய்து வந்தனர். இப்படி, தொலைதூரத்திலிருந்து ஒரு குழு குருபிரசாத்திற்கு வந்தபோது, பாபா இதைப் பற்றி குறிப்பிட்டு வினவினார், "**நீங்கள் சுற்றறிக்கையை சரியாகப் படிக்கவில்லையா? அதில் குறிப்பிடப்பட்டுள்ள மிகச் சிறந்த வாய்ப்பைப் பற்றி நீங்கள் கவனத்தில் கொள்ளவில்லையா?**"

குழுவில் இருந்த ஒருவர் பதிலளித்தார், "உங்களை கடவுள் என்று நாங்கள் முழுவதுமாக நம்புகிறோம், ஆனால் உங்கள் வாக்குறுதிகளில் அவ்வளவாக இல்லை! எனவே, இதுபோன்ற வாய்ப்பை இழப்பதை நாங்கள் கனவில் கூட நினைத்துப்பார்க்க முடியவில்லை, ஆதலால், நாங்கள் இங்கே இருக்கிறோம்."

பாபா சிரித்துக்கொண்டே, "**நான் கடவுள் என்பதில் மட்டுமல்ல, எனது வார்த்தைகளின் மீதும் நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன், ஆனால் நீங்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் அல்ல**" என்று குறிப்பிட்டார்.

ஒரு நாள் மதிய வேளையில் நாக்பூரிலிருந்து, வெள்ளை தொழுநோய் (LEUKODERMA) என்று அழைக்கப்படும் தோல் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு மருத்துவர், பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். அவர் ஐந்து நிமிட தனிப்பட்ட நேர்காணலைக் கோரினார். பாபா அவரிடம், **“நீங்கள் ‘வாழ்க்கைச் சுற்றறிக்கை’யைப் படிக்கவில்லையா? என்னைக் கடவுளாக ஏற்றுக்கொண்டு இங்கு வந்துள்ளீர்கள். நான் கடவுள், எனக்கு எல்லாம் தெரியும். அப்படியானால், என்னிடம் எதையும் சொல்வதால் என்ன பயன்? எனக்கு எதுவும் தெரியாத பட்சத்தில், என்னிடம் தெரிவிப்பதில் என்ன நன்மை கிடைக்கும்? தொழுநோய் மனதை பாதிப்பது மிக மோசமான துன்பத்தை விளைவிக்கும்! நீங்கள் எனக்கு மிகவும் நன்றாகத் தோன்றுகிறீர்கள். நான் உங்கள் உள் அழகை மட்டுமே பார்க்கிறேன். எனக்கு எல்லாம் தெரியும், அதனால் கவலைப்பட வேண்டாம்”** என்று கூறினார்.

கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங் அருகில் வந்தபோது, பாபா அவரை தமது நாற்காலியின் அருகில் அமருமாறு கூறினார். பிற்பகலில், பாபாவின் டெல்லி வருகையின் போது, அவருடைய தெய்வீகத்தன்மை பற்றி நிரஞ்சனின் மனைவி, கல்லூரி மாணவர்களுக்கு வழங்கிய இதயத்தை நெகிழச் செய்யும் பேச்சை பாபா குறிப்பிட்டார். நிரஞ்சன் பக்கம் திரும்பி, **“உங்கள் மனைவி உங்களை நேசிப்பதை விட, என் மீது அதிக அன்பு வைத்துள்ளார்”** என்று கேலி செய்தார்.

நிரஞ்சன் ஸிங் ‘ஆமாம்’ என்று தலையசைத்து, “பாபா, அது உங்கள் டெல்லி விஜயத்தின் போது. இப்போது நான் மும்பையில் இருக்கிறேன். மும்பைக்கு விஜயம் செய்வீர்களா?” என்று கேட்டார்.

அதற்கு பாபா பதிலளித்தார், “ஆமாம், அடுத்த வருடம் - ஒருவேளை பிப்ரவரியில் இருக்கலாம். ஆனால் நான் வாக்குறுதிகளை வழங்கும் விதம் உங்களுக்குத் தெரியும்! அதுவரை நீங்கள் மும்பையில் இருப்பீர்களா?”

ஒரு செல்வாக்கு மிக்க மனிதர், பூனாவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் தெற்கு பிரிவின் மருத்துவ சேவைகளின் துணை இயக்குநர், மேஜர் ஜெனரல் பி.என். பண்டாரி (MAJOR GENERAL B.N. BHANDARI, 55), அந்த ஆண்டு பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார். அவர் ஒரு சில மைல்கள் தொலைவில் வசிப்பதால், அவர் ஒரு நாள் மதியம், மருத்துவராக இருந்த தனது மனைவி கமலாவுடன் வந்தார். அவர்களின் முதல் சந்திப்பு, அவர்களில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. ‘அவரது தெய்வீகத் தன்மைலிருந்து அன்பின் நீரூற்று நிரம்பி வழிவதை உணர்ந்ததாக’ அவர்கள் கூறினர்.

கமலா பண்டாரி, பாபாவை அணுகியபோது, **”எப்படி இருக்கிறீர்கள்?”** என்று கேட்டார்.

“நன்றி பாபா, நான் நன்றாக இருக்கிறேன்,” என்று அவர் பதிலளித்தார்.

**“நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?”**

“ஆம், பாபா.”

**“உங்களுக்கு என்ன வேண்டும்?”**

“நான் கடவுளைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.”

**“உங்கள் நோக்கம் நிறைவேறும்.”**

பாபாவின் உறுதிமொழி அந்தத் தம்பதியரை நெருக்கத்தில் கொண்டு வரவே, அவர்கள் அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.

கில்னானி குடும்பத்தினரும் ஒரு நாள் மாலை பாபாவைப் பார்க்க வந்தனர்.

ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், இமயமலையில் அமைந்த பத்ரி நாராயண், புனித ஸ்தலத்திற்கு (BADRI NARAYAN, A SACRED HINDU SHRINE IN THE HIMALAYAS) யாத்திரை சென்றிருந்தார். பாபாவிடம் அவரது பயணத்தைப் பற்றி அவர் கூறிய வேளையில், **"என்னை அங்கே பார்த்தீர்களா?"** என்று பாபா கேட்டார். அந்த மனிதர் அமைதியாக இருந்தார்.

அப்போது பாபா கூறினார்:

**வேடிக்கை என்னவெனில், நான் உங்களுடன், உங்கள் அனைவருள்ளும் இருந்தாலும், நீங்கள் என்னைத் தேடி வெகுதூரம் பயணிக்கிறீர்கள். நான் எல்லையற்ற ஏக இறைவன், எல்லையற்ற அளவுக்கு எல்லோருக்கும் அருகாமையில் இருக்கிறேன், ஆனால் இந்த எல்லையற்ற நெருக்கம் காரணமாக, என்னைக் கண்டுகொள்வது உங்களுக்கு எல்லையற்ற கடினமாகிறது. நீங்கள் இந்த உலகை ஒன்றுமில்லாததாக, மதிப்பற்றதாகப் பார்க்கும் வரை, நீங்கள் என்னைப் பார்க்க முடியாது. எனது தெய்வீகத்தின் ஒரு குறுகிய காட்சியை நீங்கள் ஒருமுறை பார்க்க நேர்ந்தால், என்னை, எனது உண்மை ரூபத்தில் காணும் எல்லையற்ற ஏக்கம் உருவாகும். இந்தத் தீவிர ஏக்கத்தின் காரணமாக, நீங்கள் ஆன்மீக ரீதியில் உங்களை அறியாமலேயே உள்ளளவில் ‘வர்ணம் பூசப்படுகிறீர்கள்’.**

கபீரின் இந்த வரிகளை பாபா இந்தி மொழியில் மேற்கோள் காட்டினார்:

**ஒருவர் மிக மிக மெதுவாகப் பூசப்படுகிறார் ஆன்மீக வர்ணம்;**
**மனம் முற்றிலும் மறைய மிக மிக நீண்ட நேரம் பிடிக்கும்;**
**காலங்காலமாக அறியாமையில் உறங்கும் மனிதன்**
**மிகவும் மெதுவாகவே விழித்துக் கொள்கிறான்.**

**ஆன்மீகப் பாதையில், சூட்சும உலகின் வெவ்வேறு நிலைகளில், ஆன்மீக ஆர்வலர்கள் இனிமையான இசை, இனிய வாசனை, கவர்ச்சி மிக்க ஒளியின் அசாதாரணமான மற்றும் அற்புதமான அனுபவங்களை அடையப் பெறுகிறார். ஆழ் மன உலகில், கடவுளை நேருக்கு நேர் பார்ப்பது என்பது, அதன் தொடக்கத்தையும் உச்சத்தையும் கொண்டுள்ளது. போதுமான பொறுமையுடன் தன் இதயத்தைத் திறந்து வைத்திருக்கும் அரிய நபர் ஒருவர், நான் பார்க்கப்பட வேண்டிய விதத்தில் என்னைப் பார்க்கிறார்; ஆனால் இந்தப் ‘பார்வை’ கூட இறுதி இலக்கு அல்ல. நீங்கள் நானாக மாற வேண்டும்.**

**எல்லையில்லா ஆர்வத்திலும் பொறுமையிலும் திளைத்த காலம் உருண்டோடுகிறது; தக்க தருணத்தில், ஆன்மீக ஆர்வலர் ஒருவர் 'நான்' எனும் தனிமனித விழிப்புணர்வை இழக்கத் தொடங்குகிறார். விழிப்புற்ற நிலையிலும், ஆறாவது ஆன்மீக உணர்வு தளங்களில் காணக்கூடிய அனைத்தையும், அவர் உண்மையில் வெறுமையாகக் காண்கிறார், இதனால் எல்லையில்லா வெற்றிடத்தை** (VACUUM STATE) **அல்லது எதிலும் 'ஒன்றுமில்லா'** (NOTHING) **தன்மையின் 'இருட்டடிப்பு'** (BLACKOUT) **எனும் நிலையை அனுபவிக்கிறார். அதன் பின்னர், ஒரே நொடியில், அவர் கடவுளை எல்லாமுமான முழுநிறை உண்மைப்பொருளாக உணர்ந்து கொள்கிறார்.**

**'ஒன்றுமில்லா' உணர்வு நிலை, வெற்றிட நிலை. எல்லாம் நிறைந்த உணர்வு நிலை, இறைநிலை. ஆனால் அதற்கு என் அருள் வேண்டும்.**

பக்தர்களில் ஒருவர் குறுக்கிட்டு, "எனவே, பாபா, நாங்கள் உங்கள் அருளை நாடுகிறோம்" என்று கெஞ்சினார்.

அதற்கு பதிலளித்த பாபா, இவ்வாறு விளக்கினார்:

**ஒருவர் அதை நாடுவதாலோ அல்லது கேட்பதாலோ அடையப் பெறுவதில்லை. அதற்காக உங்கள் உயிரையே துறக்கக் கூட நீங்கள் தயாராக இருக்கலாம், ஆனால் இவற்றின் மூலம் நீங்கள் இறை அருளை உரிமை கோர முடியாது. அருளை அடையப்பெற வேண்டும் என்ற ஆசையே அதற்குத் தடையாக இருக்கும்போது, நீங்கள் இறை அருளை எப்படி உரிமை கோர முடியும்? இது அளவிறுதியற்ற தன்னிச்சையான செயல்.**

**இருப்பினும், ஒரு வகையில், என் அருள் இல்லாமல் நீங்கள் என்னை நேசிக்க முடியாது, மேலும் உங்களின் அனைத்து 'அனுபவங்களும்' எனது கருணையின் விளையாட்டைத் தவிர வேறொன்றுமில்லை.**

**ஆனால் கருணை (அருள்) என்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்று. இது பாகங்களாகப் பெறப்படுவதில்லை. இது எல்லையற்ற முறையில் பிரிக்கவும், விவரிக்கவும் முடியாதது. இது முழு நிறை ஏக இறைவனின் 'திடீர் ஆர்வத்தால்'** (தற்போக்கெண்ணம் - WHIM) **வெளியளவில் வரையறுக்கப்பட்டதாகத் தோன்றும் தனிநபர் ஒருவருக்கு வழங்கப்படுவது. வரையறுக்கப்பட்ட தனிநபர் எனும் ஒரு துளி, இறைப்பெருங்கடலை முழுவதுமாக விழுங்குவதோடு ஒப்பிடலாம்!**

பாபா அப்போது சைகையால் தெரிவித்தார், **"இப்போதைக்கு இந்தப் பாடம் போதுமானது. அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது. என்னிடமிருந்து எந்த சொற்பொழிவையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்படவில்லையா? எனவே இப்போது சில பாடல்களை ரசிப்போம்."**

இசை நிகழ்ச்சி தொடங்கியது.

அடுத்த நாள் பக்தர்கள் மண்டபத்தில் தத்தமது இருக்கையில் அமர்ந்தபோது, பாபா அவர்களிடம் கேட்டார், **"இன்று என்ன நிகழ்ச்சியை திட்டமிட்டுள்ளீர்கள்?"**

புதிதாக வருகை தந்த குழுவின் சார்பாக ஒருவர், “உங்கள் விருப்பம் போல, பாபா” என்று பதிலளித்தார்.

அதற்கு பாபா, **“இது எனது விருப்பத்தைக் குறித்த கேள்வியல்ல. உங்கள் விருப்பத்தைக் குறித்து நான் உங்களிடம் கேட்கிறேன்”** என்று பதிலளித்தார்.

“மேலும் பல நாட்கள் குருபிரசாத்திற்கு எங்களை அனுமதித்தால், நாங்கள் அந்த முழுக் காலத்திற்கும் பூனாவில் தங்கலாம்.”

**“சுற்றறிக்கையைப் படித்தீர்களா?”**

“ஆம், பாபா.”

**“அதன்படி, நீங்கள் எந்தத் தனிப்பட்ட அல்லது ஆன்மீகப் பிரச்சினைக்கும் என்னிடம் ஆலோசனை கேட்கக் கூடாது. நீங்கள் என்னிடமிருந்து எந்த சொற்பொழிவையும் எதிர்பார்க்கக் கூடாது. மேலும் குருபிரசாத்திற்கு மீண்டும் விஜயம் செய்ய அனுமதி கோரக் கூடாது.”**

“நாங்கள் அனுமதி கோரவில்லை, ஆனால் நாங்கள் உங்களிடம் கோரிக்கை வைக்கிறோம், பாபா?”

**“அப்போது, நீங்கள் இங்கே என்ன செய்வீர்கள்?”**

“வெறுமனே மண்டபத்தில் அமர்ந்திருப்போம்.”

**“சரி,”** என்று கூறி பாபா, இவ்வாறு பதிலளித்தார்: **“பூனாவில் இருங்கள், ஆனால் உங்கள் பணி அல்லது குடும்பப் பொறுப்புகள் எதுவும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மேலும், குருபிரசாத்தில் செய்யவேண்டியது எதுவும் இல்லை என்றால், நாம் வெறுமனே அமர்ந்திருப்போம் அல்லது தூங்கி விழுவோம்!”**

1961 மே 24 புதன்கிழமை அன்று, ஆந்திரா, மும்பை மற்றும் பிற குழுக்கள் வந்தபோது, தரிசனத்திற்காக ஒரு பெரிய கூட்டம் ஒன்றுதிரண்டது. பாபா தமது முந்தைய சுற்றறிக்கையில், தொலைதூர இடங்களிலிருந்து வரும் அன்பர்களை அதற்காக ஊக்குவிக்காதபோதும், ஆந்திராவிலிருந்து வருகை தந்தவர்கள், ஒரு மணிநேரத்திற்காக மட்டுமே இவ்வளவு தூரம் பயணம் செய்தது குறித்து அவரது ஆச்சரியத்தையும் கவலையையும் தெரிவித்தார். ஆந்திரா குழுவில் பல புதிய நபர்களும் இருந்தனர்.

**“நெருங்கிய அன்பர்கள் மட்டும் வரவேண்டும் என்ற சுற்றறிக்கையை நீங்கள் படிக்கவில்லையா? இந்தப் புதியவர்களையெல்லாம் அழைத்து வந்திருக்கிறீர்கள்?”** என்று கூறி, டாக்டர் தனபதி ராவை பாபா ‘கடிந்து’ கொண்டார்.

உடனே தனபதி ராவ், “இதற்கு முன்னர் அவர்கள் உங்களைப் பார்க்கவில்லை என்றாலும், பாபா, அவர்கள் உங்கள் மீதான அன்பில் புதியவர்கள் அல்ல; மேலும் நான் அவர்களை அழைத்து வரவில்லை, அவர்களே வருவதில் உறுதியாக இருந்தனர்.”

பாபா புன்னகைத்து, அவருடைய பதிலில் மகிழ்ச்சியடைந்து, "**நீங்கள் வந்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; உங்களை என்னிடம் ஈர்த்தது நானேதான்**" என்று உறுதிப்பட எடுத்துரைத்தார்.

தனபதியிடம் பாபா தொடர்ந்து கூறினார், "**எனக்கு வயதானவர்களையும் குழந்தைகளையும் பிடிக்கும்!**" தனபதி தலையைக் குனிந்து கண்களை மூடிய வண்ணம் இருந்தபோது, பாபா, "**ஆனால் நீங்கள் வயதானவரும் அல்ல, குழந்தையும் அல்ல. உங்கள் சுத்தமான சவரம் உங்களை இளமையாகக் காட்டுகிறது!**" என்று கேலி செய்தார்.

பாஸ்கர ராஜு வந்ததும், "**ஏன் இப்படி நாளுக்கு நாள் வலுவிழந்து போகிறீர்கள்?**" என்று பாபா கேட்டார். பாஸ்கரா பதிலளிக்காதபோது பாபா, "**என்னை நேசிப்பதாலா?**" என்று கேட்டார். அவர் 'ஆமாம்' எனத் தலையசைத்தார். பாபா அவரை மீண்டும் அணைத்துக் கொண்டார்; பாபாவின் மடியில் பாஸ்கரா கதறி அழுதார். பாபா அவரைத் தன் அருகில் அமர வைத்து, வேடிக்கையாகத் தலையை அவரது பாதத்தில் விழும்படித் தள்ளினார்.

சிர்லே (CHIRLE) கிராமத்திலிருந்து (PANVEL, பன்வெல் அருகே) ஒரு பேருந்தில் நூறு பேர் தங்கள் கிராமத் தலைவர் ராம்ராவ் எஸ். பாட்டீலின் (RAMRAO S. PATIL) வழிகாட்டுதலின் கீழ் வந்தனர். மொத்த கிராமமும் வந்திருந்தது. வீட்டில் கால்நடைகளை கட்டி வைத்துவிட்டு, இரண்டு நாட்களுக்கு தேவையான தீவனம் மற்றும் தண்ணீரை விட்டு சென்றுள்ளனர். கிராமவாசிகள் பெரும்பாலும் மீனவர்கள், பாபா அவர்களின் எளிய பக்தியால் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பார்வையாளர்கள் பாபாவிடமிருந்து ஆன்மீக சொற்பொழிவு எதையும் எதிர்பார்க்கக் கூடாது, தனிப்பட்ட பிரச்சினைகளை அவர் முன் வைக்கக்கூடாது என்பதாலும், குழுத் தலைவர்கள், அந்த ஆண்டு பாபாவின் பிறந்த நாள் தங்கள் பகுதிகளில் எவ்வாறு கொண்டாடப்பட்டது என்று பாபாவிடம் விவரித்தனர்.

விஜயவாடாவில் நடந்த பிறந்தநாள் நிகழ்ச்சிகள் - வீதிகளில் பாபாவின் சித்திரத்துடன் கூடிய பிரமாண்டமான அணிவகுப்பு, இசை நிகழ்ச்சிகள், ஏழைகளுக்கு உணவளித்தல் போன்ற அறிக்கைக்கு செவிமடுத்த பாபா, மஜேட்டி ராமமோகன ராவ், சிந்தா சர்வராவ், மாணிக்யால ராவ் ஆகியோரைப் பார்த்து வினவினார்: "**என் அன்பில் நீங்கள் மூவரும் பைத்தியமாகிவிட்டீர்களா? உங்கள் பணிகள் மற்றும் தொழில்களில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டாமா?**"

குருபிரசாத்தில் இந்த மாலை நிகழ்ச்சிகளின் போது, மதுசூதன் பஜனை நிகழ்ச்சிகளை நடத்தினார், மேலும், பெரும்பாலும் திட்டமிடப்பட்ட ஒரு மணி நேர கூட்டம் இரண்டு மணிநேரம் அல்லது அதற்கு மேலும் நீட்டிக்கப்பட்டது.



குருபிரசாத் - குழந்தைகளின் நிகழ்ச்சி (CHILDREN'S PLAY AT GURUPRASAD)



(கீழே) - ஸொராப், பாபாவாகவும், ருஸ்தம், எரச் வேடத்திலும் நடிக்கும் காட்சி (SOHRAB & RUSTOM AS BABA & ERUCH RESPECTIVELY)





பூனாவைச் சேர்ந்த ஷங்கர் ராவ் ஷோலாபுரே (SHANKAR RAO SHOLAPURE) என்ற பாடகர் சில சமயங்களில் கஸல்கள் பாடுவதை வழக்கமாகக் கொண்டார். ஒரு நாள் மதிய வேளையில் அவர் உருது மொழியில் பாபா விரும்பிய ஒரு கஸலைப் பாடினார். அதன் பொருளைச் சுருக்கமாக, பாபா விளக்கினார்: **"அன்பன் கூறுகிறான்: 'பிரியமானவரே, எனது மனநிலைகளும், திடீர் விருப்பங்களும் உங்கள் மனநிலை மற்றும் விருப்பங்களைப் பொறுத்தது, நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால், நான் மகிழ்ச்சியடைகிறேன், நீங்கள் முகமலர்ச்சியுடன் இருந்தால், நானும் அவ்வாறே இருக்கிறேன்."**

தம் முன்னால் கூடியிருந்த அன்பர்களைப் பார்த்து, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், **"என்னை உங்கள் பிரியமான கடவுளாக எடுத்துக்கொள்கிறீர்கள். இப்போது, உடனடியாக மண்டபத்தை விட்டு வெளியேறி, அவரவர் இல்லத்திற்குத் திரும்புங்கள் என்று நான் கேட்பதானால், நீங்கள் மகிழ்ச்சியாக உணர்வீர்களா? உங்கள் பதிலில் நேர்மையாக இருங்கள். நீங்கள் என்ன உணர்கிறீர்கள் என்பதில் அல்ல."**

கூட்டத்தில் பலர், "இல்லை, பாபா. உண்மையாகச் சொல்வதானால், இந்த மண்டபத்தை விட்டு வெளியேறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைய மாட்டோம்" என்று பதிலளிக்கும் அளவுக்கு நேர்மையாக இருந்தனர்.

பாபா தொடர்ந்து கூறினார், **"'நேசிப்பது மிகவும் கடினம்' என்று கூறப்படுகிறது, ஏன்? அன்பு என்பது அரிதாகவே அடையப்படும் ஒரு பரிசு, அத்தகைய அன்பை அடையப் பெறுபவர் மட்டுமே அன்பானவருக்கு முழு மனதுடனும், இயல்பாகவும் கீழ்ப்படிய முடியும்."**

'நாங்கள் வெளியேறத் தயாராக இல்லை' என்று கூறியவர்களிடம், பாபா கேலி செய்தார், **"சரி, அமர்ந்தே இருங்கள். உங்களை மகிழ்வுறச் செய்ய உங்கள் பிரியமான கடவுளும் இங்கே அமர்ந்திருப்பார்!"**

கஸல் குறித்த விளக்கத்தைத் தொடர்ந்த பாபா, **"இந்த வரிகளில், அன்பன் கூறுகிறான்: 'ஓ அன்பிற்குரியவரே, எனது வாழ்க்கையை நான் எப்படிக் கழிக்கிறேன் என்று என்னிடம் எதுவும் கேட்காதீர்கள். அது அமைதியின்மையில் மூழ்கியுள்ளது. உங்கள் அன்பில் நான் எரிந்துகொண்டே, ஒவ்வொரு நொடியும், பிரிவின் நெருப்பை உள்ளளவில் கொழுந்துவிட்டு எரிய விடுகிறேன்'."**

இறுதியில், **"யார் ஒருவனுடைய இதயத்தில் அன்பின் சுடர் இறை அருளின் பரிசாகப் பற்றி எரிகிறதோ, அவனே 'உள்ளளவில் கொழுந்துவிட்டு எரியும்' நிலையை அனுபவிக்க முடியும்!"** என்று கூறி முடித்தார்.

பூனா பஜனை குழுவினர், இதுகாறும் அறியப்பட்ட ஏழு அவதார புருஷர்கள், மனித குலத்திற்கு அருளிய முக்கிய செய்தியைச் சித்தரிக்கும் விதத்தில், நாடகம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நாடகம் 1961 மே 27 சனிக்கிழமையன்று பாபாவின் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டது. நடிகர்கள் அனைவரும் ஐந்து முதல் பதினாறு வயதுக்குட்பட்ட மைய உறுப்பினர்களின்

குழந்தைகள். இறுதிக் காட்சியில், ஸொராப், பாபாவாக, எரச்சின் (ருஸ்தத்தின்) கையில் சாய்ந்தபடி நடந்தார்.

பாபா தரிசனம் மற்றும் பிரசாதம் வழங்குவது போன்ற வழக்கமான காட்சியில் இரட்டையர்கள் (ஸொராப் - ருஸ்தம்) பாபா முன்னிலையில் நடிப்பதைக் கண்டு, பார்வையாளர்கள் கைகளைத் தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். குறிப்பாக ஸொராபின் பொய் மீசை கீழே விழவே, மனதார சிரித்த பாபா, தனது கண்களிலிருந்து கண்ணீரைத் துடைக்க வேண்டியிருந்தது - இறுதியில், பாபா, "**நான் ஆதிகாலத்தவன்**!" என்று சைகையால் தெரிவித்தபோது, பார்வையாளர்கள் அனைவரும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று தொடர்ந்து கோஷமிட்டது, குருபிரசாத் மாளிகையை அதிரச் செய்தது.

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராம் கிண்டே (DR. RAM GINDE) பலமுறை குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க வந்தார்; கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், பாபா அவரைத் தடைசெய்யவில்லை. டாக்டர் கிண்டே, பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டார், மும்பையில் அவரது பணியில் அவருக்கு ஓய்வு நேரமே இல்லை என்றாலும், அவரால் இயன்ற வரை, பாபாவைப் பார்க்க விரைந்தோடி வந்தார். பாபா அவர் மீது அளப்பரிய அன்பை வெளிப்படுத்தினார். உண்மையில், டாக்டர் கிண்டேயை தமது அரவணைப்பில் கொண்டு வருவதற்காகவே பாபா அக்கி (ஹெர்பெஸ் - HERPES) எனும் நுண்கிருமியால் ஏற்படும் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டார் என்று தோன்றியது.

சில நாட்கள், பாபா தமது அன்பர்களை மண்டபத்தை ஒட்டிய பிரதான அறையில் சந்தித்தார். ஒரு நாள் ஸவக் கொத்வால் அறைக்குள் நுழைந்தபோது, அவரது பல் ஒன்று அகற்றப்பட்டிருப்பதை கவனித்த பாபா, "**ஸவக், இப்போது நீங்கள் வயதானவர் போலத் தோன்றுகிறீர்கள்**!" என்று கிண்டல் செய்தார்.

தொடர்ந்து ஒவ்வோர் அன்பருக்கும் தரிசனத்திற்கான வாய்ப்பை வழங்கிய பின்பு பாபா கேட்டார், "**அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்? சொற்பொழிவு இல்லை, தனிப்பட்ட பேச்சுக்கள் எதுவும் இல்லை**."

அன்று இசைக் குழுவினர் எவரும் வரவில்லை, எனவே நேரத்தைக் கழிக்கும் எண்ணத்தில் பாபா, இவ்வாறு குறிப்பிட்டார், "**பாட விரும்பும் ஆனால் ஒருபோதும் வாய்ப்பு கிடைக்காத ஒவ்வொருவருக்கும் இன்று நேரம் வழங்கப்படுகிறது**." அங்கிருந்தவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்த அந்த கணத்தில், பதற்றத்தைப் போக்கும் விதத்தில் ஒருவர் உரத்த குரலில் பாடத் தொடங்கினார்.

புக்கார், சூர்தாஸின் பாடல்களில் ஒன்றான, 'ஓ ஆண்டவரே, எனது பலவீனங்களைக் கண்டுகொள்ள வேண்டாம் என்று பிரார்த்தனை செய்கிறேன்!' என்று பாடியதும், பாபா கேலி செய்தார், "**புக்கார், உங்கள் உடல் மிகப் பெரிது, ஆனால் குரலோ வலிமையற்றது**!"

சங்கராச்சாரியாரின் சமஸ்கிருதப் பாடலை தேஷ்முக் பாடினார்; தொடர்ந்து இந்தி மொழியில் இந்தக் குறுகிய அணிவகுப்புப் பாடலையும் பாடி மகிழ்ந்தார்: "மத்தளம் கொட்டுங்கள், மத்தளம் கொட்டுங்கள்! மெஹர் என்று பாடுங்கள், மெஹர் என்று பாடுங்கள்!"

ஒருமுறை, தேஷ்முக் அந்த வரிகளைப் பாடியதைக் கேட்டதும், பாபா விளக்கினார்: "**இதயம் தூய்மையாகவும், மனம் முற்றிலும் வெறுமையாகவும் இருந்தால் மட்டுமே, தெய்வீக இசையை வழங்கும் ஆயத்தத்தில், மத்தளம் அல்லது புல்லாங்குழல் போல வெற்றிடத்துடன் இருக்க முடியும்.**"

பால் நாத்து, சத்குரு துக்காராமின் ஈரடிப் பாடலைப் பாடினார். அதைத் தொடர்ந்து கே.எம். மதன், ஒரு வயதான பார்சி (பாம்வாலா - BALMWALA, என்ற புனைப்பெயர்) பாபாவை மகிழ்விக்க முன்வந்தார். அவர் பாபாவைப் பற்றிய கவிதையின் சில வரிகளைப் படிக்க முயன்ற வேளையில், பாபாவின் பார்வையில் மூழ்கி, அவர் அதை சரியாக முடிக்க முடியாமல் தடுமாறினார். "**ஒருவேளை உங்கள் மூக்குக் கண்ணாடியை மறந்துவிட்டீர்களா?**" என்று பாபா கேலி செய்தார்.

அதைத் தொடர்ந்து, மதுசூதனனின் இசையமைப்பில் ஒன்றை மதன் பாட முயற்சித்து, கண்களை மூடிக்கொண்டு பாடியபோது உடல் நடுங்கத் தொடங்கியது. இறுதியில் அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்யவே, பாபா கூறினார், "**அவர் என்ன தைரியத்தை வெளிப்படுத்தினார் என்று பாருங்கள்! நான் தற்போது குருபிரசாத்தில் தங்கியிருக்கும் காலத்தில், இதற்கு முன்பு நான் இவ்வளவு வேடிக்கையான மனநிலையில் மகிழ்ச்சியாக இருந்ததில்லை!**"

மனு ஜெஸவாலாவும் துக்காராமின் குறுங் கவிதைகளில் ஒன்றைப் பாடியபோது, பாபா மிகவும் கருத்தூன்றிய நிலையில் இருந்து, "**ஒருவர் பரிபூரண குருநாதரிடம் முழுமையாகச் சரணடைய வேண்டும் என்று துக்காராம் விரும்புகிறார். ஆனால் அவ்வாறு என்னிடம் சரணடையும் ஒருவரை நான் அரிதாகவே காண்கிறேன்**" என்று கூறினார்.

வேறொரு தருணத்தில், குருநாதரிடம் சரணடைவதன் இன்றியமையா தேவையை வலியுறுத்தும் பாடல் ஒன்று, இந்தி மொழியில் பாடப்பட்டது. பாபா இவ்வாறு குறிப்பிட்டு வினவினார், "**இந்தப் பாடலில், அன்பன் ஒருவன், பிரியமான குருநாதரிடம் சரணடைவதற்கான தனது தீவிர விருப்பத்தை வெளிப்படுத்துகிறான். உண்மையான சரணாகதி என்றால் என்ன என்று நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா?**"

பாபா விளக்கினார்: "**நீங்கள் தூசியாக மாறும் வரை, கடவுளை உணர முடியாது. அதற்கு நீங்கள் முதலில் கல்லாக வேண்டும், ஏனெனில், உடனடியாக ஒருவர் மண்ணாக முடியாது. அதற்கான தேவை என்னவெனில், மனித உணர்வைத் தக்க வைத்துக் கொள்ளும் அதே வேளையில், கல்லாக மாறுவது, பின்பு கல்லாகிய நீங்கள், தேய்ந்து தேய்ந்து மண்ணாக மாறி, பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசியாக வேண்டும்.**"

ஆந்திராவைச் சேர்ந்த அன்பர் ஒருவரிடம் குறும்புத்தனமாகக் கிண்டல் செய்யும் விதத்தில், பாபா, "**என்னிடம் சரணடையும் அளவுக்கு உங்களிடம் தைரியம் உள்ளதா?**" என்று கேட்டார்.

"ஆம், பாபா, நீங்கள் விரும்பினால்" என்று பதில் வந்தது.

"**ஆனால் உங்கள் மனைவிக்கு என்னாவது? அவர் உங்கள் கழுத்தைப் பற்றிப் பிடிக்க மாட்டார்களா?**"

"இல்லை, ஒருபோதும் இல்லை, பாபா."

புன்னகையுடன் பாபா, "**அப்படியானால், ஒருவேளை அவர் என் கழுத்தைப் பற்றிப் பிடிக்கலாம், அப்போது நான் உங்களிடம் சரணடைவது போலாகிவிடும்!**" என்று கூறி முடித்தார்.

மண்டபம் சிரிப்பொலியால் அதிர்ந்தது, பாபாவும் மகிழ்ச்சியடைந்தார். அன்றைய நிகழ்ச்சி பாபாவின் ஆரத்தியுடன் நிறைவுற்றது.

1961 மே மாத இறுதி இரண்டு வாரங்களில், 29 வயதான ஆன் மார்கரெட் கான்லன் (ANN MARGARET CONLON) என்ற அமெரிக்க பத்திரிகையாளர் குருபிரசாத்தில் எந்த நாளிலும் எதிர்பார்க்கப்பட்டார். பாபாவின் உறவினர்களான ஸொராப், ருஸ்தம் இருவரும் ஆன் பற்றிய விவாதங்களுக்கு செவிமடுத்துக் கொண்டிருந்தவர்கள், மே 26 அன்று, ஸொராப்பை ஓர் இளம் பெண்ணாக மாறுவேடமிட்டு, வாடகைக் கார் ஒன்றில் குருபிரசாத்திற்கு அழைத்துச் சென்றனர். நியூயார்க் நகரில் நிகழ்ந்த பாபாவின் பிறந்தநாள் விழாவில் பங்கெடுத்த ஆன் கான்லனின் புகைப்படங்கள் மணிக்கு அனுப்பப்பட்டன; எனவே எரச், மெஹர்ஜி இருவரும் ஒரு தடித்த 'பெண்மணி' வருவதைக் கண்டதும், அவர்கள் ஆன் கான்லன் என்று கருதி வரவழைக்கச் சென்றனர்.

ஸொராப் மிகவும் நன்றாக ஒப்பனை அலங்காரம் செய்திருந்ததால், பாபாவைத் தவிர வேறு ஒருவரும் அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியாத பட்சத்தில், அவர்களை ஏமாற்ற முடிந்தது. அவர் மெஹராவை சந்திக்கவும் அழைத்துச் செல்லப்பட்டார்; ஆனால் பாபா, மெஹராவிடம் '**ஆன் என அழைக்கப்பட்ட அமெரிக்க பெண்மணியைத் தழுவ வேண்டாம்**' என்று அறிவுறுத்தியிருந்தார். எல்லாம் சிறப்பான வேடிக்கையாக இருந்தது, ஸொராப் அனைவரையும் ஏமாற்றிவிட்டதில் பாபா மகிழ்ச்சியடைந்தார்.

ஆன் கான்லன், 1956ஆம் ஆண்டில், ஜின்னி க்ளூர் (GINNY GLOOR), அவரது சகோதரி லிஸ் ஸக்காலிஸ் (LIZ SACALIS) ஆகியோர் மூலமாக பாபாவைப் பற்றி முதன்முதலில் அறிந்துகொண்டார்; லிஸ் ஸக்காலிஸ், வடக்கு நியூயார்க்கில் ஆன் பணிபுரிந்த அதே செய்தித்தாள் நிறுவனத்தில் பணியாற்றினார். ஜின்னி, லிஸ் இருவரும் இரண்டு வாரங்களுக்கு முன்பு, நியூயார்க், டெல்மோனிக்கோ ஹோட்டலில் (DELMONICO HOTEL, NEW YORK) ஹென்றி கஷௌட்டியுடன் (HENRY KASHOUTY), பாபாவை சந்தித்தனர். மெஹர் பாபாவே கிறிஸ்து என்ற விபரத்தை ஆனிடம் கூறியபோது, அவருடைய உடனடியான எதிர்வினை இவ்வாறு இருந்தது: "என்னுள் அனைத்தும் இப்போதுதான் தலைகீழாக மாறியது. நான்

உடனடியாக அவரை ஏற்றுக்கொண்டேன். அது நிச்சயமாக சரியாக இருந்தாக வேண்டும். அவர் வேறு எவராகவும் இருக்க முடியாது.”

அந்த அனுபவம் இருந்தபோதிலும், 1958 மே மாதத்தில் மர்டில் பீச் மையத்தில் மெஹர் பாபாவை சந்திக்க ஆன் கான்லன் செல்லவில்லை, ஏனெனில் சகவாசத்திற்காக அழைக்கப்பட்டவர்கள், மெஹர் பாபாவிடம் முழுமையான அன்பு மற்றும் கீழ்ப்படிதலைக் கொண்டிருக்க வேண்டும் என்ற முன்நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்யவில்லை என்பதை உணர்ந்தார். இருப்பினும், முந்தைய இரவு, பாபா, மர்டில் மையத்தில் இருந்த வேளையில், ஆன், 800 மைல் தொலைவில் அவரது இல்லத்தில் தூங்கிக் கொண்டிருந்தவர், திடீரென அதிகாலை 4:00 மணிக்கு எழுந்தபோது ஓர் ஆவியின் தோற்றத்தைக் கண்டு, அச்சத்தில் அவரது படுக்கையின் அருகில் மெஹர் பாபா நிற்பதைக் காண நேர்ந்தது.

பாபா நீல நிற கோட் அணிந்து, முந்தைய ஆண்டுகளில் இருந்ததைப் போலவே தோற்றினார்; ஒரு கையை இடுப்பிலும், மறு கையை படுக்கைக் கம்பத்திலும் வைத்துக்கொண்டு ஆனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் எழுந்து அமர்ந்து தரையில் கால்களை வைத்த அந்த கணம், அவர் விழித்திருப்பதை அறிந்ததும், பாபாவின் தெய்வீக உருவம் மறைந்தது. பாபாவைப் பார்க்கச் சென்ற லிஸ், ஜின்னி இருவரும் திரும்பி வந்ததும், ஆன் தனது அனுபவத்தை எடுத்துரைத்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு, லிஸ், ஆனை மர்டில் பீச் மையத்திற்கு காரில் அழைத்துச் சென்றார், அங்கு அவர் எலிஸபெத், கிட்டி இருவரையும் சந்தித்து, மெஹர் பாபாவின் ‘அன்பின் சூழலில்’ நெருக்கமாக ஈர்க்கப்பட்டார்.

மர்டில் பீச் மெஹர் மையத்தில், ஒரு நாள் லகூன் கேபினில் இருந்த வேளையில், பாபா அந்த நேரத்தில் இந்தியாவில் இருந்தபோதிலும், திடீரென பாபாவிடமிருந்து அன்பின் அலை ஒன்று வீசி, அவர் வழியாகச் ஒரு வட்ட வடிவில் திரும்பி, பாபாவைச் சென்றடைந்ததாக ஆன் உணர்ந்தார். இதில், ‘அன்பர் யார், அன்பிற்குரியவர் யார்’ என்ற கேள்வி அப்போது இல்லை. முதன்முறையாக ஆன், உண்மையில், பாபாவை நேசிப்பதாகக் கூற முடிந்தது - ஆனால் முதலில் பாபா, தமது அன்பின் பரிசை அவருக்குக் கொடுத்ததால், ஆன் அதை பாபாவிடம் திரும்பத் தர முடிந்தது.

அடுத்தடுத்த ஆண்டுகளில், இந்தியாவுடனான கடிதப் போக்குவரத்து பெரும்பாலும் தடைசெய்யப்பட்டிருந்தாலும், கிட்டி (KITTY), பெரில் வில்லியம்ஸ் (BERYL WILLIAMS) ஆகியோர் மணி மற்றும் மெஹராவிற்கு எழுத அனுமதிக்கப்பட்டனர்; மேலும் ஆன் கான்லன், பாபாவை சந்திக்க விரும்புவதை எப்பொழுதும் தங்கள் கடிதங்களில் குறிப்பிடத் தவறியதில்லை. ‘ஆன், அவரை சந்திக்க எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார் என்பதை பாபா உணர்ந்து, தன் அன்பை அவருக்கு அனுப்புகிறார்’ என்று பதில்கள் வருவது வழக்கமாக இருந்தது.

இதுகாறும் ஆன் அவரை சந்திக்காதபோதிலும், பாபாவை சந்தித்த யார் ஒருவரும், சகிக்க முடியாத நிலையை அடைவது போல், ஆன் உணரும் வரை வாழ்க்கை அப்படியே கடந்து சென்றது. பின்னர் 1961 மே மாதம் வெளிவந்த குடும்பக் கடிதத்தில் (FAMILY LETTER) மெஹர் பாபாவின் ஏகாந்தவாசத்தில் அனுமதிக்கப்பட்ட இரண்டு வார கால தளர்வு மற்றும் தரிசன நிகழ்ச்சி பற்றி தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மணியின் கடிதம் அமெரிக்கா வந்தடைந்த அந்த நேரத்தில், ஏற்கனவே ஒரு வாரம் கடந்துவிட்டது. ஆன் முதலில் இதை எண்ணி திகைப்பில் ஆழ்ந்து மிகுந்த சஞ்சலத்திற்குள்ளானார். இதுவே தனக்குக் கிடைத்த ஒரே வாய்ப்பு என்பதை ஆன் உறுதியாக நம்பினார். அவரிடம் பயணம் மேற்கொள்ள போதுமான பணமும் இல்லை, ஆனால் லிஸ், ஜின்னி இருவரும் ஆனின் பயணத்திற்கான பணத்தை, கடனாக அல்ல, அன்பளிப்பாக வழங்குவதன் மூலம் அவருக்கு உதவ முன்வந்தனர். அடுத்த நாள் காலை, ஆன் தனது விமானப் பயணச்சீட்டை பதிவு செய்தார்.

அதிக பணம் செலவு செய்து, தொலைதூரத்தில் வாழும் அன்பர்கள் வருவதை தான் விரும்பவில்லை என்று பாபா, மே 5 சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். எனவே, ஆன் புறப்படுவதற்கு முன்பு, பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தியை அனுப்பினார்: “எந்த தூரமும் மிக அதிகமாக இல்லை, மிக அதிக செலவும் இல்லை,” அவர் இந்தியா வந்து சேரும் தேதியையும் நேரத்தையும் குறிப்பிட்டிருந்தார். ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் கூட இந்தியா செல்ல முடிவு செய்திருந்தார், ஆனால், ஆன் எவருக்காகவும் காத்திருக்கவில்லை, மே 27 அன்று இந்தியாவிற்கு விமானத்தில் பயணம் செய்தார். ஆன் மகிழ்ச்சியில், தனது நண்பர்களிடமிருந்து விமான நிலையத்தில் விடைபெற்றுச் சென்றார். இறுதியாக ஆன் அன்பான இறை-மனிதரை சந்திக்க இருந்தார்.

பூனா, நேப்பியர் ஹோட்டலிலிருந்து (NAPIER HOTEL) மணியை தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு ஆன் அறிவுறுத்தப்பட்டிருந்தார். 1961 மே 27 சனிக்கிழமை அன்று ஆன் தொலைபேசியில் அழைத்தபோது, எரச் பதிலளித்தார், “பாபா உங்களை ஹோட்டலில் தங்கி ஓய்வெடுக்குமாறு கூறுகிறார். பிற்பகல் 3:00 முதல் 3:30 மணிக்குள் உங்களை அழைத்துச் செல்ல ஒருவர் வருவார்” என்று கூறினார். மூன்று மணிக்கு மெஹர்ஜி, ஆனை குருபிரசாத்திற்கு அழைத்து வந்தார். ஆன் காரிலிருந்து இறங்கிய அவ்வேளையில், முன் கதவுகள் திறந்திருந்தன, பிரதான அறையின் பின்புறம் பாபா அமர்ந்திருந்தார். பாபா ஏறக்குறைய 75 அடி தூரத்தில் அமர்ந்திருந்தாலும் ஆன், பாபாவின் கண்களைப் பார்க்க முடிந்தது. அப்போது அவர் திடீரெனப் பார்த்தது பாபாவின் கண்களை மட்டுமே! ஆன் பின்னர் இவ்வாறு கூறினார்:

பாபாவின் கண்கள் அந்த அறையை நிரப்பின. அவர் கண்களின் பின்புறத்திலிருந்து ஒளி, தண்டுபோல் ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருந்தது. அவர் கண்களைத் தாழ்த்தினால், நான் அந்த வெளிச்சத்தில் மூழ்கிவிடுவேன் என்று நினைத்தேன். பின்னர் எல்லாமே இயல்பு நிலைக்குத் திரும்பியது.

நான் மெஹர்ஜியைக் கடந்து, படிகளில் ஓடிச் சென்றேன், நான் மண்டபத்திற்குள் நுழைந்தபோது, மர்டில் பீச் மையத்தில் உணர்ந்த அதே அன்பின் அலையை மீண்டும் உணர்ந்தேன், அது, நான் நடந்து சென்ற தடத்தில் என்னை நிறுத்தியது, எனது முழங்கால்கள் நடுங்கத் தொடங்கின. பாபா என்னைப் பார்த்து சிரித்து, "**வாருங்கள்**!" என்று கைகளை நீட்டினார்.

நான் ஓடிச் சென்று அவர் கைகளில் கண்ணீர் சிந்த அழுதேன். எனது வாழ்நாளில் எனக்கு ஓர் இல்லம் இருப்பதாக நான் உணர்ந்தது அதுவே முதல் முறை. எனது வாழ்க்கையில் நான் ஒருபோதும் இதுபோல முற்றிலும் பாதுகாப்பாக, மிகவும் நேசிக்கப்பட்டதாக உணர்ந்ததில்லை. எனது சிறு குழந்தைப் பருவத்திலிருந்து என்னை நானே வளர்த்தேன், எல்லாவற்றையும் நானே செய்தேன் என்று நான் எப்பொழுதும் நினைத்தேன்; ஆனால் அந்த நேரத்தில், அது எல்லா காலத்திலும் அவரே என்பதை நான் இப்போது உணர்ந்தேன் - தாயும், தந்தையுமானவர், எல்லாம் அவரே. வேறு எதையும் எங்கும் தேடவேண்டியதில்லை. நான் அனைத்தையும் கண்டுகொண்டேன்.

ஆன், பாபாவின் அரவணைப்பிலிருந்து பின்னால் நகர்ந்தபோது, பாபாவும் கண் கலங்குவதைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்தார். ஒரு கணம் ஆன் அங்கேயே நின்று அவரைப் பார்த்தபோது, பாபா தலையசைத்து, "**நீங்கள் ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா**?" என்று கேட்டார்.

"இல்லை, பாபா," ஆன் முணுமுணுத்துக்கொண்டே தனக்குள்ளே நினைத்தார்: 'பாபா, நான் தெரிந்து கொள்ள விரும்பும் எதையும், என்னிடம் கூறுவார், நான் கேட்க வேண்டியதில்லை.'

மெஹரா, மணி மற்றும் பிற பெண்மணிகள், பாபாவுடனான ஆனின் சந்திப்பை, கதவுகளின் கவிகை அடுக்குகள் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். பாபா அவர்களை அழைத்து அறிமுகம் செய்தார். அடுத்த பதினைந்து நிமிடங்களுக்கு, பாபா, ஆனிடம் அவரது உடல்நிலை, அவர் நன்றாகத் தூங்கினாரா போன்ற கேள்விகளைக் கேட்டார். பின்னர் ஆனை தமது காலடியில் அமரக் கூறி, "**குடும்பக் கடிதத்தைப்** (FAMILY LETTER) **படித்தீர்களா**?" என வினவினார்.

ஆன் நினைத்தார்: "அட, அவர் என்னை வெளியே தூக்கி எறிந்து, நான் அவரிடம் வந்திருக்கக்கூடாது என்று சொல்லப் போகிறார். ஆனால் அதைக் குறித்து எனக்குக் கவலையில்லை. நான் விரும்பியதெல்லாம் பாபாவின் கண்களைப் பார்க்க வேண்டும் என்பதுதான், நான் அதைச் செய்துவிட்டேன்."

"ஆம், பாபா, நான் அதைப் படித்தேன்" என்று ஆன் பதிலளித்தார்.

"**அதில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது**?"

"மக்கள் அதிக தூரம் கடந்து அல்லது அதிக செலவு செய்து வரக்கூடாது என்று அது கூறியது."

"**எதுவாயினும் நீங்கள் வந்துவிட்டீர்கள்**?"

"ஆம், பாபா."

“**பரவாயில்லை. கடிதம் வந்திருந்தாலும், நீங்கள் வந்ததில் மிக்க மகிழ்ச்சி. இன்று மதியம் இங்கிருந்து புறப்பட்டு என்ன செய்யப் போகிறீர்கள்?**”

ஆன் கூறினார், “இன்று மும்பையிலிருந்து நள்ளிரவு 1:00 மணிக்கு ‘ஏர் இந்தியா’ விமானத்தில் புறப்படத் திட்டமிட்டிருந்தேன், ஆனால் அது சாத்தியம் இல்லாதது போலத் தோன்றுகிறது. போதுமான நேரம் இல்லை. ஆனால் நான் முயற்சி செய்கிறேன்.”

“**இல்லை, இல்லை, உங்களால் முடியாது**” என்று பாபா சைகையால் தெரிவித்தார். “**அப்படியானால் என்ன செய்வீர்கள்? அடுத்த ஐந்து நாட்களுக்கு வேறு விமானமும் இல்லை. சுற்றிப் பார்க்கவும் வழியில்லை!**”

“இல்லை, பாபா. நான் ஹோட்டலில் விமானத்திற்காகக் காத்திருப்பேன் என்று நினைக்கிறேன்.”

பாபா கூறினார், “**இல்லை, இல்லை, ஐந்து நாட்கள் தினமும் இங்கு வந்து விமானம் செல்லும் வரை என்னுடன் அமருங்கள். உங்கள் அலுவலகத்தில் பிரச்சினை எதுவும் இருக்குமா?**”

ஆன் தனது காதுகளை நம்பவில்லை, “பாபா, நான் சில நாட்கள் இங்குத் தங்குவது சிறப்பாக இருக்கும் என்று அவர்கள் பரிந்துரைத்தனர், அவர்களுக்கு நான் இப்போது தெரியப்படுத்த வேண்டும்.”

“**சரி, அதை உறுதி செய்து கொள்ளுங்கள்**” என்று பாபா பதிலளித்தார்.

கேஷவ் நேனேயின் மகள் சந்தியா, அன்று மதியம் பாபா முன்னிலையில் நடனமாடினாள். அதில் ஒன்று, கோபி ஒருவர் கிருஷ்ணன் மீதான அளப்பரிய அன்பில் மூழ்கியிருந்த வாழ்க்கையை சித்தரித்தது. உரையாடலின் போது மீராவின் பாடல்கள் பற்றி குறிப்பிடப்பட்டது. பாபா, ஆனிடம் “**உங்களுக்கு ஸெயின்ட் மீராவின் கதை தெரியுமா?**” என்று கேட்டதற்கு அவர் இல்லை என்று பதிலளித்தார், மீராவின் வாழ்க்கையிலிருந்து சில சம்பவங்களை எடுத்துரைக்க பாபா, எரச்சிடம் சைகையால் தெரிவித்தார்.

தொடர்ந்து பாபா குறிப்பிட்டார்: “**கிருஷ்ணர், மனித உருவில் அவதார புருஷராக வருகை தந்த வேளையில், மீரா பிறக்கவில்லை. இருந்தும், கிருஷ்ணர் மீதான அவரது அன்பு, கோபியர்களை விட மிகையானது. இந்த அர்த்தத்தில் அவருடைய அன்பு தனித்துவமானது, ஈடு இணையற்றது. இயேசு கிறிஸ்துவின் மீதான, அஸிஸியின் ஸெயின்ட் ஃபிரான்சிஸின் அன்பைக் குறித்தும் இதையே கூறலாம். அவர் இயேசுவை உடல்ரீதியாகப் பார்க்கவில்லை, ஆனால் கிறிஸ்துவின் மீதான அவரது அன்பு, பாறை போன்ற பீட்டரை விட அதிகமானது. ஃபிரான்சிஸ் இயேசுவை ஒருபோதும் சந்திக்கவில்லை என்றாலும், அவருடைய ஏக்கமும் அன்பும் மிகவும் அதிகமாக இருந்தது.**”

பாபா, ஆன் கான்லனைப் பார்த்து மிகவும் தீவிரமாக எடுத்துரைத்தார், “**மீரா தனது கணவரைப் புண்படுத்துவதைக் குறித்து கவலையடையவில்லை. அவருடைய ஒரே கவலை தன் இறைவனைப் புண்படுத்துவதைப் பற்றி**

**மட்டுமே இருந்தது. அவர் தனக்கும், பிரியமான கிருஷ்ணனுக்கும் இடையில் எவரையும் அல்லது எதையும் அனுமதித்ததே இல்லை.**"

பாபா கடைசி வாக்கியத்தை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார்; அதில், தனக்கு ஒரு செய்தி இருப்பதாக ஆன் உணர்ந்தார். பாபா, ஆனிடம், "**எனது புத்தகங்களில் எதையேனும் படித்திருக்கிறீர்களா?**" என்று கேட்டார்.

ஆன் படித்ததாகக் கூறி, சிலவற்றைக் குறிப்பிட்டார். "'**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?**" பாபா வினவினார்.

வெட்கமடைந்த ஆன் கூறினார், "நான் முயற்சித்தேன், பாபா. நான் 64 பக்கங்கள் படித்தேன், ஆனால் அதில் ஒரு வார்த்தையும் புரியவில்லை."

பாபா சிரித்தார், "**பரவாயில்லை, மறந்துவிடுங்கள். அது முக்கியமில்லை**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாபாவின் இறைத்தன்மையை புகழ்ந்து பாடிய சில பாடல்களுக்குப் பிறகு, குழுத் தலைவர்களால் தனித்தனியாக பாபாவிற்கு புதிய நபர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். ஒரு கட்டத்தில், ஆன், பாபாவின் காலடியில் அமர்ந்து அசௌகரியமாக உணர்வதைக் கண்டு, அவர், "**நீங்கள் அவ்வாறு அமர்ந்து பழக்கமானவர் அல்ல**" என்று சைகையால் தெரிவித்து, சுவர் அருகில் ஒரு நாற்காலியில் அமரச் செய்தார். ரானோவை ஆன் அருகில் அமர அழைத்தார்.

தரிசன நிகழ்ச்சி முழுவதும், ஆன், பாபாவைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார். பலமுறை பாபா திடீரெனத் திரும்பி, "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**" ஆன், பாபாவின் தோற்றத்தில் மிகவும் தொலைந்து போனதால், ரானோ முழங்கையால் அவரை அழுத்தி, "அவருக்கு பதில் சொல்லுங்கள்" என்று முணுமுணுக்க வேண்டியிருந்தது. நாள் முழுவதும், பாபாவின் அதீத ஆற்றல்மிக்க பிரசன்னத்தில் ஆன் சோர்வாகத் தோன்றினார்.

அடுத்த நாள், 1961 மே 28 ஞாயிற்றுக்கிழமை, நியூயார்க் நகரின் ஃபிரெட் வின்டர்ஃபெல்ட் மதியம் 12:30 மணிக்கு வந்தவர், பாபாவைத் தனியாக சந்தித்தார். பாபாவை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தில் இருந்த போதிலும், அவரது மனைவி எல்லா (ELLA) தனது இல்லத்தில் இருப்பது நல்லது என்று நினைத்தார். பாபா மீதான அவரது அன்பைப் பற்றி அவர் ஃபிரெட்டிடம் இவ்வாறு கூறினார்: "**நீங்கள் இங்கே என்னுடன் இருக்கிறீர்கள், ஆனால் நான் அங்கே எல்லாவுடன் இருக்கிறேன்.**" மேலும், "**நீங்கள் என்னுடன் இருப்பது முக்கியமல்ல. நான் உங்களுடன் இருப்பதுதான் முக்கியம். எனவே என்னை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

பாபா, ஃப்ரெட்டிடம், "**ஆன் எப்படி இங்கு வர முடிந்தது?**" என்று கேட்டதும், ஃப்ரெட் அவரிடம் லிஸ், ஜின்னி இருவரும் ஆனுக்கு உதவியதைக் குறிப்பிட்ட அந்த கணத்தில் பாபாவின் கண்களில் மீண்டும் கண்ணீர் வழிந்தது. "**பாபா மீதும், தோழர் மீதும் அவர்கள் வெளிப்படுத்திய அன்பு என்னைத் தொட்டது**" என்று கூறினார்.

அதே நாளில் ஆன், பாபாவைப் பார்த்தபோது, பாபா கூறினார், **“உங்களால் எப்படி வர முடிந்தது என்று ஃப்ரெட் என்னிடம் கூறினார். அனைவரும் உங்களுக்கு உதவினர்.”**

“ஆம், பாபா, அது உண்மைதான்” என்று ஆன் பதிலளித்தார்.

**“நான் உங்களுக்கு உதவியதால் அனைவரும் உங்களுக்கு உதவினர்”** என்று பாபா கூறினார். **“நீங்கள் வர வேண்டும் என்று நான் விரும்பினேன்.”**

லிஸ், ஜின்னி இருவருக்கும் தொலைத்தந்தி ஒன்று அனுப்பப்பட்டதாக பாபா கூறினார். ஆன், அதைப் படிக்க ஒரு பிரதியைக் கொண்டு வருமாறு பாபா, எரச்சிடம் கேட்டுக்கொண்டார். அது, ஆன் எழுதியதாக அவர் பெயரில் அனுப்பப்பட்டது: **“உங்கள் உதவியால் நான் பாபாவிடம் வந்ததால், பாபாவை உங்கள் அருகில் நெருக்கமாக வரச் செய்தீர்கள் என்று பாபா கூறுகிறார். பாபா உங்கள் இருவருக்கும் அன்பை அனுப்புகிறார். அன்புடன், ஆன்.”**

**“அவர்கள் அதைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள் என்று நினைக்கிறீர்களா?”** பாபா கேட்டார்.

ஆன் சிரித்துக்கொண்டே, “நிச்சயமாக!” என்றார்.

அவர்கள் இருவரும் ஒன்றிணைந்து நியூயார்க் திரும்ப வேண்டும் என்று பாபா, ஃப்ரெட்டிற்குத் தெரிவித்தார்; எனவே, இருவரும் அதுவரை பூனாவில் தங்கி ஒவ்வொரு நாளும் குருபிரசாத்திற்கு வரலாம்.

ஆனால் அனைத்தையும் விட மிகப் பெரிய ஆச்சரியம் அடுத்த நாள் மாலை 4:30 மணிக்கு காத்திருந்தது. கண்பார்வையற்ற டாக்டர் ஹாரி கென்மோர் (DR. HARRY KENMORE) நீண்ட வரிசையில் தரிசனத்திற்காகக் காத்திருந்ததை அர்னவாஸ் திடீரெனக் காண நேர்ந்தது. அவர் வருவதாக எந்தத் தகவலும் இல்லை. பாபா அவரைக் கண்டதும், **“ஹாரி, இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?”** என வினவினார்.

“நான் எனது பிரியமான தந்தையைப் பார்க்க வந்தேன்!” அவர் திரும்ப அழைத்ததாகக் கூறினார்.

எரச் அவரை பாபாவிடம் அழைத்து வந்ததும், பாபா அவரை ஆரத்தழுவினார், **“உங்கள் அன்பான தந்தை, தனது செல்ல மகனைப் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்”** என்று அன்புடன் குறிப்பிட்டு, ஹாரியை அவர் அருகில் அமர வைத்தார்.

பாபா, கென்மோரிடம், **“ஹாரி, உங்கள் வருகையைப் பற்றி குறைந்தபட்சம் ஹோட்டலிலிருந்து தொலைபேசியில் அழைத்திருக்கலாம். ஒருவேளை நீங்கள் எனக்கு இன்ப அதிர்ச்சி ஒன்றைக் கொடுக்க விரும்பினீர்களா? எவ்வளவு காலம் பூனாவில் தங்குவதாக உத்தேசம்?”**

“மாலை 5:30 மணி வரை,” ஹாரி பதிலளித்தார். மகிழ்ச்சியடைந்த பாபா, மே 31 வரை ஒவ்வொரு மதியமும் குருபிரசாத்தில் பாபாவின் தரிசனத்திற்காக அவரை அனுமதித்தார்.

**“ஹாரி, உங்களை இங்கு வரச் செய்தது எது?”** பாபா அவரிடம் கேட்டார்.

“கடவுள் என்னை ஒரு மணி நேர சகவாசம் எனும் தூண்டிலில் சிக்க வைத்தார்.”

**“என் அனுமதி கோரி எனக்குத் தொலைத்தந்தி அனுப்பியிருந்தால், என்னிடமிருந்து ‘இல்லை’ என்ற பதில் வந்திருக்கும். அதனால், அந்த பதிலைத் தவிர்க்க, நீங்கள் நேரடியாக பூனாவிற்கு வர முடிவு செய்தீர்கள். எப்படியும், நீங்கள் இங்கு வந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்குத் தெரியுமா? ஹாரி, ஒரு மணி நேர சகவாசத்திற்காக நீங்கள் இங்கு வந்ததில் உங்கள் தந்தையார் எவ்வளவு பெருமைப்படுகிறார் தெரியுமா? நீங்கள் ஒரு மகத்தான புத்திரன்!”** பாபா சாக்லேட் பிரசாதத்தை எல்லோருக்கும் கையில் கொடுப்பது போலக் கொடுக்காமல், அதை அவிழ்த்து கென்மோரின் வாயில் திணித்தார்.

அன்றைய தினம் மேற்கத்திய நாட்டிலிருந்து மேலும் இருவருக்கு பாபாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஃபிரான்சிஸ், ஒல்லா கோல்ட்னி (FRANCIS & OLLA GOLDNEY) தம்பதியினர், ஜப்பானில் ஒரு மாநாட்டில் கலந்துகொண்டு, ஃபேரோ தீவுகளில் (FAEROE ISLANDS) அமைந்த தங்கள் இல்லத்திற்குச் சென்று கொண்டிருந்தனர்.

அதே நாளில், புக்கார், பால் நாத்து மற்றும் ஹமிர்பூரைச் சேர்ந்த சிலர், ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியை நடத்தினர்; நௌரங்கா கிராமத்தில் நிறுவப்பட்ட மெஹர் பாபாவின் மனித அளவிலான பளிங்கு சிலையைத் திறக்க அழைப்பு விடுத்ததே இதன் முக்கிய நோக்கம். சுருக்கமாக, ஹமிர்பூர் மாவட்டம் முழுவதும் ஒரு விசித்திரமான ஜுரத்தின் பிடியில் சிக்கிக்கொண்டதாக சித்தரிக்கப்பட்டது. மருத்துவர் ஒருவர், இந்தத் தொற்றுநோயை ‘பாபா-காய்ச்சல்’ என்று கண்டறிந்து, மெஹர் பாபாவிற்குக் கடிதம் எழுதுமாறு பரிந்துரைத்து, அவரை அந்தப் பகுதிக்கு அழைக்குமாறும், இதுவே இந்த நோய்க்கான ‘ஒரே தீர்வு’ என்றும் பரிந்துரைத்தார். மக்கள் உடனே கடிதம் எழுதத் தொடங்குகிறார்கள், ஆனால் அவர்களில் ஒருவர், ஹிராலால் கடுமையாக நோய்வாய்ப்படுகிறார். அவர் இறுதி மூச்சு விட இருந்த அந்த கணத்தில் ‘பாபா நிச்சயமாக ஹமிர்பூர் மாவட்டத்திற்கு வருகிறார்’ என்று தொலைத்தந்தி வந்ததும், இந்த வார்த்தைகள் நோயாளிக்கு சர்வரோக நிவாரணியாக செயல்படவே, அவர் முற்றிலும் குணமடைந்து, நிமிர்ந்து நின்று ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!” என்று மீண்டும் மீண்டும் மொழிந்தார்.

தொலைத்தந்தியின் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்த, ஹிராலால் நேராக பாபாவிடம் சென்றபோது, மண்டபத்தில் பலத்த கரவொலி எழுந்தது. இந்தியாவின் பல்வேறு மையங்களிலிருந்து அன்பர்கள், பாபா, அவர்களின் ஊருக்கு வருகை தர வேண்டும் என்ற தீவிர விருப்பத்தை வெளிப்படுத்தினர். அனைவரின் வேண்டுகோளுக்கும் பாபா பொறுமையாக செவிமடுத்தார். ஒருவர்

கூறினார், "பாபா, நீங்கள் இப்போது ஏகாந்தவாசம் மேற்கொள்கிறீர்கள், ஆனால் தற்போதைய தரிசனம் மற்றும் சகவாச நிகழ்ச்சிகள், ஒருவிதத்தில், உங்கள் ஏகாந்தவாசத்தில் உங்களுக்குத் தடை அல்லது தொந்தரவு விளைவிக்காமல் இருப்பதுபோல, நீங்கள் ஏகாந்தவாசத்தைத் தொடர விரும்பினால், தரிசனப் பயணத்தை ஏற்பாடு செய்ய உங்கள் கருணையால் எங்களை அனுமதிக்க முடியாதா? நீங்கள் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளுக்கும் நாங்கள் கண்டிப்பாகக் கட்டுப்படுவோம்."

தேஷ்முக் எழுந்து நின்று, "பாபா, அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கெஞ்சினார். பின்னர் அவர் நாக்பூர் நகருக்கும் வருமாறு பாபாவிற்கு அழைப்பு விடுத்தார்.

பாபா கூறினார், "**நான் ஒரே ஒரு நிபந்தனையின் கீழ் இந்தப் பயணத்திற்கு இணக்கம் தெரிவிக்கிறேன். முழுப் பயணத்திற்கான செலவுகளையும் தேஷ்முக் ஏற்க தயாராக இருக்க வேண்டும். தேஷ்முக் எனக்கு ஒரு லட்சம் (100,000) ரூபாய் கொடுப்பதானால், நான் நௌரங்காவிற்கு செல்லத் தயாராக இருக்கிறேன்.**"

கோடூரி கிருஷ்ணாராவ் உடனே, "பாபா, தேஷ்முக் தனியாக ஏன் இந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்?" என வினவினார்.

அதற்கு பாபா, "**அதுதான் எனது நிலைப்பாடு!**" என்றார்.

புக்கார், தேஷ்முக்கிடம், "உங்கள் தொப்பிக்கு நாங்கள் ஒரு லட்சம் ரூபாய் வழங்குகிறோம்; ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

தேஷ்முக், "நான் பாபாவை ஏமாற்ற விரும்பவில்லை" என்றார்.

அனைவரும் தேஷ்முக்கைப் பார்த்தார்கள், டாக்டர் மூர்த்தி இவ்வாறு குறிப்பிட்டார், "பாபா, நீங்கள் வங்காளத்திற்கும் வர வேண்டும். நீங்கள் அங்கு வருகை தந்து நீண்ட காலமாகிவிட்டது."

இதனால், பாபா எங்கு தரிசனம் வழங்க வேண்டும் என்ற வாக்குவாதங்கள் தொடர்ந்தன. இறுதியாக பாபா கூறினார், "**நான் ஏற்கனவே இருக்கும் இடத்திற்குச் செல்வது என்பது எனக்கு ஒரு பெரிய பிரச்சினை. நான் ஏற்கனவே அங்கு இல்லாதிருந்தால், நீங்கள் அனைவரும் எங்கிருந்தாலும் செல்வேன். நான் எல்லா இடங்களிலும் எப்போதும் இருக்கிறேன்; அதனால், தரிசனப் பயணம் குறித்த உங்கள் விருப்பம் இப்போது ஒரு பிரச்சினையாகிவிட்டது. நான் எனது சுய விருப்பத்திற்கிணங்க எங்கேயேனும் செல்வதானால் அது வேறு விஷயம்; நான் நௌரங்காவில் இருக்கிறேன், அதனால் நான் அங்கு செல்ல வேண்டிய தேவையில்லை, நான் அங்கு இல்லாதிருந்தால், நிச்சயமாக வந்திருப்பேன்.**"

ஆதர்ஷ் கரே பதிலளித்தார், "ஆம், பாபா, நீங்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறீர்கள். ஆனால் இப்போது நௌரங்காவில் நிலைகொண்டிருக்கும் பாபாவைக் காண ஹமிர்பூர் மாவட்டத்திற்குச் செல்லும்படி மெஹராஸாத்தில் இருக்கும் பாபாவைக் கேட்டுக்கொள்கிறோம்."

பாபா கூறினார், "**பாபா ஒருவரே பாபா! எனவே மெஹராஸாத்தைச் சேர்ந்த பாபா, ஹமிர்பூருக்குச் செல்லாமல், நௌரங்காவில் நிலைகொண்டுள்ள பாபாவைப் பார்க்கிறார். நான் எங்கும் எப்பொழுதும் இருக்கும்போது என்னையே நான் தரிசனம் செய்ய அங்கு எப்படிச் செல்ல முடியும்?**"

எரச் கேலி செய்தார், "எனவே, பாபா உங்கள் மாவட்டத்திற்கு விஜயம் செய்ய வேண்டும் என்றால், முதலில் அவரை அங்கிருந்து வெளியே அனுப்ப வேண்டும் என்று தோன்றுகிறது."

பாபா மேலும் கூறினார், "**ஹமிர்பூர் எனது 'இதயம்', ஆந்திரா எனது 'மனம்' என்பதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டு இடங்களும் எனக்கு மிகவும் பிரியமானவை.**"

பரோடா மஹாராணி, மே 30 மாலை 4:00 மணிக்கு குருபிரசாத்திற்கு வந்தார். "ஏழு அவதார புருஷர்கள்" நாடகம் அவருக்காக மீண்டும் அரங்கேற்றப்பட்டது. மதுசூதன், சுபத்ரா இருவரின் பெரும் முயற்சியில் தயாரிக்கப்பட்ட இந்த நாடகம், மாபெரும் வெற்றியை சந்தித்தது.

ஒரு நாள் ஒரு பெண்மணி தனது குழந்தையுடன் பாபாவை தரிசனம் செய்ய அவரை அணுகி, குழந்தையை ஆசிர்வதிக்க வேண்டும் என்று வேண்டவே, பாபா அந்தப் பெண்மணியிடம் கூறினார், "**நீங்கள் விரும்பியபடியே ஆகட்டும். ஆனால், கடந்த ஆண்டு உங்கள் வேண்டுகோளின் பேரில், குருபிரசாத்தில், இரண்டாவது முறையாக தரிசனம் செய்ய நான் உங்களை அனுமதித்தது நினைவிருக்கிறதா? நீங்கள் வரவில்லை.**"

அந்த ஆண்டு தரிசனத்திற்காக குருபிரசாத்திற்கு வந்த நூற்றுக்கணக்கானவர்களில், பாபா, இதுபோன்ற சிறிய விவரத்தைக் கூட நினைவில் கொண்டிருப்பார் என்பது நம்பமுடியாததாகத் தோன்றியது. அந்தப் பெண்மணி, வெட்கத்தில் மன்னிப்புக் கோரி விளக்கினார், "பாபா, என்னை உங்கள் மகளாகக் கருதுங்கள்... நான் எனது சகோதரனின் திருமணத்தில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால் என்னால் வர முடியவில்லை. என்னை மன்னியுங்கள்."

பாபா வழக்கம் போல் அவரை மன்னித்து, இவ்வாறு குறிப்பிட்டார், "**நான் உங்களை மன்னிக்கிறேன் ஆனால் நினைவில் கொள்ளுங்கள், நீங்களாகவே கேட்டு, அடையப்பெற்ற ஒரு வாய்ப்பு உங்களுக்குப் பயனளிக்கவில்லை. இறை-மனிதனுடனான எந்தவொரு சந்திப்பும், மீண்டும் மீண்டும் நிகழ முடியாத சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த இழப்பை ஈடு செய்வது கடினம். இருந்தாலும், இப்போது அதை மறந்து, மகிழ்ச்சியாக இருங்கள்.**"

குஸூம் ஸிங்கின் (KUSUM SINGH) கணவர், டெல்லியைச் சேர்ந்த மொக்கம் (MOHKAM), ஒரு நம்பகத்தன்மையற்ற குறைகாணும் மனோபாவம் படைத்தவர்; பாபா, இறை-மனிதர் என்ற உறுதிப்பாட்டில் சந்தேகம் கொண்டிருந்தார். அவர் ஒரு பிரபலமான அறிவியல்-புனைகதை என்ற 'சேரியட்ஸ் ஆ.:.ப் தி காட்ஸ்' (CHARIOTS OF THE GODS) என்ற நாவலைப் படித்துக்கொண்டிருந்தார், அதில் கடவுள்

வேறொரு கிரகத்திலிருந்து வருகை தந்த விண்வெளி வீரர் என்று கூறப்பட்டிருந்தது. தம்பதியர் பாபாவின் முன்னால் அமர்ந்திருந்தபோது, அவர் தனது முழங்கையால் மனைவியைத் தூண்டி, பாபா எந்த கிரகத்தைச் சேர்ந்தவர் என்று கேட்கும்படிக் கூறினார். குஸூம் உடனே கையை உயர்த்தி, "பாபா, நீங்கள் எந்த கிரகத்தைச் சேர்ந்தவர், அல்லது நீங்கள் எதைச் சார்ந்தவர் என்பதை எனது கணவர் அறிய விரும்புகிறார்?" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**நான் எந்த கிரகத்திலிருந்தும் வரவில்லை - எல்லா கிரகங்களும் என்னிடமிருந்து வந்தவை**!" என்று குறிப்பிட்டார்.

'மொக்கமின் தோள்பட்டை இடம்பிறழ்ந்து சிரமத்தை ஏற்படுத்தியதால், டாக்டர் கென்மோர் அவரை பரிசோதிக்க வேண்டுமா' என்று குஸூம் கேட்டார். பாபா, "**இல்லை, நான் மிகப்பெரிய மருத்துவர். எனது பார்வை அவர் மீது இருக்கிறது**" என்று குறிப்பிட்டார். பாபா, மொக்கமின் தோளில் கை வைத்த அந்த நேரத்திலிருந்து அவருக்கு எந்த சிரமமும் ஏற்படவில்லை.

பாபாவை முதன்முதலாக சந்திக்கும் குஸூமின் மைத்துனர், பட்டியாலாவின் ராஜா பாலேந்திர ஸிங் (RAJA BHALENDRA SINGH OF PATIALA), அவரது இரண்டாவது மனைவியுடன் வந்திருந்தார்.

1961 மே 31 புதன்கிழமை காலை 10:00 மணிக்கு, பாபா ஹமிர்பூர் அன்பர்களை சந்தித்தார். ஒவ்வொரு காலையிலும் பாபா ஆண்களை சந்திக்கும் வேளையில், ஆன் கான்லன், அர்னவாஸுடன் பாபாவின் குடும்ப இல்லம், பிந்த்ரா ஹவுஸ் மற்றும் பிற சுவாரஸ்யமான இடங்களைப் பார்வையிட அனுப்பப்பட்டார். கடைசி நாள் காலை வேளையில், ஆன் கான்லனை குருபிரசாத்திற்கு வர அனுமதித்து, பாபா கூறினார்: "**இப்போது ஆண்களுக்கான பிரத்யேகமான காலை சந்திப்பில் பெண்களுக்கு அனுமதி இல்லாததால், நீங்கள் ஐந்து நிமிடங்கள் மட்டுமே இருக்க முடியும்**."

ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், ஆன் வெளியேறுமாறு கூறப்பட்டார், ஆனால் பாபா அவரிடம் அமர்ந்திருக்குமாறு கூறினார். ஹாரி கென்மோர் சிரிப்பூட்டும் விதத்தில் வேடிக்கையான விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் பாபா அவரைத் தடுத்து, "**ஹாரி, நீங்கள் அதை நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறீர்களா? ஆன் இங்கே இருக்கிறார்**" என்று குறிப்பிட்டார்.

"அவர் 21 வயதைக் கடந்தவர், பாபா," என்று கென்மோர் பதிலளித்தார், பாபா சிரித்துக்கொண்டே '**சரி**' என்று சைகை செய்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, ஆனை நோக்கி, "**இப்போது, மெஹரா மற்றும் மணியிடம் செல்லுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். அவர் எழுந்திருக்க ஆயத்தமானதும், பாபா அவரிடம் மீண்டும் ஐந்து நிமிடங்கள் அமருமாறு கூறினார். ஐந்து நிமிடங்கள் நிறைவடைந்ததும், பாபா, "**இப்போது நீங்கள் செல்ல வேண்டும்**" என்று கூறி, ஆன் புறப்படும்போது, "**700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் திரும்பி வரும்போது, நீங்கள் ஓர் ஆண் மகனாக திரும்பி வருவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், அதனால்**

**நீங்கள் இந்தப் பிரத்யேக கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்"** என்று அவர் குறிப்பிட்டார்.

ஆன் உள்ளே அழைத்துச் செல்லப்பட்ட போது, அங்கு அவர் புடவையை உடுத்திக்கொள்ளும் விருப்பத்தை மெஹரா தெரிவித்தார். மெஹராவின், தங்க இழைகளால் பின்னப்பட்ட அழகான ஊதா நிறப் புடவை ஒன்றை அணிந்து கொள்ள இதர பெண்மணிகள் அவருக்கு உதவினர். "உங்கள் கைகளைக் கூப்பி 'நமஸ்தே, பாபா' என்று கூறுங்கள்," என்று அவரை இணங்கச் செய்தனர். பாபா ஆண்களுடன் அமர்ந்திருந்த நெரிசலான மண்டபத்திற்குள் கோஹெர் அவரை உள்ளே அழைத்துச் செல்லும் வரை, அவர்கள் என்ன செய்ய இருந்தனர் என்று ஆனுக்குத் தெரியாது. ஆன், புடவை கீழே நழுவி விடுமோ என்ற அச்சத்தில் இருந்தார், ஆனால், ஒத்திகை செய்ததற்கு இணங்க, ஆன் கைகளை ஒன்றாக இணைத்து, "நமஸ்தே, பாபா" என்று கூறியதும், பாபாவின் கண்கள் ஒளிர்ந்தன. அன்று காலையில் பாபாவுக்காக ஆன் புடவை உடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உந்துதல் அவர் மனதில் உதயமானது, பெண் மண்டலியில் எவருக்கும் தெரியாது. பாபா அவரது விருப்பத்தைப் பூர்த்திசெய்தார்.

மே 31 அன்று தரிசனத்தின் இறுதி நாள், பிற்பகல் 4:00 மணிக்கு மண்டபத்தில் கூட்டம் 3000 பேருக்கும் குறையாமல் இருந்தது. பூனா அன்பர்களை அந்தக் கடைசி சந்தர்ப்பத்தில் மீண்டும் சந்திக்க பாபா அனுமதித்தார், மேலும் இந்தியா முழுவதிலுமிருந்தும் பல அன்பர்கள் வருகை தந்தனர். பாடகர் நர்ஸிங்கின் (NARSING) கவாலி இசை நிகழ்ச்சி, முடிவில்லாத ஊர்வலமாகத் தோன்றிய அந்தக் கூட்டத்தில், பாபாவின் கைகளிலிருந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, ஒவ்வொருவரும் அவரைக் கடந்து செல்லும் வரை, தொடர்ந்தது.

இர்வின் லக் (IRWIN LUCK), அவரது சகோதரர் எட்வர்ட் (EDWARD) இருவரும் கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள். ஆன் கான்லனைப் போலவே, அவர்கள் குடும்பக் கடிதத்தைப் (FAMILY LETTER) படித்த உடனேயே, தங்கள் பெற்றோருக்கும் தெரிவிக்காமல் அமெரிக்காவை விட்டு வெளியேறினர், ஏனெனில், இருவரும் இந்தியா செல்வதை அவர்களின் தந்தையார் இன்னும் கடுமையாக எதிர்த்தார். மாலை 4:00 மணியளவில் நேப்பியர் ஹோட்டலுக்கு (NAPIER HOTEL) வந்தனர். ஹாரி, ஃப்ரெட், ஆன் ஆகியோரை மெஹர்ஜி மீண்டும் குருபிரசாத்திற்கு பாபாவிடம் அழைத்துச் செல்ல இருந்த வேளையில், லக் சகோதரர்களும் காரில் உடன் சென்றனர்; பாபா அவர்களை அன்புடன் அரவணைத்து, இருவரையும் அருகில் அமரச் சொன்னார். ஒளி ஊடுருவும் தன்மையை ஒத்த பாபாவின் உடல் தோல் மற்றும் அவரிடமிருந்து வெளிப்படும் 'புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தையின் தூய்மை' ஆகியவற்றால் எட்வர்ட் மலைத்துப்போனார்.



எட்வர்ட் & இர்வின் லக், குருபிரசாத், மே **1961**
(EDWARD & IRWIN LUCK, GURUPRASAD, MAY 161)

ஒரு கட்டத்தில் பாபா தரிசனத்தை நிறுத்திவிட்டு, அங்கிருந்த மேற்கத்திய அன்பர்களை கூட்டத்தில் அறிமுகப்படுத்தினார். அவர், ஃப்ரெட், ஹாரி இருவரையும் நியூயார்க் நகரைச் சேர்ந்தவர்கள் என்று அறிமுகப்படுத்திய வேளையில் (ஆன் அதே நகரைச் சார்ந்தவராக இருந்தபோதிலும்) ஆனின் முறை வந்ததும் பாபா, "**அமெரிக்காவைச் சேர்ந்த ஆன் கான்லன், மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்மணி, இல்லையேல், என்னை சந்திக்காத போதும், அவர் ஏன் இங்கு வந்திருக்கவேண்டும்? அவருடைய அன்பே அவரை இங்கு அழைத்து வந்தது; அந்த அன்பு அவருக்கான எனது வெகுமதி.**" (மர்டில் பீச் மையத்தின் லகூன் கேபினில் ஆன் உணர்ந்ததை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.)

பாபா, இர்வினை ஒரு பக்கத்திலும், எட்வர்டை மறுபுறத்திலும் நிற்க அழைத்து, இவ்வாறு குறிப்பிட்டார், "**இவர்கள் அதிர்ஷ்டசாலி சகோதரர்கள், இருவரும் என்னுடன் மிகக் குறுகிய காலம் இருக்கும் நோக்கத்தில், நீண்ட நெடிய தூரம் பயணம் செய்து வந்துள்ளனர். என்னிடம் வருவதற்கு இவர்கள் பல தடைகளைக் கடக்க வேண்டியிருந்தது; பல கண்டங்களைக் கடந்து இங்கே இருக்க அவர்களால் இயன்ற அனைத்தையும் செய்தனர். அத்தகைய அன்புக்கு வெகுமதி வழங்கப்பட வேண்டும்; நிச்சயமாக, அப்படிப்பட்ட அன்புக்கு வெகுமதி வழங்கப்பட வேண்டும்**" என்று அவர் மீண்டும் கூறினார்.

பாபா, பிக்குபாயிடம் (மீலன் ஸ்டுடியோ புகைப்படக்காரர்) புகைப்படம் எடுக்கக் கூறினார். இர்வின், எட்வர்ட் இருவரும் எப்படி இந்தியாவிற்கு வந்தார்கள் என்று பாபா கேட்டபோது, போதிய பணத்தை சம்பாதிப்பதற்காக அவர்கள் செய்த அனைத்து விஷயங்களையும் இர்வின் விவரிக்கத் தொடங்கினார். பாபா பதிலளிக்கவில்லை. கடந்த ஆண்டு இதே கேள்வியைக் கேட்டபோது, 'இது உங்கள் விருப்பம், பாபா' என்று பதிலளித்தது போல், இன்றும் கூறாமல் ஒரு பெரிய தவறிழைத்ததை இர்வின் உணர்ந்தார்.

பாபா பார்வையாளர்களிடம் கூறினார், "**இவ்வளவு தூரத்திலிருந்து, குறுகிய நேரத்திற்காக வருபவர்கள், வந்ததும் எதையேனும் அடையப் போகிறார்களா என்று கூடத் தெரியாமல் இருப்பது, என்னை மிகவும் ஆழமாகத் தொட்டது. இது அன்பனின் துணிச்சலுக்கு ஒரு சோதனை. அன்பிற்குரியவரை அவர் உண்மையில் பார்க்க முடியுமா என்ற நிச்சயமற்ற நிலையில் இவ்வளவு தூரம் வருகிறார்.**"

ஹாரி கென்மோர் இடையே குறுக்கிட்டுக் கூறினார், "உங்களுக்குத் தெரியும், பாபா, இது எங்களைப் பொறுத்தவரை வெகு தூரமும் இல்லை, அமெரிக்கர்களான எங்களுக்குப் பெரிய செலவும் இல்லை. ஒரு மணிநேர சகவாசத்திற்காக, 1,000 மைல்கள் நடந்து இங்கு வந்திருப்பவர்களை மிகவும் தைரியம் படைத்தவர்களாக நான் உணர்கிறேன்."

பாபா அனைவருக்கும் பிரசாதம் விநியோகிக்கத் தொடங்கவே, நர்ஸிங் தனது கவாலி இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்தார். பிரகாஷ்வதி ஷர்மாவும் பஜனை பாடல்களைப் பாடினார். டாக்டர் மூர்த்தி, புக்கார், ஸ்ரீபத் ஸஹாய்

ஆகியோர் - பல பிரார்த்தனைக்குப் பின்னரும், அவருடைய ஊருக்கு பாபா விஜயம் செய்து, தரிசனம் வழங்காததால் மனம் உடைந்து உயிரைத் துறந்த 'பாபா-அன்பர்' ஒருவரைப் பற்றிய குறும் நாடகம் ஒன்றை ('மரணமும் மறுவாழ்வும்' DEATH AND BACK TO LIFE) வழங்கினர்.

பாபா ஒரு மணிநேரம் மட்டுமே தரிசனம் வழங்குவதாக இருந்தாலும், நிகழ்ச்சியை மாலை 6:00 மணி வரை நீட்டித்து, "**மக்கள் என்னிடம் வர அனுமதித்த இரண்டு வாரங்களில், மிக முக்கியமான நாள் இது**" என்று கூறினார்.

பாபாவின் பாதங்களை எவரும் தொடாத வண்ணம் தலையணை ஒன்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுமாறு இர்வினிடம் கூறப்பட்டது. எட்வர்ட் சிறிது நேரம் கழித்து அந்தப் பொறுப்பை ஏற்க முன்வந்தபோது, பாபா இர்வினிடம் அதைத் தொடருமாறு அறிவுறுத்தினார்.

இரு சகோதரர்களும் அவரது காலடியில் அமர்ந்திருந்தபோது, பாபா தனது தலைக்கு அருகில் சைகையால் குறுகிய வட்டங்கள் வரைந்து, இரண்டு விரல்களை அவர்களை நோக்கி சுட்டிக்காட்டத் தொடங்கினார். இர்வின் பாபாவை உற்று நோக்கி, அதன் அர்த்தம் என்னவாக இருக்கும் என்று யோசித்தார். "நாங்கள் பைத்தியம் என்று பாபா சொல்ல விரும்புகிறாரா?" என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டார்.

சிறிது நேரம் கழித்து பாபா, அதே சைகையை மீண்டும் செய்தார்: அவர் தனது விரல்களை தலைக்கு அருகில் சுழற்றி, இர்வின், எட்வர்ட் இருவரையும் சுட்டிக்காட்டினார், ஆனால் எதுவும் விளக்கவில்லை. இர்வின் நினைத்தார்: "பாபா நம்மை பைத்தியம் என்று நினைக்கிறார்." ஆனால் பாபா மூன்றாவது முறையாக அதே சைகையை செய்தபோது, "**நீங்கள் தெய்வீக மூடர்கள்**!" என்று விளக்கி, மேலும் அவர் கூட்டத்தினரிடம் கூறினார், "**அத்தகைய அன்பு அவர்களுக்குப் போதுமான பலனை நல்கும்**!"

பின்னர் இர்வின், எரச்சிடம் வினவினார், "நாங்கள் தெய்வீக மூடர்கள் என்று பாபா கூறுவதன் அர்த்தம் என்ன என்று நினைக்கிறீர்கள்?"

எரச் விளக்க முயன்றார், "நீங்கள் கடவுளை நாடுவதானால், 'அவர் மீது பித்துப் பிடித்தவராக வேண்டும்' என்று பாபா கூறுகிறார். அதாவது, கடவுளுக்குப் பின்னால் பைத்தியமாக அலைந்து திரிபவர்கள், உலகத்தைப் பொறுத்தவரை முட்டாள்களாக இருப்பர். உலகம் அவர்களைப் புரிந்து கொள்ளாது, மக்கள் அவர்களைப் பைத்தியம்... பைத்தியம் என்று நினைப்பார்கள்... அதாவது இறை-பைத்தியம், ஒரு மூடன்."

இர்வின் மனதில் இப்போது குழப்பம் தீர்ந்தது.

ஒரு கட்டத்தில் இர்வின், எட்வர்ட் இருவரிடமும் பாபா, "**என்ன நினைக்கிறீர்கள்?**" என்று கேட்டதற்கு எட்வர்ட் எதையோ கூற, இர்வின் இவ்வாறு பதிலளித்தார்: "நான் உங்கள் கண்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன், பாபா." ஒரு துறவியின் கண்களைப் பார்ப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்று அவர் எங்கோ படித்திருந்தார், ஏனெனில்,

அவற்றில் அதீத சக்தி இருப்பதால், ஒரு துறவி எவருடைய கண்களையும் நேரடியாகப் பார்ப்பதில்லை.

பாபா, **"இவை மிகவும் நல்ல எண்ணங்கள்"** என்று மட்டும் கருத்துரைத்தார்; ஆனால் அவர் இர்வினை நேராகப் பார்க்காததால், இர்வின் இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த அவ்வேளையில், அவர் திடீரென நிமிர்ந்து, இர்வினின் கண்களை நேராகப் பார்த்தபோது, அவர் என்ன பார்த்தார்? "பாபாவிற்கு பழுப்பு நிற கண்கள் இருப்பதை நான் பார்த்தேன்!" என்றார், ஆனால், பின்னாட்களில் பாபாவின் குறிப்பிட்ட பகுதி ஒன்று இருந்ததை நிமிர்ந்து, உன்னிப்பாகப் பார்க்கவில்லை என்று உணர்ந்தார். "உடல் ரீதியாக நான் மேலே பார்த்தபோது, என்னைப் பற்றிய மற்றொரு நுட்பமான அம்சம் இல்லாததையும் உணர்ந்தேன்" என்று கூறினார்.

ஹாரி கென்மோர் குருநாதருக்கான பிரார்த்தனையை (MASTER'S PRAYER) ஆழ்ந்து ஓங்கிய ஒலியில் மொழிந்து, நிகழ்ச்சியை மாலை 6:00 மணிக்கு நிறைவு செய்தார்.

மறுநாள் காலையில், ஐந்து மேற்கத்திய அன்பர்களை மெஹர்ஜி மும்பைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு, பாபாவிடமிருந்து பிரியாவிடை பெற்றுச் செல்ல அழைத்தார்; அவர்கள் அன்று நள்ளிரவு அமெரிக்காவிற்குப் புறப்படும் விமானத்தில் பயணம் செய்ய இருந்தனர். அவர்கள் விடைபெறும் போது, பாபா தமது தலைக்கு மேல் நான்கு நிலைகளின் அடையாளத்தைக் காட்டி, லக் சகோதரர்களிடம், **"ஒரு நாள் நான் உங்களுக்கு மேல்நிலை அனுபவத்தை வழங்குவேன்"** என்று சைகையால் தெரிவித்தார்.

இரண்டு வார தரிசன நிகழ்ச்சி 1961 ஜூன் 1 வியாழக்கிழமை நிறைவுக்கு வந்தாலும், அன்றைய தினம் டாக்டர் தேஷ்முக் தனது குடும்பத்துடன் குருபிரசாத் வாசலில் தோன்றினார். மெஹர்தாஸ் அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. தேஷ்முக்கின் குடும்பத்தினர் ஏற்கனவே பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர், ஆனால் அவரது மகள் சஞ்சீவனி தனது கணவரை முதல் முறையாக அழைத்து வந்தார். வராண்டாவிலிருந்து பாபா அவர்களைப் பார்த்து, சைகையால் அழைத்தார். பாபாவைப் பார்த்ததும் இந்துமதி, தேஷ்முக் இருவரும் கண்கலங்கி அழுதனர்; அவர்களை தூரத்திலிருந்து பார்க்க அனுமதித்து, பாபா உள்ளே ஓய்வெடுக்கச் சென்றார்.

தரிசனத்திற்குப் பின்னரும், பூனாவில் தொடர்ந்து தங்கியிருந்த மற்றுமொரு கொல்கத்தா அன்பர் டாக்டர் மூர்த்தி, வேறு எவரேனும் உள்ளே அனுமதிக்கப்பட்டால், அவரைப் பின்தொடர்ந்து சென்று, பாபாவை மீண்டும் தரிசிக்க முடியும் என்ற நம்பிக்கையில், காலை முதல் மாலை வரை, குருபிரசாத் வாசலில் காத்திருப்பதை வழக்கமாகக் கொண்டார்.

பாபா, அலோபாவை வராண்டாவில் அமர வைத்து, 'மூர்த்தி உள்ளே வரும் வேளையில், அவரை தூரத்தில் தடுத்து நிறுத்துமாறு' அறிவுறுத்தினார். மூர்த்தி வாசலில் தபால்காரரிடமிருந்து அஞ்சலைப் பெற்றுக்கொண்டு, உள்ளே

நுழைய முயன்ற போது, அலோபா விரைந்து வந்து அவரிடமிருந்து அதை எடுத்துக்கொள்வதும், மூர்த்தி ஏதேனும் செய்தி அல்லது தகவலை வழங்கவேண்டும் என்ற சாக்குப்போக்குடன் வருவதானால், அலோபா அவரிடம் அது என்ன என்று கேட்பதும் அவ்வப்போது நிகழ்ந்தது.

விஷ்ணுவின் உறவினர்களான விஸ்வநாத் ஹல்தங்கர், அவரது மனைவி இந்து இருவரும் ஒரு நாள் குருபிரசாத்திற்கு வந்தபோது, மூர்த்தி வாசலில் நுழைய இதுவே தக்க தருணம் என்று நினைத்து, மகிழ்ச்சியுடன் அவர் வளாகத்திற்குள் நுழையவே, அலோபா, மூர்த்தியைத் தடுத்து நிறுத்தி, அவரே விஷ்ணுவிடம் அந்தச் செய்தியைத் தெரிவிக்கச் சென்றார்.

அலோபா கூறியதைக் கேட்டு, பெண்டு வெளியே வந்து, தரிசனத்திற்கு எதிரான கட்டுப்பாடுகளைக் குறித்து தம்பதியருக்கு விளக்கினார். ஆனால், பாபாவின் தரிசனத்திற்கான விருப்பத்தை எடுத்துக்கூறி வற்புறுத்தவே, சோர்ந்து போன பெண்டு உள்ளே திரும்பிச் சென்றதும், இருவரும் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தனர். நிச்சயமாக பாபா அவர்களை அழைப்பார் என்று மூர்த்தி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், சில மணி நேரம் காத்திருந்த தம்பதியினர் விரக்தியில் வெளியேறினர். விஷ்ணுவும் அவர்களைப் பார்க்க வெளியே வராததால், மூர்த்தி தனது வாய்ப்பை இழந்தார். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் வாயிலுக்கு அருகில் பொறுமையாக காத்திருந்து, உள்ளே நுழைவதற்கான வாய்ப்புகளை இழக்கவே, முயற்சிகள் அனைத்தும் வீண்போயின. சோர்வடைந்த அவர், பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அழைக்கப்பட்டால் மட்டுமே வருவதுதான் மிகவும் புத்திசாலித்தனம் என்பதை உணர்ந்து, தனது இல்லம் திரும்பிச் சென்றார்.

இருப்பினும், ஸாக்கோரியின் கோதாவரி மாய், ஜூன் 13 மாலை 6:15 மணிக்கு, தனது நான்கு கன்யாக்களுடன், பதினைந்து நிமிடங்களுக்காக, குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். எஸ்.என். டிப்னிஸ் (S.N. TIPNIS) அவர்களுடன் சென்றார். கோதாவரியின் உடல்நிலை சீரில்லாமல் இருந்ததால், பாபா, அவருக்கு மருத்துவ சிகிச்சை பற்றி அறிவுறுத்தினார்.

இந்த நேரத்தில் கே. ரங்காராவ் என்றழைக்கப்பட்ட பாபா அன்பர் காலமான செய்தியை, சாரி, பாபாவிற்குத் தெரிவித்து, அந்த அன்பரின் 'இறுதி மரியாதை' கூட்டத்திற்காக செய்தி ஒன்றை பாபாவிடம் கோரினார். ஜூன் 11 அன்று எரச் மூலமாக பாபா கீழ்வரும் செய்தியை வழங்கினார்: "**பாபாவின் அயராத ஊழியரை, வாழ்வும், மரணமும் ஒருபோதும் பாதிக்காது, ஏனெனில் பாபாவை நேசிக்கும் ஒருவர், அவரது வழியில் மடிந்து, எல்லையில்லா, நித்திய உண்மைப்பொருளாகத் திகழும் ஏக இறைவனில் வாழ்கிறார்.**"

1961 ஜூன் 20 அன்று, ஆகஸ்ட் முதல் வாரத்தில் பாபா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் புறப்படும் தகவலை அனைவருக்கும் தெரிவிக்கும் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

**பாபா, யார் ஒருவரின் வருகையினாலும் இடையூறு விளையாமல், தனது ஏகாந்தவாசத்தைக் காலவரையின்றி தொடர்வார். அவசரகாலத்தில், முன்பணம் செலுத்தப்பட்ட தொலைத்தந்தி மூலம் பதில் அனுப்புவதைத் தவிர, எந்த விஷயத்திலும் எவரும் தன்னுடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்றும் பாபா விரும்புகிறார்.**

காலம் இவ்வாறு கருத்துரைத்தது: “1961, பாபாவின் பிரியமான அன்பர்களுக்கு, கீழ்ப்படிதலுக்கான பல பாடங்களைப் பயிற்றுவித்த ஆண்டாகும். அவர்கள் இறைவனின் தோட்டத்தில் கூடு கட்டும் முறையைக் கற்றுக்கொண்டனர்; ஏனெனில், அவர்கள் அங்கு இறை கீதத்தை இசைப்பது மட்டுமின்றி, அதைத் தங்கள் நிரந்தர இல்லமாக மாற்றவும் கற்றுக்கொள்ள வேண்டும்!”

தினமும் காலைப் பயணமாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, மண்டலி பாபாவை காரில் கணேஷ்கிந்த் தோட்டத்திற்கும் (GANESHKIND GARDEN), ஸாம்பாஜி மற்றும் பேஷ்வா பூங்காக்களுக்கும் (SAMBHAJI AND PESHWA PARK) நடைபயிற்சிக்கு அழைத்துச் சென்றனர். ஜூன் 22 அன்று, பாபா, பூனா குதிரைப் பந்தய மைதானத்திற்கு (POONA RACE COURSE) மண்டலியுடன் நீண்ட தூரம் நடந்து சென்றார். ஜால்பாய் இந்தப் பயணங்களில் பாபாவின் 8 மி.மீ. காணொளிப் படங்களை எடுத்தார். மஹாராணி ஷாந்தாதேவி 27, 28 தேதிகளில் தினமும் இரண்டு மணி நேரம் பாபாவை சந்தித்தார். அவர் அப்போது பூனாவிலிருந்து பரோடாவிற்குத் திரும்பிச் செல்லவிருந்தார்.

ஜூலை 2ஆம் தேதி பேஷ்வா பூங்காவில், குழந்தைகளை சவாரியில் எடுத்துச் செல்லும் சுமித்ரா என்றழைக்கப்பட்ட யானை ஒருமுறை பாபாவின் முன் வந்தது. அந்த யானைப்பாகன் மெஹர் பாபாவை அறிந்திருந்தார், அவர் வரும்போதெல்லாம் யானையைத் தலைவணங்கச் செய்வது வழக்கம். அன்று காலை பாபா யானைக்கு மாபெரும் ரொட்டி ஒன்றையும், வாழைப்பழங்களையும் ஊட்டினார். யானை தனது தும்பிக்கையால் பாபாவின் கால்விரல்களைத் தொட்டு வணங்கியது, ஓர் அற்புதமான காட்சியாக இருந்தது.

ஒருமுறை பாபா பூனாவில் தங்கியிருந்தபோது, எந்தவித முன்னறிவிப்புமின்றி, எதிர்பாராதவிதமாக தனது அன்பர்கள் சிலரின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். ராமகிருஷ்ணன் மற்றும் சில மண்டலி இரண்டு கார்களில் அவருடன் சென்றனர். காலை 9:30 மணிக்கு குருபிரசாத்திலிருந்து பாபா புறப்பட்டு, முதலில் ‘பந்த் கார்டன்’ பாலத்தைக் (BUND GARDEN BRIDGE) கடந்து, ஆலந்தியை (ALANDI) நோக்கிச் சென்றார். அவர் மனோஹர் எம். ஜோஷி - MANOHAR M. JOSHI (கஸ்பா பேட் - KASBA PETH), வி.ஒய். அகாஷி - V.Y. AGASHI (ஏர்வாடா - YERAVADA), விஷ்ணு சவான் (விமான நிலையத்திற்கு அருகில்), காடேக்கர் குடும்பம் மற்றும் டாக்டர் நிஃபாட்கர் (DR. NIPHADKAR) ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்று இரவு 11:30 மணிக்கு குருபிரசாத் திரும்பி வந்தார்.

மௌன தினத்திற்காக, குருபிரசாத் மற்றும் மெஹராபாத்தில் இருந்த மண்டலி, மேலும் உலகம் முழுவதிலும் வாழும் பாபா அன்பர்கள், 1961 ஜூலை 9 இரவு 8:00 மணி முதல் ஜூலை 10 திங்கட்கிழமை இரவு 8:00 மணி வரை, முழு மௌனம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஆந்திராவில், சுவாமி சத்யபிரகாஷ் உதாசீன் (SWAMI SATYAPRAKASH UDASEEN) என்பவரால் மெஹர் பாபாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட திவ்ய வாணி (DIVINE VOICE) என்ற காலாண்டு இதழ் - ஆங்கிலம், தெலுங்கு இரண்டு மொழியிலும் அன்று வெளியிடப்பட்டது. மே மாதம் குருபிரசாத்தில் குடும்ப சாஸ்திரிகள், சுவாமி சத்யபிரகாஷை பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார்.

ஜூலை 12 அன்று காலை, பூனா, பந்த் கார்டன் அருகில் அமைந்த பாபாஜானின் இருப்பிடத்திற்கு பாபா அழைத்துச் செல்லப்பட்டார். எரச், ஃபிரான்சிஸ், ஜால்பாய் ஆகியோரும் உடன் சென்றனர். பாபா, ஒரு கம்பி வேலிக்கு எதிராக நின்று, கீழே பாய்ந்தோடும் நதியைப் பார்த்த வண்ணம் நின்றார்; ஜால்பாய் சில புகைப்படங்களை எடுத்தார்; இருப்பினும், அப்போது வீசிய குளிர் காற்று, பாபாவின் மூச்சுக்குழலை எளிதில் தாக்கி அழற்சியை ஏற்படுத்தி, தொந்தரவு செய்தது. பாபா, அங்கேயே நின்று நதியைச் சுட்டிக்காட்டி, வேகமாகக் கையை அசைத்து, "**நீர் மட்டம் உயர்ந்து, நிரம்பி வழிந்து, அனைத்தும் நீரில் மூழ்கி, அடித்துச் செல்லப்படும்**" என்று குறிப்பிட்டார். சிறிது நேரம் அந்த இடத்தைச் சுற்றி வந்து, பாபா, முத்தா நதி (MUTHA RIVER) நீரில் கால்களை நனைத்தார்.

பாபா, திடீரென இதைச் செய்தது, ஃபிரான்சிஸ், எரச் இருவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அனைவரும் குருபிரசாத்திற்குத் திரும்பி வந்த சில மணிநேரங்களில், பொதுப்பணித் துறையின் உயரிய பதவியை வகித்த பாபா அன்பர் ஒருவர், தொலைபேசி மூலமாக, முத்தா நதி, ஒரு மண் அணையை உடைத்து, வெள்ளம் பூனா நகருக்குள் வரும் அபாயத்தை எடுத்துக்கூறி எச்சரித்தார்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா (TIMES OF INDIA) பத்திரிகை கீழ்வரும் கட்டுரையை வெளியிட்டது:

நதியிலிருந்து பெருக்கெடுத்த வெள்ளம் - வாழ்நாளில் நினைவுக்கு எட்டாத வகையில் - நான்கு மணி நேரத்தில் இரண்டு முறை, பூனா நகரத்தை மிக மோசமாகத் தாக்கியது. சீற்றம் கொண்ட நதி, பான்ஷெட் (PANSHET DAM) அணையை அழித்தபோது, முதல் பேரலை முற்பகலில் வந்தது. பிற்பகலில் கடக்வாஸலா அணை (KHADAKWASLA DAM) உடைந்த வேளையில் இரண்டாவது வெள்ளப்பெருக்கு நகருக்குள் புகுந்தது. நகரம் முழுவதும் குடிநீர் மற்றும் மின்சாரம் தடைப்பட்டது. சில முன் எச்சரிக்கைகள் வழங்கப்பட்டாலும், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய முத்தா நதியின் முழுச் சீற்றத்தையும் மக்கள் ஏற்க வேண்டியதாயிற்று.

ஆண், பெண் அனைவருடன் பாபா குருபிரசாத்தின் மேல் தளத்திற்கு சென்றார். நகரின் வணிக மற்றும் குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்திருந்தாலும், குருபிரசாத்திலிருந்து சிறிது தூரத்தில் தண்ணீர் நின்றுவிட்டதால், பங்களா பாதிக்கப்படவில்லை.

இருப்பினும், பந்த் கார்டனில் பாபா சாய்ந்து நின்ற கம்பி வேலியின் உயரம் வரை நீரில் மூழ்கியது மற்றும் அவர் நின்ற இடத்தில் படகுகள் பயன்படுத்தப்பட்டன. பூனாவின் ஏறக்குறைய பாதி பகுதிகளில் ஆறு அடி அல்லது அதற்கும் அதிகமாக வெள்ளம் நிரம்பி வழிந்தது. வி.எம். பண்டித் மற்றும் அலி ராம்ஜூவின் இல்லங்களைப் போலவே, ஷிண்டேயின் பாத அணி கடையும் முழுவதுமாக வெள்ளத்தில் மூழ்கியது. பண்டித், ஒரு பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தார், நதிக்கரையோரம் அமைந்த அவருடைய இல்லத்தில் ஒவ்வொரு வாரமும் பாபா-கூட்டங்கள் நடத்தப்பட்டன. அருகாமையில் இருந்த வீடுகள் அனைத்தும் இடிந்து விழுந்த நிலையில், பண்டித்தின் பல உடைமைகள் அடித்துச் செல்லப்பட்டாலும், அவரது இல்லம் அப்படியே இருந்தது. அதிலும், மிகவும் ஆச்சரியமாக, அப்பகுதியை மூழ்கடித்த வெள்ளம், சுவரில் தொங்கவிடப்பட்ட பாபாவின் சித்திரத்திற்கு அடி மட்டம் வரை உயர்ந்து நின்றது.

இதேபோல், அலி ராம்ஜூவின் இல்லத்தில், மேசை மற்றும் நாற்காலிகளை வெள்ளம் அடித்துச்சென்ற போதிலும், உயரமான அலமாரியில் இருந்த பாபா புத்தகங்கள் பாதுகாப்பாக இருந்தன. பூனா மையத்திற்குச் சொந்தமான ஏராளமான இலக்கியங்களும் அவரிடம் இருந்தன. அவை பாழாகும் நிலையில் அதற்கு தாமே பொறுப்பேற்க நேரிடும் என்று அவர் கவலைப்பட்டார், ஆனால் அந்தப் பொருளுக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

இருப்பினும், ஷிண்டேயின் பாத அணி கடையில் அவரது காலணிகள், பூட்ஸ் மற்றும் செருப்புகள் அனைத்தும் சேதமடைந்தன. வெள்ளம் வடிந்ததும், பாபா அந்தக் கடைக்குச் சென்று குப்பைகளுக்கு மத்தியில் அமர்ந்தார். மெலிதான சேறு பாதணிகளில் படிந்திருந்தாலும், கவலைப்பட வேண்டாம் என்று பாபா, ஷிண்டேக்கு உறுதியளித்தார். ஷிண்டே ஒவ்வொரு ஜோடி பாத அணியையும் சுத்தம் செய்து, பாதி விலையில் விற்கவேண்டியதாயிற்று. (அடுத்த ஆண்டு, பாபாவே ஷிண்டேயின் புதிய கடையின் திறப்பு விழாவை நிகழ்த்தினார், பின்னர் அவரது வணிகம் செழிப்படைந்தது.)

நாஜாவின் தொண்டையில் வளர்ந்த சதை அகற்றப்பட வேண்டியிருந்தது; ஜங்க்ளி மஹாராஜ் சாலையில் அமைந்த டாக்டர். பி.பி. ஆப்டேயின் (DR. B.P. APTE) மருத்துவமனையில் வெள்ளப்பெருக்கிற்கு முன்னதாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பாபா 12ஆம் தேதி நாஜாவைப் பார்க்க வந்திருந்த வேளையில், மேலும் அவர் இன்னும் ஒரு நாள் அல்லது அதற்கு மேலும் மருத்துவமனையில் இருக்க வேண்டும் என்ற மருத்துவரின் ஆலோசனையைப் பொருட்படுத்தாமல், உடனடியாக பிந்த்ரா ஹவுஸுக்குத் திரும்பும்படி அறிவுறுத்தினார். நாஜா, டாக்டர் ஆப்டே மருத்துவமனையின்

முதல் தளத்தில் தங்கியிருந்தார், மேலும் வெள்ளம் இரண்டாவது மாடிக்கும் உயர்ந்தது.

பூனாவின் இடர்பாடான சூழ்நிலையை வானொலி மூலம் கேள்விப்பட்ட ஆதி, 13ஆம் தேதி குருபிரசாத்திற்கு குடிநீர், ரொட்டி, உணவுப்பண்டம், மண்ணெண்ணெய் போன்றவற்றை எடுத்து வந்தார். ஆனால் அனைவரும் பாதுகாப்பாக இருந்ததைக் கண்டதும் அன்றிரவே அஹமதுநகர் திரும்பிச் சென்றார்.

குடிநீர் பற்றாக்குறை காரணமாக, தங்கள் இல்லங்களில் கிணறுகள் இருந்த சிலர், பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கினர். ஜால்பாய், பெஹராம் மற்றும் அவரது குடும்பத்தினர் வாழும் பாபாவின் குழந்தைப் பருவ வீட்டிற்கு வெளியே, ஒவ்வொரு காலையிலும் சேவகர் குழு ஒன்று கிணற்றைப் பயன்படுத்த விரும்பியது. காலை 4:00 மணி முதல் ஒரு நீள் வரிசையை உருவாக்கி, ஜால்பாய், பெஹராம் மற்றும் மகன்கள் கிணற்று நீரை இறைத்து, அவரவர் இல்லங்களுக்கு எடுத்துச் செல்ல உதவினர். முன்னதாக ஒருமுறை, பாபா அங்கு விஜயம் செய்தபோது, கிணற்றிலிருந்து ஒரு டம்ளர் நீரை எடுத்து, ஒரு வாய் அருந்தி, மீதி நீரை கிணற்றிலே ஊற்றினார்; இதனால் தண்ணீருக்காக வந்தவர்கள் அவர்களை அறியாமலே பாபாவின் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டனர். கிணற்று நீர் அருந்துவதற்கு ஏற்றதாக இருந்தாலும், அதை, பல வருடங்களாக எவரும் பயன்படுத்தவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு, பாபா, உயிரோடு இருந்த ஆமை ஒன்றை கிணற்றில் வாழவிட்டது, தண்ணீரை பாசித்திரளிலிருந்து சுத்தமாக வைத்திருந்தது.

1961 ஜூலை 27அன்று, பாபாவும் சில மண்டலியும் பாபாஜானின் சமாதியில் அஞ்சலி செலுத்தினர். ஆகஸ்ட் 1 அன்று கஜ்வானி, ஸிகன்போரியா இருவரும் ஏறக்குறைய இரண்டு மணிநேரம் பாபா முன்னிலையில் அமர்ந்திருந்தனர். அன்று மாலை ஆதியும் குருபிரசாத் வந்தார்.

அந்த நாட்களில் பூனாவில், எரச், குருபிரசாத்தில் பகலைக் கழித்துவிட்டு மாலையில் பிந்த்ரா ஹவுஸுக்குத் திரும்புவதை வழக்கமாகக் கொண்டார். பைதூலும் இரவில் குடும்பத்துடன் தங்கினார். பாபா மற்றும் பெண்மணிகளுக்கு உணவு தயார் செய்ய வேண்டியிருந்ததால், நாஜா எப்பொழுதும் பிந்த்ரா ஹவுஸில் தங்கி வந்தார். ஆண்களுக்கான உணவு ஜால் தொராப்ஜியின் விருந்தினர் மாளிகையிலிருந்து வந்தது. ஒருமுறை எரச் பிந்த்ரா ஹவுஸிலிருந்து மாம்பழங்களைக் கொண்டு வந்தார். அவை சுவையாக இருந்தன, ஆனால் அடுத்த நாள் பாபா அவரிடம், '**மாம்பழங்கள் புளிப்பாக இருந்ததாக**' புகார் கூறினார்.

அதற்கு எரச், "அவை இனிமையானவை, பாபா. நானே ருசித்து வாங்கி வந்தேன்" என்றார்.

மணியை அழைத்துவரக் கூறிய பாபா, அவை இனிப்பானதா அல்லது புளிப்பாக இருந்ததா என்று கேட்டார். அவை ஓரளவு புளிப்பு சுவையுடன்


இருந்ததாக மணி பதிலளித்தார்; எரச் உடனே, “இருக்கலாம், ஒருவேளை அவை புளிப்பாக இருக்கலாம்” என்று மட்டுமே குறிப்பிட முடிந்தது.

ஒரு நாள் பாபா, எரச்சின் தாயார் மற்றும் சகோதரியைக் குறித்து அவரிடம் கூறினார், “**நான் கெய்மாய், மனு இருவரையும் குருபிரசாத்திற்கு அழைக்க நினைத்தேன், ஆனால் பெண்மணிகளைக் கலந்தாலோசித்த போது, நான் அவர்களை அழைத்தால், பிறரையும் அழைக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.**” எரச் அமைதியாக இருந்த வேளையில் பாபா மேலும் கூறினார், “**நான் மிகவும் கபடமற்றவன்! அனைவரும் என்னை முட்டாளாக்குகின்றனர்!**”

எரச் வேடிக்கையாக பதிலளித்தார், “நீங்கள் கபடமற்றவர் அல்ல பாபா, ஆனால் தந்திரம் படைத்தவர்! நீங்கள் உஸ்தாத் (சகலகலாவல்லவர்)!” என்று எரச் சொன்னது பாபாவை சிரிக்க வைத்தது.



**பாபா - டாக்டர் ராம் கிண்டே குடும்பத்தினருடன், பூனா தரிசனம், மே 1961**
(BABA – WITH DR. RAM GINDE FAMILY, POONA DARSHAN, MAY 1961)



**பாபாவுடன் எரச் ஜெஸவாலா** (BABA & ERUCH JESSAWALA), **1961**










மெஹர் பாபா, குருபிரசாத் (MEHER BABA, GURUPRASAD), **1961**



குருபிரசாத் (GURUPRASAD), ஜூலை (JULY) **1961**





மெஹராஸாத் (MEHERAZAD), **1961**

# மெஹராஸாத் - தொடர் ஏகாந்தவாசம்

(**Seclusion Continues In Meherazad**)

பூனாவில் ஐந்து மாதங்களைக் கழித்த பின்னர், 1961 ஆகஸ்ட் 7 திங்கள் காலை, ஆண், பெண் மண்டலியுடன் பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார். புறப்படுவதற்கு முன்பு மீண்டும் பாபா, பந்த் கார்டன், பாபாஜானின் இருப்பிடத்தில் அமர்ந்து, தமது பல நூறு பூனா அன்பர்களிடம் பிரியா விடைபெற்றுச் சென்றார். மதுசூதனன் பஜனை மற்றும் ஆரத்தி பாடினார். அன்பர்கள் காரின் இருபுறமும் வரிசையாக நின்று, பாபா கடந்து சென்றபோது, அவரது கையைத் தொட்டனர்.

மெஹராஸாத்தில், அவரது ஏகாந்தவாசம் தொடர்ந்தது. பாபா இவ்வாறு எச்சரித்தார்: "**என்னுடன் இருப்பவர்கள், இந்தியா மற்றும் பிற நாடுகளில் வாழும் என் அன்பர்கள் அனைவருக்கும், எதிர்வரும் மாதங்கள் மிகவும் கடினமானதாக இருக்கும். என் அன்பர்களின் பொறுமை கடும் சுமைக்கும், என் மீதான அவர்களின் அன்பு, சகிப்புத்தன்மையின் அளவுகோலால் சோதனைக்கும் உள்ளாக்கப்படும்.**

"**என்னைப் பொறுத்தவரை, எனது ஏகாந்தவாசப் பணி, ஏற்கனவே பலவீனமாக இருக்கும் எனது ஆரோக்கியத்தை மேலும் மோசமாக்கும், ஏனெனில் நான் மேலும் பல இடர்பாடுகளைக் கடக்க வேண்டும். ஏற்கனவே நான் மிகவும் சோர்வாக உணர்கிறேன்.**"

சில நேரங்களில் பாபாவின் உடல்நிலையில் சிறந்த மாற்றமும், சில சமயங்களில் மாறாகவும் தோன்றியது. கடுமையான பின்னடைவுகளைத் தொடர்ந்து, குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படும். இதுபோன்ற உடல்நிலை அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது.

ஆகஸ்ட் 10 அன்று மெஹராபாத்தில் தங்கியிருந்த கைக்கோபாத் மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துவரப்பட்டார். மூன்று நாட்களுக்குப் பின்னர், 13ஆம் தேதி பாவ் கல்சூரியை மூன்று இரவுகளுக்காக, தனது குடும்பத்துடன் நேரத்தை செலவிட, பாபா, மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்தார்.

விலூவின் இல்லத்தில் இருந்த பிங்-பாங் மேசை பயன்படுத்தப்படாமல் இருந்ததால், ஆதி அதை மெஹராஸாத்திற்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்து, பகீரத்தை அனுப்பி வைத்தார். ஆகஸ்ட் 23 அன்று, பாபாவின் மூலநோய் காரணமாக வலி மற்றும் இரத்தப்போக்கு மீண்டும் வெளிப்பட்டது.

ஒரு நாள் மெஹராஸாத்தில் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**கடவுளைப் புரிந்து கொண்டதாக சொல்பவன் எதையும் புரிந்து கொள்ளவில்லை! ஒன்றே உருவான ஏக இறைவனைப் புரிந்து கொள்வது என்பது புரிதலுக்கு அப்பாற்பட்டது. நான் மனித புரிதலுக்கு மிக மிக அப்பாற்பட்டவன்; என்னை அறிந்தவன் நானாக மாறுகிறான்!**"

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா கருத்துரைத்தார்: **"ஒருவர் எப்படிக் கடவுளை தனக்குரியதாக்கிக் கொள்ள முடியும்? புருவத்தின் வியர்வையால் உங்கள் வாழ்வாதாரத்தை சம்பாதிப்பது போல், உங்கள் இதயத்தின் இரத்தத்தால் தெய்வீகத்தை அடையப் பெறுவீர்கள்."**

ஜெர்மனி (GERMANY) தேசத்தில் இந்த நேரத்தில், 'பெர்லின் நெருக்கடி' (THE BERLIN CRISIS) உச்சத்தை எட்டியது. பாபா மெஹராஸாத் திரும்பிவந்த ஒரே வாரத்திற்குள், ஜெர்மனி இரண்டாகப் பிளவுபட்டது; கம்யூனிஸ்டுகள் கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனியைப் பிரிக்க பெர்லின் சுவரைக் (BERLIN WALL) கட்டத் தொடங்கினர்.

பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டாலும், பயணத்திற்கான திட்டம் எதுவும் இல்லாத போதும், அவரது பயண ஆவணம் (பாஸ்போர்ட் - PASSPORT) ஆகஸ்ட் 1961 இறுதியிலும், 1967 ஆகஸ்ட் மாதத்திலும் புதுப்பிக்கப்பட்டது.

1961 செப்டம்பர் 14 அன்று, அரன்காவ்ம் ஏழை கிராமவாசிகளுக்கு விருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் பாதிரி மேற்பார்வையிட்டார். அன்று காலை, எரச், ஃபிரான்சிஸ், கைக்கோபாத் ஆகியோருடன் புறப்பட்ட பாபா, 9:30 மணிக்கு குஷ்ரு குவார்ட்டர்ஸில் முதலில் நின்றார். ஆதியிடம் அவரது ஏகாந்தவாசத்தைத் தொடர இருப்பதாகவும், அழைத்தால் மட்டுமே மெஹராஸாத்திற்கு வரவேண்டும் என்றும் பாபா கூறினார். அங்கு, குல்மாய், பிரோஜா, ஃபெராம் ஆகியோரை பாபா சந்தித்தார். 78 வயதான குல்மாய் அப்போது பெருங்குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். தோற்றத்தில் ஒரு மஸ்தானியைப் போலவே இருந்த அவர், தன் மீதும், பிறர் மீதும் தண்ணீரை வீசுவது வழக்கம்; அடிக்கடி அசாதாரணமான ஒளியையும், சிறிய தேவதை போன்ற உருவங்களையும் பார்த்ததாகக் கூறுவதுண்டு. பாபா, குல்மாயைத் தழுவி ஆறுதல் கூறினார். பிரோஜா, பாபாவுடன் தங்கும் விரும்பத்தைத் தெரிவித்ததும், அவருடைய ஏகாந்தவாசம் நிறைவடைந்த பின்னர், அவரை நினைவுபடுத்துமாறு கூறினார்.

குஷ்ரு குவார்ட்டர்ஸிலிருந்து பாபா மெஹராபாத்திற்குச் சென்று, அரன்காவ்ம் கிராம மக்களை சந்தித்தார். பல பக்தர்கள், பாபா முன்னிலையில் பஜனைகள் பாடினர். அன்று பிற்பகுதியில், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்ற முழக்கத்துடன் உணவு வழங்கப்பட்டது.

கீழ் மெஹராபாத்தில், குடும்ப குடியிருப்பில் (FAMILY QUARTERS) வாழ்ந்து வந்த பாவ் கல்சூரியின் குடும்பத்தை பாபா வரவழைத்தார். பாபா பூனாவில் இருந்த வேளையில், பாவ் கல்சூரியின் மகன் மெஹர்நாத், மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டார். ஒரு நாள் இரவு அவரது தோல், அடர் மஞ்சள் நிறமாக மாறி, உடல்நிலை மிகவும் மோசமானது. அன்று இரவு, பாவ் கல்சூரி

இரவு கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, பாபா அவரிடம், "**ரமாவிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா? மெஹர்நாத் எப்படி இருக்கிறான்?**" என வினவினார்.

அதற்கு பாவ் கல்சூரி பதிலளித்தார், "எனக்கு எதுவும் தெரியாது. அவரிடமிருந்து எனக்கு எந்தக் கடிதமும் வரவில்லை; கடிதம் எழுத வேண்டாம் என்பது உங்கள் உத்தரவு."

பாபா எதுவும் கூறவில்லை, ஆனால் இரவு முழுவதும் அவர் மிகவும் அசௌகரியமாக உணர்ந்தார். சில நிமிடங்களுக்கு ஒருமுறை அவர் பாவ் கல்சூரியிடம் வினவினார், "**மெஹர்நாத் உயிரைத் துறந்தால் நீங்கள் வருந்துவீர்களா?**"

பாவ் கல்சூரி, "இல்லை, நான் அவனுக்காக வருத்தப்பட மாட்டேன்" என்றார்.

"**நீங்கள் வருந்த மாட்டீர்கள், ஆனால் ரமா வருந்துவார்**" என்று பாபா அவதானித்தார்.

அவர்கள் குருபிரசாத்தில் இருந்தபோது மெஹர்நாத் குறித்த எந்த செய்தியும் இல்லை, ஆனால் அவர்கள் மெஹராஸாத் திரும்பியபோது, அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தது தெரியவந்தது. குருபிரசாத்தில் பாபா மிகவும் அமைதியின்றி இருந்த அதே இரவில் மெஹர்நாத்தின் உடல்நிலை மோசமடைந்தது. பாதிரி அவனுக்கு ஹோமியோபதி மருந்தின் மூலம் சிகிச்சை அளித்தார், மேலும் அவன் ரத்தம் ஏற்றப்படாமலே குணமடைந்தான்.

மெஹர்நாத், ஷீலா இருவரும் பாவ் கல்சூரியை 'பாபுஜி' (BABUJI) என்று அழைப்பது வழக்கம். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், அவர்கள் வந்த வேளையில், பெண்டு, ஷீலாவிடம், "பாபுஜி என்னுடையவர்!" என்று கிண்டல் செய்யத் தொடங்கினார்.

வருத்தமடைந்த ஷீலா, "இல்லை, பாபுஜி என்னுடையவர்!" அவள், பாவ் கல்சூரியின் கையைப் பற்றிக்கொண்ட போது, பாபா என்ன குழப்பம் என்று தெரிந்து கொள்ள விரும்பினார், பெண்டு அவரிடம் கூறினார்.

பாபா, ஷீலாவிடம், "**இப்போது நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன்: பாபுஜி உன்னுடையவர், மெஹர்நாத் என்னுடையவர்**" என்றார்.

"இல்லை பாபா!" ஷீலா எதிர்ப்பு தெரிவித்தாள். "எனக்கு பாபுஜி, பாபா இருவரும் வேண்டும்!"

"**உங்களுக்கு பாபுஜி வேண்டுமெனில் பாபா எப்படி இருக்க முடியும்?**"

"அப்படியானால் எனக்கு பாபா மட்டுமே வேண்டும்!"

புன்னகைத்த பாபா, "**அது முடிவு செய்யப்பட்டு விட்டது; இப்போது கவலைப்படாதே!**" என்றார்.

பாபா, மெஹர்நாத்திடம் வினவினார், "**நீங்கள் பாபுஜியை விரும்புகிறீர்களா அல்லது உங்கள் தாயாரை விரும்புகிறீர்களா?**"

மெஹர்நாத், "எனக்கு பாபுஜியைக் குறித்து தெரியாது; நான் அம்மாவை நேசிக்கிறேன்" என்றார்.

பாபா, ஷீலாவிடம் அதே கேள்வியைக் கேட்டபோது, அவள், 'பாபுஜி!' என்று பதிலளித்தாள்.

பாபா சிரித்துக்கொண்டே குறிப்பிட்டார், "**இப்போது சிந்தித்து மீண்டும் சொல்லுங்கள்**" என்றதும், ஷீலா தனது தந்தையை அதிகம் நேசிப்பதாக மீண்டும் கூறினாள். பாபா, மெஹர்நாத்திடம் கேட்டார், "**நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? யாரை அதிகம் நேசிக்கிறீர்கள்?**"

மெஹர்நாத், "நான் பாபாவை நேசிக்கிறேன்!" என்று பதிலளித்தான்.

பாபா இரு குழந்தைகளையும் அரவணைத்துக் கொண்டார், அப்போது மெஹர்நாத் அவரிடம், "அக்டோபர் 22 அன்று எனது பிறந்த நாள். தயவுசெய்து என்னை மெஹராஸாத்திற்கு அழைக்கவும்" என்று கூறினான்.

பாபா சைகையால் தெரிவித்தார், "**நீங்கள் என்னை மிகவும் நேசிப்பதால் நான் உங்களை அழைக்க வேண்டும்!**"

அப்போது பாபா, ரமாவை நோக்கி, "**நான் உங்களை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் குழந்தைகளுடன் தனியாக வாழ்ந்து, என்னுடன் இருக்கும் பாவிற்கு உதவியாக இருப்பதன் மூலம், எனக்கு சேவை செய்கிறீர்கள். நான் பாவ் கல்சூரியைத் திருப்பி அனுப்புவதானால், இரவு கண்காணிப்புப் பணியை யார் செய்வார்கள்?**"

பாவ் கல்சூரி குடும்பத்தினர் பாபாவின் தொடர்பில் இருப்பதில் மிகவும் அதிர்ஷ்டசாலிகள், அவருடைய கருணை ஒன்றுதான் அவர்களை அவருக்கு அருகில் இருக்கும் வாய்ப்பை நல்கியது. அவரது சொந்த காரணங்களுக்காக, பாபா எப்பொழுதும் சில குழந்தைகளை தன் அருகில் வைத்திருந்தார்: 1920 ஆண்டுகளில் பிரேம் மற்றும் மெஹர் ஆசிரம சிறுவர்கள்; 1930, 1940களில் மெஹரு, அவரது சகோதரர்கள், சகோதரிகள், ஸவக் கொத்வால் மற்றும் பைதூலின் குழந்தைகள்; 1950 ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1960களிலும் ஷீலா மற்றும் மெஹர்நாத் கல்சூரி.

கைக்கோபாத், மன்ஸாரி, ஜங்க்ளே குடும்பங்கள் மற்றும் வாலு பவார் ஆகியோரை சந்தித்து, பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

மெஹராஸாத்தில், பாபா மதியம் 3:00 முதல் 4:00 மணி வரை இசைத்தட்டுகளில் கவாலி பாடல்களைக் கேட்கத் தொடங்கினார். செப்டம்பர் 14 அன்று, அஹமதுநகர் பஜன் குழுவின் இசை நிகழ்ச்சியைக் கேட்கும் மனநிலையில் இருப்பதாக பாபா சுட்டிக்காட்டினார், மேலும் அதை ஏற்பாடு செய்ய ஆதிக்கு எழுதுமாறு எரச் அறிவுறுத்தப்பட்டாலும், அவர்களுக்கு மூன்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன: **பாபாவை மகிழ்விப்பதற்காக மட்டுமே அவர்கள் அழைக்கப்படுவார்கள் என்பதை நன்கு அறிந்து, எவரும் பாபாவின் தரிசனத்தை நாடக்கூடாது; மலர் மாலைகளைக் கொண்டு வரக்கூடாது; பாபாவிடம் எவரும் தனிப்பட்ட கேள்விகளை எழுப்பக்கூடாது.**

மூன்று நாட்களுக்குப் பின்னர், 1961 செப்டம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணிக்கு, அஹமதுநகர் மையத்திலிருந்து பதினெட்டு பாபா-

அன்பர்கள் மெஹராஸாத்திற்கு வந்தனர்; ஒரு மணி நேரம் ருஸ்தம் காக்கா, அவரது மனைவி ஸில்லா காக்கு, 24 வயது பெண் உஷா குல்கர்னி, கோகிலா திவாரி ஆகியோர் பஜனைகள் பாடினர். அஹமதுநகரைச் சேர்ந்த பிற பலரும் கலந்து கொண்டனர், அவர்களில் நஸர்வான் ஸட்டா, அவரது சகோதரர் பிலோ மாமா, புர்ஜர் மேத்தா, அவரது மனைவி மெஹரு, ரங்கோலே, சகன், வாமன், டாக்கே போன்ற பலர் வந்தனர்.

பாபா மண்டலி மண்டபத்திற்குள் நுழைந்ததும், அஹமதுநகர் பஜனைக் குழுவைச் சேர்ந்த மூன்று அல்லது நான்கு உறுப்பினர்களை சிறிது நேரத்திற்காக அவர் முன்னால் அழைத்தார், பின்னர் அனைவரும் உள்ளே அழைக்கப்பட்டனர். வழக்கம் போல், இசை நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு, பாபா சிலரிடம் நலம் விசாரித்து குறிப்பிட்டார், "**நீங்கள் இங்கே இருக்கும் வேளையிலும், எனது ஏகாந்தவாசத்தில் எந்தத் தடையும் ஏற்படாமல் இருப்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இசையைக் கேட்கும் எனது திடீர் விருப்பத்தின் விளைவாக மட்டுமே நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள்.**"

மேலும், "**அடுத்த ஞாயிற்றுக்கிழமை மழை இல்லை என்றால், அஹமதுநகர் மையத்திற்கு வழக்கமாக வருகைதரும் என் அன்பர்கள்** (சுமார் 50 நபர்கள்) **அனைவரையும் நான் சந்திப்பேன்**" என்றும் அவர் தெரிவித்தார்.

முந்தைய நாள் பூனாவிலிருந்து வந்திருந்த மானேக் (MANEK) என்ற மாணவனிடம் பாபா, "**நீங்கள் ஏன் பூனாவில் படிப்பை விட்டுவிட்டு அஹமதுநகர் வந்துள்ளீர்கள்? நீங்கள் தேர்வில் தோல்வியடைந்தால் உங்கள் முகத்தைப் பார்க்க மாட்டேன்**" என்று குறிப்பிட்டார்.

மானேக், பிற நபர்களைப் போல நடித்து சிறப்பாக நையாண்டி செய்யக்கூடியவன்; அவனது தந்தை ருஸ்தம் காக்காவைப் போல நடித்து நையாண்டி செய்யுமாறு பாபா அவனிடம் கூறினார். அவன் அதைத் தொடங்குவதற்கு முன்னர், அங்கு வந்த ஸரோஷிடம், எதிர்வரும் அவரது இத்தாலி வணிகப் பயணத்தைப் பற்றி கேட்டு, பாபா அவருக்கு விளக்கினார், "**நீங்கள் அதிர்ஷ்டசாலி. என் மீதான உங்கள் அன்பினாலும், உங்கள் மீதான எனது பார்வையாலும், உங்கள் வியாபாரம் தொடர்ந்து சிறப்பாக நடக்கும். நீங்கள் எங்கிருந்தாலும் என்னை நினைவில் கொள்ள வேண்டும்.**"

'**உலகமும் அதன் விவகாரங்களும் முற்றிலும் பூஜ்ஜியம், எதுவுமே இல்லாத ஒன்றாகும்**' என்ற ஹஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை பாபா எடுத்துரைத்தார். மேலும் கூறினார்: "**ஸரோஷ் இங்கு இல்லாத காலகட்டத்தில், அடுத்த** 30 **ஆண்டுகளுக்குள், அனைத்தும் மறந்து போய்விடும். அன்பர்களுக்கு ஆறுதலாகவும், அடைக்கலமாகவும் இருக்கும் பாபா ஒருவரே நினைவுகூரப்படுவார்.**"

மானேக் தனது தந்தையார் பாடும் பாணியைப் பின்பற்றி, நிகழ்ச்சியைத் தொடங்கியது அனைவரையும் மகிழ்வித்தது. பாபா, ஸரோஷிடம், "**மானேக் நையாண்டியில் ஒரு நிபுணன்** (விகடன்) **என்று குறிப்பிட்டார்**. அவர்

மானேக்கிடம் கூறினார், "**அடுத்த முறை நீங்கள் ஸரோஷ், ஆதி இருவரையும் நையாண்டி வித்தை செய்வதைப் பார்க்க விரும்புகிறேன் - ஆனால் எந்தக் காரணத்திற்காகவும் நீங்கள் நான் செய்வதைப் போல செய்யக் கூடாது!**"

பின்னர் ஹார்மோனியத்தை இசைத்து, ருஸ்தம் காக்கா தலைமையில் பஜனை நிகழ்ச்சி தொடங்கியது. பாவ் கல்சூரி எழுதிய ஒரு பாடலை அவர் பாடியது, பாபாவைப் பெரிதும் மகிழச்செய்தது. பாவ் கல்சூரியின் பல பாடல்களை இசை அமைத்துப் பாடுமாறு பாபா அறிவுறுத்தினார். நிகழ்ச்சியின் முடிவில் பாபா ஆரத்தி பாடுவதை விரும்பவில்லை, அடுத்த ஞாயிற்றுக்கிழமை அதைச் செய்யலாம் என்று கூறினார்.

குழு புறப்படுவதற்கு முன்பு, பாபா சிலரைத் தழுவி, சிலரைக் கன்னங்களில் முத்தமிட்டு, அனைவருக்கும் கைநிறைய சாக்லேட்களை வழங்கினார். அதைத் தொடர்ந்து குழுவினர் வளாகத்திற்குள் சென்று மண்டலியுடன் கலந்துரையாடினர். "**40 நாட்களுக்கு முன்பு, பூனாவிலிருந்து திரும்பி வந்த நாளிலிருந்து, நான் இங்குக் காலடி எடுத்து வைக்கவில்லை, இன்றுதான் வருகிறேன்**" என்று கூறிக்கொண்டே பாபா வளாகத்திற்குள் நுழைந்தார். 'மண்டலி வற்புறுத்திய போதிலும், பாபா மண்டபத்தை விட்டு வெளியேறவில்லை' என்று எரச் மேலும் கூறினார். அஹமதுநகர் அன்பர்கள் கொண்டு வந்த இனிப்பு, கார உணவு பண்டங்கள் அனைத்தையும் உண்ட பின்பு, தேநீர் பரிமாறப்பட்டது; பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

இரண்டு முறை பாபா '**தமது ஏகாந்தவாசம், தடையின்றி தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதை அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்**' என்றும் கூறினார். இசை நிகழ்ச்சியை ரசிக்கும் அவரது திடீர் ஆர்வம் காரணமாக, அன்று அவர்கள் அங்கே அழைக்கப்பட்டனர். "**அடுத்த ஞாயிற்றுக்கிழமை, இப்போது இங்கு இருப்பவர்களைத் தவிர, என்னை ஏற்கனவே பார்த்தவர்கள் மற்றும் வாராந்திர கூட்டங்களுக்குத் தொடர்ந்து வருபவர்கள் மட்டுமே இங்கு வர வேண்டும். அடுத்த ஞாயிறு கூட்டத்திற்குப் பின்னர், அக்டோபரில் தொடங்கி மூன்று மாதங்களுக்கு, உங்களில் பெரும்பாலானோருக்கு மீண்டும் என்னைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்காது.**"

ஸரோஷுடனான உரையாடலின் போது, அஹமதுநகர் மைய ஊழியர்களிடையே நிலவிய சில கருத்து வேறுபாடுகள் குறித்து தெரிய வந்ததும், மையத்தின் செயல்பாடுகளில் அவர் மேலதிக தீவிரத்துடன் செயல்பட்டால், முன்னேற்றங்களை கொண்டு வர முடியும் என்ற ஸரோஷின் கருத்தைக் கேட்டு, பாபா நகைச்சுவையாகக் கூறினார், "**மையத்தின் செயல்பாட்டிற்கு ஒரு குறுகிய உந்துதலையும், உற்சாகத்தையும் வழங்க, கருத்து வேறுபாடு இன்றியமையாதது. குறிப்பாக, இந்த வேறுபாடுகள் மேலோட்டமாக இருக்கும் வேளையில் எவரும் கவலைப்பட வேண்டாம்**" என்றும் அவர் கூறினார்.

மெஹர் பாபாவின் சகவாசத்தில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக செலவழித்த பின்னர், அஹமதுநகர் குழுவினர் புறப்பட்டுச் சென்றனர்.

பாபா ஒரு வாரம் கழித்து, 1961 செப்டம்பர் 24 ஞாயிறு அன்று, இசைக்கலைஞர்கள் குழுவை மீண்டும் அழைத்தார். இம்முறை மேலும் பலர் அழைக்கப்பட்டதால், ஏறக்குறைய 70 அஹமதுநகர் பாபா-அன்பர்கள் வந்தனர். அனைவரும் மெஹராஸாத் வளாகத்தில் காலை 9:00 மணிக்கு முன்னரே ஒன்றுதிரண்ட வேளையில், பாபா அனைவரையும் தனித்தனியாக சந்தித்தார் - முதலில் பெண்மணிகள், பின்னர் ஆண்கள். சகனின் மகள் ஷகுந்தலா, கடந்த ஜூன் மாதத்தில் ஈன்றெடுத்த ஆண் குழந்தையுடன் பாபாவிடம் வந்தார். அனைவரையும் அன்புடன் தழுவி, சுமார் 9:30 மணிக்கு, கடிகாரத்தைச் சுட்டிக்காட்டி பாபா கூறினார், "**காலை சரியாக 10:30 மணி வரை, ஒரு மணி நேரம் இசை நிகழ்ச்சி தொடர வேண்டும், பின்பு பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, முழுக் குழுவும் வெளியே சென்று, தேநீருடன், சகன் அவருக்குப் பேரன் பிறந்ததைக் கொண்டாடக் கொண்டுவந்த எந்த சுவையான பண்டமாக இருந்தாலும் சரி, அதை உண்டு மகிழுங்கள். அந்த சிறுவனுக்கு நான், 'மெஹர்-ராம்' என்று பெயர் சூட்டினேன்.**"

மானேக் தனது மின்சார வயலினை இசைக்கத் தொடங்கும் முன்னர், ஒவ்வொரு வாரமும் அஹமதுநகருக்கு வரும்போதெல்லாம் அவன் எப்படிப் படிப்பில் கவனம் செலுத்துகிறான் என பாபா வினவினார். மானேக், பின்னர் அவனது கைவந்த கலையான நையாண்டி விகடத்தைக் கட்டவிழ்த்தான், மேலும் மலைப்பாங்கான பாதைகளைச் சுற்றித் திரியும் பறவையின் கிரீச்சொலி மற்றும் வாகனங்களின் எச்சரிக்கை ஒலியை, நயத்துடன் எழுப்பி அனைவரையும் மகிழச் செய்தான்.

அதற்குப் பிறகு, பாபா, பாவ் கல்சூரிக்கு எடுத்துரைத்த இந்திப் பாடலை முதலில் ருஸ்தம் காக்காவிடம் பாடுமாறு கூறினார். மேலும் பல பாடல்கள், ஃபிரான்சிஸ் பிராபஸோனின் ஆங்கில கவிதை ஒன்றை, இந்திய இசைப்பாணியில் ருஸ்தம் காக்கா வாசித்தார். ஒரு கட்டத்தில் அஹமதுநகர் கல்லூரியின் பேராசிரியர் அப்துல் கரீம் கான் (ABDUL KARIM KHAN), பாபாவைப் புகழ்ந்து எழுதிய உருது வரிகளை வாசிக்க அனுமதித்து, பாபா பாடலின் இடையே, ருஸ்தம் காக்காவிடம் அந்த வரிகளை கஸல் வடிவில் இசைக்குமாறு அறிவுறுத்தினார்; மேலும் அவர் ஸைகல் (SAIGAL) மற்றும் காலிபின் (GHALIB) கஸல்களின் இரண்டு பதிவுகளையும் இசையமைத்து வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, பாபா இந்த சம்பவத்தை விவரித்தார்: "**(முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்), வழக்கமாக மது அருந்தும் காலிப் (GHALIB), ஒருமுறை மதுபோதையில் வீதியில் வீழ்ந்து கிடந்தபோது, அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டார். நீதிபதி தற்செயலாக அவரது சீடராக இருந்ததால், காலிப் மீது அபராதம் விதிக்கப்பட்டதை நீதிபதி அவரது சொந்த பணத்திலிருந்து செலுத்தினார். அதன்பின் காலிப் கூறினார்:**

**கடன்பட்டு மது அருந்த செலவு செய்தோம்**
**ஆனால் எப்போதாவது நமது பணமில்லாத நிலை**
**அம்பலப்படும் என்று எங்களுக்குத் தெரியும்.**

பாபா, காலிபின் இந்த இரண்டு வரிகளை பாவ் கல்சூரிக்கு எடுத்துரைத்தார்.

பாபா, டாக்கேயிடம் 'நீங்கள் கஸல்களை இயற்றுவதுண்டா' என்று கேட்டதற்கு, அவர் 'சில ஆண்டுகளுக்கு முன்பு முயற்சித்ததாகவும், ஆனால் சீராக அமையவில்லை' என்றும் கூறினார். காக்கா சிஞ்சோர்க்கரிடம் பாபா அதையே கேட்டார், அவர் சிரித்துக்கொண்டே, கஸல் எழுதுவது குறித்து முதலில் அவருக்கு எதுவும் தெரியாது என்று ஒப்புக்கொண்டார். அடுத்த வரிசையில் அமர்ந்திருந்த ஃபெராம், நகைச்சுவையான பாடல் வரிகளை எதுகை மோனையுடன் அடிக்கடி எழுதுவது வழக்கம் என்றாலும், கஸல்களை ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

இசை நிகழ்ச்சியின் நிறைவில், அன்பர்கள், ஒருவர் பின் ஒருவராக பாபாவின் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, பின்னர் ஒவ்வொருவரும் சிற்றுண்டி பரிமாறப்பட்ட வளாகத்திற்குள் நுழைந்தனர். பாபாவும் வெளியே வந்து சுமார் அரை மணி நேரம் குழுவுடன் இருந்தார்.

பாபா, நஸர்வான் ஸட்டாவிடம் அவரது தொண்டு நிறுவனத்தைப் பற்றி கேட்டார். (பல வருடங்களாக ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்து, அவர்களுக்காக பள்ளிக்கூடம் ஒன்றை நடத்தி வந்தார்). பாபா பின்னர் ஒன்பது வயது சிறுவனான ராஜன் திவாரியை (RAJAN TIWARI) தனக்கு முன் அழைத்து, காலிபின் இந்த ஈரடிக் கவிதையை மொழியுமாறு சைகையால் தெரிவித்தார்:

**காலிப்! மதுபான சத்திரத்தில் நுழைவதற்கு முன்**
**ஜாக்கிரதையாக இருக்கவும்!**
**இங்கே, ஒருவர் கவனமாக இல்லையெனில்,**
**தலைப்பாகை பறந்துவிடும்!**

(அதாவது, ஒருவரின் 'நான்' எனும் அகந்தை நிர்மூலமாக்கப்படும்!)

ராஜன் அதைத் தொடர்ந்து, மேலும் ஓர் ஈரடிக் கவிதையை மொழிந்தான். சில நிமிடங்களுக்குப் பிறகு, வானொலியில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வர்ணனைகளைக் கேட்பது போன்ற போலி வர்ணனைகளை எடுத்துரைக்க பாபா மீண்டும் அவனை அழைத்தார். அவன் அதை மிகவும் சிறப்பாகச் செய்ததைக் கண்டு, பாபா அகமகிழ்ந்து, ராஜனைத் தழுவி முத்தமிட்டார்.

காலை 10:30 மணிக்கு, அஹமதுநகர் குழுவினரை தங்கள் இல்லங்களுக்குப் புறப்படும்படி பாபா அறிவுறுத்தினார்.

1961 அக்டோபர் 1 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணிக்கு, ஹபீப் (HABIB) என்றழைக்கப்பட்ட கவாலி பாடகர் மெஹராஸாத்திற்கு வந்து, பாபாவின் முன்னிலையில் பாடினார். பாபா அவரது நிகழ்ச்சியை மிகவும் ரசித்தார்.

அஹமதுநகரிலிருந்து சில அன்பர்களும் அழைக்கப்பட்டனர், அதே போல, மெஹர்வான் ஜெஸவாலாவும் பூனாவிலிருந்து வந்து மெஹராஸாத்தில் அன்றிரவு தங்கினார்.

அக்டோபர் மாதத்தில், பாபா, மெஹராஸாத்தில் ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்த போதிலும், பாடகர்களைத் தவிர, குறிப்பிட்ட பணிக்காகவோ அல்லது தற்செயலான வருகைக்காகவோ எப்போதேனும் எவரையாவது அழைப்பது வழக்கம். அக்டோபர் 2 அன்று, கோஹெரின் சகோதரி கேட்டி, மும்பையிலிருந்து ஒரு நாளுக்காக அனுமதிக்கப்பட்டார். அடுத்த நாள், பாபா, பெண்மணிகளுடன் பிம்பல்காவ்ம் நீர் வள நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் உயரமான மரங்களின் கீழ் உலா வந்தார். சில நாட்களில் காலை பதினொரு மணியளவில், பாபா மெஹராஸாத் அணுகு சாலை வழியே, வரிசையாக இருந்த மிகப்பெரிய மாமர நிழலில் நடந்து செல்வதை வழக்கமாகக் கொண்டார்.

ஏற்கனவே அறிவுறுத்தியதற்கு இணங்க, ரானோ இந்த நேரத்தில் ‘நான்கு பயணங்கள்’ (THE FOUR JOURNEYS) என்ற தலைப்பில் ஒரு விளக்கப்படத்தைத் தயாரிக்கத் தொடங்கினார்.

அனைத்து கடிதப் பரிமாற்றமும் நிறுத்தப்பட்டாலும், இன்னும், உலகம் முழுவதிலுமிருந்து மக்கள் ஆதி சீனியருக்கு எழுதுவதுண்டு. அந்தக் கடிதங்களை மெஹராஸாத்திற்கு அனுப்பும் வேளையில், மணி, எரச் இருவரும் பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

நியூயார்க் நகரைச் சேர்ந்த ஒலிவியா மாவ்ம் (OLIVIA MAUGHAM) 1958ஆம் ஆண்டு மர்டில் பீச் மையத்தில் பாபாவை சந்தித்தார். 1961 அக்டோபர் 19 அன்று, லெபனான் (LEBANON) நாட்டிற்குச் செல்லும் வழியில், அவரும், கணவரும் மும்பையில் இருப்பதாகவும், பாபாவைப் பார்க்க விரும்புவதாகவும் ஆதிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார். ஆதி இந்தத் தகவலை மெஹராஸாத்திற்கு அனுப்பியதும், ‘**பாபா, ஏகாந்தவாசம் மேற்கொள்வதால் அது சாத்தியமில்லை, பாபா அவர்களுக்கு அன்பையும் ஆசீர்வாதங்களையும் அனுப்புவதோடு, அவர் உங்களுடன் இருக்கிறார்**’ என்ற உறுதிமொழியுடன் ஒலிவியாவிற்கு தெரிவிக்கப்பட்டது.

பல ஆண்டுகளாக பாபாவின் இரவு கண்காணிப்பாளராக இருந்த ஸவக் கொத்வால், 1958இல் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா பயணங்களை நிறைவு செய்து பாபா திரும்பியதிலிருந்து, மும்பையில் அவரது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். ஸவக்கின் ஆரோக்கியம் மோசமாக இருந்த நிலையில், அவருக்கு எந்தத் தொழிலும், வருமானமும் இல்லாததால், அவரது மனைவி நர்கிஸ், மகன் ஆதி ஆகியோருடன் குடும்பத்தைப் பராமரிப்பது கடினமாகிவிட்டது. நர்கிஸ் விரக்தியில், அவருடன் தற்கொலை செய்து கொள்ளுமாறு ஸவக்கிடம் கெஞ்சினார்.

இந்தக் கடுமையான நடவடிக்கையை இருவரும் எடுக்க முடிவு செய்த அந்த நாளில், பாபா அவர்களின் நிலையைக் குறித்து விசாரித்து, ஆதியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. நர்கிஸ் எல்லாவற்றையும் விரிவாக எழுதியபோது, பாபா ஏகாந்தவாசத்தில் இருப்பதாகவும், தற்போது தொந்தரவு செய்ய முடியாது என்றும் தெரிவித்து, ஆதி அவர்களுக்கு ரூ.100 அனுப்பி வைத்தார். சில நாட்களுக்குப் பிறகு, பாபா, ஸவக்கை மெஹராஸாத்திற்கு அழைத்து, அவருடைய பிரச்சனைகளைக் குறித்து வினவினார். கவலைப்பட வேண்டாம் என்று பாபா உறுதியளித்து ரூ 20 வழங்கினார். ஸவக் மும்பைக்குத் திரும்பிச் சென்ற குறுகிய காலத்தில், அவருடைய மகன் ரூ.300 மாத ஊதியத்தில் ஒரு நல்ல வேலையில் இணைய முடிந்தது.

இந்த நேரத்தில் ரமா, ஷீலா, மெஹர்நாத் ஆகியோர் அவ்வப்போது மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். ஒரு முறை பாபா, ரமாவிடம், "**இரண்டு சிறு குழந்தைகளுடன் தனியாக வாழ்கிறீர்கள். இரவில் திருடன் உங்கள் வீட்டிற்குள் நுழைந்தால் என்ன செய்வீர்கள்?**" என்று கேட்டார். அவர் தன்னை முழுவதுமாகப் போர்த்திக்கொண்டு தூங்குவது போல பாசாங்கு செய்வதாக ரமா பதிலளித்தார்.

அவர்கள் மெஹராபாத்திற்குத் திரும்பிச் சென்ற சில நாட்களுக்குப் பிறகு, தஸரா தினத்தன்று (1961 அக்டோபர் 19) இரவில் அவர்கள் தூங்கிக் கொண்டிருந்த வேளையில், திருடர்கள் குடும்பக் குடியிருப்பில் புகுந்து, ரமாவின் தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். ஆனால், தன்னை போர்த்திக்கொண்டு தூங்குவதற்கு பதிலாக, ரமா அவர்களை எதிர்கொண்டு துரத்தினார். அதிர்ஷ்டவசமாக, பாபாவின் அருள் பார்வை காரணமாக, கொள்ளையர்கள் அவரை எதுவும் செய்ய முடியவில்லை. திருடர்கள் நகையைப் பறித்ததில் அவரது கழுத்தில் லேசான காயம் மட்டுமே ஏற்பட்டது.

அடுத்த முறை ரமா, பாபாவை சந்தித்தபோது, அவர் நடந்த சம்பவத்தை எடுத்துரைத்தார். பாபா, ரமாவிடம் கூறினார்: "**நான் உங்கள் உயிரைக் காப்பாற்றினேன்! இப்போது அதை மறந்துவிடுங்கள். ஒரு நாள், உங்கள் தங்க ஆபரணங்களைத் திருப்பித் தருவேன். திருடன் உங்களுக்கு உபகாரம் ஒன்றைச் செய்துள்ளான்; அவன், உங்கள் நண்பன், எதிரி அல்ல. உங்களுக்கு இதைக் குறித்து எதுவும் தெரியாது. அவன் தங்க ஆபரணங்களை எடுத்துக்கொண்டதோடு, உங்கள் தீய மனப்படிவங்களில் பலவற்றை எடுத்துச் சென்றான், அதை நினைவில் வைத்துக் கொள்ளாதீர்கள்; இழப்பை நினைத்து வருந்தாதீர்கள், உங்கள் இதயத்தில் மகிழ்ச்சியாக இருந்தால், உங்களுக்கு அதிக நன்மை பயக்கும், தீய மனப்படிவங்கள் அவனைச் சென்றடையும். கவலைப்படாதீகள்; அனைத்தும் நான் விரும்பியபடியே நடக்கிறது.**"

கொள்ளையர்கள் ஒருபோதும் பிடிபடவில்லை. பல நாட்களுக்குப் பிறகு, பாபா, ரமாவிற்கு ஒரு தையல் இயந்திரத்தைப் பரிசாக வழங்கினார்.

1961 அக்டோபர் 22 ஞாயிறு அன்று, ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிக்கு இணங்க, மெஹர்நாத்தின் எட்டாவது பிறந்தநாளில் மெஹர்நாத், ரமா, ஷீலா மூவரையும் மெஹராஸாத்திற்கு அழைத்தார். அவர் முதலில் மெஹர்நாத்தையும் பின்பு ரமா, ஷீலா இருவரையும் தழுவினார். பாபா, மெஹர்நாத்திடம், **“உங்கள் கைகளில் என்ன வைத்திருக்கிறீர்கள்?”** என வினவினார்.

மெஹர்நாத், “பாபுஜிக்கு ஒரு சால்வை” என்றார்.

பாபா குறிப்பிட்டார், **“நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள், ஆனால் நீங்கள் எனக்காக எதையும் கொண்டு வரவில்லை. இது நீங்கள் பாபுஜியை அதிகமாக நேசிக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது.”**

மெஹர்நாத் வேகமாக, “அம்மா இந்த சால்வையைக் கொண்டு வந்துள்ளார், நான் அல்ல. நான் உங்களுக்காக மட்டும் ஒன்றைக் கொண்டு வந்திருப்பேன் பாபா” என்று கூறியது பாபாவை மகிழச் செய்தது; அதன் பின்னர், ஒவ்வொரு வருடமும் மெஹர்நாத்தின் பிறந்தநாளில் முழுக் குடும்பத்தையும் மெஹராஸாத்திற்கு அழைப்பது வழக்கமாக நடந்தது.

1961 நவம்பர் 4ஆம் தேதி, பாபாவிற்கு அவரது முன்கைகள், கைகள் மற்றும் மணிக்கட்டுகளை வலுப்படுத்த உதவும் உடற்பயிற்சி கருவிகள் வழங்கப்பட்டன; அவர் அதன் உதவியுடன், தினமும் சிறிது நேரம் பயிற்சி செய்துவந்தார். அன்று ஒரு நாளுக்காக ஆதி, கேட்டியை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். இசை நிகழ்ச்சி போன்ற பொழுதுபோக்குகள் இல்லாமல், பல ஞாயிற்றுக்கிழமைகள் கடந்த பின்பு, சமீபத்தில் அஹமதுநகர் மையத்தில் கலந்துகொள்ளத் தொடங்கிய ஒரு புதிய பாடகரின் குரல் வளம் மற்றும் திறமையைப் பாராட்டி ருஸ்தம் காக்காவிடமிருந்து கடிதம் வந்தபோது பாபாவின் இசை-மனநிலை புத்துயிர் பெற்றது.

பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்தது; மேலும், அவர் சாதாரண உலக விஷயங்களில் தமது ஆர்வத்தை இழக்கத் தொடங்கியது போலத் தோன்றியது. ஒருவேளை இசை நிகழ்ச்சி அவரது மனநிலையை மாற்றலாம் என மண்டலி நினைத்து, ருஸ்தம் காக்கா, ஓர் இசைக் குழுவுடன் 1961 நவம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை மெஹராஸாத்திற்கு வருமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் காலை 10:00 மணிக்கு வந்தபோது பாவ் கல்சூரி, “பாடகர் எங்கே?” என வினவினார்.

பதினாறு வயது இளம் பெண்ணைச் சுட்டிக்காட்டி, “அவர்தான் பாடகி” என்று பதிலளித்தார் ருஸ்தம் காக்கா.

“இவரா? ஒரு சிறுமியாக இருக்கிறார்” பாவ் கல்சூரி நம்பமுடியாமல் கேட்டார்.

ருஸ்தம் காக்கா மீது அவர் மிகவும் எரிச்சலடைந்தாலும், பாவ் கல்சூரி அமைதியாக இருந்தார். பாபா எப்பொழுதும் சிறப்பாகப் பாடுவதைப் பாராட்டினார், மேலும் புதிய பாடகர்களை வரவேற்றார். இந்த இளம் பெண்ணின் பாடலை பாபா

விரும்புவாரா? ருஸ்தம் காக்கா, பாபாவின் நேரத்தை வீணடிக்கிறாரா? ஆனால், அந்த இளம் பெண் பாபா முன்னிலையில் பாடத் தொடங்கியபோது, அங்கிருந்த அனைவரும் அவரது குரல் வலிமையையும், அசாதாரணமான இனிமையையும் கண்டு ஆச்சரியமடைந்தனர். பாபாவும் அந்த சிறுமி பாடுவதை விரும்பி அவருக்கு ஆசிகளை வழங்கினார்.

அந்த இளம் பெண்ணின் பெயர் லதா லிமாயே (LATA LIMAYE). அவரது தந்தை இராணுவக் கணக்குத் துறையில் பணிபுரிந்தார், மேலும் சமீபத்தில் நிகழ்ந்த பூனா வெள்ளப்பெருக்கில், லிமாயே குடும்பம் வீடு, உடைமைகள் அனைத்தையும் இழந்ததால், அஹமதுநகருக்கு பணி மாற்றத்திற்காக விண்ணப்பித்திருந்தார். பாபாவின் முன்னிலையிலான அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, லதா தனது இசைப் பயிற்சியில் அதி விரைவாக முன்னேறி, அகில இந்திய இசைப் போட்டியில் கலந்துகொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டார்; அந்தப் போட்டிக்காக டெல்லி செல்வதற்கு முன்பு, பாபா அவரை இரண்டு முறை அழைத்து, டெல்லியில் அவர் பாடும் பாடலை அவர் முன்னிலையில் பாட வைத்தார். இதன் விளைவாக, லதா லிமாயே ஜனாதிபதி பதக்கத்தை வென்றார். அவர் திரும்பி வந்த பின்பு, பாபா அவரை மெஹராஸாத்தில் பாடுவதற்காக அடிக்கடி அழைத்தார். லதாவின் இசைக் கல்விக்கு நிதியுதவியும் வழங்கினார்.

கடந்த இரண்டு மாதங்களாக, எரச்சின் உடல்நிலை மிகவும் சீரில்லாமல் இருந்தது. ஆகஸ்ட் நடுப்பகுதியில் அவர் கடுமையான தொற்று நிமோனியாவால் (VIRAL PNEUMONIA) பாதிக்கப்பட்டார், மேலும் ஒரு மருந்து உட்கொண்டதன் எதிர்வினையால், கடுமையான சிவப்பு இரத்த அணு சிதைவு ஏற்படவே, அவர் 1961 அக்டோபர் 8 அன்று அஹமதுநகர், 'ஸால்வேஷன் இராணுவ பூத் மருத்துவமனை'யில் (SALVATION ARMY BOOTH HOSPITAL) இரத்தமாற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டார், ஆஸ்திரேலிய நாட்டு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எர்னஸ்ட் பெடர்ஸன் (DR. ERNEST PEDERSON), எரச்சிற்கு சிகிச்சை அளித்தார். மெஹர்ஜி இந்த நேரத்தில் மெஹராஸாத்தில் இருந்தவர், முதல் சில இரவுகளில் அவருடன் மருத்துவமனையில் தங்கினார். கெய்மாயும், அக்பர் அச்சகத்திலிருந்து எரச்சின் குடும்பத்தைச் சேர்ந்த பிற உறவினர்களுடன் அடுத்த நாள் வந்தார்.

எரச் சில வாரங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டியதாயிற்று; பாபா, சில மண்டலியுடன் அவரைப் பார்க்க இரண்டு முறை - அக்டோபர் 12, 22ஆம் தேதிகளில் - அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். எரச், அக்டோபர் 31 அன்று மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பி, முதலில் அக்பர் அச்சகம், பின்பு மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அதைத் தொடர்ந்து மூன்று வாரங்கள் பூனா பிந்த்ரா ஹவுஸில் தங்கி, உடல்நிலை சீரானதும் நவம்பர் 23 அன்று மெஹராஸாத் திரும்பினார்.

அந்த நேரத்தில், அக்பர் அச்சகத்திலிருந்து, எரச்சின் உறவினர் அலு ஸட்டா, தனது சகோதரி ரோஷன் கேரவாலா மூலமாக, 'எரச்சை குணப்படுத்திக்

காப்பாற்றுமாறும், எரச்சிற்கு பதிலாக, அவர் உயிரைத் துறக்க அனுமதிக்குமாறும்' பாபாவிடம் கெஞ்சி கடிதம் எழுதினார்! அலு, தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு, உடல் ஊனமுற்ற நிலையில் இருந்தார். அலு, அவரது சகோதரி தூன் இருவரும் சிறுவயதிலிருந்தே இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். 40 வயதான அலுவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது, அவர் எரச்சிற்காக உயிரைத் துறக்கத் தயாராக இருந்தார்.

பாபா ஒருமுறை பிந்த்ரா ஹவுஸிற்கு விஜயம் செய்த வேளையில், அவிலாவின் கிறிஸ்தவ ஸெயின்ட் தெரேஸாவின் (CHRISTIAN SAINT THERESA OF AVILA) புத்தகத்திலிருந்து ஒரு பகுதியைப் படிக்குமாறு கூறி, அலுவை ஆறுதல்படுத்தினார், "**நீங்கள் எனது ஸெயின்ட் தெரேஸா. அவரைப் போலவே நீங்களும் என்னை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இறுதி மூச்சை விடும் வேளையில் என்னைக் காண்பீர்கள்; நானும் உங்களைப் பார்ப்பேன்; உங்கள் மரணத்திற்குப் பின்னர் இறைப் பேரின்பத்தை வழங்குவேன்.**"

இதைக் கேட்ட அவரது சகோதரி தூன், "எனக்கு என்னவாகும்?" என வினவியபோது, பாபா சிரித்துக்கொண்டே அவரைத் தழுவினார். சகோதரிகள் மிகவும் நெருக்கமாக இருந்தனர்; மேலும், தூனை சிறிது காலம் பூனாவில் தங்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், அலு ஸட்டாவின் உடல்நிலை மோசமானது. அவர் உண்பதையும் அருந்துவதையும் நிறுத்திவிட்டார். 1961 நவம்பர் 18 சனிக்கிழமையன்று, "நான் இந்த உலகில் நீண்ட காலம் வாழப்போவதில்லை என உணர்கிறேன், நான் செல்வதற்கு முன்னர் உங்கள் தரிசனத்திற்காக ஏங்குகிறேன். எனவே தயவுசெய்து வந்து என்னைப் பார்க்கவும்" என்று பாபாவிற்கு மீண்டும் எழுதுமாறு தனது சகோதரியிடம் கேட்டுக்கொண்டார். அன்றைய தினம் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்ததோடு, உடல்நிலையும் சீரில்லாமல் இருந்தது. பாபா, அலுவைப் பார்க்க வருவதற்கான வாய்ப்பில்லை என்று ரோஷன் அவரிடம் விளக்கினார். ஆயினும்கூட, அலுவின் செய்தியை பாபாவிற்குத் தெரிவிக்க, கடிதம் ஆதியின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

எதிர்பாராத விதமாக, பாபாவிற்கு அவரது செய்தி கிடைத்ததும், அவர் அலுவைப் பார்க்க விரும்புவதாகக் கூறவே, டாக்டர் கோஹெர், பெண்டு, காக்கா ஆகியோருடன் பிற்பகல் 3:00 மணியளவில் காரில் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது பாபாவிற்கு ஜுரமும், இடுப்பு வலியும் இருந்தது. புறப்படுவதற்கு முன்பு, கோஹெர் அவரைத் தடுக்க முயன்றும், பாபா செல்ல விரும்புவதாக வலியுறுத்திக் கூறினார். காரிலிருந்து இறங்கியதும் ரோஷனிடம் முதலில் "**அலு இன்னமும் உயிருடன் இருக்கிறாரா?**" என வினவி, அவரைப் பார்க்க அக்பர் அச்சகத்திற்கு உள்ளே சென்றார்.

பாபா, அலுவின் அருகில் கட்டிலில் அமர்ந்து அவரைத் தழுவி, "**இந்த உலகம் பூஜ்ஜியம்**" என்று அவரிடம் கூறினார். "**இதில் எந்த அர்த்தமும் இல்லை. நீங்கள் பார்க்கும் ஒரு திரைப்படத்தைப் போலவே இது உண்மை**

**என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் அது உண்மையல்ல. இந்த வாழ்க்கை ஒரு திரைப்படம் போன்றது. இப்போது எல்லோரையும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு என்னைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள்.**"

பாபா ஒரு டம்ளர் ஷர்பத்தைக் கேட்டார். அதில் பெரும்பகுதியை அருந்திவிட்டு மீதத்தை அலுவிடம் கொடுத்து, ஆறுதல்படுத்தினார், "**நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான் உங்கள் மூலமாக பல பணிகளைச் செய்தேன், மேலும் செய்ய வேண்டியது ஏராளம் உள்ளது.**" ஏற்கனவே குறிப்பிட்டது போல, பாபாவிற்கு ஜுரம் இருந்தது, உடல் வியர்த்தது. சட்டைப்பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து நெற்றி வியர்வையைத் துடைத்து, அலுவின் வலது கையில் அதைக் கட்டுமாறு கூறி ரோஷனிடம் கொடுத்தார்.

பாபா, அலுவிடம் சைகையால் தெரிவித்தார்: "**இதோ பாருங்கள், எனது தாமன்** (மேலங்கி) **உங்கள் பிடியில் உறுதியாக உள்ளது. உலகம் முழுவதையும் மறந்துவிடுங்கள். இது அனைத்தும் மாயை. நான் ஒருவனே உண்மையானவன். என்னை மட்டுமே நினைத்து எனது நாமத்தை உச்சரியுங்கள். கவலைப்படாதீர்கள், நான் உங்களுடன் இருக்கிறேன்.**" அலுவின் படுக்கைக்கு எதிரே இருந்த சிறிய குளிர்சாதனப்பெட்டியின் மேல் பாபாவின் புகைப்படத்தை வைக்குமாறு ரோஷனிடம் பாபா அறிவுறுத்தினார்; அதனால் அவருடைய நேரடிப் பார்வை அதில் விழும் வேளையில், அலுவின் முழு கவனமும் அந்தச் சித்திரத்தில் இருக்கும். அதற்குப் பிறகு பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

அன்று மாலை அலு, கோமா நிலைக்குத் தள்ளப்பட்டார், சுயநினைவு திரும்பவில்லை. நான்கு நாட்களுக்குப் பின்னர், அலு ஸட்டா அவரில் என்றென்றும் இணைந்தார், இறுதியில், அலு பல ஆண்டுகளாக அனுபவித்த தாங்கொணா துன்பத்திலிருந்து விடுபட்டார். பாபா இவ்வாறு அவதானித்தார்: "**அவர் என்னிடம் வந்துள்ளார். நான் அவரை ஒரே நொடியில் குணப்படுத்தியிருந்திருக்க முடியும், ஆனால் அவர் சிரமப்படுவதே சிறந்தது. இனி மறுபிறவி எதுவும் இல்லை!**"

1961 ஜூன் மாத நடுப்பகுதியில், டெஹ்ரா டூனில் வாழ்ந்து வந்த குமாருக்கு, '**இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, ரிஷிகேஷில் வாழ்ந்த மஸ்த் நீல்கந்த்வாலாவை தொடர்பு கொள்ள வேண்டும் என்பது பாபாவின் விருப்பம்**' என்று தெரிவிக்கப்பட்டது; '**பாபா எந்த நேரத்திலும் மஸ்தை அழைக்க விரும்பலாம் என்ற நோக்கத்தில் அவருடனான தொடர்பைத் தக்கவைத்துக் கொள்ளுமாறும்**' குமாருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஐந்து மாதங்களுக்குப் பிறகு, பாபா, நீல்கந்த்வாலாவை மெஹராஸாத்திற்கு அழைத்து வருமாறு குமாருக்குக் கடிதம் எழுதினார். பாபாவிடம் திரும்பி வரும் ஏக்கத்தில் இருந்த குமார், மஸ்த் அவருடன் வர முழு மனதுடன் ஒப்புக்கொண்டால் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும், எனவே, அவர் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும். இறுதியாக, நீல்கந்த்வாலா வருவதற்கான விருப்பத்தை

வெளிப்படுத்தியது மட்டுமின்றி, மிகுந்த ஆர்வத்துடன் காணப்பட்டார். மஸ்தை உடனே அழைத்து வருமாறு பாபா, குமாருக்குத் தொலைத்தந்தி அனுப்பினார். இருவரும் 1961 நவம்பர் 25 அன்று வந்ததும், பாபா, மஸ்துடன் பணிபுரியத் தொடங்கினார். நீல்கந்த்வாலா தங்கியிருந்த பத்து நாட்களில், எந்த நேரத்திலும், அவருக்கு வெளியேற வேண்டும் என்ற திடீர் உந்துதல் ஏற்படக்கூடும் என்பதை அறிந்த பாபா, வழக்கத்தை விட அதிக மணிநேரங்களில், முழு வீச்சுடன் பணிபுரிந்தார்; அவருடன் தினமும் குறைந்தது ஒரு மணிநேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். பாபாவின் பணி நிறைவடைந்ததும், டிசம்பர் 5 அன்று குமாருடன் நீல்கந்த்வாலா ரிஷிகேஷுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். பாபாவுடனான அவரது கடைசி சந்திப்பு இதுவாகும், இதற்குப் பிறகு மஸ்த் உயிரைத் துறந்தார். நீல்கந்த்வாலா தனது உடல் பாரத்திலிருந்து தன்னை விடுவிக்குமாறு பாபாவிடம் வேண்டினார், இறுதியில் அவருடைய விருப்பம் நிறைவேறியது.

காலம் குறிப்பிட்டதற்கு இணங்க, "நீல்கந்த்வாலாவுடனான இந்தக் கடைசி தொடர்பு, மிகவும் குறிப்பிடத்தக்கது. இத்துடன் பாபாவின் மஸ்த் பணி முடிவுக்கு வந்தது; மேலும் அவர் பூமியில் தனது வாழ்நாள் முழுவதும் இறை போதையில் இருந்த வேறு எந்த ஆத்மாவையும் தொடர்பு கொள்ளவில்லை."

நவம்பர் 1961 நடுப்பகுதியில், மனோகர் ஸாக்கரே, அவரது மனைவி மோனா, குஸூம் மோக்கம் ஸிங் மற்றும் டில்லியில் வாழும் நெருங்கிய பாபா-அன்பர்கள், அங்கு விரைவில் திறக்கப்படவிருந்த இந்தியத் தொழில் கண்காட்சியில், பாபா-இலக்கியங்களைக் கொண்ட தகவல் நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து ஆதிக்கு எழுதினர். ஆதி பாபாவுடன் கலந்தாலோசித்த போது, அவர் அதற்கு ஒப்புதல் வழங்கவே, துண்டுப் பிரசுரங்கள் மற்றும் புத்தகங்களின் பெரிய பொட்டலங்கள் அனுப்பப்பட்டன. இந்த முயற்சி, பலர், பாபாவைப் பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பாக அமைந்தது. 1964ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் நடந்த உலக கண்காட்சியின் போது, அமெரிக்காவில் வாழும் அவர்களது பாபா-அன்பர்களுக்கு இது ஒரு தூண்டுதலாக அமைந்தது.

1960ஆம் ஆண்டு குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த வேளையில், ஹமிர்பூரைச் சேர்ந்த பல அன்பர்கள், பளிங்குக் கல்லாலான மெஹர் பாபாவின் ஆளுயர சிலையை உருவாக்கி, அதற்காக, நௌரங்கா கிராமத்தில் கட்டப்பட்ட ஒரு கோவிலில் நிலைநிறுத்தும் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர். பாபா அவர்களின் விருப்பத்திற்கு இணக்கம் தெரிவித்த அதே நேரத்தில், '**அவரது சிலையை வெறுமனே சடங்கு சம்பிரதாய வழிபாட்டின் மையமாக மாற்றக்கூடாது**' என எச்சரித்தார்; கோவில்கள் மற்றும் சடங்குகள் பற்றி அடிக்கடி கூறியதை பாபா அவர்களுக்கு நினைவூட்டினார், கடவுளின் உண்மையான உறைவிடம் இதயம் மற்றும் சக உயிர்களுக்கு அன்புடன் சேவை செய்வதே சிறந்த வழிபாடு.

அடுத்த ஒன்றரை ஆண்டுகளில், கோயிலும் சிலையும் எழுப்பப்பட்டது, ஆனால் 1961 நவம்பர் 25-27 தேதிகளில் நௌரங்காவில் ஆண்டுதோறும்

நடைபெறும் மேளா தொடங்கும் வரை, சிலையின் திறப்பு விழா நடைபெறவில்லை. அதற்காக, ஆதி சீனியர், மஹாராணி ஷாந்தாதேவி இருவரையும் பாபா நௌரங்காவிற்கு அனுப்பி வைத்தார். மெஹர் பாபா தனிப்பட்ட முறையில் பயன்படுத்திய பலவிதமான பொருட்கள் (அதிகமாக பயன்படுத்தப்பட்ட கோட், ஒரு ஜோடி பாத அணி, ஒரு பழைய கிரிக்கெட் மட்டை, 1922ஆம் ஆண்டு பாபா கையால் எழுதிய கடிதம், அவரது இளமைப் பருவத்தில் சேகரிக்கப்பட்ட தங்க பழுப்பு நிற முடியின் சுருள்கள் இதுபோன்ற பல) மெஹர்தாஸ் மூலமாக மெஹராஸாத்திலிருந்து அனுப்பப்பட்டன. இந்தப் பொருட்கள் கோயிலில் காட்சிப்படுத்தப்பட்டு அன்பர்கள் வழிபடுவதற்கும், அதன் மூலம் தரிசனம் அடையப் பெறுவதற்கும் வாய்ப்பாக இருந்தது. நவம்பர் 26ஆம் நாள் முக்கிய விழா நடந்தது. சிலை ஸ்தாபிக்கப்பட வேண்டிய கட்டிடத்திற்கு மெஹர் கோயில் (மெஹர் மந்திர் - MEHER MANDIR) என்று பெயரிடப்பட்டது, ஆனால் அன்றைய தினம் பாபா அனுப்பிய தொலைத்தந்தியில், **'மெஹர் தாம்'** (MEHER DHAM, மெஹரின் வீடு) என்று பெயர் சூட்டி குறிப்பிடப்பட்டிருந்தது.

**கோவிலில் எந்தவிதமான சடங்கு சம்பிரதாய வழிமுறைகளையும் பின்பற்றக்கூடாது - மணியோசை எழுப்புவது அல்லது பூஜை செய்வது; 'மக்கள் பாபாவை நேரில் தரிசனம் செய்வது போல, சிலையை தரிசனம் செய்ய வேண்டும்'** என்று பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். **'மெஹர் தாம்' சந்நிதான நுழைவாயிலின் மேல், பெரிய எழுத்துக்களில் எழுதப்பட வேண்டும் - கல்லில் செதுக்கப்பட்டு, பலகைகளில் வர்ணம் பூசப்படாமல் - யாத்ரீகர்கள் நுழைவதற்கு முன்னர் அதைப் படித்து, தெரிந்துகொள்ள வேண்டும்** என்று அவர் கட்டளையிட்டார்:

**நான் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல. என் ஒரே மதம் அன்பு. ஒவ்வோர் இதயமும் எனது கோவில். நீங்கள் கல்லால் கட்டி எழுப்பிய இந்தக் கட்டிடத்தை நேசித்தாலும், உங்கள் இதயம் என்னை இங்கு அழைத்து வரும்போதுதான் நான் அதில் இருக்கிறேன்.**

கட்டிடத்தின் உள்ளே இவ்வாறு பொறிக்கப்பட வேண்டும்:

**'முறைசார்ந்த சடங்குகள் என்னை மறைக்கின்றன, ஆனால் தூய வழிபாடு என்னை வெளிப்படுத்துகிறது' என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.**

மேளாவில் கலந்து கொண்ட அனைவரும் வாசிக்கும் விதத்தில் பாபா கீழ்வரும் செய்தியை ஆதி மூலமாக அனுப்பி வைத்தார்:

**இக்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நான், என்னுடன் நெருக்கமாக இருக்கும் அன்பர்களில் ஒருவனாக உங்களிடையே இருப்பேன். என்னிடம் அன்பில் சரணடையும் அனைவரும், என் உருவத்தின் பின்னால் நிலைகொண்டுள்ள ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளைக் கண்டு, போற்றி வணங்குவார்கள்.**

இவ்வாறு, பாபு ராம்பிரசாத், ஹிராலால், முங்காலால், டில்லிபதி, சித் கோபால், நரசிங்தாஸ் போன்ற அர்ப்பணிப்புள்ள அன்பர்களின் ஒன்றிணைந்த

உழைப்பாலும், அயராத முயற்சியாலும், 'மெஹர் தாம்' என்ற கோவில் உருவானது. நர்சிங்தாஸ், உண்மையில், இந்தத் திட்டத்தில் அயராது உழைத்து, பாபாவின் வழியில் தன் உயிரைத் தியாகம் செய்தார்; அது வெற்றிகரமாக நிறைவுறும் முன்னரே அவர் காலமானார்.

1961 டிசம்பர் 2 அன்று, ஆதி அஹமதுநகருக்குத் திரும்பி வந்து, நடவடிக்கைகள் குறித்து பாபாவிடம் விரிவாக எடுத்துரைத்தார். ஹமிர்பூரிலிருந்து திரும்பிய ஒரு வாரத்திற்குப் பிறகு, கோவூரில் கோடூரி கிருஷ்ணா ராவ் கட்டி எழுப்பிய புதிய 'மெஹர்ஸ்தான்' (MEHERSTHAN) என்றழைக்கப்பட்ட மையத்தைத் திறப்பதற்காக ஆதி, ஜால்பாய் இருவரும் ஆந்திராவிற்கு அனுப்பப்பட்டனர். அங்கு பாபாவின் ஆளுயர வெண்கல சிலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

மெஹர்தாஸ் டிசம்பர் 10ஆம் தேதி மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

15ஆம் தேதி, நௌரங்காவில் நடந்த விழாவை விவரிக்கும் வாழ்க்கைச் சுற்றறிக்கை (LIFE CIRCULAR) ஒன்றை பாபா வெளியிட்டார். **அவரது ஏகாந்தவாசத்தில் ஏற்பட்ட இடர்பாடுகள், உடல்நிலையை மிகவும் கடுமையாக பாதித்துள்ள நிலையிலும், அவர் எங்கிருந்தாலும், 'மௌனத்தைக் கைவிடும் வரை அவரது கடுமையான ஏகாந்தவாசம் தொடரும்**' என்றும் அவர் கூறினார்.

ஜோஸஃப், காரி ஹார்ப் (JOESPH, KARI HARB) இருவரும், இந்தியாவில் பாபாவின் அருகில் வாழும் விருப்பத்தைத் தெரிவித்து, அவரிடமிருந்து முறையான அனுமதியைப் பெற்றுக்கொண்டனர். மெஹராஸாத் அல்லது அஹமதுநகரில் வாழ்வது மிகவும் கடினமாக இருக்கும் என்று பாபா அவர்களுக்குச் சுட்டிக்காட்டவே, நவீன நகரமான பூனாவில் குடியேற முடிவு செய்தனர். இருவரும் அந்த ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி பூனா வந்தடைந்தனர், ஆனால் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்ததால் அவர்களை அழைக்கவில்லை.

இறுதியாக, மூன்று மாதங்களுக்குப் பின்னர், 1961 டிசம்பர் 15 அன்று ஜோஸஃப், காரி ஹார்ப் இருவரும் மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மெஹர்ஜியுடன் பாபாவை ஒரு மணி நேரம் சந்தித்துவிட்டு பூனாவிற்குத் திரும்பிச் சென்றனர்.

மார்வின், ஜீனி கேம்பன் (MARVIN, JEANNIE CAMPEN) ஆகியோர் காரி ஹார்புடன் வந்தனர். கிறிஸ்துமஸ் பரிசாக, 'ஸைலண்ட் நைட்' (SILENT NIGHT) எனும் சுவிஸ் இசைப் பெட்டியை (SWISS MUSIC BOX) கேம்பன் பாபாவிற்கு வழங்கினார். மார்வின் கேம்பன் பெட்ரோலியத் துறையில் பணிபுரிந்து வந்தார். மார்வின், ஜீனி கேம்பன் இருவரும் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஃபிரான்ஸ் (FRANCE) மற்றும் சுவிட்சர்லாந்து (SWITZERLAND) நாடுகளில் வாழ்ந்து வந்தனர், ஆனால் மார்வின், நியூ ஜெர்ஸிக்கு (NEW JERSEY) மாற்றப்பட்டதால் இருவரும் அங்குக் குடிபெயர்ந்தனர்.



**காரி ஹார்ப், ஜீனி கேம்பன், மெஹராஸாத், டிசம்பர் 1961**
(KARI HARB, JEANNIE CAMPEN, MEHERAZAD, DECEMBER 1961)

பார்சி நாட்காட்டியின்படி, மெஹராவின் பிறந்த நாள் அந்த ஆண்டு டிசம்பர் 23 சனிக்கிழமை அன்று வந்தது. மும்பையைச் சேர்ந்த கோர்ஷெத், பூனாவிலிருந்து மெஹர்வான், மனு ஜெஸவாலா மற்றும் மெஹர்ஜி ஆகியோர் அந்த வார இறுதியில் மெஹராஸாத் வந்தனர். மனு, பெண் மண்டலியுடன் மெஹராஸாத்தில் ஒரு மாதம் தங்க அனுமதிக்கப்பட்டார்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று காலை பாபா, மண்டலியில் ஒவ்வொருவருக்கும் சாக்லேட்களை வழங்கி கூறினார்: "**கிறிஸ்து அன்பிற்காக வாழ்ந்து, அன்பிற்காக உயிரைத் துறந்தார். அவர் அன்பின் மொத்த உருவம்; அவர் சிலுவையில் அறையப்பட்டது அவரது உலகளாவிய அன்பின் வெளிப்பாடாகும். கிறிஸ்து எல்லோரிலும், எல்லாவற்றிலும் நிலைகொண்டிருக்கிறார்; எனவே மனிதகுலத்திற்கான தன்னலமற்ற சேவை, கடவுளுக்குச் செய்யும் சேவையாகும்.**"

டாக்டர் டான், பாதிரி இருவரும் டிசம்பர் 28ஆம் தேதி பாபாவின் உடல்நிலை மற்றும் பிற விஷயங்களைப் பற்றி விவாதிக்க அவரை மெஹராஸாத்தில் சந்தித்தனர். அன்று அஹமதுநகர் வந்த டாக்டர் தேஷ்முக், 29ஆம் தேதி காலை ஆதி சீனியருடன் மெஹராஸாத்திற்கு வந்தார்; அங்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 'ஐந்து நிமிடங்களுக்கு' பதிலாக, பாபா அவருடன் ஒரு மணி நேரம் கலந்துரையாடினார். பாபா அவருடைய குடும்பத்தைப் பற்றி விசாரித்து, தேஷ்முக் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கேஷவ் நிகமின் 'மெஹர் சாலிஸா' (MEHER CHALISA) கவிதைகளின் சில பகுதிகளைக் கேட்டார். அன்று மதியம் தேஷ்முக் திரும்பிச் சென்றார்.

தாதி கேரவாலா 1962 ஜனவரி 3 அன்று பாபாவை ஒரு மணி நேரம் சந்திக்க அனுமதிக்கப்பட்டார்.



குருபிரசாத் (GURUPRASAD), **1962**

# மெஹராஸாத் & பூனா

(**Meherazad & Poona**)

ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளில் வாழும் பாபாவின் மேற்கத்திய அன்பர்கள் அவரை மீண்டும் சந்திக்கும் ஏக்கத்தில் இருந்தனர்; 1962 மே மாதம் குருபிரசாத்தில் தங்கவிருக்கும் வேளையில், அவர்களை பூனாவிற்கு வர அனுமதிப்பது குறித்து, ஜனவரியில் பாபா விவாதித்தார். ஆனால் திடமான திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஜனவரி 9 செவ்வாய் அன்று, பாபாவின் செயலர் ஆதி சீனியர் இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதிக்க மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். அன்றைய தினம் கஜ்வானி குடும்பத்தினர் அரை மணி நேரம் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். கஜ்வானியின் மகன் குமாருக்கு சமீபத்தில் லண்டனில் திருமணம் நடந்தது; அவரும், அவரது மனைவி மீராவும் வந்து பாபாவின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர். அர்னவாஸ், நரிமன் ஆகியோரும் உடன் வந்தனர்.

பாபாவின் உடலில் கடுமையான வலி போன்ற அசௌகரியங்கள் தொடர்ந்தன, பொதுவாக மிகவும் பலவீனமாக உணர்ந்தார். பாதிரி 11ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டு, ஒரு வாரத்திற்கு தினமும் பாபாவிற்கு ஹோமியோபதி சிகிச்சை அளிக்க ஆரம்பித்தார். 19ஆம் தேதி பாபாவின் மலம் அஹமதுநகருக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது, அன்று எரச் இந்தக் குறிப்பை ஆதி சீனியருக்கு அனுப்பினார்:

கடந்த சில நாட்களாக, பாபா, அவரது உடல்நிலை சீரில்லை என்பதைத் தெரிவிக்குமாறு சொல்லிக் கொண்டிருந்தார். அவரால் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையில், மிகவும் பலவீனமாக உணர்கிறார். பாபா நன்றாகி விடுவார் என்று நினைத்து சில நாட்களாக நான் இதைத் தள்ளிப் போட்டேன். ஆனால் அவர் இன்னமும் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால், இன்று நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பி, உங்கள் தனிப்பட்ட தகவலுக்காக இதை எழுதுகிறேன்.

ஆதி இயல்பாகவே கவலையில் ஆழ்ந்து, பாபாவின் தற்போதைய பலவீனமான நிலை 'உலக சூழ்நிலை குறித்த ஏதோ மோசமான ஒன்றைக் குறிக்கிறது' என்று யூகித்தார். பாபாவின் உடல்நிலையைக் கண்டறிய ஜனவரி 20 அன்று மெஹராஸாத் சென்றார். அந்த ஆண்டு பாபாவை மீண்டும் குருபிரசாத்தில் தங்க அனுமதிக்குமாறு மஹாராணி ஷாந்தாதேவிக்கு கடிதம் எழுதக் கூறினார். அஹமதுநகரைச் சார்ந்த பாஸ்கர் மற்றும் உஷா ஆகிய இருவருக்கும் இடையேயான திருமணத்திற்கு பாபா ஒப்புதல் அளித்தார்.

எரச் மீண்டும் நோய்வாய்ப்பட்டு, ஜனவரி 23 அன்று, பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்; அடுத்த நாள் தொண்டையில் வளர்ந்த சதை அகற்றப்பட்டது. அறுவை சிகிச்சையின் போது, டாக்டர் டான் அவருடன்

இருந்தார். எரச் தனது தாயார் மற்றும் சகோதரி மனுவுடன் பிப்ரவரி 1 அன்று மெஹராஸாத் திரும்பிச் சென்றபோது, பாபாவின் சகவாசத்தில் அரை மணிநேரம் அனுமதிக்கப்பட்டார்.

இதற்கிடையில், ஏறக்குறைய மூன்று வாரங்களுக்குள், பாவ் கல்சூரி, கவிதை மற்றும் உரைநடை வடிவில் எழுதிய மெஹர் பாபாவின் வாழ்க்கைக் கதைக்கு, பாபா, 'மெஹர் லீலை' (MEHER LEELA, மெஹரின் தெய்வீக விளையாட்டு) என்று பெயரிட்டார்.

1961 இறுதியில் டெஹ்ரா டூன் அன்பர்கள் குழுவிடமிருந்து பாபாவின் பிறந்தநாளை ஒட்டி நாடகம் ஒன்றை அரங்கேற்ற விரும்புவதாகக் கடிதங்கள் வந்தன. படைப்பின் அர்த்தத்தையும், அவதார புருஷர் மீதான மனிதகுலத்தின் நம்பிக்கையையும் சித்தரிக்கும் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட குறும் நாடகம் ஒன்றை எழுத பாபா அறிவுறுத்தவே, பாவ் கல்சூரி அவ்வாறு செய்தார். 'ஜெய் மெஹர்' (JAI MEHER) என்ற பெயரில் உருவான நாடகம் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. பாபா அதை விரும்பி அஹமதுநகர் மையத்தில் அரங்கேற்றம் செய்ய முன்வந்தார். மையத்தின் உறுப்பினர்களை 1962 பிப்ரவரி 4 அன்று அழைத்து, பாபா அவர்களை நாடகத்தில் பங்கேற்க ஊக்குவித்தார். மேலும் அவர் அவ்வப்போது பாவ் கல்சூரியை நாடகத்தின் இயக்கத்தில் உதவுவதற்காக அஹமதுநகருக்கு அனுப்பி வைத்தார்.

கோர்ஷெத் பிப்ரவரி 8ஆம் தேதி மும்பையிலிருந்து மெஹராஸாத் வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்தார். அன்று மாலை 4:00 மணியளவில், மெஹர்ஜி பூனாவிலிருந்து டாக்டர் தேஷ்பாண்டே என்ற கண் மருத்துவரை, பாபாவின் கண் பரிசோதனைக்காக அழைத்து வந்தார்.

அடுத்த நாள், டான் ஸ்டீவன்ஸ் ஐரோப்பாவிலிருந்து மும்பைக்கு வந்தார். டாக்டர் டான் (டான்கின்) அவரை சந்தித்து, இருவரும் நேரடியாகப் பூனாவிற்குச் சென்றனர். பிப்ரவரி 11 அன்று, பாபாவின் அறிவுறுத்தலின்படி, டான் ஸ்டீவன்ஸ், ஜோஸஃப் & காரி ஹார்ப் ஆகியோருடன், சத்தாரா மற்றும் மஹாபலேஷ்வருக்கு பாபாவின் பணியுடன் தொடர்புடைய இடங்களைப் பார்க்க டாக்டர் டான் சென்றார்.

பிப்ரவரி 13ஆம் தேதி காலை மெஹர்ஜியின் காரில் டான் ஸ்டீவன்ஸை, அஹமதுநகரில் குஷ்ரு குவார்டர்ஸுக்கு டாக்டர் டான் அழைத்து வந்தபோது, ஆதி, ஃபிரான்சிஸ் இருவரும் அவர்களுடன் இணைந்து, ஔரங்காபாத் புறப்பட்டுச் சென்றனர். இது இரண்டாவது முறையாக, பாபா தனது சொந்த நோக்கங்களுக்காக, டான் ஸ்டீவன்ஸ், ஃபிரான்சிஸ் இருவரையும் எல்லோரா குகைகளுக்கு அனுப்பி வைத்தார்; முதல் முறையாக 1955 சகவாச காலகட்டத்தில் அங்கு விஜயம் செய்தனர்.

1962 பிப்ரவரி 16 அன்று, சரியாக மாலை 4:00 மணிக்கு மெஹராஸாத் திரும்புமாறு பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். அவர்கள் சீக்கிரமாகவே

வந்ததால் தேநீர் அருந்துவதற்காக ஹேப்பி வேலியில் நின்றனர். மறுநாள் காலை வரை, டான் ஸ்டீவன்ஸைப் பார்க்க மாட்டார் என்று பாபா குறிப்பிட்டிருந்தாலும், அவர்கள் வந்து சேர்ந்த அடுத்த இரண்டு நிமிடங்களில், எரச், டான் ஸ்டீவன்ஸை அழைத்தார்; பாபா மண்டபத்தின் வாசலில் புன்முறுவலுடன் நின்றுகொண்டிருந்ததை அவர் கண்டார். இருவரும் பாபாவை சந்தித்த இரண்டு மணி நேரத்தில், ஔரங்காபாத் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் மேற்கொண்ட தங்கள் பயணத்தை விவரித்தனர். உரையாடலின் போது, பாபா கூறினார், "**நீண்ட காலத்திற்கு முன்பு, 30 தலைசிறந்த ஸுஃபி துறவிகள்** (SUFI SAINTS) **பெர்சியாவிலிருந்து குல்தாபாத்** (KHULDABAD) **மலைக்குக் குடிபெயர்ந்தனர். ஐந்து பேர் அங்கேயே தங்கினர், மீதமுள்ளவர்கள் ஒன்று, இரண்டு மற்றும் மூன்று பேர் ஒன்றிணைந்த குழுவாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றனர்.**" (அவர்களில் மிகவும் பிரபலமானவர் சாய்பாபாவின் குருநாதரான குதுப் ஸர்ஸாரி ஸர் பக்ஷ், QUTUB ZARZARI ZAR BAKSH ஆவார்.)

டான் ஸ்டீவன்ஸின் கூற்றுப்படி, "பாபா எப்பொழுதும் ஒரு வெறித்தனமான வழியைக் கையாண்டு, முற்றிலும் அதில் மூழ்கியிருப்பதாகத் தோன்றியது; அதே வேளையில், நமது இக்கால கிறிஸ்து நிச்சயமாக என்ன செய்வார், எதைத் தவிர்ப்பார் என்பது எனது உள்ளுணர்வு நம்பிக்கைகளுக்கு ஒத்ததாக அமைந்தது." இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவர் முன்னிலையில் பாபா இதைச் செய்தபோது, ஸ்டீவன்ஸ் முற்றிலும் தயார் நிலையில் இல்லை. இதற்கு முன்னதாக, 1960இல், மெஹராஸாத் விஜயத்தின் போது, பாபாவின் பணிக்காக அர்ப்பணிக்கப்படவிருந்த ஹமிர்பூர் 'மெஹர் தாம்' மையத்தைப் பற்றி எடுத்துரைக்குமாறு எரச்சிடம் பாபா கூறினார். ஸ்டீவன்ஸ், எரச்சின் விரிவான விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார், 'அவர் புதியதொரு தேவாலயத்தையோ அல்லது மதத்தையோ நிறுவ வரவில்லை' என்று பாபா அடிக்கடி வலியுறுத்தும் தெளிவான, முக்கியமான இறுதி வாக்கியத்துடன் அனைத்தையும் முடிக்க காத்திருந்தார். எனவே, மர்டில் பீச் மெஹர் மையம் மற்றும் ஓஹாயில் (OJAI) அமைந்த மெஹர் மவுண்ட் போன்ற சில அமைப்புகளை அவர் சிறப்பு காரணங்களுக்காக ஊக்குவித்தாரே தவிர, 'தேவாலயத்தை ஒத்த மையங்கள்' தேவையில்லை, இது போன்ற தவறாக வழிநடத்தப்படும் முயற்சிகளை சரிசெய்ய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தினார்.

இறுதியாக, எரச் தனது விளக்கத்தை முடித்த அந்த வேளையில், டான் ஸ்டீவன்ஸ், பாபாவின் முடிவுரைக்காக நம்பிக்கையுடன் காத்திருந்தார். ஆனால், அந்த இறுதி வாக்கியம் வெளிவரவில்லை. பாபா அங்கேயே மகிழ்ச்சி மற்றும் முகமலர்ச்சியை வெளிப்படுத்திய வண்ணம் அமர்ந்திருந்தார்; அதற்கு பதிலாக அவர் ஹமிர்பூர் மக்களைப் பற்றிய ஸ்டீவன்ஸின் பாராட்டு மொழிகளுக்காகக் காத்திருந்தார் என்பது தெளிவாகத் தெரிந்தது. டான் ஸ்டீவன்ஸ் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் முற்றிலும் முட்டாள்தனமாக எதையோ நினைத்து திக்குமுக்காடினேன்; அந்த நேரத்தில் எனது சிந்தனையற்ற தவறான

எண்ணங்களில் ஊடுருவி, பின்னர் ஆழ் இதயத்தில் தேடித் துருவும் நாட்களைக் கழித்து, வெளியளவில் ஒரு மேலோட்டமான முடிவுக்கு வந்தேன்." அடிக்கடி, அதன் பின்னர், அவரது பணிக்காக, ஆந்திரா, பூனா போன்ற இடங்களில் புதிதாகக் கட்டி எழுப்பப்பட்ட அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்ட மையங்களைப் பற்றி விவரிக்குமாறு எரச்சிடம் பாபா அறிவுறுத்தினார்.

ஆனால் 'கோயில்கள்' அல்லது 'தேவாலயங்களை' நிறுவுவது குறித்த அவரது வேரூன்றிய சிந்தனைகளைப் பற்றி டான் ஸ்டீவன்ஸிடம் பாபா இதுகாறும் எதுவும் கூறவில்லை. டான் ஸ்டீவன்ஸ் பின்பு கூறினார், '1962 பிப்ரவரி மாதத்தில் மெஹராஸாத்திற்கு வந்தபோது, பாபாவின் இதமான தழுவல், எனது மார்பின் வழியாக முதுகுத் தண்டுவடத்தில் அதிர்வை ஏற்படுத்தவே, அதைத் தொடர்ந்து அடுத்த ஆழமான அழுத்தம் எனது மார்பெலும்புக்குக் கீழே தாக்கியது.

இந்தியாவில் அவதார புருஷரின் மீதான பக்தியின் உறுதியான வடிவங்களின் சமீபத்திய போக்கைப் பற்றி, டான் ஸ்டீவன்ஸை தற்போதைய புதிய நிலைக்கு கொண்டு வருமாறு பாபா, எரச்சிடம் சைகையால் தெரிவித்தார். 'மெஹர் தாம்' அற்புதமாக எழுப்பப்பட்டு, இப்போது அது ஒன்றே உருவான இறைவனின் பாராட்டுக்குரிய மையமாகச் செயல்படுகிறது. ஆனால் ஹமிர்பூர் அன்பர்களின் பக்தி இப்போது மேலும் கருத்தார்ந்த, தனிப்பட்ட திருப்பத்தை எடுத்துள்ளது. அந்த சூழலில், பிற புனிதமான பொருட்களுக்கு மத்தியில், பாபாவின் ஆளுயர சிலை வடிவமைக்கப்பட்டு, அவர்கள் தங்கள் வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர். டான் மனதில் இந்த எண்ணம் அலைமோதியது: 'இப்போது நாம் உண்மையில் உருவ வழிபாட்டைச் சார்ந்த ஆராதனையில் ஈடுபடுபவர்களிடமிருந்து நடைமுறை பக்தி மற்றும் அர்ப்பணிப்பைப் பிரிக்கும் மெல்லிய இடைநிலைக்கு வருவோம்!"

மீண்டும் ஒருமுறை, அவர் உருவ வழிபாட்டைப் பற்றி டான் ஸ்டீவன்ஸுக்கு விளக்க வேண்டும் என்று சைகைகளால் எரச்சிற்கு விளக்கினார். மையங்கள் நிறுவுவது என்பது ஏற்புடையது, ஏனெனில் அவை வழிபாட்டு ஸ்தலங்களாகவும், புத்தகங்கள் மற்றும் இலக்கியங்களின் சேமிப்பு நூலகங்களாகவும் செயல்பட முடியும். ஆனால் சிலைகள்?

டான் தவறாகப் புரிந்து கொண்டார். மீண்டும் ஒருமுறை, மனித உருவில் கடவுள் மீதான அன்பு மற்றும் பக்தியின் இந்த அடையாளத்தில் டான் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார் என்று பாபா எதிர்நோக்கினார். டான் ஸ்டீவன்ஸ் முகத்திலோ, குரலிலோ எந்த விதமான உணர்ச்சி அல்லது குறிப்பையும் வெளிப்படுத்தாத, முகபாவமற்ற நிலையில் இருந்தார்: "சில சமயங்களில், எனது செல்லப்பிள்ளைத் தனமான யோசனைகளில் ஒன்றை முறியடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், பாபா, எரச்சைத் தூண்டிவிட்டு எனது திருட்டுத்தனத்தைப் புகழ்வார் என்று நான் நினைக்கிறேன்!"



பாராகோட்டி (BARAKOTI)

டான் ஸ்டீவன்ஸ் மெஹராஸாத்தில் தங்கியிருந்த முழு வாரமும் நீலப்பேருந்தில் தூங்கும்படி அறிவுறுத்தப்பட்டார். மெஹர்ஜி அதே நாளில் வந்து ஒரு வாரம் தங்கியிருந்தார்.

அடுத்த நாள், பிப்ரவரி 17 அன்று, பாபா, மணியை டான் ஸ்டீவன்ஸுடன் பல்வேறு தொழில் சார்ந்த மற்றும் தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி பேச அனுமதித்தார். காலை 10:00 மணிக்கு பாபா வந்தபோது, டான், மண்டபத்தில் இருந்த மண்டலியுடன் வழக்கமான இரண்டு மணி நேர அமர்வில் இணைந்தார். பிற்பகலில், மஸ்தை ஒத்த மனிதர், பாராகோட்டி (BARAKOTI), மெஹராஸாத்திற்கு வருகை தந்தார்.

கோஹெர், மெஹராவின் 8 மிமீ திரைப்பட கேமராவைக் கொண்டு வந்து (கடந்த நவம்பர் மாதத்தில் அவர் அதைப் பெற்றுக்கொண்டார்) பிரதான இல்லத்திலிருந்து மண்டபத்திற்கு நடந்து செல்லும் பாபாவின் சில காட்சிகளை, காணொளியில் பதிவு செய்யுமாறு டான் ஸ்டீவன்ஸைக் கேட்டுக்கொண்டார். டான் தன்னுடன் 16 மிமீ திரைப்பட கேமராவையும் வைத்திருந்தார்; பாபா இல்லத்திலிருந்து மண்டலி மண்டபத்தின் நுழைவாயிலுக்கு உதவியின்றி நடந்து செல்லும் வேளையில், இரண்டு கேமராக்களிலும் சில காட்சிகளை பதிவுசெய்தார். பாராகோட்டியுடன் பாபாவின் சில காணொளி படங்களையும் எடுத்தார். அதைத் தொடர்ந்து பாபா, மண்டபத்திற்கு உள்ளே வந்து, அங்கு அவர் ஸ்டீவன்ஸுடன் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்தார்.

1962 பிப்ரவரி 18 அன்று, ஞாயிறு காலை 9:45 மணிக்கு, அஹமதுநகர் பஜனைக் குழுவினர் பாபா முன்னிலையில் நிகழ்த்தும் இசைநிகழ்ச்சிக்காக மெஹராஸாத் வந்தனர். எரச், டான் ஸ்டீவன்ஸ் இருவரும் தினமும் காலையில் செல்வது போல நடைப்பயிற்சிக்குச் சென்றிருந்தனர், ஆனால் அஹமதுநகர் குழு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னதாகவே வந்து சேர்ந்தது. எரச்சும், டானும் திரும்பிவந்த நேரத்தில், பாபா ஏற்கனவே மண்டலி மண்டபத்தில் இசைக்குழுவின் முன்னால் அமர்ந்திருந்தார்.

"**எங்கே சென்றீர்கள்?**" பாபா, எரச்சிடம் வினவியபோது, அவரது கண்கள் சீற்றத்தில் ஒளிர்ந்தன. எரச் விளக்கிய வேளையில் பாபா வினவினார், "**ஆனால் பாடகர்கள் வந்தபோது நீங்கள் ஏன் இங்கு இல்லை?**"

எரச் கூறினார் "பாபா, பத்து மணிக்கு இசை நிகழ்ச்சி ஆரம்பமாக இருந்தது, இப்போது காலை 9:45 மணி!"

"**நீங்கள் இங்கே இருந்திருக்க வேண்டும்**" என்று பாபா வலியுறுத்திக் கூறினார். "**நான் விரும்புவதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்**." அவ்வப்போது, பாபா, எரச்சைக் கடிந்து கொண்டார். டான் வெட்கத்தில் சஞ்சலமடைந்தார். 'என்ன ஆச்சரியம்! அப்பாவி எரச் என்னால் மாட்டிக்கொண்டார்' என்று அவர் நினைத்தார், ஏனெனில், எரச் தயங்கியபோதும், டான் ஸ்டீவன்ஸ் அன்று காலை வெளியே செல்ல விரும்பினார். "இந்த சம்பவத்தின் தாக்கத்தை உண்மையில் நான் தாங்க வேண்டும்," என்று தனக்குள்

நினைத்தார். இந்த எண்ணம் அவர் மனதில் அலைமோதிய போது, பாபா அவரை நோக்கி, **"டான், நீங்கள் எனது இன்றைய தினத்தைக் கெடுத்துவிட்டீர்கள்!"** என்று சைகையால் தெரிவித்தார்.

அவதார புருஷர் நேரடியாக இதை அவரிடம் சொன்னது, டான் ஸ்டீவன்ஸால் தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. அவருக்குள் ஏதோ 'முற்றிலும் முறிந்து, சிதைந்து, சின்னாபின்னமானது'. ஆனால், அவர் மீண்டும் அவ்வாறு உணர முடியாத முறையில், பாபா அவரை ஐந்து வினாடிகள் ஆழமாக, அமைதியாக, சீராக உற்றுப் பார்த்து, அவரது விரல்களை அசைத்து, டானை மன்னித்து, **"கவலைப்படாதீர்கள். நாம் இன்று நன்றாகப் பொழுதைக் கழிப்போம்"** என்று சைகையால் தெரிவித்தார்.

ஒரே நிமிடத்தில் பொங்கி எழுந்த சீற்றத்துடன் அவரைப் பார்த்தது, சில நொடிகளில் அதன் தடயம் எதுவும் இல்லாமல் தென்பட்டது, டான் ஸ்டீவன்ஸுக்குத் தனித்துவமாகவும், அவருடைய வாழ்க்கையில் ஆழமான பாடமாகவும் அமைந்தது. பாபா எந்த விதமான உணர்ச்சிப் பிணைப்பிலிருந்தும் அனுபவித்த முழு சுதந்திரத்தை அவர் கண்கூடாகப் பார்க்க நேர்ந்தது.

அன்று காலை இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பிற்பகலில் பாபா திரும்பி வந்து, ஆண் மண்டலியுடன் மாலை 4:00 முதல் 6:00 மணி வரை அமர்ந்திருந்தார், ஆனால் உடல்நிலை சீரில்லாமல் இருந்தது. பாபாவுடன் அவரது தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி பேசும் வாய்ப்பு டானுக்கு மீண்டும் வழங்கப்பட்டது.

மறுநாள் காலை, பிரதான வீட்டில் டான் ஸ்டீவன்ஸ் மற்றும் மண்டலிக்காக பாபா கவாலி இசைத்தட்டுகளை இசைக்கச் செய்தார். ஹாஃபீஸின் கவாலி பதிவுகள் அன்று மதியம் இல்லத்திற்குள் மீண்டும் மீண்டும் இசைக்கப்பட்டது. பாபா தாளத்திற்கேற்ப மத்தளத்தில் தமது கைவண்ணத்தைக் காட்டினார்; டான் ஸ்டீவன்ஸ் முழுக் காட்சியையும் காணொளி படமாக்கினார். பாபாவின் கட்டளைப்படி அவரது காலடியில் டான் ஸ்டீவன்ஸ் அமர்ந்திருந்த போதிலும், திரைப்படம் எடுக்க செயற்கை வெளிச்சம் தேவை என்ற சூழ்நிலையில் - அந்த நாட்களில் மின்சாரமும் இல்லாததால், முன் வரவேற்பு அறை மிகவும் மங்கலாக இருந்தது. ஆனால், பின்னர் அவற்றை மும்பையில் பார்த்தபோது, ஸ்டீவன்ஸ் வியக்கும் வகையில் திரைப்படங்கள் பிரமாதமாக இருந்தன.

பிப்ரவரி 20ஆம் தேதி (அதே நாளில் அமெரிக்க விண்வெளி வீரர் ஜான் க்ளென் - JOHN GLENN ஒரு விண்வெளிக் கலத்தில் பூமியைச் சுற்றி வந்தார்), டான் அதிக திரைப்பட காட்சிகளை பதிவு செய்யும்போது, பாபாவை வெளி வளாகத்தில் அமருமாறு மணி வற்புறுத்தினார். காலை 10:00 மணிக்கு பாபா வெளியே வந்து, பின் வளாகத்தில் அமைதியாக அமர்ந்தார். பைதூல் பிற காவலாளிகளுடன் அமர்ந்திருந்த சிறிய குடிசைக்கு, முன் வாயில் வழியாக வெளியே செல்ல எரச் பரிந்துரைத்தார். எரச், பாபாவை அந்தக் குடிலில் அமர வைக்க முயன்றபோது,

பாபா, தரை மிகவும் தாழ்வாக இருப்பதாக சைகையால் தெரிவித்து, அவர் கீழே அமர விரும்பவில்லை. எரச், அலோபாவிடம் ஒரு மெத்தையைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டார், அது குடிலின் தரையில் போடப்பட்டபோது, பாபா அதில் அமர்ந்தார். ஒவ்வொரு முறையும் டான் ஸ்டீவன்ஸ் கேமராவை பின்னோக்கி சுழற்ற நிறுத்தும் போதெல்லாம், பாபா, **“நீங்கள் முடித்துவிட்டீர்களா?”** என வினவ, ஸ்டீவன்ஸ் அவரிடம் ‘இல்லை, பின்னோக்கி சுழற்றுவதாகவும், மேலும் சில அடிகள் இருப்பதாகவும் கூறினார். இறுதியாக, டான் திரைப்பட சுருளை முடித்தவுடன், பாபா, படப்பிடிப்பு முடிந்துவிட்டதாக சைகையால் தெரிவித்தார்.

ஒரு நாள் பாபா, டான் ஸ்டீவன்ஸ் மெஹராஸாத்தில் இருந்த நாட்களில் அவர் சலிப்படையாமல் இருப்பதை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில், டாக்டர் டானிடம், அவரை காரில் வெளியே அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினார். காட்டுக் குரங்குகளின் கூட்டத்தைப் பார்ப்பதில் ஸ்டீவன்ஸ் ஆர்வமாக இருப்பார் என்று நினைத்து, டாக்டர் டான் அவரை அருகிலமைந்த வனப் பள்ளத்தாக்கு, ஹேப்பி வேலிக்கு (HAPPY VALLEY) அழைத்துச் சென்றார். மலையில் ஏறும் வேளையில், ஆடையில் ஒட்டிக்கொள்ளும் மற்றும் தொட்டால் பயங்கரமான அரிப்பை உண்டாக்கும் நச்சுக்கொடியின் மீது கவனமாக இருக்குமாறு டான் ஸ்டீவன்ஸை எச்சரித்தார். குரங்குகளைக் கண்டுகொள்ளும் நோக்கத்தில் டாக்டர் டான் முன்னால் சென்ற அடுத்த கணம் டான் ஸ்டீவன்ஸ் அவரது பார்வையின் எல்லைக்கு வெளியே வந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, டான் ஸ்டீவன்ஸ் காரை நோக்கித் திரும்ப முடிவு செய்யவே, திடீரென அவரால் நகர முடியாமல் கீழே பார்த்தபோது, டாக்டர் டான் எச்சரித்த விஷக் கொடியில் அவர் சிக்கிக்கொண்டிருந்ததைக் கண்டார். ஜாக்கிரதையாகத் தனது கால்சட்டை மற்றும் கையிலிருந்து கொடியின் நுனியைத் தூக்கிக் கொண்டு, தன்னை விடுவித்துக்கொள்ளவே, இறுதியாக அவர் டாக்டர் டானை கார் அருகில் சந்திக்க நேர்ந்தது. இருவரும் மெஹராஸாத் வந்தடைந்ததும், பாபா அவர்கள் ஏதேனும் காட்டுக் குரங்குகளைக் கண்டார்களா என்பதை உடனடியாகத் தெரிந்துகொள்ள விரும்பினார், ஆனால் அவர்கள் குரங்குகளைக் காணமுடியவில்லை.

அடுத்த நாள் காலை, டான் ஸ்டீவன்ஸ் எழுந்ததும், அவரது கைகளில் ஒரு சிறிய செந்நிற தடிப்பு இருப்பதைக் கண்டார். பிப்ரவரி 21 காலை, வழக்கம் போல பாபா மண்டலி மண்டபத்திற்கு வந்தார். ஸ்டீவன்ஸ் தனது கையில் ஏற்பட்ட தடிப்பை மறந்துவிட்டார், ஆனால் திடீரென அவருடன் உரையாடிக் கொண்டிருந்த போது, பாபா சைகை செய்வதை நிறுத்திவிட்டு அவரைப் பார்க்கவே, டான் ஸ்டீவன்ஸ் தனது வலது கையை, தன்னை அறியாமலே சொறிவதை கவனித்தார்.

**“டான், அது என்ன?”** பாபா கேட்டார். டாக்டர் டான்கினைப் பாதுகாக்கும் எண்ணத்தில் பிரச்சினையைத் தவிர்க்க முயன்ற ஸ்டீவன்ஸ், “எனக்குத் தெரியாது, பாபா, ஒரு சிறிய தடிப்பு” என்று பதிலளித்தார்.

பாபா வியப்படைந்தாலும், விரைவில், நடந்த சம்பவத்தை அறிந்து கொண்டார். "**ஆனால் டான் எங்கே இருந்தார்?**" பாபா திகைப்புடன் கைகளை உயர்த்தி கேட்டார். மீண்டும், ஸ்டீவன்ஸ் தப்பிக்க முயன்றாலும், விரைவில் அவர்கள் இருவரும் தனித்தனியாகப் பிரிந்து சென்றதை அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

பாபா மேலும் சீற்றத்தை வெளிப்படுத்தி, "**டானை அழைத்து வாருங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

கோபமடைந்த பாபா, டானிடம் அனைத்து விவரங்களையும் கேட்டு, டானின் கவனக்குறைவுக்காக அவரை வசைபாடினார். பாபா எவரையும் மிகக் கடுமையாகக் கண்டித்ததை டான் ஸ்டீவன்ஸ் பார்த்தது இதுவே முதல் முறையாகும், மேலும் பாபா முழு விபரங்களையும் வெளியே கொண்டு வந்ததற்கு இதுவே காரணமாக இருந்திருக்கலாம். "நான் எனது மெத்தைக்கு அடியில் நுழைந்து மறைந்து போக விரும்பினேன்," என்று டான் ஸ்டீவன்ஸ் கூறினார். "நான் டான்கினை பெரிதும் விரும்பினேன், எனது கவனக்குறைவு காரணமாக, அவருக்கு நிகழ்ந்ததைக் காண நான் விரும்பவில்லை, என் இதயம் வலித்தது."

அன்று மதியம் பாபா மீண்டும் மண்டபத்திற்கு வந்தார். மண்டலியுடன் விஷயங்களைப் பற்றி விவாதிக்கும் போது, பாபா, டான் ஸ்டீவன்ஸைப் பார்த்தார்; அவர் மீண்டும் தனது கையில் அரிப்பு ஏற்படுவதை உணர்ந்தார். இப்போது அவரது கையில் செந்நிற தடிப்புகள் தோன்றின. பாபா, எரச்சிடம் சில மருந்துப் பொடியைக் கொண்டு வரக் கூறி, அதைத் தடிப்புகளில் தடவியபோது, அரிப்பு ஓரளவிற்கு குறைந்தது, ஆனால் அது உடலில் பரவுவதைத் தடுக்கமுடியவில்லை; அடுத்த நாள் காலையில் ஸ்டீவன்ஸ் எழுந்தபோது, அவரது கைகளிலும் ஒரு காலின் கீழேயும் பரவியிருந்தது.

மண்டலி மண்டபத்தில், பாபா அவரை அருகில் அழைத்து, கைகளைப் பரிசோதித்து, அமரச் சொல்லி, "**எரச், உங்கள் மருந்து வேண்டிய பலனைத் தருவதாகத் தெரியவில்லை**" என்று கூறினார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா தனது நாற்காலிக்கு அருகிலிருந்த சிறிய பக்க மேசையிலிருந்து, ஒரு புதிய கைக்குட்டையை எடுத்து, புருவத்தைத் துடைத்து, டான் ஸ்டீவன்ஸின் கைகளில் அதை வைத்தார். உரையாடல் தொடர்ந்தது. கூட்டம் நிறைவடைந்த அவ்வேளையில், ஸ்டீவன்ஸ் தனக்கு அரிப்பு மறைந்துவிட்டதை உணர்ந்தார், மேலும் பாபா அவரது கைக்குட்டையால் தனது அசௌகரியத்தைப் போக்கினார் என்பதை அறிந்தார்.

காணொளித் திரைப்படம் பதிவு செய்தபோது, மாலை வெளிச்சம் போதுமானதாக இல்லாததால், பாபா, மத்தளம் இசைக்கும் காட்சி பதிவாகாமல் போயிருக்கலாம் என்று மணி கவலைப்பட்டார்; அதனால், டான் ஸ்டீவன்ஸ் மேலும் சில காட்சிகளை எடுக்க பாபாவை மீண்டும் வெளியில் அமர வைக்க, மெஹரா மற்றும் சிலருடன் 'இரகசிய திட்டம்' வகுத்தார். பாபா பிப்ரவரி 21

அன்று மாலை 4:00 மணிக்கு மத்தளத்துடன் வந்தபோது 'ஒரு பலி ஆடு போலத் தோற்றமளித்தார்' என்று டான் நினைவு கூர்ந்தார்.

அனைவரும் வளாகத்தில் ஒரு மரத்தின் கீழ் மண்டபத்தின் முன்னால் அமர்ந்தனர். ஃபிரான்சிஸ் பிராபஸோன், பாபாவுக்காக கவிதைகளை இயற்றி, ஒவ்வொரு நாளும் ஒரு புதிய கவிதையை மொழிவது வழக்கம். அவர் எழுதிய கவிதைகளில் ஒன்றை ஃபிரான்சிஸ் வாசிக்கும்போது, தாளத்திற்கு இசைந்தாற்போல் அவருடன் மத்தளத்தை இசைக்கலாம் என்று பாபா பரிந்துரைத்தார். ('ஃபிரான்சிஸ் தலையில் வானம் வீழ்ந்தது போல் உணர்ந்தார்!') அவர்களிடையேயான சில நிமிட விவாதத்திற்குப் பிறகு, பாபா மத்தளத்தை இசைக்க ஃபிரான்சிஸ் அவரது கவிதையை மொழிந்தார். டான் ஸ்டீவன்ஸ் பல கோணங்களில் காணொளி காட்சிகளை படம்பிடிக்கத் தொடங்கினார். 'லெட் அஸ், தி பீப்பிள், ஸிங்' (LET US, THE PEOPLE, SING) என்ற தலைப்பில், ஃபிரான்சிஸின் 25 கவிதைகள் அடங்கிய தொகுப்பின் 100 பிரதிகள் மெஹர்ஜியின் 'ஒயிட் கிளவுட்' (WHITE CLOUD) தொழிற்சாலையில் அச்சடிக்கப்பட்டது; பாபா, டான் ஸ்டீவன்ஸிடம் 25 பிரதிகளை வாங்குமாறு அறிவுறுத்தினார்.

காணொளி படப்பிடிப்பைப் பொறுத்தவரை, பாபா சற்று குழப்பமடைந்ததாகத் தோன்றியது, ஆனால் டான் ஸ்டீவன்ஸ் அவருக்கு நினைவூட்டினார், "பாபா, எஞ்சிய நாட்களில் நான் எந்த நேரத்திலும் படப்பிடிப்பைத் தொடர முடியும் என்று நீங்கள் என்னிடம் சொன்னீர்கள்." மீண்டும், திரைப்படச் சுருள் முடிவடைந்ததும், **'ஸ்டீவன்ஸ் காணொளி படமாக்கியது போதும்'** என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

காரி, ஜோஸஃப் ஹார்ப் இருவரும் பூனாவில் தொடர்ந்து தங்கியிருப்பது குறித்து பாபா, டான் ஸ்டீவன்ஸுடன் ஆலோசனை நடத்தினார். ஜோஸஃபின் மோசமான உடல்நிலை காரணமாக, ஸ்டீவன்ஸ், ஃபிரான்சிஸ் இருவரும் சற்று கவலையுற்றனர்; ஆனால், எரச் நல்ல நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

1962 பிப்ரவரி 22 வியாழன் காலை, பாபா மண்டலி மண்டபத்தில் ஆதி, எரச், மணி, ஃபிரான்சிஸ், டான் ஸ்டீவன்ஸ் ஆகியோருடன் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் புதிய பதிப்பைப் பற்றி ஒரு கூட்டத்தை நடத்தினார். மேல் அட்டையில் பாபாவின் புகைப்படம் வேண்டாம்; உரையை மாற்ற வேண்டிய தேவை இல்லை; டாட், மீட் (DODD, MEAD) வெளியீட்டு நிறுவனத்துடனான தொடர்பைத் தொடர வேண்டும்.

பின்னர் அன்று காலை 10:00 மணியளவில், காரி, ஜோஸஃப் ஹார்ப் இருவரும் மெஹர்ஜியுடன் காரில் வந்தனர். இவர்கள் இந்தியாவில் தங்கியிருப்பதன் நன்மை, தீமைகள் குறித்து பாபா அவர்களிடம் இரண்டு மணி நேரம் விவாதித்தார். ஜோஸஃப் அனைத்தையும் சுலபமாக சமாளித்ததாகவும், அவ்வாறு செய்ய முடியும் எனவும் உணர்ந்தார்; காரி உடல் நலம் குன்றி இருந்ததால், அவருடைய திறனைப் பற்றி அவ்வளவு உறுதியாக தெரியவில்லை என உணர்ந்த அதே வேளையில், அவர் தனது நிலைப்பாட்டை இவ்வாறு

எடுத்துரைத்தார்: “நான் வேறு எங்கேனும் உடலைத் துறப்பதை விட, இந்தியாவில் அவ்வாறு செய்வதையே சிறப்பாகக் கருதுகிறேன்!”

ஆதி, ஃபிரான்சிஸ் இருவரும் ஹார்ப் தம்பதியினர் அமெரிக்காவிற்குத் திரும்ப வேண்டும் என்று உணர்ந்தனர். டான் ஸ்டீவன்ஸ், ஜோஸஃப் மனதளவில் குறைந்தபட்சம் தற்போதைய சூழ்நிலையில் உறுதியாக இருப்பதாகவும், காரி அவரை விட்டு ஒருபோதும் விலக மாட்டார் என்றும் கூறினார். இறுதியில், பாபா, காரிக்கு மேலும் ஒரு வாரம் அவகாசம் கொடுத்து, அதைப் பற்றி சிந்திக்கவும், பின்னர் அவரது இறுதி முடிவை அவருக்குத் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தினார்.

மதிய உணவுக்குப் பிறகு, ஜோஸஃப் உடல் நலம் குன்றி காணப்பட்டார், ஆனால் மாலை 4:00 மணிக்குள் உடல்நிலை சீரானது. பாபா திரும்பி வரும்போது மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். டான் ஸ்டீவன்ஸ் பதற்றத்துடன் பாபாவின் கையை தாங்கி நிற்கும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அதன் பின்னர், அன்று புறப்படவிருந்த டான் ஸ்டீவன்ஸுக்கு பிரியாவிடை அளிக்க, ஐந்து நிமிடங்களுக்கு அனைவரையும் பாபா வெளியே அனுப்பினார்.

டான் ஸ்டீவன்ஸ் அந்தத் தருணங்களைத் தெளிவாக நினைவு கூர்ந்தார்: “நான் அவரைத் தழுவச் சென்றபோது எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனால் நான் பின்னால் நகர்ந்து, எரச்சைப் பார்த்து புன்னகைத்தபோது, என்னால் முடியவில்லை, எனது கண்கள் நிரம்பி வழிந்தன. என் உணர்வுகள் என்ன என்பதை என்னை விட ஆழமாக அறிந்த உணர்வின் நிலையைக் கண்டுபிடிப்பது விசித்திரமானது.”

பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஐரோப்பாவிற்குத் திரும்புவதற்கு முன், டான் ஸ்டீவன்ஸ், மெஹர்ஜி மற்றும் காரி, ஜோஸஃப் ஹார்ப் ஆகியோருடன் புறப்பட்டு, மும்பையிலிருந்து மவுண்ட் அபு, அஜ்மீர் மற்றும் வட இந்தியாவில் பிற இடங்களுக்கு பத்து நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

1962 பிப்ரவரி 25 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபாவின் பிறந்த நாள் உலகம் முழுவதும் வெவ்வேறு இடங்களில், பல்வேறு வழிகளில் கொண்டாடப்பட்டது. அவரது 68ஆவது பிறந்தநாள் என்பதால், இந்தியாவில் அமைந்த பல மையங்கள், தொடர்ந்து 68 நாட்களுக்கு முன்னதாகவே நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தன. பாபா தனது பிறந்தநாளுக்காக (பிப்ரவரி 2 அன்று) கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**எனது பிறந்தநாளின் இந்த ஆண்டு விழாவில், உங்கள் பொய்யும் போலியுமான ‘நான்’ எனும் சுயத்தின் இறுதி நாளுக்காகவும், உங்கள் உண்மைப்பொருளான ஏக இறைவன் எனும் பரமாத்மாவின் பிறந்தநாளுக்காகவும் நான் உங்களுக்கு எனது ஆசிகளை வழங்குகிறேன்!**

மும்பையில் ஸொராப்ஜி ஸிகன்போரியா, 167 லாமிங்டன் சாலையில் மும்பை மையமாகப் (BOMBAY CENTER AT 167, LAMINGTON ROAD) பயன்படுத்துவதற்காக கையகப்படுத்திய புதிய ‘மெஹர் ஹால்’ (MEHER HALL) அர்ப்பணிப்பு விழாவில் ஆதி

உரையாற்றினார். திறப்பு விழாவை மஹாராணி ஷாந்தாதேவி நிகழ்த்தினார். மும்பை குழுவிற்கு பாபா இந்தச் செய்தியை வழங்கினார்:

**அன்பு மற்றும் உண்மைப்பொருள் பற்றிய எனது செய்திகளுக்கு, செவிமடுக்க விரும்பும் எல்லா இதயங்களின் இல்லமாக மெஹர் ஹாலை மாற்றுங்கள். 25ஆம் தேதி மெஹர் ஹாலில் ஒன்றுதிரண்ட அனைவருக்கும் எனது அன்பையும், ஆசிகளையும் வழங்குகிறேன்.**

பூனாவில், புதிய 'மெஹர் பாபா' மையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஜோஸஃப் ஹார்ப் உரை நிகழ்த்தி, பாபாவின் விருப்பப்படி அடிக்கல் நாட்டினார். பூனா குழுவிற்கு பாபாவின் செய்தி:

**இந்த அவதார் மெஹர் பாபா பூனா மையம், இங்கு வரும் அனைவருக்கும் ஒளிவிளக்காகத் திகழ, அன்பு மற்றும் உண்மைப்பொருள் குறித்த எனது செய்தியின் அடித்தளத்தை உங்கள் இதயங்களில் செம்மையாகவும் உண்மையாகவும் அமைக்கவும். எனது அன்பு, ஆசிகள் அனைத்தையும் உங்களுக்கு வழங்குகிறேன்.**

போபால் (BOPAL), டெஹ்ரா டூன் போன்ற இடங்களில், பாவ் கல்சூரியின் கைவண்ணத்தில் உருவான 'ஜெய் மெஹர்' நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஆனால் மெஹராஸாத்தில் வழக்கம் போல பிறந்தநாள் எளிமையாகவும், அமைதியாகவும் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம், 'லெட் அஸ், தி பீப்பிள், ஸிங்' (LET US, THE PEOPLE, SING) கவிதை கையேட்டின் முதல் பிரதியை பாபாவிற்கு ஃபிரான்சிஸ் வழங்கினார்.

1950ஆம் ஆண்டில், புது வாழ்வின் (NEW LIFE) போது, கவிகை வாகனத்துடன் இருந்த காளைகளில் ஒன்று குமாரின் நண்பரான லேக் ராஜ் (LEKH RAJ) என்பவருக்கு வழங்கப்பட்டது. லேக் ராஜ், டெஹ்ரா டூனில் காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத குழந்தைகளுக்கான 'மழலை உலகம்' (நன்னி துனியா - NANHI DUNIYA) என்ற அமைப்பின் நிர்வாகியாக இருந்தார்.

1953 நவம்பர் மாதம் டெஹ்ரா டூன் நகரில் மெஹர் பாபா தரிசனம் வழங்கியபோது, குழந்தைகள் நீண்ட மலர் மாலை மற்றும் கிரீடத்துடன் வருகை தந்தனர். 1962ஆம் ஆண்டு, பாபாவின் பிறந்தநாளில், குழந்தைகள் ஒரு தனித்துவமான வாழ்த்து அட்டையை அனுப்பியிருந்தனர். அது ஒரு மரப்பட்டையில் வெள்ளி இழைகளால் வரையப்பட்ட பாபாவின் சிறிய உருவப்படம், அதன் கீழே குழந்தைகள் இவ்வாறு எழுதியிருந்தனர்: "ஓ மௌனமான மெஹர் பாபா, எங்களுக்கு வாய்மொழித் திறனை வழங்குங்கள்!"

பதிலுக்கு பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**என் மீதான உங்கள் அன்பு எந்த வாய்மொழியையும் விட அதிகமாக மொழிகிறது, மேலும் எனது வார்த்தைகளின் இறை வார்த்தை மட்டுமே செவிமடுக்க உகந்தது. மழலை உலகத்தின்** (நன்னி துனியா - NANHI DUNIYA) **உங்கள் அனைவருக்கும் எனது அன்பும் ஆசிகளும்.**

1962 மார்ச் 4 ஞாயிறு அன்று, தமது அன்பர்களை மெஹராஸாத்திற்கு அழைப்பதற்கு பதிலாக, பாபா, அரன்காவ்ம் கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு அவர் மெஹர் பாபா மையத்தின் இசைக் கலைஞர்களின் பஜனைகளைக் கேட்டு, தரிசனமும் பிரசாதமும் வழங்கினார். எரச், பாவ் கல்சூரி, பெண்டு, ஃபிரான்சிஸ் ஆகியோர் உடன் செல்லவே, நரிமன், ஜிம் இருவரும் அன்று காலை மும்பையிலிருந்து வந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மார்ச் 8 வியாழன் அன்று குஷ்ரு குவார்டர்ஸ் முன்னால் அமைந்த திரையரங்கான 'ஸரோஷ் சினிமா'வின் விசாலமான மேடையில், அஹமதுநகர் மையத்தின் அன்பர்களால் பாவ் கல்சூரியின் 'ஜெய் மெஹர்' நாடகம் அரங்கேற்றப்பட்டது. பாபா அதைப் பார்க்க ஆண், பெண் மண்டலி அனைவருடன் வருகை தந்தார். மெஹராபாத்தில் வாழ்ந்த அன்பர்களும் அழைக்கப்பட்டனர். காலை 9:30 மணியளவில், பாபாவின் கார் அஹமதுநகருக்குள் நுழைந்தபோது, பாபாவும் பெண்மணிகளும் உரத்த கோஷங்களைக் கேட்க முடிந்தது. அவ்வேளையில் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு அருகாமையில் அமைந்த முஹமதிய பிரார்த்தனை மைதானத்தில் பல நூறு முஸல்மான்கள் மேற்கு நோக்கி (மெக்காவை நோக்கி) வணங்குவதைக் காண நேர்ந்தது. அன்றைய தினம் ரம்ஸான் ஈத் (RAMZAN ID, முஸல்மான்களின் புனிதமான நோன்பு நாள்). காலம் இதை இவ்வாறு குறிப்பிட்டது, "தாங்கள் யாரிடம் பிரார்த்தனை செய்கிறார்களோ, அவர் அந்த நேரத்தில் தங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தார் என்பதை மக்கள் உணரவில்லை!"

'ஜெய் மெஹர்' நாடகத்தில், கோகிலா, மாயாவின் முக்கிய பாத்திரமாக அங்கம் வகித்தார், மேலும் அவரது கணவர், பகீரத், ஆதிகால புருஷராக நடித்தார்; எட்கேயின் மகள் ஷோபா, ஷிரீன்மாயின் (பாபாவின் தாயார்) வேடத்தில் நடித்தார்; ஷிவாஜி மந்தாரே, துக்கிராமாக (DUKHIRAM, துன்பம் நிறைந்தவர்) மாறிய அதே வேளையில், ஷோபாவின் சகோதரி பூமியாக நடித்தார். ருஸ்தம் காக்காவும், உஷா குல்கர்னியும் மிகவும் ஆத்மார்த்தமாகப் பாடியது, சிருஷ்டியை படைப்பது போன்ற பிரம்மையை உருவாக்கியது! ஷெல்கே என்ற உள்ளூர் பக்தர், கடலின் அழகிய பின்னணியை வரைந்திருந்தார். நாடகத்தின் தொடக்கத்தில், 'ஓம்ம்ம்ம்ம்ம்' என்ற ஒலியுடன், இறைப்பெருங் கடலில் (OCEAN) அலைகள் தோன்றின, அதைத் தொடர்ந்து 'நேரம்' (TIME), 'மாயா' (MAYA) மற்றும் 'துளி'களாக ஆன்மாக்கள் (DROP-SOULS) உருவாயின.

பாபாவும், ஏறக்குறைய 200 நபர்களை உள்ளடக்கிய பார்வையாளர்களும் நாடகத்தை மிகவும் ரசித்தனர். ருஸ்தம் காக்கா, அவரது மனைவி, மகன் மற்றும் மற்றும் ரங்கோலே, வாமன் ஆகியோர் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அயராது உழைத்தனர். இரண்டு மணி நேர நாடகம் நிறைவடைந்ததும், பாபா அனைத்து நடிகர்களையும் ஆரத்தழுவி, அதில் பணிபுரிந்தவர்களைப் பாராட்டினார்.

மும்பையிலிருந்து கோர்ஷெத், பூனாவிலிருந்து சில நெருங்கிய அன்பர்கள், ஆந்திராவிலிருந்து குடும்ப சாஸ்திரி மற்றும் பலர் நாடகத்தைப் பார்க்க வந்திருந்தனர்.

ஆதியின் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த குடும்ப சாஸ்திரியின் மகன் பாஸ்கர் என்பவருக்கு, உஷா குல்கர்னியுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. நாடகம் முடிந்த மறுநாள் இவர்களது திருமணம் அஹமதுநகர் மையத்தில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, குடும்ப சாஸ்திரி, பாஸ்கர், உஷா மற்றும் அவர்களது உறவினர்கள் மெஹராஸாத் சென்றபோது, பாபா தம்பதிகளை ஆசீர்வதித்தார். உஷா, பாபா முன்னிலையில் நிகழ்த்திய இசை நிகழ்ச்சியைக் கேட்ட மகிழ்ச்சியில், அவரது முயற்சியைப் பெரிதும் பாராட்டினார். பாபா புதுமணத் தம்பதிகளுக்கு அறிவுரை வழங்கினார்: "**ஒருவரையொருவர் நேசித்து, உங்கள் ஒருங்கிணைந்த அன்பால் என்னை நேசிக்கவும்**." பின்பு சாஸ்திரி குடும்பத்தினர் மகிழ்ச்சியுடன் அஹமதுநகர் திரும்பிச் சென்றனர்.

மார்ச் மாதம், பாபா தமது மேற்கத்திய அன்பர்களுக்கு, மே மாதத்தில் குருபிரசாத் அல்லது அந்த ஆண்டு பூனாவில் தங்கியிருக்கும் வேறு எந்த நேரத்திலும் தரிசனம் வழங்கப் போவதில்லை என்று அறிவித்தார். இந்தக் காலகட்டத்தில், அவருடைய பணிக்காக மட்டுமே, குறிப்பாக அழைத்தவர்களைத் தவிர, வேறு எவரும் அவரை சந்திக்கவோ அல்லது அவ்வாறு செய்யும் விருப்பத்தை வெளிப்படுத்தவோ கூடாது, ஏனெனில் அவரது ஏகாந்தவாசம் முன்பு போலவே தொடர்ந்து நடக்கும். மாறாக, 1962 நவம்பர் 1ஆம் தேதி முதல், ஏழு நாட்களுக்கு தமது மேற்கத்திய மற்றும் கிழக்கு ஆசிய அன்பர்களுக்கு தரிசனம் வழங்க, குருபிரசாத்திற்கு மண்டலியுடன் சிறப்புப் பயணம் மேற்கொள்வதாக பாபா அறிவித்தார். '**அன்பர்களை தனிப்பட்ட முறையில் சந்திக்கப்போவதில்லை**' என்பதைத் தெளிவுபடுத்தினார். '**அவரது ஏகாந்தவாசத்தில் எந்த இடையூறும் விளையாமல் இருக்க, பாபா-அன்பர்கள் நேர்காணல் அல்லது ஆன்மீகம் சார்ந்த அல்லது வேறுவிதமான கேள்விகளை எழுப்பக் கூடாது**.'

பாபா சிறுவயதிலிருந்தே கிரிக்கெட் விளையாடுவதைப் பெரிதும் விரும்பினார். 1959ஆம் ஆண்டில், அவர் தனது நெருங்கிய பக்தர்களில் ஒருவரான நாரி கான்டிராக்டர் (NARI CONTRACTOR), ஒரு தொழில்முறை கிரிக்கெட் வீரராக இந்திய கிரிக்கெட் அணியை வழிநடத்துவதை சாத்தியமாக்குவதாக உறுதியளித்தார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்திய அணி இங்கிலாந்து சென்றபோது, உண்மையில் நாரி கான்டிராக்டர், கிரிக்கெட் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். மற்றுமொரு பாபா அன்பரான பாலி உம்ரிகரும் (POLLY UMRIGAR) அவரது அணியில் இருந்தார், மேலும் அணித் தலைவர் பொறுப்பு அவருக்கு வந்திருக்க வேண்டும். 1962இல் இந்திய கிரிக்கெட் அணி, வெஸ்ட் இண்டீஸ் (WEST INDIES) நாட்டுக்கு போட்டியில் பங்கெடுக்கச் சென்றது. மார்ச் 17 அன்று ஒரு கிரிக்கெட் பந்து, நாரியின் தலையைத் தாக்கியதில் பலத்த காயம் ஏற்பட்டது.

அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு நான்கு மணிநேர அவசர அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அவரது உடல்நிலை குறித்த தினசரி தகவல்கள் வானொலி மற்றும் செய்தித்தாள்களில் ஒலிபரப்பப்பட்டன; பெண்டு இதை 19ஆம் தேதி முதல் பாபாவிற்கு அனுப்பி வந்தார். நாரி காயமுற்றதால், அவருக்கு பதிலாக உம்ரிகர் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார், இதனால் பாபா, இந்திய அணியை வழிநடத்தும் வாய்ப்பை இருவருக்கும் வழங்கினார். நாரியின் மனைவி டாலிக்கு (DOLLY) '**அவரைப் பற்றி கவலைப்பட வேண்டாம்**' என்ற செய்தியை பாபா அனுப்பி வைத்தார்.

மார்ச் 25 அன்று, ஆதி, டாக்கே, ஸரோஷ் ஆகியோர் பிம்பல்காவ்ம் நில உரிமையாளரின் ஆக்கிரமிப்பு தொடர்பாக பாபாவை சந்தித்தனர். அன்று ஜால்பாயும் வந்திருந்தார்.

1962 மார்ச் 31 சனிக்கிழமை காலை 8:00 மணிக்கு, ஆண், பெண் மண்டலியுடன் பாபா பூனாவிற்குப் புறப்பட்டார். வழியில் நூற்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள் ஒன்றுதிரண்ட ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் பெட்ரோல் நிலையத்தில் அவர் நின்றார். பின்னர் உடல் நலம் குன்றியிருந்த குல்மாயை சந்திக்க குஷ்ரு குவார்டர்ஸுக்கு விஜயம் செய்து, மெஹர்ஜியின் காரில் பெண்மணிகளுடன் பாபா பூனா புறப்பட்டுச் சென்றார். டிஸோட்டோ (De SOTO) காரில் நாஜா, ரானோ மற்றும் சில மண்டலியை ஆதியும், ஆதியின் ஷெவர்லே காரில் பிற மண்டலியை வாமனும் அழைத்துச் சென்றனர். முழுக் குழுவும் குருபிரசாத்தில் தங்கியது; நாக்பூரின் நானா கேரும் அவர்களுடன் இணைந்தார்.

ஏப்ரல் 3ஆம் நாள் பூனா வந்தடைந்த சிறிது நேரத்தில், பெண்டுவிற்கு சிறுநீர் கழிப்பதில் அதிக சிரமம் ஏற்படவே, 'ஜஹாங்கீர் நர்ஸிங் ஹோம்' (JEHANGIR NURSING HOME) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு, சுக்கிலச் சுரப்பியில் (PROSTATE GLAND) அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது; ஆனால் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடியாமல் போனதால், இரண்டாவது முறையாகச் செய்யப்பட்டது. இதுவும் தோல்வியை சந்தித்த நிலையில், அதிர்ஷ்டவசமாக மூன்றாவது முயற்சி (மே 9 அன்று) வெற்றியைக் கண்டது. மெஹர்வான் ஜெஸவாலா சுட்டிக்காட்டியது போல், "அத்தகைய திறமை வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர், மூன்று முறை தோல்வியை சந்திக்க மாட்டார் என்பது மிகவும் தெளிவாக இருந்தாலும், இந்த நடைமுறைகள் அனைத்தும் பெண்டுவிற்கு மிகவும் வேதனையாக இருந்தன; மேலும், பாபா, இதர மண்டலியைப் போலவே பெண்டுவை எப்பொழுதும் துன்பத்தில் பங்கு கொள்ள வைத்தது போலத் தோன்றியது."

எனவே பாபா பூனாவில் தங்கியிருந்தபோது, பெண்டு, மருத்துவமனையில் இருக்க வேண்டியிருந்தது; அலோபா, மெஹர்தாஸ் இருவரும் அவரது தேவைகளை கவனித்துக் கொண்டனர். பெண்டுவின் சிகிச்சையை மேற்பார்வையிட டாக்டர் டானும் பூனாவில் தங்கியிருந்தார்.

ஒரு நாள் அலோபா மருத்துவமனையிலிருந்து குருபிரசாத்திற்கு வந்த வேளையில், பாபா அவரது வருகையின் நோக்கத்தைக் கேட்டதற்கு, அலோபா, "உங்களைப் பார்க்க" என்று பதிலளித்தார்,

பாபா அவரைத் திருத்தும் விதத்தில் கண்டித்தார்: "**நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாதபோது, என்னைக் கண்டு என்ன பயன்? எனது கட்டளைகளைப் பின்பற்றினால் மட்டுமே நீங்கள் என்னை உண்மையில் காண முடியும்! நீங்கள் உடல் ரீதியாக என்னைப் பார்ப்பதன் மூலம் என்னைக் 'காண' முடியாது!**" அலோபா உடனடியாக பெண்டுவை கவனிக்கத் திரும்பிச் சென்றார். (எரச், பாவ் கல்சூரி இருவரும் அவ்வப்போது பெண்டுவை பார்க்கச் செல்வதுண்டு; ஆனால் அவர்களால் நீண்ட நேரம் அவருடன் இருக்க முடியவில்லை.)

கோடை நாட்களில், தரிசன நிகழ்ச்சிகள் எதுவும் திட்டமிடப்படவில்லை என்றாலும், பூனா மற்றும் மும்பை அன்பர்களை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்களில் எப்போதேனும் பார்க்க பாபா அனுமதித்தார். 1962 ஏப்ரல் 1 அன்று, 'கிழக்கு-மேற்கு சகவாசம்' (EAST-WEST GATHERING) என்று அழைக்கப்படும் எதிர்வரும் சிறப்பு தரிசன நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் பற்றி விவாதிக்க, தொடர் கூட்டங்களின் முதல் கூட்டமும், தொடர்ந்து மற்றுமொரு கூட்டம் ஏப்ரல் 8 அன்றும் நடைபெற்றது.

வார இறுதி நாட்களில், பெரும்பாலான மும்பை அன்பர்கள் பூனாவிற்கு வந்து, அருகில் அமைந்த விடுதிகளில் தங்குவது வழக்கம். நரிமனின் சகோதரர்கள் ருஸ்தம், பெஹராம், ஹோஷங் மற்றும் அவர்களது மனைவிகள் ஃப்ரீனி (FRENY), பாப்பு (BAPU), ஹவோவி (HAVOVI) ஆகியோர் இந்தக் காலகட்டத்தில் பாபாவின் நெருக்கத்தில் வந்தனர். ஃப்ரீனி தாதாச்சாஞ்சியின் தங்கையான ஸரீன் மவல்வாலா (ZARINE MAVALWALA), கராச்சியிலிருந்து தனது குடும்பத்துடன் வந்தவர், ஏதோ பாபாவின் 'மன வலை'யில் சிக்கிவிடுவார் என்ற எண்ணத்தில் அவரை சந்திக்கத் தயங்கினார்; ஃப்ரீனி அவர்களை குருபிரசாத்திற்கு அழைத்து வந்தபோது, பாபாவிடம் கடைசியாக அறிமுகப்படுத்தப்பட்டதை தானே ஊர்ஜிதம் செய்துகொண்டார். ஆனால், பாபா அவரைத் தழுவியதும் ஸரீன் கண்கலங்கி அழத் தொடங்கினார். ஃப்ரீனி உடனே, "பாபா, அவள் உங்களை மிகவும் நேசிக்கிறாள்" என்று கூறவே, பாபா, ஸரீனின் முகத்தை தனது கைகளில் எடுத்து, "**அவர் என்னுடையவர்**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஏப்ரல் நடுப்பகுதியில் வந்தவர்களில் ஒருவர் பாபாவின் தாய்வழி அத்தையான பானு மாசி (BANU MASI), அவர் தனது மகன் மேர்வானுடன் கராச்சியிலிருந்து பூனாவிற்கு வந்தார். அவர் பாபா மற்றும் அவரது மருமகள்களான மணி, நாஜா இருவரையும் சந்தித்து கண்கலங்கி அழுதார். அவர் தனது மருமகன் பெண்டுவை மருத்துவமனையில் சந்தித்தார். டெல்லியைச் சேர்ந்த மோனா, மனோகர் ஸாக்கரே ஆகியோரும் ஏப்ரல் மாதம் குருபிரசாத்திற்கு வந்து பாபாவை சந்தித்தனர். சம்பத் ஐயங்காரின் மகள் லட்சுமி, அவரது பேரன் கஸ்தூரி மற்றும் ஐயங்கார் குடும்பத்தின் பிற உறுப்பினர்களும்

அந்தக் கோடையில் பாபாவைப் பார்க்க வந்தனர். "**நான் படைப்பில் அனைவருக்காகவும் இருக்கிறேன், ஆனால் நான் சம்பத் ஐயங்கார் போன்ற சிலருக்காக வருகிறேன்**" என்று பாபா அவர்களிடம் கூறினார்.

ஒரு நாள் பாபா, அதே சாலையில் குருபிரசாத் மாளிகைக்கு சற்று தொலைவில் அமைந்த 'மோபோஸ்' (MOBO'S) ஹோட்டலில் தங்கியிருந்த ஏராளமான மும்பை அன்பர்களை சந்திக்கச் சென்றார். ரோடா மிஸ்திரி அவருக்கு ஷர்பத் பரிமாறினார்; பாபா அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை நிரம்ப ஷர்பத்தை வழங்கினார். ரோடாவின் மகன் ஸரோஷுக்கு அப்போது எட்டு வயது; பாபா ஒரு கோப்பையைக் கையிலேந்தி, அதில் ஷர்பத்தை நிரப்புவது போல பாவனை செய்தார், ஆனால் ஒரு துளி கூட அதில் ஊற்றாத போதும், அவர் அதை ஸரோஷிடம் கொடுத்து அருந்துமாறு அறிவுறுத்தினார். ஸரோஷ் சிறுவனாக இருந்தபோதிலும், அவன் கீழ்ப்படிந்து, அதை அருந்த தீவிரமாக முயன்றான். பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார், பின்னர் அவனுக்கு ஒரு முழுக் கோப்பை ஷர்பத்தை வழங்கினார்.

ரோடா சில சமயங்களில் மோபோஸ் ஹோட்டலில் தனது அறையில் ஒரு சிறிய அடுப்பில் பாபாவிற்கு உணவு தயார்செய்தார். ஒரு நாள் அவர் குருபிரசாத்திற்கு கோர்ஷெத் கானின் (KHORSHED KHAN) உதவியுடன் உணவை எடுத்துச் சென்றபோது, பாபா, பெண்மணிகளுடன் வராண்டாவில் அமர்ந்து, அவரை அரவணைக்க அழைத்தார். ஆனால், அவர் அவ்வாறு செய்வதற்கு முன்னர், "**உங்கள் கைகளில் ஒரே வெங்காய வாசனை!**" என்று பாபா கூறியதற்கு, ரோடா எதுவும் பேசாமல் வெறுமனே தலையசைத்தார். "**உணவு தயார் செய்த பின்பு கைகளை சுத்தம் செய்யவில்லையா?**" என்று கேட்டதும், உடனிருந்த பெண்மணிகள் அதிர்ச்சியடைந்தனர். பாபா மறுபடியும் "**ரோடாவின் கைகளில் நிச்சயமாக வெங்காய வாசனை வருகிறது**" என்று கூறவே, ரோடா, மீண்டும் அமைதியாக தலையசைத்தார்.

எவ்வாறாயினும் பாபா அவரைத் தழுவிய பின்பு, ஹோட்டலுக்குத் திரும்பும் வழியில், கோர்ஷெத் கான், "ரோடா, நீ இன்றைய சமையலில் வெங்காயம் எதையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதை ஏன் பாபாவிடம் சொல்லவில்லை?" என வினவியதும், ரோடா ஒரு சிறிய வாக்கியத்தில் விளக்கினார்: "உங்கள் குருநாதருடன் ஒருபோதும் முரண்படாதீர்கள்." ரோடாவின் வாழ்க்கை எப்பொழுதும் மேற்கோள் காட்டப்படும் ஹாஃபீஸின் ஈரடிக் கவிதைகளுக்கு உயிரூட்டம் வழங்கும் சான்றாக அமைந்தது, "**குருநாதர் கூறுவது எதையும், ஒருபோதும் தவறு என்று கூறாதீர்கள்…**"

ருஸ்தம், பெஹராம், ஹோஷங் தாதாசாஞ்சி, சதாஷிவ் பாட்டீல், ஜால்பாய், பெஹராம், ஷெரூ, ஸொராப்-ருஸ்தம் இரட்டையர்கள், ஜால் தஸ்தூர், அவரது மைத்துனர் ஃபிலி இன்ஜினியர் (FILI ENGINEER), மெஹர்ஜி ஆகியோர் குருபிரசாத்தில் தினமும் சீட்டு விளையாட வந்தனர். ஜிம் மிஸ்திரியும் நரிமனும்

வார இறுதி நாட்களில் வந்து குருபிரசாத்தில் தங்கினர். ஜோஸஃப் & காரி ஹார்ப் ஆகியோரும் அவ்வப்போது வருகை தந்தனர். காலை நேரங்களில், ஜோஸஃப் தனது காரில் பாபாவை வெளியே அழைத்துச் செல்வது வழக்கம். மாலையில், பாபா, பெண்மணிகளுடன் வராண்டாவில் அமர்ந்திருப்பதும், மணி அவருக்கு ஏதேனும் புத்தகத்தை வாசிப்பதையும் வழக்கமாகக் கொண்டார். பின்னர் இரவு 8:00 மணியளவில், இரவு கண்காணிப்பாளராக பணிபுரிந்த பாவ் கல்சூரியுடன், பாபா தமது அறைக்கு ஓய்வு பெறச் செல்வதும் அனுதின நிகழ்வு.

பாபா பூனாவில் இருந்தபோது, சிது, காக்கா பாரியாவிற்கு உதவியாக இருக்கும் விதத்தில் மெஹராஸாத்தில் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டார். முந்தைய சந்தர்ப்பத்தில், சிது இல்லாத நேரத்தில், முஹமது மஸ்த் ஒரு வாரம் உணவு உண்பதை நிறுத்திவிட்டார். பாதிரி இதைக் குறித்து பாபாவிடம் முறையிடவே, அவர், அந்த ஆண்டு மெஹராஸாத்திற்கு சிதுவுடன் வர முஹமதை அனுமதித்தார்; எனவே, ஏப்ரல் 12 அன்று இருவரையும் ஆதி காரில் அழைத்துச் சென்றார். இது மிகவும் அசாதாரணமானது, ஏனெனில் பல வருடங்களில் முஹமது மெஹராபாத்தை விட்டு வெளியேறியது இதுவே முதல் முறை. இருப்பினும், அவர் தங்கியிருந்த ஐந்து நாட்களுக்குப் பின்னர், 17ஆம் தேதி, முஹமது மஸ்த் மீண்டும் மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளவே, பாபா அவரை சிதுவுடன் அனுப்பி வைத்தார்.

இடையிடையே அந்தக் கோடையில், குருபிரசாத்தில் நடந்த இசை நிகழ்ச்சிகளில் மதுசூதனன் பூனா குழுவினருடன் பாபாவின் முன்னால் அடிக்கடி பாடினார். ஏப்ரல் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து குருபிரசாத்திற்கு வருமாறு மஹாராணி ஷாந்தாதேவியை பாபா கேட்டுக் கொண்டார், மேலும் இந்த நாட்களில் மாலை 4:00 முதல் 6:00 மணி வரை, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பூனா மையக் குழுவிலிருந்து ஒரு சிலரும் இதில் கலந்துகொள்ள பாபா அனுமதி வழங்கினார்; 1962 ஏப்ரல் 15 ஞாயிற்றுக்கிழமை அன்று, நெருங்கிய பூனா குடும்பங்கள் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர்.

நாராயண் ஸ்வாமி (NARAYAN SWAMY) என்ற ஒரு தொழில் சார்ந்த நகைச்சுவை நடிகர், விகட வித்தகர் அந்த ஆண்டு மும்பையில் நடந்த பாபாவின் பிறந்தநாள் விழாக்களில் பல நிகழ்ச்சிகளை வழங்கியதைத் தொடர்ந்து, ஸொராப்ஜி ஸிகன்போரியா அவரை ஏப்ரல் 13 அன்று பூனாவிற்கு அழைத்து வந்தபோது, அவர், பாபா முன்னிலையில் அரை மணி நேரம் நிகழ்ச்சியை வழங்கினார். இரண்டு பூனைகள் சண்டையிடுவது, நாய்கள் குரைப்பது, பறவைகள் விசில் அடிப்பது மற்றும் பல்வேறு இசைக்கருவிகளின் ஒலியை எழுப்பியதோடு, ஸ்வாமி பல இந்தியத் தலைவர்களின் பாணியில் உரைகளை நிகழ்த்தினார். பாபா அவரது நடிப்பை ரசித்து, கைக்குட்டை ஒன்றை வெகுமதியாக வழங்கினார். பெண்டு மருத்துவமனையில் இருப்பதைக்

கேள்விப்பட்ட நகைச்சுவை நடிகர், அங்குச் சென்று அவரை உற்சாகப்படுத்தும் விதத்தில் நிகழ்ச்சிகளை நடத்தினார்.

1962 ஏப்ரல் 14 சனிக்கிழமை மாலை 4:00 மணி முதல், ஹபீப், கவாலி இசைக் கலைஞர், தெய்வீக அன்பிற்குரியவர் முன்னிலையில் சில மணி நேரம் பல பாடல்களைப் பாடி பாபாவை மகிழ்வித்தார். பகீரத், சகன், ருஸ்தம் காக்கா மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட அஹமதுநகரிலிருந்து பலர், இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பாபா ஹபீபிடம் கூறினார், “**இவர்களில் எவரும் பாடல்களைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அதை நினைத்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் எனக்காகப் பாடுகிறீர்கள், அது போதும் - அதன் உண்மையான அர்த்தம் எனக்குத் தெரியும்.**”

பாபா மிகவும் பாராட்டிய ஈரடிக் கவிதை ஒன்றை, அவர் மொழிபெயர்த்தார்:

**எனக்கு ஆர்வம், ஆசை, இறை உணர்வை எய்தும்**
**அவா எதுவும் இல்லை.**
**உங்கள் அன்பின் வேதனை என்னுடன்**
**எப்பொழுதும் நிலைத்திருக்கட்டும்.**

அருமையான குரல் வளம் கொண்ட இளம் பெண் லதா லிமாயே, ஏப்ரல் 8 அன்று குருபிரசாத்தில் பாபாவின் முன்னால் இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார்; மேலும் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மீண்டும் அழைக்கப்பட்டார். அதே நாளில் கோலாப்பூரைச் சேர்ந்த பேராசிரியர் கங்காதர் வி. குல்கர்னி (PROF. GANGADHAR V. KULKARNI), டி.ஆர். நிர்குண்டிக்கருடன் (D.R. NIRGUNDIKAR) குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தார். அன்றைய தினம் வந்த நோஷிர் ஈரானி, புனித யாத்திரை செல்லவும் சில துறவிகளை தரிசனம் செய்யவும் அனுமதி கோரி பாபாவைத் தொந்தரவு செய்தார். பாபா இதை விரும்பவில்லை.

1962 ஏப்ரல் 18 புதன்கிழமை அன்று, பாபா ‘பொருளுலகக் கனவு’ (DREAM OF MATERIALISM) என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்:

**உலகின் இன்றைய நிலை, எங்கும் நிலவும் சண்டை, சச்சரவு மற்றும் நிச்சயமற்ற தன்மை, பொதுவான அதிருப்தி, மற்றும் எந்த ஒரு சூழ்நிலைக்கும் எதிரான கிளர்ச்சி ஆகியவை முழுநிறை பொருளுலகின் இலட்சியத்தை ஒரு வெற்றுக் கனவாகக் காட்டும் அதே நேரத்தில், பொருளுலகிற்கு அப்பாற்பட்ட ஒரு நித்திய, நிரந்தர உண்மைப்பொருளின் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது. இந்த ஒன்றே உருவான உண்மைப்பொருள் இல்லாது இருந்திருந்தால், விஞ்ஞானம் கொண்டு வந்துள்ள கோடிக்கணக்கான மக்களின் பொருளுலக நல்வாழ்வு, மனநிறைவையும் திருப்தியையும் விளைவித்திருக்கும், மேலும் அறிவியலின் அபரிமிதமான கற்பனையானது, பொதுவான உணர்வு நிலையில் அளப்பரிய மகிழ்ச்சியைக்**

கட்டவிழ்த்து விட்டிருக்கும். இப்போது இருப்பதைப் போல், இவ்வளவு சாதனைகளும், இதைவிட மிகப்பெரிய சாதனைகளின் வாக்குறுதிகளும் எப்போதும் இருந்ததில்லை என்று மனிதன் நினைக்கிறான்; ஆனால் உண்மை என்னவெனில், இந்த அளவுக்குப் பரவலான அவநம்பிக்கை, அதிருப்தி மற்றும் துயரம் இருந்ததே இல்லை. அறிவியலின் வாக்குறுதிகள் வெறுமையாகவும், அதன் பார்வை பொய்யாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள் ஒன்றுதான் உண்மையானது; சொல்லக்கூடிய அளவிலான ஒரே உண்மை என்னவெனில்: ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள் உள்ளது; மேலும், உண்மைப்பொருள் அல்லாத அனைத்தும் மாயையைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது. அவர்களின் ஆழ் இதயத்தில் மக்கள் இதை அறிவார்கள், ஒரு காலத்திற்கு அவர்கள் மாயையின் பொய்யும் போலியுமான வாக்குறுதிகளால் ஏமாந்து, அவற்றை உண்மையானதாக நினைத்தாலும், உண்மைப்பொருளைத் தவிர வேறு எதுவும் அவர்களை திருப்திப்படுத்த முடியாது. பொய்யும் போலியுமான கற்பனையின் கிட்டத்தட்ட வரம்பற்ற நாடகம், அது படிப்படியாகக் கொணரும் துயரத்தால், அவர்கள் சோர்வடைந்து போகிறார்கள். இதுதான் இன்றைய பொது ஜனங்களின் நிலை.

நான் கூட சோர்ந்து போய், பரிதாபமாக இருக்கிறேன். நான் சுதந்திரமாக இருக்கும் வேளையில் ஏன் அப்படி இருக்க வேண்டும்? ஏனெனில் புத்தர் கூறியது போல: “நான் நித்திய சுதந்திரமாகவும், நித்தியமாகப் பிணைக்கப்பட்டும் இருக்கிறேன்.” மக்களின் அடிமைத்தனத்தின் காரணமாக நான் கட்டுண்டிருக்கிறேன்; மேலும் அவர்களின் பரவலான வெறுப்பு, துன்பம் ஆகியவற்றால் நான் சோர்ந்துபோய் பரிதாபமாக உணர்கிறேன். மிகப் பெரிய விஞ்ஞானிகளே, தங்களுக்கு அப்பாற்பட்ட அறிவின் பகுதிகளைக் கண்டு திகைப்பூட்டும் அச்சத்தில், தங்கள் கண்டுபிடிப்புகள் எதைக் கட்டவிழ்த்துவிடக்கூடும் என்று திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள். மனிதர்கள், கடவுள் என்று அழைக்கும் எங்கும் நிறை ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள் உளதாயிருப்பதில் எழும் முழுக் குழப்பத்தையும் ஒப்புக்கொண்டு, அறிவுத்திறன் மூலம் அணுக முடியாததை உறுதிப்படுத்த நீண்ட காலம் ஆகாது.

சாதாரண உலக மனிதன், பொருளுலகம் உறுதியளிக்கும் பரிசுப் பொருட்களால் ஏமாற்றப்பட்டு, கடவுள் உளதாயிருப்பதை மறுப்பதாகத் தோன்றினாலும், உடனடி நன்மையைத் தவிர எல்லாவற்றிலும் நம்பிக்கையை இழந்துவிட்டாலும், கடவுள் மீதான உள்ளார்ந்த நம்பிக்கையை இழக்க மாட்டான்; இது இக்கணத்தில் பொய்யும், போலியுமாகத் தோன்றும் மாயைக்கு அப்பாற்பட்டது. அவனது வெளியளவிலான சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மைக்கு மனதின் விரக்தியே காரணம்; அது அவனது ஆழ் இதயத்தைத் தொடாது.

**பீட்டரைப் பாருங்கள்; அவர் இயேசுவை மறுத்தார்! விரக்தியால் நிறைந்த அவரது மனம் இயேசுவை மறுக்க வைத்தது; ஆனால் அவரது இதயத்தில், இயேசுவே கிறிஸ்து என்பதை பீட்டர் உளதார அறிந்திருந்தார். சாதாரண மனிதர் ஒருபோதும் நம்பிக்கையை இழப்பதில்லை. அவர் ஒரு குறிப்பிட்ட தூரம் மலையில் ஏறி, குளிர் மற்றும் சுவாசிப்பதில் விளையும் சிரமத்தை அனுபவித்து, மலையின் அடிவாரத்திற்குத் திரும்பி வருபவரைப் போன்றவர். ஆனால் விஞ்ஞானத்தில் தழைத்தோங்கும் மனம் ஒருவரின் இதயம் உறைந்து, உயிரைத் துறக்கும் நிலையை எதிர்கொள்ளும் வரை, மலைமேல் ஏறுகிறது. ஆனால் இந்த மனம், அனைத்தையும் கடந்த பரந்து விரிந்த தன்மையால் மிகவும் தடுமாறுகிறது; அது தனது தேடலின் நம்பிக்கையற்ற தன்மையை ஒப்புக்கொண்டு, ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை நோக்கி தனது பார்வையைத் திருப்பவேண்டிய கட்டாயத்தில் உள்ளது.**

ஏப்ரல் இறுதியில், கோர்ஷெத் பூனாவில் தங்கியிருக்கும் வரை குருபிரசாத்தில் பெண் மண்டலியுடன் இணைந்தார்; அவரது தாயார் ஸூனாமாசியை, சில நாட்கள் பிந்த்ரா ஹவுஸில் தங்குமாறு கூறி, பாபா அவரை எப்போதேனும் அழைப்பதுண்டு; ஆனால் பிற்காலத்தில், அவரது உடல்நிலை சீரில்லாத காரணத்தால், ஸூனாமாசி மும்பையில் இருப்பது நல்லது என்று பாபா சுட்டிக்காட்டினார். அர்னவாஸ், நர்கீஸ், அலு கம்பட்டா ஆகியோர் ஏப்ரல் 25ஆம் தேதி குருபிரசாத் வந்தனர்.

மே 1 அன்று 30 தன்னார்வத் தொண்டர்களுடன் நிகழ்த்திய கூட்டத்தில் எதிர்வரும் கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான (EAST-WEST GATHERING) ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. நாக்பூரிலிருந்து வந்திருந்த டாக்டர் தேஷ்முக்கும் அதில் பங்கெடுத்தார்.

1962 மே 16 ஞாயிற்றுக்கிழமை அன்று மற்றுமொரு கூட்டம் நடைபெற்றது; அதே நாளில் பூனா அகில இந்திய வானொலி நிலையத்தின் மூன்று கைதேர்ந்த கலைஞர்களின் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள, 150 பூனா மற்றும் மும்பை அன்பர்கள் ஒன்றுதிரண்டனர். பக்கவாத்தியங்களான ஸாரங்கி, தபேலா, சித்தார் இசைக்கருவிகளை முறையே கோல்வல்கர், காமத், லக்ஷ்மண் வஸே மூவரும் வாசித்தனர். இது ஒரு விறுவிறுப்பான நிகழ்ச்சியாக இருந்தது. அவர்களின் இசை நிகழ்ச்சி மிகச் சிறப்பாக இருந்தது என்று பாபா அவர்களிடம் கருத்துத் தெரிவித்தபோது, கோல்வல்கர், “இங்கே உங்கள் பிரசன்னம் இருந்தது ஒன்றுதான் இதற்குக் காரணம், இதற்கு முன்பு நாங்கள் இவ்வளவு சிறப்பாக இசைநிகழ்ச்சிகளை வழங்கியதில்லை” என்றார். பாபா அவர்கள் ஒவ்வொருவரையும் ஆரத்தழுவினார். பாபா பொதுவாக இசைக்கருவிகளை மட்டும் இசைத்து நிகழ்த்தும் தருணங்களை ரசித்ததில்லை, ஆனால் அன்று அவர் அதை வெகுவாக ரசித்தார்.

சற்றும் எதிர்பாராத விதமாக, டாக்டர் ஹாரி கென்மோர் (DR. HARRY KENMORE) 1962 மே 7அன்று பூனா வந்து, நேப்பியர் ஹோட்டலிலிருந்து தொலைபேசி வழியாக குருபிரசாத்தைத் தொடர்பு கொண்டார். கென்மோரின் குரலைக் கேட்டு ஆச்சரியமடைந்த எரச், 'அவர் எங்கிருந்து பேசுகிறார்' என வினவியபோது, தான் பூனாவில் இருப்பதாக கென்மோர் அதிரும் குரலில் முழங்கியபோது, எரச் அவர் அடிக்கடி அழைப்பது போல, நியூயார்க் நகரத்திலிருந்து அழைப்பதாக நினைத்து சிரித்தார். கென்மோர் பூனாவில் இரண்டு வாரங்கள் தங்கி, பாபா மற்றும் மண்டலியுடன் இருக்கும் நோக்கத்தில் தினமும் குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டார்.

தேஷ்முக் ஒவ்வொரு நாளும் பாபாவிற்கு கீர்த்தனை நிகழ்ச்சியை நடத்திவந்தார். ஃபிரான்சிஸ் சில சமயங்களில் எரிச்சல் அடைவதுண்டு, ஏனெனில் கீர்த்தனை இந்திய மொழியில் இருந்ததால், அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே ஒரு நாள் அவர், தேஷ்முக் ஆங்கிலத்தில் கீர்த்தனைகளை பாடுமாறு பரிந்துரைத்தார், தேஷ்முக் சிலவற்றை இசையமைக்கத் தொடங்கினார்.

அப்துல் மஜித் கானும் அந்த மாதம் வருகை தந்தார். பிறந்தநாள் விழா மற்றும் பிற சந்தர்ப்பங்களில் அவர் பாபாவைப் பற்றி உரை நிகழ்த்துவது வழக்கம், மேலும் பாபா அவரிடம் வலியுறுத்தி கூறினார், "**நான் கடவுள் என்று முழு உலகிற்கும் சொல்லுங்கள்!**"

1962 மே 13 ஞாயிறு அன்று காலை, விஷ்ணு குருபிரசாத் மண்டபத்திற்குச் செல்லும் படிக்கட்டில் அமர்ந்திருந்தார். பாபா அவரைப் பார்த்து நரிமனிடம், "**விஷ்ணுவின் ஒரு கால் இந்த அறையில் உள்ளது, ஒரு கால் கல்லறையில் உள்ளது**" என்று கூறினார். அந்த நேரத்தில், பாபா கூறியதன் அர்த்தம் என்னவென்று எவருக்கும் புரியவில்லை. அன்று விஷ்ணு மிகவும் இனிமையான மனநிலையில் காணப்பட்டார்; அங்கு வந்திருந்த அவரது உறவினர் சுஷீலாவுடன் உரையாடும் போது அதீத உற்சாகத்துடன் இருந்தார்.

அன்று மாலை 4:00 மணி முதல் 6:30 வரை நடைபெற்ற கவாலி இசைநிகழ்ச்சியின் போது, குருபிரசாத் நிரம்பி வழிந்தது. மும்பை மற்றும் பூனாவைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் பாலி உம்ரிகர், நாரி கான்டிராக்டர், அவரது மனைவி டாலி மற்றும் கில்னானி குடும்பத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஜெய்ப்பூரைச் சேர்ந்த ஸித்திக் (SIDDIQ) என்பவர் அன்றைய கவாலி பாடகர், அவர் தனது இதயத்தையும் ஆன்மாவையும் இசையில் ஈடுபடுத்தி, பாபாவை மிகவும் மகிழச் செய்தார்.

ஃபிரான்சிஸ் காலில் காயம் ஏற்பட்டு அசௌகரியமாக அமர்ந்திருந்தார். அவர் பாவ் கல்சூரியிடம் அடிக்கடி, "இந்த ஸ்ருதி என்னவென அழைக்கப்படுகிறது?" என்று கேட்டதற்கு பாவ் கல்சூரி, "எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தது ஃபிரான்சிஸை எரிச்சலடையச் செய்ததால், பாவ் கல்சூரி

தலைப்புகளை உருவாக்கத் தொடங்கினார், ஃபிரான்சிஸ் திருப்தியடைந்தார். அதைத் தொடர்ந்து ஜிம் மிஸ்திரியிடம் பாடல்களின் பொருளைக் கேட்கத் தொடங்கியதும், ஜிம், ஃபிரான்சிஸை அமைதிப்படுத்த சில வரிகளை உருவாக்கினார்.

நிகழ்ச்சி நிறைவடைந்ததும் பாபா தமது அறைக்குச் சென்றார். பாவ் கல்சூரி, விஷ்ணு இருவரும் மாலை வேளையில் பால் அருந்தச் சென்றனர், ஏனெனில் பாவ் கல்சூரி விரைவில் பாபாவின் அறையில் இரவு பாதுகாவலுக்காகச் செல்ல வேண்டும். கவாலி இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்ததால் சற்று தாமதமாகிவிட்டது. இருவரும் பால் அருந்தும் வேளையில், பாவ் கல்சூரி, விஷ்ணுவிடம் கவாலி பாடல்களின் பொருளை விளக்குவதற்காக, ஃபிரான்சிஸ் எப்படி அவரைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார் என்பதையும், பாவ் கல்சூரி அவரை எப்படி ஏமாற்றி மகிழ்ந்ததையும் கேட்டு விஷ்ணு கலகலவென சிரித்தார்.

அதற்குப் பிறகு, பாவ் கல்சூரி முகம் கழுவச் செல்லவே, விஷ்ணு, கோஹெருக்கு செய்தி ஒன்றை வழங்கச் சென்றார். அப்போது இரவு சுமார் 8:20 மணி. கோஹெரை அழைக்க விஷ்ணு அழைப்பு மணியை அடித்தபோது, அவர் நினைவிழந்து கீழே வீழ்ந்தார். விஷ்ணுவின் உலகப் பயணம் முடிவுக்கு வந்தது. அவருக்குப் பெரிய அளவில் மாரடைப்பு ஏற்பட்டது. அவர் பிரியமான இறைவனுடன் ஐக்கியமாகும் போது, அவரது 59ஆவது பிறந்தநாளுக்கு சரியாக ஒரு மாதம் இருந்தது. விஷ்ணு சில காலமாக இதயத் தமனி உறைவால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அறையிலிருந்து வெளியே வந்து, ஸோஃபாவில் படுக்க வைத்திருந்த விஷ்ணுவின் அருகில் அமர்ந்தார். விஷ்ணுவின் இதயமும் நாடித்துடிப்பும் முற்றிலுமாக நின்று, கண்கள் பாதி மூடியிருந்த போதிலும், பாபா வந்தபோது, அங்கிருந்தவர்களில் ஒருவர், “இதோ பார் விஷ்ணு, பாபா வந்துள்ளார். பாபா உன் அருகில் அமர்ந்திருக்கிறார்” என்றதும், விஷ்ணுவின் கண்கள் அகலத் திறந்து, பாபாவைப் பார்த்தன, அவை மெதுவாக மூடப்படும் வரை அப்படியே இருந்தன.

பாபா, “**இறுதி மூச்சை விடும் வேளையிலும் அவர் எனக்கு எப்படிக் கீழ்ப்படிகிறார் என்பதைப் பாருங்கள்!**” என்றார்.

தினமும் மாலையில் பிந்த்ரா ஹவுஸுக்குச் சென்று, காலையில் குருபிரசாத்திற்குத் திரும்பிவரும் எரச், ஏற்கனவே கிளம்பிவிட்டார். அவருக்கும், மெஹர்ஜி, சதாஷிவ் பாட்டீல் ஆகியோருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது; எரச், விஷ்ணுவின் உறவினர் சுஷீலாவிற்குத் தெரியப்படுத்தி பின்னர், அவரை குருபிரசாத்திற்கு அழைத்துச் சென்றதால், சுஷீலா, விஷ்ணுவின் அருகில் அமர முடிந்தது.

ஆதி, ஸரோஷ், ருஸ்தம் காக்கா, ஸில்லா காக்கு, மானேக் ஆகியோர் அன்று குருபிரசாத்தில் இருந்தனர்; விஷ்ணு உயிரைத் துறந்தபோது அவர்கள்

அஹமதுநகர் திரும்பவிருந்தனர், எனவே அவர்கள் சிறிது நேரம் அங்கே தங்கினர்.

மிகுந்த கலக்கத்திலிருந்த சுஷீலாவை ஆறுதல்படுத்த எரச், ஆதி இருவருக்கும் ஒரு மணி நேரத்திற்கும் மேலானது. அதுவரை விஷ்ணுவின் அருகில் அமர்ந்திருந்த பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**கவாலி இசை இன்று என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது, எனது மகிழ்ச்சியில் நான் விஷ்ணுவை என்னுள் இணைத்தேன்!**" அவர் மேலும் கூறினார், "**இன்று நான் விஷ்ணுவின் அருகில் அமர்ந்திருப்பது போல, மண்டலியில் எவரும் உடலைத் துறந்த போது, அவர்கள் அருகில் நான் அமர்ந்ததில்லை. விஷ்ணு மிகவும் அதிர்ஷ்டசாலி!**"

ஒரு கட்டத்தில் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**இத்தனை வருடங்கள் விஷ்ணு என்னைக் கண்காணித்து வந்தார் - இப்போது நான் அவரை கவனித்துக் கொண்டிருக்கிறேன்!**"

'**அன்றிரவு விஷ்ணுவின் பூத உடலை பூனாவில் தகனம் செய்து, சாம்பலை மெஹராபாத்திற்கு கொண்டுவரவேண்டும்**' என்று பாபா முடிவு செய்தார். விஷ்ணுவின் உடல் பாபாவின் டிஸோட்டோ (De SOTO) காரில் கொண்டு செல்லப்பட்டது, பாபா, அதைப் பார்வையின் எல்லையிலிருந்து மறையும் வரை, நின்று பார்த்துக் கொண்டிருந்தார். அது விஷ்ணுவின் குடும்ப இல்லத்திற்கு (சுஷீலா வாழ்ந்த இடம்) கொண்டு செல்லப்பட்டு, நள்ளிரவுக்குப் பிறகு தகனம் செய்யப்பட்டது.

விஷ்ணு, உமக்கு எங்கள் ஆழ்ந்த வணக்கங்கள்! 1918ஆம் ஆண்டு இளம் வயது சிறுவனாக விஷ்ணு எவ்வாறு பாபாவின் அரவணைப்பில் வந்தார் என்பதையும், 1922இல் மன்ஸில்-எ-மீம் காலத்திலிருந்து, அவர் எப்பொழுதும் பாபாவுடன் இருந்ததையும் காலம் பதிவு செய்துள்ளது. அவரது கிட்டத்தட்ட 40 ஆண்டுகால அயராத சேவை, இறை-மனிதனிடம் கொண்டிருந்த அன்பு, கீழ்ப்படிதல் ஆகியவை பரிபூரணத்தை விவரிக்கும் விதத்தில் அதற்கு மிகவும் நெருக்கமானவை என்று கூற முடியும். அவரது தாயார், காக்குபாய், மெஹராபாத்தில் உயிரைத் துறந்தார், இப்போது விஷ்ணுவும் அன்பிற்குரியவரின் அருகில் உயிரைத் துறந்தார். விஷ்ணு சகிப்புத்தன்மையில் ஒப்பிட முடியாதவர், பாபா எப்பொழுதும் அவருடன் மகிழ்ச்சியாக இருந்தார். மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட, அவர் ஒருபோதும் குறை கூறி முறையிட்டதில்லை, மேலும் அவர் எல்லா இன்னல்களையும் தாங்கிக்கொண்டார். '**தமது மேலங்கியை (தாமனை) விஷ்ணு இறுதிவரை பற்றிப்பிடித்துக் கொண்டதாக**' பாபா மண்டலியிடம் கூறினார்.

விஷ்ணு, ஆதி, பெண்டு, பாதிரி நால்வரும் மெஹராபாத்தின் 'நான்கு தூண்கள்' என்று அழைக்கப்பட்டனர். ஆண் மண்டலி மத்தியில், அவருடைய இழப்பு மிகப் பெரியது.




விஷ்ணு (VISHNU)



குருபிரசாத் கவாலி இசை நிகழ்ச்சி (GURUPRASAD QAWALI PROGRAM), **1962**

1962 மே 15 செவ்வாய் அன்று மாலை 4:00 மணிக்கு, குருபிரசாத்தில் ராம் சிந்தி கவாலி பாடகரின் மற்றுமோர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இது இரண்டு மணி நேரம் நீடித்தது, உள்ளூர் பூனா அன்பர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆதி, டாக்கேயுடன் அஹமதுநகரிலிருந்து இரண்டு நாட்களுக்காக வந்தார்; அவர்கள் பாபாவிடம் பெல்காவ்ம் நிலத்தையும் விஷ்ணுவின் பிற சொத்துக்களையும் என்ன செய்வது என்பது குறித்து விவாதித்தனர். அடுத்த நாள் மெஹர்ஜி, எரச், ராம்ஜூ, சதாஷிவ் பாட்டீல் ஆகியோருடன் விவாதங்கள் தொடர்ந்தன. சுஷீலா வந்து பாபாவை சிறிது நேரம் சந்தித்தார்.

விஷ்ணுவின் உறவினர்களான ஹல்தங்கர் (HALDANKAR) குடும்பத்தினர் 17ஆம் தேதி வந்து, பாபாவின் முன்னிலையில் கதறி அழுதனர்; விஷ்ணு மீது அவர்கள் தொடுத்த வழக்கை மன்னிக்கும்படி பாபாவிடம் மன்றாடினர். தனது புகாரை நிபந்தனையின்றி திரும்பப் பெறுவதற்கான ஆவணத்தில் ஹல்தங்கர் கையெழுத்திட, அதை ஏற்றுக்கொண்டதாக பாபா எதிர் கையொப்பமிட்டார்.

பிரேம் கில்னானி ஒரு நீதிபதியாக இருந்ததால், சட்டப்பூர்வமான தீர்வை மேற்கொள்ள அழைக்கப்பட்டார். விவாதத்தின் போது, கில்னானி பாபாவின் கருத்தைக் கேட்டார், “இப்படி சமரசம் செய்துகொள்வது சிறப்பாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?”

புன்னகைத்த பாபா, “**நான் நினைக்கவில்லை; எனக்குத் தெரியும்!**” என்றார்.

பூனா சேவகர்களின் மற்றுமொரு கூட்டம் 1962 மே 27 ஞாயிற்றுக்கிழமை அன்று ‘கிழக்கு-மேற்கு’ சகவாசத்திற்கான (EAST-WEST GATHERING) இடவசதி பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கேஷவ் நிகம் ஜூன் 2 அன்று குருபிரசாத் வந்தார்.

பாபா மெஹராஸாத் திரும்பிச் செல்வதற்கு முன்னர், அவருடன் மேலும் சில ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டங்கள் நடைபெற்றன. ஜூன் 3 அன்று பட்வர்தன் (PATWARDHAN) மாலை 4:00 முதல் 6:00 மணி வரை மொழிந்த பாராயணத்தை பாபா மிகவும் ரசித்தார்; அவரைத் தழுவி, பாபா, தனது கைக்குட்டை ஒன்றைப் பாடகருக்கு வழங்கினார். அன்றைய நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்களில் ஜோஸஃப்-காரி ஹார்ப் ஆகியோரும் அடங்குவர். பால் நாத்து கோடை விடுமுறையில் குருபிரசாத்தில் தங்கி, அன்று குருதுவாடிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

1962 ஜூன் 4 அன்று மாலை 7:00 மணிக்கு, ஜோஸஃப் 1956, 1958 ஆண்டுகளில் அமெரிக்காவில் பாபாவின் இரண்டு வருகைகளின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொடரைக் காட்டினார். சுமார் 100 நெருங்கிய பாபா-அன்பர்கள் அதில் கலந்து கொண்டனர். புகைப்படக் காட்சி தொடங்குவதற்கு சற்று முன்பு, பாபா, கமலா பண்டாரியின் (KAMLA BHANDARI) பக்கம் திரும்பி, “**உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் என்னைக் காண்கிறேன். இந்த**

**ஒருமைத்தன்மையின் அனுபவம் தனித்துவமானது. இதை விவரிக்க முடியாது, அனுபவிக்க மட்டுமே முடியும். இது அளவிறுதியற்றது**" என்று குறிப்பிட்டார்.

வேறொரு ஞாயிற்றுக்கிழமை நடந்த கூட்டத்தில், வழக்கறிஞர் ஒருவர் பாபாவிடம், "பாபா, உங்களின் நீண்ட கால மௌனத்தைக் கலைக்கும் போது, எனது மகன் கோவிந்த் அதைக் கேட்கும்படி பேச முடியுமா" என்று கேட்டார். சிறுவனின் பக்கம் திரும்பிய பாபா புன்னகைத்து அழுத்தமாகத் தலையசைத்தார், "**ஆமாம், அவன் கேட்கும்படியாகப் பேசுவேன்**" என்று சைகையால் தெரிவித்தார்; "**உண்மையில், நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, அது, யார் ஒருவராலும் உச்சரிக்கப்படும் உரத்த பேச்சை விட எல்லையற்ற அளவுக்குத் தெளிவாகக் கேட்கப்படும்.**"

ஒரு நாள், பாபாவை விரும்பாத பார்சி பாரிஸ்டர் (PARSI BARISTER) ஒருவர் அவரைப் பார்க்க வந்தார். அவர் பாபாவின் தெய்வீகத்தன்மையை நம்பவில்லை, "ஏன் நீங்கள் கூறுவதை நிரூபிக்கவில்லை? நீங்கள் ஏன் அற்புதங்களைச் செய்யக்கூடாது?" என்ற கேள்விகளை எழுப்பினார்.

பாபா சிரித்துக்கொண்டே விளக்கினார்:

**படைப்பவர் (கடவுள்) எல்லையற்றவர், உருவமற்றவர், அளவிறுதியற்ற தன்மை உடையவர்; அவர் படைப்பாளர் என்பதை தமது சொந்த படைப்புக்கு நிரூபிக்கக் கட்டுப்பட்டவர் அல்ல. படைப்பாளரை அறிவதும், கண்டு கொள்வதும், உணர்ந்து கொள்வதும் படைப்பின் அடிப்படை பொறுப்பு.**

**ஒரு தந்தை தனது சொந்த மகனுக்கு, தான் உண்மையான தந்தை என்பதை நிரூபிப்பதை கனவில் கூட நினைப்பதில்லை. இதையும் மீறி, மகன் அவரை சந்தேகித்தால், இயல்பாகவே அவன் தன் உண்மையான தந்தையைத் தேட முயல்கிறான் - இறுதியில், தனது தந்தை சொன்னது உண்மை என்று மகன் உறுதியாக நம்புகிறான்.**

**நீங்கள் வெளியளவில் நிகழும் அற்புதங்களைப் பற்றி பேசுகிறீர்கள். நீங்கள் என்னை ஒரு மந்திரவாதி என எடுத்துக்கொள்கிறீர்களா? அறிவிலிகளால் இயேசு கிறிஸ்து பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டார், கல்லால் அடித்து துன்புறுத்தப்பட்டார். பீட்டர், ஜேம்ஸ் போன்ற அவருடைய அப்போஸ்தலர்களால் இதை சகிக்க முடியாத நிலையில் - மேலும் அவர்கள் கூட்டத்தை அமைதிப்படுத்தும் நோக்கத்தில், அற்புதங்களைப் புரியுமாறு இயேசுவை வற்புறுத்தினர். இயேசு அவ்வாறு செய்யத் தயங்கினாலும், தம்முடைய அப்போஸ்தலர்களை அதிருப்தி அடையச் செய்யாமல் இருக்கும் எண்ணத்தில், அவர் வெளிப்படையாக அற்புதங்களைப் புரிந்தார்.**

**அதன் விளைவாக நடந்தது என்ன? அவர் ஒரு மந்திரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு, விசாரணைக்குப் பிறகு குற்றவாளியாக சிலுவையில் அறையப்பட்டார்.**

**கடந்த 40 வருடங்களாக நான் கூறிக்கொண்டிருக்கும், ஒன்றே உருவான ஏக இறைவன் நான் என்றால், இதுபோன்ற செயல்களைச் செய்வது எனக்கு இன்றியமையாதது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் கூறியதற்கு இணங்க, உருவமில்லா கடவுள், மனிதர்களுக்கு விழிப்புணர்வு தேவையெனும் தருணத்தில், அவர்களை அறியாமையிலிருந்து தட்டி எழுப்ப, ஒரு மனித உருவத்தை எடுக்கும்போது - ஒரு சிலர் மட்டுமே அவரை ஏற்றுக்கொள்கிறார்கள்; பிறர், அவர் என்ன சொன்னாலும் அதை கேலியும் கிண்டலும் செய்கின்றனர். ஆனால், அதே உருவமில்லா கடவுள் - மிகக் குறைவான அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே உணர்ந்துகொள்ளும் வேளையில் - உண்மையாகவும் நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.**

**நான் அவ்வப்போது சொல்வது போல், இந்த உடல் உண்மையில் நான் உரிமை கோருவது அல்ல. இந்தக் குழந்தைத்தனமான கேள்விகள் வெறுமனே என்னில் சிரிப்பை வரவழைக்கின்றன. கடவுளுக்கு உங்களின் தீவிர அன்பு ஒன்றுதான் தேவை. அவரை எதிர்ப்பதற்கு பதிலாக, அவருடைய அன்பிற்காக நீங்கள் தூசியாக மாற வேண்டும். கடவுளை நிராகரிப்பதை விட கடவுளை மறுப்பதே மேல்.**

**கடவுளின் வழிகளும் முறைகளும் மர்மமானவை; அவருடைய மர்மத்தை அவர் மட்டுமே புரிந்துகொள்கிறார். கடவுள் ஒருவரே தமது சொந்த மொழியை அறிந்தவர், புரிந்துகொள்பவர்.**

**உங்களுக்கான உண்மையான சோதனை காலம் தவறாமல் வரும், மேலும் என்னுடன் ஒட்டிக்கொண்டு, எனது மேலங்கியைப்** (தாமன்) **பற்றிக்கொள்ள வேண்டுமா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.**

ஒரு சனிக்கிழமை, சுய ஆர்வம் காரணமாக, ‘ஏழாம் நாள் வருகை திருச்சபையைச் சார்ந்த (SEVENTH-DAY ADVENTIST CHURCH) கிறிஸ்தவர் ஒருவர் குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க வந்து, அவரிடம் சொற்பொழிவு ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்; ஆனால் பாபா இவ்வாறு பதிலளித்தார், “**நான் அதை எப்படிச் செய்வது? ஓய்வு நாளில் பணிபுரிய வேண்டாம் என்று இயேசு கூறினார், நான் இதை ஒரு பணியாகப் பார்க்கிறேன்.**” ஆனால் பாபா, அந்த நபருக்கு சில விஷயங்களை விளக்கினார்.

1962 ஜூன் முதல் வாரத்தில், பாபாவிற்குத் தொடர்ந்து தலை மற்றும் கழுத்துப் பகுதியில் வலி ஏற்பட்டது. காலை ரயிலில் மும்பை சென்று, டாக்டர் ராம் கிண்டேயிடம் ஆலோசனை செய்து, மாலையில் திரும்பி வர முடியுமா என்று கோஹெர் கேட்டார். பாபா அவரை மும்பை செல்ல அனுமதித்தார். அவர்களின் சந்திப்பில், டாக்டர் கிண்டே முதுகெலும்பு இணையும் கழுத்துப் பகுதியின் ‘எக்ஸ்-ரே’ எடுக்குமாறு பரிந்துரைத்தார். கோஹெர் குருபிரசாத் திரும்பி வந்து, ஜூன் 6 அன்று அவ்வாறே செய்து, டாக்டர் தீக்ஷித்தின் (DR. DIKSHIT) ஆலோசனையைப் பெற்றார். அதைத் தொடர்ந்து, டாக்டர் கிண்டேக்கு எக்ஸ்-ரே பதிவுகள் அனுப்பப்பட்டன. அவற்றைப் பரிசோதித்ததில், பாபாவிற்கு கழுத்துப்

பகுதியில் தண்டுவட எலும்பு பாதிக்கப்பட்டு, ஒரு சில வட்டுகள் அரிக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தார். அவருடைய கழுத்து குறுகி, நரம்புகளில் அழுத்தம் ஏற்படுவதைக் தடுக்கும் விதத்தில் உலோக இழுவை கழுத்துப் பட்டை ஒன்றை டாக்டர் கிண்டே பரிந்துரைத்தார்.

டாக்டர் கிண்டே பூனாவிற்கு வர பாபா அனுமதித்த போது, அவரது கழுத்துப்பகுதியின் வார்ப்பை எடுத்து, பொருத்தமான கழுத்துப்பட்டை ஒன்று உருவாக்கப்பட்டது; பாபா ஒவ்வொரு நாளும் படுக்கையில் படுத்திருக்கும் வேளையில் இரண்டு மணி நேரம் அதை அணிய வேண்டிய கட்டாயம். கழுத்துப் பட்டை அணிந்திருந்தபோது, பாபாவால் தலையை அசைக்கவோ, வாயைத் திறக்கவோ முடியவில்லை. இது மிகவும் அசௌகரியமாக இருந்தது. உலோக இழுவை கழுத்துப்பட்டை அணிந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர், அது ஒரு மென்மையான கழுத்துப்பட்டையால் மாற்றப்பட்டது, அதை பாபா தனது வாழ்நாள் முழுவதும் அணிந்திருந்தார்.

கழுத்தில் ஏற்பட்ட இந்த வேதனையான பாதிப்பு காரணமாக, 1962 ஜூன் மாத நடுப்பகுதியில் பாபா, நவம்பர் தரிசன திட்டத்தை ஏழு நாட்களிலிருந்து நான்கு நாட்களாகக் குறைப்பதாக அறிவித்தார்; மேலும் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் அன்பர்களுக்கும் ஜூன் 22 அன்று மணி எழுதிய குடும்பக் கடிதம் (FAMILY LETTER) ஒரு வாழ்க்கை சுற்றறிக்கை மூலமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 6 அன்று, பெண்டு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்படவே அவர் குருபிரசாத்திற்கு அழைத்து வரப்பட்டார். பெண்டு, விஷ்ணுவுடன் குறிப்பாக நெருக்கமாக இருந்தார், அவர் திரும்பிவரும் வரை அவரது மறைவு பற்றி தெரிவிக்கப்படவில்லை. ஜூன் 8ஆம் தேதி, எவருக்கும் தெரிவிக்காமல், திடீரென குருபிரசாத்திலிருந்து புறப்பட்டு, மெஹர்தாஸ் ஹமிர்பூரில் அவரது இல்லத்திற்குச் சென்றார். அதற்குப் பிறகு, மெஹர்தாஸ் பொது நிகழ்ச்சிகளின் போது பாபாவிடம் வந்தாலும், அவர் மீண்டும் பாபா அல்லது மண்டலியுடன் தங்கியதில்லை.

ஜூன் 16 அன்று, கோடூரி கிருஷ்ணா ராவ் குருபிரசாத் வந்து, பாபாவையும், நவம்பர் மாதம் வரவிருக்கும் மேற்கத்திய அன்பர்களையும், மெஹர்ஸ்தான் மையத்தில் எழுப்பிய பாபாவின் ஆளுயர வெண்கலச் சிலையின் திறப்பு விழாவுக்காக அழைப்பு விடுத்தார். அது சாத்தியமில்லை என்று தெரிவித்து, பாபா, ஷாந்தாதேவி, ஆதி இருவரையும் விழாவில் கலந்து கொள்ள அனுமதித்தார்.

மற்றுமொரு திட்டமிடப்படாத பயணத்தில் திடீரென, பாபா, பாப்புஸாஹேப் ஷிண்டேயின் (BAPUSAHEB SHINDE) பாத அணி கடைக்குச் சென்றார். ஷிண்டே தனது கையிருப்பில் பெரும்பகுதி வெள்ளப்பெருக்கில் கிட்டத்தட்ட அழிந்த பின்னர் அதை மறுபடியும் நிறைவாக்கி தொழிலைத் தொடர்ந்தார்.




பாபவின் கழுத்துப்பகுதியின் எகஸ்-ரே, **6 ஜூன் 1962**
(X-RAY OF BABA'S NECK, 6 JUNE 1962)



கழுத்துப்பட்டையுடன் பாபா
(WEARING A CERVICAL COLLAR)

ஜூன் 24 ஞாயிற்றுக்கிழமை அன்று, பூனாவைச் சேர்ந்த பிரபல பாடகியான ஹீராபாய் பரோடேக்கர் (HIRABAI BARODEKAR) மற்றும் அவரது சகோதரி சரஸ்வதிபாய் ரணாய் (SARASWATIBAI RANAY) ஆகியோர் பாபா முன்னிலையில் இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினர்.

அன்று காலை கிர்கி பகுதியில் வாழ்ந்த கே.கே. ராமகிருஷ்ணனின் இல்லத்திற்கு பாபா செல்லவிருந்தார்; ஆனால், எரச் அதைத் தள்ளிப்போடுமாறு பரிந்துரைத்தாலும், பாபா அந்த விஜயத்தை ரத்து செய்ய விரும்பாமல், சில மண்டலியுடன் புறப்பட்டுச் சென்றார். பாபா, ராமகிருஷ்ணனுடனான உரையாடலில் அவரை மிகவும் மும்முரமாக இருக்கச் செய்ததால், எரச் தேநீர் தயார் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவானது. ஒரு மணி நேரம் கழித்து பாபா குருபிரசாத் திரும்பிச் சென்றார். பின்பு, மும்பையிலிருந்து கஜ்வானியும், அஹமதுநகரிலிருந்து கில்னானி குடும்பத்தினரும் வந்தனர். நீதிபதி கில்னானி சமீபத்தில் அஹமதுநகர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டார்.

கில்னானி தனது மனைவி கிரிஜாவுடன் 1962 ஜூலை 1 ஞாயிற்றுக்கிழமை அன்று குருபிரசாத் திரும்ப வந்தார். பால் நாத்துவும் உடனிருந்தார். காலை 9:30 மணியளவில் பாபா மண்டலி மண்டபத்திற்கு வந்த வேளையில், முற்றிலும் உள்வாங்கப்பட்டு, தீவிரமான மனநிலையில் இருப்பது போலத் தோற்றமளித்தார். “**நேற்று இரவு எனக்குத் தூக்கம் இல்லை, என் உடலெல்லாம் இன்னும் வலிக்கிறது**” என்று அவர் கூறினார்.”

ஹமிர்பூரிலிருந்து, பவானி பிரசாத் நிகமின் மகன் தயங்கித் தயங்கி அறைக்குள் நுழைந்தான். தனது பெற்றோரின் அனுமதியின்றி மும்பைக்குச் சென்றபோது அவனது பணப்பை போக்கிரிகளால் திருடப்பட்டு, கைவசமிருந்த பணத்தை இழக்க நேர்ந்தது. பாபா அவனை சிறிது நேரம் சந்தித்து, நரிமனின் இல்லத்திற்குச் செல்லத் தேவையான ரயில் கட்டணத்தை வழங்க ஏற்பாடு செய்தார்.

சிறுவன் அறையை விட்டு வெளியேறியதும், பாபா இவ்வாறு கருத்துரைத்தார், “**அவனது தந்தை ஒரு கூட்டுக் குடும்பத்தின் தலைவர், மிகவும் நடைமுறைக்கு உகந்த அன்பான மனிதர். ஆனால் மகன் எப்படி இருக்கிறான் பாருங்கள்! பெற்றோர் எந்த அளவுக்குக் கவலையுற்றிருக்க வேண்டும், ஆனால் அவனுக்கு என்ன கவலை? அவன் மும்பையில் தனது வாழ்நாளின் நேரத்தை பொழுதுபோக்காகக் கழித்துக் கொண்டிருந்தான்! இது ஒரு திரைப்படக் காட்சி போல் இல்லையா? பிரபஞ்சத்தின் அன்றாட நிகழ்வுகள் ஒரு திரைப்படத்தைப் போன்றது. சிலர் மகிழ்ச்சியாகவும், சிலர் துன்பமாகவும் உணர்கின்றனர்.**”

பாபா அப்போது அலோபாவை அழைத்து, பாரசீக மொழியில் ஹாஃபீஸின் சில ஈரடிக் கவிதை வரிகளை வாசிக்கச் சொன்னார். அதன் பொருள்:

**இன்பமும் துன்பமும் வாழ்க்கையின் ஓர் அங்கமாக உள்ளது;**
**இவை இருமைத்தன்மையின் வட்டத்தில் அனுபவமாக மாறுகிறது.**

**இந்த வட்டத்திலிருந்து ஒருவர் வெளியேறியதும்,**
**இருமைத்தன்மையின் எதிரெதிர் துருவங்கள் மறைந்துவிடும்.**
**இவ்வாறு, இன்பம், துன்பம் இரண்டுமே**
**ஒன்றுமில்லை என்று பொருள்படும்.**

கில்னானி பாபாவிடம் கூறினார், "இதை நாம் அறிவுபூர்வமாக நன்றாகப் புரிந்துகொள்கிறோம், ஆனால் நம்மால் அதற்கு ஏற்றார்போல வாழ முடியாது, மேலும் இது ஒன்றுமே இல்லாத விளையாட்டாக இருந்தாலும், பரிதாபமாக இருப்பதைத் தவிர்க்க முடியாது."

பாபா அதற்கு பதிலளித்தார்: "**வெறும் வாய்மொழி அறிவு அதிக அளவில் உதவாது. ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: துன்பமும் மகிழ்ச்சியும் ஏக இறைவனின் ஒன்றுமில்லாத ஆதிக்க வரம்பில் இருப்பதானால், உண்மையில் எதுவுமே இல்லை என்றால், ஏன் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடாது? மகிழ்ச்சியாக இருங்கள். மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள். ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள் மட்டுமே உளதாயிருப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்; பிற அனைத்திலும் ஒன்றுமே இல்லை.**"

கஜ்வானி உரையாடலுக்கு இடையே குறுக்கிட்டு, படிப்பதன் மூலம் பெறப்படும் புரிதல் தெளிவற்றதாகவும், பின்பு குழப்பத்தை உருவாக்குவதாகவும் கூறினார். அதனால் அவர் ஆன்மீகப் புத்தகங்கள் படிப்பதை நிறுத்திவிட்டார்.

"இது ஓரளவுக்கு மட்டுமே உண்மை" என்று கில்னானி அவதானித்தார். "நாம் பாபாவுடன் இருக்கும்போது, வாசிப்பது தேவையற்றதாகிவிடும் அதே வேளையில், நாம் அவரை விட்டு விலகி இருக்கும்போது, அவருடைய புத்தகங்களைப் படிப்பதும், அவற்றின் கருப்பொருட்களை தியானிப்பதும் எனக்கு, குறைந்தபட்சம், வாழ்க்கையில் உண்மையான ஆறுதலைத் தருகிறது."

பாபா கூறினார், "**உண்மைப்பொருளை ஒருபோதும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. இருப்பினும், சில வரம்புகளுக்குள், வார்த்தைகளுக்கு அதன் சுய முக்கியத்துவம் உள்ளது. புத்தகங்களை வாசிப்பதன் விளைவு அவற்றின் வகை மற்றும் அவற்றின் மீது நீங்கள் வைத்திருக்கும் மதிப்பைப் பொறுத்தது. மதத்தின் பெயரால் மக்கள் அதன் புனித நூல்களை மையமாக வைத்து மோதிக்கொள்வதை நாம் காண்கிறோம். இது, ஊன் இல்லாத வெறும் எலும்புகளுக்காக மோதிக்கொள்ளும் நாய்களைப் போல் இல்லையா?**"

மரபுவழியாக வந்த விசுவாசிகள் மற்றும் மதவெறியர்களைக் குறிப்பிடும் ஹாஃபீஸின் ஈரடிக் கவிதையின் வரிகளை மீண்டும் மொழியுமாறு பாபா அலோபாவிடம் கேட்டுக்கொண்டார். ஹாஃபீஸ் கூறுகிறார்: "**கடவுளே, மரபுவழி வந்தவர்களையும், மதவெறியர்களையும் மன்னியுங்கள், ஏனெனில் அவர்கள் உண்மைப்பொருளைக் காணவில்லை.**"

பாபா தொடர்ந்தார், "**உண்மையான மானிடர்கள் (இறை-அன்பர்கள்) சடங்கு சம்பிரதாய வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும்**

**புத்தகங்களில் கவனம் செலுத்துவதில்லை, ஆனால் பரிபூரண குருநாதர்களால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் முழு முனைப்பில் இருக்கிறார்கள்.**"

கில்னானி கேட்டார், "அது முற்றிலும் சரி; ஆனால் மனிதன் நல்லவனாகவும் நேர்மையாகவும் இருக்க ஆசைப்பட்டாலும் அவ்வாறு இருக்கத் தவறுவது ஏன்? இந்தக் கேள்விதான் என் மனதில் உள்ளது."

பாபா பதிலளித்தார், "**ஒருவர் நேர்மையாக ஆசைப்பட்டால், அவர் ஒருபோதும் தோல்வியடைவதில்லை. ஒன்றல்ல, பல கேள்விகள் மனதில் எழும், அவை தொடர்ந்து எழுந்து கொண்டிருக்கும். அதற்கு ஒரே ஒரு வழி, ஒரே ஒரு பரிகாரம் உள்ளது: குருநாதருக்குக் கீழ்ப்படியுங்கள். அது உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும். அது உங்களை வழிநடத்தும், உங்களுக்கு வழிகாட்டும், உண்மையில் புரியாததை உங்களுக்குப் புரிய வைக்கும். உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும். ஹ:ஃபீஸ் கூறுகிறார்: 'குருநாதர் என்ன சொன்னாலும், ஏன், எதற்காக என்று கேட்காமல் அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.**'"

ஏறக்குறைய மதியம், பார்வையாளர்கள் வெளியேறும் நேரம். அன்று காலை பாபா உரையாடும் மனநிலையில் இருந்ததைக் கண்டு அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். அன்பான அரவணைப்புக்குப் பின்னர் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்; பாபா, மதிய உணவுக்காக உள்ளே சென்றார்.

அஹமதுநகரில் நீதிபதி கில்னானி, தனது குடும்பத்துடன் தங்குவதற்குப் பொருத்தமான பங்களாவைக் கண்டுபிடிப்பதில் சிரமப்பட்டார். இறுதியில், குஷ்ரு குவார்ட்டர்ஸின் மேற்குப் பகுதியில் அமைந்த அறைகளில் தங்குவதற்கு பாபா அனுமதித்தார். அன்று, பாபா, கில்னானியிடம், "**மாலை 4:00 மணிக்கு பூனாவிலிருந்து அஹமதுநகருக்குப் புறப்படுங்கள்**" என்று கட்டளையிட்டார். கில்னானி, பாபாவின் அறிவுறுத்தலுக்கு நிச்சயமாகக் கீழ்ப்படிந்திருப்பார், ஆனால் அவரது ஓட்டுநர் சரியான நேரத்தில் வராமல் காலந்தாழ்த்தியதால், கில்னானி மற்றும் அவரது குடும்பத்தினர் தாமதமாக வெளியேறினர். பத்து மைல் சென்றதும் கார் பழுதடைந்தது. கில்னானி பூனாவிற்கு மீண்டும் சவாரி செய்து, கஜ்வானியின் ஓட்டுநருடன் அதை சரிசெய்வதற்காகத் திரும்பச் சென்றார்.

ஓட்டுநர் காரை சரிசெய்ததாக நினைத்தாலும், ஐந்து மைல் சென்ற பின்னர், அது மீண்டும் பழுதடைந்தது. பிரச்சினை சரி செய்யப்பட்டாலும், மேலும் இரண்டு மைல்கள் சென்ற பின்பு, கார் மீண்டும் நின்றது. அப்போது அவ்வழியாக வந்த சரக்கு லாரி ஓட்டுநரின் உதவியை நாடி, காரை சரிசெய்த பின்னரும், அது மீண்டும் ஒரு மைல் தூரம் சென்று சாலையில் நின்றது. இறுதியில், காரை அஹமதுநகருக்கு சரக்கு லாரி மூலமாக இழுத்துச் செல்ல வேண்டியதாயிற்று; அவர்கள் அஹமதுநகரை வந்தடைவதற்குள் நள்ளிரவைத் தாண்டிவிட்டது. கார் புதியதாக இருந்தும், தொடர்ச்சியாக எதிர்கொண்ட இடர்பாடுகளுக்கு, பாபா அறிவுறுத்தியதைத் துல்லியமாகப் பின்பற்றத் தவறியதன் விளைவு என்பதை

கில்னானி உணர முடிந்தது. ஓட்டுநர் சரியான நேரத்தில் வராததுதான் இத்தனை பிரச்சினைக்கும் காரணம்.

1962 ஜூலை 1, பாபா பூனாவிலிருந்து மெஹராஸாத் திரும்பிச் செல்வவதற்கு முன்பு, கடைசி ஞாயிற்றுக்கிழமை ஆதலால் 'சீட்டு விளையாட்டுக்காரர்கள்' அன்று மாலை 4:00 மணிக்கு அழைக்கப்பட்டனர். இதற்கிடையில், பூனா 'கூட்டுறவு கல்லூரி' (COOPERATIVE COLLEGE) முதல்வர் பாபாவை அன்றைய தினம் சந்திக்க விருப்பம் தெரிவிக்கவே, அந்த நபரின் பிறந்தநாள் என்பதால் பாபா இணக்கம் தெரிவித்தார். முதல்வர் தனது மனைவியுடன் அழகான மாலை மற்றும் இனிப்புப் பொட்டலங்களையும் கொண்டு வந்தார். பாபா வரவிருக்கும் 'கிழக்கு-மேற்கு சகவாசம்' பற்றி குறிப்பிட்டபோது, அந்த நபர் நவம்பர் முதல் வாரத்தில், பாபா அன்பர்களின் வசதிக்காக கல்லூரி விடுதியைப் பயன்படுத்த முடியும் என்பதைத் தெரியப்படுத்தினார். பத்து நிமிட சந்திப்புக்குப் பிறகு, தம்பதியர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இதற்குள், பாபாவின் நெருங்கிய அன்பர்கள் 30 பேர் வந்தனர். 'லா ரிஸ்க்' (LA RISQUE) சீட்டு விளையாட்டு ஒன்று விளையாடப்பட்டது. யார் எந்தப் பக்கத்திற்காக விளையாடினர் என்பதை தெரிந்து கொள்வது அவ்வளவு சுலபமாக இல்லை; வெற்றிவாகை சூடிய குழுவைச் சேர்ந்த சிலர் பாபாவின் முன்னால் தவறுதலாகத் தரையில் மூக்கை உரசிக் கொண்டனர். பாபா விளையாட்டைப் பெரிதும் ரசித்தார். அன்று காலை பாபா, "**நான், காரணமின்றி சீட்டு விளையாடுகிறேன் என்று நினைக்காதீர்கள். இது அனைத்தும் எனது பணி சம்பந்தமாக நிகழ்வது**" என்று குறிப்பிட்டார்.

மாலை சுமார் 5:15 மணியளவில் சீட்டாட்டம் நிறுத்தப்பட்டது; தொடர்ந்து பாபா 'நிர்வாண நிலை' (FANA STATE), 'நிர்விகல்ப் சமாதி நிலை' (BAQA STATE) மற்றும் சத்குரு அல்லது குதுபின் நிலை (SADGURU OR QUTUB STATE) குறித்து இந்த விளக்கத்தை அளித்தார். ஷம்ஸ்-இ-தப்ரிஸின் (SHAMS-E-TABRIZ) இந்த வரியை மேற்கோள் காட்டி விளக்கினார்:

**"ஒரு மேல்நிலை ஆத்மா இறை உணர்வை எய்த, கால சுழற்சிகளுக்குப் பின் சுழற்சிகள் தேவை."**

**தற்போது, இந்தியாவில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்? 'சத்குரு' என்ற வார்த்தை, உண்மையில் கடவுளாகி, கடவுளின் வாழ்க்கையை வாழ்பவர் என்று பொருள்படும்; ஆனால் அந்த வார்த்தை சரளமாகவும், சாதாரணமாகவும் பயன்படுத்தப்படுகிறது. குறு, பெரு நகரங்களில் சத்குருக்கள் என்று குறிப்பிடப்படும் நபர்களை நீங்கள் எப்பொழுதும் காணலாம். இது அந்த அளவுக்கு மலிவான அனுபவமா, மிகவும் பொதுவான நிலையா? இல்லை; மனிதன் கடவுளுடன் ஐக்கியமாகும் அதே வேளையில், படைப்பில் உள்ள அனைத்துடனும், அனைவருடனும் ஒன்றாக மாறும் நிலை!**

வழக்கமான பேச்சு மொழியில் 'துறவி' (ஸந்த், SAINT) என்ற வார்த்தை, பொதுவாக ஒரு சாதாரண மனிதனிடமிருந்து நடை, உடை, பாவனையில் மாறுபடுவதோடு, பிரார்த்தனை மற்றும் பக்தியுடன் வாழ்க்கையை நடத்தும் நபர்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. 'சத்' (SAT) என்ற சொல்லுக்கு 'உண்மையான' அல்லது பொதுவான பயன்பாட்டில் 'நல்லது' என்று பொருள். எனவே, ஒரு நல்ல நடத்தை மற்றும் சாதாரண மனிதனிலிருந்து மாறுபட்ட வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் ஒரு மனிதன், குறிப்பாக கிராம மக்களால், துறவியாக, புனிதனாகக் கருதப்படுகிறான். இதில் வேடிக்கை ((முரண்பாடு) என்னவெனில், அத்தகைய பட்டங்களால் கௌரவிக்கப்படுபவர்கள் கூட, இந்த வார்த்தைகள் குறிக்கும் அர்த்தத்தை அரிதாகவே உணர்கிறார்கள்.

ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் துணிச்சல் படைத்தவர்கள் பெரிய எண்ணிக்கையில் இல்லை. ஆன்மீகத்தைப் பற்றி மக்கள் மிகவும் லேசாகப் பேசுகிறார்கள். ஆன்மீகப் பாதை, உண்மையில், அவர்கள் கருத்துப்பூர்வமாகத் தெரிந்துகொண்டதை விட, மிக மிக மேலானது. இது அனுபவப்பூர்வமாக அறிய வேண்டிய விஷயம். ஆன்மீகப் பாதையில் பயணிப்பது என்பது ஒருவரின் பொருள் மற்றும் மனம் சார்ந்த வாழ்வுக்கு, படிப்படியாக இறந்துவிடுவதாகும். இந்தச் செயல்முறை தடுமாறும் மனம் படைத்தவர்களுக்கும், இதயத்தில் நம்பகத்தன்மை இல்லாத உலக எண்ணம் கொண்டவர்களுக்கும் மிகுந்த சோதனையாக இருக்கும். துறவறப் பாதை துன்பம் நிறைந்தது, அவ்வளவு எளிதானது அல்ல.

உண்மைப்பொருளைப் (சத்-SAT) பார்ப்பவர் ஒரு துறவி. உணர்வு நிலையின் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள துறவி, கடவுளை நேருக்கு நேர் காண்கிறார். இத்தகைய அனுபவம், நேர்மையான தேடல் மற்றும் அன்பான இறைவனுடன் ஐக்கியமாகும் உண்மையான ஏக்கம் நிறைந்த வாழ்க்கையின் விளைவாகும். கடவுளைப் 'பார்க்கும்' இந்த நிலை, இறுதி நிர்வாண நிலையில் (FANA) உச்சத்தை அடைகிறது; அது, முதல் இறைப் பயணத்தின் (FIRST JOURNEY) முடிவாகும். முதல் இறைப் பயணத்தில், ஏழு நிலைகள் உள்ளன, அவற்றில் ஒன்று துறவியின் நிலை என்று குறிப்பிடப்படுகிறது - அதாவது, கடவுளை நேருக்கு நேர் காண்பது.

இறுதி நிர்வாண நிலை என்பது துளி (தனிப்பட்ட ஆத்மா) பெருங்கடலில் (பரமாத்மா) ஒன்றிணைவதைக் குறிக்கிறது மற்றும் அதன் விளைவாக துளி (ஆத்மா) பெருங்கடலாக (பரமாத்மாவாக) மாறுகிறது. இறுதி நிர்வாண நிலையில் இரண்டு கட்டங்கள் உள்ளன. முதல் கட்டத்தில், முழுமையான வெற்றிட நிலையின் உணர்வுப்பூர்வமான அனுபவம் நிறைந்த நிலை; இரண்டாவதாக, 'நான்-கடவுள்' எனும் உணர்வுப்பூர்வமான அனுபவம் மிகுந்த நிலை. இந்த இரண்டு கட்டங்களும், உண்மையில், முற்றிலும் ஒன்றே ஒன்று, ஒவ்வொன்றும் மற்றொன்றைக் குறிக்கிறது. இது ஒரு

**பரிபூரண மஜ்ஜூபின்** (அதாவது, கடவுளில் ஆழமாக மூழ்கிய) **உண்மையான இறைநிலை.**

**அனைத்து இறை உணர்வை எய்திய ஆத்மாக்களும் இரண்டாவது இறைப் பயணத்தை மேற்கொள்ள விதிக்கப்படவில்லை. இரண்டாவது இறைப் பயணத்தில் கட்டங்கள்** (நிலைகள்) **இல்லை. நிர்வாண நிலையில், ஒருவரது வரையறுக்கப்பட்ட வாழ்வு முழுமையாக, நிரந்தரமாக அழிக்கப்படுகிறது. இதுவே, தான் ஏக இறைவன் எனும் பரமாத்மாவின் அனுபவத்தைத் தவிர, உணர்வற்ற உணர்வு நிலையாகும். இரண்டாவது இறைப் பயணமான நிர்விகல்ப் சமாதி நிலையில், ஒருவருக்கு அளவிறுதியற்ற உணர்வு நிலையின் உணர்வு உள்ளது, அதே நேரத்தில், தனித்துவம் தக்கவைக்கப்படுகிறது. இது இரண்டாம் இறைப் பயணத்தின் தொடக்கமும் முடிவுமாகும். இதுவே பரிபூரண ஸலிக்** (SALIK) **என்றழைக்கப்படும் தெய்வீக நிலை.**

பாபா தமது அன்பர்களில் ஸோமன் என்பவரைச் சுட்டிக்காட்டினார்.

**உதாரணமாக, நீங்கள் ஸோமன் என்று அழைக்கப்படுகிறீர்கள். இறுதி நிர்வாண** (FANA) **நிலையின் அனுபவத்தில் நீங்கள் ஸோமனாக இருக்கமாட்டீர்கள். கடவுளாக மட்டுமே இருக்கிறீர்கள்.**

**நிர்விகல்ப் சமாதி** (BAQA) **நிலையில் ஸோமன் என்றழைக்கப்படும் நீங்கள் அளவிறுதியற்றவராக மாறுகிறீர்கள்; உதாரணமாக, நீங்கள் உங்கள் வரம்புக்கு உட்பட்ட 'ஸோமன்' எனும் நிலைப்பாட்டை விட்டுவிட்டு, கடவுளில் நிலைநிறுத்தப்படுகிறீர்கள். பிறருக்கு நீங்கள் ஏற்கனவே இருந்த அதே நபராகத் தோன்றுகிறீர்கள், ஆனால் அவர்கள் உங்களில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி எதுவும் அறிந்திருக்க மாட்டார்கள்; அதாவது, வரம்பின் எல்லையிலிருந்து எல்லையற்ற** (அளவிறுதியற்ற) **நிலைக்கு மாறுவது. வெளியளவில் நீங்கள் ஒரு சாதாரண நபர் நடந்துகொள்வதைப் போலவே நடந்துகொள்கிறீர்கள்: நீங்கள் உண்கிறீர்கள், அருந்துகிறீர்கள், பணிபுரிகிறீர்கள், விளையாடுகிறீர்கள். நீங்கள் உரையாடுகிறீர்கள் மற்றும் கேலி செய்கிறீர்கள், ஆனால் உங்கள் உண்மை நிலையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் உங்களை வரையறுக்கப்பட்ட உருவமும், மனமும் உடையவராக எடுத்துக்கொள்கிறார்கள். சிலர் உங்களை ஒரு தனிச் சிறப்புமிக்க நபராகக் கருதலாம், ஆனால் ஒரு சிலரால் மட்டுமே உங்களை அளவிறுதியற்ற-ஸோமன் என அறிய முடியும். இதுவே நிர்விகல்ப் சமாதி** (BAQA) **நிலை.**

**பரிபூரண குருநாதர்களின் எண்ணிக்கை எப்பொழுதும் ஐந்தாக மட்டுமே இருக்கும். எந்தக் காலகட்டத்திலும் அல்லது கால சுழற்சியிலும் இது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்காது. (அவதார புருஷர் என்பவர் பதினொன்றாவது காலகட்டத்திற்குப் பின்னர் ஒரு விதிவிலக்காக வருகை தருகிறார்.) ஐந்து பரிபூரண குருநாதர்களில் ஒருவர், தனது உடலைக் கைவிடும்போது, நிர்விகல்ப் சமாதி** (BAQA) **நிலையிலிருந்து ஒருவர் -**

**நிர்வாண** (FANA) **நிலையிலிருந்து அல்ல - 'சத்குரு' அல்லது 'குதுப்'பாக அங்கம் வகிக்கிறார். தெய்வீக திட்டம்** (DIVINE SCHEME) **இவ்வண்ணம் செயல்படுகிறது.**

**என்றாவது ஒரு நாள், படைப்பின் இலக்கான இறுதி நிர்வாண நிலையை** (FINAL FANA) **அனைவரும் அனுபவிக்க வேண்டும். இது ஒரு நீண்ட, நெடிய பயணம், ஆனால் எனது பார்வை (கருணை) உங்கள் மீது வீழ்ந்தால், எந்த நேரத்திலும் நீங்கள் நிர்வாண நிலையை அனுபவிப்பீர்கள், ஏனெனில் உண்மையில் நேரம் என்ற ஒன்று இல்லை, பயணம் என்பதும் இல்லை. நான் இப்போது உங்களைப் பார்ப்பதிலிருந்து அந்தப் 'பார்வை' முற்றிலும் மாறுபட்டது.**

**சுருக்கமாகச் சொல்வதானால், முதலில் ஒருவர் இறுதி நிர்வாண நிலையை** (FANA) **அனுபவிக்க வேண்டும், பின்னர் ஒருவரின் தனித்துவத்தைத் தக்கவைத்துக்கொண்டு கடவுள் எனும் உறுதிப்பாட்டில் நிலைத்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவர் சத்குருவின் நிலையை எய்த தகுதியானவர்.**

**அப்படியானால் 'ஏக இறைவன் எனும் பரமாத்மா' (SELF) நிலையை உணர்ந்து கொள்வதற்கான உறுதியான மற்றும் பாதுகாப்பான வழி எது? கவலைப்பட வேண்டாம், முதல் பயணத்தின் ஏழு நிலைகளுக்காக ஏங்காதீர்கள் - நிர்விகல்ப் சமாதி நிலையைக்** (BAQA) **குறிப்பிடும் இரண்டாவது இறைப் பயணத்திற்காகவும் ஏங்க வேண்டாம். இவை அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள். எனது வார்த்தைகளுக்கு மட்டும் கீழ்ப்படிந்து, மேலும் மேலும் என்னை நேசிக்கவும். ஹ∴பீஸ் தனது ஈரடிக் கவிதையில் கூறுகிறார்:**

**கடவுளிடம் பிரார்த்தனை செய்யாதீர்கள்!**
**குதுபிடம் பிரார்த்தனை செய்யுங்கள்!**
**அவருடைய தாமனை (மேலங்கி)**
**உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.**
**அனைத்து சடங்கு சம்பிரதாயங்களையும் கைவிட்டுவிடுங்கள்;**
**ஒருவேளை ஒரு நாள் குதுபின் அருள்**
**உங்களை வந்தடையும்.**
**சத்குரு, யார் ஒருவரை அவர் விரும்பினாலும்**
**விடுவிக்கும் அதிகாரம் உடையவர்.**
**அவர் மனிதன்-கடவுளாக-மாறியவர்.**

இத்துடன் பாபாவின் விரிவான விளக்கம் நிறைவுக்கு வந்தது. புன்முறுவல் செய்துகொண்டே கூறினார், **"இப்போது, இது போதும்! அங்கும் இங்கும் அலைந்து திரியாமல், குருபிரசாத்திலிருந்து விரைவாகவும் அமைதியாகவும் புறப்படுங்கள். நான் உங்களுடன் இருக்கிறேன் - எல்லா நிலைகளிலும் இருக்கிறேன்!"**

13 மற்றும் 14ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில், லக்னோவில் வாழ்ந்த ஒரு சத்குருவைப் பற்றி, பாபாவால் எடுத்துரைக்கப்பட்ட இந்தக் கதையை, எரச் ஒருமுறை விவரித்தார். சத்குரு, இருபாலின இனத்தைச் சேர்ந்த திருநங்கை (மஹ்பூபி - ANDROGYNOUS) என்று அழைக்கப்பட்டார், ஏனெனில் அவர் ஒரு பெண்ணைப் போல் உடை உடுத்தி, வளையல்களை அணிந்தார். இடைக்கால இந்தியாவில் இவர்களைப் போன்ற திருநங்கைகள் ஆங்காங்கே அலைந்து திரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் சாதாரண சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தாலும், வாழ்வாதாரத்திற்காக அவர்கள் திருமணங்களில் இசைநிகழ்ச்சிகளை நடத்துபவர்களாக பணியமர்த்தப்பட்டனர், மேலும் இறுதிச் சடங்குகளில் அழுது புலம்பி துக்கத்தை வெளிப்படுத்துபவர்களாக கூலிக்கு அமர்த்தப்பட்டனர். அவர்களின் தொழில் அப்படித்தான் இருந்தது. இந்த சத்குரு அவர்களில் ஒருவர் மற்றும் ஒரு பழங்குடி இனத்தின் தலைவர். லக்னோவில் அவரது சக திருநங்கைகளைத் தவிர வேறு எவருக்கும் அவர் ஆன்மீகத்தில் மேல்நிலையை எட்டியவர் அல்லது உண்மையில் ஒரு சத்குரு என்பது தெரியாது. நாளடைவில் அவரது புகழ் ஊரெங்கும் இவ்வாறு பரவியது:

ஒரு நாள் துஷ்டர்களின் குழு ஒன்று, இடையூறு விளைவிக்கும் மனநிலையில், திருநங்கைகளின் சிறிய குழுவைத் துன்புறுத்தி வன்முறையில் ஈடுபட துணிந்தனர். துஷ்டர்களில் ஒருவன் திருநங்கைகளின் தலைவரைச் (சத்குரு) சுட்டிக் காட்டி, அவரது கண்களை உற்று நோக்கி எதிர் கொள்ள முற்பட்டபோது, சட்டென்று நின்றவன் மேலுமோர் அடியை எடுத்து வைக்க முடியாமல் கையைத் தாழ்த்திக் கொண்டான். பல நிமிடங்கள், கடினமாகப் போராடினாலும், அவன் தனது பாதையிலேயே முடங்கிப் போனான். இந்த சூனிய சக்தியிலிருந்து தன்னை விடுவிக்குமாறு அந்த துஷ்டன் தலைவரிடம் மன்றாடி, திருநங்கைகளின் குழுவிற்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்று உறுதியளித்த பின்னரே, அங்கிருந்து நகரும் திறனை மீட்டெடுக்க சத்குரு உதவினார். விரைவில், இந்தச் செய்தி எங்கும் பரவியதும், தலைவரின் அசாதாரண சக்தியை மக்கள் அறிந்துகொண்டு, அவரை ஒரு குருநாதர் என அங்கீகரித்தனர்.

அதைத் தொடர்ந்து, லக்னோ நகர மக்கள் இந்தத் திருநங்கையை வணங்கத் தொடங்கியபோது, அவர் ஒரு தாழ்த்தப்பட்ட, இகழ்ச்சிக்கு உள்ளான வகுப்பைச் சார்ந்தவர் என்பது தெரிய வந்ததால் இயற்கையாகவே எதிர்ப்பு எழுந்தது. திருநங்கைகளின் தலைவரின் அதிகாரத்தைப் பொய்யாக்க, லக்னோவில் இரண்டு செல்வாக்கு மிக்க குடும்பங்கள் ஒரு சூழ்ச்சியை திட்டமிட்டனர். இந்த இரண்டு குடும்பங்களின் மகன்களான இரண்டு இளைஞர்கள் திருமணமான ஜோடியாக மாறுவேடமிட்டு சத்குருவை அணுகுவது என்று முடிவு செய்யப்பட்டது. இளைஞர்களில் ஒருவன் பெண் வேடமிட்டு, ஒன்றாக சத்குருவின் முன்னால் தோன்றி, தங்களுக்கு குழந்தை பாக்கியம் அருளுமாறு கேட்டுக் கொண்டனர். இயற்கையாகவே, இது சாத்தியமற்றது, ஏனெனில் இருவரும் ஆண்கள்; மேலும் இது லக்னோ மக்களுக்கு, சத்குரு

பொய்யானவர் என்பதை நிரூபிக்கும் தருணத்தில், மக்கள் அவரை நாடுகடத்துவர் என்று நம்பினர்.

அவர்கள் வகுத்த திட்டத்தின் படி, இரண்டு இளைஞர்களில் ஒருவர் பெண் வேடமிட்டு, தலைவர் முன்னால் தோன்றி, ஒரு குழந்தைக்காக தலைவரின் ஆசீர்வாதத்தைத் நாடும் ஒரு கணவன்-மனைவி பாத்திரத்தில் நடித்தனர்.

திருநங்கையான சத்குரு, அவர்கள் உண்மையும், நேர்மையுமானவர்களா என்றும், அவர்கள் குழந்தை வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனரா எனவும் வினவி, குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று உறுதியளித்தார்.

“அப்படியே ஆகட்டும், நீங்கள் ஒரு குழந்தையை அடையப் பெறுவீர்கள்” என்று குருநாதர் கூறினார்.

இரண்டு இளைஞர்களும் இந்தச் செய்தியுடன் வீடு திரும்பினர், இது திருநங்கையை வணங்கி வழிபடுவதை முறியடித்துவிடும், மேலும் அவரை ஒரு பொய்யும் போலியுமான பித்தலாட்டக்காரர் என்பதை அம்பலப்படுத்தும் என்று குடும்பத்தினர் நம்பினர்.

வாரங்கள் கடந்தன, பெண் வேடமிட்டு வந்த இளைஞனுக்கு நுட்பமான உடல் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின, அதை அவன் அச்சத்தில் நடுங்கி ஒப்புக்கொள்ள வெட்கப்பட்டான். இறுதியில் அவனது உடல் ஒரு பெண்ணின் உடலை ஒத்ததாக மாறியது; முற்றிலும் திகிலடைந்த அந்த இளைஞன் கர்ப்பமாக இருப்பதற்கான அனைத்து அறிகுறிகளையும் கண்டுகொண்டான். இறுதியாக இளைஞன், என்ன செய்வது என்று தெரியாமல், நடந்ததை தனது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தினான். அவர்கள் தங்களைத் தாங்களே சபித்துக் கொண்டனர் என்பது இப்போது அவர்களுக்குத் தெரியவந்தது. குடும்பத்தினர் அவரை ஏமாற்ற முயன்றதாக, திருநங்கைகளின் தலைவரிடம் ஒப்புக்கொண்டு, தங்கள் மகனுக்கு வழங்கிய சாபத்தைத் திரும்பப் பெறுமாறு கெஞ்சி முறையிடுவதைத் தவிர, அவர்களுக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை.

திருநங்கைகளின் தலைவர், தான் இளைஞனை சபிக்கவில்லை என்றும், வழங்கிய ஆசீர்வாதத்தை திரும்பப் பெற முடியாது, குழந்தை பிறந்தாக வேண்டும் என்றும் விளக்கினார். சில மாதங்களுக்குள் அந்த இளைஞன் ஒரு குழந்தையை ஈன்றெடுக்கும் பெண்ணாக மாறினான், முழுக் குடும்பமும் குருநாதரிடம் சரணடைந்தது. இதனால் அவரது பெயரும் புகழும் எங்கும் பரவியது.

# மெஹராபாத் இறுதி விஜயம்

(**Last Time At Meherabad**)

1962 ஜூலை 8 ஞாயிற்றுக்கிழமை பூனாவிலிருந்து மெஹராஸாத்திற்கு பாபா புறப்படவிருந்தார். ஆதி 7ஆம் தேதி குருபிரசாத் வந்து சில மண்டலியை அடுத்த நாள் அஹமதுநகருக்குக் காரில் அழைத்துச் சென்றார். அன்று இரவு, பலத்த பருவமழை பொழிந்து, மறுநாள் காலையிலும் தொடர்ந்தது. எனவே திட்டமிட்டபடி, தமது பூனா அன்பர்களிடமிருந்து பிரியாவிடை பெறுவதற்காக, பந்த் கார்டன் சாலையில் (BUND GARDEN ROAD) சந்திக்காமல், பாபா அவர்களை குருபிரசாத்திற்கு அழைக்க அலோபாவை அனுப்பிவைத்தார்; அங்கு ஒன்றுதிரண்ட 200 பேருக்கு ஏறக்குறைய ஒரு மணிநேரம் தமது சகவாசத்தை வழங்கினார். ஆரத்திக்குப் பின்னர், ஒவ்வொரு நபரும் அவரவர் இல்லம் திரும்புவதற்கு முன்பு பாபாவின் கையை முத்தமிட அனுமதிக்கப்பட்டனர்.

பாபாவும் மண்டலியும் காலை 8:30 மணிக்குப் புறப்பட்டனர். பாபா, ஜோஸஃப் ஹார்பின் காரில் முதலில் அமர்ந்து, சிறிது தூரம் சென்ற பின்னர், அஹமதுநகர் பயணத்திற்காக மெஹர்ஜியின் காரில் அமர்ந்தார். டிஸோட்டோவை (DeSOTO) ஆதியும், ஆதியின் காரை வாமனும் ஓட்டிச் சென்றனர். அஹமதுநகரை வந்தடைந்த பாபா, ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் சிறிது நேரம் நின்று, அங்கு அவர் குல்மாய், ஸரோஷ், ரங்கோலே மற்றும் கில்னானி குடும்பத்தினரை சந்தித்தார்.

அன்று காலை பாபா மெஹராஸாத் வந்தடைந்ததும், காக்கா அவரைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். பாபா இல்லாத நேரத்தில் மெஹராஸாத்தில் தங்கியிருந்த காக்காவிற்கு, சிது, தோட்டக்கார சிறுவர்கள் மற்றும் பாபா மிகவும் நேசித்த பீட்டர், மஸ்தான் ஆகிய இரண்டு நாய்கள் மட்டுமே அவரது தோழர்கள்.

பாபா திரும்பிவந்த பிறகு, மெஹராஸாத்தில் தங்கியிருந்த எட்டு ஆண் மண்டலி: எரச், பெண்டு, காக்கா, பைதூல், கைக்கோபாத் (ஜூலை 20 அன்று மெஹராபாத்திலிருந்து திரும்பிவந்தார்), அலோபா, பாவ் கல்சூரி மற்றும் ஃபிரான்சிஸ். மெஹரா, மணி, மெஹரு, நாஜா, கோஹெர், ரானோ ஆகிய ஆறு பாபாவின் பெண் மண்டலியும் உடனிருந்தனர். இந்தப் பதினான்கு மண்டலி இறுதிவரை பாபாவுடன் இருந்தனர்.

அந்த ஆண்டு மௌன தினத்தை ஒட்டி ஜூலை 9 நள்ளிரவு முதல் 10ஆம் தேதி நள்ளிரவு வரை, 24 மணிநேரம் முழு மௌனம் கடைப்பிடிக்குமாறு பாபா தமது அன்பர்களுக்கு அறிவுறுத்தினார். மௌனம் கடைப்பிடிக்க இயலாது என்று கருதுபவர்கள் ஜூலை 10ஆம் தேதி காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை, எதுவும் உட்கொள்ளாமல், தண்ணீர் கூட அருந்தாமல் பன்னிரண்டு மணி நேரம் பூரண உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும். உபவாசத்தைத் தொடங்கும்

முன்பு காலையில் ஒரு கப் தேநீர் அல்லது காஃபி மட்டும் எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

பாபாவின் மௌனத்தின் 37ஆவது ஆண்டு நினைவாக, 1962 ஜூலை 15 அன்று, அஹமதுநகர் மையத்தின் அன்பர்கள் நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு இலவச உணவை வழங்கினர். அவர்கள் பாபாவிடம் அவருக்கும் மெஹராஸாத் மண்டலிக்கும் உணவு அனுப்பிவைப்பதை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**ஏழைகளில் ஏழையான நான், அதை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**" (சகன், ருஸ்தம் காக்கா இருவரும் வாரத்திற்கு ஒருமுறை பாபா மற்றும் மண்டலிக்கு உணவு அனுப்பிவைக்க வேண்டும் என்று முன்மொழிந்தனர், ஆனால் பாபா அதை அனுமதிக்கவில்லை.)

இரண்டு நாட்களுக்குப் பின்னர், 17ஆம் தேதி, பாபாவின் அறிவுறுத்தலின்படி, பாதிரி, சுஷீலா மற்றும் கல்தூரி குடும்பத்தினர் காலை 9:00 மணியளவில் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் நாள் முழுவதும் பாபாவின் சகவாசத்தில் இருந்து, மாலை 4:00 மணிக்கு மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான இறுதி ஏற்பாடுகள் இப்போது தொடங்கியுள்ளன. அனைத்து மண்டலியும் ஏதோ ஒரு பணியில் மும்முரமாக இருந்ததைப் போலவே, மணி, எரச் இருவரும் கடிதப் போக்குவரத்து மற்றும் பிற விஷயங்களை கவனித்து வந்தனர். தரிசனம் என்பது மெஹராஸாத்தில் தொடர்ந்து விவாதப் பொருளாக இருந்தது, பாபா அதற்கான வழிமுறைகளை வழங்கினார். மேற்கத்திய நாடுகளிலிருந்து வரவிருந்த அன்பர்களின் தகவல்கள் மெஹர்ஜியின் முகவரிக்கு வந்தன; அவை பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. வர விரும்பியும் முடியாமல் போனவர்களுக்கு, "**கவலைப்படாதீர்கள். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன், தரிசன நேரத்தில் மேலும் அதிகமாக இருப்பேன்**" என்று அவர்களுக்குத் தெரிவித்தார்.

கிழக்கு-மேற்கு சகவாச நிகழ்ச்சியில் வழங்க வேண்டிய சில உரைகளையும் பாபா எடுத்துரைத்தார். ஆகஸ்ட் 4 அன்று, அவர் 'நான்கு இறைப் பயணங்கள்' (THE FOUR JOURNEYS) பற்றிய விளக்கத்தை வழங்கினார்.

ஹோஷங் பரூச்சா அந்த மாத பிற்பகுதியில் அஹமதுநகருக்கு வர அனுமதி வழங்கப்பட்டது. அவர் வருவதற்கு முன்பு, பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை ஆகஸ்ட் 6ஆம் தேதி அனுப்பி வைத்தார்: "**இறுதி வரை என்னுடன் அட்டைபோல் ஒட்டிக் கொள்ள வேண்டியவர்களில் நீங்களும் ஒருவர், ஏனெனில், என்மீதான பிடிப்பு உங்கள் கைகளிலிருந்து நழுவச் செய்யும் மாயாவின் முயற்சி, முழு வீச்சில் தொடங்கும் நேரம் நெருங்கிவிட்டது. நவம்பர் மாதத்திற்குப் பிறகு (1962), நீங்கள் ஏங்குவதை அடையப்பெற நீங்கள் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும், எனவே நீங்கள் எனக்கு 100 சதவீதம் கீழ்ப்படிய வேண்டும்.**"

ஈரானி நாட்காட்டியின்படி திங்கட்கிழமை, 1962 ஆகஸ்ட் 6, ஸொராஸ்டர் நபியின் பிறந்த நாள். அன்று, ஒரு மாதத்திற்கு முன்பு, பூனாவிலிருந்து திரும்பிய பிறகு, பாபா முதன்முறையாக மெஹராஸாத்தை விட்டு வெளியேறி மெஹராபாத்திற்குச் சென்று, அங்கு வாழும் மண்டலி மற்றும் குடும்பங்களை சந்தித்தார். வழக்கமாக, பாபா மெஹராபாத் செல்லும்போதெல்லாம், குஷ்ரு குவார்ட்டர்ஸ் அருகே நின்று குல்மாயை பார்ப்பது வழக்கமாக நடந்துவந்தது. இந்த நேரத்தில், குல்மாய் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். ஆனால், மூன்று நாட்களுக்கு முன்னர், எரச், ஆதிக்கு ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார், பாபா ஆகஸ்ட் 6 அன்று குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு வரப்போவதில்லை, ஆனால் சிறிது நேரம் அக்பர் பிரஸ் வாயிலில் நின்று, அங்கு தமது அன்பர்களை சந்தித்து, பின்பு 12ஆம் தேதி குஷ்ரு குவார்ட்டர்ஸில் குல்மாயைப் பார்க்க வருவார் என்று குறிப்பிட்டிருந்தார்.

மெஹராஸாத் திரும்பி வந்ததும், பாதிரி மற்றும் மெஹராபாத்தின் நிர்வாகம் குறித்து, பாபா தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். பெண்டு, பாதிரி இருவரும் பழைய நண்பர்கள், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், “**மெஹராபாத்திற்கு எவரும் செல்ல அனுமதி இல்லை, ஆனால் பாதிரியின் பணியாளர்களான நானா மற்றும் அவரது மனைவி தானியின்** (TANI) **உறவினர்கள் அங்கு அவ்வப்போது செல்கிறார்கள். இது நல்லதல்ல, இதைக் குறித்து பாதிரிக்குத் தெரிவிக்க வேண்டும்.**”

பெண்டுவிடம் பாபா, “**இதை ஏன் பாதிரிக்கு எடுத்துக் கூறவில்லை? அவருக்கு நீங்கள் அஞ்சுகிறீர்களா?**” என்று கடிந்து கொண்டார்.

“அவர் தந்தைக்குக் கூட நான் அஞ்சுவதில்லை!” பெண்டு அறிவித்தார்.

அடுத்த நாள், பாதிரி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார்; பாபா, பெண்டுவிடம், “**மெஹராபாத்தில் வெளி நபர்கள் எவரும் உள்ளே வர தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏன் தானியின் உறவினர்களை அங்கு வர அனுமதிக்கிறீர்கள்?**” என்று அவரிடம் கேட்குமாறு அறிவுறுத்தினார்.

பாதிரி பதிலளித்தார், “தானி நாள் முழுவதும் மெஹராபாத்தில் இருப்பதால், அவருடைய குடும்ப உறுப்பினர்கள் பணி நிமித்தம் அவரைப் பார்க்க வருகின்றனர்.”

பெண்டு கேட்டார், “எவரேனும் உங்களை சந்திக்க வந்தால், நீங்கள் அவரைப் பார்க்க, துனி மேடை அருகில் நிற்குமாறு கூறுகிறீர்கள். தானி தன் உறவினர்களை சந்திக்க துனி மேடைக்கு நடந்து செல்ல முடியாதா?”

பாபா ஒப்புக்கொண்டார்: “**பெண்டு கூறுவது உண்மைதான். இந்த பாரபட்சம் நல்லதல்ல. தானி எவரையேனும் பார்க்க விரும்பினால், அவர்களை துனி அருகில் சந்திக்க வேண்டும்.**”

பாதிரி உடனே, “சரி, இனிமேல் அவரை துனி அருகே அனுப்புகிறேன்” என்றார்.

பெண்டு தொடர்ந்தார், “தானி நாள் முழுவதும் மெஹராபாத்தில் இருப்பதானால், அவர் எங்கே நீராடுகிறார்?”

“மெஹராபாத்தில்.”

“மண்டலியின் குளியலறையிலா?”

“ஆம்.”

“இதோ பாருங்கள்!” பெண்டு கூறினார், “குளியலறை மண்டலிக்காகவா அல்லது தானிக்காகவா?”

பாபா உடனே, “**பெண்டு சொல்வது சரிதான். தானி அங்கே நீராடக் கூடாது. கிராமத்தில் அவருக்கு வீடு உள்ளது, வேலைக்காக வருவதற்கு முன்பு நீராடலாம்**” என்று பாபா கருத்துத் தெரிவித்தார். பாதிரியும் இதற்கு ஒப்புக்கொண்டார்.

பெண்டு கேள்விக்கணைகளைத் தொடர்ந்தார், “நானா, தானி இருவரும் உழவர்கள். அவர்கள் தானியங்களைக் கதிரடிப்பது எங்கே?”

“மெஹராபாத்தில்,” பாதிரி பதிலளித்தார்.

“இது சற்று அதிகமாக இல்லையா?” பெண்டு கேட்டார், “நானாவும் தானியும் உங்கள் பணிக்காரர்களா, அல்லது நீங்கள் அவர்களின் பணியாளரா?”

பாபா உடனே, “**எனக்கு இது தெரியாது. பாதிரி, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நான் இதை விரும்பவில்லை! பெண்டு இதை வெளியே கொண்டு வந்தது நல்லது. அதை நினைத்து அவரால் இரவில் தூங்க முடியவில்லை. அதனால்தான் நான் உங்களை அழைத்தேன். நானாவின் கதிரடிக்கும் கருவியை மெஹராபாத்திலிருந்து அகற்றுங்கள்!**” என்று கூறியதும், பாதிரி அவ்வாறு செய்வதாக ஒப்புக்கொண்டார்.

தொடர்ந்து பெண்டு துருவித் துருவி கேட்டார், “நானாவின் எருதுகள் எங்கே வைக்கப்பட்டுள்ளன?”

“மெஹராபாத்தில் - ஆனால் தானியங்கள் கதிரடிக்கப்படும் போது மட்டுமே” என்று பாதிரி பதிலளித்தார்.

பெண்டு, பாபாவிடம், “பாதிரி மெஹராபாத்தின் ராஜாவாகிவிட்டார்! அங்கு அவர் விரும்பியதைச் செய்கிறார்!” என்று கூறினார்.


பாதிரியும் எளிதில் கோபமடையக் கூடியவர்; இருந்தும் மனமுடைந்த அவர், “அதையெல்லாம் நிறுத்திவிடுவேன்! வேண்டுமானால் நானாவையும் தானியையும் அங்கிருந்து துரத்திவிடுவேன்!” என்றார்.

“அவ்வாறு செய்தால் நன்றாக இருக்கும்” என்று பெண்டு கத்தினார். “என்ன ஒரு குழப்படியை உருவாக்கிவிட்டீர்கள்!”

பாபா, பெண்டு நடந்துகொண்ட விதத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து, பாதிரிக்கு அறிவுறுத்தினார், “**நானா, தானி இருவரையும் விலக்கிவிடாதீர்கள், பிற அனைத்தையும் நிறுத்திவிடுங்கள்.**”

குருநாதரின் விருப்பத்திற்கு இணங்குவதற்கு இந்த சம்பவம் ஓர் உதாரணம். நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும், பாபா விரும்பியது போல பெண்டு தனது முழு மனதையும் பாதிரியிடம் கொட்டித் தீர்த்தார். இது போன்ற சம்பவங்கள் மண்டலியிடையே அடிக்கடி நிகழ்ந்தது. பாபா வேண்டுமென்றே உரசலை உருவாக்குவது வழக்கம். அவருடைய மகிழ்ச்சியை மட்டும் கருத்தில்

கொண்டு, அவருக்கு நெருக்கமானவர்கள் தங்கள் பிணைப்புகளை எரித்து சாம்பலாக்கி, முழுமையான கீழ்ப்படிதலில் தேர்ச்சி பெறுவதற்கு இவை அனைத்தும் உறுதுணையாக இருந்தது. பெண்மணிகளிடமும் அப்படித்தான் நடந்துகொண்டார். ஆயினும் கூட, தனிப்பட்ட வேறுபாடுகள் இருந்தபோதிலும், அனைவரும் ஒரே குடும்பமாக வாழும் சூழ்நிலையில், நல்லிணக்கத்தின் பின்னணியில் மோதல்கள் தவிர்க்க முடியாதவையாக இருந்தன.



குல்மாயுடன் மெஹர் பாபா, அஹமதுநகர், **1962** ஆகஸ்ட் **9**
(MEHER BABA WITH GULMAI, AHMEDNAGAR, 1962 AUGUST 9)

இதற்கிடையில், புற்றுநோய் மற்றும் சிறுநீரக பாதிப்பு காரணமாக ஆதியின் தாயார் குல்மாயின் உடல்நிலை ஆகஸ்ட் மாதம் மோசமானது. ஆகஸ்ட் 6ஆம் தேதி மெஹராபாத்தில் இருந்த வேளையில், பாபா, பாதிரியிடம் '**குல்மாயை மேல் மலையில் அடக்கம் செய்ய தயாராக இருக்குமாறு**' கூறினார், '**ஏனெனில் அவர் விரைவில் இறுதி மூச்சை விடப்போகிறார்**.'

8ஆம் தேதி மாலை, குல்மாயின் உடல்நிலை மேலும் மோசமடைந்தது; ஆதி, பாபாவிற்கு இதைத் தெரியப்படுத்த ஸரோஷை மெஹராஸாத்திற்கு அனுப்பி வைத்தார். குல்மாய் உயிரைத் துறந்ததும், அவரது உடலை மெஹராபாத் மேல் மலைக்கு எடுத்துச் செல்லுமாறும், அவரது முன்னிலையில் உடல் கல்லறையில் வைக்கப்படும் என்றும் பாபா, ஸரோஷுக்கு அறிவுறுத்தினார்.

ஆகஸ்ட் 9 காலை, பாபா எதிர்பாராத விதமாக குல்மாயைப் பார்க்க குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார். குல்மாய் யார் ஒருவரையும் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல், கிட்டத்தட்ட மயக்க நிலையில் இருந்தபோதிலும், அவர் கண்களைத் திறந்து, பாபாவைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்தது. குல்மாய், பாபாவின் முகத்தை வருடி, "பா... பா" என்று கூற முடிந்தது. குல்மாயின் நெற்றியில் முத்தமிட்டு, அவரைத் தழுவிய பின்பு, பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார். எரச் இந்தக் குறிப்பை ஆதிக்கு அனுப்பி வைத்தார்: "நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதோடு அதை உணர வேண்டும் என்று பாபா விரும்புகிறார், ஏனெனில் குல்மாய் எப்பொழுதும் 'மகிழ்ச்சி'யாக இருப்பார்."

அடுத்த நாள், உடல்நிலை மிகவும் மோசமான திருப்பத்தை எட்டியது; குல்மாய் பேச முடியாமல் மயக்கமடைந்தார். அப்படியிருந்தும், மிகவும் சிரமப்பட்டு, அவர் உதடுகளை அசைத்து, பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்தார். நள்ளிரவில், உணர்விழந்த முழு மயக்க நிலையில் இருந்து, திடுக்கிட்டு, சத்தமாக பாபாவின் பெயரை மொழிந்து அழைத்தார். தனது முழு பலத்துடன், இடைவிடாமல் சில நிமிடங்கள் இதைத் தொடர்ந்தார். பாபாவின் பெயரை இறுதி மூச்சில் உச்சரித்து, குல்மாய் தனது 78ஆவது வயதில் அவருடன் நிரந்தரமாக இணைந்தார். குல்மாய் காலமானதை பாபாவிற்குத் தெரிவிக்க வாமன் படாலே மெஹராஸாத்திற்கு அனுப்பப்பட்டார்.

குல்மாயின் உடல் 1962 ஆகஸ்ட் 11 சனிக்கிழமை அதிகாலை மெஹராபாத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவரது உடல் மெஹராபாத் மண்டபத்தை ஒட்டிய அறையில் வைக்கப்பட்டது. காலை, 9:00 மணிக்கு, சில தொழிலாளர்கள் தோள்களில், குல்மாயின் பூத உடல் வைக்கப்பட்ட பெட்டியை, மேல் மலைக்கு எடுத்துச் செல்ல, பாபா வரும் வரை, அது தகரக் கொட்டகையின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. பத்து மணிக்கு பாபா வந்தபோது, ஆதி, பாதிரி இருவரும் கீழ் மெஹராபாத்தில் அவரை சந்தித்தனர். பாபா மலையில் ஏறி குல்மாயின் உடல் அருகே தகரக் கொட்டகையின் கீழ் அமர்ந்தார். **பின்பு '**பெட்டியை மூடாமல் கல்லறைக்குள் வைக்குமாறு**'** அறிவுறுத்தினார்.

இது முடிந்ததும், பாபா அருகில் வந்து, குல்மாயின் நெற்றியிலும் உடலிலும் மலர்களை வைத்து இறுதிச் சடங்குகளைச் செய்தார்; கைக்கோபாத் பிரார்த்தனை மொழிய, பிணப்பெட்டி பாதுகாப்பாக மூடிவைக்கப்பட்டது. அரன்காவ்ம் மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த 200 நபர்களுக்கும் மேல் கலந்து கொண்டனர். இவ்வாறு பாபாவின் ஆன்மீகத் தாயார் குல்மாய் மெஹராபாத்தில் ஓய்வெடுக்க வந்தார்; அந்த நிலத்தை பாபாவின் பாதங்களில் அர்ப்பணம் செய்யும் முக்கிய பங்கை வகித்தவர் குல்மாய் என்றால் மிகையாகாது.

பாபா, ஆதியிடம், "**குல்மாயை அடக்கம் செய்யும் நேரத்தில் நான் இங்கு இருந்ததில் அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி**" என்று குறிப்பிட்டார். உண்மையில், மெஹராபாத் மேல் மலையில் உடல் அடக்கம் செய்யப்பட்ட முதல் நபர் குல்மாய் ஆவார். மேலும் மெஹர் பாபா மெஹராபாத்திற்கு சென்றது இதுவே கடைசி முறை.

மெஹர் பிரபு மீதான குல்மாயின் அர்ப்பணிப்பு, சேவை மற்றும் அன்புக்கு காலம் தலை வணங்கியது! அவரும் அவரது கணவர் கய்குஷ்ருவும் (கான்ஸாஹேப்) மெஹராபாத் என்றழைக்கப்படும் அரன்காவ்ம் கிராமத்தில் அமைந்த நிலத்தை மெஹர் பாபாவிற்கு அன்பளிப்பாக வழங்கினர்.

இறுதிச் சடங்கிற்கு பிரேம் கில்னானி வந்திருந்தார், மேலும் பாபா மெஹர் ரிட்ரீட் கட்டிடத்தின் கோபுரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பிரேம் அவரிடம், "ஒரு நாள் மெஹராபாத் உலக யாத்திரை ஸ்தலமான பெனாரஸை ஒத்து இருக்கும்" என்றார்.

பாபா, "**ஆம்**, **நீங்கள் சொல்வது சரிதான்**. **அது நடக்கும்**" என்று தலையசைத்தார்.

மெஹராஸாத் திரும்பும் வழியில், குஷ்ரு குவார்ட்டர்ஸில் பாபா சிறிது நேரம் நின்றார்; குல்மாயின் மகள் டாலியைத் தழுவி, அவர் முதலில் குல்மாயின் அறையைப் பார்வையிட்டு, பின்னர் ஆதியின் அலுவலகத்தில் பத்து நிமிடம் அமர்ந்திருந்தார்.

மறுநாள் காலை, ஆகஸ்ட் 12 ஞாயிற்றுக்கிழமை, பாபா மீண்டும் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்குச் சென்று, ஆதி, ஆதியின் சகோதரிகளான டாலி, பிரோஜா இருவருடன் சிறிது நேரம் கலந்துரையாடினார். அவர் தனது அஹமதுநகர் அன்பர்களுக்கு தரிசனம் வழங்கினார்; லதா லிமாயே இரண்டு கஸல்களைப் பாடினார். ஹோஷங் பரூச்சா ஒரு நாளுக்காக அன்று காலை வந்து, பாபாவுடன் மெஹராஸாத் சென்றார். மாலை 5:00 மணிக்கு ஆதி அங்கு அழைக்கப்பட்டார். குல்மாய் உயிரைத் துறப்பதற்கு முன்பு, பாபா அவரை சந்தித்து, '**அவரது இறுதிச் சடங்கிலும் கலந்துகொண்டது குல்மாயின் எவ்வளவு பெரிய பாக்கியம்**' என்பதை பாபா அவருக்கு மீண்டும் எடுத்துரைத்தார்.

ஸூனாமாசி (குல்மாயின் சகோதரி), கோர்ஷெத் ஆகியோர் குல்மாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியவில்லை, ஆனால் அவர்கள் 15ஆம் தேதி மும்பையிலிருந்து அஞ்சலி செலுத்த வந்தனர். மெஹராபாத் மற்றும்

குல்மாயின் கல்லறையை பார்வையிட்ட பின்னர், அவர்கள் பாபா மற்றும் பெண் மண்டலியுடன் மதியம் சில மணி நேரத்தைக் கழிக்க மெஹராஸாத் சென்றனர்.

தங்களின் அனுதாபங்களை தெரிவித்து, ஆதி சீனியருக்கு எழுதிய அனைவருக்கும் அவர் இவ்வாறு பதிலளித்தார்:

இது மிகவும் மகிழ்ச்சியான இழப்பாக இருந்தது. தாயார் குல்மாயின் பிரிவை நான் எவ்வளவு அதிகமாக நினைக்கிறேனோ, அவ்வளவுக்கு அவர் உளமார விரும்பி, அன்பான பாபாவின் எல்லையற்ற இதயத்தில் நித்திய இடத்தை அடையப் பெற்றார் என்ற எண்ணத்தில் நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன்.

1962 ஆகஸ்ட் 21 அன்று ஜால்பாய் பூனாவிலிருந்து கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான போக்குவரத்து ஏற்பாடுகளைப் பற்றி விவாதிக்க வந்தார். நோஷிர் ஈரானி 23ஆம் தேதி மெஹராஸாத்தில் பாபாவைப் பார்த்தார்.



கிழக்கு-மேற்கு  சகவாசம், குருபிரசாத், 1962 நவம்பர்



மெஹர் பாபா, கிழக்கு-மேற்கு சகவாசம், குருபிரசாத், 1962

# கிழக்கு-மேற்கு சகவாசம் - பாகம் 1

(**East-West Gathering – Part 1**)

1962 ஆகஸ்ட் 26 ஞாயிற்றுக்கிழமை அன்று, அஹமதுநகர் மற்றும் பூனா சேவகர்கள் சிலருடன் (ஜோஸஃப் ஹார்பின் காரில் அழைத்து வரப்பட்டவர்கள்) பாபா மெஹராஸாத்தில் ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தினார். கூட்டம் மூன்று மணி நேரம் நீடித்தது; கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான (EAST-WEST GATHERING) ஏற்பாடுகள் தொடர்பான முக்கிய விஷயங்கள் முடிவு செய்யப்பட்டன. மொத்த செலவுகளின் மதிப்பீடு கணக்கிடப்பட்டு, பாபாவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. குருபிரசாத் (பந்தல் மற்றும் வாடகை நாற்காலிகள், ஒலி பெருக்கி, மின் சாதனங்கள், கழிவறைகள், தண்ணீர் விநியோகம் மற்றும் தினசரி கூலிக்காரர்கள் கட்டணம்) ஏற்பாடுகளுக்கு குறைந்தபட்சம் ரூ.7,000 செலவு செய்ய வேண்டும் என்று மதிப்பிடப்பட்டது. இந்த செலவுகளின் சுமையை பகிர்ந்து கொள்ள, பாபா ஒன்பது நெருங்கிய அன்பர்களைத் தேர்ந்தெடுத்தார்: ஜோஸஃப் ஹார்ப் ரூ.1,500 செலுத்த வேண்டும்; நரிமன் தாதாசாஞ்சி, ஹோஷங் பரூச்சா, கிஷின்சந்த் கஜ்வானி மூவரும் தலா ரூ.1,000 பங்களிக்க வேண்டும்; மற்றும் ஸொராப்ஜி ஸிகன்போரியா, மெஹர்ஜி, பாப்புஸாஹேப் ஷிண்டே, மினு தேசாய், மினூ பரூச்சா ஆகியோர் தலா ரூ.500.

ஆகஸ்ட் 31 அன்று, பாபா மேலும் இரண்டு சொற்பொழிவுகளை எடுத்துரைத்தார், முதலாவது: 'அன்பரும் அன்பிற்குரியவரும்' (THE LOVER AND THE BELOVED).

**அன்பே கடவுள். அன்பு, அன்பை வெளிப்படுத்த வேண்டும். மேலும் அன்பைப் பொழிய அன்பிற்குரியவர் ஒருவர் வேண்டும். ஆனால் கடவுள் அளவிறுதியற்றவராக உளதாயிருப்பவர், நித்தியமானவர் என்பதால், அவரைத் தவிர வேறு எவரும் அவரை நேசிக்க முடியாது. மேலும் தன்னையே நேசிப்பதற்கு, தன்னை அன்பிற்குரியவராகக் கற்பனை செய்துகொள்ளும் அன்பிற்குரியவர், தன்னை அன்பனாகக் கற்பனை செய்து, அவர் மீது அன்பைப் பொழிய வேண்டும்.**

**'அன்பிற்குரியவர்' மற்றும் 'அன்பர்' எனும்போது இருவரும் வேறு வேறு என்பதை அடையாளப்படுத்துகிறது. இந்தப் பிரிவு, ஏக்கத்தை உருவாக்குகிறது; ஏக்கம் தேடலுக்கு வழிவகுக்கிறது. மிகையான, அதி தீவிரமான தேடல், அளப்பரிய பிரிவையும், அதி பயங்கரமான ஏக்கத்தையும் குறிக்கிறது.**

**ஏக்கம் அதன் தீவிர உச்சகட்டத்தில் இருக்கும்போது, பிரிவு முழுமையடைகிறது, மேலும் 'அன்பு' தன்னை அன்பராகவும், அன்பிற்குரியவராகவும் அனுபவிக்க வேண்டும் என்ற பிரிவின் நோக்கம் நிறைவேறுகிறது; இறைவனோடு ஐக்கியம், அதனைப் பின்தொடர்கிறது. இந்த இறை ஐக்கியத்தை அடையப்பெறும் போது, அன்பர் தன்னை நேசித்த**

**மற்றும் உளமார விரும்பி ஒன்றிணைந்த அன்பிற்குரியவருடன் இருந்ததை அறிவார்; மேலும் அவர் கடந்து வந்த அனைத்து சாத்தியமற்றதாகத் தோன்றிய சூழ்நிலைகளும், தானே தனது பாதையில் வைத்துக்கொண்ட தடைகள் என்பதையும் அறிவார்.**

**இறைவனுடன் ஐக்கியம் என்பது இயலாது போகுமளவுக்குக் கடினம், ஏனெனில் நீங்கள் ஏற்கனவே இருப்பதைப் போல் ஆக முடியாது! ஐக்கியம் என்பது தன்னைத்தானே 'ஒன்றே உருவான ஏக இறைவன்' என்ற அறிவை அடையப் பெறுவதைத் தவிர வேறொன்றுமில்லை.**

இரண்டாவது சொற்பொழிவு: 'மன்னிப்போம் மறப்போம்' (FORGIVE AND FORGET) என்ற தலைப்பில் ஆனது:

**மக்கள் கடவுளிடம் மன்னிப்புக் கோருகிறார்கள். ஆனால், கடவுளே எல்லாமும், எல்லோரும் எனும்போது, அவர் மன்னிக்கும் அளவுக்கு யார் இருக்கிறார்கள்? படைக்கப்பட்டவற்றின் மன்னிப்பு அவருடைய படைப்புச் செயலில் ஏற்கனவே அடங்கியுள்ளது. ஆனாலும், மக்கள் கடவுளிடம் மன்னிப்புக் கோருகிறார்கள், அவர் அவர்களை மன்னிக்கிறார். ஆனால், அவர்கள் எதற்காக மன்னிப்புக் கோரினார்களோ, அதை மறந்துவிடுவதற்கு பதிலாக, கடவுள் அவர்களை மன்னித்தார் என்பதை மறந்து, மன்னிக்கப்பட்டதை அவர்கள் நினைவில் கொள்கிறார்கள் - அதனால், செய்த தவறின் விதையை வேரூன்றச் செய்து வளர்க்கிறார்கள், அது மீண்டும் அதன் பலனைத் தருகிறது. மீண்டும் மீண்டும் அவர்கள் மன்னிப்புக்காக இறைஞ்சுகிறார்கள், மீண்டும் மீண்டும் குருநாதர் கூறுகிறார்: "நான் மன்னிக்கிறேன்."**

**ஆனால், மக்களால் தாம் செய்த தவறுகளையும், பிறர் தமக்கிழைத்த தவறுகளையும் மறக்க இயலாது. அவர்களால் மறக்க இயலாததால், மன்னிப்பது கடினமாக இருக்கிறது. ஆனால் மன்னிப்பதே மாபெரும் தர்மம். (ஒருவரிடம் ஏராளமாக இருக்கும்போது ஏழைகளுக்கு வழங்கி உதவுவது எளிது, ஆனால் மன்னிப்பது கடினம்; அதைச் செய்ய முடிந்தால் அதைவிடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை.)**

**ஒருவரையொருவர் மன்னிக்க முயற்சிப்பதற்கு பதிலாக, அவர்கள் மோதலில் ஈடுபடுகிறார்கள். முதலில் கைகலப்பாலும் தடிகளாலும் மோதிக்கொண்டவர்கள் பின்னர் ஈட்டிகள், வில் மற்றும் அம்புகளைப் பயன்படுத்தத் தொடங்கினர்; அதைத் தொடர்ந்து துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகளுடன் போர் தொடுத்தனர். பின்னர் அவர்களுக்கான வெடிகுண்டுகள் மற்றும் அவற்றைத் தாங்கிச் செல்லும் ஊர்திகள். இப்போது அவர்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் லட்சக்கணக்கான மக்களை அழிக்கும் ஏவுகணைகளை உருவாக்கியுள்ளனர், மேலும் அவற்றைப் பயன்படுத்த எந்நேரமும் தயாராக உள்ளனர். பயன்படுத்தப்படும்**

**ஆயுதங்களும், கருவிகளும் மாறுகின்றன, ஆனால் மனிதனின் ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறை அப்படியே உள்ளது.**

**இப்போது மனிதர்கள் சந்திரனுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளனர். முதலில் அதைச் சென்றடைபவர், தனது தேசத்தின் கொடியை அதன் மீது நாட்டுவர்; பின்னர் அந்த தேசம் 'இது என்னுடையது' என்று பறைசாற்றும். ஆனால் வேறொரு தேசம் இந்த உரிமைகோரலை மறுத்து, சந்திரனை உடைமையாக்க இந்த பூமியில் மோதிக்கொள்ளும். யார் ஒருவர் அங்கே சென்றாலும், அவர் எதைக் கண்டுகொள்வார்? தன்னைத் தவிர வேறொன்றுமில்லை. மக்கள் வெள்ளி (வீனஸ்) கிரகத்திற்குச் சென்றாலும், அவர்கள் தங்களைத் தவிர வேறு எதையும் கண்டுகொள்ள மாட்டார்கள். மானிடன் விண்வெளியில் பறந்தாலும் அல்லது ஆழ் கடலின் அடிப்பகுதிக்கு மூழ்கினாலும், அவர்கள் தங்களைத் தாங்களாகவே, எந்த மாற்றமும் இல்லாமல், காண்பார்கள், ஏனெனில் அவர்கள் தங்களை மறந்திருக்க மாட்டார்கள் அல்லது மன்னிப்பு தர்மம் எனும் மாபெரும் தொண்டு செயலைச் செய்யும் மனநிலையில் இருந்திருக்க மாட்டார்கள்.**

**பிறர் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு மனிதன் தன்னில் எந்த மாற்றத்தையும் ஒருபோதும் காணமுடியாது; அவன் அடையும் வெற்றிகள் எவ்வளவு அதிகமாக உள்ளதோ, அவ்வளவு வலிமையாக அவனது மனம் அவனிடம் சொல்வதை உறுதிப்படுத்துகிறது - அதாவது, அவனுடைய சொந்த சக்தியைத் தவிர, கடவுள் என்று வேறு எதுவும் இல்லை.**

**ஆனால் அதே மனம், கடவுள் என்று ஒன்று உளதாயிருப்பதாகச் சொல்லும்போது, மேலும், அது உண்மைப்பொருளான கடவுளை நேருக்கு நேர் பார்க்கும்படி அவனைத் தேடத் தூண்டும் போது, அவன் தன்னை மறந்து, பிறரை, அவர்களால் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் எதுவாக இருந்தாலும், மன்னிக்கத் தொடங்குகிறான். ஒரு மனிதன் அனைவரையும் மன்னித்து, தன்னை முழுவதுமாக மறந்துவிட்டால், கடவுள் அவனது அனைத்தையும் மன்னித்திருப்பதைக் காண்கிறான், உண்மையில் அவன் யார் என்பதை நினைவில் கொள்கிறான்.**

இதற்கிடையில் ஃபிரான்சிஸ், பாபாவின் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) என்ற புதிய தொகுப்பில் இணைக்கப்பட இருந்த இந்த இரண்டு மற்றும் பிற உரைகளின் ஆங்கில நடையை மெருகூட்டுவதில் ஆர்வமாக இருந்தார். மணி, ரானோ இருவரும் அவற்றை தட்டச்சு செய்ய, பாவ் கல்சூரி சில சொற்பொழிவுகளை இந்தியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் பாபா புத்தகத்திற்கான கையெழுத்துப் பிரதியை அவரிடம் கொடுத்து, **"நீங்கள் இதை இந்தியில் மொழிபெயர்த்து** (இந்தி பேசும் மக்களுக்காக) **சுவாரஸ்யமாக மாற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்"** என்று சைகையால் தெரிவித்தார்.

பாவ் கல்சூரி உடனே, "ஆங்கில மொழியில் சுவாரஸ்யமாக இருந்தால், இயல்பாகவே இந்தியிலும் சுவாரஸ்யமாக இருக்கும்" என்றார்.

அதற்கு பாபா, "**அது எனக்குத் தெரியாது. நீங்கள் இதை சுவாரஸ்யமாக மாற்ற வேண்டும், மொழி நடை எளிமையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்**" என்றார்.

பாபா சொன்னதை பாவ் கல்சூரி சிந்தித்துப் பார்த்தார். முழுத் தொகுப்பையும் உரையாடல் வடிவத்தில் எழுத வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது; மேலும் அவர் இந்தப் பாணியில் ஒரு சொற்பொழிவை எழுதி முடித்து, அதை பாபா முன்னிலையில் வாசித்தார்; பாபா மகிழ்ச்சியில் அவரைப் பாராட்டினார், "**ஆம், இதைத்தான் நான் சொன்னேன்.**"

பாபா, பாடல்களும் இணைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்து, ஒரு பிரார்த்தனையையும் இணைக்குமாறு அறிவுறுத்தினார். சில ஆண்டுகளுக்கு முன்னர், 1959இல், பாவ் கல்சூரிக்கு பாபா இந்தி மொழியில் ஒரு சிறப்பான ஈரடிக் கவிதை வழங்கியதை அவர் நினைவு கூர்ந்தார்:

**விலைமதிக்க முடியாத இறை ஞானத்தின் பொக்கிஷமே!**
**நீர் உள்ளேயும் வெளியேயும் இருக்கிறீர்,**
**மேலும் நீர் இறைப்பெருங் கருணையின் கடல்.**
**நீர் அனைத்து உலகங்களிலும் உள்ளீர்;**
**நீர் இறைப் பண்புகளின் மாபெரும் கடல்!**
**ஓ மெஹர், இறைவனின்-அவதாரம்,**
**நீர் ஒருவரே உளதாய் இருக்கிறீர்!**

அவர் அந்த ஈரடிக் கவிதையைக் கண்டுபிடித்து, அதை அவர் எழுதும் பாடலின் முதல் வரியாக மாற்றினார், அத்துடன், மேலும் பதினொன்று குறுங் கவிதைகளையும் இயற்றினார்.

அடுத்த நாள் மாலை அவர் இரவு கண்காணிப்புப் பணிக்காகச் சென்றபோது, பாபா வினவினார், "**நீங்கள் பிரார்த்தனைக்குக் கவிதை வடிவம் கொடுத்தீர்களா?**" பாவ் கல்சூரி எழுதியதாகக் கூறியதைக் கேட்டதும், பாபா, அவரிடம் அதைப் படிக்கச் சொன்னார். பாபா மகிழ்ச்சியடைந்தார், ஆனால் பிரார்த்தனை மேலும் நீண்டதாக இருக்க வேண்டும் என்று கூறினார். அன்றைய தினம், பாபா, மிகவும் நல்ல மனநிலையில் காணப்பட்டார், அந்த வரிகளுக்கு ஏற்ப தனது முஷ்டிகளால் கால்களில் தாளமிட்டு, பாபா, புதிய ஈரடிக் கவிதைகளை இயற்றத் தொடங்கினார். பாபா தமது படுக்கையில் அமர்ந்து மேலும் பதினேழு குறுங் கவிதைகளை எடுத்துரைத்தார். இதன் விளைவாக, 'நீ மட்டுமே உளதாயிருக்கிறாய்!' (இந்தி மொழியில் 'துமி தோ ஹோ' - 'YOU ALONE EXIST') என்ற பிரார்த்தனை உருவானது. '**பிற்காலத்தில், ஒரு நாள், இந்தப் பிரார்த்தனை உலகம் முழுவதும் ஓதப்படும்**' என்று பாபா கூறினார்.

1962 செப்டம்பர் 5 கைக்கோபாத்தின் குடும்பத்தினர் பாபாவைப் பார்க்க மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். அன்று, பாபாவின் மற்றுமோர் அன்பான,

பழைய சீடர் மேரி பேக்கெட் (MARY BACKETT) இங்கிலாந்தில் காலமானார், அவருக்கு 86 வயது. பாபா எப்பொழுதும் மேரி, அவரது கணவர் வில் இருவரையும் அவரது 'பிரதான தேவதூதர்கள்' (ARCHANGELS) என்று குறிப்பிட்டார்; பாபா 7ஆம் தேதி இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**என் ஆர்க்கேஞ்சல்** (தேவதூதர்) **மேரி அவருக்கென வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றிய பின்னர் என்னிடம் வந்துள்ளார். என் அன்பில் மகிழ்ச்சியாக இருங்கள்.**"

செப்டம்பர் 7ஆம் நாள், எரச்சின் மாமா பிலூ ஸட்டாவின் பிறந்தநாள்; அன்று காலை 11:00 மணிக்கு பாபா, அக்பர் அச்சகத்திற்கு, எரச், பாவ் கல்சூரி, ஃபிரான்சிஸ் ஆகியோருடன் பத்து நிமிடங்களுக்காகச் செல்ல ஒப்புக்கொண்டார். அவர் முதலில் குஷ்ரு குவார்ட்டர்ஸில் நின்று, கில்னானி குடும்பத்தினர் மற்றும் பிறரை சந்தித்தார். அக்பர் அச்சகத்தில், பாபா, பிலூ மாமாவிற்கு பிறந்தநாள் அரவணைப்பை வழங்கி, ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்களைச் சேர்ந்த அனைவரையும் சந்தித்தார். வெளியாட்கள் எவரும் அழைக்கப்படவில்லை. பிறந்தநாள் சிறப்பு உணவு மெஹராஸாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கிஷின்சந்த் கஜ்வானியின் மகள் ஷியாமா (SHYAMA), பாபாவின் மீது ஆழ்ந்த பக்தி மிக்கவர், இப்போது அமெரிக்காவில் வாழ்ந்து வந்தார். அவர் தனது கணவர் மற்றும் மகனுடன் மும்பைக்கு வந்தவர், பாபாவின் அனுமதி பெற்று தந்தையுடன் செப்டம்பர் 10 அன்று மெஹராஸாத்திற்கு வந்தார். சிறுவன் தைரியமும் குறும்புத்தனமும் நிறைந்தவனாக இருந்தான். பாபா ஒவ்வொருவருக்கும் பிரசாதமாக இனிப்பு மிட்டாயை வழங்கியதும், சிறுவன் பாபாவின் வாயில் ஒன்றை வைத்து, "பாபா, நீங்களும் ஒன்றை சாப்பிடுங்கள்! நீங்கள் அனைவருக்கும் கொடுப்பதை அவர்கள் சாப்பிடுகிறார்கள், ஆனால் நீங்கள் முதலில் ஒன்றை சாப்பிட்டால் ஒழிய நான் சாப்பிட மாட்டேன்!" என்றான்.

அவனுடைய தாய் சிறுவனை அமைதிப்படுத்த முயன்றார், ஆனால் பாபா அவரிடம், "**அவனைத் தடுக்காதீர்கள்; இதை நான் விரும்பினேன். இன்று அவனுடைய நாள்!**" என்று கூறி மிட்டாயை உண்டார். இரண்டு மணி நேரம் பாபாவுடன் இருந்த அந்த நேரத்தில் விஷமக்கார சிறுவனின் ஆரவாரத்தால் மெஹராஸாத்தில் அனைத்தும் ஸ்தம்பித்தது.

செப்டம்பர் 14 அன்று, பாபா எதிர்வரும் சகவாசத்திற்கு '**பெண்கள் மீதான அன்பும், கடவுள் மீதான அன்பும்**' (THE LOVE OF WOMEN AND GOD) என்ற தலைப்பில் சொற்பொழிவு ஒன்றை வழங்கினார். 19ஆம் தேதி, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**பிறரை வெறுக்கவும், பிறரைக் கண்டு பொறாமைப்படவும், பிறரைக் கவலையுறச் செய்யவும் சிலர் வாழ்கின்றனர்; பிறரை நேசிக்கவும், பிறரை மகிழ்விக்கவும் சிலர் வாழ்கின்றனர். கடவுளோடு ஐக்கியமானவர் நல்லவர், தீயவர் அனைவருக்காகவும் வாழ்கிறார். மேலும் கடவுளோடு**

**ஐக்கியமாக, ஒருவர் தனது சுயத்தை தவிர வேறு எதையும் துறக்க வேண்டியதில்லை."**

1962 செப்டம்பர் 20 அன்று, நவம்பர் மாதத்தில் நிகழவிருக்கும் கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்து கொள்ளும் இந்தியா, பாகிஸ்தான், ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழும் அன்பர்கள் அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

**'.....சகவாசத்திற்கு வருபவர்கள், பாபாவின் பிரசன்னத்தை ஒன்றாக இணைந்து அனுபவிக்க வேண்டும்' என்ற ஒரே சிந்தனையுடன் வர வேண்டும்; மேலும் தங்களுக்காக, தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்காக அல்லது பாபா பணி, குழு, மைய நடவடிக்கைகள் தொடர்பாக அவரிடமிருந்து தனிப்பட்ட கவனத்தையோ, வழிகாட்டுதலையோ எதிர்பார்க்கக் கூடாது. ஆன்மீகம் அல்லது வேறு எது சம்பந்தமான கேள்வியும் எழுப்பக்கூடாது.**

**இந்த நவம்பர் மாத சந்திப்பு, கடந்த கால சகவாசம் அல்லது தரிசன நிகழ்ச்சிகளிலிருந்து வித்தியாசமாக இருக்கும் என்று பாபா கூறுகிறார், எனவே அவர் முன்னிலையில் இருப்பதைத் தவிர, வேறு எந்தவிதமான எதிர்பார்ப்புகளும், அவர் விரும்பும் சூழ்நிலையில் தலையிடுவது போலாகும்; மேலும் அத்தகைய தலையீடு, ஒருவருக்கு, பாபாவின் முன்னிலையில் இருப்பதன் உண்மையான பலனை இழக்க வழிவகுக்கும் என்று வலியுறுத்துகிறார்.**

கிட்டி டேவியும் - KITTY DAVY (1962 செப்டம்பர் 15ஆம் தேதி) விவியன் அகோஸ்டினிக்கு (VIVIAN AGOSTINI) எழுதிய கடிதத்தில் இந்த சகவாசத்தின் தனித்துவத்தைக் குறிப்பிட்டிருந்தார்:

இப்போது பாபாவிடம் கிழக்கு நோக்கி பறந்து செல்லும் குழுவில் நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும். இந்த முடிவுக்காக நீங்கள் ஒருபோதும் வருந்த மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும் - நமது வரையறுக்கப்பட்ட மனங்களால் புரிந்துகொள்ள முடியாத அரியதொரு வாய்ப்பு.

நான் பாபாவிடம் வந்த கடந்த 30 வருடங்களில், பாபாவை நேசிக்கும் 'அனைவரும்' ஒரே நேரத்தில் அழைக்கப்படுவது இதுவே முதல் முறை என்பதை நீங்கள் அறிவீர்களா? பாபா ஆரம்பத்திலிருந்தே கிழக்கு-மேற்கு இரண்டையும் ஒன்றாகக் கொண்டு வருவதே தனது சிறப்புப் பணி என்று கூறினார், இதன் காரணமாக (நம்மில்) ஒரு சிலர் 1933இல் கிழக்கு நோக்கிச் சென்றோம்.

ஆகவே, இந்தக் காலச் சுழற்சியில், பாபாவின் பணி நிறைவுறும் தருவாயில், இந்த 'அழைப்பு' பாபாவைப் பொறுத்தவரை, இப்பணியில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், 'அழைக்கப்படும்' போது செல்வதன் மூலம், நாம் இந்தப் பணியில் உதவுகிறோம் என்றும் நான் மிகவும் உறுதியாக உணர்கிறேன். பாபாவை நேசிப்பவர்களால் மட்டுமே இந்த அபரிமிதமான சிறப்புப்

பணியில் உதவ முடியும் என்று தோன்றுகிறது, ஏனெனில் பிறர் இந்த நேரத்தில் அழைக்கப்படவில்லை.

உண்மையில் மகத்தானது நமது பாக்கியமும், பொறுப்பும்.

மெஹர்ஜி மாமா ஸட்டா சமீபத்தில் பூத் மருத்துவமனையில் குடலிறக்க அறுவை சிகிச்சைக்காக (HERNIA OPERATION) அனுமதிக்கப்பட்டார்; பாபா அவரைப் பார்க்க செப்டம்பர் 23 அன்று அங்குச் சென்று, பின்னர் அவர் குஷ்ரு குவார்ட்டர்ஸ் வந்தார். அன்றைய தினம் மெஹராஸாத்தில் அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் (பாபா கலந்து கொள்ளாத) அறங்காவலர்களின் கூட்டத்தில் விஷ்ணுவிற்கு பதிலாக ஸரோஷ் நியமிக்கப்பட்டார்.

செப்டம்பர் 25ஆம் தேதி ஜோஸஃப் ஹார்ப் மாரடைப்பு ஏற்பட்டு பூனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியதாயிற்று. பாவ் கல்சூரி சில நாட்களுக்காக 26ஆம் தேதி மெஹராபாத்திற்குச் சென்றார்.

1962 செப்டம்பர் 30 ஞாயிற்றுக்கிழமை அன்று, '**அன்பே உருவான ஏக இறைவன்' படைப்பில் வாழும் ஒவ்வொன்றையும், ஒவ்வொருவரையும் 'அறியாமையின் மொத்த உருவம்**' என்று விளக்கினார், மேலும் இதே கருப்பொருளில் மற்றுமொரு செய்தியை எடுத்துரைத்தார். அக்டோபர் 2 அன்று, அவர் கிழக்கு-மேற்கு சகவாச நிகழ்ச்சிக்கு ஒரு குறுஞ்செய்தியை வழங்கினார்: **"எவரும் இறப்பதில்லை, எவரும் பிறப்பதில்லை. அரிதான ஒரே அதிர்ஷ்டசாலி, உண்மையான மரணத்தை சந்தித்து, கடவுளில் பிறவி எடுக்கிறார்."**

அக்டோபர் இறுதியில் பூனாவிற்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் அதி வேகத்தில் தொடர்ந்தன; சகவாச நிகழ்ச்சிக்கான நேரமும் நெருங்கியது. பாபாவின் முழு கவனத்தையும், அறிவுறுத்தல்களையும் கோரும் புதியதாக ஏதாவது ஒன்று தினமும் தோன்றும். ஸரோஷ், ஜால்பாய் இருவரும் அக்டோபர் 2 அன்று வந்தனர், அன்றிலிருந்து ஃபெராம் மெஹராஸாத்தில் தட்டச்சு பணியில் பெரிதும் உதவினார். அக்டோபர் 7 அன்று, பூனாவிலிருந்து மெஹர்ஜி, ராமகிருஷ்ணன், சதாஷிவ் பாட்டீல், ஷிண்டே, மதுசூதன் ஆகியோர், மும்பையிலிருந்து நரிமன், ஜிம் மேலும் அஹமதுநகரிலிருந்து ஆதி, ஸரோஷ், சகன் ஆகியோர் சகவாச நிகழ்ச்சி தொடர்பான சில விஷயங்களுக்கு முடிவெடுக்கும் நோக்கத்தில் அழைக்கப்பட்டனர். மெஹர்ஜி அதற்காக மீண்டும் 14ஆம் தேதி வந்தார்.

தரிசனம் தொடர்பான பணிகளின் வேகம் அதிகரித்ததோடு, பாபாவின் உடல்நிலையும் இந்த நேரத்தில் மோசமாக இருந்தது. அவர் மிகவும் கடுமையான இழுப்பு மற்றும் தசை பிடிப்புகளால் அவதியுற்றார். ஓய்வெடுக்கும் வேளையில், கடுமையான பிடிப்பு காரணமாக அவரது உடல் முழுவதும் படுக்கையில் தூக்கி எறியப்பட்டது. ஜுரம் இருந்ததாலும் அவருக்கு எந்த சிகிச்சையும் வழங்கப்படவில்லை. அவர் டாக்டர் கோஹெரை வெளி மருத்துவர்களை அணுக அனுமதிக்க மறுத்துவிட்டார், மேலும் பூனாவிற்குப்

புறப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளிலும் மும்முரமாக இருந்ததால், பிரச்சினைகளைக் கண்டுகொள்ள அவருக்கு நேரம் போதவில்லை.

இரண்டாவது வாகன விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக, பாபாவின் வலது கால் இன்னமும் வலித்துக் கொண்டிருந்தது. அவர் படுக்கையில் ஓய்வெடுக்கும் போதெல்லாம், பாவ் கல்சூரி அல்லது பிற மண்டலியில் ஒருவர் அவருக்கு மஸாஜ் செய்வது வழக்கமாக நடந்தது. மிகுந்த தயக்கத்துடன், பாபா தனது காலில் ஒரு முறை பத்து நிமிடங்களுக்கு, சற்றே வெதுவெதுப்பான ஒத்தடம் வழங்க ஒப்புக்கொண்டார்.

இந்த நேரத்தில் அவர் பல வாரங்களாக தொடர்ந்து வயிற்று வலியால் அவதிப்பட்டார். அவரது சிறுநீர், பரிசோதனைக்காக பூத் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1962 அக்டோபர் 17 மாலை 3:00 மணிக்கு, பூத் மருத்துவமனையில் பணிபுரிந்த ஆஸ்திரேலிய அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் பீடெர்ஸனை (DR. PEDERSEN), ஆதி மற்றும் டான் மெஹராஸாத்திற்கு அழைத்து வர பாபா அனுமதித்தார்; உறுதியான எதுவும் கண்டறியப்படவில்லை.

பாபா, டாக்டர் பீடெர்ஸனுக்கு (ஒரு கிறிஸ்தவர்) இவ்வாறு விளக்கினார்:

**கடவுள் எல்லாவற்றிலும் எல்லோரிடத்திலும் பிரிக்க முடியாதவராக இருக்கிறார். வெளிப்படையான தனித்தன்மை, அறியாமையின் விளைவாகும். கடலில் ஒரு துளி கடலுடன் ஒன்றாக இருக்கும், அதன் மேல் ஒரு குமிழி உருவானதும், அது கடலிலிருந்து பிரிந்துவிடும். குமிழி வெடிக்கும் வேளையில், துளி மீண்டும் கடலுடன் ஒன்றாகும்.**

**அதே போல மனம், ஆற்றல் மற்றும் பொருளின் குமிழியால் ஆன்மா மூடப்பட்டிருக்கும் போது, அது கடவுளிடமிருந்து பிரிகிறது. ஆனால் குமிழி வெடித்ததும்** (அதாவது, கடவுள் மீதான அன்பின் மூலம் 'நான்' எனும் சுய அகந்தை அழிக்கப்படும் போது), **அது கடவுளுடன் ஒன்றாக இருப்பதைக் காண்கிறது.**

**கடவுளுடன் ஐக்கியமான பிறகு, மனித உருவில் ஒரு சாதாரண உணர்வு நிலைக்கு வரும்போது, அவர் கிறிஸ்து-உணர்வை அடைந்து, ஆன்மீக ரீதியாகவும், மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் - அனைத்து மனிதகுலத்திற்காகவும் தொடர்ந்து துன்பப்படுகிறார்.**

பாபாவின் நோயைக் கண்டறிந்து, சிகிச்சையில் உதவுவதற்காக டாக்டர் டான் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார். டான் அடுத்த ஐந்து இரவுகளை மெஹராஸாத்தில் பாபாவின் அருகில் கழித்தார். அவர் நாள் முழுவதும் புது கண்டுபிடிப்புகள் அடங்கிய மருத்துவ புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார், ஆனால் பாபாவின் நோய்களுக்கான காரணத்தை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவரும் டாக்டர் கோஹெரும் பலவிதமான மருந்துகளை முயற்சித்தாலும், அவை எதுவும் பாபாவின் விசித்திரமான துன்பத்தின் அறிகுறிகளைப் போக்க உதவவில்லை.

உடல்நிலை சீரில்லாத போதிலும், பாபா தற்போதைய பணியிலிருந்து ஓய்வெடுக்காமல், சுறுசுறுப்பாக இருந்தார், அவருடைய அனுதின அறிவுறுத்தல்கள் மற்றும் கடிதப் பரிமாற்றங்கள் தொடர்ந்தன.

குஷ்ரு குவார்ட்டர்ஸில் அஹமதுநகர் மையம் 1959இல் தொடங்கப்பட்டது. அங்கு, பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததாலும், பழைய கட்டிடத்தில் சுமார் 50 பேர் மட்டுமே அமர முடியும் என்பதாலும், அதைவிட பெரிய வசதி தேவைப்பட்டது. புனரமைப்புக் குழுவிற்கு (RENOVATION COMMITTEE) ஸரோஷ் தலைமை வகித்தார், மேலும் குஷ்ரு குவார்ட்டர்ஸில் இரண்டு அறைகள் இணைக்கப்பட்டு, ஒரு பெரிய மண்டபமும் உருவாக்கப்பட்டது. தொடக்க நாளாக நிர்ணயிக்கப்பட்ட 1962 அக்டோபர் 21 ஞாயிற்றுக்கிழமை, பாபாவின் உடல்நிலை சீரில்லாத போதிலும், விழாவில் கலந்துகொள்ளுமாறு ஸரோஷ் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, பாபா, மையத்தைத் திறந்து வைத்தார். பாபா காலை 9:00 மணிக்கு எரச், பாவ் கல்சூரி, பெண்டு, டாக்டர் டான், ஃபிரான்சிஸ், கைக்கோபாத் ஆகியோருடன் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு வருகை தந்தார். சுமார் 500 பேர் விழாவில் கலந்துகொண்டனர்.

பாபா மூன்று படிகள் ஏறி மையத்தின் முன் வராண்டாவிற்குச் சென்று, ஏழு வண்ண நாடாவை வெட்டி மையத்தைத் திறந்து, பின்னர் அவர் இதர இரண்டு பக்க வாயில்களுக்கும் சென்று, சிவப்பு நாடாக்களை வெட்டி மண்டபத்திற்குள் நுழைந்தார். அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் பாபா அமர்ந்தார். ஸரோஷ் முதலில் அவருக்கு மாலை அணிவிக்க, அதைத் தொடர்ந்து அவரது மகன் மேர்வானின் வருங்கால மனைவி, அனிதா என்ற சுவிஸ் பெண் அணிவித்ததும், '**கவலைப்பட வேண்டாம், மகிழ்ச்சியாக இருங்கள்**' என்று பாபா அவருக்கு உறுதியளித்தார்.

லதா லிமாயே உட்பட அஹமதுநகர் பஜன் குழுவினர், பாவ் கல்சூரியின் கைவண்ணத்தில் உருவான சில வரவேற்புப் பாடல்களைப் பாடினர். அந்த ஆண்டு டெல்லியில் நடைபெறவிருந்த போட்டி இசை நிகழ்ச்சிக்கு லதா தேர்ந்தெடுக்கப்படவில்லை, ஆனால் 'அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்' என்று பாபா உறுதியளித்தார். "**நீங்களே தேர்வாளர்களில் ஒருவராக இருக்கும் ஒரு நாள் வரும்**," என்று அவர் கூறினார்.

எரச் இந்த விழாவிற்கான பாபாவின் செய்தியைப் படித்தார்: "**அவரது அன்பின் ஆசீர்வாதத்தை அடையப்பெற, இதயம் திறந்தே இருக்கும் அனைவருக்கும், 'அவதார் மெஹர் பாபா அஹமதுநகர் மையம்' திறக்கப்பட்டிருப்பதாக பாபா அறிவிக்கிறார்**."

பாபா கூறினார்:

**நீங்கள் உலக விவகாரங்களை முழுவதுமாக மறந்துவிடும் விதத்தில், முழு மனதுடன் கடவுளை நேசிப்பீர்களானால், இன்று என்னுடன் இருக்கும் நீங்கள் அனைவரும், எனது முழு ஆசீர்வாதங்களை எப்பொழுதும்**

**அடையப்பெற முடியும். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், ஆன்மீகப் பாதையில் சிறிதளவு பாசாங்குத்தனமும் ஒருவரை மேலும் முன்னேறிச் செல்வதிலிருந்து தடுக்கிறது. கடவுளை முழு மனதுடன் நேசிப்பது என்பது எல்லோரிடமும் எல்லாவற்றிலும் கடவுளைக் காண்பதாகும். எனவே, நீங்கள் எங்கு பார்த்தாலும் கடவுளைத் தவிர வேறு எதையும் காணாத வகையில் நீங்கள் கடவுளை நேசிக்க வேண்டும்!**

**அஹமதுநகர் மையத்தை மிகச் சிறப்பாகப் புனரமைத்ததில், ஸரோஷின் அன்பின் உண்மையான உழைப்பு மிகையானது. அவருக்கும், இந்த மையத்தை மறுசீரமைக்க உழைத்த அனைவருக்கும் எனது அன்பும் ஆசிகளும்.**

இசை நிகழ்ச்சியில் ஒரு பாடலுக்குப் பிறகு, பாபா '**அன்பு**' குறித்த சொற்பொழிவு ஒன்றை வழங்கினார்:

**கடவுள் மீதான அன்பு என்பது கடவுளிடமிருந்து மனிதன் அடையப்பெற்ற பரிசு, எனவே மனிதன் கடவுளை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிப்பது சாத்தியமில்லை. மனிதன் இந்தப் பரிசை அடையப்பெறாத வரையில், அவனால் கடவுளை நேசிப்பது சாத்தியமில்லை. இருப்பினும், பரிபூரண குருநாதரின் கிருபையால், மனிதன் கடவுளை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்க முடியும்; மேலும் ஒருவன் கடவுளை நேசிக்கத் தொடங்கும் போது, உலகமும் அதன் விவகாரங்களும் அவனுக்கு இல்லாத ஒன்றாகிவிடும்.**

பாபா வலியுறுத்திக் கூறினார், "**அன்பு என்பது உலகை நிலைநிறுத்தி, வழிநடத்தி, நமது வாழ்க்கைக்கு அர்த்தத்தைத் தரும் ஓர் உறுதியான சக்தி; அன்பு இல்லாமல், உலகில் உள்ள அனைத்தும் உதவாப் பொருளே!**"

லதா லிமாயே, ஆதி வழங்கிய கஸல் ஒன்றைப் பாடினார்; அப்போது பாபா, மெதுவாக தலையை அசைத்து, கைகளால் தாளமிட்டார். அதன் அர்த்தத்தை விளக்கி அவர் கூறியதாவது: "**ஒருவர், சூரியனின் கதிர்களில் மூழ்கி, திருப்தி அடையக்கூடாது, ஆனால் சூரியனாக மாற வேண்டும் என்பதை இந்தப் பாடல் தெரிவிக்கிறது. சூரியனாக மாறுவது எளிதானது அல்ல! அதற்கு தைரியம் தேவை, கோடிக்கணக்கானோரில் ஒருவருக்கு மட்டுமே முடியும். தனது சுயத்தை முழுவதுமாக அழித்துவிட்டு, பரிபூரண குருநாதரிடம் சரணடைவதன் மூலம், சாத்தியமில்லாததை அடையமுடியும். அன்பின் கடமை பரிபூரண குருநாதரிடம் முழுமையாக சரணடைவதாகும்.**"

நவ்லே (NAVLE) மேடைக்கு அருகில் இருந்த வேளையில், பாபா அவரிடம் அவருடைய குடும்பத்தினர் அங்கு இருக்கிறார்களா என்று கேட்டார். நவ்லேயின் உறுதியான பதிலில், பாபா, "**அனைத்தும் மாயை, அதில் எந்தப் பொருளும் இல்லை**" என்று கூறினார். பின்னர் அவர் நவ்லேயிடம் கிழக்கு-மேற்கு சகவாசத்தைப் பற்றி தெரிவித்து, "**என் அன்பின் அடையாளத்தை நீங்கள் அடையப் பெறாவிட்டால் நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள்!**" என்று கேலி செய்தார்.



அஹமதுநகர் மையம் திறப்பு விழா,
பாபாவுடன் ஸரோஷ் & எரச், **21** அக்டோபர் **1962**
(OPENING OF AHMEDNAGAR CENTER WITH SAROSH AND ERUCH
21 OCTOBER 1962)

திறப்பு விழாவில் கலந்து கொண்ட பாபாவிற்கு நன்றி தெரிவித்து ஸரோஷ் சில வார்த்தைகளை மொழிந்தார். டாக்கே எழுந்து நின்று தனது வழக்கமான கலகலப்பான மராட்டி மொழியில் படைப்பின் காரணத்தையும் நோக்கத்தையும் பற்றி பேசி, பாபாவை மனித வடிவில் கடவுள் என்று அறிவித்தார், அவர் ஏக இறைவன் எனும் தமது உண்மையான சுயத்தை உணர்ந்து, மனிதகுலத்தை மீட்பதற்காக மீண்டும் மீண்டும் வருகிறார்.

டாக்கே மொழிந்ததை பாபா கூர்ந்து கவனித்து, அவர் பார்வையாளர்களிடம் இவ்வாறு கூறினார்: "**அவர் கூறியதை நான் புரிந்துகொள்வது கூட அவ்வளவு எளிதானது அல்ல! மனதால் அதை ஓரளவு புரிந்து கொள்ள முடியும் என்றாலும்**, (மனம் மறைந்தாலொழிய) **டாக்கே கூறுவதை ஒருவரால் அனுபவிக்க முடியும் என்பதுதான் நகைப்புக்குரிய விஷயம்! ஒருவர் அதைத் தெரிந்துகொள்கிறார் என்பது மட்டுமல்ல, அதுவாக மாறுகிறார்!**"

பாபா மேலும் கூறினார்: "**நீங்கள் பார்க்கும் இந்த உடல் நான் அல்ல, நான் எல்லையற்ற அன்பின் பெருங்கடல், அது எல்லையற்ற அளவுக்குப் பரந்து விரிந்துள்ளது. உங்கள் மனதின் விளையாட்டே நான் தோன்றுவதுபோல் என்னைப் பார்க்க வைக்கிறது; அதே போல, நான் இந்த இடத்தை விட்டு வெளியேறும் போது, பாபா இங்கே இருந்ததை மறந்து விடச் செய்வதும், அதே மனதின் விளையாட்டுதான். அப்படியிருந்தும், உங்கள் அன்பு என்னை மிகவும் மகிழ்வித்துள்ளது, மேலும் எனது எல்லா ஆசீர்வாதங்களையும் நான் உங்களுக்கு வழங்குகிறேன்.**"

பாபா தமது கரங்களைக் கூப்பி வணங்கினார். பல இராணுவ மற்றும் பொதுத்துறை அதிகாரிகள் தங்கள் குடும்பத்தினருடன் அங்கு வந்திருந்தனர்; ஆதி சிலரை பாபாவை சந்திக்க மேடைக்கு அழைத்து வந்தார். அவர்களில் ஒருவர் அஹமதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (D.S.P.) டி.எஸ். ஸோமன் (D.S. SOMAN). 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை அவருக்கு வழங்கியதாக ஆதி, பாபாவிடம் தெரிவித்தார். "**புத்தகம் முழுவதையும் கவனமாகப் படித்தால், உண்மையான ஆன்மீகம் என்னவென்று உங்களுக்குத் தெரியும்**" என்று பாபா குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து பாபா, பிரசாதமாக விநியோகிக்க வேண்டிய இனிப்புகளைத் தமது கைகளால் தொட்டார். ஆரத்தி நிறைவடைந்ததும், பாபா கூறினார், "**நான் புறப்படுவதற்கு முன்னதாக, லதாவிடம் கஸல் ஒன்றைப் பாடுமாறு கேட்டுக்கொண்டேன். அதற்குப் பிறகு, நான் மண்டபத்தை விட்டு வெளியேறும்போது எவரும் என்னைத் தலை வணங்க முன்வரக்கூடாது.**"

லதா லிமாயே பாடிய பாடலை பாபா விளக்கினார்: "**ஒருவன் தெய்வீக அன்பின் மதுவை ஆழமாக அருந்தி, அனைத்தையும் மறந்து, கடவுளைத் தவிர வேறு எதையும் அறியாத அளவுக்கு போதையில் இருக்க வேண்டும் என்று அது கூறுகிறது. கடவுளை உணர, அந்த வகையான போதை தேவை!**" பாபா, லதாவைத் தழுவினார், நிகழ்ச்சி 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!'


என்ற கோஷத்துடன் நிறைவுக்கு வந்தது; பாபா காலை 10:15 மணியளவில் ஆதியின் காரில் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

அதே நாளில், ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் தமது மேற்கத்திய அன்பர்களுக்கு, கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்புமாறு பாபா அறிவுறுத்தினார்:

**எனது உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது, ஆனால் கிழக்கு-மேற்கு சகவாச நாட்களில் உங்கள் அன்பு எனக்கு ஆதரவாக இருக்கும். உங்களுடன் பயணிக்கும் அனைவருக்கும் இந்தத் தகவலைத் தெரிவிக்கவும்.**

1962 அக்டோபர் 23 செவ்வாய்க்கிழமை, பாபா, மெஹரா, மணி, கோஹெர், மெஹரு ஆகியோருடன் மெஹராஸாத்திலிருந்து பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்; நாஜா, ரானோ இருவரும் ஆண் மண்டலியுடன் இரண்டாவது காரில் சென்றனர். கோர்ஷெத், அர்னவாஸ், நரிமன், ஜிம் மிஸ்திரி ஆகியோர் மும்பையிலிருந்தும், பால் நாத்து குருதுவாடியிலிருந்தும் பூனாவிற்கு வந்து, அவர்களுடன் குருபிரசாத்தில் தங்கினர். குருபிரசாத்தில் ஒரு வாரம் தங்க அனுமதிக்கப்பட்டவர்களில் கிருஷ்ணா நாயரும் ஒருவர். பூனாவில் கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கான ஏற்பாடுகள் சில மாதங்களுக்கு முன்னரே தொடங்கிவிட்டன. மெஹர்ஜி, ஸரோஷ், ஜால்பாய், ஜெஹாங்கு ஸூகத்வாலா, மெஹர்வான் ஜெஸவாலா ஆகியோர் மேற்கத்தியர்கள் வெவ்வேறு ஹோட்டல்களில் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து, கண்காணித்து வந்தனர். ராமகிருஷ்ணன் மற்றும் பிற பூனா சேவகர்கள் பல்வேறு நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், தர்மசாலைகளில் கிழக்கத்தியர்களுக்காக இதையே செய்து வந்தனர்.

5,000 நபர்களுக்கும் அதிகமானோர் அமரும் வகையில், குருபிரசாத்திற்குப் பின்னால் அமைந்த மண் வயலில் 300X90 அடி அளவில் ஒரு பெரிய கூடாரம் கட்டி எழுப்புவதை ஷிண்டே மேற்பார்வையிட்டார். அக்டோபர் 24 அன்று, பாபா அதை ஆய்வு செய்ய வந்தார். பந்தலின் தெற்கு முனையில், உயரமான, பெரிய மேடை ஒன்று கட்டப்பட்டு, அதில் பாபாவிற்கு ஒரு நாற்காலியும் போடப்பட்டது. குருபிரசாத்தின் முன் நுழைவாயிலில், சாலை ஓரத்தில் ஒரு நீண்ட கூடாரம் எழுப்பப்பட்டிருந்தது, அதன் கீழ், மக்கள் ஒவ்வொரு நாளும் தரிசனத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் வந்தால் காத்திருக்க முடியும் வகையில் அமைந்திருந்தது. இந்தக் கூடாரத்தின் குறுக்கே ஒரு சிறிய மருத்துவமனையும், மருத்துவப் பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிக்க மூன்று மருத்துவர்களும் நியமிக்கப்பட்டனர்: பெண்மணிகளுக்கு டாக்டர் கம்லா பண்டாரி, கிழக்கத்திய ஆண்களுக்கு டாக்டர் ஹோஷங் பரூச்சா மற்றும் மேற்கத்திய ஆண்களுக்கு டாக்டர் டான்.



கிழக்கு-மேற்கு சகவாசம்,
பூனா, நவம்பர் **1962**
(EAST-WEST GATHERING,
POONA, NOVEMBER 1962)




குருபிரசாத்,
நவம்பர் **1962**
(GURUPRASAD,
NOVEMBER 1962)

எரச், பெண்டு இருவரும் எல்லா ஏற்பாடுகளுக்கும் தேவையான தங்கள் சிறப்பு அறிவுறுத்தல்களை வழங்கினர். அனைத்தும் சிறப்பான முறையில் செய்யப்பட்டது. பாபாவிடம் ஒவ்வொரு விவரமும் கலந்தாலோசிக்கப்பட்டு, மண்டலி மூலமாக, கடைசி நிமிட கட்டுமானப் பணிகளை அவர் ஆய்வு செய்தார். குருபிரசாத் அரண்மனையின் மகத்துவமும், அழகும், ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது, ஏனெனில் அதிலிருந்து வெளிப்படும் ஒளியானது, தெய்வீக மதுவின் பிரகாசத்தில் அதன் ஆதாரமாகத் திகழ்ந்தது!

ஆனால் இந்த விழாக்கோலத்தின் உற்சாகத்தையும் எதிர்பார்ப்பையும் அச்சுறுத்தும் வகையில் பாபாவின் தொடர்ந்த மோசமான உடல்நிலை இருந்தது. தசைப்பிடிப்பு இரவும் பகலும் குறையாமல் தொடர்ந்து, அவரை சோர்வடையச் செய்தது. மருத்துவர்களில் ஒருவரால் அவருக்கு தசை தளர்வுக்கான மருந்துகள் கொடுக்கப்பட்டன, ஆனால் பிடிப்புகள் நின்றபாடில்லை. கடந்த காலத்தைப் போலவே, பாபாவின் உடல்நிலை எந்த ஒரு வெகுஜன தரிசன நிகழ்ச்சிக்கும் சற்று முன்பு பாதிக்கப்பட்டது போல் இப்போதும் தோன்றியது. ஆழமான மனப்படிவங்களை அகற்றுவதற்கான அவரது உள் பணியின் வெளிப்பாடாக இது இருந்தது, அதைக் குறித்து நாம் அறிவது என்பது முடியாத காரியம்.

உலகின் இரு பெரும்பகுதிகளில் ஏறக்குறைய ஒரே நேரத்தில் பதற்றம் அதிகரித்து வந்தது கவலைக்கு மற்றொரு காரணம். இரண்டு கடுமையான நெருக்கடிகள் உருவாகிக் கொண்டிருந்தன - ஒன்று மேற்கில் அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே கியூபா (CUBA) மீதும், மற்றொன்று கிழக்கில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான பதற்ற நிலை.

பாபா மெஹராஸாத்திலிருந்து பூனாவிற்குப் புறப்பட்ட அந்த நாள் ‘கியூபா ஏவுகணை நெருக்கடி’ (CUBAN MISSILE CRISIS) என்று அறியப்படும் நாள். அக்டோபர் ஆரம்பத்தில், அமெரிக்க உளவு விமானங்கள், சோவியத், கியூபாவில் ஏவுகணைகளை நிறுவியிருப்பதைக் கண்டுபிடித்தன; அவை அணு ஆயுதங்களை அரைக்கோளத்தில் எந்த இடத்திற்கும் கொண்டு சென்று, அனைத்து முக்கிய அமெரிக்க நகரங்களையும் அழிக்கும் திறன் படைத்தவை. அக்டோபர் 24 அன்று, அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி (JOHN KENNEDY), கியூபாவிற்குள் நுழைய அல்லது வெளியேற முயற்சிக்கும் கப்பல்களை முற்றுகையிட அமெரிக்க கடற்படைக்கு உத்தரவிட்டார்; மேலும் அணு ஏவுகணைகள் அகற்றப்படாவிட்டால், கியூபா மீது அமெரிக்கா படையெடுக்கும் என்று அவர் அச்சுறுத்தினார். ஒரு சில நாட்களுக்கு, உலகம் அணு ஆயுதப் போரின் ஆயத்தத்தில் இருப்பதாகத் தோன்றியது, ஆனால் அக்டோபர் 28 அன்று அமெரிக்கா தனது முற்றுகையை முறியடித்து, கியூபா மீது படையெடுக்காது என்று உறுதியளிக்கும் நிபந்தனையின் பேரில், ரஷ்யர்கள் ஏவுகணைகளை அகற்ற ஒப்புக்கொண்டனர்,

அதே மாதத்தில், இந்தியா, சீனா இரு நாட்டிற்கும் இடையிலான இராணுவ மோதலின் சாத்தியக்கூறுகள் ஆபத்தான விகிதத்தை எட்டியதாகத் தோன்றியது. சீனா அதன் வடகிழக்கு எல்லைகளில் இந்தியாவைத் தாக்கியது

மற்றும் சீன வீரர்கள் இமயமலையைத் தாண்டி கீழே தள்ளப்பட்டனர். வேறு எந்த நாடுகளும் இதில் பங்கேற்றிருந்தால், அது இரண்டாம் உலகப் போரின் போக்கில் உலக மோதலாக மாறியிருக்கலாம்.

மனோகர் ஸாக்கரே டெல்லியில் அமைந்த அமைச்சரவை செயலகத்தில் (இராணுவப் பிரிவு) கூட்டு உளவுத்துறை அதிகாரிகளில் ஒருவராகப் பணிபுரிந்தார், மேலும் பணிச்சுமை மிகவும் அதிகமாகவும் தீவிரமாகவும் இருந்தபோதிலும், எல்லையில் அறிவிக்கப்படாத போர் சார்ந்த சூழ்நிலையிலும், பூனாவில் நடந்த கூட்டத்திற்கு அவர், அக்டோபர் 26 அன்று வர முடிந்தது. அவரும் அவரது மனைவியும் குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தபோது, அன்பான அரவணைப்பு, அவர்களின் பயணம் மற்றும் நலம் பற்றிய விசாரணைக்குப் பிறகு, பாபா அவர்களிடம் அமருமாறு கூறினார். ஒரு குறும்புத்தனமான புன்னகையை வெளிப்படுத்தி, ஸாக்கரேயிடம் பாபா, "**உங்களுக்காக இங்கே ஒரு தொலைத்தந்தி வந்துள்ளது, நீங்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். எனவே திரும்பிச் செல்ல வேண்டிய கட்டாயம்**" என்று கூறினார்.

பாபா அவர்களை பூனாவிற்கு வர வைத்ததால், அவர்களைக் குறைந்தது சில நாட்களுக்கு இங்கே இருக்க அனுமதிக்குமாறு பாபாவிடம் ஸாக்கரே கண்ணீர் மல்க மன்றாடினார். ஒளிர்ந்த புன்னகையுடன், பாபா அவர்களை நவம்பர் 4ஆம் தேதி வரை தங்க அனுமதித்து, "**ஆனால் நீங்கள் 5ஆம் தேதி திரும்பிச் சென்றாக வேண்டும்**" என்று கூறினார். ஸாக்கரே மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்.

சில தினங்களுக்குப் பின்னர், இந்திய விமானப் படை வீரர்கள் சிலர், மனோகர் ஸாக்கரேயைத் தேடி குருபிரசாத்திற்கு வந்து, வெறித்தனமாகக் குரல்கொடுத்து அழைத்தனர். பாபா உடனே ஸாக்கரேயிடம், "**அவர்கள் வந்திருக்கிறார்கள். உங்களைக் கைவிலங்கிட்டு அழைத்துச் செல்வார்கள்!**" என்றார்.

ஸாக்கரே அவரிடம், "இல்லை, பாபா..." என்று கெஞ்சத் தொடங்கினார், ஆனால் பாபா, அவரை விரைவாகச் சென்று இராணுவ அதிகாரிகளை சந்திக்கும்படி சைகையால் தெரிவித்தார்.

ஸாக்கரேயின் டெல்லி அலுவலகத்திலிருந்து அவரை உடனடியாகத் திரும்புமாறு கட்டளையிட்டு மற்றுமொரு தகவல் வந்திருந்தது. பாபா அவரிடம் கூறினார், "**அமைதி, அமைதியாகக் காத்திருங்கள், இப்போது அவர்கள் உங்களைப் பார்த்துக் கொள்வார்கள்!**" ஆனால் முன்னும் பின்னுமாக பல தகவல் பரிமாற்றங்களுக்குப் பிறகு, பாபா ஏற்கனவே அறிவித்ததற்கு இணங்க ஸாக்கரே தம்பதியினர் 5ஆம் தேதி திரும்பிச் சென்றனர்.

அக்டோபர் 28 அன்று காலை, மனோகர் ஸாக்கரே, பாபா மற்றும் மண்டலியுடன் அமர்ந்திருந்தபோது, பாபா அவரிடம், "**நம் எல்லையில் என்ன நடக்கிறது?**" என வினவினார்.

ஸாக்கரே பதிலளித்தார், “சீனர்கள் இமயமலையின் குறுக்கே குவிக்கப்படுகிறார்கள், மேலும் மலை அடிவாரத்தில் எங்களுக்கு மிகுந்த அழுத்தம் தருகிறார்கள். அவர்கள் விரைவில் வங்காள சமவெளியில் வந்து அஸ்ஸாமிலிருந்து இராணுவத்தை துண்டித்துவிடுவார்கள்.”

பாபா சாதாரணமாகக் கைகளை அசைத்து சைகையால் தெரிவித்தார், “**அவர்கள் சமவெளியில் இறங்க மாட்டார்கள், திரும்பிச் செல்வார்கள்.**”

மனோகர் ஸாக்கரே சந்தேகக் கண்களால் பார்த்தார்; வெற்றியை சந்திக்கும் எந்த ஓர் இராணுவமும் ஒருபோதும் பின்வாங்காது என்று நினைத்தார்; மேலும் அவர்களைப் பின்னுக்குத் தள்ளும் இராணுவ வலிமை இந்தியாவிடம் நிச்சயமாக இல்லை. கிழக்கு-மேற்கு சகவாச ஆயத்தப் பணிகளில் மும்முரமாக இருந்து, பாபாவின் கூற்றை அவர் முற்றிலும் மறந்துவிட்டார், ஆனால் அது உண்மையாகிவிட்டது.

அரசியல் மற்றும் இராணுவ மோதல்கள் காரணமாக, மேற்கத்திய அன்பர்கள் இந்தியாவிற்கு பயணம் செய்வதில் சிக்கல் ஏற்படும் என்ற கவலை இருந்தது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆஸ்திரேலியாவிலிருந்து கப்பலில் பயணம் செய்தவர்களில் சிலர், கொழும்பிலிருந்து புறப்படும் விமானம் ரத்து செய்யப்பட்டதால், மும்பைக்கு வேறு கப்பலில் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலையில், ஆஸ்திரேலிய குழுவில் ஒரு பகுதியினர் மட்டும் ஒரு நாள் தாமதமாக வர நேர்ந்தது. உள்நாட்டு விமான நிறுவனங்கள், இராணுவ வீரர்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை போர் முனைக்கு விரைந்து, கொண்டு செல்வதில் முழு வீச்சில் ஈடுபட்டன.

1962 அக்டோபர் 27 அன்று குருபிரசாத்தின் சிறிய மண்டபத்தில் கராச்சி, கொல்கத்தா, மும்பை ஆகிய இடங்களிலிருந்து ஏற்கனவே வந்திருந்த சுமார் 100 அன்பர்களை பாபா சந்தித்தார். மஹாராணி ஷாந்தாதேவியும் உடனிருந்தார்.

அக்டோபர் 28ஆம் தேதிக்கு முன், பூனாவிற்கு வர வேண்டாம் என்று மேற்கத்திய அன்பர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், சிலர் முன்னதாகவே வந்திருந்தனர். முதன்முதலாக வந்தவர் நியூயார்க் நகரின் உட்ஸ்டாக்கிலிருந்து (WOODSTOCK, NEW YORK) 31 வயது அமெரிக்கர் டாம் ரைலீ (TOM RILEY). டாம் முதன்முதலில் பாபாவை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, மர்டில் பீச் மையத்தில் அவரது மனைவி இவான் ஆண்ட்ரவ் (YVONNE ANDRAU) உடன் சந்தித்தார். டாம் கப்பலில் இந்தியாவிற்குப் பயணம் செய்து, தரிசனத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு பூனா வந்தடைந்தபோது, நடைமுறையில் அவரிடம் பணம் எதுவும் இல்லை. 28ஆம் தேதி மதியம் குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்ட அவர், பாபாவின் முன்னால் மண்டியிட்டு, மடியில் தலை வைத்து சாய்ந்தார். பாபா அவரிடம், “**இன்று நீங்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று உங்களுக்குத் தெரியாது. கிழக்கு-மேற்கு சகவாசத்தின் திரையை நீங்கள் விலக்கிவிட்டீர்கள்**” என்று கூறினார்.

டாம், பாபாவுடனான சந்திப்பை விவரிக்கிறார்:

நான் தனிமையில் இருந்தேன். மர்மமாக ஓர் அமைதி ஊடுருவி, புனிதமாக மாறி, என்னை ஆட்கொண்டது. பிரார்த்தனையில் கைகளைக் கூப்புவது போல் எனது கைகள் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்ததைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். புனிதத்தன்மை என் மீதும், எனக்குள்ளிருந்தும் வந்ததைக் கண்டேன். அது எங்கும் வியாபித்திருந்தது. உலகம் உண்மைக்குப் புறம்பானதாகவும், அதே நேரத்தில் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும், தெய்வீகமாகவும் மாறியது. இந்த நிலையில், மண்டலி மண்டபத்தின் திறந்த கதவுகளை நோக்கி குருபிரசாத் மண்டபத்தின் படிக்கட்டுகளில் ஏறினேன்.

நான் அறையை நெருங்கியதும் மங்கலான வெளிச்சம் தெரிந்தது; இடதுபுறம் இருந்த தரைவிரிப்புகளில் ஆண்கள் அமர்ந்திருந்ததை நான் தெளிவின்றி பார்க்க முடிந்தது. நான் உள்ளே நுழைந்ததும் அவர்களின் பார்வை இருந்த திசையை நோக்கித் திரும்பினேன். மெஹர் பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரிடமிருந்து ஒளிக்கதிர்கள் வெளிவந்த வண்ணம் தோற்றமளித்தார். அவரது கண்கள் வெள்ளியைப் போல மின்னியது. என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அவர், ஒரே நொடியில் என்னில் இருந்த அவரது புனிதத்தன்மையின் மிகையான வெளிப்பாடுகளை துடைத்தெறிந்தார்; இப்போது, மீண்டும், நான் அவர் முன் நிற்கும் அந்த நேரத்தில், புத்துணர்வு மிக்க, தீவிரமான துக்கம் மற்றும் விரக்தியின் அலைகள் என்னை ஆட்கொண்டது. இந்த நிலையில், பகுத்தறிவிலிருந்து துண்டிக்கப்பட்ட நான், அவர் முன் மண்டியிட்டு, எனது நெற்றியை அவரது முழங்கால்களில் வைத்து, அழுதேன். அவர் மெதுவாக முனகியபடி எனது தலையை வருடி, மகத்தான தடைகளைத் தாண்டி, என்னுள் ஆழமாகச் சென்றடைந்து, ஆன்மீக ரீதியில் என்னைத் தொட்டு, எனது துயரத்தை சீர்படுத்தி, என்னுடன் ஐக்கியத்தை உருவாக்கினார்.

காலமற்ற கணங்கள் கடந்தன. பின்னர், ஒரேயடியாக, எனது கண்கள் அவரது சட்டைக்கை விளிம்பில் இருந்த ஓர் அசாதாரணமான ஜரிகை வேலைப்பாடு மீது விழுந்தது; அன்பின் உழைப்பு, சந்தேகத்திற்கு இடமின்றி அவரது பெண் மண்டலி ஒருவரால் உருவாக்கப்பட்டது. இந்தக் கைவினைத்திறனின் நேர்த்திதான் என்னை இப்போது, இந்த தருணத்திற்கு கொண்டு வந்தது.

பாபா, டாமிடம் கேட்டார், **"நீங்கள் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?"**

டாம் பதிலளித்தார், "ஆம், பாபா, நான் அதை மூன்று முறை படித்தேன்."

**"அதன் சாரத்தை சுருக்கமாகச் சொல்ல முடியுமா?"**

"முழுப் படைப்பின் மூலம், ஆன்மா உங்களிடம் திரும்பிச் செல்லும் பாதையைக் கண்டுகொள்ளும்." பாபா தனது வலது கை விரல்களால் பரிபூரணத்தின் அடையாளத்தை உருவாக்கினார்.

பாபா, '**டாம் என்ன பணிபுரிகிறார்**' என்று கேட்டார். டாம் முழுநேர கலைஞராக இருக்க ஆசைப்பட்டார், ஆனால் இவ்வாறு பதிலளித்தார், "நான் ஒரு

ஆசிரியராக இருக்க வேண்டியவர், அமெரிக்காவில் கல்வி மிகவும் தரமற்றதாக உள்ளது.”

பாபா தலையசைத்து, “**நீங்கள் இல்லம் திரும்பிச் சென்றதும், என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவீர்கள்**” என்றார்.

டாம் மூன்று வருடங்களாக போதைப்பொருள் (கஞ்சா, HASHISH) புகைத்துக் கொண்டிருந்தார், அதைப் பற்றி பாபா அவரிடம் கேட்டார், “**நீங்கள் மீண்டும் புகைபிடிக்காமல் இருப்பது நல்லது. புகைபிடித்தல் உங்களுக்கு மிகவும் மோசமானது. அது மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் தீங்கு விளைவிக்கும்**” என்றார். (பின்னர், கூட்டத்தின் தொடக்க நாள் காலையில், பாபா, டாமிடம், “**நீங்கள் தொடர்ந்து போதைப்பொருள் பயன்படுத்தி புகைபிடித்தால், அதுவே உங்கள் முடிவாக இருக்கும். நான் உங்களுக்காக எதுவும் செய்ய முடியாது**” என்று மீண்டும் கூறினார்.)

பாபா அவரது அன்பின் தன்மையை விளக்கத் தொடங்கி, இறுதியில் கூறினார்: “**உங்களைச் சுற்றி நீங்கள் பார்க்கும் இந்த உலகம் முற்றிலும் உண்மையற்றதாக மாறும் அளவுக்கு நீங்கள் நேசிக்க வேண்டும்**”

அடுத்து என்ன நடந்தது என்று டாம் கூறுகிறார்: “அந்தத் தருணங்களில் (பாபாவின்) அன்பின் அழகு என் இதயத்தில் மிகவும் வழக்கத்திற்கு மாறான விதத்தில் பதிந்திருந்தது, நான் ஒரு தனி ஆளுமையாக இல்லாமல் போனேன், அந்த நேரத்தில், ‘கடவுளே!’ என்று கூறி, நான் எனது தலையை அவரது பாதங்களில் அழுத்தி அவர் முன்னால் வீழ்ந்தேன்.”

இது கிட்டத்தட்ட இரண்டாவது முறையாக, ஒரு காலை சந்திப்பில் பிற மேற்கத்திய அன்பர்கள் வந்தபோது நடந்தது. பாபா கூறினார்: “**நான் வழங்கும் இந்த அன்புடன் எதையும் ஒப்பிட முடியாது. இது அனைத்தையும் அர்ப்பணம் செய்யத் தயாராக இருப்பவர்களுக்கு மட்டுமே. இதில் எந்த சமரசமும் இருக்க முடியாது**.”

டாம் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: “பாபா கூறியது, பல நாட்களுக்கு முன்பு மண்டலி மண்டபத்தில் (குருபிரசாத்தில்) அவர் எனக்கு வெளிப்படுத்தியதுடன் மிகவும் தெளிவாக தொடர்புடையது. என் இதயம் வேகமாகத் துடித்தது. அந்த வினாடியில் இந்த அன்பின் தீவிரத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் மிகவும் வலுவாக உணர்ந்தேன். அந்த நொடியில், 300 பேருக்கு நடுவில் அவர் கூறியதற்கு செவிமடுத்து, அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அங்கிருந்தவர்கள் எவரும் அறியாத விதத்தில், அவர் ஒரு கடுமையான பார்வையுடன் எனது கண்களைப் பற்றிக்கொண்டு, என் மனதில் தெளிவாக எடுத்துரைத்தார்: ‘அன்பை வெளியளவில் காட்ட வேண்டாம்!’”

டாம் ரைலீ வந்ததைத் தொடர்ந்து, லண்டனிலிருந்து ஃப்ரெட் மார்க்ஸ் (FRED MARKS) மற்றும் சக ஆங்கிலேயர் ஒருவரும், அடுத்ததாக, அமெரிக்காவின் பிரைனர் (ஜிம்மி) மெல் - BRYNER (JIMMY) MEHL, எனிட் கோர்ஃப் (ENID CORFE) மற்றும் லண்டனைச் சேர்ந்த டிலியா டிலியோன் (DELIA DeLEON) ஆகியோரும் வந்தனர். அமெரிக்காவிலிருந்து 100 அன்பர்கள், ஆஸ்திரேலியாவிலிருந்து 33,

ஐரோப்பாவிலிருந்து 17 பேர், இஸ்ரேலிலிருந்து கேரி பென் ஷம்மாய் (CARRIE BEN SHAMMAI), பாகிஸ்தானிலிருந்து 50, ஈரானிலிருந்து 4 பேரும் வந்தனர். மேலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏறக்குறைய 3,500, பூனா, அஹமதுநகர் மற்றும் மும்பையிலிருந்து 1,500 பேரும் வருகை தந்தனர். நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கிழக்கு-மேற்கு சகவாசம் கடைசியாக நடைபெறவிருந்தது.

1956 ஆகஸ்ட் மாதத்தில், லாஸ் ஏஞ்சலஸ் நகரில், 25 வயதான பிரைனர் மெல், தனது நடனப் பயிற்சியாளரிடமிருந்து 'கடவுள் பேசுகிறார்' (காட் ஸ்பீக்ஸ் - GOD SPEAKS) புத்தகத்தின் நகலை அடையப்பெற்ற போது, மெஹர் பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்டார். பிரைனர் மேலதிக தகவல்களுக்காக அவரை அணுகிய போது, அவரது பயிற்சியாளர் அவரை மற்றுமொரு மாணவரான ஜாய்ஸ் ராம்னீயிடம் (JOYCE ROMNEY) அனுப்பி வைத்தார். பிரைனரின் ஆர்வத்தைக் கண்டு வியந்த ஜாய்ஸ், "நீங்கள் பாபாவைத் தவறவிட்டீர்கள்! அவர் நேற்றுமுன்தினம் லாஸ் ஏஞ்சலஸிலிருந்து புறப்பட்டுச் சென்றார்" என்று கூறினார். ஜாய்ஸ், மால்கம் ஸ்க்லோஸுக்கு அறிமுகமானவர், அவர் தன் ஆசிரியருடன் ரூஸ்வெல்ட் ஹோட்டலில் (ROOSEVELT HOTEL) பாபாவை சந்திக்க நேர்ந்தது. அவர் பிரைனர் மெலிடம் ஸூஃபி தத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டார்; இறுதியில் ஸான் ஃபிரான்சிஸ்கோவிற்குச் (SAN FRANCISCO) சென்று ஐவி டியூஸின் (IVY DUCE) கீழ் ஸூஃபியாக வழிநடத்தப்பட்டார். 1958ஆம் ஆண்டில் மர்டில் பீச் மையம் வருவதற்கு பொருளாதார சிக்கல்கள் இருந்ததால் இயலவில்லை, அன்றிலிருந்து பாபாவை சந்திக்கும் ஆர்வத்துடன் இருந்தார்.

பிரைனர் கட்டாயத்தின் பேரில், அமெரிக்க இராணுவத்தில் இணைந்த போது, ஜெர்மனி நாட்டில் நிலைநிறுத்தப்பட்டார். பாபா அவரது திட்டத்தை மாற்றிக்கொண்டதை அறியாத பிரைனர், ஜூன் மாதம் இந்தியா வர, பல வாரங்களாக முயற்சித்தும் தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று. அவர் தனது விரக்தியை தொலைத்தந்தி மூலம் பாபாவிற்கு விளக்கிய போது, அவர் இவ்வாறு பதிலளித்தார்: "**நீங்கள் வரமுடியாததற்கு உங்களில் எந்தத் தவறும் இல்லை. இந்த சோதனையில் நீங்கள் சிறப்பான வெற்றியைக் கண்டீர்கள். என்னை சந்திக்கும் வேளையில் அனைத்தையும் ஈடுசெய்யும் விதத்தில் மேலதிக வெற்றியை சந்திப்பீர்கள்!**"

கிழக்கு-மேற்கு சகவாசத்திற்காக விரைவில் இந்தியா வருவதை பிரைனர் மெல் திட்டமிடவில்லை. ஜெர்மனியிலிருந்து, அவர் தனது பயணத்திற்கு முன்னர் ஓய்வெடுக்க சில நாட்கள் பாரிஸ் சென்றார். ஆனால் 'கியூபா ஏவுகணை நெருக்கடி'யால் (CUBAN MISSILE CRISIS) போர் நிகழலாம் என்ற செய்தி வானொலியில் ஒலிபரப்பப்பட்டபோது, இராணுவ எச்சரிக்கை மூலம் திரும்ப அழைக்கப்படுவார் என்று அஞ்சினார். அனிதா வைய்லார்டின் (ANITA VIEILARD) ஆலோசனையின் பேரில், அவர் அடுத்த விமானத்தில் இந்தியாவிற்கு பயணம் செய்து, தரிசனம் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தரையிறங்கினார். பிரைனர் மெல் பூனாவில் நேப்பியர் ஹோட்டலில் (NAPIER HOTEL) தங்கியிருந்தார். மறுநாள் காலையில், ஃபிரான்சிஸ் பிராபஸோன் வந்து,

அன்று மதியம் பாபா அவரைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். ஃபிரான்சிஸ் வெளியேறிய சற்று நேரத்தில் திரும்பி வந்து, பாபா உடனடியாக பிரைனர் மெலைப் பார்க்க விரும்புவதாகக் கூறினார். பாபாவுடனான தனது முதல் சந்திப்பைப் பற்றிய பிரைனர் மெலின் விளக்கம் பின்வருமாறு:

கார் குருபிரசாத்தை நெருங்கியபோது, யாரோ எனது மூளையைத் தலையிலிருந்து வெளியே எடுப்பது போல் உணர்ந்தேன்! என்னால் சிந்திக்க முடியவில்லை. நான் உண்மையில் வெறுமையாக உணர்ந்தேன், அதாவது எனது தலையில் ஒரு வெற்றிடக் குழாயைப் பொருத்தி, எனது மூளையை உறிஞ்சுவது போல் இருந்தது. நாங்கள் வந்ததும், ஃபிரான்சிஸ் என்னை வாயிலை நோக்கிச் சுட்டிக்காட்டினார், நான் தடுமாறினேன். காலணிகளைக் கழற்றச் சொன்னார். நான் வாசலுக்கு வந்தேன், அவர் 'உள்ளே செல்லுங்கள்' என்றார். நான் உள்ளே பார்த்தபோது, எனக்கு முன்னால் வலதுபுறம் ஆண்கள் அமர்ந்திருந்தனர். பாபா இடதுபுறம் இருந்ததை அறிந்தேன், ஆனால் என்னால் எதையும் பார்க்க முடியவில்லை. நான் முற்றிலும் உறைந்து போயிருந்தேன். என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரம், எனது மூளை, அனைத்தும் நின்றுவிட்டது. எரச், "நீங்கள் அவரைத் தழுவிக்கொள்ளலாம் என்று பாபா கூறுகிறார்" என்ற வார்த்தைகள் எனது மெய்மறந்த தன்மையை விலக்கவே, என்னால் பார்க்க முடிந்தது.

பாபா மிகவும் சிறியவராக இருந்தார் என்பது எனது முதல் அபிப்ராயம். அவர் ஒரு சிறிய பறவை போல் இருந்தார். நான் அவரை எனது கையில் எடுத்து, அவரது இறகுகளைத் வருடியிருக்கலாம் என உணர்ந்தேன். மேலும் அவரது அதீத அழகு! அந்த நேரத்தில், அழகு என்றால் என்ன என்பதை நான் அறிந்தேன். பாபா ஒளிரும் புன்னகையுடன் அதி பிரகாசமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நான் அவரை நோக்கி நடக்கத் தொடங்கியதும், என் மனதில் பல எண்ணங்கள் அலை மோதின. நான் அவரை எப்படி அரவணைக்கப் போகிறேன் என்ற கவலையில் ஆழ்ந்தேன்; அவர் மிகவும் சிறியவராகவும் மென்மையாகவும் இருந்தார். நான் அவரை நசுக்கி விடுவேனோ என்று அஞ்சினேன். மேலும், எனது தலை அவருக்கு மேலேயா அல்லது கீழே இருக்க வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை. நான் முழங்கால்களில் மண்டியிட்டால் அவரைக் காயப்படுத்தி விடுவேனா? நிஜமாக எனது தலை சுழல்வது போல் இருந்தது. அதே சமயம், நான் இதுவரை பார்த்ததில் இவரே மிகவும் அழகானவர் என்பதை உணர்ந்தேன்.

நான் நெருங்க நெருங்க, அனைத்தும் மறைந்தது. பாபாவை சூழ்ந்திருந்த பொருளுலகம் மறைந்தது. அவர் ஒரு வகையில், முற்றிலும் தூய ஒளியின் வட்டத்தில் மிதந்து கொண்டிருந்தார். அனைத்தும் அவரிடமிருந்து வெளிப்பட்டது; அது என்னைத் திணறடிப்பதுபோலத் தோன்றியது. நான் அவரிடம் சென்றதும், இரண்டு கைகளும் வெளியே வந்து என்னை மிகவும் வலுவாக அணைத்துக் கொண்டன, நான் அவரை எப்படித் தழுவப் போகிறேன் என்ற எனது கவலைகள் அனைத்தையும் அது அகற்றியது. எனது வாழ்நாளில் இவ்வளவு வலிமையை

நான் இதுகாறும் உணர்ந்ததில்லை என்று நினைக்கிறேன். அந்தச் சிறிய பறவை மிகவும் வலிமையானது, உண்மையில் மிகவும் வலிமையானது.

பாபா என்னை அமரச் சொன்னார். நான் கதவை நோக்கி நேராகப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் உறைந்து போனதுபோல் உணர்ந்தேன். எனது முகத்தில் மலர்ந்த சிரிப்பில் நான் பரவசமானேன். பாபா என்னிடம் கேட்டார்: **"நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?"** நான் எனது முகத்தில் ஒரு மிகையான புன்சிரிப்புடன் பாபாவைப் பார்த்து (இன்னும் அதை என்னால் உணர முடிகிறது) 'ஆம்' என்று சொன்னதும், பாபா கைகளைத் தட்டி என்னைப் போகுமாறு உத்தரவிட்டார். நான் '**அவரை சந்திக்கும் போது, அது ஈடுசெய்யப்படுவதை விட அதிகமாக இருக்கும்**' என்று பாபா எழுதியிருந்ததன் அர்த்தம் அதுதான் என புரிந்து கொண்டேன்.

பாபாவுடனான இந்த முதல் தருணங்களின் நினைவுகள், உயிரோட்டம் நிறைந்ததாகவும் தெள்ளத் தெளிவாகவும் இருந்தது. அதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். எனது வாழ்க்கையில், அன்றிலிருந்து நான் மனதில் சந்தேகங்கள் எழும் போதெல்லாம், நான் அந்த ஆரம்ப கால அனுபவத்திற்குச் சென்றுவிடுகிறேன், அது என்னில் எந்த சந்தேகத்தையும் எப்பொழுதும் அகற்றிவிடும். அது செயற்கை முறையில் உருவாக்கப்பட்டதோ அல்லது போலி உணர்ச்சியை காட்டுவதாகவோ இல்லை. அது முற்றிலும் உண்மையானது. பாபாவுடனான இந்தத் தருணங்கள் மனதிலிருந்து மறைவதற்கு பதிலாக, மேலும் தெளிவாகத் தென்பட்டன. இதர அனைத்தும் வீழ்ச்சியை சந்திக்கத் தொடங்கின. அவை மிகவும் தீவிரமானவை, உண்மையானவை. நீங்கள் பாபாவுடன் இருந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் வாழ்நாள் முழுவதும் மிகவும் உண்மையற்றதாகத் தெரிகிறது.

பெரும்பாலான மேற்கத்திய அன்பர்கள் 1962 அக்டோபர் 30 அன்று வந்து, டர்ஃப் கிளப் (TURF CLUB), பூனா கிளப் (POONA CLUB) மற்றும் நேப்பியர் (NAPIER), வெல்லஸ்லி ஹோட்டல்களில் (WELLESLEY HOTELS) தங்க வைக்கப்பட்டனர். பாகிஸ்தான் அன்பர்கள் பூனா ரயில் நிலையம் அருகில் அமைந்த ரிட்ஸ் ஹோட்டலில் (RITZ HOTEL) தங்கினர். இந்திய பக்தர்கள், பாவே பெண்கள் பள்ளிக்கூடம் (BHAVE'S GIRLS SCHOOL), ஓர் அனாதை இல்லம் (AN ORPHANAGE) மற்றும் ஐந்து வெவ்வேறு திருமண மண்டபங்களில் (WEDDING VENUES) தங்கினர்.

அக்டோபர் 29 அன்று காலை, அவரது 15ஆவது பிறந்தநாளை ஒட்டி, ஜான் ஹெய்ன்ஸை (JOHN HAYNES) முதலில் பாபா குருபிரசாத்திற்கு அழைத்தார். ஆதி, டர்ஃப் கிளப்பிலிருந்து அவரை அழைத்து வந்தபோது, ஜான் ஹெய்ன்ஸ், பாபாவின் பிறந்தநாள் அரவணைப்புடன் வரவேற்கப்பட்டார்.

ஜான் அதை நினைவு கூர்ந்தார்:

1958இல் பாபாவை சந்தித்த பிறகு, தூங்கச் சென்று, மறுநாள் மீண்டும் பாபாவின் அரவணைப்பிற்காக எழுந்தது போல் இருந்தது. அந்த நான்கு வருடங்களும் கண் இமைக்கும் நேரத்தைப் போல கடந்து சென்றன. நான்

அவரை விட்டு ஒருபோதும் பிரிந்ததே இல்லை என்பது போன்ற நம்பமுடியாத உணர்வு என்னில் இருந்துகொண்டே இருந்தது. நான் அவரைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்; நான் அவரைத் தழுவி, அவரது கண்களைப் பார்க்கவும், அந்த அரவணைப்பை மீண்டும் உணரவும் விரும்பினேன்.

உண்மையில், ஜான் ஹெய்ன்ஸ் அடைந்த மகிழ்ச்சியில், அவர் பாபாவிடமிருந்து பின்வாங்கி, அமர முயன்றபோது, பரோடா மஹாராணியின் மீது ஏறக்குறைய தடுமாறி விழுந்து விட்டார்! பாபா அந்த இளைஞனைப் பார்த்து, பெருமையுடன் கைகளை மெதுவாக உயர்த்தி, **"உங்களைக் கடைசியாகப் பார்த்ததிலிருந்து நீங்கள் எவ்வளவு உயரமாக வளர்ந்துள்ளீர்கள். என்னிடம் கேட்க ஏதேனும் கேள்விகள் உள்ளனவா? நீங்கள் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?"** என வினவினார். அறிவார்ந்த கேள்விகள் அடங்கிய பட்டியலுடன் ஜான் இந்தியாவிற்கு வந்திருந்தார், ஆனால் பாபாவைப் பார்த்ததும், அவருடைய எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது. பின்னர் அவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

எனது மனம் நிச்சயமாக வெறுமையாய் போனது போல் இல்லை. என்னிடம் எந்தக் கேள்வியும் இல்லை என்று நான் நேர்மையாக சொல்ல முடியும். கேட்பதற்கு எதுவும் இல்லை. அது எந்தவிதமான குழப்பத்தையும் ஏற்படுத்தவில்லை. வெறுமனே எதையும் கேட்க வேண்டிய தேவையுமில்லை. பாபா அவற்றை வேரோடு அகற்றிவிட்டார்.

அந்தக் குறுகிய கணநேரத்தில், பாபா முதன்முறையாக அவருடைய அதிகாரம், சக்தி, பலம் ஆகியவற்றைப் பார்க்க அனுமதித்தார்; அதேசமயம், முன்பு, நான் அவரை அனைத்து அன்பாலும் நிறைந்த, இயேசுவைப் போலப் பார்த்தேன். அவர் முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதை நான் கண்டேன், மேலும் அவரிடம் ஒரு முழுமையான புரிதல், ஒரு தெய்வீகப் பணி இருப்பதை நான் அறிந்தேன்; அதை நாம் பல கூட்டங்களில் உரையாடினோம், ஆனால் அறிவுபூர்வமாக புரிந்துகொள்வதில் எனக்குப் பெரும் சிக்கல் இருந்தது. அவர் என்னை ஒரு கணம் அதைப் பார்க்க அனுமதித்தார்; அதன் விளைவாக, எனது கேள்விகள் முற்றிலும் மறைந்துவிட்டன. நான் அவர் கைகளில் இருப்பதை அறிந்தேன், அவர் கைகளில் நான் இருந்ததால், எந்தக் கல்லூரியில் சேர்ந்து பயிலப் போகிறேன் அல்லது வேறு எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை என்பதை நான் உணர்ந்தேன்.

ஜான் ஹெய்ன்ஸ் புன்முறுவலை மட்டுமே வெளிப்படுத்தி, "இல்லை பாபா, உங்களுடன் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என்னிடம் எந்தக் கேள்வியும் இல்லை" என்றார். பாபா பிரகாசமாக ஒளிர்ந்து, "**அது நல்லது**" என்று சைகையால் தெரிவித்தார். பாபா, அவருக்கு பிறந்தநாள் பரிசாக ஒரு பொட்டலம் இனிப்பு மிட்டாய்களை வழங்கி, ஆதியுடன் டர்ஃப் கிளப்புக்கு அனுப்பிவைத்தார்.

டயன் (3-பி) டிம்ப்ஃபில் மறுநாள் காலை அழைக்கப்பட்டார். மேலும் சிலருக்கும் 30ஆம் தேதி அழைப்பு விடுக்கப்பட்டது. ஃபிலிஸ் ஃபிரடெரிக் (FILIS FREDERICK) டாலர் நோட்டுகளை ரூபாயாக மாற்றுவதற்காக வங்கிக்குச் சென்றதால், பாபாவின் அழைப்பைத் தவறவிட்டார். நடந்ததை அறிந்ததும், குருபிரசாத்திற்கு விரைந்தார்; பிற அனைவரும் ஏற்கனவே வந்து சென்றனர். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்த பாபாவுடனான முதல் சந்திப்பை ஃபிலிஸ் இவ்வாறு விவரித்தார்:

நான் உள் மண்டபத்திற்குள் நுழைந்தபோது, வெகு தொலைவிலிருந்து நான் முதலில் பார்த்தது பாபாவின் கண்களிலிருந்து பிரகாசித்த வெண்ணிற ஒளி - அது ஒரு சூரியனைப் போல மென்மையாகவும், அதி பிரகாசமாகவும் தோன்றியது; மேலும் கூட்ட நெரிசலான சகவாச நாட்களில் பின்பு வெளிப்படுத்திய அன்பானவரின் அனைத்து காட்சிகளிலும், பாபாவின் அந்த முதல் அற்புதமான காட்சி அல்லது பார்வை இப்பொழுதும் என் மனதில் ஆழமாகப் பதிந்தது நினைவிருக்கிறது. அவருக்குப் பிரியமான, நன்கு அறியப்பட்ட இளஞ்சிவப்பு நிற ஜாக்கெட் மற்றும் வெள்ளை நிற சத்ரா அணிந்து, அவர் ஸோஃபாவில் தனியாக அமர்ந்திருந்தார்.

ஃபிலிஸ், பாபாவைத் தழுவி அவரது கன்னத்தில் முத்தமிட சாய்ந்தார். பாபா அப்போது, "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**" என வினவினார்.

ஃபிலிஸ் தலையசைத்தார், "உங்களைப் பார்த்ததில் மகிழ்ச்சியாக இருக்கிறேன்!"

அவர் இடுப்பில் ஏற்பட்ட காயம் குறித்தும், அவருடைய பயணம் எப்படி இருந்தது என்றும் பாபா கேட்டார். ஃபிலிஸ் பெண் மண்டலியைச் சந்தித்தார், பாபா அவரிடம், "**நான் எப்படி இருக்கிறேன்?**" என வினவினார்.

"அழகாக," ஃபிலிஸ் பதிலளித்தார். அவர் பின்பு கூறினார்: "நான் அமைதியானேன், எனது கண்கள் அந்தப் பிரியமான, அடிக்கடி நினைவுகூரும் அவரது முகத்தின் ஒவ்வொரு மெல்லிய கோடுகளிலும் பயணித்தது." பின்பு பாபா அவரிடம் புறப்படுமாறு சைகையால் தெரிவித்தார்.

பிற்பகலில் மேற்கத்திய அன்பர்கள் பூனாவைச் சுற்றியுள்ள பல்வேறு சிறப்பு இடங்களான பாபாவின் குழந்தைப் பருவ இல்லம் (BABA'S CHILSHOOD HOME), ஸஸூன் மருத்துவமனை (SASSOON HOSPITAL), ஸெயின்ட் வின்ஸென்ட் பள்ளிக்கூடம் (ST VINCENT'S SCHOOL), டெக்கன் கல்லூரி (DECCAN COLLEGE) மற்றும் பல இடங்களுக்கு பேருந்துகள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அன்றைய தினம், சுவிட்சர்லாந்தில் வாழும் ஐரீன் பில்லோவிற்கு (IRENE BILLOW) பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்; அவர் உடல்நலக்குறைவு காரணமாக வரமுடியாத சூழ்நிலை: "**உங்கள் அன்பு என்னுடன் இங்கே இருக்கும் போது, நான் உங்களுடன் அங்கே இருக்கிறேன்.**"

பாபாவின் இந்தக் கூற்றை உண்மையில் அலென் ஏல் (ALAIN YOUELL) அனுபவித்தார்; அவர் இந்தியாவிற்கு வர திட்டமிட்டிருந்தார், ஆனால் பிரஸல்ஸ்

(BRUSSELS) நகரில் நோய்வாய்ப்பட்டார். சகவாச வாரத்தில் ஓர் இரவு, அவர் சோகமாகவும், மனச்சோர்வுடனும் படுக்கைக்குச் சென்றார். ஆனால் நள்ளிரவில் திடீரெனக் கண்விழித்த போது, பாபா தனது படுக்கையின் அருகில் கைகளை விரித்த வண்ணம், முகத்தில் அற்புதமான புன்னகையுடன் நிற்பதைக் கண்டார்! பாபாவின் உடல் தோற்றம் மறைவதற்கு முன்னர், ஏறக்குறைய பதினைந்து நிமிடங்கள் அவர் அதைப் பார்க்க முடிந்தது.

கிழக்கத்திய மக்கள் 1962 அக்டோபர் 31ஆம் தேதி புதன்கிழமை வரத் தொடங்கினர்; பூனா மையத்தின் வரவேற்புக் குழு அவர்களின் பல்வேறு தங்குமிடங்களுக்கு வழிகாட்டி உதவினர்.

பாபா-அன்பர்களின் இந்த வரவேற்பும் வழிகாட்டுதலும் நிகழ்ச்சியின் இறுதி நாள் வரை இரவும் பகலும் தொடர்ந்தது. அனைத்து தங்கும் இடங்களிலிருந்தும் குருபிரசாத்திற்குத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு, சேவகர்கள் அனைத்தையும் நிர்வகித்து வந்தனர். அனைவருக்கும் வெவ்வேறு கடமைகள் ஒதுக்கப்பட்டன, மேலும் அனைவரும் இரவும் பகலும் அவர்களுடன் மும்முரமாக இருந்தனர்.

அன்று காலை, மேற்கத்திய பெண்களின் தனித்தனி சிறு குழுக்கள் குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டன. ஜீன் ஷா (JEANNE SHAW), எல்லா வின்டர்ஃபெல்ட் (ELLA WINTERFWLDT), அடெல் வோல்கின் (ADELE WOLKIN), ஃபிலிஸ் ஃப்ரெட்ரிக் (FILIS FREDERICK) ஆகியோர் முதலில் காலை 9:30 மணிக்கு வந்தனர். பாபா அவர்கள் ஒவ்வொருவரையும் அரவணைத்துக் கொண்டார். பெண் மண்டலி மற்றும் அர்னவாஸ், மஹாராணி ஷாந்தாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். மணி, பாபாவின் சைகைகளை விளக்கிக் கொண்டிருந்தார்.

பாபா, ஃபிலிஸிடம் கேட்டார், "**இப்போது உங்கள் இடுப்பு எப்படி உள்ளது**?" நன்றாக இருப்பதாகக் கூறி, பாபாவின் இடுப்பைப் பற்றி ஃபிலிஸ் கேட்டதற்கு, அவர், "**அப்படியே இருக்கிறது**" என்று சைகையால் தெரிவித்தார்.

சத்ராவைத் தனது கைகளில் பிடித்து காட்டிய வண்ணம், எல்லா வின்டர்ஃபெல்ட்டைச் சுட்டிக் காட்டி கூறினார், "**எனது மேலங்கியை (தாமன்) இறுக்கமாகப் பற்றிப் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் நான் நன்றாக இருக்கிறேன் என்று கூறுகிறீர்கள், ஆனால் நான் இந்த** (உலகின்) **முழுச் சுமையையும் தாங்கிக்கொள்கிறேன்**."

அடுத்ததாக ஜீன் ஷா (JEANNE SHAH), பாபாவை வாழ்த்த வந்தபோது, அவரைத் தழுவுவதற்காக மண்டியிட்டு முழங்கால்களில் விழுந்த போது, பாபா அவரை நீண்ட நேரம் அரவணைத்தார். ஜீன் மாரடைப்பால் தாக்கப்பட்டதைக் குறித்து விசாரித்தார், "**சகவாசத்திற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு நடந்தது**?" ஜீன் நான்கு நாட்கள் என்று கூறினார். அவர் தைரியமாக இந்த நிகழ்ச்சிக்கு வந்ததில் பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்தார். மிகுந்த அன்புடன் ஜீன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார், பாபா அவர் முகத்தை தனது கைகளில் ஏந்தி கன்னத்தில் முத்தமிட்டார்; ஜீன் திரும்ப அவரை முத்தமிட்ட போது, அவரது

காதணி பாபாவின் மடியில் விழுந்தது, அவர் அதை எடுத்து ஜீனிடம் கொடுத்து மீண்டும் அவரை முத்தமிட்டார்.

ஜீன் ஷா, பின்னர் இதைக் குறித்து இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "இது உண்மையில் எனது வாழ்க்கையின் மகிழ்ச்சியான நாட்களில் ஒன்றாகும். அந்த அளவிலா மகிழ்ச்சியில், காற்று அதனுடன் அதிர்ந்தது; மேலும் அன்பின் அலைகளால் நானும் அதிர்வதை உணர்ந்தேன். பல பெண்களைப் போலவே நானும் வெதுவெதுப்பாக, கண்ணீர் மல்க, மகிழ்ச்சியாக உணர்ந்தேன்."

மார்கரெட் கிராஸ்கே, எலிஸபெத் பேட்டர்ஸன், ஐவி டியூஸ், கிட்டி டேவி, டிலியா டிலியோன், எனிட் கோர்ஃப், அனிதா வைலார்ட், ஜேன் ஹெய்ன்ஸ், கேரி பென் ஷம்மாய் உட்பட, ஆஸ்திரேலியாவிலிருந்தும் பல பெண்மணிகள் வந்தனர். அனைவரையும் அரவணைத்த பிறகு, பாபா, "**நாளை சொற்பொழிவுகள் வழங்கப்படும். அனிதா உஷாராக இருக்க வேண்டும்! 'நான்கு இறைப் பயணங்கள்'** (FOUR JOURNEYS) **பற்றிய உரை ஒரு புதிய விஷயம் - பல சொற்பொழிவுகளை உள்ளடக்கிய 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்'** (THE EVERYTHING AND THE NOTHING) **என்ற புதிய புத்தகம் ஒன்று வெளிவர உள்ளது. அது டெனிஸ் ஓ'பிரையன் என்ற ஆஸ்திரேலிய நண்பரால் வெளியிடப்படும்; நான் இந்தப் பொறுப்பை ஐவிக்குக் கொடுக்கவில்லை! ஐவியின் மனம் முற்றிலும் நிரம்பி உள்ளது!**" பாபா, ஐவியின் பிரச்சினைகளைக் குறித்து கேலி செய்து கொண்டே இருந்தார், ஆனால் ஐவி அதை நல்ல நகைச்சுவையாக எடுத்துக் கொண்டார்.

பாபா எவ்வளவு அற்புதமாகத் தோன்றுகிறார் என்று அடெல் கூறியபோது, "**நான் வெளியளவில் நன்றாகத் தெரிகிறேன், ஆனால் உள்ளே எரிமலை போல் இருக்கிறேன். உலக சூழ்நிலை என்னில் அதீத பாரத்தை திணித்துள்ளது. இயேசு கிறிஸ்து துன்பப்பட்டார்; நானும் துன்பப்படுகிறேன்**" என்று பதிலளித்தார்.

அன்று, ரஷ்யர்கள் தங்கள் ஏவுகணைகளை கியூபா நாட்டிலிருந்து வெளியேற்ற ஒப்புக்கொண்டதாக செய்தித்தாள்களில் அறிவிக்கப்பட்டது. பாபாவின் கண்கள் மின்னல் போல் ஒளிர்ந்தது; அவர் அணு ஆயுதப் போரைத் தடுத்ததாகத் தெரிவித்தார்.

**அது மயிரிழையில் உயிர் பிழைத்தது போலப் பட்டும் படாமலும் இருந்தது! முழு உலகமும் உறுதியற்ற நிலையில் ஊசலாடிக்கொண்டிருந்தது. நீங்கள் பெர்லின் நகரைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள். நீங்கள் கவலைப்பட வேண்டியது பெர்லின் அல்ல; அது கியூபா. கியூபாவின் நிலைமை எனக்கு ஒரு பயங்கரமான சோதனையை ஏற்படுத்தியுள்ளது. அது எவ்வளவு தீவிரமானது என்று உங்களுக்குத் தெரியாது.**

**தற்போது சீனா, இந்தியா மீது படையெடுத்துள்ளது. குறடு ஒன்றில் சிக்கிய கொட்டை நான்! சீனர்கள் எனது குழந்தைகள், இந்தியர்கள் எனது குழந்தைகள். நீங்கள் எந்த நேரத்திலும் சீனர்களை நமது வாயிலில் காணலாம், எனவே ஜாக்கிரதையாக இருங்கள்.**



எலிஸபெத் பேட்டர்ஸன், எரச்; கிழக்கு-மேற்கு  சகவாசம், நவம்பர் **1962**
(ELIZABETH PATTERSON, ERUCH; EAST-WEST GATHERING, NOVEMBER1962)

**1962க்குப் பின்னர், எல்லாமே தலைகீழாக மாறும். மூன்றாம் உலகப்போர் முன்பு நடந்த இடத்தில் நடக்காது. போர் இங்குத் தொடங்கி, அருகில் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பரவும். இந்தக் குளிர்காலத்தில் சீனர்கள் பின்வாங்குவார்கள், ஆனால் அவர்கள் பனி உருகிய பிறகு திரும்பி வருவார்கள். ஆனால் இறுதியில் இந்தியா வெற்றியை சந்திக்கும்.**

சொற்பொழிவுகளுக்குத் திரும்பிய பாபா தொடர்ந்து விளக்கினார்:

**எவ்வளவுதான் கற்றறிந்தாலும் அது இறையுணர்வை கொண்டுவராது! இறையுணர்வு திடீரென வருவது. கடவுளே அன்பு, எல்லையற்ற அன்பு, இந்த உலகம் ஒன்றுமில்லை. நேற்று என்பது கடந்துவிட்டது; இது எதுவும் இல்லை. எதிர்காலமும் எதுவும் இல்லாதது. நீங்கள் அந்த இறை உணர்வை அடையப் பெற்றதும், எல்லாம் மறைந்துவிடும்; இனி எதுவும் இல்லை. அது அனைத்தும் ஒன்றுமில்லாதது, மாயை, மாயத்தோற்றம் என்று ஒருவன் உணர்கிறான்.**

**கடவுள் ஏக இறைவனாக ஒருவரே என்றாலும், பல பிரிவுகள் உள்ளன. ஏன் இத்தனை பிரிவுகள்? அனைத்திற்கும் காரணம் மாயை மற்றும் மாயையைக் குறித்த நமது அறியாமை.**

'கனவுகள்' (DREAMS) மற்றும் 'மாயத்தோற்றங்கள்' (ILLUSIONS) பற்றி கூறுகையில், பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், போதைப்பொருளுக்கு அடிமையாகி, அதை இப்போது கைவிட்ட அமெரிக்க நண்பர் ஒருவரைப் பற்றி பாபா அங்கிருந்தவர்களிடம் குறிப்பிட்டார். '**அந்த சூழலிலிருந்து வெளிவருவதில் சிரமங்கள் பல இருந்தபோதிலும், அந்த நண்பர் மீண்டும் போதைப்பொருளைப் பயன்படுத்தவில்லை.**'

அதே சந்தர்ப்பத்தில், மது பிரச்சினையால் பாதிக்கப்பட்ட டோரோதியா ஃபுட் (DOROTHEA FOOTE) என்பவரிடம் பாபா, "**உங்கள் கோப்பையை தெய்வீக அன்பின் மதுவால் நிரப்புங்கள்; பிறகு, நீங்கள் வேறு எதையும் அருந்த விரும்ப மாட்டீர்கள்**" என்று கூறினார். இந்நிலையில் அந்தப் பெண்மணி மது அருந்துவதை முற்றிலுமாக கைவிடவில்லை; இருப்பினும், அவரது கணவர் நெட் ஃபுட் (NED FOOTE) 'ஆல்கஹாலிக்ஸ் அநாநிமஸ்' (ALCOHOLICS ANONYMOUS) என்ற அமைப்பில் தீவிரமாகச் செயல்பட்டார்.

பாபா அங்கிருந்த அனைவரிடமும், அவரவர் உடல்நிலையைக் கவனித்துக் கொள்ளுமாறு எச்சரித்தார், ஆனால், "**நீங்கள் என்னுடன் இருப்பதால் நீங்களும் துன்பப்பட வேண்டியிருக்கும்**" என்றும் சுட்டிக்காட்டினார். (பின்னர் அவர்களில் சிலர் வயிற்று வலி மற்றும் ஜுரத்தால் அவதியுற்றனர்.)

மெஹரா மற்றும் பிற பெண் மண்டலியை இதுவரை சந்திக்காதவர்கள் அவ்வாறு செய்தனர்; அதைத் தொடர்ந்து, பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு பேருந்துகள் மற்றும் கார்களில் அனைவரும் ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அன்று மதியம் பாபா மேற்கத்திய ஆண் அன்பர்களை குருபிரசாத்திற்கு தமது அரவணைப்பிற்காக அழைத்தார். சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM), **1958**ஆம் ஆண்டு மர்டில் பீச் மையத்தில் சந்தித்த பிறகு, முதல்முறையாக அன்று மதியம் அவரைப் பார்த்தபோது, பாபாவைப் பற்றிய தனது எண்ணங்களை இவ்வாறு பதிவு செய்தார்:

நான்கு வருடங்களுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, பாபாவை மீண்டும் சந்தித்தபோது, அவர் பெரிதும் மாறியிருந்ததைக் காணமுடிந்தது. முன்னெப்போதையும் விட இப்போது அவர் ஒரு துன்பகரமான மனிதராக இருந்தார். அவரது வெளிப்பாடு பிரகாசமாகவும், அவரது கண்கள் எப்போதும் போலக் கூர்மையாகவும் இருந்தன; மேலும் அவரது விழிப்புணர்வு குறையவில்லை என்று தோன்றியது, ஆனால் அவர் உள்வாங்கப்பட்ட நிலையில் காணப்பட்டார், பெரும்பாலான நேரம் அவர் வெகு தொலைவில் உற்று நோக்கிய வண்ணம், உலகிற்கு சொந்தமானவர் அல்ல என்பது போலத் தோற்றமளித்தார். அவர் தொடர்ந்து புன்முறுவல் செய்துகொண்டே கேலி செய்யும் தயார் நிலையில் இருந்தார்; அவருடைய நகைச்சுவை உணர்வு அவரை விட்டு விலகவில்லை, ஆனால் நான் முன்பு கவனிக்காத ஒரு குறிப்பிட்ட அலட்சியம் தென்பட்டது. அனைத்திற்கும் மேலாக, ஒரு பெரிய சோகம் என்னை விசித்திரமாக அதிரச் செய்தது. அவர் நடந்து சென்றபோது, பெரிதும் சிரமப்பட்டு நகர்ந்ததை ஒருவர் காணமுடிந்தது.

நியூயார்க் நகரிலிருந்து மார்கரெட் க்ராஸ்கேயின் நண்பர் பட்டி ரோஸின் (BUDDY ROSSIN), முதல் முறையாக பாபாவை சந்தித்தார். பாபா அவரிடம் முதலில் கேட்ட '**உங்கள் காது எப்படி உள்ளது?**' என்ற கேள்வி அவரைத் திடுக்கிடச் செய்தது. அவர் போரில் ஏற்பட்ட காயத்தால் ஒரு காது செயலிழந்து இருந்தார், ஆனால் எவரிடமும் ஒருபோதும் சொன்னதில்லை.

செப்டம்பர் மாதத்தில், ஜோஸஃப் ஹார்ப் மாரடைப்பால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் அருகில் சென்றபோது பாபா, "**மாரடைப்பு வந்தபோது எனது பெயரை ஏன் உச்சரிக்கவில்லை?**" என்று கேட்டார். ஜோஸஃபும் பாபாவின் சர்வ ஞானத்தைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்தார், ஆனால் பாபா, தன்னை கண்காணித்துக் கொண்டிருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

22 வயதான கேரி முல்லின்ஸ் (GARY MULLINS), ஸான் பிரான்சிஸ்கோ நகரில், பாபாவைப் பற்றி ஒரு வருடத்திற்கு முன்னர், ஐவி டியூஸ் மூலமாக (ஐவியின் பொட்டலம் ஒன்றை எடுத்துச் செல்ல வந்தவர்!) ஒரு தற்செயலான, எதிர்பாராத சந்திப்பில் பாபாவை கண்டுகொண்டார்: "பாபா அழகான ரோஜாவைப் போலத் தோன்றினார். அவர், எனது வாழ்க்கையில் நான் பார்த்த மிக அழகான மனிதர். அவரை சந்தித்தது அழகியல் பரிபூரணத்தின் அனுபவமாக இருந்தது."

எரச் அவரது பெயரை அழைத்தது போது, கேரி முன் வந்தார்:

நான் மெஹர் பாபாவை முதன்முதலில் சந்தித்த அந்த சில தருணங்களை மீண்டும் ஒருமுறை அனுபவிக்க முடிந்தால், எனது வாழ்க்கையில் அனைத்தையும் விட்டுவிடுவேன், 'அனைத்தையும்' என்றால் அதன் உள்ளார்ந்த அர்த்தத்தில் அனைத்தையும் கைவிடுவேன் என்று நான் சொல்கிறேன். இந்தியாவில் அவருடன் இருக்கும் இந்தத் தருணம் ஓர் அரிய, அற்புதமான ஞாபகம்... எரச் மூலம் நாங்கள் பாபாவிற்கு அறிமுகமானோம். அவருடைய இருக்கையிலிருந்து - எந்த வார்த்தைகளையும் கடந்து என்னால் விவரிக்க முடியும் அளவுக்கு - மிக எளிய முறையில், ஒரு குழந்தையைப் போல் என்னை அழைத்தார்.

நான் அவரை நோக்கி நடந்தேன், அவர் என்னை அழைத்து, கீழே இழுத்து, அரவணைத்தது என்னில் என்றென்றும் ஆழமாகப் பதிந்தது. அவருடனான நெருக்கம் அந்த அணைப்பை முழுவதுமாக அனுபவிக்கச் செய்தது. அதே நேரத்தில், அவரது அரவணைப்பு தனிப்பட்டதாக இல்லாமல் முற்றிலும் ஆத்மார்த்தமானதாக இருந்தது. சில நொடிகள், நான் வேறு ஓர் உலகில், அமைதியான இளஞ்சிவப்பு மற்றும் நீல நிற மேகத்தில், வானத்தில், வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாததை விட மிக உயரத்தில் இருந்தேன். அப்போது ஒரு மங்கலான ஒளி, ஆனால் இப்போது அது என்னில் முழுமையான தீவிரம் அடைந்த நிலையில், எனது தந்தை, தெற்கு பசிஃபிக் போரிலிருந்து வீடு திரும்பியதை, ஸான் டியாகோவில் தெரு ஓரத்தில் அமர்ந்து, சிறுவயதில் நான் உணர்ந்ததைத்தான், இந்த நேரத்தில் பாபாவிடமிருந்தும் உணர்ந்தேன். அது என்னை அடக்கி ஆளும் ஒளியாகவும், முழுநிறை அன்பாகவும் இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் வளமுடன் பெருகும் ஒரு நித்திய தருணத்திற்கு, நான் என் உண்மையான தந்தை அவதார் மெஹர் பாபாவுடன், சொந்த இல்லத்தில் இருப்பது போன்ற நல நிறைவுடன், சௌகரியமாக உணர்ந்தேன்.

இதற்கிடையில், அமெரிக்க தேசத்தில், வர்ஜீனியாவின் ஹாம்ப்டன் நகரில் (HAMPTON, VIRGINIA), ஹென்றி கஷௌட்டியின் (HENRY KASHOUTY) மனைவி கெச்சா (KECHA) கர்ப்பமாக இருந்ததால், இந்தியாவிற்கு வர முடியவில்லை. ஹென்றியை சந்தித்து அவரது மனைவியைப் பற்றிக் கேட்டபோது, பாபா தமது வயிற்றைத் தடவிக்கொண்டிருந்தார்.

பாபா ஒவ்வொருவரையும் தனித்தனியாக அரவணைத்த பின்னர், ஒருவர் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாக மாறுவது பற்றிக் கேட்டதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**"நீங்கள் கடவுளுக்கு அடிமையாகிவிட்டால், உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும், நீங்கள் அவருடன் ஐக்கியமாகும் வரை, இறை அன்பின் மதுவை அருந்திக்கொண்டே இருங்கள். கடவுளுடன், கடவுளின் அன்பிற்கு அடிமையாக இருப்பது நல்லது."**

பாபாவின் சைகைகளை விளக்கிய எரச், "முழு உலகின் பாரத்தையும் தலையில் சுமந்துகொண்டு, எல்லையற்ற சோர்வுடன் இருப்பதாக பாபா கூறுகிறார். இந்த நான்கைந்து நாட்களுக்குள் அவர் எல்லாவிதமான துன்பங்களையும் அனுபவித்தார். ஒரு ஆபத்து தவிர்க்கப்பட்டது (கியூபா ஏவுகணை பிரச்சினை), ஆனால் இன்னும் இரண்டு பிரச்சினைகள் அவரை எதிர்கொள்கின்றன (சீனா மற்றும் இந்தியா)."

பாபா தொடர்ந்து விளக்கினார்:

அன்பு என்றால் என்ன என்பதை அறிந்த ஒருவர், உள்ளுக்குள் மேலும் மேலும் ஆழமாக நுழைந்து, அங்கு நான்கு இறைப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கண்டுகொள்கிறார். இந்தப் பயணத்திற்கு விண்வெளியோ, ஆகாயமோ தேவையில்லை; ஆனால் இது ஓர் எல்லையில்லா செயல்முறை.

'துன்பங்களை எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதை பாபா அறிவார்' என்று இயேசு கிறிஸ்துவிற்கு மட்டுமே தெரியும். எனது மௌனத்தைக் கலைக்க, என்னை விட வேறு எவரும் ஆர்வமாக இல்லை. நான் அதைச் செய்த அடுத்த கணமே, அனைத்தும் எளிதாகிவிடும்.

கடவுள், உங்கள் வாழ்க்கையின் உயிர் மூச்சை விட ஒவ்வொருவருடனும் மிகவும் நெருக்கமாக இருக்கிறார். உங்களின் 'நான்' எனும் சுயம் உட்பட அனைத்தையும் துறக்க வேண்டும்; அப்போது நீங்கள் பாபாவை முழுமையாக உணர்வீர்கள். கடவுள் மதத்திற்கு அப்பாற்பட்டவர், அன்பிற்கும் அப்பாற்பட்டவர். நீங்கள் கடவுளை தீவிரமாக நேசிக்கத் தொடங்கும்போது, உண்மையான பிரிவு என்னவென்று உங்களுக்குத் தெரியும். உங்களிடம் அன்பின் பரிசு இருக்கும்போது, ஏக இறைவனான உண்மைப்பொருளை (பரமாத்மாவை) நீங்கள் நேசிக்கிறீர்கள். பொய்யும் போலியுமான 'நான்' எனும் சுயம் பின்னர் உண்மைப்பொருளான பரமாத்மாவாக மாறுகிறது. கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை.

உங்கள் இதயங்களை முழுவதுமாக தூய்மைப்படுத்துங்கள் - எந்த ஒரு கறையின் சுவடும் இல்லாமல், ஆசைகள் இல்லாமல், இறைவனுடன் ஐக்கியத்திற்கான ஆசையும் இல்லாமல் - விழிப்புடன் இருங்கள். அதுதான் ஒரே தீர்வு.

நான் என் அன்பர்களுக்குச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன்: சடங்கு சம்பிரதாயங்கள் வேண்டாம், என்னை மட்டும் நேசியுங்கள். யுகங்களுக்குப் பின் யுகங்கள் வந்து செல்கின்றன, ஆனால் அவர்கள் எல்லையில்லா இறைப்பெருங்கடலைக் கண்டுகொள்ளும் வரை, கடவுளை அன்புடன் வணங்க வேண்டும் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். இருந்தாலும், அவர்கள் கடவுளை வெளியே தேடி அலைகின்றனர்.

உரையின் தலைப்பை மாற்றி, பாபா கூறினார்: "**நான், இங்கு வர விரும்பியவர்கள், ஆனால் அவ்வாறு செய்ய முடியாத அனைவருடனும் இருக்கிறேன்.**"

மேலும்: "**உங்களுக்கு என் உண்மையான அரவணைப்பை வழங்குவதானால் என்னவாகும் என்று தெரியுமா? ஒருவேளை நான் உங்களை நசுக்கி, எனது காலடியில் தூசியாக ஆக்கிவிடுவேன். உண்மையான அரவணைப்பை உங்களுக்கு வழங்கினால் நீங்கள் வெடித்து சிதறிவிடுவீர்கள். கிறிஸ்து இந்த அரவணைப்பை பீட்டருக்குக் கூட வழங்கவில்லை.**

"**எனது நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழிந்தால் மட்டும் போதாது. அது அனைத்து அன்புடனும் நம்பிக்கையுடனும் செய்யப்பட வேண்டும். நீங்கள் என்னை மேலும் மேலும் நேசிக்க வேண்டும். என்னை நேசிப்பதன் மூலம் மனிதன் கடவுளாக முடியும் என்பது உண்மைதான். ஹ:ஃபீஸ் கூறினார்:**

**நீங்கள் கடவுளோடு ஐக்கியமாக விரும்புவது உங்களின்**
**முட்டாள்தனம் என எடுத்துக்கொள்ளுங்கள்!**
**அவரை நேசிப்பதில் நீங்கள் அந்த அளவுக்கு வெறித்தனமாக**
**இருந்தால், பரிபூரண குருநாதரின்**
**பாதங்களில் தூசி ஆகி விடுங்கள்!**

சமீபத்திய உலகளாவிய நெருக்கடிகள் மற்றும் பூனாவில் பொழிந்த கனமழை இரண்டையும் குறிப்பிட்டு, பாபா கூறினார், "**மேகங்கள் சிதறிவிடும்; நெருக்கடியும் முடிவுக்கு வரும்.**" கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் ஏறக்குறைய ஒன்றாக இணைத்து, "**ஆனால் அது ஒரு முழு அளவிலான அணு ஆயுதப் போருக்கு வழி வகுக்கும் நிலையில் இருந்தது**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஃப்ரெட் மற்றும் எல்லா வின்டர்ஃபெல்ட் (FRED & ELLA WINTERFELDT) இந்தியாவிற்கு வரும் வழியில் ஜெனீவா நகரில் தரையிறங்கி, அங்கு அவர்கள் மேக்ஸ் மற்றும் கிஸேலா ஹெஃப்லிகரை (MAX & GISELA HAEFLIGER) சந்தித்தனர். ஹெஃப்லிகர் தம்பதிகளால் கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்து கொள்ள முடியவில்லை, ஆனால் ஃபிரெட், மேக்ஸின் அன்பின் செய்தியை பாபாவிடம் தெரிவித்தபோது, அவர் புன்னகையால் ஒளிர்ந்தார்.

அந்த மகத்தான தினத்திற்காக ஆயத்தமாகும் சிந்தனையின் ஓட்டத்தில் ஆண்கள் ஓய்வெடுப்பதற்காக தங்கள் ஹோட்டல்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

மேகங்கள் கலைந்து செல்வதை பாபா கவனித்திருந்தாலும், அன்று இரவு பேரளவில் மழை பொழிந்து பந்தலுக்குள் மழை நீர் கசிந்து நாற்காலிகளை நனைத்தது. அன்று மதியம் நிகழ்ச்சி தொடங்க இருந்தது, பாபா சேவகர்களிடம்,

**“நான் சர்வ வல்லமை படைத்தவன், ஆனால் உதவியற்றவன். மழையை உங்களால் மட்டுமே நிறுத்த முடியும்”** என்று கூறினார்.

எப்படி என்பதை அவர் விளக்கவில்லை, ஆனால் அதிர்ஷ்டவசமாக 1962 நவம்பர் 1 அன்று காலையில் மழை நின்றது. அன்று அதிகாலையில் பல சரக்கு வாகனங்களில், ஈரமான நிலத்தில் நிரப்ப, மண் கொண்டு வரப்பட்டது. நாற்காலிகள் துடைக்கப்பட்டு உலர்ந்து, மதியத்திற்குள் அனைத்தும் தயார் நிலையில் இருந்தது. சிவப்பு எறும்புகளும் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, முழுப் பகுதியிலும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்குமாறு பாபா, எரச்சிடம் தெரிவித்தார்; எறும்புகளைக் கொல்ல வேண்டாம் என்று அவர் ஒரு முறை கட்டளையிட்டிருந்தாலும், **“வரவிருக்கும் என் அன்பர்களின் அன்பு இந்த நேரத்தில் எறும்புகளை விட முக்கியமானது”** என்று குறிப்பிட்டார்.”

ஒவ்வொரு நாளும், காலை நேரங்கள் மேற்கத்திய அன்பர்களுக்காக ஒதுக்கப்பட்டன. காலை 9:00 மணியளவில், பல பேருந்துகள் வந்தன, 144 மேற்கத்திய ஆண்களும் பெண்மணிகளும் தங்கள் பிரியமானவரை சந்திக்க குருபிரசாத் மண்டபத்திற்குள் நுழைந்தனர். பாபா வெள்ளை நிற சத்ரா மற்றும் இளஞ்சிவப்பு கோட் அணிந்திருந்தார், அவருடைய புன்னகையின் கதிர்கள் அறை முழுவதையும் நிரப்பின. அவர் தமது அன்பர்களைச் சந்தித்தபோது, அவரது புன்னகை பிரகாசமாக ஒளிர்ந்தது, மேலும் அவரது கருணை மிகு பார்வை ஒவ்வோர் இதயத்தையும் ஊடுருவியது. ‘பாபா எப்படித் தூங்கி ஓய்வெடுத்தார்’ என்று வர்ஜினியா ரட் (VIRGINIA RUDD) கேட்டதற்கு, அவர் இவ்வாறு பதிலளித்தார், **“என்னால் இப்போது தூங்க முடியாது, தூங்கினால் அடுத்த 700 ஆண்டுகளுக்கு நான் எழுந்திருக்க மாட்டேன்!”**

அறிமுகங்கள் எதுவும் இல்லை. அவர்கள் பாபாவின் முன் நடந்து செல்ல, பாபா அவர்களைத் தழுவியபோது, ஒவ்வொருவரும் தனது பெயரை மொழிந்தனர். அவர் ஆஸ்திரேலிய கிளாரிஸ் ஆடம்ஸிடம் (CLARICE ADAMS) கூறினார், **“நீங்களும் அவ்வண்ணமே நலமாக இருக்கிறீர்கள் - ஈனா** - ENA (லெமன் - LEMMON) **கூட!”**

லியோனார்ட் வில்லோபியிடம் (LEONARD WILLOUGHBY) அவர், **‘1958ஆம் ஆண்டு மர்டில் பீச் மையத்தில் பாபாவுக்காகப் பாடிய பாடல் அவருக்கு நினைவிருக்கிறதா’** என்று கேட்டார்; ‘முழு உலகமும் அவரது கைகளில் உள்ளது’ (HE HAS GOT THE WHOLE WORLD IN HIS HANDS) என்ற பாடலை மீண்டும் பாடுமாறு கேட்டுக்கொண்டார். பாபா தனது உள்ளங்கையைக் காட்டி, **“உலகம் முழுவதும் என் உள்ளங்கையில் உள்ளது”** என்று சைகையால் தெரிவித்து, **“அதை நினைவில் கொள்ளுங்கள்”** என்று கூறினார். பாடலுக்குப் பிறகு, பாபா லியோனார்டைத் தழுவி, **“நாளை, அரவணைப்புகள் இராது; இல்லையேல், நாம் அரவணைப்பால் மட்டுமே முழு நாளையும் நிரப்பிவிடுவோம், நான் தளர்ந்துவிடுவேன்!”** என்றார்.

விவியன் அகஸ்டினி (VIVIAN AGOSTINI) தனது கணவர் லூயிஸுடன் (LOUIS) வந்திருந்தார், ஆனால், பாபாவை அவதார புருஷராக ஏற்றுக்கொள்ளும் தயார் நிலையில் விவியன் இன்னும் இல்லை. அவர் இந்தியா வர இணக்கம் தெரிவித்தார், ஆனால், "தன்னை கடவுள் என்று அழைக்கும் எந்த மனிதனுக்கும் முன்பாக நான் ஒருபோதும் மண்டியிட மாட்டேன்!" என்ற சபதத்துடன் வந்தார். பாபாவை சந்தித்த பின்னர், உடனடியாக அமெரிக்கா திரும்புவதற்கான தனது விருப்பத்தை அறிவித்தார், அவர் தனது கணவரிடம் இவ்வாறு குறை கூறி முறையிட்டார்: "பாபா என்னை உற்று கூடப் பார்க்கவில்லை, நான் அவருக்கு முன்னால் நின்றதை அவர் அறிந்துகொண்டாரா என்று கூட எனக்குத் தெரியவில்லை. என்னை ஒன்றுமில்லாத ஒன்றைப் போலவே நடத்தியதாக உணர்கிறேன்!

இருப்பினும், திடீரென ரானோ அவர் முன் தோன்றி, "விவியன் அகஸ்டினி! பாபா உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்றார்.

விவியன் அகஸ்டினி பின்பு நடந்ததை விவரித்தார்:

நான் பாபாவை அணுகி அவருடைய பாதங்களில் மண்டியிட்டேன், அவருடைய சைகைகள் அவர் எனக்கு ஒரு சிறப்பு அரவணைப்பை வழங்க விரும்புவதைக் குறித்ததாக நான் புரிந்துகொண்டேன். எந்த ஒரு தாயின் கைகளும் இத்தனை மென்மையாக இருந்திருக்க முடியாது; அவர் எனது தலையை கைகளில் ஏந்தி, எனது கண்களுக்குள் உற்று ஆழமாகப் பார்த்தார். என்னால் இவ்வளவுதான் சொல்ல முடிந்தது: "பாபா, நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்." பாபா உடனே, "**எனக்குத் தெரியும்**, **எனக்குத் தெரியும்**" என்பது போல் அவர் தலையை அசைத்தார்; நான் மிகவும் துக்கமடைந்து கைவிடப்பட்டதாக உணர்ந்த அந்த மாலைப் பொழுதின் எனது உண்மையான வேதனையைக் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்துகொண்டேன்.

மேலும், ஒரு பரந்த, முடிவற்ற களத்தில் உருகிப்போகும் விசித்திரமான உணர்வு என்னில் இருந்தது. அப்போது ஒரு பெரிய அளவிலான நீரோட்டத்தைத் தடுத்து நிறுத்தும் அணை திடீரென உடைந்தது போல கண்ணீர் பெருக்கெடுத்தது; கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கண்கள் குளமாகி எனது முகத்திலும், ஆடைகள் மீதும் கொட்டியது. நான் இப்போது அனுபவித்தது, பாபாவின் அன்பின் சூறாவளியின் விளிம்பு என்றால், அதன் மையம் எப்படி இருக்க வேண்டும்?

அந்த அனுபவத்தில் திகைத்துப் போன விவியன் அங்கிருந்து பாபாவின் அறைக்குள் நுழைந்தபோது, மணி அவரை வரவேற்றார். விவியன் தனது வாழ்த்துகளை வழங்குவதற்கு பதிலாக, "நான் ஒரு மனிதனின் கண்களை உற்று நோக்கி, அவர் கிறிஸ்து என்பதை அறிவேன் என நான் ஒருபோதும் அறிந்ததில்லை" என்று மட்டுமே ஆச்சரியத்துடன் கூற முடிந்தது.



மேற்கத்திய அன்பர்களுடன் ஒரு காலை சந்திப்பு

கீழே அமர்ந்திருப்பவர்: சார்லஸ் ஹெய்ன்ஸ், டாம் ரைலீ,

வெண்டி ஹெய்ன்ஸ், பிலி ஈட்டன், ஜேன் ஹெய்ன்ஸ்

நாற்காலியில் அமர்ந்திருப்பவர்: ஆன் கொஹனவ், ஃபிலிஸ், டார்வின் ஷா,

ஸெல்மா ஹாஸென், அனீஸ் ஹாஸென் (நிற்பவர்)

(A MORNING SESSION WITH WESTERNERS

SEATED ON THE FLOOR: ELLA WINTERFELDT, CHARLES HAYNES, TOM RILEY,

WENDY HAYNES, BILI EATON, JANE HAYNES

SEATED ON THE CHAIRS: ANNE KOHANOW, FILIS, DARWIN SHAH,

SELMA HASSEN, ANEECE HASSEN – STANDING)

1958இல் மர்டில் பீச் மையத்திலிருந்து குடிபெயர்ந்த பிறகு, ஜேன் ஹெய்ன்ஸின் நடிப்புத் திறனைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபடுமாறு பாபா உத்தரவிட்டார். ஜேன் அவருடைய மூன்று குழந்தைகளுடன் ('டிரையோ' - TRIO என்று பாபா அவர்களை அழைத்தார்) நியூயார்க் நகருக்கு இடம் பெயர்ந்தார்; அங்கு ஜேன் 'பிராட்வே' (BROADWAY) நாடகக் குழுவில் இணைந்தார். தனக்குப் பொருத்தமான பாத்திரங்களைக் கண்டுகொள்வதில் அவருக்கு வெகு நேரம் பிடித்தது; பல மாதங்கள் வேலையின்றி இருக்க நேர்ந்தது. அவர், பாபா முன் வந்ததும், குறும்புத்தனமான முகபாவத்துடன், "**சொல்லுங்கள் ஜேன், உங்களுக்கு ஏதேனும் வேலை கிடைத்ததா?**" என வினவினார்.

"உங்களுக்கு நன்றாகத் தெரியும் பாபா, எனக்கு எந்த வேலையும் இல்லை" என்ற எண்ணம் மனதில் தோன்றினாலும் அவர், "ஆமாம் - பாபாவின் வேலை!" என்று பதிலளித்தார். அவர் பாபாவைப் பற்றிய குழந்தைகளுக்கான புத்தகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

பாபா தனது நாற்காலியின் கைகளில் இரு கைகளையும் வலுவாக இரண்டு முறை அறைந்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கூறினார், "**அப்படியே ஆகட்டும் - அது எப்பொழுதும் பாபாவின் பணியாக மட்டுமே இருக்கும்**," மர்டில் பீச் மெஹர் மையத்தில் எலிஸபெத் பேட்டர்ஸனுக்கு எதிர்காலத்தில் ஒருவேளை உதவியாக இருக்கலாம் என்ற பாபாவின் சூசகமான குறிப்பு போலத் தோன்றியது.

பன்டி கெல்லி பெர்ன்ஸ்டீனிடம் (BUNTY KELLEY BERNSTEIN) பாபா கேட்டார், "**குழந்தை மார்கரெட்டை** (அவருடைய மூன்று மாத பெண் குழந்தை) **நினைத்து கவலைப்படுகிறீர்களா?**" அவர் இல்லை என்று கூறியபோது, பாபா, "**குழந்தையைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள், நீங்கள் அதைச் செய்வதானால், என்னால் கவலைப்பட முடியாது**" என்று கூறினார்.

டெக்ஸ் ஹைடவர் (TEX HIGHTOWER) எவ்வளவு மெல்லியதாக இருக்கிறார் என்று பாபா கருத்துத் தெரிவித்ததோடு, "**அவர் என்னை மிகவும் நேசிக்கிறார்**" என்று கூறினார்.

அவர் பென் ஹெய்மனிடம், "**நீங்கள் விழித்திருக்கிறீர்களா?**" (1958இல் மர்டில் பீச்சில் பென் அயர்ந்து தூங்கியதைக் குறிப்பிடுகிறார்.) பென், ஹாரி கென்மோர் இருவரையும் மேடையில் பாபா, தன் அருகில் அமருமாறு அறிவுறுத்தினார்.

டாக்டர். ஜேம்ஸ் அலென் சேம்பர்லன் முன்னிலையில் பாபா தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கூறினார், "**நீங்கள் பயணம் செய்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.**" டாக்டர் சேம்பர்லன் தூரத்து கிழக்கில் (FAR EAST) விரிவுரை ஆற்றி வந்தார், மேலும் பாங்காக் (BANGKOK) நகரில் குழுவுடன் விமானத்தில் இணைந்தார்.

ஸியாட்டிலின் வாரன் ஹீலியிடம் (WARREN HEALY OF SEATTLE), **"நீங்கள் அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்"** என்று பாபா குறிப்பிட்டார்.

பாபா அங்கிருந்த பலரிடம் '**அவர்கள் நன்றாகத் தூங்கினார்களா**' என்று கேட்க, சார்லஸ் பர்டம், "இல்லை" என்று பதிலளித்தபோது, **"நீங்கள் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தீர்களா?"** என்று பாபா கேட்டு, பின்னர் அவர் ஜோஸஃப் ஹார்பிடம் அவரது உடல்நிலை குறித்து விசாரித்தார்.

பாபா, ரத் வைட்டிடம் (RUTH WHITE, 93 வயதில் இந்தியாவிற்குப் பயணம் செய்த மூத்த மேற்கத்திய அன்பர்), **"என்னைத் தவிர வேறு எதையும் நினைக்காதீர்கள், அதனால் நீங்கள் பௌதீக உடலைக் கைவிடும்போது என்னுடன் இருப்பீர்கள்"** என்று குறிப்பிட்டார்.

பாபா ஆஸ்திரேலியாவின் டெனிஸ் ஓ'பிரையன் (DENIS O'BRIEN), பில் லே பாஜ் (BILL LE PAGE) ஆகியோரிடம் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை ஒப்படைத்தார்; ஓ'பிரையன், பில் லே பாஜின் உதவியுடன் அதை அச்சிடவிருந்தார். (பில் லே பாஜ் தனது முழு குடும்பத்துடன் வந்திருந்தார்.)

பாபா புத்தகத்தைக் குறிப்பிட்டு அனிதா வைலார்ட்டை கிண்டல் செய்தார், **"நீங்கள் அதைப் படிக்க மாட்டீர்கள். கடவுளைப் பற்றி நீங்கள் எதுவும் தெரிந்து கொள்ள விரும்பவில்லை! நான் என்ன சொன்னேன் என்பதைத் தெரிந்துகொள்ள குறைந்தபட்சம் அதைப் படியுங்கள்."**

மேற்கத்திய அன்பர்கள் சார்பாக கிட்டி, டிலியா இருவரும் அவருக்கு வழங்கிய 'ஸ்பார்க்ஸ் ஃப்ரம் மெஹர் பாபா' (SPARKS FROM MEHER BABA) என்ற சிறு புத்தகத்தின் 1,000 பிரதிகள் பரிசாக வழங்கப்பட்டதைப் பற்றி பாபா அனைவருக்கும் தெரிவித்தார். கூட்டத்தில் விற்கப்படவிருந்த இந்தக் குறும் புத்தகம், கிட்டியின் ஊக்கத்துடன் டிலியாவால் தொகுக்கப்பட்டது; இதற்கு, அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் அன்பர்கள் ஒன்றிணைந்து நிதியுதவி வழங்கினர். சார்லஸ் பர்டம் முன்னுரை எழுதி, திருத்தம் செய்ய உதவினார். அவர்கள் அளித்த அன்பளிப்பில் பாபா மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டு, பின்பு தொடர்ந்தார்:

**வாழ்க்கையின் நோக்கம் என்ன? கடவுளை நேருக்கு நேர் பார்த்து, அவரோடு ஐக்கியமாவதுதான். கடவுள் உளதாயிருக்கிறார் என்றால், நாம் அவரை பார்க்க வேண்டும்! அதுவே நம் ஒரே குறிக்கோள். கடவுளைக் காண, யோகாக்கள் எனப்படும் பல்வேறு வழிகள் உள்ளன. சிலர் தியானம் மற்றும் உள்ளளவில் குடிகொண்டிருக்கும் உண்மைப்பொருளின் மீது, முழு கவனம் செலுத்துவதன் மூலம் கடவுளைக் காண முயற்சி செய்கின்றனர். அது மிகவும் நீண்ட, நெடிய செயல்முறை. இத்தகைய முழு கவனம் செலுத்தும் செயல்முறை, உங்களை பிரியமான கடவுளிடமிருந்து பிரிக்கும் திரையை கிழித்து, உள்ளளவில் கடவுளைக் காண வழிவகுக்காது.**

**உலகம் முழுவதும் பல யோகிகள் உள்ளனர். அவர்களில் பலர் வெளியளவிலான வழிகளில் பேரின்பத்தை அடைய முயற்சித்து, போதைப்பொருட்களுக்கு அடிமையாகிறார்கள். அவர்களில் பலர் கஞ்சா** (மரிஜுவானா) **புகைக்கும் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். ஒன்று அல்லது இரண்டு முறை புகைத்த பின்னர், அவர்கள் ஒருவித உற்சாக உணர்வை அடையப் பெறுகிறார்கள்; அதன் பின்பு படிப்படியாக அதன் தாக்கம் மறைந்துவிடும். வெவ்வேறு வகையான யோகிகள், வெவ்வேறு வழிகளில் கடவுளைக் காணும் முயற்சியில் ஈடுபட்டு, இயற்கையாகவே வெவ்வேறு அனுபவங்களை அடையப் பெறுகிறார்கள். ஆனால் இவை அனைத்தும் உண்மையில் வேறு வேறு வகையான மாயத்தோற்றங்கள் மட்டுமே.**

**இவை அனைத்தும் மாயத்தோற்றங்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்றாலும், மக்களை ஏமாற்றி, அவர்களின் அனுபவங்களை விளம்பரம் செய்யும் போலி நபர்கள் பலர் உள்ளனர். ஏதோ சில அனுபவங்களை அடையப்பெறும் நோக்கத்தில், மக்கள் அவர்களின் சகவாசத்தில் வருவதால், அவர்களைப் பின்பற்றுபவர்களின் வட்டம் ஒன்று தானே உருவாக்கப்படுகிறது. அவர்கள் போதைப்பொருள் (கஞ்சா அல்லது ஓபியம்) நிரம்பிய புகைக் குழாயை, ஒவ்வொருவராக சுற்று வட்டத்தில் அமர்ந்து புகைக்கும்போது, அவர்களுக்கும்** (போதைப்பொருளால் தூண்டப்பட்ட) **'அனுபவங்கள்' ஏற்படத் தொடங்குகின்றன!**

**லட்சக்கணக்கானவர்களில் ஒருவர், இதுபோன்ற முழு கவனம் செலுத்துவதன் மூலம் கடவுளைத் தன்னுள் காண்கிறார்; பின்னர் அவருக்கு வெளியுலகைப் பொறுத்தவரை எதுவும் இல்லை; அவர் முழுவதுமாக உள்வாங்கப்பட்ட நிலையில் இருக்கிறார். இதுபோன்ற உண்மையான அனுபவத்தில் மூழ்கிய ஒரு யோகியால் கூட, பரிபூரண குருநாதரின் உதவியின்றி, தனது வாழ்க்கையின் ஒரே இலக்கான இறைவனை அடைய முடியாது. இது மிகவும் சிக்கலானது; யோகா பற்றிய புத்தகங்கள் அதை மேலும் சிக்கலாக்கியுள்ளன.**

**எவ்வளவுதான் படித்து புரிந்து கொண்டாலும், ஏக இறைவனான உண்மைப்பொருளை உணர முடியாது. நீங்கள் கடவுளை நேரடியாகக் காணும் நிலைக்கு உங்களை அழைத்துச் செல்ல வேண்டும். ஒரு பரிபூரண குருநாதரின் அருள் நிறைந்த பார்வையின் மூலம் அந்தத் திட நம்பிக்கையை அடையப் பெற்றால் மட்டுமே, நீங்கள் கடவுளோடு ஐக்கியமாகிறீர்கள்.**

பாபா, அனிதாவிடம், **"நீங்கள் கடவுளோடு ஐக்கியமாக விரும்புகிறீர்களா?"** என்று கேட்டார்.

அதற்கு அனிதா, "நான் உங்களையே பார்க்க வேண்டும்!" என்றார்.

பாபா புன்னகைத்தபடி அவரிடம் சிலாகித்தார், **"என்னை இங்கே பார்ப்பது, எனது உண்மை ரூபத்தைக் காண்பது - இரண்டும் ஒரே நேரத்தில் எப்படி சாத்தியம்?"** என வினவி தொடர்ந்தார்:

**எளியதொரு விஷயம் எவ்வளவு சிக்கலானது பாருங்கள்! நான் உங்களுக்கு சூசகமான குறிப்பு ஒன்றை வழங்குகிறேன். வாழ்வின் இறுதி இலக்கை அடைய எளிதான வழி அனைத்தையும் விட்டுவிட்டு அன்பின் மூலம் என்னைப் பின்பற்றுவது. நீங்கள் உங்கள் வீட்டையும் குடும்பத்தையும் விட்டுவிட்டு இங்கே வர வேண்டும் என்று நான் கூறவில்லை! அதை மட்டும் செய்யாதீர்கள்!** (அனைவரும் சிரித்தனர்) **அதாவது நீங்கள் உங்கள் இல்லத்தில், உங்கள் குடும்பத்தோடு இருக்கும் அதே வேளையில், நான் விரும்பும் விதத்தில் - அனைத்திற்கும் மேலாக என்னை நேசிக்கவும். அதுவே அனைத்திலும் எளிதான வழி.**

**மற்றுமொரு குறிப்பு: கடவுளை அடைவதற்கு இதைவிட எளிதான வழி எனக்குக் கீழ்ப்படிவதாகும். எனக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படியுங்கள். இது சாத்தியமா? இதுவே எளிமையிலும் எளிமையான வழி! முயற்சி செய்யுங்கள். நீங்கள் முயற்சி செய்தால், நான் உங்களுக்கு உதவுவேன்.**

**அன்பினால்தான் உங்கள் அனைவரையும் நான் என்னை நோக்கி ஈர்த்தேன். நான் உங்களை நேசிக்காமல் இருந்திருந்தால், நீங்கள் என்னிடம் வந்திருக்கமாட்டீர்கள் அல்லது என்னை கண்டுகொண்டிருக்க மாட்டீர்கள். உங்களை என்னிடம் கொண்டு வந்தது உங்கள் அன்பு அல்ல; என் அன்புதான் உங்களை என்னிடம் ஈர்த்தது. இரண்டு அன்பர்கள் என்னிடம் வர, என்றென்றும் பிரியமான மார்கரெட்** (க்ராஸ்கே) **உதவினார்.**

அன்றைய நாளுக்கான பாபாவின் செய்தியை எரச் வாசித்தார்:

**எவரும் இறப்பதில்லை, எவரும் பிறப்பதில்லை. ஒரே அதிர்ஷ்டசாலி மற்றும் அரிதான ஒருவர் மட்டுமே உண்மையான மரணத்தை சந்தித்து, கடவுளில் பிறக்கிறார். இல்லையேல், எவரும் இறப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை.**

**இதன் பொருள் என்ன? இது தூங்கப் போவது போலப் பொருள்படும். நீங்கள் வேறொரு பிறவியில், வேறொரு வடிவம் எடுக்கும்போது, அது காலையில் எழுந்திருப்பது போல், ஆனால் ஒரு புதிய உடலில், புதிய சூழ்நிலையில். நீங்கள் உண்மையான மரணத்தை சந்தித்து, என்னில் பிறக்கும் வரை இந்தச் செயல்முறை மீண்டும் மீண்டும் தொடர்கிறது.**

**"ஹாரி, நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?"**

ஹாரி கென்மோர் கூறினார், "இது வாழ்வின் உன்னதமான நோக்கத்தின் இறுதியாக ஆசீர்வதிக்கப்பட்ட உச்சத்தை பிரதிபலிக்கிறது."

பாபா தொடர்ந்து கூறினார்:

**மேலுமொரு கருத்தைக் கூற விரும்புகிறேன். பிறரை வெறுக்கவும், பிறரைக் கண்டு பொறாமைப்படவும், பிறரைக் கவலையுறச் செய்யவும் சிலர் வாழ்கின்றனர்; பிறரை நேசிக்கவும், பிறரை மகிழ்விக்கவும் சிலர் வாழ்கின்றனர். கடவுளோடு ஐக்கியமானவர் நல்லவர், தீயவர் அனைவருக்காகவும் வாழ்கிறார். இயேசு கிறிஸ்து பிறருக்காக வாழ்ந்தார். மேலும் கடவுளோடு ஐக்கியமாக, ஒருவர் தனது சுயத்தை தவிர வேறு**

எதையும் துறக்க வேண்டியதில்லை. ஒருவர் தனது சுயத்தைத் துறப்பது எப்படி?"

**அனிதா, உங்களை உங்களிடமிருந்து நீங்களே தனியாகக் கிழித்தெறிய முடியுமா?**

**நான் சிறுவனாக இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் எனது நினைவுக்கு வருகிறது. ஆன்மீக சிந்தனை மிக்க நான்கு ஈரானியர்கள், 'ஒருவரின் சுயத்தை ஒருவர் துறக்க வேண்டும்' என்று புத்தகங்களில் படித்திருக்கிறார்கள். தங்களைத் தாங்களே இழப்பதற்கான சிறந்த வழி, மது அருந்தி மயங்குவது என்று அவர்கள் முடிவு செய்து, மது அருந்தத் தொடங்கவே, அவர்களின் அனுபவங்கள் அற்புதமானவையாக இருந்தன. மதுபான சத்திரத்தின் அருகே ஒரு மாட்டு வண்டி இருந்தது. தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள முயன்று, நால்வரும் தொடர்ந்து மாட்டு வண்டியை கடுமையாக இழுத்து, தங்கள் சுயத்திலிருந்து தங்களை விடுவிக்க முழு வீச்சில் முயற்சித்தனர். மறுநாள் காலையில் அவர்கள் முற்றிலும் சோர்வடைந்த நிலையில் இருந்து, உடலின் சுயநினைவை இழந்தனர். இப்படித்தான் அவர்கள் தங்கள் சுயத்தை துறக்க முயன்றனர். அவர்களுக்கு புத்தக ஞானம் மட்டுமே இருந்தது; இறைநிலையை அடைந்த வாழ்க்கையின் வழிகாட்டி இல்லை.**

"**உங்கள் சுயத்தை நீங்கள் எப்படித் துறப்பீர்கள் அனிதா?**" என்று பாபா கேட்டார்.

அனிதா, "பரிபூரண குருநாதருக்குக் கீழ்ப்படிவதன் மூலம்" என்றார்.

**ஒரு குருநாதருக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்த அடுத்த கணமே, நீங்கள் உங்களுடையவர் அல்ல. ஆனால் சிறிதளவு பாசாங்குத்தனமும் உங்கள் நிலைப்பாட்டைக் கெடுத்து, முழு விஷயத்தையும் கேலிக்கூத்தாக ஆக்குகிறது. பரிபூரண குருநாதருக்குக் கீழ்ப்படிவதில் நீங்கள் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும். அது அவ்வளவு எளிதல்ல. அரிய ஒருவரால் மட்டுமே முடியும்!**

"**ஐவி, நீங்கள் முழுமையாகக் கீழ்ப்படிய முடியுமா?**" என்று பாபா கேட்டார்.

ஐவி டியூஸ் பதிலளித்தார், "நான் என்னைக் குறித்து மிகவும் சோர்வாக இருக்கிறேன் பாபா!"

"**ஹாரி, நீங்கள் எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிய முடியுமா?**" என்று பாபா கேட்டார்.

கென்மோர், "நான் அவ்வாறு செய்ய வேண்டும் என்றால், ஆம்!"

பாபா தொடர்ந்து விளக்கினார்:

**நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்பும் மூன்றாவது தலைப்பு: 'பெண்கள் மீதான அன்பும், கடவுள் மீதான அன்பும்'** (THE LOVE OF WOMEN AND GOD.)

**ஓர் ஆண் தொலைதூரத்தில் வாழும் ஒரு பெண்ணை காதலிக்கிறான். அவனது காதல் அவளை எப்பொழுதும் நினைக்க**

வைக்கிறது. அவனால் உண்ண முடியவில்லை, உறங்க முடியவில்லை, அவன் அவளுக்காக தொடர்ந்து ஏங்குகிறான். அவனது ஏக்கம் அதிகமாகும்போது, அவன் அவளிடம் செல்கிறான் அல்லது அவளை தன்னிடம் வருமாறு வற்புறுத்துகிறான். இது 'பௌதீகக் காதல்' (அல்லது ISHQ-E-MIJAZI) என்று அழைக்கப்படுகிறது. இரண்டு வகையான அன்பு - பௌதீக அன்பு மற்றும் கடவுள் மீதான அன்பு. ஆன்மீக அன்பு என்பது மனிதனுக்கு கடவுள் கொடுத்த வரம். இந்தப் பௌதீக அன்பை 100 சதவீதம் அடையப்பெற்ற ஒரு மனிதன் கூட அரிது. அத்தகைய அன்பு கிட்டத்தட்ட சாத்தியமற்றது. மஜ்னுனுக்கு லைலா மீது ஏற்பட்டது 100 சதவீத வெறித்தனமான அன்பு.

பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 3-பி டிம்ஃபில், மஜ்னுன்-லைலாவின் கதையை எடுத்துரைத்த பிறகு பாபா தொடர்ந்து கூறினார்:

மஜ்னுன், லைலாவை நேசித்தான்; அது பௌதீகக் காதல் (ISHQ-E-MIJAZI) ஓர் ஆண், ஒரு பெண்ணை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி மஜ்னுன், லைலாவை 100 சதவீதம் நேசித்தான். அவள் மீதான அதீத அன்பில் அவன் பைத்தியமாகிப் போனான் - அவனால் தூங்க முடியவில்லை, உண்ண முடியவில்லை; லைலா மீதான அன்பைத் தவிர, இதர அனைத்தையும் அவன் இழந்தான். ஒரு பெண்ணின் மீதான ஆணின் இத்தகைய அன்பு கூட அரிதானது எனும்போது, தெய்வீக அன்பைப் பற்றி என்ன சொல்வது?

இந்த இரண்டு வகையான அன்பிலும் ஒரு வேறுபாடு உள்ளது. அன்பு, கடவுளின் அன்புப் பரிசாக அடையப் பெறும் வரை, நீங்கள் கடவுள் மீது அன்பு செலுத்த முடியாது. அப்போது அது சிரமமற்றதாக இருக்கும். இந்தப் பரிசை அடையப்பெற்ற நீங்கள், கடவுள் மீது அன்பை பொழிந்து கொண்டிருப்பீர்கள், ஆழ் இதயத்தில் எரிந்து கொண்டிருப்பீர்கள். அன்பன் நினைக்கிறான்: "பிரியமானவரை, எனது கிறிஸ்துவை, எனது பாபாவை நான் எப்போது பார்ப்பேன்; நான் எப்போது அவருடன் ஒன்றிணைவேன்?" அவன் இதற்காக மட்டுமே வாழ்கிறான். இது ஆன்மீக அன்பு (உண்மையான அன்பு, ISHQ-E-HAKIKI) என்று அழைக்கப்படுகிறது.

மஜ்னுனுக்கு லைலா மீது உடல்ரீதியான காதல் இருந்தது. லைலாவைக் காண முடியாததால், அவள் எங்கே என்று எல்லோரிடமும் கேட்கத் தொடங்கினான். அவன் மெக்காவிற்கும் சென்று காபாவின் தூண்களைத் தழுவி, "லைலா எங்கே?" என்று மன்றாடினான்; அவள் மீதான காதலில், அவன் கிட்டத்தட்ட பைத்தியமானான். பின்பு மஜ்னுன் ஒரு பரிபூரண குருநாதரை சந்திக்கவே, அவர் அவனிடம் கூறினார்: "கடவுள் உண்மையானவர், உலகம் மாயை. லைலா என்பவள் ஒருபோதும் உண்மையானவளாக இல்லாத போது, அவளை எப்படிக் கண்டுகொள்வது? கடவுள் ஒருவரே உண்மையானவர், உளதாயிருக்கிறார்."

மஜ்னுன் கூறினான்: "எனது லைலா உண்மையானவளாக இல்லாமல் அல்லது மாயையாக இருந்தாலும், எனக்கு அவள் வேண்டும்!" அவ்வேளையில் குருநாதருக்கு ஒரு திடீர் ஆர்வம் (தற்போக்கெண்ணம்)

**தோன்றவே - அவர் மஜ்னுனைத் தலையில் தொட்ட அந்த கணத்தில், மஜ்னுன் இறைநிலையை அடையப் பெற்று, தன்னை லைலாவாக உணர்ந்தான்! அவனைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை அறிந்தான்!**

**அன்பில் ஒருவர் அளவிலா கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும். அனிதா, உங்களுடைய ஆடையைக் களைந்து, நிர்வாணமாக இந்த நகரைச் சுற்றிவந்து யாசிக்கச் சொன்னால் உங்களால் அது முடியுமா? நீங்கள் அதை விருப்பத்துடன் செய்ய மாட்டீர்கள்.**

“**எல்லா, நீங்கள் செய்வீர்களா?**” என்று பாபா கேட்டார்.

“நான் முயற்சி செய்வேன்,” எல்லா வின்டர்ஃபெல்ட் கூறினார்.

“**பென், நீங்கள் அதை செய்ய மாட்டீர்கள்!**”

“நான் விழித்திருக்க மாட்டேன்!” பென் ஹெய்மன் கேலி செய்தார்.

பாபா உடனே கேலியாக, “**இன்று மதியம் கிழக்கத்திய அன்பர்கள் அனைவரும் வரும்போது விழித்திருப்பது உங்கள் கடமை. நீங்கள் விழித்திருந்தால் நானும் விழித்திருப்பேன்**” என்று கூறி தொடர்ந்தார்:

**கடவுளை நேசிப்பதற்கு, ஒருவர் கடவுளை நினைத்து, கடவுளுக்காக ஏங்க வேண்டும்; அத்தகைய ஏக்கம் அதன் உச்சத்தை அடைந்து கடவுளுடன் ஒன்றிணைந்து, தாகம் தணியும் வரை, பிரிவின் நெருப்பை அனுபவிக்க வேண்டும். ஆனால் குருநாதருக்குக் கீழ்ப்படிபவர், கடவுளுடன் ஐக்கியமான ஒருவர், துன்பப்பட வேண்டியதில்லை, ஏனெனில் கீழ்ப்படிதலில் குருநாதரின் அருள் உள்ளது. சொல்லப்போனால் கீழ்ப்படிதல் கூட எளிதானது அல்ல. ஆகையால், எந்தத் தீர்வுக்கும் இடமில்லை. எரச் என்னுடன் இருக்கிறார், அவர் என்னை நேசிக்கிறார், அவர் எனக்காக முழு மனதுடன் பணிபுரிகிறார், ஆனால் அவரைப் பொறுத்தவரை கூட எனக்குக் கீழ்ப்படிவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல.**

எரச் இடையே குறுக்கிட்டு, “இதிலும், இதர எல்லா விஷயங்களிலும் நாங்கள் உதவியற்றவர்களாக உள்ளோம் என்று பாபாவிடம் கூறுகிறேன். பல வருடங்கள் பாபாவுடன் இருந்த அந்தக் காலகட்டத்தில், அதை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. கீழ்ப்படிவது எளிது என்று நான் நினைத்தேன்; ஆனால் பாபா ‘எழுந்திருக்கவும்’ அதே வேளையில் ‘அமர்ந்திருக்கவும்’ கூறுவார் என்று எனக்குத் தெரியாது. அதனால் நான் பாபாவிடம் சொல்கிறேன்: ‘நான் முற்றிலும் உதவியற்றவன், என்னால் உங்களுக்குக் கீழ்ப்படிய முடியாது, என்னால் உங்களை நேசிக்க முடியாது!’”

பாபா இவ்வாறு கருத்துரைத்தார்: “**எரச் என்னை மிகவும் நேசிக்கிறார். அவர் எனது வலது கரம்; ஆனால் கீழ்ப்படிதல் ஒரு பயங்கரமான விஷயம். இயேசுவின் சீடர்களும், அவருக்குக் கீழ்ப்படிவது எவ்வளவு கடினம் என்பதை அறிந்திருந்தனர்.**”

எரச் மேலும் கூறினார், “கீழ்ப்படிவதன் மூலம் பாபாவை மகிழ்விக்க முடியாது; எனவே அது கீழ்ப்படிதல் ஆகாது. ஆயினும், நாம் செய்யும் அனைத்திலும் அவரை மகிழ்விப்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.”

பாபாவின் விரிவான விளக்கம்:

**அனைத்தையும் என்னிடம் விட்டுவிட்டு, என்னை நினைவில் கொண்டு, அவற்றை மறந்துவிடுவதே சிறந்தது. ஆன்மீகத்தில் அதிக ஆர்வம் உள்ளவர்களுக்கு இது ஒரு சிக்கலான விஷயம், ஆனால் என்னை நேசிப்பவர்களுக்கு அல்ல. என்னை நினைவில் கொள்ள முயற்சி செய்யுங்கள், என்னை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள், எனது விருப்பத்திற்கிணங்க அனைத்தையும் செய்ய முயற்சி செய்யுங்கள். அப்படித்தான் உலகில் வாழ வேண்டும்; இல்லையேல், அனைத்தும் மிகவும் சிக்கலாக முடியும்.**

**ஹ:ஃபீஸ் கூறுகிறார்:**

**நான் முதலில் கடவுளை நேசிக்கத் தொடங்கிய போது,**
**அனைத்திற்கும் அதுவே முடிவு என்று நினைத்தேன்,**
**அதாவது, அன்பின் இறைப் பெருங்கடலை நான்**
**உணர்ந்தேன் என்று; ஆனால் நான்**
**கடற்கரையில் மட்டுமே இருந்தேன்!**

**ஹ:ஃபீஸுக்கு அன்பின் இறைப் பெருங்கடல் பற்றி எதுவும் தெரியாது. இறைப் பெருங்கடல் அவரைத் தொட்டதும் அவரை நோக்கி இறை அன்பின் தென்றல் வீசத் தொடங்கியது; ஆனால் அலைகள் அவரை மீண்டும் கடற்கரையில் தூக்கி எறியவே, அவர் கத்தத் தொடங்கினார்:**

**ஓ கடவுளே நான் ஏன் உனக்காக ஏங்கித் தவித்தேன்?**
**இது என்ன கடலுக்கும் கரைக்கும் இடையே**
**முன்னும் பின்னுமாக வீசப்படுகிறேன்?**
**உனக்காக உலகை விட்டுச் சென்றேன்,**
**ஆனால் உன்னை நான் எப்படிக் கண்டுகொள்வேன்!**

**அப்போது, குருநாதர் ஹ:ஃபீஸை இரட்சிக்க வருகிறார். இறையுணர்வு எனும் 'முத்து', இறைப் பெருங்கடலின் கீழே ஆழ்ப்பகுதியில் இருப்பதாக அவர் அவருக்குக் கற்றுத் தருகிறார். முதலில் நீச்சல், பின்னர் ஆழ்கடலில் குதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், அதற்குப் பிறகு முத்தைக் கண்டுபிடித்து மீண்டும் கொண்டு வர வேண்டும். 40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஹ:ஃபீஸ் அந்த முத்தை அடையப் பெற்றார். ஆணித்தரமான உறுதியுடன் இருந்த அவருக்கே 40 வருடங்கள் தேவைப்பட்டன - இப்போது இதைக் குறித்து கேள்விப்பட்ட இங்கிருக்கும் உங்களைப் போல் அல்ல!**

பாபா புன்முறுவல் செய்துகொண்டே தொடர்ந்து கூறினார்:

**ஆன்மீகப் பாதையில் பயணத்தைத் தொடங்கும் ஒருவருக்கு, கடவுளை அறிய வேண்டும் என்ற உந்துதல் உருவாகிறது. பாதையில் தொடர்ந்து பயணிக்கும் ஒருவர், விளக்குகள், வண்ணங்கள் மற்றும் பலவற்றைப் பார்க்கத் தொடங்கும் அந்த கணத்தில், இறுதி இலக்கை அடைந்துவிட்டதாக நினைக்கிறார், கடவுளை அனுபவிப்பதாக நினைக்கிறார்.**

**அவர் பயணத்தை இதுகாறும் தொடங்கவில்லை என்பதைக் கூட அவர் உணரவில்லை. இது அனைத்தும் கேலிக்கூத்து** (தமாஷா). **ஆன்மீகப் பாதையில் அளவிலா அனுபவங்கள் உள்ளன, ஆனால் அவை அனைத்தும் அதுவாகவே கடந்து செல்லும் நிகழ்வுகள்.**

**இறைநிலையை எய்தியதன் அடையாளம், ஒருவர் தொடர்ந்து இடைவிடாமல், அவரே எல்லாமும், எல்லோரும் என அனுபவிப்பது. அவர் பேரின்பத்தின் எல்லையற்ற பெருங்கடல்; சர்வ வல்லமையுள்ளவர்; சர்வ ஞானம் படைத்தவர். ஆனால் இந்த அனுபவம் அனைவருக்கும் கிடைப்பதில்லை. அபூர்வமாக ஓர் ஆத்மா மட்டுமே இறைநிலையை எய்துகிறது.**

**இறை உணர்வை எய்துவது, ஒருவர் நினைப்பது போல் எளிதானது அல்ல. ஆனால், இறைவன் மீதான அன்பின் மூலம் இதை அடையப் பெறலாம் - அதாவது, பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசியாக மாறுவதன் மூலம். அப்போது நீங்கள் உங்களுக்குச் சொந்தம் அல்ல; நீங்கள் முற்றிலும் குருநாதருக்குச் சொந்தமானவர்.**

**ஹா:பீஸ் கூறுகிறார்:**

**நீங்கள் குருநாதரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில்**
**ஒருவராக இருக்க வேண்டுமாயின்,**
**அனைத்தையும் விட்டுவிட்டு, கீழ்ப்படிதலில் அவரிடம்**
**அட்டைபோல் ஒட்டிக்கொள்ள வேண்டும்.**
**பின்னர் ஏன், எதற்காக, என்ன என்ற கேள்விகள்**
**உங்கள் மனதில் நுழையக்கூடாது.**

“**ஹாரி, மார்கரெட் உங்களுக்கு இது தெளிவாக உள்ளதா**?” என்று பாபா கேட்டார்.

அவர்கள் உறுதியுடன் ‘ஆமாம்’ என தலையசைத்தனர், பின்னர் அவர் தொடர்ந்தார்:

**மற்றுமொரு விஷயம் என்னவெனில், கடவுள் மட்டுமே உளதாயிருக்கிறார், கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை. கடவுள் பிரிக்கப்படாமல் ஒன்றே உருவான ஏக இறைவனாக இருக்கிறார்; மேலும் அவர் ஒவ்வொருவரிலும் பிரிக்க முடியாதவராக இருக்கிறார். அவரை பிரிக்க முடியாது என்றாலும், இந்தப் பிரிவுகளை எங்கும் பார்க்கிறோம்! இந்தப் பிரிவு என்பது என்ன? அனிதா, பெரில், எல்லா, ஹாரி, சார்லஸ் மற்றும் பலர் உள்ளனர். ஏன் இந்தப் பிரிவு? நீங்கள் அனைவரும் ஏன் தனித்தனியாகப் பிரிந்து இருக்கிறீர்கள்? கடவுள் எல்லோரிலும் இருக்கிறார், பாபாவிலும் இருக்கிறார் - கடவுள் எல்லோருமாக இருக்கிறார். பாபாவே கடவுள். அப்படியானால் இந்தப் பிரிவுகள் என்பது என்ன? இது மாயாவின் நாடகமும் உங்கள் அறியாமையும் மட்டுமே! பிரிவுகள் என எதுவுமே இல்லை!**


கடவுள் பேரின்பப் பெருங்கடல் - எல்லையில்லா, கரையில்லா தெய்வீகப் பெருங்கடல். இந்த தெய்வீகப் பெருங்கடலில் ஒவ்வொரு துளியும் அதுபோலவே இருக்கும் பெருங்கடல், ஏனெனில் துளிகள் என எதுவும் இல்லை - இவை அனைத்தும் பிரிக்க முடியாத வரம்பற்ற இறைப் பெருங்கடல். ஆனால் நீங்கள் ஒரு குமிழியாக மாறியதும், தனியாகப் பிரிக்கப்பட்டது போன்ற தோற்றம் உருவாகிறது. இங்கே ஒரு குமிழி, அங்கே ஒரு குமிழி, மேலும் மற்றொன்று. ஒவ்வொரு குமிழியும் ஒரு துளியை உள்ளடக்கியது. மனம் என்பது குமிழி. நீங்கள் இறைப் பெருங்கடல் என்று உங்களுக்குத் தெரியாது, ஏனெனில் குமிழி வெடிக்கும் வரை உங்களுக்கு தனித்துவத்தின் தோற்றத்தை அளிக்கிறது. உதாரணமாக, அனிதாவின் குமிழி வெடித்து மறையும் போது, 'துளி'யான அனிதா உண்மையில் இறைப் பெருங்கடல் என்பதை அறிந்து கொள்கிறார்.

அலோபா அப்போது ஹாஃபீஸின் மூன்று பாரசீக ஈரடிக் கவிதைகளை வாசிக்கவே, அவை பாபாவால் மொழிபெயர்க்கப்பட்டன:

- குருநாதருக்கு முழுமையாகவும் விருப்பத்துடனும் கீழ்ப்படியுங்கள், அது உங்கள் அனைத்து கஷ்டங்களையும் தீர்க்கும்.
- குருநாதரிடமிருந்து நீங்கள் கேட்பதை ஒருபோதும் தவறு என்று கூறாதீர்கள், ஏனெனில், என் அன்பரே, அவரைப் புரிந்துகொள்ள முடியாததன் தவறு உங்கள் சுய இயலாமையில்தான் உள்ளது.
- அறியாமையிலிருந்து என்னை விடுவித்த குருநாதருக்கு அடிமை நான். குருநாதர் எதைச் செய்தாலும் அது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உயர்ந்த பலனை நல்கும்!

பாபா மேலும் கூறினார்:

கடவுள் பிரிக்க முடியாதபடி ஒன்றே உருவானவர்; அவர் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவரிலும் இருக்கிறார். அப்படியானால் இந்த வெளியளவிலான பிரிவுகளுக்கு என்ன காரணம்? அதுபோன்ற பிரிவுகள் எதுவும் இல்லை, ஆனால் அறியாமையால் பிரிவுகள் இருப்பது போலத் தோன்றும். கடலில் உள்ள துளிகள் கடலிலிருந்து பிரிக்கப்படவில்லை. ஒரு துளியைச் சுற்றியுள்ள குமிழி, தனியாகப் பிரிந்திருப்பதன் தோற்றத்தை உருவாக்குகிறது. அறியாமையின் குமிழி வெடித்து சிதறும்போது, தனிப்பட்ட சுயம் (ஆன்மா) பிரிக்க முடியாத பரமாத்மாவுடன் அதன் ஒருமைப்பாட்டை உணர்கிறது (அல்லது ஊர்ஜிதம் செய்கிறது). 'துளி' என்று ஒன்று இல்லை; ஒன்றே உருவான பிரிக்க முடியாத இறைப்பெருங்கடல் ஒன்றுதான் உளதாயிருக்கிறது!



பாபா ஏற்கனவே எடுத்துரைத்த 21 கருத்துக்களை வாசிக்குமாறு எரச்சிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. எரச் கூறினார்: "பாபா, நமக்கு 21 மையக் கூறுகளைக் வழங்கியுள்ளார், அவற்றில் சில, ஒரு வரி கூட இல்லை. அவை பாபாவின் அன்பர்களுக்கானவை அல்ல, பொது உபயோகத்திற்காக." எரச் அவற்றை வாசித்த வேளையில், பாபா சிலவற்றை விளக்கிக் கூறினார்:

1. **கடவுள் ஐயத்திற்கிடமின்றி முழுநிறை சுதந்திரமானவர். அன்பின் மூலம், அவருடைய நாமத்தைத் தொடர்ந்து திரும்பத் திரும்ப உச்சரித்து, அவருடைய தெய்வீகக் கருணையை வழிபட்டு வேண்டிக் கொள்வதுதான், அவரை அணுகுவதற்கான ஒரே வழி ஆகும்.**
2. **கடவுளின் கருணை என்பது அவரின் இயல்பு.**
3. **கடவுளின் பேரின்பம் என்பது அவரின் அசல் நிலை.**
4. **கடவுளின் சக்தி என்பது அவர் உளதாயிருப்பதன் உறுதிப்பாடு.**
5. **கடவுளின் ஞானம் என்பது அவரின் கடமை.**

கடவுள் அறியாதவராக இருக்க முடியாது. அனைத்தையும் அறிந்தவராக இருக்க வேண்டியது அவருடைய கடமையாகிறது. கடவுள் அனைத்தும் அறிந்தவர். அவர் ஞானத்தின் ஆளுமையாகத் திகழ்பவர் - கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அறிந்தவர்; கடந்த காலத்தில் லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் என்ன நடந்தது மற்றும் எதிர்காலத்தில் லட்சக்கணக்கான ஆண்டுகளில் என்ன நடக்கும் என்பதையும் அறிந்தவர் - அதுவே அனைத்து ஞானம். அவரால் அனைத்தையும் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. ஞானம் என்பது அவரது கடமை.

6. **எல்லையற்ற முரண்பாடுகளின் எல்லையற்ற குழப்பத்தில் கடவுளின் எல்லையற்ற நிலை தொலைந்து போகிறது.**

'நேரம்' என்று ஒன்று இல்லை, நித்தியம் மட்டுமே உள்ளது. நீங்கள் எப்படி நித்தியத்தை புரிந்து கொள்ள முடியும்? இறைநிலையை உணர்ந்தவர், காலம், இடம் அல்லது எதுவுமே இல்லை என்பதை உணர்கிறார்; கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை. கடவுள் எல்லாம் அறிந்தவர்; அவர் தனியாக, ஏக இறைவனாக இருப்பவர். ஆனால் எல்லையற்ற முரண்பாடுகளின் எல்லையற்ற குழப்பத்தில் கடவுளின் எல்லையற்ற நிலை தொலைந்து போகிறது. அப்போது கடவுள், அனைத்தும் அறிந்தவராக இருந்தாலும், 'நான் யார்?' என்ற கேள்வியை உங்கள் ஒவ்வொருவர் மூலமாகவும் கேட்கிறார் - அதுவும் ஒரு முரண்பாடு.

அவர், அந்தக் கிறிஸ்து நிலையை அடையும் போது கூறுகிறார்: 'ஓ, நான் கடவுள்!' 'நான் யார்?' என்ற கேள்விக்கான பதிலை அடையப்பெற, ஒவ்வொருவரும் பல பிறவிகள் எடுத்தாக வேண்டும். இந்தக் கடைசி பதிலுக்கும் அசல் கேள்விக்கும் இடையில், எல்லையற்ற முரண்பாடுகள், 'நான் அதுவாகவும், இதுவாகவும் இருக்கிறேன், நான் ஆண், நான் பெண், நான் பெரியவன், நான் சிறியவன், நான் பணக்காரன், போன்ற பல பொய்யும்

**போலியுமான பதில்கள் உள்ளன. நான் ஏழை, நான் வெள்ளை, நான் நிறத்தில் கறுப்பு இதுபோன்ற பல.'**

**7. கடவுளின் எல்லையற்ற முரண்பாடுகளில் அவரை உணர்வுப்பூர்வமாக அறிவது என்பது, அவரது உணர்வற்ற இறைத் தன்மையைப் பற்றிய அவரது பரிபூரண இறையுணர்வை உணர்ந்து கொள்வதாகும். இது அவரது 'அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையை'க் குறிக்கிறது.**

**"உங்களால் அதைப் புரிந்துகொள்ள முடிகிறதா, ஹாரி?"** என்று பாபா கேட்டார்.

எரச் உரையாடலின் இடையே குறுக்கிட்டு, "அதை அவரால் கூட புரிந்துகொள்ள முடியாது என்று பாபா கூறுகிறார்!" எல்லோரும் சிரித்தனர்.

**"எனக்கு விளக்குங்கள், ஹாரி!"**

ஹாரி கென்மோர் தனது விளக்கத்தை அளித்த வேளையில் பாபா, இவ்வாறு பதிலளித்தார்:

**நான் உங்கள் இடத்தில் இருந்திருந்தால், இப்படிச் சொல்லியிருப்பேன்: "பாபா, உங்கள் அன்பை எனக்குக் கொடுங்கள், இந்த முரண்பாடுகள், இந்த உணர்வு மற்றும் உணர்வற்ற நிலைகள், மற்றும் இந்த உணர்வற்ற இறைத் தன்மையைப் பற்றிய அவரது பரிபூரண இறையுணர்வு ஆகியவற்றுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. எனக்கு உங்கள் அருள் மட்டுமே வேண்டும், அதுவே கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில் அனைத்திற்குமான ஒரே தீர்வு."**

**ஒரு பரிபூரண குருநாதரின் அருளால், ஒருவர் லட்சக்கணக்கான பிறப்பு மற்றும் இறப்புகளைக் கடந்து வந்து, அளவிறுதியற்ற அனுபவத்தை அடையப் பெறும் அந்தத் தருணத்தில், அது ஒரே நொடிப்பொழுதில் வந்துவிடுகிறது. ஒரு கவிஞர் தனது குருநாதரிடம் கூறுகிறார்:**

**இதையெல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை;**
**இது ஒரு காதில் நுழைந்து, மறு காது வழியாகச் சென்று விடுகிறது.**
**உங்கள் அளவிறுதியற்ற நிலையின் ஒரு கணப் பார்வையை**
**ஏன் உங்களால் எனக்குக் காட்ட முடியவில்லை?**

அலோபா, பாரசீக மொழியில் வாசித்த ஹ∴பீஸின் வேறொரு ஈரடிக் கவிதையை பாபா மொழிபெயர்த்தார்: **"குருநாதர், இந்த தூசியை, 'தரத்தை நிர்ணயிக்கும் உரைகல்'லாக மாற்ற முடியும்; அவருடைய ஒரே பார்வையால் மட்டுமே தனது அருளை வழங்க முடியும். ஹ∴பீஸ் கூறுகிறார், 'எனக்கு உங்கள் முழு கவனமும் வேண்டாம்; உங்கள் காலடியில் இருக்கும் இந்த தூசி, தங்கமாக மாற உங்களின் கடைவிழிப் பார்வை ஒன்றே போதும்!'**

**"ஹாரி, அது எப்போது நிகழும்?"** என்று பாபா கேட்டார்.

"பரிபூரண குருநாதரின் அருளைப் பெறும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்போது!" ஹாரி கென்மோர் கூறினார்.

பாபா தொடர்ந்து கூறினார்:

**அவதார புருஷரை அடையப் பெற்றதில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. என் அன்பர்கள் தங்கள் முன்னிலையில் கடவுளை மனித வடிவில் கொண்டிருப்பது மாபெரும் அதிர்ஷ்டம். எனது ஒரே ஒரு கடைவிழிப் பார்வை உங்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்க முடியும் - உங்கள் பார்வையை உள்நோக்கித் திருப்ப முடியும். வெளியளவில் எந்த ஒரு மாற்றமும் தென்படாத விதத்தில் இங்கே நீங்கள் அமர்ந்திருப்பீர்கள், ஆனால் உண்மையில் நீங்கள் என்னவாக மாறவேண்டுமோ அவ்வாறு மாறியிருப்பீர்கள். இது எல்லையற்ற மாற்றத்தை ஏற்படுத்தும்.**

"**அது எப்போது நிகழும் மார்கரெட்? ஹாரி?**" என்று பாபா கேட்டார்.

கென்மோர் கூறினார், "நல்லது பாபா, அந்த உந்துதலை - அந்த விருப்பத்தை வழங்கும் நேரம் வரும்."

பதிலுக்கு பாபா தொடர்ந்தார்:

**அந்த விருப்பத்திற்கு** (WHIM) **நேரம் என்று ஒன்று இல்லை - இல்லையேல் அது ஒரு விருப்பமாக இருக்காது. காலம், நேரம் என எதுவும் இல்லாத அந்தத் தற்போக்கு ஆசை திடீரென வருவது. துக்காராம், பரிபூரண குருநாதர் கூறுகிறார்:**

**"உங்கள் தலையை ஒரு பரிபூரண குருநாதரின் பாதங்களில்**
**எந்த அளவுக்கு அறைந்தாலும் அவரது கருணை**
**மிக அரிதாகவே கிடைக்கும்.**
**அது நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே நடக்கும்."**

**அந்தத் தருணத்திற்காக நீங்கள் காத்திருக்க வேண்டும். அந்தத் தருணம் அருகாமையில் உள்ளது, அதற்கு நீங்கள் என்னை முழு மனதுடன் நேசிக்க வேண்டும்; இல்லையேல் நீங்கள் அதை இழக்க நேரிடும். நான் உங்கள் வாசற்கதவைத் தட்டும் வேளையில், நீங்கள் தூங்கிக்கொண்டிருந்தால், நான் சென்றுவிடுவேன்!**

எரச் பாபாவை நினைவுபடுத்தினார், "இன்று '**நான்கு இறைப் பயணங்கள்**' (FOUR JOURNEYS) குறித்த விளக்கத்தை வழங்குவதாகச் சொன்னீர்கள்".

அதற்குப் பதிலளித்த பாபா, "**நான் அளவற்ற சலிப்புடன் இருக்கிறேன்!**" என்று கூறினார்.

**உங்களால் எதையும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் நான் ஏன் விளக்கம் அளிக்க வேண்டும்? அதைப் புரிந்து கொள்ள முடியாது. நான் எல்லையில்லா அளவுக்கு சோர்வடைந்துவிட்டேன், அதனால் நான் எனது மௌனத்தைக் கைவிடும் தருணத்திற்காக காத்திருக்கிறேன் - இறுதியாக உலகின் இதயத்தை நான் தொட முடியும். அந்த 'இறை வார்த்தை'** (WORD) **வெளிவர ஆவலாக இருக்கிறேன்! ஆனால் நான் எல்லையற்ற பொறுமை மிக்கவன். அந்த 'இறை வார்த்தை'யே அனைத்திற்குமான ஒரே தீர்வு என்பதை நான் அறிவேன்; ஏனெனில் 'இறை வார்த்தை'யே எல்லா வார்த்தைகளுக்கும் ஆதாரம். ஆனாலும், நான் மிகவும் பொறுமையாக**

**இருந்து, அதே காலங்கடந்த, ஆதிகால உண்மைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன்.**

**உரைகள் அடங்கிய புத்தகம் வெளிவரும் வேளையில், அது பல விளக்கங்களையும், பல கேள்விகளுக்கு விடைகளையும் வழங்கும். ஆனால் 'கிறிஸ்து-உணர்வுநிலை'யைப் பொறுத்தவரை, அதை அறிய ஒருவருக்கு அனுபவம் தேவை.**

**"சார்லஸ், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"**

சார்லஸ் பர்டம் பதிலளித்தார், "நாம் உதவியற்றவர்களாக இருக்கிறோம் என்பதுதான் இதன் அர்த்தம். நம்மில் ஆர்வம் மட்டுமே இருக்க முடியும், மேலும் ஆர்வம் நமக்கு அருளைத் தரும்."

**"உண்மைதான்"** என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

பின்னர் அவர் 'அனைவரும் கலைந்து செல்ல வேண்டிய நேரம் இது' என்று குறிப்பிட்டார். அப்போது காலை 11.30 மணி. மேலும் அவர்கள் 2:45 மணிக்கு, கிழக்கத்திய அன்பர்கள் வரும் வேளையில், பந்தலுக்குத் திரும்பிவர வேண்டும். இருப்பினும், பாபா சில விஷயங்களை விளக்கினார்:

**கடவுளின் எல்லையற்ற முரண்பாட்டுத் தன்மையில், அவரை அறிந்துகொள்வது என்பது, அவரது 'உணர்வற்ற இறைநிலை'யைக் குறித்த அவரது 'இறையுணர்வை' அறிந்து கொள்வதாகும். இது உங்கள் அனைவருக்காகவும் அல்ல, ஆனால் அறிவுப்பூர்வமாக ஆன்மீகத்தை அடையும் ஆர்வமிக்க அறிவுஜீவிகளுக்காக.**

எரச் 21 கருத்துகளைத் தொடர்ந்தார்:

**8. 'இறைநிலை'யை அடையப் பெறுவது என்பது, அனைத்தையும் செய்யும் அதே வேளையில் முற்றிலும் எதையும் செய்யாமல் இருப்பதாகும்.**

**"ஹாரி, இது உண்மையல்லவா?"** என்று பாபா கேட்டார்.

"எதுவுமே செய்யாமல் எல்லாம் செய்யப்படுகிறது," கென்மோர் அவதானித்தார்.

**"நீங்கள் எதையும் செய்ய வேண்டாம், ஆனால் தூசியாக மாறும் ஆர்வத்துடன், அனைத்தையும் குருநாதரிடம் விட்டுவிடுங்கள்."**

**9. கடவுளைக் கண்டுகொள்ள, உங்களை நீங்களே உங்களிடம் இழந்துவிட வேண்டும்.**

**10. எல்லையற்ற உணர்வு நிலையை அடைய, நீங்கள் உணர்வுப்பூர்வமாக உங்களைப் பற்றிய உணர்வை இழக்க வேண்டும்.**

**இதன் அர்த்தம் என்ன? இது மயக்கமருந்து** (CHLOROFORM) **எடுத்துக்கொள்வது போல் ஆகாது; உங்களைப் பற்றி நீங்கள் உணர்வுப்பூர்வமாக உணராமல் இருக்க வேண்டும்.**

**11. வான்வெளி அல்லது வெற்றிடம்** (SPACE) **என்பது கற்பனைக்கும், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளுக்கும் இடையிலான இடைவெளி. பரிணாம வளர்ச்சியின் உணர்வுநிலை இந்த இடைவெளியை நிரப்புகிறது.**

**12. நேரம்** (TIME) **என்பது உங்களின் மூல முதலான கற்பனைக்கும், அறுதியும் இறுதியுமான கற்பனைக்கும் இடையிலான இடைவெளி.**

**நேற்று என்பது கடந்துவிட்டது; இன்று என்பது இன்றைய தினம்; நாளை, இன்றைய தினம் என்பது நேற்றாகிவிடும், மீண்டும், இன்று இன்னொரு தினம் வரும். எனவே அது நித்தியமாக இன்று** (TODAY)**... இப்போது** (NOW). **நேற்று என்பது இல்லை, நாளை என்பதும் இல்லை. 'இப்போது'** (NOW) **என்பது மட்டுமே உள்ளது - அதாவது இந்தத் தருணம், இந்த உடனடி தருணம் - மேலும் நித்தியமாக இது 'இப்போது' மட்டுமே. நேரம் என்று ஒன்று இல்லை. மீண்டும், நேரம் என்பது உங்களின் மூல முதலான கற்பனைக்கும் அறுதியும் இறுதியுமான கற்பனைக்கும் இடையிலான இடைவெளி.**

**13. கற்பனை முடிவுறும் இடத்தில், கடவுள் உளதாயிருக்கிறார்** (GOD IS) **மற்றும் கடவுள்தன்மை** (GODHOOD) **தொடங்குகிறது.**

**14. கற்பனை என்பது மாயையின் நிழலாட்டத்தை பாதிக்கும் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் நித்திய பிரதிபலிப்பாகும்.**

**15. கடவுள் என்பவர் புரிந்துகொள்ளக்கூடிய ஏதோ ஒரு பொருள் அல்ல. அவர் 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள்', யதார்த்தம், முழுநிறை உணர்வு, அளவிறுதியற்ற உணர்வு.**

**16. இறை உணர்தல் என்பது முழுநிறை உணர்விலிருந்து, பொய்யும் போலியுமான கற்பனை உணர்வை அகற்றுவதால் விளையும் உணர்வுநிலை.**

**"இதெல்லாம் ஒரு தலைவலி. நீங்கள் எல்லோரும் இதைக் கேட்க விரும்புகிறீர்களா? ஹாரி, இது அவருக்கு மிகவும் தெளிவாக இருப்பதாகக் கூறுகிறார்!"** பாபா சைகையால் தெரிவித்தார்.

'இதை வாசிப்பதே எனக்கு நா பிறழ் வார்த்தைகளாக இருக்கிறது' என்றார் எரச்.

பாபா விளக்கினார், **"விண்வெளி உணர்வு என எதுவும் இல்லை. இதோ தரையில் ஓர் எறும்பு. நீங்கள் அனைவரும் அதே தரையில் அமர்ந்திருக்கிறீர்கள். எறும்பு உங்கள் உடலில் ஊர்ந்து செல்கிறது. ஆனால் அதன் உணர்வு நிலை உங்களிடமிருந்து வேறுபட்டது. என்ன வேறுபாடு?"**

அதற்கு அனிதா, "எறும்பு, அது ஊர்ந்து செல்வதை மட்டுமே உணர்ந்துள்ளது, நான் இந்த அறையைப் பற்றி சற்று அறிந்திருக்கிறேன், ஆனால் நீங்கள் முழுப் பிரபஞ்சத்தையும் உணர்ந்திருக்கிறீர்கள்."

பாபா தொடர்ந்தார், **"எனது எல்லையற்ற உணர்வுக்கும், உங்கள் எறும்பு போன்ற உணர்வுக்கும் உலகளவு வித்தியாசம் உள்ளது. என் உணர்வு நிலையில் நீங்கள் அனைவரும் எனக்கு முன்னால் எறும்புகள். நீங்கள் அனைவரும் என் உடலில் ஊர்ந்து கொண்டிருக்கிறீர்கள்! நான் இங்கே உங்களுடன் ஒரே அறையில் அமர்ந்திருக்கிறேன், நாம் உண்மையில் விண்வெளியில் எங்கும் இல்லை, மேலேயும் கீழேயும் இல்லை, இங்கேயும், அங்கேயும் இல்லை, கடவுளுக்குள்ளேயே உள்ளோம்! நீங்கள் எறும்புகள்,**

**பெரிய எறும்புகள், நீங்கள் எப்பொழுதும் என்னைக் கடித்து துன்புறுத்துகிறீர்கள்!"**

பாபா, டான் ஸ்டீவன்ஸிடம், **"நீங்கள் சொல்ல விரும்பிய கதையைச் சொல்லுங்கள் டான்"** என்று கேட்டுக்கொண்டார். டான் ஸ்டீவன்ஸ், பாபாவின் திரைப்படங்களை 'அராம்கோ' (ARAMCO) எண்ணெய் நிறுவன அதிகாரிகளுக்குத் திரையிட்டுக் காட்ட இருந்ததைப் பற்றிக் கூறினார், அவர்கள் 'அந்த மௌன மனிதரை'ப் பற்றி பேசினர்.

**"இதைக் கேட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்"** என்று பாபா கூறினார். **"நான் மௌனமாக இல்லை. நான் எப்படி மௌனமாக இருக்க முடியும்? நான் எனது நாவால் பேசுவதில்லை. நான் என் இதயத்தால் தொடர்ந்து பேசுகிறேன். ஆனால், நான் 'இறை வார்த்தை'யை மொழிவதற்கு என் உதடுகளைத் திறக்கும்போது, அனைத்து விதமான விஷயங்களும் நிகழும். எல்லாமே தலைகீழாக மாறும். ஆனால் உலகின் அனைத்து இதயங்களையும் அந்த இறை வார்த்தை சென்றடையும். அதற்கான நேரம் மிக அருகாமையில் உள்ளது."**

எரச் கடைசி ஐந்து மையக் கருத்துகளைப் படித்து முடித்தார்:

17. **கடவுளுடன் எப்பொழுதும் இருக்க வேண்டுமாயின், அவரை ஒருபோதும் விட்டு விலகக் கூடாது.**

18. **கடவுளுடனான ஐக்கியத்தை நாடாதீர்கள், ஆனால் நீங்கள் ஐக்கியத்திற்கான ஏக்கத்தையும் தாண்டி, அன்பான கடவுளின் விருப்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் மட்டுமே ஏங்கும் வரை ஐக்கியத்தை நாடாதீர்கள்.**

19. **மனம் இறக்கலாம், மாயா இறக்கலாம், உடலும் இறந்து மடியலாம், ஆனால் நம்பிக்கையும், தாகமும் என்றென்றும் அழியாது. இவ்வாறு குருநாதருக்கு அடிபணிந்து இருந்த கபீர் கூறியுள்ளார்.**

20. **'நான்' எனும் சுயத்தை மறந்துவிட்டதைக் கூட மறப்பதே, தன்னைப் பற்றிய முழுமையான மறதி!**

21. **கடவுளைக் குறித்த முழுமையான நினைவாற்றல், செயலில் நேர்மை, நாணயம், யார் ஒருவரையும் மகிழ்வுறச் செய்வது, பிறர் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருப்பது, சாதாரண உலக வாழ்வில் தாழ்வு மனப்பான்மை, சுயநலம், காம இச்சைகளுக்கு அடிபணியாமல் இருப்பது, ஒருவரை இறையுணர்வை நோக்கிச் செல்லும் பாதைக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் இறை-மனிதனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிவது, ஒருவரை நேரடியாக இறைவனிடம் கொண்டு செல்கிறது.**

பின்னர் இடைவேளைக்காக பாபா அனைவரையும் வெளியே செல்ல அனுமதித்து, மதியம் 2:45 மணிக்குத் திரும்பி வருமாறு கூறி, இவ்வாறு அறிவித்தார்: **"அப்போது சொற்பொழிவோ விளக்கங்களோ இருக்காது. அமைதியாக அமர்ந்திருந்து நிகழ்வுகளுக்கு சாட்சியாக இருங்கள். என் அருகில் அமர்வது, என்னை நேசிப்பது, என்னை நினைவில் கொள்வது**

**இவற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை. நான் வழங்கும் சொற்பொழிவு சார்லஸூக்கு நல்லது, ஏனெனில் அவர் எழுதவிருக்கும் புத்தகம் எனது பணிக்கு உதவியாக இருக்கும்**. (சார்லஸ் பர்டம் எழுதிய 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' - THE PERFECT MASTER, பாபாவின் வாழ்க்கை வரலாற்று தொகுப்பை அவர் புதுப்பிக்கத் தொடங்கினார்.) **இது ஹாரியின் குழந்தைக்கும்** (இசைப் பதிவு கருவி) **நல்லது**."

கடந்த மே மாத கோடையில் குருபிரசாத் மண்டபம் எவ்வளவு வெப்பமாக இருந்தது என்பதை பாபா குறிப்பிட்டார்: "**கர்னல் கோல்ட்னியால்** (COLONEL GOLDNEY) **கூட அதைத் தாங்க முடியாமல், சில நிமிடங்களில் வெளியேற வேண்டியிருந்தது**." கிழக்கு-மேற்கு சகவாசத்தின் மூன்று நாட்களிலும் பல கிழக்கத்திய மக்கள் கலந்து கொள்ள முயற்சிப்பதாகவும், அவர்கள் பந்தலுக்குள் நுழைவதற்கு சகவாச அடையாள அட்டைகளை விநியோகிக்க வேண்டும் என்றும் பாபா கருத்துரைத்தார்.

"**சார்லஸ், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**" பாபா, பர்டமிடம் கேட்டார். "**இங்கே யார் மகிழ்ச்சியாக இல்லை? உங்கள் கைகளை உயர்த்துங்கள்!**" என்று கேட்டதும், நியூயார்க் நகரின் கென்னத் தீமூரின் (KENNETH TIMUR) கை மேலே எழுந்தது.

தீமூர் கூறினார், "நான் மகிழ்ச்சியாக இல்லை என்று சொல்ல முடியாது." ஏன் என்று கேட்டதற்கு, "எனக்குத் தெரியாது; அதுதான் பிரச்சினை!"

பாபா, தீமூரிடம், "**நான் அதை ஈடுசெய்ய தயாராக இருக்கிறேன். என் அருகில் அமர நான் உங்களுக்கு ஐந்து நிமிடம் வழங்குகிறேன். இப்போது, பிறரும் தங்கள் கைகளை உயர்த்த விரும்புவார்கள்**" என்றதும் ஒரே சிரிப்பு ஆரவாரமாக இருந்தது.

பாபா அமெரிக்க மையங்களின் பணி குறித்து விசாரித்தார். அப்போது அவர் கூறியதாவது:

**ஆந்திராவில் சுமார் 72 மையங்கள் உள்ளன. இந்தியா முழுவதிலும் வாழும் என் அன்பர்கள் அனைவரும் என்னிடம் இங்கு வர விரும்புகிறார்கள். ஏதாவது ஓர் அதிசயத்தை நிகழ்த்தி, அவர்களின் சூழ்நிலையை மாற்றினால், பூனாவின் மக்கள் தொகை இரட்டிப்பாகும்! என் அன்பர்கள் மிகவும் ஏழைகள்; அவர்கள் என்னை நேசிக்கின்றனர் மற்றும் எனது நோக்கத்திற்காகப் பணிபுரிய ஒருவருக்கொருவர் போட்டியிடுகின்றனர். அவர்களின் வாழ்க்கை சூழ்நிலைகள் இவ்வாறு இருந்தபோதிலும், ஒருவர் நாட்காட்டி ஒன்றை அச்சிடுவதானால், வேறொருவர் அதைவிடப் பெரியதாக அச்சிடுகிறார். ஒருவர் 100 ஏழைகளுக்கு உணவு வழங்கினால், மற்றொருவர் 1,000 பேருக்கு உணவு வழங்குகிறார்.**

**ஹமிர்பூரில் வாழும் என் அன்பர்களின் நிலை மிகவும் வித்தியாசமானது. பல ஆண்டுகளுக்கு முன்னர் (1952), அங்கு ஒரு கிராமத்திற்கு நான் காரில் சென்றிருந்தபோது, அந்த கிராம மக்கள் அதுவரை காரைப் பார்த்ததில்லை; ஆதலால், அதை ஓட்டிச் செல்ல அவர்கள்**

**சாலையை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்கள் உள்ளங்களையும் கைகளையும் ஒன்றிணைத்து, அவர்கள் விரும்பிய அனைத்து வசதிகளையும் எனக்கு வழங்க முயன்றனர் - மண்ணெண்ணெய் விளக்குகள், மேம்படுத்தப்பட்ட படுக்கை, நீராட வெதுவெதுப்பான நீர் போன்ற பல. மெஹராபாத் சகவாசத்தின் போது இவை அனைத்தையும் அவர்கள் பார்த்தனர். அந்த கிராமத்தில் என்னை முதன்முதலாகப் பார்த்தபோது, அவர்கள் துடிதுடித்துப் போயினர். ஹமிர்பூர் மக்கள் மிகவும் ஏழைகள் - மாவட்டம் முழுவதும் - ஆனால், என் அன்பில் மிகவும் செல்வந்தர்கள். ஓராண்டுக்கு முன்னதாக அவர்கள் நிறுவிய எனது சிலை, சிலை அல்ல, 'அது பாபா' என்ற உணர்வில் தழைக்கிறார்கள்; பாபாவை ஒருவருடைய நிலையான தோழனாக, துணையாக வைத்திருப்பதன் அர்த்தம் இதுதான். அதனால் அவர்களின் அன்பு எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தருகிறது.**

ஒரு கட்டத்தில், பாபாவின் உருவ வழிபாடுகளைப் பற்றி ஒரு விவாதம் நடந்தது. இறுதியில் சார்லஸ் பர்டம், "பாபா, சிலைகளை நொறுக்கிவிடுங்கள்!" என்று கூறியபோது, பாபா வெறுமனே புன்னகைத்தார். '**இத்தகைய விஷயங்கள் அன்பின் வெளிப்பாடாக இருந்தன, எனவே நிராகரிக்கப்படக்கூடாது**.'

அதன் பின்பு மேற்கத்திய அன்பர்கள் மதிய உணவுக்காக தங்கள் ஹோட்டல்களுக்குச் சென்றனர். லக் சகோதரர்கள் (LUCK BROTHERS) கடைசியாக அறையை விட்டு வெளியேறினர். வாசலில் நின்று கொண்டிருந்த எட்வர்ட் லக் வினவினார், "நாம் ஏன் பாபாவின் பேரின்பத்தைக் கேட்கக் கூடாது?"

இர்வின் லக் நினைத்தார், "நாம் அவரது காலடியில் தூசியாக மாற வேண்டும் என்று கேட்கலாம்."

அந்த நேரத்தில் பாபா மண்டபத்தில் தனியாக அமர்ந்திருந்தார். லக் சகோதரர்கள் மீண்டும் உள்ளே சென்று அவருக்கு இருபுறமும் நாற்காலிகளில் அமர்ந்தனர். நடுவில் இருவரையும் பார்க்காமல் அமர்ந்திருந்த பாபா, திடீரென அவர்களை நோக்கி கைகளை நீட்டி தன்னிடம் வருமாறு சைகை செய்து "**என்ன விஷயம்**?" என வினவினார்.

இர்வின், "பாபா, நான் உங்கள் காலடியில் தூசியாக மாற விரும்புகிறேன்" என்றதும், எட்வர்டும் அதையே கூறினார்.

பாபாவின் முகம் மாறத் தொடங்கியது; அவர் முகத்தில் அன்பும், அதன் பின்பு துன்பமும் தென்பட்டது. இது பலவிதமான உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளின் கலவையாக இருந்தது - ஒருவேளை அது உண்மையில் தூசி போல் இருப்பதை பிரதிபலிக்கிறது.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், லக் சகோதரர்கள் மீண்டும் மண்டபத்தை விட்டு கடைசியாக வெளியேற இருந்த அந்த நேரத்தில், மியாமி நகரிலிருந்து இரண்டு நண்பர்கள், ஃபில் கோவன்ஸ் மற்றும் எட்வர்ட் ஷார்ட் (FHIL COWANS & EDWARD SHORT) அவர்களுடன் இருந்தனர். (இருவரும் அமெரிக்க விமானப்படையில் இருந்தபோது பாபாவைப் பற்றி இர்வின், ஃபில் கோவன்ஸிடம் கூறியதைத் தொடர்ந்து, ஃபில், எட்வர்ட் ஷார்ட்டிடம் கூற

நேர்ந்தது.) பாபா, '**இப்போது அவர்களுடைய திட்டம் என்ன**' என்று கேட்டார். அவர்கள் (லக் சகோதரர்கள்) நியூயார்க்கிற்குத் திரும்பிச் செல்ல விரும்புவதாக இர்வின் கூறினார், அங்கு அவர் வாழ்வாதாரத்திற்காக கார் ஓட்டுநராகப் பணிபுரிந்தார்.

இது குறித்து மேலும் விவாதிக்கப்பட்டது; பாபா சில கேள்விகளைக் கேட்டார். அவர்களின் தந்தை அவர்களுக்கு எந்த நிதியுதவியும் வழங்க மறுத்துவிட்டதால், பாபா, அக்டோபர் 17 அன்று ஹாரி கென்மோருக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்; லக் சகோதரர்கள் இந்தியா செல்வதற்குத் தேவையான பணத்தைக் கடனாக வழங்குமாறு அறிவுறுத்தியிருந்தார். இப்போது இந்த சந்தர்ப்பத்தில், '**அவர்கள் நியூயார்க் நகருக்குத் திரும்பிச் சென்றதும், அனைத்து கடன்களிலிருந்தும் தங்களை தாங்களே விடுவிக்குமாறு**' பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார், மேலும், "**எல்லா பிணைப்புகளிலிருந்தும் உங்களை விடுவித்து, என் அழைப்புக்குத் தயாராக இருங்கள்**" என்றும் கூறினார். நான்கு இளைஞர்களையும் பார்த்து, '**சென்று வாருங்கள்**' என்று சைகையால் தெரிவித்தார்.

1962 ஜூலை 29 அன்று பாபா, ஃபில் கோவன்ஸுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பியிருந்தார்: "**கவலைப்படாதீர்கள், என் அன்பு உங்களை மகிழ்ச்சியாக இருக்கச் செய்யும். என்னை நினைவில் கொள்ளுங்கள்.**" ஆகஸ்ட் 15 அன்று பாபா அவருக்கு இவ்வாறு எழுதினார்: "**இறையுணர்வை அடைவதை விட மிகவும் இன்றியமையா தேவை, இறையுணர்வை அடையப் பெற்ற குருநாதர் ஒருவரிடம் முழுமையாக சரணடைந்து, அவரது நட்பை அடைவது மட்டுமே என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் இதயத்தை நீங்கள் பிற அனைத்திலிருந்தும் எந்த அளவுக்குத் தூய்மையாக வைத்திருக்கிறீர்களோ அந்த அளவுக்கு நீங்கள் நேசிப்பீர்கள்.**"

கிழக்கு-மேற்கு சகவாசத்தில் முதல் மற்றும் ஒரே ஒரு முறை பாபாவை சந்தித்த பல மேற்கத்திய அன்பர்களைப் போலவே, இருபது வயதான, ஃபில் கோவன்ஸ் என்ற இளைஞரும் மறக்கமுடியாத அனுபவங்களை அடையப் பெற்றார். அவர் முதலில் பாபாவைத் தழுவச் சென்றபோது, பாபா அவரை வெகுநேரம் இறுகப் பற்றிக் கொண்டார்; அதனால், தான் அவரால் நசுக்கப்படுவதையும், அவர் உயிரை இழக்கப் போவதைப் போலவும் கோவன்ஸ் உணர்ந்தார்! மூச்சடைத்த நிலையில், தனது முழு பலத்துடன், பாபாவை சற்று தள்ளிவிட வேண்டிய சூழ்நிலை; பாபா எதையும் கண்டுகொள்ளாத போது, கோவன்ஸ் கண்ணீருடன் மீண்டும் தனது இருக்கைக்குச் சென்றார். இருப்பினும், பாபாவின் சக்தியை உணர்ந்த அந்த அனுபவம், அவரது நினைவில் என்றென்றும் ஆழமாகப் பதிந்திருந்தது.

தரிசனத்திற்குப் பின்னர் ஒரு நாள், ஃபில், பாபாவுடன் தனியாக இருந்த அந்தத் தருணத்தில், ஃபில் எடுத்துரைத்ததை பாபா கேட்டுக்கொண்டிருந்தார்; இது பாலியல் தொடர்பானது. பாபா சைகையால் பதிலளித்ததை ஃபில் புரிந்துகொள்ள

இயலாததைக் கூறியதும், எரச் உடனடியாக உதவ முன்வந்து பாபாவின் வார்த்தைகளை விளக்கினார்: **“இந்தப் பிரச்சினை குறித்துக் கவலைப்பட வேண்டாம். பாபா உங்களுக்கு உதவுவார்.”**

1962 நவம்பர் 1 வியாழன் அன்று நண்பகல் முதல், குருபிரசாத் மற்றும் கிழக்கத்திய அன்பர்கள் தங்கியிருந்த இடங்களுக்கு இடையே, வாடகைப் பேருந்துகள் இயக்கப்பட்டு, குருபிரசாத்தின் நுழைவாயிலுக்கு அனைவரும் அழைத்து வரப்பட்டனர். இரண்டு மணியளவில் பிரதான பந்தலுக்கான வாயில் திறக்கப்பட்டது, மக்கள் கூட்டம் அலைமோதியது. சில நிமிடங்களில் பந்தல் நிரம்பி வழிந்தது. 5,000 மக்களுக்கும் மேற்பட்டோர் ஒன்றுதிரண்டிருந்தனர். மேற்கத்திய அன்பர்கள் முன்புறமும், கிழக்கத்திய அன்பர்கள் அவர்களுக்குப் பின்னும், பெண்மணிகள் பாபாவின் இடதுபுறமும், ஆண்கள் வலதுபுறமும் அமர்ந்தனர்.

தரிசனத்தின் நான்கு நாட்களிலும் பாபாவிற்கு தசைப்பிடிப்பு தொடர்ந்தாலும், அவர் சகவாச பந்தலுக்கு வரும்போதெல்லாம் அந்தத் தசைப்பிடிப்பு ஆச்சரியமளிக்கும் விதத்தில் மறைந்தது. மதியம் 2:30 மணிக்கு பாபா, சிரித்துக்கொண்டே ஒளிரும் முகத்துடன் அங்கு வந்தவர், முழுப் பார்வையாளர்களும் எழுந்து நிற்க, மேடையில் ஏறினார். ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்’ என்ற தன்னிச்சையான முழக்கங்கள் எங்கும் ஒலித்தன! பாபாவின் முகம் பிரகாசமாக இருந்தது. அவர் அணிந்திருந்த நீள, வெண்ணிற சத்ரா, அவரை மேலும் ஒளிரச் செய்தது. அவரது பரந்த, கச்சிதமான நெற்றியின் அழகை வெளிப்படுத்தும் விதத்தில், அவரது தலைமுடி பின்னால் இழுக்கப்பட்டு, பின்னலிட்டு, இளஞ்சிவப்பு நிற நாடாவால் கட்டப்பட்டது. அவர் ஒளிரும் சூரியனைப் போலப் பிரகாசமாகத் தோற்றமளித்தார்; மேலும் அவர் முன்னால் இருப்பவர்களைப் போலவே பின்புறத்தில் இருப்பவர்களுக்கும் அற்புதமான பொலிவுடன் தென்பட்டார். வெகு தூரத்தில் அமர்ந்திருந்தவர்களும் பாபா, தங்கள் அருகில் இருப்பது போலவும், அவரைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது போலவும் உணர்ந்தனர்.

பாபாவுடன் மேடையில் மஹாராணி ஷாந்தாதேவி, யோகி ஷுத்தானந்த் பாரதி, பாலக் (மெஹர்) பஹவான், எரச், ஆதி (குருபிரசாத்தில் தங்கியிருந்தவர்) ஆகியோர் அமர்ந்திருந்தனர். கேஷவ் நிகம், குடும்ப சாஸ்திரி, டாக்கே, புர்ஜர் மேத்தா ஆகியோர் பாபாவின் உரைகளை வெவ்வேறு மொழிகளில் எடுத்துரைத்தனர். எரச், பாபாவின் சைகைகளை விளக்கிக் கொண்டிருந்த வேளையில், பேசப்படாத வார்த்தைகள் இந்தி, தெலுங்கு, மராட்டி மற்றும் குஜராத்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. பாபாவிற்குப் பின்னால் டாக்டர் தனபதி ராவும் மேடையில் அமர்ந்திருந்தார்.

பாபா அவரது உரையை இவ்வாறு தொடங்கினார்:

**நீங்கள் இங்கே இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அன்பு உங்களை இங்கு அழைத்து வந்தாலும், உண்மையில்**

**பாபாவின் அன்புதான் உங்களை என்னிடம் இந்த சகவாசத்திற்காக ஈர்த்தது. கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார், கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை இந்த அன்பு ஒரு நாள் உங்களை அனுபவிக்கச் செய்யும்.**

வானிலை வெதுவெதுப்பாகிக் கொண்டிருந்தது; மேலும் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து பலர் ஒரே குடும்பமாக ஒன்றுகூடிய அசாதாரண காட்சியைக் காண்பது போல, வானத்தில் மேகங்கள் உருவாகத் தொடங்கின. பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஹாரி கென்மோர் எழுந்து நின்று, குருநாதரின் பிரார்த்தனையை (MASTER'S PRAYER) ஒலிபெருக்கியில் மொழிந்தார். அது பந்தல் முழுவதிலும் அமைதியாகப் பரவி, இனிமையான, புனிதமான சூழலை உருவாக்கியது.

அப்போது பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**ஹாரி மொழிந்த பிரார்த்தனை உங்களில் சிலரை, கடவுள் இங்கே இருப்பதாக உணர வைத்தது. என் அன்பு ஒரு நாள், கடவுள் எல்லோரிடமும் இருக்கிறார் என்பதை உணரச் செய்யட்டும்!**"

பாபா தொடர்ந்து கூறினார்:

**நான் மேற்கத்திய அன்பர்களை சந்தித்து, அவர்களுக்கு என் அரவணைப்பையும், அன்பையும், பல்வேறு உரைகளையும் வழங்கி வருகிறேன். இன்று கிழக்கு-மேற்கு சகவாசத்தின் முதல் நாள். கிழக்கத்திய அன்பர்கள் ஒவ்வொருவராக என்னிடம் வந்து, எனது முழங்காலை கைகளால் தொட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; அப்போது நான் ஒவ்வொருவருக்கும் எனது ஸ்பரிசத்தை வழங்குவேன். அது நான் அவர்களைத் தழுவி, சந்திப்பதற்கு சமம். எனவே இப்போது வாருங்கள்; ஒவ்வொருவராக வாருங்கள். இன்று நீங்கள் அனைவரும் என்னிடம் வர முடியாத பட்சத்தில் எஞ்சியுள்ள அன்பர்கள் நாளை வரலாம்.**

**இந்த சகவாசத்தின் நோக்கம், என் அன்பர்களுக்கு சொற்பொழிவுகளையும், செய்திகளையும் வழங்குவது அல்ல. கடந்த காலங்களில் பல சொற்பொழிவுகளும் செய்திகளும் வழங்கப்பட்டுள்ளன. சொற்பொழிவுகளின் மற்றொரு தொகுப்பு அதி விரைவில் ஆஸ்திரேலியாவில் அச்சிடப்படும். எல்லா சொற்பொழிவுகள் மற்றும் செய்திகளை விட, என் மீதான உங்கள் அன்பு, நீங்கள் என்னிடம் வர வேண்டிய விதத்தில் உங்களை என்னிடம் கொண்டு வரும்.**

இதை மொழிபெயர்த்த பின்பு, பூனா பஜன் குழுவினர் பாடியதைத் தொடர்ந்து, முதலில் ஆஸ்திரேலியக் குழுவும், அடுத்ததாக கிழக்கத்திய பெண்மணிகளும் பாபாவை சந்தித்தனர். திடீரென, முழு வானமும் மேகங்களால் மூடி, இருள் நிறைந்து, எதிர்பாராமல் பலத்த மழை பொழியத் தொடங்கியது. காலம் இதை இவ்வாறு அவதானித்தது: "பூமியில் அனைத்து படைப்புகளின் தந்தை, தனது குழந்தைகளை சந்திப்பதைக் கண்டு அகமகிழ்ந்த வானுலக தெய்வங்கள், அன்பின் மழையைப் பொழிந்தது! அனைத்து மனிதகுலத்தின்

தந்தையும் தனது குழந்தைகளை அகமும், புறமும் நீராட்டி, தமது ஆசீர்வாதங்களால் நிரம்பி வழிந்த மழையைப் பொழிந்தார்!"

டெக்ஸ் ஹைடவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பந்தலுக்குள் நிலவிய உணர்வு, எரிமலையை ஒத்ததாக இருந்தது. நாங்கள் அனைவரும் இதற்கு முன்பு கனமழையில் நனைந்தோம், ஆனால் இங்கே ஏதோ ஒன்று இருந்தது; நிச்சயமாக அது அச்சுறுத்தலாக இல்லை என்றாலும், அபரிமிதமான சக்தி வியாபித்திருந்தது போலத் தோன்றியது. பாபா தனது நாற்காலியில் அமர்ந்து முன்னும் பின்னுமாக நூலால் நெய்வது போன்ற காட்சியை நான் கண்டேன். அவரது முகம் அபார சக்தியின் வெளிப்பாடாகத் தென்பட்டது. அது உண்மையில் ஓர் அற்புதமான காட்சி."

பந்தலின் மேல்புறம் துணியாலான கூரை, காற்றில் ஆவேசமாக படபடவென அடித்துக்கொண்டு சில இடங்களில் கீறல் விழத் தொடங்கியது. இறைத் தந்தையை அணுகும் எண்ணத்தில் காத்திருந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை முழுவதுமாக நனைத்த வண்ணம் தண்ணீர் கொட்டியது. ஏறக்குறைய அனைவரும் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தனர். தண்ணீர் எங்கும் நிறைந்து, மண் தரை சேறும் சகதியுமாக மாறியது. ஆனால் இந்தத் திடீர் 30 நிமிட கன மழையிலும் கூட, பாபா இரண்டு வரிசைகளில் தன்னை நெருங்கிக் கொண்டிருந்த தமது அன்பர்களைத் தொடர்பு கொண்டார். ஒவ்வொருவரையும் நீண்ட நேரம் காத்திருக்க வைக்காமல், மக்கள் வரிசைகளில் விரைந்து செல்லுமாறு ராமகிருஷ்ணன் சைகை செய்துகொண்டிருந்தார்.

மேற்கத்திய பெண்மணிகளை குருபிரசாத் பங்களாவிற்குள் நுழையுமாறு பாபா அறிவுறுத்தினார், ஈரமான ஆடைகளை மாற்றிக்கொண்டு, பெண் மண்டலியின் அலமாரிகளிலிருந்து தங்களுக்குப் பொருத்தமான ஆடைகளை அணிந்துகொண்டனர். இது 'கிழக்கு-மேற்கு' பரிமாற்றத்தின் ஒரு வேடிக்கையான காட்சியாக இருந்தது, மேலும் சில மறைக்கப்பட்ட முக்கியத்துவங்களை உள்ளடக்கியது என்பதில் சந்தேகமில்லை.

1962 டிசம்பர் மாதத்திற்குப் பின்னர், உலக சூழ்நிலைகள் வெகுவாக மாறும் என்ற பாபாவின் கருத்துக்களுக்கு 'இந்தத் திடீர் ஆடை பரிமாற்றம் எப்படியோ ஒரு விதத்தில் ஓர் அடையாளச் சின்னமாக அமைந்தது' என்று மணி யூகித்தார். பாபா முன்னிலையில், குறிப்பாக அழகாகத் தோன்ற வேண்டும் என்ற ஆர்வத்தில், தலைமுடி அலங்காரங்களைச் செய்துகொண்ட பெண்மணிகளில் பலர் இப்போது முழுவதுமாக நனைந்து ஈரமாகிவிட்டனர்!

வெளியே ஒலிபெருக்கி பழுதாகிவிட்ட நிலையில், பாபா, "**ஒலிபெருக்கி இல்லாவிடிலும், என்னை தொடர்ந்து நினைவில் கொள்ளுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

மாலை 4:45 மணிக்கு மேற்கத்திய அன்பர்கள் பாபாவை சந்திக்க மேடையை நோக்கிச் சென்றபோது, அவர் குறிப்பிட்டார், "**இந்த மழை மிகவும் குறிப்பிடத்தக்கது. இது கிழக்கையும் மேற்கையும் ஒன்றிணைக்கும் ஒரு தனித்துவமான சகவாசம்.**"



**கிழக்கு-மேற்கு  சகவாசம், நவம்பர் 1962**
(EAST-WEST GATHERING, NOVEMBER1962)

மாயா அதன் கைவண்ணத்தைக் காட்டிக் கொண்டிருந்த அதே வேளையில், ஆதிகால புருஷர் அவரது பணியை கச்சிதமாக செய்து கொண்டிருந்தார்; மேலும், மழை நீரில் முழுவதுமாக நனைந்து ஈரமான அவரது அன்பு குழந்தைகள், ஒவ்வொருவராக அவரிடம் சென்று தங்கள் பங்கை ஆற்றிக்கொண்டிருந்தனர். அனைத்தும் ஓர் அற்புதமான காட்சியாக இருந்தது. முற்றிலும் நனைந்து ஈரமாக இருந்தாலும், எவரும் பந்தலை விட்டு வெளியேறவில்லை. "மக்கள் புனித கங்கை நதியில் நீராட, புண்ணிய ஸ்தலங்களுக்குச் யாத்திரை செல்கிறார்கள், ஆனால் இங்கே நம் அன்பான அவதார புருஷர் (கலியுக அவதாரம்) நமது பாவங்களைக் கழுவி, அகமும் புறமும் நம்மைத் தூய்மைப்படுத்துகிறார்!"

பாபாவுடனான தனிப்பட்ட சந்திப்புகள் தொடர்ந்தன, சற்று நேரத்தில் மேகங்கள் கலைந்து சூரியன் மீண்டும் ஒருமுறை தனது முகத்தைக் காட்டியது. இவ்வாறு மழையிலும், வெயிலிலும், பிரியமான இறைத் தந்தை தனது அன்பு குழந்தைகளை மாலை 5:00 மணி வரை தொடர்பு கொண்டார். பாபாவை சந்திக்கும் நோக்கத்தில் மக்கள் மேடையில் குவியத் தொடங்கினர், பதிமூன்று வயதான சார்லஸ் ஹெய்ன்ஸ் மற்றும் அவரது சகோதரர் ஜான், கூட்டத்தை ஒழுங்காகக் கட்டுப்படுத்துவதில் உதவியாக இருந்தனர். ஓர் அற்புதமான சூழல் நிலவியது; அன்பர்கள் அனைவரும் அதை மிகவும் ரசித்தனர்.

மாலை 5:15 மணிக்கு மதுசூதனன் தலைமையிலான ஏழு சிறுமிகள் குழு, ஒவ்வொருவரும் பாபாவின் ஏழு வண்ண ஆடைகளில் ஒன்றை அணிந்து, மேடையில் பாபாவிற்கு முன்பாக அரைவட்டத்தை உருவாக்கி, அவரது ஆரத்தியை நிகழ்த்தினர். நான்கு சிறுமிகள் தட்டுகளில் கற்பூரம் ஏற்றி, புராண மந்திரங்களை உச்சரித்து, முதலில் பாபாவின் பூஜையை நிறைவு செய்து, மதுசூதனன் இந்தி மொழியில் இயற்றிய ஆரத்தியைப் பாடவே, பார்வையாளர்களும் ஒன்றிணைந்து பாடினர். மார்கரெட் க்ராஸ்கேயின் பாலே நடனக் கலைஞர்களில் ஒருவரான பன்டி பெர்ன்ஸ்டீனை (BUNTY BERNSTEIN), பாபா அவர்களுடன் இணைந்து நடன நிகழ்ச்சியில் பங்கெடுக்க மேடைக்கு வரவழைத்தார்.

இத்துடன் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவடைந்தது. பலர் பாபாவைத் தங்கள் மனதிற்கு நிறைவாகப் பார்க்க மேடையில் குவிந்தனர். ஜெய் கோஷங்கள் காற்றில் அலைமோதின, உற்சாகமான உள்ளங்கள், பாபாவைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு, மறுநாள் மீண்டும் வரும் ஆயத்தத்தில் புறப்பட்டுச் சென்றன.

அன்று இரவு மீண்டும் பலத்த மழை பெய்தது. எனவே மறுநாள் காலை எட்டு அல்லது பத்து லாரிகளில் காய்ந்த மண் பந்தலுக்குள் கொண்டு வரப்பட்டு, சேறும் சகதியுமாக இருந்த பாதைகள் சீராக்கப்பட்டது. பூனா நகராட்சியின் பொதுநலத் துறை பொறியியலாளர் புர்ஜர் போடே (BURJOR BODE) இந்த

முயற்சியில் மிகவும் உதவியாக இருந்தார். பிற்பகலில் அனைத்தும் சீரான நிலையில் பந்தல் பயன்பாட்டுக்கு வந்தது.

1962 நவம்பர் 2 வெள்ளிக்கிழமை காலை 9:00 மணிக்கு, மேற்கத்திய அன்பர்கள் குருபிரசாத்தை வந்தடைந்தனர். பாபா அவர்களிடம், **“நேற்று உங்களில் யார் யார் நனைந்தீர்கள்?”** என்று கேட்டபோது அனைவரும் கைகளை உயர்த்தினர். **“எவரையேனும் சளி தொற்றிக்கொண்டதா? இல்லை? இது ஓர் அற்புதமான ஆடைகளின் ஒத்திகை!”** என்று கூறியதும் அன்பர்கள் அனைவரும் பாபாவின் நகைச்சுவையை வெகுவாக ரசித்தனர்.

**“எலிஸபெத், அந்தப் பழுப்பு நிற நீள் மேலங்கியில் நீங்கள் மிகவும் அழகாக இருந்தீர்கள்.”**

எலிஸபெத், மேலங்கியை இந்தியாவில் விட்டுச் சென்ற, ‘பத்து வருடங்களுக்குப் பின்னர் அது என்னிடம் மீண்டும் வந்தது!’ என்றார்.

பாபா இவ்வாறு அவதானித்தார்:

**இது ஓர் உண்மையான கிழக்கு-மேற்கு சங்கமம்! வந்தவர்களில் நான்கில் ஒரு பகுதியினரை மட்டுமே சந்தித்து வாழ்த்த முடிந்தது; இன்று நான் எஞ்சிய முக்கால்வாசி அன்பர்களை சந்திப்பேன். எனவே இன்று சீக்கிரமாக வாருங்கள்; இரண்டு மணிக்கே வந்துவிடுங்கள். அவசர முட்டல் மோதல்களுக்குத் தயாராக இருங்கள். இந்தக் கூட்டத்தில் ஒன்றும் இல்லை. வெகுஜன தரிசன நிகழ்ச்சிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நான் ஆயிரக்கணக்கான மக்களைத் திருப்திப்படுத்த வேண்டியிருந்தது; இருந்தும் அதை நான் செய்தேன். இப்போது வந்திருப்பவர்கள், என் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்கும் நெருங்கிய அன்பர்கள் மட்டுமே. அதனால்தான் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பொது தரிசனம் வழங்கும் வேளையில், நான் மனித உருவில் வந்த அவதார புருஷர் என்பதை உணராமல் - அவர்கள் என் மீது வீழ்வதையும், எனது பாதங்களில் தேங்காய் உடைப்பதையும், வண்ணப் பொடிகளையும், தானியங்களை எனது தலையில் வீசுவதையும் மண்டலி தடுக்க வேண்டியதாகிறது. குங்குமம்** (சிவப்பு நிறப் பொடி) **எனது கண்களை பாதிக்கும் என்பதைக் கூட அவர்கள் உணரவில்லை.**


பாபா அவர்களின் உடல்நிலையைப் பற்றிக் கேட்டார், பின்னர் அவர் மரியன் ஃப்ளோர்ஷெய்ம் (MARION FLORSHEIM - புனைப்பெயர் எனர்ஜி - ENERY) மற்றும் ஸரோன்ஹி பஹ்ஜெஜியன் (ZARONHI BAHJEJIAN) ஆகியோரின் பயண ஆவணம் (பாஸ்போர்ட்) மற்றும் பணம் அவர்களின் ஹோட்டல் அறைகளிலிருந்து திருடப்பட்டதாகக் குறிப்பிட்டார். **“எனர்ஜி எதையோ இழந்தது ஆச்சரியமாக இல்லையா?”** என்று பாபா கேட்டார்.

எனர்ஜி பதிலளித்தார், “நான் எல்லாவற்றையும் இழந்திருந்தால், இங்கேயே இருக்க முடியும்!”

**"இது போன்ற பெரிய கூட்டங்களைப் பற்றிய செய்தி வெளிவரும் வேளையில் குண்டர்களும், கைப்பை கொள்ளையர்களும் நகரத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள்"** என்று பாபா விளக்கினார். ஆனால் அவரது வெகுஜன தரிசன சுற்றுப்பயணங்களில் (ஆந்திராவில்) 60,000 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பங்கெடுத்த கூட்டத்தில் திருடர்கள் இல்லை. ஒருமுறை ஒரு மனிதன் எரச்சின் கழுத்தை கையால் சுற்றிக் கொண்டு, சட்டைப் பையிலிருந்து ரூபாய் நோட்டுகளை எடுக்க முயன்றபோது, எரச் அவனைக் கையும் களவுமாகப் பிடித்தார்; ஆனால் பாபா, எரச்சிடம் அவனுக்கு அந்தப் பணத்தைக் கொடுக்குமாறு அறிவுறுத்தினார். **"இது உங்கள் தவறு, அவனுடையது அல்ல,"** என்று அவர் எரச்சிடம் கூறினார்.

அப்போது பாபா கூறினார், **"நேற்று எதிர்பார்த்த 3,000 நபர்களுக்கும் மேலாக ஏறக்குறைய 5,000 பேர் பங்கெடுத்தனர். கடைசி நிமிடத்தில் பலர் வந்தனர். அதனால் எனக்கு இன்று வேலை அதிகமாக உள்ளது. மேடையில், இடுப்பில் சிவப்பு லங்கோட்டி அணிந்து கொண்டிருக்கும் இளைஞரை கவனித்தீர்களா? அவர் பாலக் பஹவான் என்று அழைக்கப்படுகிறார். மத்திய இந்தியாவில் மக்கள் அவரை ஓர் அவதாரம் என்று நம்புகிறார்கள். வழிபாடு, மரியாதை போன்றவற்றை ஏற்றுக்கொள்ள கூடாது என்றும், இறையுணர்வை அடையப்பெறாமல் அவ்வாறு செய்ய அவருக்கு அதிகாரம் இல்லை என்றும் அறிவுறுத்தினேன். பாலக் பஹவான் எனக்கு மரியாதை செலுத்த வந்துள்ளார், அவர் என்னை மிகவும் நேசிக்கிறார்.**

**"இந்தியாவில் இவரைப்போன்ற எத்தனையோ துறவிகள் உள்ளனர். ஒரு மனிதர் (கிருஷ்ணாஜி) எனது பொறுப்பாளர் என்று கூறிக்கொண்டு, என் அன்பர்களிடம் பணம் கோரினார். அவர் ஆன்மீகத்தில் வகுப்புகள் நடத்துகிறார், ஆனால் அவருக்கு ஆன்மீகப் பாதை மற்றும் அதன் இடர்பாடுகள், அன்பு, சரணாகதி குறித்த எதுவுமே தெரியாத பட்சத்தில், இறையுணர்வு தொலைதூர சமாச்சாரம். சமீபத்தில் அவர் கனடா நாட்டுக்குச் சென்று அப்பாவி மக்களை அவர் ஓர் ஆன்மீக குருநாதர் என்று நம்ப வைத்தார்."**




**அளவிறுதியற்ற உண்மைப்பொருளிலிருந்து வெளிவரும் அதீத, வரையறுக்கப்பட்ட மையப்புள்ளி (ஓம்) எல்லையற்ற ஆழ் மன, சூட்சும, பௌதீக உலகங்களுக்கு வழிவகுக்கும்**

# கிழக்கு-மேற்கு சகவாசம் - பாகம் 2

(**East-West Gathering – Part 2**)

ஃபிரான்சிஸ் பிராபஸோன், ரானோவின் கைவண்ணத்தில் உருவான 'நான்கு இறைப் பயணங்கள்' (THE FOUR JOURNEYS) எனும் பெரிய விளக்கப்படத்தை அன்பர்களுக்கு விளக்குவதற்காக, பாபா முன்னிலையில் தயார் நிலையில் வைத்தார்.

பாபா அவரது உரையை இவ்வாறு தொடங்கினார்: "**இது நான்கு இறைப் பயணங்களின் விளக்கப்படம்.**" சார்லஸ் பர்டத்தைச் சுட்டிக்காட்டி, பாபா கேட்டார், "**சார்லஸ், உங்களால் அதைப் பார்க்க முடிகிறதா? ஒரு கடினமான விஷயம், இங்கே மிக எளிமையான முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. உங்கள் கல்வியறிவு மூலம், எளிமையான விஷயங்கள் மிகவும் கடினமாகிவிட்டன.**"

பின்பு பாபா தமது விளக்கத்தைத் தொடங்கினார்:

**நீங்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவிற்குப் பயணம் செய்யும்போது, அது போல சில மனிதர்கள் சந்திரன், வீனஸ் அல்லது செவ்வாய் கிரகத்தைச் சென்றடைய முயலும்போது, நீங்கள் இடம் விட்டு இடம் வெளிப்புறமாகப் பயணம் செய்கிறீர்கள். உண்மையான, உள்நோக்கிய பயணம் குறித்து, நாம் இங்குப் பேசப்போகிறோம். நான் கூறும் இந்த இரண்டு வாக்கியங்களையும் நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்: கடவுள் எல்லையற்றவர்; அவருடைய நிழலும் எல்லையற்றது. கடவுளின் நிழல் எல்லையற்ற வெற்றிடம், வெளி உலகம், அதில் எல்லையற்ற பௌதீகக் கோளம் உள்ளது.**

பாபா கூறியதற்கு இணங்க, விளக்கப்படத்தில் குறிப்பிட்ட வரிகளை ஃபிரான்சிஸ் சுட்டிக்காட்டினார்:

**இந்த எல்லையற்ற பௌதீகக் கோளம் கடவுளின் எல்லையற்ற நிழலில் உள்ளது. இதெல்லாம் கடவுள், எல்லையற்ற கடவுள். நிச்சயமாக, அவர் எல்லையற்றவர், வரம்பற்றவர், ஆனால் இதை எப்படியேனும் விளக்கப்படத்தில் காட்ட வேண்டும்.** (பிரான்சிஸ் விளக்கப்படத்தின் வெளிப்புற விளிம்பில் இருந்த புள்ளியிடப்பட்ட கோடுகளை சுட்டிக்காட்டினார்.) **கடவுள் வரம்புகளால் கட்டுப்படுத்தப்படவில்லை. கடவுள் எல்லையற்றவர்; எனவே, அவரது நிழலும் எல்லையற்றது.**

**அவரது நிழலில் கோடிக்கணக்கான பிரபஞ்சங்களை உள்ளடக்கிய இந்த எல்லையற்ற பௌதீகக் கோளம் உள்ளது. எண்ணற்ற பௌதீகப் பிரபஞ்சங்கள், எண்ணற்ற விண்மீன் திரள்கள் உள்ளன - நீங்கள் அவற்றை கணக்கிடவோ, எண்ணவோ முடியாது. அறியப்பட்ட மற்றும் அறியப்படாத எண்ணற்ற விண்மீன் திரள்கள் அதில் உள்ளன; எண்ணற்ற நட்சத்திரங்கள்,**

சூரியன்கள், சந்திரன்கள் - மேலும் மனிதர்கள் வாழும் சில உலகங்களும் உள்ளன. ஆனால், இந்த 'வாழ்வதற்கு உகந்த' மற்றும் ஒவ்வாத உலகங்கள் அனைத்திலும், இந்த பூமிக்கு ஒரு தனி இடம் உண்டு. சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களின் அனுபவங்களை மனிதர்களால் அடையப்பெற முடிகிற ஒரே இடம் இது. இந்த பூமியில் மட்டுமே மனிதன் இறைநிலையை எய்த முடியும்.

சூட்சும உலகில் வெளியிடம் என்று ஒன்று இல்லை. ஒருவன் தனக்குள்ளேயே சூட்சும உலகைக் காண்கிறான்; அதற்கும் வெளியிடம் அல்லது விண்வெளிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை - இது உள்ளளவிலான ஒரு பயணம். எனவே, வெளியுலகில் அல்லது விண்வெளியில் நாம் பார்க்கும் அல்லது கேட்கும் அனைத்து வானுலக விஷயங்களும் முக்கியமல்லாதவை மட்டுமல்ல, முற்றிலும் ஒன்றும் இல்லாதவை. எல்லையற்ற பௌதீகக் கோளமே மாயை; அதற்கு எந்த மதிப்பும் இல்லை.

ஆனால் பூமிக்கு மட்டுமே அதற்குரிய மதிப்பைக் குறிப்பிடலாம்; அங்கு ஒருவர் உண்மையான உட்சுழற்சி பயணத்தைத் தொடங்குகிறார். அந்தப் பயணத்தின் போது ஆர்வலர், சூட்சும உலகை அனுபவிக்கத் தொடங்குகிறார், ஆனால் அது விண்வெளியின் அல்லது வெளியுலகின் அனுபவம் அல்ல, ஏனெனில் சூட்சும உலகம் விண்வெளியின் உலகம் அல்ல, ஆனால் அது ஓர் உயர்தரமான உணர்வு. இது மிகவும் மாறுபட்ட அளவிலான, பக்குவமடைந்த உணர்வு நிலை. உள்ளே பயணிக்கும் ஒருவருக்கு அனைத்தும் அப்படியே இருக்கும்; ஆனால் அவரது அனுபவங்கள் வேறுபட்ட இயல்புடையவை. சூட்சும உலகை ஒருவர் அனுபவிக்கும் போது, அவர் பௌதீக உலகை அனுபவிப்பதில்லை. அந்தப் பௌதீக உணர்வு இப்போது இல்லாத பட்சத்தில் அது சூட்சும உணர்வாக மாறிவிட்டது.

அவர் மேலதிக தூரம் பயணிக்கும் வேளையில் - பயணம் விண்வெளியில் அல்ல; அவர் இருக்கும் இடத்திலேயே இருக்கிறார் - அவரது உணர்வு மேலும் முதிர்ச்சியடைகிறது. இந்த உணர்வு இப்போது, ஆழ் மன உலகிற்குரியது, சூட்சும அல்லது பௌதீக உலகிற்கு உரியது அல்ல. பின்னர் அவர், பிற தனிப்பட்ட மனங்களின் எண்ணங்களை அறியத் தொடங்குகிறார், ஒருவர் என்ன நினைக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். அதன் பின்னர் அவர் உண்மையில் தனக்குள்ளேயே எல்லையற்ற கடவுளைக் காணும்போது, ஓர் உயர்வான நிலை எட்டப்படுகிறது; இந்தப் 'பார்வை' என்பது எல்லா இடங்களிலும் கடவுளைக் காண்பதாகும்.

அதன் பின்னர் அவர் ஒரு பள்ளத்தாக்கை எதிர்கொள்ளும் தருணத்தில், ஆழ் மன உலகில் ஒரு நிலையை எட்டுகிறார். அதிலிருந்து அவர் கடந்து செல்ல மேலும் இரண்டு சிகரங்கள் உள்ளன. தனக்கும் கடவுளுக்கும் இடையே, அவர் ஒரு வளைகுடாவை அல்லது பள்ளத்தைப் பார்க்கிறார். அவர் கடவுளை முழு நம்பிக்கையுடன் பார்க்கிறார், ஆனால் அவருடன் ஒன்றிணைய முடியாத நிலை. இதுவே அதீத ஏக்கத்தின் நிலை -

எல்லையற்ற பிரிவின் ஏக்கம். அவர் கடவுளுடன் ஒன்றிணைய விரும்புகிறார், ஆனால் மாயைக்கும், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளுக்கும் இடையிலான இடைவெளி காரணமாக அது சாத்தியமற்றதாக உள்ளது.

ஒருவர் உள்ளத்துள் ஆழ்ந்து பயணிக்க முனைந்தால், அவர் கடவுளாகிறார். மாயை மறைந்துவிடுகிறது. பிரபஞ்சம் என்பது இல்லை, மூவுலகங்கள் இல்லை, உடல் இல்லை, வெளி உலகமும் இல்லை என்று அவருக்குத் தெரியும் - இவை அனைத்தும் ஒரு நிழலின் நாடகம். கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார் என்பதை அவர் அனுபவிக்கிறார். அவர் கடவுளின் எல்லையற்ற அறிவு, சக்தி, பேரின்பம் அனைத்தையும் அனுபவிக்கிறார். ஆனால் அவர் அந்த அறிவு, சக்தி, பேரின்பம் எதையும் பிறருக்காக அல்லது எதற்காகவும் பயன்படுத்த முடியாது.

ஆழ் மன, சூட்சும மற்றும் பௌதீக உலகங்களின் அனுபவத்தையும் உள்ளடக்கிய எல்லையற்ற உணர்வின் அனுபவத்தைப் பெறும் அரிய ஒருவர், மூவுலகங்களின் அனைத்து நிலைகளுக்கும் கடவுளைக் கொணர முடியும். அவர் பன்முகத்தன்மையில் ஒற்றுமையைக் கொண்டு வருகிறார், பலவற்றில் ஏக இறைவனான ஒருவராகத் திகழ்கிறார். அதுவே கிறிஸ்துவின் உணர்வுநிலை. அவர் எல்லையற்ற அறிவையும், எல்லையற்ற சக்தியையும், எல்லையற்ற பேரின்பத்தையும் அனுபவிக்கிறார்; மேலும் மாயையில் உள்ள ஒவ்வொரு உயிரினத்திற்கும் அவர் அதைப் பயன்படுத்த முடியும்.

சுருக்கமாகச் சொன்னால், உண்மையான பயணத்தைத் தொடங்குவது மிகவும் கடினமான காரியம். உள்நோக்கிய பயணத்தோடு ஒப்பிடுகையில், விண்வெளியில் வெளிப்புறப் பயணங்களில் வெற்றி காண்பது, கண்டம் விட்டு கண்டம், கோளிலிருந்து கிரகம் செல்வது எளிது. ஆனால் இந்த விளக்கப்படம், மிகச் சிலரே ஏழாவது நிலையான நிர்வாண நிலையைச் (FANA) சென்றடைந்து, முதல் இறைப் பயணத்தின் முடிவில் கடவுளாக மாறுவதைக் காட்டுகிறது. மிக மிகக் குறைவானவர்களே இரண்டாவது இறைப் பயணத்தைத் தொடங்கி, அதை நிர்விகல்ப் சமாதி நிலையில் (BAQA) நிறைவு செய்து கடவுளில் நிலைத்திருக்கிறார்கள்.

அரிதான ஒருவரே மூன்றாவது இறைப் பயணத்தை சத்குரு அல்லது குதுப் எனும் பரிபூரண குருநாதரின் (PERFECT MASTER) நிலையை அடையப் பெற்று கடவுளின் வாழ்க்கையை வாழ்கிறார். நான்காவது இறைப் பயணம் கடவுளாகக் கடந்து செல்வது. கடவுளாக, பரிபூரண குருநாதர் தனது பௌதீக, சூட்சும மற்றும் ஆழ் மன வாகனங்களைக் கைவிடுகிறார்; அதே நேரத்தில் எல்லையற்ற, தனித்துவமான உறுதிப்பாட்டை தக்க வைத்துக் கொள்கிறார். கிறிஸ்து, இயேசுவைப் போலவே, என்றென்றும் கடவுளாக இருக்கிறார், ஏனெனில் அவர் எல்லையற்ற தனித்துவமான உறுதிப்பாட்டை நிலைநிறுத்தி, எக்காலத்திற்காகவும் கடவுளாக இருக்கிறார்.

**உங்களால் இந்த விளக்கத்தில் எதையேனும் புரிந்துகொள்ள முடிகிறதா? இல்லை என்றால், எந்த பாதகமும் இல்லை; அதை பற்றிக் கவலைப்படாதீர்கள். கடவுளை நேசிப்பது மனிதர்களால் சாத்தியமில்லை என்பதை இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார்; எனவே, இயேசு கூறினார்: "என்னிடம் வாருங்கள், என்னைப் பின்பற்றுங்கள்," அதுதான் உங்கள் அனைவருக்கும் இன்றியமையா தேவை.**

**அவதார காலகட்டங்களில், ஒருவர் இந்த உள்நோக்கிய இறைப் பயணங்களை நிலை நிலைகளாக மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவதார புருஷரின் கருணை உங்களை வந்தடையுமானால், அவர் உங்களை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து, நீங்கள் இருக்க வேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்கிறார் - அதாவது, கடவுள், நீங்கள் எங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ, அந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிறார். அவர் இங்கே இருக்கும் வேளையில் 'ரயில்கள் அல்லது விமானங்கள்' எதுவும் தேவையில்லை!**

அப்போது எரச், 'நான்கு இறைப் பயணங்கள்' - THE FOUR JOURNEYS, (தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங் - THE EVERYTHING AND THE NOTHING என்ற தலைப்பில் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டது) என்ற சொற்பொழிவைப் படித்தார்; பாபா இடையிடையே தன்னிச்சையாக சில விஷயங்களை விளக்கினார். பாபா உரையைத் தொடர்ந்தார்:

**பிரபஞ்சத்தின் உருவாக்க மையப்புள்ளி 'ஓம்'** (THE CREATION-POINT) **ஒரு வரையறுக்கப்பட்ட மையப்புள்ளி; இந்த வரையறுக்கப்பட்ட புள்ளியிலிருந்து எல்லையற்ற படைப்பு முழுவதும் வெளிப்படுகிறது. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறை; அதற்கு முடிவே இல்லை. உருவாக்க மையப்புள்ளி ('ஓம்') என்று அழைக்கப்படும் அளவிறுதியற்ற தன்மையின் ஒரு மிகச்சிறிய புள்ளியிலிருந்து, இந்த முழுப் படைப்பும் வெவ்வேறு நிலைகளில் முளைத்துள்ளது. நம்முடைய இந்த உலகம் மிகவும் வரையறுக்கப்பட்ட புள்ளியைத் தவிர வேறொன்றுமில்லை. உங்களுக்கு அது உலகமாகத் தோன்றினாலும், எனக்கு அது ஒன்றும் இல்லை, ஒரு சிறு புள்ளியும் இல்லை.**

பல பிரபஞ்சங்கள் மற்றும் கண்ணுக்குத் தெரியக்கூடிய, தெரியாத, மற்றும் பல கிரகங்கள் பற்றிய சொற்பொழிவை எரச் தொடர்ந்து வாசித்தார், அவற்றில் ஏராளமான (18,000) மனித இனங்கள் வாழ்கின்றனர்.

பாபா கூறினார்:

**நான் பல ஆண்டுகளாக சொல்லி வருவதை விஞ்ஞானிகள் படிப்படியாக அறிந்துகொள்வார்கள். எல்லா அண்டங்களையும் உலகங்களையும் பார்ப்பது சாத்தியமில்லை. அனைத்து நவீன வழிமுறைகளின் உதவியாலும் அவை கண்களுக்குத் தெரியவில்லை. மனிதனால் அவற்றை அடையவோ, தொடர்பு கொள்ளவோ**

**முடியாது; இருந்தும், விஞ்ஞானிகள் அவற்றைப் பற்றி அறிந்து கொள்வார்கள்.**

'நான்கு இறைப் பயணங்கள்' பற்றிய சொற்பொழிவிலிருந்து, பரிணாம வளர்ச்சியின் ஏழு ராஜ்யங்கள் குறித்த ஒரு பத்தி வாசிக்கப்பட்டது. பாபா தொடர்ந்து கூறினார்:

**பூமியில் மட்டுமே மனிதர்கள் மறுபிறவி எடுக்க வருகிறார்கள் மற்றும் இறைநிலையை அடைவதற்கான ஆன்மீக உட்சுழற்சி பாதையில்** (THE INVOLUTIONARY PATH) **பயணத்தைத் தொடங்குகிறார்கள். பூமியானது லட்சக்கணக்கான பிரபஞ்சங்களின் மையத்தில் உள்ளது, உள்நோக்கிய உட்சுழற்சி பயணத்தைத் தொடங்க அனைத்து ஆத்மாக்களும் பூமிக்கு இடம்பெயர வேண்டும்.**

**அளவிறுதியற்ற ஒன்றில், நீங்கள் ஒரு புள்ளியை மையமாகக் கொண்டிருக்க முடியாது; இல்லையேல், அது அளவிறுதியற்றது என்று ஆகாது. மேலும், இந்த விளக்கப்படத்தில் நாம் பூமியை எல்லையற்ற விண்வெளியின் மையமாகக் குறிப்பிட்டுள்ளோம். ஏன்? ஏனெனில் எல்லையற்ற விண்வெளியில், பல மக்கள் வாழும் உலகங்கள் இருந்தாலும், அந்த கிரகங்களிலிருந்து மனிதர்கள் இறுதியில் பூமிக்கு இடம்பெயர வேண்டும். சில உலகங்களில், மக்கள், பூமியில் இருப்பதை விட மிகவும் புத்திசாலிகளாக உள்ளனர், இருந்தாலும் அவர்கள் அன்பின்** (LOVE) **அடித்தளமாகத் திகழும் 'இதயத்தை'** (HEART) **உருவாக்க, ஆன்மீக உட்சுழற்சி பாதையில் பயணம் செய்ய, இந்த பூமிக்கு வந்தாக வேண்டும்.**

சொற்பொழிவு தொடர்ந்தது. சார்லஸ் பர்டத்தைக் குறிப்பிட்டு, பாபா விளக்கினார்:

**சார்லஸ், சார்லஸ் என்ற தனித்தன்மை கொண்டவர். அவர் சார்லஸ் என்பது அவருக்குத் தெரியும். அவர் இறைநிலையை அடையும் வேளையில், அவர் எல்லையற்ற உணர்வுடன் இருக்கிறார்; அவர் தனது வரையறுக்கப்பட்ட தனித்துவத்தை இழந்து, கடவுளில் இணைகிறார். அவருக்கு உலகம் இல்லை, கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை. பின்னர் அவர் எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறார். சார்லஸ் தனது தனித்துவத்தை மீண்டும் அடையப்பெறும்போது, அது எல்லையற்றது, அவர் இன்னும் சார்லஸ் தான், ஆனால் அவர் எல்லையற்ற உணர்வுடன் திரும்பி வருகிறார். அவர் ஒரே நேரத்தில் சார்லஸ் மற்றும் கடவுளாக இருக்கிறார்.**

பாபா, ஃபிரான்சிஸிடம், "**இதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?**" என்று கேட்டார்.

ஃபிரான்சிஸ், "இல்லை" என்று பதிலளித்தபோது, பாபா "**நானும் இல்லை**" என்று கேலி செய்தார்.

பாபா சிரித்துக்கொண்டே கூறினார்:

**இவை அனைத்தும் உங்களுக்காக அல்ல - ஆனால் பிற்கால சந்ததியினருக்கு பயனுள்ளதாக இருக்கும். உங்களைப் பொறுத்தவரை, எனக்குக் கீழ்ப்படிந்து, என்னை நேசித்து, எனது மேலங்கியை (தாமன்** - DAMAN) **கெட்டியாகப் பற்றிக்கொண்டால் போதும். அதற்குப் பிறகு நான் எங்கிருந்தாலும் நீங்களும் அங்கு இருப்பீர்கள். உங்கள் உள்நோக்கிய உட்சுழற்சி பயணத்தை நீங்கள் தொடங்கினால், நீங்களும் என்னுடன் இருப்பீர்கள், ஏனெனில் அந்த பயணங்களில் நானும் இருக்கிறேன். இதெல்லாம் மாயை; கடவுள் மட்டுமே உண்மையானவர்.**

**நீங்கள் கடவுளை நேசிக்க வேண்டும், கடவுளைக் காண வேண்டும், கடவுளுடன் ஒன்றிணைய வேண்டும்; அது உங்கள் கடமை. உங்கள் கடமை, இவை எல்லாம் மாயை என்பதை அறிந்துகொள்வது; கடவுள் ஒருவரே உண்மையானவர். ஆனால் கடவுளை நேசிப்பது கூட உங்கள் கையில் இல்லை. இது கடவுளிடமிருந்து உங்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்பு - மேலும் அவருடைய அருளை அடையப்பெறுபவருக்கு இந்த வெளிப்புறமாக அல்லது உள்நோக்கி மேற்கொள்ளும் இறைப் பயணங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. எனது மேலங்கியை** (தாமன்) **உறுதியாகப் பற்றிக் கொண்டால், இறைப் பயணம் என்பது முக்கியமல்ல. எல்லாம் பொருளற்றது.**

**“ஹாஃபீஸ் நமக்கு ஆறுதல் மொழிகளை வழங்கியுள்ளார்”** என்று பாபா கூறி முடித்தார்.

ஃபிரான்சிஸ் பிராபஸோன், ஹாஃபீஸின் ‘வருந்த வேண்டாம்’ என்ற தலைப்பில் ஈரடிக் கவிதை ஒன்றை தனது சுய பாணியில் விளக்கினார்:

நீங்கள் அன்பின் வெகுமதியை அடையப் பெறவில்லை என்றாலும்,
ஒரு நாள் இந்தப் பாலைவனம் பூங்காவனமாக மாறும் -
ஆதலால் வருந்த வேண்டாம்.

உங்கள் உள்ளத்தைத் திருப்பிக் கொள்ளாதீர்கள்,
அல்லது பிரியமானவரின் நட்போடு விவாதம் செய்யாதீர்கள்,
ஆனால் உங்கள் தற்போதைய நிலையைத்
தாங்கிக் கொள்ளுங்கள் -
இருந்தாலும் வருந்த வேண்டாம்.

இந்த வெறுப்புற்ற மனதும், கலங்கிய இதயமும்
அமைதியாக இருக்கட்டும்,
ஒரு நாள் ஐக்கியத்திற்கான ஆர்வம் நிறைவேறும் -
எனவே வருந்த வேண்டாம்.

திரைக்குப் பின்னால் ஒரு ரகசிய விளையாட்டு
விளையாடப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியாது,
எனவே முயற்சியைக் கைவிடாதீர்கள்,
திகைப்பில் அஞ்ச வேண்டாம் - வருந்த வேண்டாம்.

நீங்கள் பிரியமானவரின் இருப்பிடத்திற்கு புறப்படும் வேளை,
வெறும் கற்களையும் முட்களையும் கண்டு துவண்டு
பாதையிலிருந்து திரும்பி விடாதீர்கள் -
எதற்கும் வருந்த வேண்டாம்.

உங்கள் முயற்சியை முறியடிக்க மாயா
தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வாள்.
ஆனால் நோவா போன்ற மாலுமி ஒருவர் உங்களுடன்
இருக்கும் தருவாயில், பாதுகாப்பாகத் துறைமுகத்தைச்
சென்றடைவீர்கள் -
ஆகையால் வருந்த வேண்டாம்.

பாதை இடர்பாடுகள் நிறைந்ததாக இருந்தாலும், முடிவே இல்லை
எனத் தோன்றினாலும், இந்த இறைத் தோழருடன்
ஒவ்வொரு தொடக்கத்திற்கும் ஒரு முடிவு உண்டு -
அதனால் வருந்த வேண்டாம்.

இந்த இறைத் தோழரே இறைவனாக இருக்கும்போது,
வேண்டுகோள்களால் அவரைத் துன்புறுத்தாமல்,
அன்பின் விதிகள், சோதனைகள், நிபந்தனைகள்
அனைத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள் -
எனவே எதற்கும் வருந்த வேண்டாம்.

அப்போது பாபா இவ்வாறு அவதானித்தார்: **“கவலைப்பட என்ன இருக்கிறது? ஆதலால் கவலைப்படாதீர்கள்! நேற்று மழை பொழிந்து நீங்கள் நனைந்தீர்கள். என்னவாயிற்று? ஒன்றுமில்லை! இன்றும், அப்படியே இருக்கிறது. நேற்று எதுவும் நடக்கவில்லை; இன்றும் அப்படித்தான்!”**

பாபா தனது கைகளில் ஒரு பெரிய கண்ணாடிக் குவளையை எடுத்துக் கொண்டார், அது பிரகாசமான தங்க நிற காகிதத்தால் மூடப்பட்டு ‘கடவுள்’ என்று குறிக்கப்பட்டிருந்தது. பெரிய கண்ணாடிக் குவளைக்குள் மூன்று சிறிய கண்ணாடிக் குவளைகள் இருந்தன. அவர் விளக்கினார்:

**நான், சில மாயாஜாலங்கள் செய்வதைப் பார்க்க விரும்புகிறீர்களா? இந்தப் பெரிய கண்ணாடிக் குவளையை எல்லையற்ற கடவுள் என்று எடுத்துக் கொள்ளுங்கள். கடவுளை நமது வரையறுக்கப்பட்ட கண்களால் பார்க்க முடியாது. அவர் எல்லையற்றவர், முற்றிலும் கண்ணுக்குத் தெரியாதவர், சுதந்திரமானவர், ஆனாலும் அவர் அனைத்திலும் வியாபித்திருப்பவர்.**

**இப்போது, கடவுளுக்குள் மூன்று பொய்யும் போலியுமான மாய வாழ்க்கை உலகங்கள் இருப்பதைப் பாருங்கள் - பெரிய கண்ணாடிக் குவளைக்குள் மூன்று சிறிய கண்ணாடிக் குவளைகள் உள்ளன. இதோ அவற்றில் ஒன்று, பௌதீக உலகம்; இது மிகச்சிறியது** (செப்பு நிற வர்ணத்தால்

பூசப்பட்ட உட்புறக் கண்ணாடி). **ஆனால் நம்மைப் பொறுத்தவரை அது மிகவும் பெரியது, எல்லையற்றது. இந்தப் பௌதீக உலகம், அடுத்த பொய்யும் போலியுமான மாய வாழ்க்கை என்று அழைக்கபடும் சூட்சும உலகைச்** (இரண்டாவது உள் கண்ணாடிக் குவளை) **சார்ந்துள்ளது. பௌதீக உலகம் நுட்பமான சூட்சும உலகைச் சார்ந்து, அதனுள் வாழ்கிறது. இந்த நுட்பமான சூட்சும உலகம், ஆழ் மன உலகைச்** (மூன்றாவது உள் கண்ணாடிக் குவளை) **சார்ந்துள்ளது.**

**இந்த ஆழ் மன உலகம், கடவுளைச் சார்ந்தது** (பெரிய கண்ணாடிக் குவளை). **இவ்வாறு பௌதீக உலகம் சூட்சும உலகையும், சூட்சும உலகம் ஆழ் மன உலகையும் சார்ந்துள்ளன, மேலும் ஆழ் மனமானது கடவுளைச் சார்ந்து இருக்கும் அதே வேளையில், கடவுள் சுதந்திரமானவர். நான்கு கண்ணாடிக் குவளைகளில், ஒவ்வொன்றும் வித்தியாசமாகவும் தனித்தனியாகவும் இருப்பதை கவனத்தில் கொள்ளுங்கள்; ஆனால் கடவுள் என்று குறிக்கப்பட்ட பெரிய வெளிப்புற கண்ணாடிக் குவளையை தவிர, பிற ஒவ்வொன்றும் மற்றொன்றைச் சார்ந்தது; பிற அனைத்தையும் உள்ளடக்கிய வெளிப்புற பெரிய கண்ணாடிக் குவளையைப் போல, கடவுள் மட்டுமே சுதந்திரமானவர்.**

பேச்சின் தலைப்பை மாற்றி பாபா கூறினார்: **"இன்று நான் வெளி இடங்களிலிருந்து வருகை தந்த ஏறக்குறைய 4,000 அன்பர்களை அரவணைக்க வேண்டும். நவம்பர் 4ஆம் தேதி, 10,000க்கும் மேற்பட்டோர் எனது தரிசனத்திற்கு வருவார்கள், அது தரிசன நாளாக பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே, தயாராக இருங்கள். இன்று மீண்டும் மழை பெய்யக்கூடும், நீங்கள் உடைகளை மாற்ற வேண்டியது வரும்.**

**"நேற்று நீங்கள் நனைந்தீர்களா பென், மழை பெய்தபோது விழித்திருந்தீர்களா?"** என பாபா வினவியதும், பென் ஹெய்மன், மழை பெய்யும் போது அவர் தூங்கிவிட்டதாக நகைச்சுவையாக பதிலளித்தார்.

பாபா கூறினார், **"எனக்கு அளவிலா சலிப்பு ஏற்படுகிறது, ஆதலால் நான் மழையை வரவழைத்தேன். அடுத்த 700 ஆண்டுகளுக்காக, நான் எனது ஆழ்ந்த தூக்க நிலையில் ஓய்வு பெற விரும்புகிறேன், ஆனால் நான் என் இறை வார்த்தையை உலகுக்கு வழங்க வேண்டும். உலகின் இதயம் அதன் தாக்கத்தை உணர வேண்டும். நான் 700 வருடங்கள் தூங்க விரும்பினாலும் அதற்கு என்னால் உதவ முடியாது."**

நேற்று யார் யார் மழையில் நனைந்தனர் என்று பாபா விசாரித்து, **"எவ்வளவு கடுமையான மழை பெய்தாலும், புயல் வீசினாலும் உங்கள் இடங்களை விட்டு நகராதீர்கள்"** என்று குறிப்பிட்டார்.

பாபா, ஹஃபீஸின் இந்த ஈரடிக் கவிதையை மேற்கோள் காட்டினார்:

**அன்பின் அகோரப் புயலின் நடுவில் பாறை போல்**
**உறுதியாய் இருக்கவேண்டும்,**
**அல்லது அது உங்களை தலை கீழாக மாற்றிவிடக்கூடும்.**

**“நேற்று பொழிந்த மழை ஒன்றும் இல்லை, தூறல் மட்டுமே. இன்று என்ன நடக்கிறது என்று பார்ப்போம். டாக்டர் சேம்பர்லைன், நீங்கள் மழையில் நனைந்தீர்களா?”**

சேம்பர்லைன் கூறினார், “எனக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை.”

**“அங்கே நான் உங்களுக்குப் பாதுகாவலனாக இருந்தேன். ஜோஸ்ஃப், நீங்கள் நனைந்தீர்களா?”**

ஜோஸ்ஃப் ஹார்ப், “இது உலகளாவிய ஞானஸ்நானம்!” எனறு பதிலளித்தார்.

**“ஹாரி?”**

“புறத்தைப் போலவே அகத்திலும் ஈரமாக இருந்தது,” கென்மோர் கேலி செய்தார்.

**“அதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நீங்கள் முழுவதுமாக நனைந்து, கடவுளின் அன்பில் திளைக்கும்போது, அந்த மகிமைக்கு முன்னால், சூரியனின் பிரகாசம் கூட மங்கிவிடும்; அது அளப்பரிய மகிமை நிறைந்ததாக இருக்கும். நீங்கள் அன்பால் நிறைந்திருக்க வேண்டும்!”**

எரச் உரையாடலுக்கு இடையே, “(சிலோன் வழியாக பயணம் செய்யும்) ஆஸ்திரேலிய அன்பர்கள் இதுகாறும் வரவில்லை. அவர்கள் மதியம் 12:30 மணிக்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள்” என்று குறிப்பிட்டார்.

பாபா கேட்டார், **“அவர்கள் திரும்பிச் செல்ல முடியுமா?”**

எரச், “அவர்களால் முடியாது என்ற செய்தி இல்லை” என்றார்.

பாபா தனது அன்பர்களிடம் கூறினார், **“நீங்கள் உங்கள் இல்லங்களைச் சென்றடைந்ததும், எனக்கு நேரடியாக ஒரு கடிதம் எழுதுங்கள் - எனக்கு மட்டும் - அதற்குப் பிறகு கடிதங்கள் எதுவும் இல்லை. அடுத்த ஆண்டு, நான் எனது உலகளாவிய பணியை முடிக்க விரும்புகிறேன், எனவே மக்கள் கூட்டம் என்னிடம் வருவதை நான் விரும்பவில்லை; கிழக்கத்திய அன்பர்களுக்கும் அனுமதி இல்லை. இது எனது பணியை விரைவில் முடிக்க உதவியாக இருக்கும்.”**

அனிதாவைப் பார்த்து பாபா சீண்டினார், **“நீங்கள் இங்கே இருக்கும்போது என்னால் பணிபுரிய முடிவதில்லை!”**

பாபா அனைத்து மேற்கத்திய அன்பர்களையும் 1:45 மணிக்கு பந்தலில் இருக்குமாறு அறிவுறுத்தினார். அப்போது அரவணைப்புகள் எதுவும் இருக்காது.

அவர் டேனா ஃபீல்டிடம் **“நீங்கள் கவலைப்படுகிறீர்களா?** என்று கேட்டார்; **‘வருந்த வேண்டாம்’ என்று ஹஃபீஸ் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா?**

**“வேறு யார் கவலைப்படுகிறார்கள்?”** என்று கேட்டதற்கு எவரும் பதிலளிக்கவில்லை.

**“எவரும் கவலைப்படவில்லை என்றால், நான் கவலைப்பட்டாக வேண்டும், ஆனால் எனது கவலை எனக்கு மிகவும் வேடிக்கையாக உள்ளது!**

**முழுப் படைப்புக்காகவும், வாழ்க்கை மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆன்மாக்களை விடுவிப்பதற்காக, தொடர்ந்து கவலைப்படுவதும் எனது பழங்கால பழக்கம்.**

**"இது மிகவும் வேடிக்கையாக உள்ளது! சிலர் தங்கள் நோய்களிலிருந்து விடுபட, சிலர் நல்ல வாய்ப்புகளை அடையப்பெறும் ஆசிகளுக்காக, அல்லது ஏதேனும் வேலைக்காக, அல்லது குழந்தைகளுக்காக, அல்லது அவர்களுக்கு அதிகமான குழந்தைகள் இருப்பதால் என்னிடம் வருகிறார்கள்! என் உலகளாவிய கவலைகளுக்கு மத்தியில், இவை அனைத்தையும் பற்றி நான் கவலைப்பட வேண்டும்."**

பாபா தொடர்ந்து கூறினார், **"நான் இங்கே உங்களுடன் அமர்ந்திருப்பதை நீங்கள் காண்கிறீர்கள், ஆனால் நான் அதே நேரத்தில் அனைத்து ஆன்மீக உணர்வுத் தளங்களிலும், உங்களுக்கு முன்னால் இருக்கும் வரைபடங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிலைகளிலும் இருக்கிறேன். என்னை நாடும் ஆத்மாக்கள் சூட்சும உலகில் உள்ளனர், நான் அவர்களோடு இருக்கிறேன், ஆழ் மன உலகில் உள்ளனர், நான் அவர்களோடும் இருக்கிறேன்.**

**"நீங்கள் பௌதீக உலகில் இருக்கிறீர்கள், அதனால் என்னை உங்களுடன் பௌதீக உலகத்தில் காண்கிறீர்கள். சூட்சும உலகில் நிலைகொண்டுள்ளவர்கள் என்னை சூட்சும உலகிலும், ஆழ் மன உலகில் நிலைகொண்டுள்ளவர்கள் ஆழ் மன உலகிலும் என்னைக் கண்டுகொள்கிறார்கள். மேலும், என்னை எனது சுய ரூபத்தில் கண்டுகொள்ளும் அரிய ஒருவர், உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டவர்.**

**"ஆனால் கவலைப்பட வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஹாஃபீஸின் ஆலோசனைக்கு செவிமடுத்து, கவலைப்பட வேண்டாம். வருந்தவும் வேண்டாம்."**

இத்துடன் காலை நிகழ்ச்சி நிறைவுக்கு வந்தது.

ஒரு நாள் காலை, பாபா அவர்களை இடைவேளை நேரத்தில் வெளியே அனுப்பிய பின்னர், அனீஸ் ஹாஸனின் (ANEECE HASSEN) சகோதரி, நான்சி அமீனைத் (NANCY AMEEN) தவிர அனைவரும் சென்றனர். அவர் முன் வந்து, பாபாவுடன் சில தனிப்பட்ட தருணங்களை அனுபவிக்க நேர்ந்தது. பிரைனர் மெல் கூட ஒருமுறை, கூட்டம் வெளியேறியதும் பாபா முன்னிலையில் வர முடியுமா என்று கேட்டார். பாபா சிரித்துக்கொண்டே அவரை சைகையால் அழைத்தார். "நான் ஏன் அவரைப் பார்க்க விரும்பினேன் என்று எனக்குத் தெரியவில்லை," என்று பிரைனர் மெல் நினைவு கூர்ந்தார். "நான் அங்கு இருக்க விரும்பினேன், அவ்வளவுதான்."

பிரைனர் மெல், பாபாவின் வலது புறம் முழங்கால்களில் விழுந்து, இந்த முற்றிலும் தன்னிச்சையான, "பாபா, நான் உங்களுடையவர், நீங்கள் விரும்பியதைச் செய்யும் ஆர்வத்தில் உள்ளேன் என்பதை உங்களுக்குச் சொல்ல

விரும்பினேன்" என்ற வார்த்தைகளை மொழிந்ததும், பாபா அவரது முகத்தைக் கைகளில் ஏந்தி, வலது கண்ணுக்குக் கீழே முத்தமிட்டார். "இது எனது வாழ்க்கையில் நான் பெற்ற மிகப்பெரிய, மிகவும் சுவையான முத்தமும், அரவணைப்பும்" என்று மெல் நினைவு கூர்ந்தார்.

பாபா, பிரைனரிடம் "**நீங்கள் என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தீர்கள்**" என்று சைகையால் தெரிவிக்க, அந்த இளைஞனின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

1962 நவம்பர் 2 பிற்பகல் நிகழ்ச்சிக்காக, பந்தலுக்குள் மேலும் 1,000 நாற்காலிகள் வரவழைக்கப்பட்டன. மேடையில், பூனா பஜனை குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்க, பாபா மதியம் 1:45 மணியளவில் மேடைக்கு வந்ததும், அங்கிருந்த 6,000 பேரும் எழுந்து நின்று, 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்! அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்று கோஷமிட்டனர்.

பாபா ஓர் உயரமான சீக்கியரைத் தழுவி, "மழை பெய்யலாம்" என்று சைகையால் தெரிவித்தார்.

யோகி ஷுத்தானந்த் பாரதியும், மஹாராணி ஷாந்தாதேவியும் மேடையில் பாபாவின் நாற்காலிக்கு அருகில் நிகழ்ச்சி நிறைவுறும் வரை அமர்ந்திருந்தனர் .

டார்வின் ஷா ஒலிப்பெருக்கியில் பாபாவின் '**என் அன்பான குழந்தைகளே**' (MY DEAR CHILDREN) என்ற தலைப்பில் செய்தி ஒன்றை வாசித்தார்:

**என் அன்பான குழந்தைகளே!**

**பல்வேறு இடங்களிலிருந்தும், கடல் கடந்தும் நீங்கள் என்னிடம் வருவது எனக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. என் அருகில் இருக்க எந்த ஒரு தியாகமும் பெரிதல்ல என்றாலும், உங்களில் சிலர் இங்கு வருவதற்காக செய்த தியாகம் என் இதயத்தைத் தொட்டது.**

**என்னிடம் வர முடியாதவர்கள் மனமுடைந்து விடக்கூடாது, ஏனெனில் என் அன்பு எப்போதும் போல, குறிப்பாக இந்த நேரத்தில் அவர்களுடன் இருக்கிறது. ஒரு மணி நேரமேனும் என் அருகில் இருக்க அவர்கள் ஏங்குகிறார்கள் என்பதும், அவர்களின் சூழ்நிலையில் எவ்வளவு உதவியற்றவர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.**

**நீங்கள் வெகு தொலைவிலிருந்து வந்துள்ளீர்கள், சில பேரவை கூட்டங்களுக்காகவோ அல்லது மாநாட்டிற்காகவோ அல்ல, ஆனால் எனது சகவாசத்தை அனுபவிக்கவும், உங்கள் இதயங்களில் என் அன்பின் புத்துணர்வைப் பெருக்கவும் வந்துள்ளீர்கள். இது கிழக்கு மற்றும் மேற்கிலிருந்து வரும் பிரியமான குழந்தைகள், தங்கள் இறைத் தந்தையின் இல்லத்தில் ஒன்றிணைவது போலாகும்.**

**உலகில் உள்ள அனைத்து மதங்களும் கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார், அனைவருக்கும் அவர் ஒருவரே இறைத் தந்தை என்று பறைசாற்றுகின்றன. நானே அந்த இறைத் தந்தை.**





ஒலிபெருக்கியில் டார்வின் ஷா (DARWIN SHAH AT MICROPHONE)



ஒலிபெருக்கியில் டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS AT MICROPHONE)

**கண நேர இடைவெளியும் இல்லாமல், நீங்கள் அனைவரும் ஒன்று; அனைத்துப் பிரிவினைகளும், பிணக்குகளும், பகைமையும் சுய அறியாமையின் ஒரு நிழலாட்டம் என்பதையும், என் அருள் உங்களை விழிப்படையச் செய்யும் வரை, எல்லா மக்களும் ஒரே இறைத் தந்தையின் குழந்தைகளாகவே பூமியில் வாழ வேண்டும் என்பதையும் நினைவூட்ட நான் வந்துள்ளேன்.**

**எல்லோரும் எனது குழந்தைகள் என்றாலும், அவர்கள் தங்கள் இறைத் தந்தையின் இல்லத்தில் ஒரே குடும்பமாக வாழாமல், வெறுப்புகள், மோதல்கள் மற்றும் பகைமையால் பிரிக்கும் போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலம், இந்த ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் அழகையும் எளிமையையும் புறக்கணிக்கிறார்கள். என்னை நேசித்து, நான் என்னவாக இருக்கிறேன் என்பதை ஏற்றுக் கொள்ளும் உங்களில் கூட, சில நேரங்களில் பிறர் உள்ளங்களை ஒருவர் புரிந்து கொள்ளாமல் இருப்பதும் உண்டு.**

**பொறுமையாக எனது குழந்தைகள் அனைவருக்காகவும் நான் அமைதியாக இந்தத் துன்பங்களைத் தாங்கிக்கொண்டேன். அவர்கள் மத்தியில் தங்கள் இறைத் தந்தையின் பிரசன்னம் மற்றும் அவருக்கும் தங்களுக்கும் இடையேயான உரிய பொறுப்பை அவர்கள் உணர வேண்டிய நேரம் இது. நான் எனது மௌனத்தைக் கலைத்து, எனது இறை வார்த்தையால், எனது குழந்தைகளின் வாழ்வில், ஏக இறைவன் என்ற பிரிக்க முடியாத உண்மைப்பொருளை உள்ளூர உணரும்படித் தூண்டுவேன்.**

**பல ஆண்டுகளாக, நான் பல்வேறு செய்திகளையும் சொற்பொழிவுகளையும் வழங்கி வருகிறேன். எனது இறை வார்த்தையை நான் உச்சரிக்கும் போது, உங்கள் மனதின் செவிகளை மூடி, உங்கள் இதயங்களின் செவிகளைத் திறக்குமாறு, என் அன்பில் இங்கு இன்று கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் நான் சொல்ல விரும்புகிறேன்.**

**எப்பொழுதும் உங்களுடனே இருக்கும் என் ஆசீர்வாதத்தை நாடாதீர்கள், ஆனால் என்னை நேசிக்கும் அனைவர் மீதும் என் அருள் மழை பொழியும் நாளுக்கான ஏக்கத்தைக் கொண்டிருங்கள். என் அருளுக்காகக் கூட ஏங்காமல், எனது சித்தத்தின்படி செயல்பட முயல்பவர்கள் மிகவும் பாக்கியவான்கள்.**

மழை தொடங்கும் முன்னர், இந்தச் செய்தியின் மொழியாக்கங்களைப் படிக்க வேண்டும் என்று பாபா சைகையால் தெரிவித்தார். குஜராத்தி மொழி பெயர்ப்பு தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டு, தரிசனத்திற்காகக் காத்திருந்த எஞ்சிய மக்களில், முதலில் பெண்மணிகள் முன் வருமாறு அழைப்பு விடுத்தார். ஒவ்வோர் ஆணும், பெண்ணும், குழந்தையும் தங்கள் இறைத் தந்தையை, ஒழுங்கு முறையைப் பின்பற்றி அணுகியதைக் கண்டு பாபா மகிழ்ச்சியடைந்தார். பிற்பகல் 3:15 மணியளவில், மழை மீண்டும் அச்சுறுத்துவது போலத் தோன்றியது, பாபா, “**நீங்கள் உங்கள் இடத்திலேயே அமர்ந்திருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது, எல்லாம் நன்றாக உள்ளது. மழை**

**பொழிந்தாலும், நீங்கள் அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்"** என்று சைகையால் விளக்கினார்.

தன் அன்பர்களை சந்தித்தபோது, பாபாவின் கண்கள் மண்டபம் முழுவதும் அலைமோதின. பென் ஹெய்மனை பாபா மீண்டும் கிண்டல் செய்தார், "**பென், நீங்கள் விழித்திருக்கிறீர்களா? விழித்துக்கொள்ளுங்கள், அதனால் நான் விழிப்புடன் இருக்க முடியும்!**"

நிரஞ்சன் ஸிங்கிடம், "**நீங்கள் கார்மேகங்களைக் கண்டு அஞ்சவில்லை**" என்று குறிப்பிட்டார்.

பூனாவிற்கு வருவதற்கு முன்பு, ஷுத்தானந்த பாரதி தனது உணவுக்குத் தேவையான பழங்கள், பருப்புகள், பால் ஆகியவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு ஹோட்டலில் தங்க விரும்புவதாக எழுதியிருந்தார். பாபா எல்லாவற்றையும் ஏற்பாடு செய்திருந்தார்; அவரை கவனித்துக்கொள்ள டாக்டர் மூர்த்தி பொறுப்பாக இருந்தார். மேடையில் பாபாவின் அருகில் பாரதி அமர்ந்திருந்தபோது, பாபா அவரைத் திரும்பிப் பார்த்து, "**உங்களுக்கு நிறைய புத்தம் புதிய பழவகைகள் தேவை, உங்கள் உணவில் முக்கியமாக பழங்களையே உண்கிறீர்கள், எனவே கவனமாக இருங்கள். மக்கள் எனது காலடியில் பழங்களை வழங்கும்போது, விரைவாக அவற்றை உங்கள் பைகளில் நிரப்புங்கள். இப்போது மறந்துவிடாதீர்கள், எச்சரிக்கையாக இருங்கள்.**"

ஆனால் ஒவ்வொரு முறையும் பாபா தரிசனம் வழங்கத் தொடங்கும் போது, பாரதி, பழங்களை சேகரிப்பதில் மெத்தனமாக இருந்தார், பாபா அதை உடனடியாக அவருக்குச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து, பாரதி, பாபாவைப் பற்றியோ தரிசனத்தைப் பற்றியோ நினைக்காமல், ஆரஞ்சு மற்றும் வாழைப்பழங்களை மட்டுமே நினைவில் கொண்டார்! பாபாவிற்கு தனது உணவுமுறை பற்றி எழுதியதற்காக அவர் எப்போதாவது வருந்தியிருக்கலாம்.

விமானம் ரத்து செய்யப்பட்டதால், சிலோனிலிருந்து (CEYLON) மாலை 4:00 மணியளவில் தாமதமாக வந்த சில ஆஸ்திரேலிய அன்பர்கள், குருபிரசாத்தை வந்தடைந்து, பாபாவின் முதல் அரவணைப்பிற்காக மேடையை அணுகினர்.

அமர் ஸிங் ஸைகல் (AMAR SINGH SAIGAL) பாராளுமன்றத்தில் முக்கியமான பணிக்காக டெல்லி திரும்ப வேண்டியிருந்தது, அதனால் அவரும் ஓர் அரவணைப்புக்காக பாபா முன் வந்தார். பாபாவை சந்திக்க அவருடன் வந்த அவரது தோழர்கள் ஹேம் ஸிங் (HEM SINGH), கணேஷ் ஸிங் (GANESH SINGH) இருவரும் அங்கேயே இருந்தனர்.

வானிலை முதலில் மிகவும் வெப்பமாக இருந்தது, ஆனால் பாபா வழங்கிய 'ஒரு தந்தையின் உரை'க்குப் பிறகு லேசான மழை பெய்தது. குழந்தைகள் அமைதியாகவும் குழப்பமடையாமலும் இருந்தனர். பாபா அனைவரையும் கேட்டார், "**நீங்கள் சோர்வாக இருக்கிறீர்களா?**

**அப்படியானால், நான் நிறுத்துகிறேன், நான் சோர்வாக இல்லை.**" பந்தலில் நிறைந்திருந்த முழுக் கூட்டமும் ஒருமித்த குரலில் 'இல்லை!' என்று ஒன்றிணைந்தன.

பாபா உடனே, மீண்டும் பெய்த லேசான மழையைக் குறிப்பிட்டு "**இந்திய வானிலைக்கு நன்றி சொல்ல வேண்டும், ஏனெனில் அவை அசௌகரியமான வெப்பத்தை ஓரளவுக்குத் தணிக்க உதவியுள்ளது**" என்றார்.

முதல் நாள் மழை தொடங்கியதும், தரிசனத்திற்காக வரிசையில் நின்றவர்களை வழிநடத்த உதவிய ஜால் தஸ்தூரிடம், "**ஏன் திறவுகோலைத் திருப்பக்கூடாது?**" என்று பாபா கேட்டதற்கு, (அதாவது, ஜால் ஏன் மழையை நிறுத்தக் கூடாது?) ஜால் பதிலளித்தார், "என்னிடம் திறவுகோல் இல்லை, அது உங்களிடமே உள்ளது!" அன்று, மழை உடனடியாக ஓய்ந்ததும், "பாபாவின் திறவுகோல் வேலை செய்தது!" என்று ஜால் நகைச்சுவையாகக் கூறியதைக் கேட்டு பாபா சிரித்தார்.

ஒரு கட்டத்தில், பாபா கூட்டத்தில் நோய்வாய்ப்பட்டு ஆற்றலிழந்து அமர்ந்திருந்த ஒரு பெண்மணியை கவனிக்க நேர்ந்தது. அது அவருடைய பழைய தோழரான பெய்லியின் (BAILY) சகோதரி தெஹ்மினா பொமன்ஜி (TEHMINA BOMANJI). டாலி பஸ்தானியிடம் (DOLLY BASTANI) அந்தப் பெண்மணியை அழைத்து வருமாறு பாபா சைகையால் கூறியதும், அவர், தெஹ்மினாவை தூக்கி, கைகளில் ஏந்திக்கொண்டு, கூட்டத்தினூடே பாபாவின் அருகில் சென்றார்.

மாலை, 5:00 மணிக்கு, தரிசனம் நிறுத்தப்பட்டது. இதுவரை தரிசனத்தில் பங்கெடுக்காதவர்கள் மறுநாள் மதியம் 1:30 மணிக்கும், ஏற்கனவே அவரை சந்தித்தவர்கள் மாலை 3:00 மணிக்கும் சந்திப்புப் பந்தலுக்கு வர வேண்டும் என்று பாபா கட்டளையிட்டார். பாபாவின் ஆரத்தியுடன் நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும், அனைவரும் அவரவர் இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஆந்திராவின் குண்டூர் மாவட்டம், சிராலா (CHIRALA) கிராமத்திலிருந்து சுமார் 50 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தனர். கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தை ஏற்பாடு செய்த பின்பு, கிராம மக்கள் வீடுகளைப் பூட்டிவிட்டு, பூனாவிற்குப் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் ஏழைகள், இரண்டு நாட்கள் மட்டுமே தங்க முடிந்தது, ஆனால் இரண்டு நாட்களும் பாபாவை சந்திக்க அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காத நிலையில், அதீத ஏமாற்றம் அடைந்த அவர்கள், அன்றிரவு வீடு திரும்ப ரயில் நிலையத்திற்குச் சென்றனர். குருபிரசாத்தில் அந்தத் தருணத்தில், பாபா அவர்களை நினைவு கூர்ந்து, தேடி கண்டுபிடித்து, இந்தச் செய்தியை உடனடியாக வழங்குமாறு அறிவுறுத்தினார்: "**சிராலா மக்கள் நாளை காலை எட்டு மணிக்கு பாபாவைப் பார்க்கலாம்.**" பால் நாத்து அவர்களை ரயில்நிலையத்தில் கண்டுபிடித்து செய்தியை வழங்கினார். கிராம மக்களின்

மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பாபா தங்கள் இதயங்களை அறிந்திருக்கிறார் என்ற நம்பிக்கையோடு, அவர்கள் மறுநாள் புறப்படுவதாக முடிவு செய்தனர்.

சிராலா கிராமவாசிகள் 1962 நவம்பர் 3 சனிக்கிழமை அன்று காலை 7:30 மணிக்கு குருபிரசாத்தை வந்தடைந்தனர். பாபா ஒவ்வொருவரையும் வராண்டாவில் கட்டித் தழுவினார். பஜனைகள் பாடவும், தனது ஆரத்தியை நிகழ்த்தவும் அவர்களை அனுமதித்தார். அவர்கள் பாடியது தாளம் தவறி இருந்திருக்கலாம், ஆனால் அவர்களின் இதயங்கள் அன்பினால் நிறைந்திருந்தன. அவர்களில் குழந்தைகளுக்கு, பாபா தாராளமாகப் பிரசாதம் வழங்கினார். மேற்கத்திய அன்பர்களில் பலர் ஒரு மணி நேரம் தாமதமாக வந்து, அந்தக் காட்சியைக் கண்டு, இந்த ஏழை கிராமவாசிகளின் ஆழ்ந்த அன்பின் வெளிப்பாட்டால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். ஒவ்வொருவரும் மீண்டும் பாபாவைத் தழுவிய பிறகு, கிராம மக்கள் தங்கள் இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

குண்டூரைச் சேர்ந்த எம்.பி.ஜி. சாஸ்திரி (M.B.G.SASTRI) 1962இல் பாபாவை முதன்முதலாக சந்தித்தார். சகவாசத்தின் போது அவர் ஒரு வார்த்தை கூட பேச முடியாமல் திக்குமுக்காடிப்போனார். பாபா அவரைச் சுட்டிக்காட்டி, "**உங்கள் இடத்தில் நான் இருந்திருந்தால், உங்களைப் போல் என்னால் பாபாவை நேசித்திருக்க முடியாது**" என்று கூறினார்.

காலை 9:00 மணியளவில், பாபா உள்ளே சென்று, தனது மேற்கத்திய அன்பர்களுடன் மண்டபத்தில் அமர்ந்தார். அடுத்த நாள் நேரமில்லாத காரணத்தால், அன்றைய தினம் தனிப்பட்ட குழுக்களை சந்திப்பதாக பாபா அவர்களிடம் தெரிவித்தார். அப்போது, சிந்தா சர்வராவ், மஜெட்டி ராமமோகன் ராவ், மாணிக்யால ராவ் ஆகியோர் மண்டபத்திற்குள் நுழைந்தனர். பாபா அவர்களை மேற்கத்திய அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தி, ஆந்திரா அன்பர்கள் அனைவரையும் சிறப்பு ரயிலில் அழைத்து வந்ததாக விளக்கினார். இம்மூவரும் கடந்த மூன்று நாட்களாக பூனாவில் இருந்தபோதிலும், அதுவரை பாபாவை சந்திக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் மண்டலியிடம், "**நீங்கள் தொலைதூரத்திலிருந்து என்னை அணுக விரும்பும் ஒரு நாள் வரும், ஆனால் என்னைப் பார்க்க முடியாது**" என்று கூறியதைக் குறித்து பாபா இவ்வாறு அவதானித்தார் '**இது எதிர்காலத்தில் வரவிருக்கும் மாபெரும் மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது**.'

ஆந்திராவிலிருந்து வந்த மூன்று முக்கியஸ்தர்களையும் பாபா ஆரத்தழுவி, "**இப்போது நீங்கள் மூவரும் செய்ய வேண்டிய ஒரே வேலை, இங்கே மழை பெய்யாமல் பார்த்துக் கொள்வதுதான்!**" என்று கூறியபோது மூவரும் பாபாவை மிகவும் அன்புடன் அணைத்துக்கொண்டனர்; அவர்கள் வெளியே சென்ற பின்னர், "**எனது கைகள் தளர்ந்துவிட்டன, ஆனால் ஒரு மணி**

**நேரத்திற்குள், நான் மக்களை அரவணைக்க மீண்டும் வலிமையடைவேன்"** என்று கூறினார்.

பாபா, பென் ஹெய்மனை நினைவுபடுத்தினார், **"நான் உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் வழங்குவதாக உறுதியளித்தேன். இன்றுதான் அந்த நாள். நாம் இந்த மக்கள் அனைவரையும் வெளியே அனுப்பிவிடலாமா?"**

பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க, லியோனார்ட் வில்லோபி, 'உலகம் முழுவதையும் அவர் கைகளில் வைத்துள்ளார்' (HE'S GOT THE WHOLE WORLD IN HIS HANDS) என்று பாடினார், அனைவரும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

அதற்கு பதிலளித்த பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"இந்த வார்த்தைகள் உண்மையானவை. இது நிஜம். உலகம் முழுவதையும் எனது கைகளில் வைத்திருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இது மிகவும் அமைதியாக, ஆரவாரமின்றி, கொந்தளிப்பு எதுவும் இல்லாமல் உள்ளது! ஒரு சிறிய புள்ளி!"** பாபா உட்பட அனைவரும் அவரது கைகளில் இருந்த 'சிறிய புள்ளி'யை நினைத்து புன்னகைத்தனர்.

அதைத் தொடர்ந்து பாபா 'நியூயார்க் திங்கள் இரவு குழு' (NEW YORK MONDAY NIGHT GROUP), 'மர்டில் பீச் குழு' (MYRTLE BEACH GROUP), ஸூஃபிக்கள் (SUFIS), ஐரோப்பா மற்றும் ஈரானைச் சேர்ந்தவர்கள் போன்ற பல்வேறு குழுக்களை சந்திக்கத் தொடங்கினார். ஸூஃபி குழுவின் முர்ஷிதா ஐவி டியூஸிடம் (MURSHIDA IVY DUCE), அவர் கூறினார்:

**நான் வழங்கியாக வேண்டிய ஒரே விஷயம் இறை வார்த்தை - அதுவும் அடுத்த வருடம். ஆதலால், அடுத்த வருடம் அனைத்தையும் நிறுத்திவிடலாம் என்று திட்டமிட்டேன். கிழக்கு அல்லது மேற்கத்திய அன்பர்கள் எவரையும் அழைக்க மாட்டேன். எனது மௌனத்தைக் கலைக்கும் உந்துதலைத் தயார் செய்வேன். இது எளிது, ஆனால் எனக்கு அந்த உள்ளார்வம் இருக்க வேண்டும். இறை வார்த்தையை வழங்க நான் எவ்வளவு ஆவலுடன் இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. நான் அதற்கு வேண்டிய அனைத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன். நான் முழு உலக விவகாரங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும். இதற்கிடையில், நான் அந்த இறை வார்த்தையை வழங்கும்போது, என்னை நேசிக்கும் நீங்கள் அனைவரும், அதை உங்கள் இதயங்களில் அறிந்து கொள்வீர்கள் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். அப்போது அது உங்களுக்குப் பெருமளவில் வெளிப்படுத்தப்படும்.**

**கடவுளே உண்மைப்பொருள். எனவே, எதிர்காலத்தைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? ஹஃபீஸ் கூறியதை நேற்று நீங்கள் கேட்கவில்லையா? "கவலை எதற்காக?" அது ஒருபோதும் எதையும் அர்த்தப்படுத்தாது... முர்ஷிதா (ஐவி), உங்கள் கவலைகளில் சிலவற்றை கைவிட்டு விடுங்கள்!**

**உங்கள் கடமையை மட்டும் செய்யுங்கள், ஆனால் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். 100 சதவீதம் மகிழ்ச்சியாக இருங்கள், 100 சதவீதம் நேர்மையாக இருங்கள். உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்; பின்னர் இரவில், நிதானமாக எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். மகிழ்ச்சியாக இருங்கள். அது உங்கள் கடமை. மேலும் நேர்மையாக இருங்கள்; இதில் சமரசம் எதுவும் செய்ய வேண்டாம். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, உங்கள் இதயத்தில் ஓர் அச்ச உணர்வு உருவாகும்.**

**கவலைப்பட வேண்டாம் என்று நான் முழு உலகிற்கும் சொல்கிறேன். நான் இறை வார்த்தையை வழங்கும் நேரம் நெருங்கி வருகிறது. முழு உலகமும் அதை அறிந்துகொள்ளும், மேலும் அங்கே பல மாற்றங்கள் நிகழும். உங்கள் கவலைகள் அப்போது எவ்வளவு முக்கியமற்றதாக மாறும் என்பது உங்களுக்குத் தெரியாது. எனவே இன்று ஏன் கவலைப்படுவதை நிறுத்தக்கூடாது? நான் இறை வார்த்தையை வழங்கும் வரை அவ்வாறு வாழ முயற்சி செய்யுங்கள். நீங்கள் தேவையின்றி கவலைப்பட்டு மரணத்தை சந்திக்க நேர்ந்தால், பின்பு நான் இறை வார்த்தையை வழங்கும்போது, அதைக் கேட்க நீங்கள் இருக்க மாட்டீர்கள்!**

சில இளம் ஸூஃபிகள் தங்கள் வாழ்க்கையைக் குறித்து அக்கறை கொண்டிருந்தனர். **"உலகம் முழுவதும் கவலையால் பிணைக்கப்பட்டுள்ளது"** என்று பாபா அவர்களுக்கு அறிவித்தார். **"நான் கவலைகளால் நிறைந்திருக்கிறேன் - உண்மையான கவலைகள் என்னவென்று உங்களுக்குத் தெரியாது! ஆனால் என்னுடன் எல்லையற்ற ஆனந்தம் உள்ளது, அது என்னைத் தாங்கிக்கொள்கிறது. இல்லையெனில் அது ஒரு சுமை."**

சலவைக்காக அனுப்பப்பட்ட ஒரு ஜோடி கால்சட்டையில் இருந்த கொஞ்சம் பணத்தைப் பற்றி அவர் சற்று கவலைப்பட்டதை லட் டிம்ஃபில் விவரித்தார். பாபா, லட்டின் மனைவி பீயை (BEA) வரவழைத்து கேட்டபோது, அவர் இழந்த பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று கூறினார். பாபா, லட்டிடம், **"நீங்கள் ஏன் உங்களின் 'நான்' எனும் சுயத்தை இழந்து என்னிடம் வரக்கூடாது? உங்கள் கவலைகளை மறந்து, உங்களுள் என்னைக் கண்டுகொள்ளுங்கள். நான் அந்த இறை வார்த்தையை வழங்கும்போது, அது உங்கள் இதயத்தைத் தொடட்டும். நீங்கள் லட்சக்கணக்கான டாலர்களை இழந்தாலும் பரவாயில்லை, அது உங்களுக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தரும். பணம் உங்களுக்கு அந்த அனுபவத்தைத் தர முடியாது. நான் என் இறை வார்த்தையை வழங்க வேண்டிய நேரம் வர வேண்டும். அதேசமயம், எனக்கு உங்கள் அன்பு வேண்டும்; நீங்கள் என்னை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!"**

அமெரிக்காவில் அமைந்த ஸூஃபி மையம் (SUFI CENTER IN AMERICA) பற்றி கேட்டதற்கு, பாபா பதிலளித்தார், "**இது எனது பாதைகளில் ஒன்றாகும். நானே ஆதாரம். என்னிடம் பல நதிகளும், துணை நதிகளும் உள்ளன**!"

பின்னர் அவர் குறிப்பிட்டார், "**இப்போது ஃபிரான்சிஸ் (பிராபஸோன்) என்னுடன் இருக்கிறார், நான் எவ்வளவு துன்பப்படுகிறேன் என்பதை அவர் அறிவார். மேலும் எல்லா துன்பங்களுக்கும் முடிவு இறை வார்த்தையை வழங்குவதாக இருக்கும். அதுவே எனக்கு விடுதலையாக இருக்கும். ஆனால் நான் உங்களுக்கு மீண்டும் சொல்கிறேன், கவலைப்படாதீர்கள்**!"

திடீரென பாபா, "**எனது நேரம் நெருங்குவதற்கு உங்கள் விருப்பமும் தேவை**" என்றார். அங்கிருந்தவர்கள் அனைவரும் அவருடைய முகத்தின் வெளிப்பாட்டின் மூலம் அவர் அனுபவிக்கும் துன்பத்தின் ஒரு குறுகிய காட்சியைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். பாபா மேலும் கூறினார், "**நான் பிணைப்புகளிலிருந்து விடுபட்டிருக்கும் போது, நான் இப்போது இருப்பதை விட உங்களுடன் நெருக்கமாக இருப்பேன்**."

ஸெல்மா ஹாஸனின் சகோதரர் கலீத் அல்-ஃபாகீஹ் (KHALED AL-FAQIH) ஓர் உடல் வர்ம முறை மருத்துவராகவும் (CHIROPRACTOR), பிரைனர் மெல் நடனக் கலைஞராகவும் மாறுவதற்கான அங்கீகாரத்தை பாபா வழங்கினார். கேரி முல்லின்ஸிடம் (GARY MULLINS) தனது கல்லூரிப் படிப்பை முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

பிரைனர் அவரது வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்று ஐவி, பாபாவிடம் கேட்டபோது, பிரைனர் பெரும் சங்கட உணர்வுக்கு உள்ளானார். பின்னர் அவர் விளக்கினார்: "நான் கம்பளத்தின் அடியில் பதுங்கிக் கொள்ள முயன்றேன். ஒருமுறை நான் பாபாவை சந்தித்தபோது, அவரிடம் எதையேனும் கேட்க வேண்டும் என்ற எண்ணம் மிகவும் அர்த்தமற்றது என்பதை உணர்ந்தேன். அவரிடம் கேட்க என்ன இருக்கிறது? நான் மகிழ்ச்சியாக இருக்கிறேனா என்று பாபா என்னிடம் கேட்டார். அவர் முன்னிலையில், நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் – உங்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் இருந்ததில்லை. அது உண்மையில் நம்பமுடியாத ஒன்றாக இருந்தது."

பிரைனர், ஸூஃபிகளுடன் அறையை விட்டு வெளியே சென்றபோது, மார்கரெட் க்ராஸ்கே மற்றும் பாலே நடனக் கலைஞர்கள் பாபாவுடன் இருக்க உள்ளே நுழைய இருந்தனர். பிரைனர் மெல் தைரியமாக அவரிடம் சென்று, "மிஸ் க்ராஸ்கே, நான் மீண்டும் நடனக் கலைஞராக வேண்டும் என்று பாபா விரும்புகிறார். நான் உங்கள் நடனக் கலைஞர்களுடன் வரலாமா?" என்று கேட்டதற்கு, மார்கரெட் க்ராஸ்கே 'சரி' என்றார், பிரைனர் மறுபடியும் உள்ளே சென்று பாபாவை மீண்டும் சந்தித்தார். இரண்டாவது சந்திப்பு நிச்சயமாக முதல் சந்திப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஸூஃபிகளின் சந்திப்பு மிகவும் தீவிரமானதாகவும் கடுமையான பிரச்சினைகள் நிறைந்ததாகவும் இருந்தது. ஆனால் அறை முழுவதும் மார்கரெட்டின் நடனக் கலைஞர்களால்

நிறைந்திருந்தபோது, 'திடீரென அங்கே விழாக்கோலத்தின் தருணம் போல் இருந்தது!" பிரைனர் மெல் கூறினார். பாபா தம் அன்பர்களுக்கு மத்தியில் மனமார சிரித்து உரையாடிக் கொண்டிருந்தார்.

மார்கரெட்டின் நடனக் கலைஞர்களைப் பார்த்த பாபா, அவர்கள் ஒவ்வொருவரிடமும், "நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" என்று கேட்டார். ஒரு நடனக் கலைஞரைப் பார்த்த பாபா, "அவர் இங்கே மகிழ்ச்சியாக இருக்கிறார், ஆனால் அங்கு (அமெரிக்காவில்) அவ்வாறு இல்லை" என்று கருத்துத் தெரிவித்தார்.

ஃபிலிஸ் ஃபிரடெரிக் நியூயார்க் குழுவுடன் பாபாவிடம் வந்தபோது, தரிசனத்திற்காக வர இயலாத சில அமெரிக்க அன்பர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார். பாபா அவரது இடுப்பு வலி மற்றும் வேலையைப் பற்றி விசாரித்ததைப் போல, குழுவில் இருந்த பிற அன்பர்களுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்தினார். அவர் இவ்வாறு குறிப்பிட்டார், **"உங்கள் அனைவரையும் பார்ப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், ஃப்ரெட், உங்கள் குழு எப்படி செயல்படுகிறது? நீங்கள் அனைவரும் உங்களிடையே அனைத்தையும் எப்படி நிர்வகிக்கிறீர்கள்?"** சிறு சிறு தனிப்பட்ட விஷயங்களால் ஏற்படும் இடையூறுகள், இடர்பாடுகள் இருந்தாலும், அனைவரும் 'பாபா' எனும் பொதுவான அடிப்படையில் சந்தித்ததாக ஒருவர் கூறினார். பாபா, **"ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்க சூழலைப் பேணி பாதுகாக்க வேண்டியது அவசியம். கூட்டங்களில் நானும் உங்களுடன் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?"** எனக் கருத்துரைத்தார்.

அமெரிக்காவில் பிற மையங்களை நிறுவுவது தொடர்பான கேள்வியைக் குறித்து பாபா கூறினார், **"நான் இறை வார்த்தையை வழங்கும்போது, இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும். முழு உலகின் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும். என்னை தொடர்ந்து நேசியுங்கள், என்னை நேசிப்பவர்கள் அவர்களின் இதயங்களில் அந்த இறை வார்த்தையின் தாக்கத்தை உணருவார்கள்… நீங்கள் கவிழ்ந்து விடலாம் அல்லது கர்ணம் போடலாம்!**

**"புதிய சொற்பொழிவுகள் அடங்கிய 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்'** (THE EVERYTHING AND THE NOTHING) **புத்தகம் சிலருக்கு மனநிறைவைத் தரும்; விஞ்ஞானிகள் கூட அவர்களுக்குப் பெரிதும் உதவும் வகையிலான தகவல்களை அதில் கண்டுகொள்வார்கள். ஆனால் இதயத்தின் உதவி இன்றியமையாதது; ஒருவர் என்னை அதன் மூலம் கண்டுகொள்ள வேண்டும். அந்த உணர்வு அவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது, நீங்கள் எனது சொற்பொழிவுகளை படிப்பதைக் கூட நிறுத்திவிடுவீர்கள். நான் இறை வார்த்தையை வழங்கும்போது, எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்… நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?"**

பிற குழுக்களுடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்த பாபா, **'கடவுளை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தில், ஒரு துறவியிடமிருந்து**

**இன்னொரு துறவியிடம் செல்வது பயனற்றது**' என்று குறிப்பிட்டார். '**அந்த வகையில் அலைந்து திரிவது உண்மையில் தீங்கு விளைவிக்கும்**' என்று அவர் வலியுறுத்தினார், ஏனெனில் இந்த நேரத்தில் முழு உலகமும் துறவிகள், மஹாத்மாக்கள் மற்றும் யோகிகளால் நிரம்பியுள்ளது, அவர்கள் இறை நாட்டம் மிக்கவர்களுக்கு நன்மை செய்வதற்கு பதிலாக, அவர்களுக்கு அதிக தீங்கு விளைவிக்கிறார்கள்.

ஏழு நாட்களில் இறை உணர்வை அடையப் பெறுவதற்கான வழிபாட்டு முறைகள் மற்றும் கோட்பாடுகளைப் பற்றி தமது மேற்கத்திய அன்பர்களை எச்சரித்த பாபா, **"ஏழு நாட்களில் இறை உணர்தல் என்ற பேச்சு நகைப்புக்குரியது! இறை நாட்டம் மிக்க ஒருவர், பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசி போல் ஆகாத வரை, அறியாமையின் வலையிலிருந்து தன்னைத்தானே விடுவிக்க, வேறு எந்தத் தீர்வும் இல்லை. இந்த உலகம் முழுவதிலும், எல்லா நேரங்களிலும், ஐந்து சத்குருக்கள் மட்டுமே உள்ளனர்; எனவே இறைவனைத் தேடுபவர் ஒரு போலி சத்குருவின் பாதத்திற்கு இரையாகிவிடாதபடி மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.**

**"சுருக்கமாகச் சொன்னால், அவதார புருஷரின் மேலங்கியை** (தாமன்) **உறுதியாகப் பற்றிப் பிடிப்பதே அனைவருக்கும் மிக உயர்ந்த பலன். எதை இழந்தாலும், அதைத் தவறவிடாதீர்கள். நான் இந்த யுகத்தின் அவதார புருஷர்!"**

1962 நவம்பர் 3ஆம் தேதி, சனிக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு, திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முன்பே, பாபா தமது அன்பர்களை சந்திக்க மேடையில் அமர்ந்திருந்தார்; மேலும் அவர் நாக்பூர், ஜபல்பூர், போபால், ஹமிர்பூர் மற்றும் சில இடங்களிலிருந்து வருகை தந்த அன்பர்களை அழைத்தார். இது பிற்பகல் 3.00 மணி வரை தொடர்ந்தது. இன்னமும் பலர் வரிசையில் காத்திருந்ததைக் கண்டு, பாபா, தன்னை இதுவரை சந்திக்காத நபர்களை, காலை 7:30 மணிக்கு சந்திப்புக் கூடாரத்திற்கு வருமாறு அறிவுறுத்தினார். அடுத்த நாள் காலை, கூட்டத்தின் கடைசி நாள்.

5ஆம் தேதி காலையில் தனது மேற்கத்திய அன்பர்களுக்கு பிரியாவிடை அளித்து, அரவணைப்பதாக உறுதியளித்த பாபா கூறினார், **"உங்கள் இதயங்களில் எனது உண்மையான இறை தரிசனத்தை அடையப் பெற்ற பின்பு, தரிசனத்திற்காக மேடைக்கு வர வேண்டிய தேவையில்லை. என்னை நேசிக்க வேண்டிய விதத்தில், நான் நேசிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்போது ஒரு நாள் என் உண்மையான தரிசனத்தைப் அடையப் பெறுவீர்கள்."**

லக்ஷ்மிகாந்த் தாடே ஏழை, எளிய, நாடோடி பழங்குடி மக்களுடன் பணிபுரியும் அரசாங்க சமூக நல அதிகாரி. அவர் ஒருமுறை பாபாவை பூனாவில் பழங்குடியினரின் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில், அங்கு பாபா அனைவருக்கும் தரிசனம் வழங்கினார். பாபாவின் அனுமதியுடன், தாடே இந்த

மக்களின் ஒரு குழுவை கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கு அழைத்து வந்தார்; அவர்கள் பாபாவைத் தொழுது வணங்கிய பின்னர், அவர் திடீரென வீங்கிய தனது கால்களைச் சுட்டிக்காட்டியதும், தாடே கண்கலங்கி அழத் தொடங்கினார்; அவருடைய இந்த ஆலோசனை பாபாவிற்கு மேலதிகமான துன்பத்தை உருவாக்கியது என்று தாடே நம்பினார். **"நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?"** என்று பாபா அவரிடம் கேட்டு, **"இவர்களுக்காக நான் இந்த பூமிக்கு வந்திருக்கிறேன்"** என்றார்.

இந்தி, தெலுங்கு, மராட்டி மொழிகளில் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்பட்ட **'என் அருமை சேவகர்கள்'** (MY DEAR WORKERS) என்ற இந்த செய்தியுடன் பாபா அன்றைய நிகழ்ச்சியைத் தொடங்கினார். இதை டார்வின் ஷா ஆங்கில மொழியில் வாசித்தார்:

**என் அருமை சேவகர்கள்:**

**நான் உங்களுக்கு இனிமேல் செய்திகளையோ சொற்பொழிவுகளையோ வழங்கமாட்டேன் என்று அடிக்கடி உங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தாலும், நான் செய்ய விரும்பாத இதையே செய்துகொண்டிருக்கிறேன். ஏனெனில், உங்களில் பெரும்பாலானோர் நான் விரும்பாத செயல்களை செய்துகொண்டிருக்கிறீர்கள்.**

**நீங்கள் எதிர்பார்த்ததற்கு இணங்க, நான் நேற்று உங்களுக்கு ஒரு செய்தியை வழங்க வேண்டியிருந்தது; மேலும், அந்தச் செய்தியின் கருப்பொருள் 'நீங்கள் எனது குழந்தைகள்' என்பதைச் சார்ந்ததாக இருந்தது, ஏனெனில், 'பாபா-குடும்பம்' குறித்து அதிகமாகப் பேசப்பட்டாலும், அனைவரும் ஒரே இறைத் தந்தையின் குழந்தைகளாக இருந்தாலும், உங்களிடையே அது போன்ற உறவின் சாயல் மட்டுமே இருப்பதைத் தவிர, பரஸ்பர நட்பு மற்றும் நம்பிக்கையின் உண்மைத்தன்மை வெளிப்படவில்லை. ஒரே இறைத் தந்தையின் உண்மையான குழந்தைகள், ஒருவரையொருவர் புன்னகையுடனும், அரவணைப்புடனும் வாழ்த்தி வரவழைப்பதில்லை; அதே சமயம், காழ்ப்புணர்வு மற்றும் தீய எண்ணங்களை நீங்கள் மனதில் மறைத்து வைத்துள்ளீர்கள்; ஆனால் அவர்கள்** (இறைத் தந்தையின் உண்மையான குழந்தைகள்) **ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக தங்கள் இதயங்களில் தீவிர அக்கறை கொண்டுள்ளனர் மற்றும் தியாகங்களைச் செய்கின்றனர். நீங்கள் என்னை உங்கள் உண்மையான இறைத் தந்தையாகக் கருதினால், உங்களுக்கும் பிற அனைவருக்கும் இடையே உள்ள அனைத்து வேறுபாடுகள், சச்சரவுகள் மற்றும் உங்கள் வாழ்க்கை சம்பந்தமான அனைத்து தனிப்பட்ட பிரச்சனைகளும் என் அன்பின் கடலில் கரைந்துவிடும்.**

**இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை பரப்புவதில் நீங்கள் அனைவரும் ஆர்வமாக உள்ளீர்கள்; மேலும், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் உங்களில் பலர், செய்திகளின் இதழ்கள் மற்றும் பிற இலக்கியங்களை வெளியிடுவது,**

கூட்டங்களை நடத்துவது, உங்கள் விடுமுறை தினங்களைத் தியாகம் செய்து பயணம் மேற்கொள்வது, மண்டபங்கள் கட்டி எழுப்புவது, எனது சிலைகளை உருவாக்குவது போன்றவற்றில் கடுமையாக உழைத்திருக்கிறீர்கள். ஆனால் இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை பரப்பும் உங்களின் பணியில், எனது அன்பும் உண்மையும் எவ்வளவு இருந்தது என்று நான் நினைத்துப் பார்க்கிறேன்! உங்கள் இதயங்களில் சகோதர பாச உணர்வு இல்லாவிடில், எனது பெயரில் நீங்கள் பேசும் மற்றும் அச்சிடும் வார்த்தைகள் அனைத்தும் வெறுமையாக இருக்கும்; எனது கொள்கையின் பாதையில் நீங்கள் பயணிக்கும் அனைத்து மைல்களும் பூஜ்ஜியமாகிவிடும்; எனது பணிக்காக நிறுவிய அனைத்து அமைப்புகளும் செயல்பாட்டின் தோற்றம் மட்டுமே; என்னை உள்ளடக்கிய அனைத்து கட்டிடங்களும் வெற்று இடங்கள் மற்றும் என்னை உருவகப்படுத்த நீங்கள் உருவாக்கிய அனைத்து சிலைகளும் (என்னுடையவை அல்ல) வேறொருவருடையவை.

நீங்கள் இவை அனைத்தையும் செய்த விதத்தில் நான் பொறுமை காத்து, உங்களை மனம் போன போக்கில் போகவும் அனுமதித்தேன், ஏனெனில் நீங்கள் என் அன்பில் மிகச் சிறிய குழந்தைகளாக இருந்தீர்கள்; மேலும், குழந்தைகளாகிய நீங்கள் விளையாடுவதற்கு ஏதேனும் விளையாட்டு பொம்மைகள் தேவை. ஆனால் இப்போது நீங்கள் வயதுக்கு வந்துவிட்டீர்கள், நீங்கள் செய்து கொண்டிருந்ததை விட பெரிய வேலை உங்கள் முன்னால் உள்ளது என்பதை உணரத் தொடங்குகிறீர்கள். இந்த வேலை என்னவாக இருக்கும் என்று உங்கள் மனதையும் இதயத்தையும் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் ஏற்கனவே செய்து கொண்டிருந்த வேலையிலிருந்து இது வேறுபட்டதல்ல. அதே வேலைதான் வேறு வழியில் செய்யப்படுகிறது. மேலும் அந்த வழியே நிர்மூலமாகும் வழி, அதாவது நீங்கள் எனக்காக எவ்வளவு அதிகமாக வேலை செய்கிறீர்களோ, அவ்வளவு முக்கியத்துவம் குறைந்ததாக உணர்கிறீர்கள். எனது வேலையை நான் மட்டுமே செய்கிறேன் என்பதை நீங்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். கடவுளுடன் ஐக்கியமாகிய ஒருவரால் மட்டுமே அனைவருக்கும் சேவை செய்ய முடியும் என்றாலும், எனக்காக உழைக்க நான் உங்களை அனுமதிக்கிறேன்; அதனால், உங்கள் தனித்திறமைகளையும் அறிவுத்திறன்களையும் தன்னலமின்றி பயன்படுத்தவும், என்னுடன் நெருங்கி வரவும் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். எனக்காக நீங்கள் செய்யும் வேலையில் நீங்கள் பிறருக்கு நன்மை செய்கிறீர்கள் என்று நீங்கள் ஒருபோதும் நினைக்கக்கூடாது, ஏனெனில், பிறரை என்னிடம் கொண்டு வருவதற்கு கருவியாக இருப்பதன் மூலம், நீங்களே பயனடைகிறீர்கள்.

எனது பணி உங்களுக்கான வாய்ப்பு. ஆனால் உங்களுக்கும் எனது பணிக்கும் இடையில் நீங்கள் உங்களைத் தலையிட அனுமதிக்கும் போது, அந்தப் பணி, உங்களை என்னிடமிருந்து பறிக்க அனுமதிக்கிறீர்கள். எனது

**பணியை நீங்கள் உங்கள் முன் வைக்கும் போது, பணி சரியாக நடக்கும், ஆனால் எளிதாக நடக்கும் என்ற அவசியமில்லை. பணி சரியாக நடக்கவில்லை என்றால், அதற்கும் அதன் வெற்றிக்கும் இடையில் நீங்கள் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள் என்று அர்த்தம்.**

**எனது பணியின் வழி, வலுவிழக்கச் செய்யும் வழி, பலவீனத்தின் வழி அல்ல; அதன் மூலம் நீங்கள் என் அன்பில் முதிர்ச்சி அடைகிறீர்கள். இந்தக் கட்டத்தில், உண்மையான அன்பு என்னவென்று உங்களால் அறிய முடியாது, ஆனால் நீங்கள் எனக்காக உழைக்க வேண்டிய விதத்தில் உழைப்பதன் மூலம், சரியாகப் பக்குவம் அடையும் வேளையில், நீங்கள் லட்சக்கணக்கான ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருப்பதை ஒரே நொடியில் நான் உங்களுக்கு வழங்க முடியும்.**

காலத்தால் அழியாத இந்தச் செய்தியின் மூலம், பாபா தனது குழந்தைகளை நேர்வழியில் எதிர்கொண்டார். நிகழ்ச்சி முழுவதும், அவர் தனது அன்பில் சிறப்பான மாற்றத்தைக் கொண்டுவர அவர்களைத் தொடர்ந்து வலியுறுத்தினார்.

செய்தியைப் படித்த பிறகு, பாபா, "**இப்போது மழை பெய்தால், நிகழ்ச்சி தலைகீழாகிவிடும்!**" மீண்டும் அவர் பென் ஹெய்மனை நோக்கிக் கூறினார், "**நீங்கள் தூங்கச் சென்றால், நானும் தூங்கிவிடுவேன்!**"

அஹமதுநகரைச் சேர்ந்த லதா லிமாயே, கவிஞர் ஜிகரின் (பாபா விரும்பும் இக்காலக் கவிஞர்) கஸலைப் பாட அழைக்கப்பட்டார், மேலும் ஏராளமான பார்வையாளர்கள் இருப்பதை கவனிக்காமல் முழு மனதுடன் பாடுமாறு பாபா அவரைக் கேட்டுக்கொண்டார். லதா அதை மெல்லிசையாகப் பாடியபோது, பாபா, ஜிகரின் வார்த்தைகளை மொழிபெயர்த்தார்:

**அன்பன் சொல்கிறான்: 'எவரையும் இறை அன்பின் மதுபானத்தை அருந்தச் செய்யாதீர்கள்!' அப்போது அவரது வாழ்க்கை, வெறும் கொந்தளிப்பைத் தவிர வேறொன்றுமில்லாமல் ஆகிவிடும். அவர் தண்ணீரிலிருந்து வெளிவரும் மீனைப் போலாகிவிடுவார்; அவர் உள்ளே ஓர் எரிமலையை அனுபவிக்கிறார். அவரது வாழ்க்கை முழுவதும் சின்னாபின்னமாகி விடுகிறது.**

**இருந்தும் அவர் கெஞ்சுகிறார்: 'அந்த இறை அன்பின் மதுபானத்தை எனக்கு வழங்குங்கள்!' ஆனால், அன்பான இறைவனுடன் இணைந்த அந்த அனுபவத்தை அடையப் பெற்றதும், அவர் இறைப் பேரின்பத்தை உணர்கிறார். பின்னர் அவர் தன்னை ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளாகப் பார்க்கிறார்.**

அவரது பாடலைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த பாபா, கூட்டத்தின் பாராட்டுக்களுக்கு மத்தியில் லதாவைத் தழுவினார்.

அதைத் தொடர்ந்து, ஆந்திரா அன்பர் பாஸ்கர ராஜுவின் இயக்கத்தில், பாபாவின் வாழ்க்கையையும் பணியையும் சித்தரிக்கும் அவர்களின் தெலுங்கு

நாடகமான 'புர்ரா கதா'வின் (BURRA KATHA) காட்சி அரங்கேற்றப்பட்டது. தபேலா மற்றும் ஹார்மோனியத்தின் பக்கத்துணையுடன் நான்கு பேர் மேடையில் நடந்து சென்றனர். ஒருவர் பாபாவின் வாழ்க்கையை விவரித்தார்; பிற மூவரும், ஒரு முஸ்லிம் (பாஸ்கர ராஜு), ஒரு கிறிஸ்தவர் (வெங்கடாச்சார்யா) மற்றும் ஒரு இந்து (சத்யம்) ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உடை அணிந்து அவரிடம் கேள்விகளை எழுப்பினர். இடையிடையே பாபாவின் மகிமை, பாடல்களில் போற்றி புகழப்பட்டது. இந்தக் குழு இந்தியாவில் பல இடங்களில் நாடகத்தை நிகழ்த்தி, பாபாவின் செய்திகளைப் பரப்பியது. அந்த நாள் அவர்களின் 150ஆவது நிகழ்ச்சி.

பாபா கூறினார், "**எனது சேவகர்கள் என்னை முழுவதுமாக வெளிச்சம் போட்டு காட்டுகின்றனர்! எனது குழந்தைப் பருவத்தைப் பற்றி சொல்கிறார்கள், நான் எவ்வளவு குறும்புக்காரனாக இருந்தேன்!**"

எரச் ஒலிப்பெருக்கியில் 'அனைவரும் போக்குவரத்துக் கட்டணத்தைச் செலுத்துமாறு' நிர்வாகத்தின் கோரிக்கையை முன்வைத்தார். மேலும், பாபா அவரிடம் சைகையால் தெரிவித்ததை எரச் எடுத்துரைத்தார், "பாபா, 'அவர் கடவுளைப் பற்றிப் பேசும் இந்த நேரத்தில், நான் போக்குவரத்து கட்டணத்தைப் பற்றிப் பேசி சூழ்நிலையை கெடுத்துவிட்டேன்' என்று கூறுகிறார்!"

மாலை 4:00 மணியளவில், ஜெய்ப்பூர் கவாலி பாடகர் தனது நிகழ்ச்சியைத் தொடங்கினார். அவரும் அவரது கவாலி குழுவினரும் குருபிரசாத்தில் கடந்த மே மாதம், பாபா முன்னிலையில் நடத்திய நிகழ்ச்சியை அவர் மிகவும் ரசித்தார்.

ஹபீப் கவாலி பாடகரும் ஒரு கஸலைப் பாடினார். பாபா, சில சமயங்களில் பாடலின் சில வரிகளின் அர்த்தத்தை விளக்கினார். ஒரு கட்டத்தில், அவர் கூறியது இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டது:

**அற்புதமான வார்த்தைகள் இவை. அன்பன், அன்பிற்குரிய குருநாதரிடம் கூறுகிறான்: 'ஓ என் அன்பே, உன் அன்பில் நான் தொலைந்து போனேன். தலை முதல் கால் வரை எரிந்து சாம்பலானேன். நான் கொழுந்துவிட்டு எரியும் எரிமலை! உன்னைப் பிரிந்த வலியில் விழும் கண்ணீரை நிறுத்தாதே! உனது மேலங்கியால்** (தாமன்) **எனது கண்ணீரைத் துடைத்து என்னை ஆறுதல்படுத்தாதே - அவ்வாறாயின் உனது மேலங்கி** (தாமன்) **எரிந்து விடும். எனக்கு உன்னுடன் ஐக்கியம் மட்டுமே வேண்டும், வேறொன்றுமில்லை; இல்லையேல் என்னைவிட்டு விலகி இரு!' இது அன்பனின் முறையீடு.**

**அன்பன் பிற அன்பர்களை எச்சரிக்கிறான்: 'ஜாக்கிரதை! ஒருமுறை அன்பின் மதுபானத்தை அருந்தினால், நீ உனக்குச் சொந்தமில்லாமலாகி விடுவாய். உலகமே உனக்கு இல்லாமலாகிவிடும். உன்னால் குறை கூறி முறையிட முடியாது, ஏனெனில், அன்பு உன் உதடுகளை மூடிவிடுகிறது!'**

**இங்கே பாபா-பிரியர்களுக்கு இதோ ஓர் எச்சரிக்கை: அன்பான பாபாவின் இந்த அன்பின் மதுபானத்தை விட்டு விலகி இருங்கள், அல்லது**

**நீங்கள் அதை சுவைப்பதானால், உங்கள் உதடுகளை முழுவதுமாக மூடி, அனைத்து முறையீடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள்!**

**இதிலுள்ள நகைச்சுவை என்னவெனில், அன்பன் கூறுகிறான்: 'ஆன்மீகப் பாதையை மிதிக்க என்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறேன்; ஆனாலும் உன்னைக் காணும்போது, நான் என்னை இழக்கிறேன்; நான் எங்கே இருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை!' வார்த்தைகளின் அர்த்தத்தின் ஆழத்தை புரிந்து கொள்ளாமல் இந்தக் கவாலி பாடல்களைப் பாராட்ட முடியாது. அவை அன்பால் நிறைந்தவை; அது இதயத்தின் மொழி.**

ஹபீப் பாடிய மற்றுமோர் ஈரடிக் கவாலி பாடல்:

பிரியமானவரைப் விட்டுப் பிரியும் இந்த நோயால் தாக்கப்பட்டவர்,
ஒருபோதும் ஓய்வெடுப்பதாக உணர இயலாது;
தண்ணீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீனைப் போல்
எப்பொழுதும் அவர் அமைதியற்றவராக இருக்கிறார்,
ஆனால் அவரால் குறை கூற முடியாது.

மேலும் கூறுகிறார்:

பரிபூரண குருநாதரின் தர்பாரில்
தட்டுத் தடுமாறும் நம்பிக்கைக்கு இடமில்லை.

பாபா அந்த ஈரடிக் கவிதையை விளக்கினார்:

**என்னை யுகத்தின் அவதார புருஷராக ஏற்றுக்கொள்வது எளிதல்ல. அதற்கு அதீத துணிச்சல் தேவை. இங்கே மண்டபத்தில் இறை அன்பின் மதுபானத்தை அருந்த துணிந்த, தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் உள்ளனர். குறு நோக்குப் பார்வையும், பலவீனமான இதயமும் படைத்தவர்களுக்கு இங்கு இடமில்லை. ஒருவர் தன்னைத் தானே கட்டுப்படுத்தி, கீழ்ப்படியத் தயாராக இருக்க வேண்டும்.**

**நேசிப்பது வேடிக்கையான விஷயமல்ல. இதை வேடிக்கை பார்ப்பதாக இருந்தால், நீங்களே வேடிக்கையாகி விடுவீர்கள்! பாடகர் கூறுகிறார்:**

**நான் உங்களை ஆயிரம் வழிகளில் பார்க்க முயன்றேன்,**
**ஆனால் என்னால் உங்களைப் பார்க்க முடியவில்லை!**
**நான் ஓர் அழகான முகம், கண்கள்,**
**மூக்கு, கைகால்களை பார்க்கிறேன்,**
**ஆனால் இறைப் பெருங் கடலாகிய உங்கள் வடிவத்தை**
**என்னால் பார்க்க முடியவில்லை!**
**நான் ஆயிரம் வாயில்களில் எனது தலையை**
**முட்டி மோதிக் கொண்டேன்,**
**ஆனாலும் உண்மைப்பொருளாகிய உங்களின் ரூபத்தை**
**என்னால் பார்க்க முடியவில்லை.**

**ஆனால், பல கோடியில் ஒருவரால் மட்டுமே என்னை, என் உண்மையான உருவில் பார்க்க முடியும். ஏக இறைவனாக ஒருமைப்பாட்டில்**

**ஒன்றிணைவது என்பது, இதுபோன்ற தரிசனத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அதற்கு, என் மீது தனித்த அன்பும், திடமான நம்பிக்கையும் அவசியம். ஆனால் கவலைப்படாதீர்கள்.**

**இந்த மண்டபத்தில், தெய்வீக மதுபான கோப்பைகள் அனைத்தும் காலியாக உள்ளன. ஆனால் தெய்வீக மதுபான விற்பனையாளர் கண்களைத் திறக்கும்போது, ஒரே நேரத்தில் அனைத்து கோப்பைகளும் இறை அன்பால் நிரப்பப்படும். அது விரைவில் நிகழும் என்று நம்புவோம்! அந்த இறை வார்த்தையால் நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, உங்கள் கோப்பைகள் அனைத்தும் இறை அன்பினால் நிரம்பியிருக்கும் - பின்னர் அதை நீங்கள் உங்கள் உளமார அருந்தலாம்.**

**முழுமையாக இறைப் பெருங்கடலை விழுங்கிய அந்தத் 'துளி' நான்! நீங்கள் என்னை உண்மையாக நேசிப்பீர்களேயானால், ஒரு நாள் நீங்கள் என்னை எனது உண்மை ரூபத்தில் காண்பீர்கள். என்னை ஆழ் இதயத்திலிருந்து நேசிப்பதானால், ஒரு நாள் ஏக இறைவன் எனும் யதார்த்தத்தின் ஒரு குறுகிய காட்சியை நீங்கள் அடையப்பெறலாம்.**

ஜெய்ப்பூர் கவாலி இசைக் கலைஞர் பாடும்போது, பாபாவின் முகம் ஆயிரம் சூரியன்களைக் காட்டிலும் பிரகாசமாக ஒளிர்ந்தது. இறை அன்பின் அனைத்து நிலைகளிலும் அவர் உளதாயிருப்பது அவரது முகத்தில், உடல் ரீதியாக வெளிப்பட்டது. இரண்டு மணி நேரம், இவ்வளவு விரைவில் கண்ணிமைக்கும் பொழுதுபோல் எப்படிக் கடந்தது என்று எவருக்கும் தெரியவில்லை. இன்னும் சிறிது நேரம் அவர் முன்னிலையில் இருக்க அனைவரும் ஏங்கினர். வார்த்தைகள், இசை நிகழ்ச்சிகள், இதுபோன்ற வேறு எதுவும் தேவையில்லை. பாபாவைப் பார்த்துக் கொண்டிருப்பதே மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அளிப்பதாக இருந்தது. அவரது ஒளிரும் முகத்தில் நிரம்பி வழிந்த தெய்வீக மதுபானம் அனைவரையும் மயக்கத்தில் ஆழ்த்தியது.

மாலை 6:00 மணிக்கு, இசைக் கலைஞர்கள் மதுசூதனன் எழுதிய ஆரத்தியைப் பாடி, பாபாவை ஆரத்தழுவினர். அத்துடன் அன்றைய விழா இனிதே நிறைவுற்றது.

1962 நவம்பர் 4 ஞாயிற்றுக்கிழமை காலை 6:00 மணியளவில், பாபாவை இதுகாறும் சந்திக்காதவர்கள், ஏற்கனவே அறிவுறுத்தியபடி, பேருந்துகளில் வந்து, குருபிரசாத்தின் வாயில்களில் அலைபோலப் பாய்ந்தோடினர். அவர்களின் கூக்குரல்களைக் கேட்டு, இரக்கமுள்ள இறை தந்தை பாபா, மேடைக்கு வருகை தந்தார்; அவர் உடனடியாக தனது குழந்தைகள் ஒவ்வொருவரையும் அரவணைக்கத் தொடங்கினார். தரிசன பந்தல் வெறிச்சோடி இருந்தது - இந்த சந்திப்பில் பெரிய அளவிலான கூட்டம் எதுவும் இல்லை - ஒன்பது மணிக்குள் அனைவரும் பாபாவின் தரிசனத்தோடு அரவணைப்பையும் பெற்றுக்கொண்டனர்.

தமது கிழக்கத்திய அன்பர்களை சந்தித்த பிறகு, பாபா அயல் நாட்டு அன்பர்களைப் பார்க்க குருபிரசாத் மண்டபத்திற்குச் சென்றார். "அவர் மிகவும் சோர்வாகக் காணப்பட்டார், எல்லையற்ற சோர்வாக இருந்தார்" என்று ஃபிலிஸ் ஃபிரடெரிக் பதிவு செய்திருந்தார், "அவருடைய முகத்தில் கிறிஸ்துவின் துன்பம் நிறைந்திருந்தது."

ஆனால் சில நிமிடங்களில், பாபா, புத்துணர்ச்சியுடன் பிரகாசமாகத் தோன்றினார். அன்பர்களை வாழ்த்திய அவர் இவ்வாறு கூறினார்: "**இன்று காலை ஆறு மணி முதல் மேடையில் இருந்தேன். என் அன்பர்களுக்காக பிற அனைத்து நிகழ்ச்சிகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. என்னால் தழுவ முடியாது. இன்று மதியம் 2:00 மணிக்கு பொதுமக்களுக்காக நான் சுதந்திரமாக இருக்க வேண்டும். இன்று காலை நான் என் அன்பின் பொறுப்பை பூர்த்தி செய்தேன்; இப்போது நீங்கள் அனைவரும் எனக்கு உதவுவீர்கள்.**"

இந்த நான்கு நாட்களில், பாபா, ஏறக்குறைய 7,000 அன்பர்களை ஆரத்தழுவினார். மேலும் அவர் அயல் நாட்டு அன்பர்களிடம் கூறினார்: "**உங்கள் அன்பு எனக்கு வலிமையையும், புத்துணர்வையும் வழங்கி, என்னைப் புதுப்பிக்கிறது, இன்று காலை நேரம் இதற்கு சான்று. நான் 3,000 அன்பர்களை அரவணைத்தேன்!**"

பாபா குழுவிடம் கூறினார், "**சுமார் அரை மணி நேரத்தில், நீங்கள் இந்தியாவின் சிறந்த இசைக்கலைஞர்களில் சிலர் பாடுவதைக் கேட்பீர்கள். பழம் மரபு சார்ந்த இசை ஞானிகளில் தலைமைப் பாடகர் விநாயக் ராவ் பட்வர்தன். சில மாதங்களுக்கு முன்னர் அவர் ரஷ்யாவிற்கு விஜயம் செய்தபோது, இப்படி நடந்ததாகக் கூறப்படுகிறது. ரஷ்ய தலைவர் நிக்கிதா க்ருஷ்சேவ், ஏதாவது கருவியை பாடகர் பட்வர்தன் மறைத்து வைத்திருந்தாரா என்பதைப் பார்க்க அவரது கீழ் தொண்டையை உற்றுப் பார்த்தார், அவருடைய குரல், கவனத்தை ஈர்க்கும் வகையில் அத்தனை குறிப்பிடத்தக்கதாக இருந்தது!**

"**பட்வர்தனும் அவரது குடும்பத்தினரும் என்னை மிகவும் நேசிக்கின்றனர். அவர் வழக்கமாக அவரது நிகழ்ச்சிக்கு அதிக கட்டணம் வசூலிப்பது வழக்கம்; ஆனால் எந்தக் கட்டணமும் இல்லாமல் எனக்காக இந்த சிறப்பான நிகழ்ச்சியை வழங்குகிறார். நான் அவரை இந்த நிகழ்ச்சிக்காக அழைத்த அடுத்த கணமே, அவர் கொல்கத்தாவில் தனது நிச்சயதார்த்தத்தைத் தள்ளிவைத்து, என் முன்னால் பாடுவதற்காக விரைந்தோடி வந்தார்.**"

முந்தைய நாள் பாடிய கவாலி பாடலைக் குறிப்பிட்டு பாபா விளக்கினார், "**அன்பன் தன் அன்பிற்குரியவரைப் பிரிந்ததைப் பற்றி புகார் கூறினான். அன்பிற்குரியவர் மிகவும் இரக்கமற்றவராகத் தெரிகிறார். அன்பன் அவனது உதடுகளைத் தைக்க வேண்டும். கடவுளிடமிருந்து அன்பின் பரிசை அடையப்**

**பெறும்போது இதுதான் நடக்கும்! இவ்வாறு துன்பம் என்பது மனிதனுக்கு கடவுள் கொடுத்த வரம்.**

**"ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்த, பைபிளில் குறிப்பிடப்படும் ஸெயின்ட் ஸக்காரியாஸ்** (ZACHARIAS), **அவர் தலை முதல் கால் வரை ரம்பத்தால் வெட்டப்பட்டாலும், தனது உதடுகளை மூடியே வைத்திருந்தார்! உங்கள் உதடுகளை மூட, அனிதா, நான் உங்களைத் தலை முதல் கால் வரை தைக்க நினைக்கிறேன்!"**

'**ஐவி டியூஸ், ஹெலன் வெப் இருவரும் எங்கே**' என்று பாபா கேட்டார். அவர்கள் ஜுரத்தால் பாதிக்கப்பட்டு ஹோட்டல் அறைகளில் தங்கியுள்ளனர். பாபா, சார்மியன் டியூஸை அனுப்பி அவர்களை அழைத்து வரக் கூறினார், '**இதுவே அவரது பௌதீக உருவில் அவரைப் பார்ப்பதற்கான கடைசி வாய்ப்பு**' என்று கூறினார்.

பின்னர் அவர் குழுவுடன் வேடிக்கையாக உரையாடத் தொடங்கினார். அவர் ஹாரி கென்மோரின் அகோரப் பசி மற்றும் மிகவும் அதிக அளவில் அவர் உண்பதைப் பற்றியும் கிண்டல் செய்தார். "**காலை உணவை முடித்த அடுத்த கணமே அவர் பசியாக இருக்கிறார்!**"

மரியன் ஃப்ளோர்ஷீம், ஸரோன்ஹி பக்ஜீஜியன் இருவரும் திருடர்களிடமிருந்து பயண ஆவணங்களைத் (PASSPORTS) திரும்பப் பெற்றதைக் கேள்விப்பட்ட பாபா, "**எதுவும் எங்கும் போவதில்லை, ஆனால் அது என்னிடம் வருகிறது. நீங்கள் எனக்கு ரூ.400 வழங்க விரும்பினீர்கள் என்பது நினைவில் உள்ளதா? அந்தத் திருடன் சரியாக ரூ.400 மட்டுமே எடுத்துச் சென்றான். எனவே, இப்போது அனைத்தும் சரிசெய்யப்பட்டது.**"

அவர்கள் தத்தமது இல்லம் திரும்பியதும், அவருக்கு ஒரு கடிதம் அனுப்புமாறு பாபா குழுவில் அனைவருக்கும் நினைவூட்டி, மேலும் கூறினார், "**1963இல், நான் எவரையும் பார்க்க மாட்டேன், எந்தக் கடிதத்திற்கும் செவிமடுக்க மாட்டேன். எனது மௌனத்தைக் கலைக்க நான் தயாராகிக் கொண்டிருப்பேன். அவசரகாலத்தில், நீங்கள் எனக்கு, பதில் தந்திக்கு பணம் செலுத்தப்பட்ட ஒரு தொலைத்தந்தி அனுப்பலாம். பதில் தந்தி மூலம் உங்களுக்கு பதிலளிக்க தேவையில்லாத பட்சத்தில், அதை பின்பு பிறருக்காகப் பயன்படுத்தலாம்.**"

கொட்டாவி விட்டதற்காக பாபா, கென்மோரைக் கண்டித்தார், அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்ததாக பதிலளித்தபோது, பாபா, "**நான் ஓய்வெடுத்தால், அனைத்தும் நொறுங்கி தூள்தூளாகிவிடும்!**" என்று குறிப்பிட்டார்.

'**இந்தியாவின் தூர வடக்குப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம், அவர்கள் சிக்கித் தவிக்கும் வாய்ப்புள்ளது**' என்றும், '**அவர்கள் புறப்படும் திட்டத்தை மெஹர்ஜிக்குத் தெரிவிக்குமாறும்**' பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். கிழக்கத்திய தன்னார்வ தொண்டர்களில் சிலர் பாபாவைத் தழுவ வந்தனர்.

ஒரு கட்டத்தில், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், "**இரத்தத்திற்கு பதிலாக, கடவுளின் அன்பு உங்கள் நரம்புகளில் ஓடட்டும்! இது சாத்தியமா, ஃபிரான்சிஸ்?**"

அதற்கு ஃபிரான்சிஸ், "நீங்கள் சொன்னால் முடியாதது எதுவுமில்லை!" என்றார்.

பட்வர்தன் தனது இசை நிகழ்ச்சியைத் தொடங்க ஆயத்தமானார். காலை 10.10 மணிக்கு இசை நிகழ்ச்சி தொடங்கியது. காமத் (KAMAT), தபேலா வித்வான்; லக்ஷ்மண் வஸே (LAXMAN WAZE) சித்தார் வாசிக்க, ஸக்காராம் ஜெய்பஹர் (SAKARAN JAIBAHAR) புல்லாங்குழல் கலைஞராகப் பங்கெடுத்தார். ஒரு கட்டத்தில், காமத் தனக்கே உரித்தான ஒரு தனி நிகழ்ச்சியை வழங்கினார், மேலும் பாபா மேற்கத்திய அன்பர்களிடம் அவரது விரல்களை கவனிக்குமாறு அறிவுறுத்தினார். இறுதியில் அனைவரும் கைகளைத் தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஒரு மணி நேர நிகழ்ச்சிக்குப் பின்னர், இசைக் கலைஞர்கள் பாபாவைத் தழுவிக்கொண்டு புறப்பட்டுச் சென்றனர். பாபா உடனே, "**அவர் இப்போது பாடியதை உங்களால் புரிந்து கொள்ள முடிந்தால், நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், நாளை இசை நிகழ்ச்சி எதுவும் கிடையாது**" என்று குறிப்பிட்டார்.

ஒரு கட்டத்தில், பாபா அவரது அன்பர்களிடம், "**என்னை நீங்கள் இப்படிப்** (அவரது உடலைத் தொட்டு) **பார்க்க விரும்புகிறீர்களா அல்லது இப்படித்தான் பார்க்க விரும்புகிறீர்களா?**" என்று கேட்டு, அவர் தனது கைகளை உயர்த்தி, முகத்தில் அதீத மகிமை நிறைந்த தோற்றத்துடன் மேல்நோக்கி பார்த்தார். எவரும் ஒரு வார்த்தையும் பேசுவதற்குள், பாபா, மீண்டும் கைகளை உயர்த்தி, "**இவ்வண்ணமே! உங்களுக்குப் பிரியமான கடவுளே வேண்டும்!**" என்று கூறினார்.

பூனா மாநகராட்சி பொறியிலாளர் புர்ஜர் போடே (BURJOR BODE) பாபாவைத் தழுவ வந்த வேளையில், பாபா அவரை மேற்கத்திய அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

காலை நிகழ்ச்சி நிறைவடைவதற்கு முன்பு, பாபா ஆண்கள், பெண்மணிகள் அனைவரிடமும், மதிய நிகழ்ச்சியில் தங்கள் இருக்கைகளை மாற்றிக் கொள்ளுமாறு தெரிவித்தார், ஏனெனில் பெண்மணிகள் தொடர்ந்து மூன்று நாட்களாக பந்தலின் அருகாமையில் வெயிலில் அமர்ந்திருந்தனர்.

இர்வின், எட்வர்ட் லக், பில் கோவன்ஸ் அனைவரும் வெளியே சென்ற பிறகு வாசல் அருகே நின்று கொண்டிருந்தனர். திடீரென பாபா தனது விரல்களால் வல்லொலி எழுப்பிய போது, வெளியேறும் ஆயத்தத்தில் இருந்த அவர்கள் திரும்பி பாபாவைப் பார்த்தனர், "**நினைவில் கொள்ளுங்கள், நான் மனித உருவில் கடவுள்**" என்று சைகையால் தெரிவித்தார். மீண்டும், அவர்கள்

புறப்பட ஆயத்தமான போது அதே சைகை மூலமாக, “**நினைவில் கொள்ளுங்கள், நான் மனித உருவில் கடவுள்! நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவ்வளவுதான்!**” அதன் பின்னர் அவர்களை வெளியேறுமாறு சைகையால் தெரிவித்தார்.

அன்றைய தினம் பாபாவை மீண்டும் பார்க்க வேண்டும் என இர்வின் உணர்ந்ததால், பாபாவிடம் ஆலோசனை கேட்க உள்ளே சென்ற எரச்சிடம், தனது கோரிக்கையை முன்வைத்தார். பாபா இல்லை என்று சைகையால் தெரிவித்தார், அவர்கள் பாபாவிடம் கேட்டதே தவறு என்பதைப் புரிந்து கொண்டு, இர்வின், எட்வர்ட், பில் ஆகியோர் அங்கிருந்து வெளியேறினர்.

அன்றிரவு, லக் சகோதரர்கள் இருவரும் ஒரு போரில் போர்க்களத்தில் உயிரைத் துறப்பது போலவும், பாபா அப்போது அங்கு இருந்த போதிலும் அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருந்ததாகவும் (அவர்கள் பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்த போதிலும்) கனவு கண்டனர். மறுநாள் காலை, பாபா அவர்களை அழைத்து, ஆஸ்திரேலிய அன்பர்கள் சிலர் பாடிக்கொண்டிருந்த அந்த நிகழ்ச்சியில், ‘**எவரேனும் ஏதேனும் கனவு கண்டீர்களா**’ என வினவ, லக் சகோதரர்கள் தாங்கள் கண்ட கனவை விவரித்தனர்.

அன்று மதியம் தரிசன நிகழ்ச்சி தொடங்கும் முன்பு, பாபா தமது ஆந்திரா சேவகர்களை சந்தித்து, தமது பெயரில் செய்யப்பட்ட பணிகளைக் குறித்து அவர்களிடம் கூறினார்:

**ஆந்திராவில் எனது நோக்கம் தொடர்பான தற்போதைய நிலையிலும், எனது பணியை நடத்தி, நிறைவேற்றுவதில் உங்களிடையே நிலவும் ஊழியர் மனப்பான்மையிலும் நான் திருப்தியாக இல்லை. என் அன்பர்களிடையே பிரிவினையும், பிளவுகளும், ஒருவருக்கொருவர் எதிரான, கசப்பான உணர்வுகளும் இல்லாமல், ஒன்றிணைந்து எனது காரியத்தில் உழைக்க வேண்டும் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன். கடந்த காலத்தில் நடந்தவை அனைத்தும் முற்றிலும் மறக்கப்பட வேண்டும், மேலும் யார் ஒருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டதாகக் கருதப்பட்டால், மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனைக்குப் பின்னர், இப்போது முழுமையாக மன்னிக்கப்பட வேண்டும்** (பிரார்த்தனை, கூட்டத்தின் முடிவில் மொழியப்பட்டது). **எதற்காகவும், எவரையும் குறை கூறி குற்றம் சாட்ட வேண்டிய தேவை இல்லை - இது அனைத்தும் எனது விளையாட்டு!**

**நீங்கள் அனைவரும் என் மீதும், எனது நோக்கத்தின் மீதும் கொண்ட அன்பினால் பாபா-பணியைச் செய்து வருகிறீர்கள்; இதுவரை செய்த பணிகளில் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். ஆனால், எனது சேவகர்கள் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து, என் அன்பிற்காக பல கரங்களுடனும் ஒரே இதயத்துடனும் உழைத்தால், உங்கள் அன்பினால் நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைவேன்.**

**பொறுப்பான சேவகர்கள் ஒன்றாக அமர்ந்து, ஆந்திராவில் பாபா-பணிக்கு முழுப் பொறுப்பான அமைப்பை உருவாக்க வேண்டும். அத்தகைய**

**அமைப்பின் மத்திய அலுவலகம், ஆந்திரா மாநிலம் முழுவதும் உள்ள பாபா அன்பர்களுக்கு, என்னிடமிருந்து வரும் எந்த செய்தியையும், அல்லது என்னிடமிருந்து நேரடியாக அனுப்பப்பட்டால் அல்லது ஆதி மூலம் என்னிடமிருந்து அனுப்பப்படும் முக்கியமான தகவல்களையும் உடனடியாகத் தெரிவிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

**'ஆந்திராவில் அமைந்த பல்வேறு மெஹர் மையங்கள், இந்த மைய அலுவலகத்துடன், கடிதப் பரிமாற்றம் மூலம், தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்டும்'** என்றும் பாபா விரும்பினார். ஆந்திராவில் அமைந்த ஒவ்வொரு மெஹர் மையத்தின் செயல்பாடுகள் தொடர்பான அனைத்து கடிதங்களும், நேரடியாக இந்தப் பொறுப்பான அமைப்பின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும், அதற்கு பதிலாக பாபா அல்லது அஹமதுநகரில் இருக்கும் ஆதிக்கு எழுத வேண்டும். இருப்பினும், பல்வேறு மையங்களின் அறிக்கைகள் குறித்து ஆதிக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட வேண்டும்.

வி.வி. நாராயண ராவ், பொறுப்புள்ள சேவகர்களின் குழுவை உருவாக்க உதவ வேண்டும் என்றும், இந்த அமைப்பு, அனைத்து முக்கியமான மெஹர் மையங்களையும் திருப்திகரமாக பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்றும் பாபாவால் தெரிவிக்கப்பட்டது. இறுதியில், பாபா அங்கிருந்த அனைவருக்கும் உபதேசம் வழங்கினார்:

**இணக்கமாகப் பணிபுரியுங்கள், ஒவ்வொருவர் மீதான குறைகளை மறந்துவிடுங்கள். என் மீதான உங்கள் அன்பிலும் நம்பிக்கையிலும் உறுதியாக இருங்கள். அனைத்து தரப்பிலிருந்தும் என்மீதான அன்பின் வெளிப்பாட்டின் அலைகள் ஓங்கி எழும் காலம் நெருங்கிக்கொண்டிருப்பதால், எனது மேலங்கியின்** (தாமன்) **மீதான உங்கள் பிடியை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள் என்று உங்கள் அனைவரையும் எச்சரிக்கிறேன். என் மீதான அன்பில் என்னை நெருங்கி வரும் புதிய அன்பர்களின் அலைகளால், எனது பழைய அன்பர்கள் கூட ஒதுக்கித் தள்ளப்படும் காலம் வரும்.**

**எனவே, எல்லா வேறுபாடுகளையும் மூழ்கடித்து, எனது மேலங்கியை** (தாமன்) **மிகவும் உறுதியாகப் பற்றிக்கொண்டு என்னுடன் நெருக்கமாக இருப்பது சிறந்தது. நான் ஆதிகாலப் புருஷன்.**

1962 நவம்பர் 4 ஞாயிறு மதியம் 2:00 மணிக்கு, வெளியுலக மக்களுக்காக பொது தரிசனம் நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு முன்னர், அடையாள அட்டை வழங்கப்பட்டவர்கள் மட்டுமே தினசரி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடிந்தது. இந்த மஹா (பெரிய) தரிசனத்தைக் காண கிட்டத்தட்ட 6,000 பாபா அன்பர்கள் பந்தலுக்குள் காத்திருந்தனர். மதியம் 1:00 மணி முதல் குருபிரசாத் மண்டபத்திற்கு வெளியே மக்கள் கூட்டம் அலைமோதியது. பாபா, அதே ஒளிரும் புன்னகையுடன் மதியம் 1:15 மணிக்கு மேடைக்கு வருகை தந்தார். அவரது நாற்காலி மேடையின் விளிம்பிற்கு நகர்த்தப்பட்டது, அதனால் வரிசையில்

வருபவர்கள் அவருக்கு முன்னால் செல்லும் போது, அவரது தரிசனத்தை விரைவாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது. பாபாவின் கைகளுக்குக் கீழே பச்சை நிற தலையணையும், பாதங்களுக்குக் கீழே மற்றுமொரு தலையணையும் வைக்கப்பட்டன.

அந்த நேரத்தில் காலநிலை மிகவும் வெப்பமாக இருந்தது; மேற்கத்திய அன்பர்கள் கை விசிறிகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி பாபா நகைச்சுவையாக, **"இந்த வெப்பம் ஒன்றும் இல்லை. நீங்கள் சூரியனுக்கு உள்ளே இருப்பதானால், அது கடவுளின் உண்மையான அன்பருக்குள் இருக்கும் இறை அன்பின் வெப்பத்துடன் ஒப்பிட முடியாததாக இருக்கும். நீங்கள் உங்களை அன்பர்கள் என்று அழைக்கிறீர்கள், இந்த சாதாரண வெப்பத்தைக் கூட உங்களால் தாங்க முடியவில்லையா? பிரியமான கடவுள், ஒருவர் கைவிசிறி பயன்படுத்துவதை அனுமதிக்கவில்லை, ஆனால் இங்கே பிரியமான பாபா நீங்கள் அதைப் பயன்படுத்துவதை அனுமதிக்கிறார்!"**

பாபா கூறியதைக் கேட்டு சிரிப்பொலி அலைகளாக எழுந்தது, கூட்டத்தின் முழு கவனமும் அவர் மீது குவிந்தது.

1958 ஜூலை 10ஆம் தேதி மெஹராபாத்தில் பாபா முதன்முதலில் வழங்கிய 'உலகளாவிய செய்தியை' ஒலிபெருக்கி மூலம் டான் ஸ்டீவன்ஸ் வாசிக்க அன்றைய நிகழ்ச்சி ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து பாபா கூட்டத்தில் அனைவருக்கும் உரை வழங்கினார்:

**அடுத்த ஆண்டு கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் என்னை அணுகும், பார்க்கும் சந்தர்ப்பம் எவருக்கும் கிடைக்காது. எனது மௌனத்தைக் கலைக்கும் உந்துதலுக்கு நான் தயாராக வேண்டும். நான் எனது மௌனத்தைக் கலைத்து, என் இறை வார்த்தையை உலகுக்கு வழங்க வேண்டும். ஆனால், எனது மௌனத்தைக் கலைக்கும் தூண்டுதலுக்கு நான் இன்னும் என்னைத் தயார் நிலைக்குக் கொண்டுவரவில்லை; பிரபஞ்சத்தின் பாரம் என்னால் தாங்க முடியாத அளவுக்குப் பெருகி வருவதால், நான் தயாராக வேண்டிய கட்டாயம். அடுத்த வருடம் எனது மௌனத்தைக் கலைப்பேன் என்று நான் சொல்லிக் கொண்டிருந்தேன், ஆனால் இப்போது அடுத்த வருடம் என்றால் அடுத்த வருடம்! முதன்முறையாக, உங்கள் அனைவருக்கும் வழங்கிய எனது சுய வாக்குறுதியின் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்! மௌனம், மூல முதலான இறை வார்த்தையை உச்சரிப்பதை இனிமேல் தடுக்க முடியாது!**

பாபாவின் இந்தப் பிரகடனம் பந்தலில் ஒரு தீவிரமான சூழலை உருவாக்கியது, அப்போது அவர் ஹாரி கென்மோரிடம் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனையைக் கூறுமாறு கேட்டுக்கொண்டார். **"நீங்கள் அனைவரும் என் முன்னிலையில் இந்தப் பிரார்த்தனைக்கு முழு கவனம் செலுத்துங்கள்"** என்று பாபா வலியுறுத்தினார். **"கடந்த காலத்தை மறந்து,**

**மன்னித்து வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!"**

பிரார்த்தனை ஆரம்பமானதும் அனைவரும் எழுந்து நின்றனர். அதன் முடிவில், பாபா தனது ஒட்டுமொத்த அன்பர்களின் கடந்த காலத்தின் சுமையை அகற்றுவது போல் ஓர் அழகான சைகையை வெளிப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, பல வருடங்களுக்குப் பிறகு முதன்முறையாக, ஆண் மண்டலியை ஒருவர் பின் ஒருவராக வந்து தனது பாதங்களில் தலை வணங்க அனுமதித்தார். பிறரைப் போலவே, பாவ் கல்சூரியின் முறை வந்தபோது, அவரது கண்களில் தானாகக் கண்ணீர் பெருக்கெடுத்தது. இந்தக் கூட்டத்தின் போது தமது இதய வாயிலை சிறிது திறந்து, அன்பில் ஒரு குறுகிய பாகத்தை விடுவிப்பதாக பாபா குறிப்பிட்டிருந்தார், இதுவே அவரது கண்ணீருக்குக் காரணம்.

**"பொதுமக்களுக்கு நான் தரிசனம் வழங்கி முடித்துவிட்டால், நீங்கள் அனைவரும் என்னை வணங்கலாம். இல்லையேல், கடந்த நான்கு நாட்களாக எனது தரிசனத்தை நீங்கள் அடையப் பெற்றதாக எடுத்துக்கொண்டு, அனைவரும் தங்கள் இல்லங்களுக்குச் செல்லலாம்"** என்று பாபா அறிவித்தார்.

சதாஷிவ் பாட்டீல் மேடையின் ஒரு மூலையில் நின்று கொண்டு, பாபாவால் ஆசீர்வதிக்கப்பட்ட பிரசாதத்தை விநியோகித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு மண்டலிக்கும் இனிப்பு மிட்டாய் ஒன்று வழங்கப்பட்டது. அப்போது மதியம் 2:00 மணி, தரிசனத்திற்காக மக்கள் நீண்ட வரிசையில் வாயிலுக்கு வெளியே வெயிலில் நின்று கொண்டிருந்தனர். மண்டலியின் தரிசனம் முடிந்ததும் பொதுமக்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அனைத்து தரப்பு மக்களும், ஆண்களும் பெண்களும் தனித்தனியாக, இறைத் தந்தையைக் கடந்து சென்று தரிசனம் செய்தனர். ஒவ்வொருவரும் பாபாவின் பாதங்களில் தலை வணங்கிய பின்பு, பூனா பஜனைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி தொடரவே, அனைவரும் விரைந்து சென்றனர். அவர்களுக்கே உகந்த சிறு சிறு வழிகளில் தரிசனத்திற்கு வந்தவர்கள் தங்கள் அன்பையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினர். சிலர் மலர் மாலைகள், பூக்கள், பழங்கள் அல்லது தேங்காய்களை கொண்டு வந்தனர். மேற்கத்திய அன்பர்களில் சிலர் (பிரைனர் மெல் உட்பட) மற்றும் பலர் புகைப்படங்களை எடுத்தனர்; அனீஸ் ஹாஸன் (பாபாவை முதன்முதலில் சந்தித்த ஐவி டியூஸின் ஸூஃபி குழுவில் ஒருவர்), லிஸ் ஸக்காலிஸ், பெஹராம், ஜெஹாங்கு, மேலும் சிலர் காணொளித் திரைப்படங்களை எடுத்தனர்.

பாபா இவ்வாறு கருத்துரைத்தார், **"நான் அவர்களிலும், அனைவரிலும், உங்கள் ஒவ்வொருவரிலும் இருக்கிறேன். எனது பார்வையில் எவரும் தாழ்ந்தவரும் இல்லை, உயர்ந்தவரும் இல்லை. ஏனெனில் கடவுள் ஒருவரே, நான் ஒருவரே, நீங்கள் அனைவரும் ஒருவரே. வேறுபாடு எதுவும் இல்லை - உயரமானவர், குள்ளமானவர், ஆண், பெண், அழகானவர், அழகற்றவர், பணக்காரர், ஏழை - எனது பார்வையில் அனைவரும் ஒன்றுதான்."**

பந்தலின் பின்புறத்தில், ஒரு பெண் பக்தர், 'பாபா, பாபா!' என்று சத்தமாக அழத் தொடங்கி, வேகமாக முன்னோக்கி வந்தார்; சேவகர்களால் அவர் தடுத்து நிறுத்தப்பட்ட போது, பாபா, தனது கழுத்தில் கைகளை வைத்து சைகையால் தெரிவித்தார், "**அந்தப் பெண்மணி அன்பால் நிறைந்தவர், ஆனால் என்னிடம் வர அனுமதித்தால் அவர் என்னைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, ஒருபோதும் விடமாட்டார்!**"

பாபா மேற்கத்திய அன்பர்களிடம் கூறினார், "**வரிசை முடிந்ததும், நீங்கள் என்னிடம் வந்து தலை வணங்கலாம், அதுவே முதலும் கடைசியுமாக என்னைத் தலை வணங்குவதாக இருக்கும்**" என்று கூறினார். சிறிய குழுக்களாக, மேற்கத்திய பெண்மணிகள் மெஹரா மற்றும் பிற பெண் மண்டலியிடம் விடைபெறுவதற்காக உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர்.

அன்று, முதன்முறையாக, ஆந்திராவைச் சேர்ந்த பல பக்தர்கள், போபால் நகரின் நஃப்டே குடும்பத்தினர், நாக்பூரின் லோகண்டே குடும்பத்தினர் ஆகியோர் பாபா முன்னிலையில் பஜனை பாடும் வாய்ப்பை அடையப் பெற்றனர். அந்த இசை நிகழ்ச்சியில், ஆந்திரா பஜனை குழுவினர் பகவத் கீதையில் அடங்கிய இந்த சமஸ்கிருத ஸ்லோகத்தை (வசனம்) பாடினர்: "**துறவிகளின் இரட்சிப்புக்காகவும், பாவிகளை அழிப்பதற்காகவும், (உண்மையான) மதத்தை நிறுவுவதற்காகவும், நான் யுகம் யுகமாகப் பிறவி எடுக்கிறேன்!**"

தரிசனத்திற்காகக் காத்திருந்தவர்களின் வரிசை வாயில்களுக்கு வெளியே சாலையில் ஏறக்குறைய அரை மைல் தூரம் நின்றுகொண்டிருந்தது. பிற்பகல் 3:30 மணியளவில், ஏறக்குறைய 7,000 பேர் காத்திருந்ததாக மதிப்பிடப்பட்டது, எனவே பாபா வரிசையைத் துரிதப்படுத்தினார்.

பத்திரிகை நிருபர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். தரிசனத்தைத் தொடர்ந்து, 'மஹாராஷ்டிரா டைம்ஸ்' (MAHARASHTRA TIMES) என்ற இந்தி நாளிதழின் நிருபர் ஒருவர் பாபாவிடம் வினவினார், "இந்தியா, சீனா இரண்டு நாடுகளுக்கும் இடையிலான போரில் யார் வெற்றி பெறுவார்கள்?"

பாபா இவ்வாறு பதிலளித்தார், "**யுகத்தின் அவதார புருஷராக நான் இந்தியாவில் பிறந்தேன் - அதனால் பாரதம் (இந்தியா) இறுதியில் வெற்றி பெறும். இப்போது இங்கு, யாரோ ஒருவர் கீதையில் கிருஷ்ணரின் வார்த்தைகளை மொழிந்து கொண்டிருந்தார். நான் பகவான் கிருஷ்ணர், நான் ஆதிகாலத்தவர். மீண்டும் மீண்டும், நான் என் அன்பர்களைப் பாதுகாக்கவும் மீட்கவும் பூமியில் இறங்கி வருகிறேன். நான் அன்பின் ஆளுமையுடன் தோன்றிய கிறிஸ்து.**"



மண்டலி பாபாவின் பாதங்களில் தலைவணங்குதல் -
பைதூல், பெண்டு, கைக்கோபாத்
(MANDALI BOWING DOWN TO BABA – BAIDUL, PENDU, KAIKOBAD)



எரச், டான் ஸ்டீவன்ஸ், அனீஸ் ஹாஸன்(புகைப்படம்
எடுக்கும் காட்சி) (ERUCH, DON STEVENS, ANEECE HASSEN - FILMING)



குருபிரசாத், நவம்பர் **1962** (GURUPRASAD, NOVEMBER 1962)

பாபாவின் ‘அவதார புருஷர்’ குறித்த பிரகடனம் மற்றும் இந்தியாவின் வெற்றி குறித்த அறிக்கை அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டபோது, ஒவ்வொரு மொழிக் குழுவிலிருந்தும் கோஷங்கள் எழுந்தன. (பாபாவின் அறிக்கை இந்தியாவில் பெரும்பாலான செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது, இரண்டு வாரங்களுக்குப் பிறகு, சீனா எதிர்பாராத விதமாக போர்நிறுத்தத்தை அறிவித்து, எல்லையைத் தாண்டி தனது படைகளை திரும்பப் பெற்றது.)

ஆயிரக்கணக்கானோர் தரிசனத்திற்காக பாபாவைக் கடந்து சென்றபோது, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பெர்னார்ட் புரூஃபோர்ட் (BERNARD BRUFORD) ‘பாபாவின் அன்பு, ஆற்றல் இரண்டையும் அவர் கையாண்ட சிக்கன முறை’யைக் கண்டு வெகுவாக ஈர்க்கப்பட்டார். பாபா ஒவ்வொருவரையும் தாங்கள் சிறப்பு மிக்கவர், குறிப்பிடத் தக்கவர் என உணர வைக்கத் தவறவில்லை; அவர் ஒருவரை வாழ்த்தும் வேளையில், அவர் தனது முழு கவனத்தையும் அந்த ஆண் அல்லது பெண்ணிடம் செலுத்தினார். அந்த நபர் தலைவணங்க கண்களைத் தாழ்த்திய அந்த கணத்தில், பாபா வேறு ஒருவரை வாழ்த்தினார், ஆனால் அதே நபர், தலையை உயர்த்தி மேலே பார்த்த அந்த நேரத்தில், பாபா பழைய நிலைக்கு வந்து, அந்த ஆண் அல்லது பெண்ணிடம் மீண்டும் தனது முழு கவனத்தையும் செலுத்தத் தவறவில்லை. ஒவ்வொருவரும், பாபா வழங்கிய வரவேற்பை சிறப்பானதாகவும் பிரத்தியேகமாகவும் உணர்ந்தனர். “இது கடிகார முட்களின் செயல்பாடு போன்ற துல்லியமான பணியாக இருந்தது,” பெர்னார்ட் கூறினார். “இது எனது மனதில் ஆர்வத்தைத் தூண்டவே, நான் இதை மணிக்கணக்கில் பார்த்துக்கொண்டிருந்தேன்.” மேலும், பாபா திரும்பிப் பார்க்கவில்லையென்றால், தலை வணங்கும் நபர் நகரும் முன்னர், அவரைத் திரும்பிப் பார்க்காதபோது மட்டுமே அது ஒவ்வொரு முறையும் நடந்ததை நான் ஊர்ஜிதம் செய்தேன்.

நியூசிலாந்தைச் சேர்ந்த அந்தோனி தாப் (ANTHONY THORPE), கிழக்கு-மேற்கு சகவாசத்தில் பாபாவை முதன்முதலில் சந்தித்தார்; அவருடைய உணர்வுகளை இவ்வாறு பதிவு செய்தார்:

பாபா பலவேறு ஆன்மாக்கள் மூலமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். உயர்ந்தவர், தாழ்ந்தவர் அனைவரையும் உள்ளடக்கிய மனிதகுலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், பாபா அவர்கள் மூலம் செயல்பட்டுக் கொண்டிருந்தார். நாங்கள் ஒருவிதத்தில் பாபாவின் கைப்பாவைகள் போல் இருந்தோம். நாங்கள் அங்கு பாபாவின் பணியின் ஒரு பாகத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்தோம் அல்லது பணிபுரிந்து கொண்டிருந்தோம்.

ஒவ்வொருவரையும் சந்திக்கும் போதும், பாபா அந்த நபரின் நிலையோடு இயைந்துபோவது தவறாமல் நிகழ்ந்தது. வெட்கத்தை வெளிப்படுத்தும் ஒருவருடன், பாபா வெட்க உணர்வுடனும், சற்று தடுமாற்றத்துடனும் நடந்து கொள்வதுபோலத் தோற்றமளித்தார்; தைரியமாக இருந்தவர்களுடன் பாபா அவ்வண்ணமே இருந்தார். அந்த நேரத்தில் என்ன சொல்ல வேண்டும் என்று அவருக்குத் தெரியும். இது கடவுளின் மனித பாகமாக இருந்ததோடு, நமது

நிலைக்கு கீழே இறங்கி வந்து, இதயத்திலிருந்து இதயத்தை எளிதில் தொடர்பு கொள்வதைப் போல் இருந்ததை என்னால் உணர முடிந்தது.

ஆயிரக்கணக்கானோருக்கு இந்த மகத்தான தரிசனத்தை வழங்குவதைத் தவிர, அவர் மிகவும் பலவீனமாக இருந்ததை ஒருவர் பார்க்க முடிந்தது - அவர் மிகவும் இரக்கமுள்ளவராக இருந்ததால், தனது சொந்த உடலையும் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. இந்த அன்பளிப்புகள், மலர் மாலைகள் அனைத்தையும் மரியாதையுடன் வணங்கி பெற்றுக்கொண்டதில் உள்ள பதற்றம், மிகுந்த சோர்வு ஆகியவற்றை நீங்கள் காணலாம். நொய்ந்து போன உடலைக் கொண்ட பாபா அற்புதமான கருணையுடன் இதைத் தாங்கிக்கொள்கிறார், ஏனெனில் கடவுளாகவும் மனிதனாகவும் இருப்பதால், அவருடைய மனித பாகம், அதே சூழ்நிலையில் நீங்களும் நானும் அனுபவிக்கும் அதே அசௌகரியத்தை உணர்ந்திருக்க வேண்டும்.

பாபாவின் மகிமையை நானும் உணர்ந்தேன், அது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. ஒரு முறை பாபா தமது கைகளைக் கூப்பி எங்களுக்கு ஆசிர்வாதம் வழங்கியது எனக்கு நினைவிருக்கிறது. பந்தல் முழுவதும் அமைதியாக இருந்தது. பாபா அமைதியாக இருந்தார். ஏதோ பிரமாண்டமாக ஒன்று நடப்பதுபோல் உணர்ந்தீர்கள்.

பிரைனர் மெலைப் போல பலர் பந்தலின் கீழே அமர்ந்திருப்பது மிகப் பெரிய அனுபவம் என்பதைக் கண்டறிந்தனர். அவர் இந்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்:

பந்தலில் பாபாவைப் பார்த்துக் கொண்டே இருந்தது என்னை மிகவும் களைப்புறச் செய்தது. மதிய உணவு நேரத்தில், நான் முற்றிலும் வற்றி வறண்டுபோய் உயிரைத் துறந்து விடுவதுபோல் உணர்ந்தேன். பாபா புத்துணர்ச்சியுடன் காணப்பட்டார். அவரைப் பார்ப்பது ஐந்து-வளைய சர்க்கஸைப் பார்ப்பது போல் இருந்தது. மக்கள் தலைவணங்க முன்வருவதும், அவருக்கு அன்பளிப்புகளை வழங்க, அவர் அதை எடுத்து மண்டலியிடம் கொடுப்பதும், பல அறிவுறுத்தல்களை வழங்குவதுமான அந்த வேளையில், அவரது கை விரல்களும், கண்களும் இடைவிடாது அசைந்தன. அவர் ஏதோ ஒன்றில் கவனம் செலுத்துவதும், பின்னர் லட்சக்கணக்கான மைல்கள் தொலைவில் இருப்பது போலத் தோன்றுவதும் தொடர்ந்து நடந்தது. மேலும், ஒரு கணம் அவர் மிகவும் வெளிறிய தோற்றத்திலும், பின்பு திடீரென நிறம் திரும்பி வருவது போலவும் தோன்றியது. ஒரு கணம், அவர் புத்துயிர் பெற்று உற்சாகத்துடனும், அடுத்த கணம் ஒரு சடலத்தைப் போலவும் தென்பட்டார். இது மிகவும் அசாதாரணமானது; வேகமாகப் புயல் வீசும் போது வானத்தைப் பார்ப்பது போல் இருந்தது: மேகங்கள் நிறைந்திருக்கும், பின்னர் அது தெளிவாகும், அதற்குப் பிறகு வெயில், மழை, அதைத் தொடர்ந்து ஒளியின் கதிர்கள் மேகங்கள் வழியாக ஊடுருவி கீழே வருவது போல் இருந்தது.

இது இந்த வேகத்தில் முற்றிலும் முடிவின்றி நடந்துகொண்டிருந்தது. நான் மிகவும் சோர்வாகி, என்னால் அனைத்தையும் பார்க்க முடியாமலானது. நாள் இறுதியில், அங்கிருந்து வெளியேற விரும்பினேன். பாபாவின் பிரசன்னத்தை விட்டு வெளியேற விரும்புவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அது மிகவும் தீவிரம் மிகுந்ததாக இருந்தது, அங்கிருந்து வெளியேறினால் நான் மகிழ்ச்சியடைவேன்.

வருகை தந்தவர்கள் அனைவரையும் பாபா அன்புடன் வாழ்த்திக் கொண்டிருந்தாலும், அன்று மதியம் ஒரு சந்தர்ப்பத்தில், இந்த அசாதாரண சம்பவம் நிகழ்ந்தது. தரிசனத்தின் போது, ஓர் இராணுவ வீரர் பெரிய மலர் மாலை ஒன்றை கைகளில் ஏந்திய வண்ணம், பாபா முன் வந்தார். அப்போதுதான், பாபாவின் கவனம் வேறு எங்கோ ஈர்க்கப்பட்டு, அவர் திரும்பிப் பார்ப்பதற்கு முன்னர், அந்த நபர் விரைவாக முன்னோக்கித் தள்ளப்பட்டார். மனம் தளராத இராணுவ வீரர் வெளியே சென்று, மற்றொரு மாலையை வாங்கிவந்து, மறுபடியும் வரிசையில் நின்றார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, மெதுவாக முன்னேறிச் சென்று, மீண்டும் ஒருமுறை பாபாவின் முன்னால் நின்றாலும், அந்த நேரத்தில், மேடையில் இருந்த ஒருவர் பாபாவுடன் உரையாடத் தொடங்கவே, அவருடைய கவனம் திசை திருப்பப்பட்டது. இராணுவ வீரர் சீற்றத்தில் வெளியேறினார். பாபாவின் கவனம் சிதறியது தற்செயலானதல்ல, அந்த நபரின் சார்பாக அப்படி நடந்ததற்கு அவரே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

இரண்டு மணி நேரம் கடந்தது, ஆனால் வரிசையில் இருந்த மக்களின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அது ஒரு பொது தரிசனம் என்பதால், யார் ஒருவரும் வருவதற்கு எந்தத் தடையுமில்லை; மேலும் மக்கள் நின்றுகொண்டிருந்த வரிசைகளில் பணக்காரர்கள், ஏழைகள், கற்றவர், கல்லாதவர், வயதானவர்கள், இளைஞர்கள் மற்றும் கிராமவாசிகள், நகர மக்கள் அனைவரும் இருந்தனர்.

பாபாவின் கழுத்து மற்றும் புருவத்திலிருந்த வியர்வையை எரச் துடைத்துக் கொண்டிருந்தார்.

மாலை 4:30 மணிக்கு, பாபா சைகையால் தெரிவித்தார், “**நிலைமை இப்படியே இருந்தால், அவர்கள் எனது தரிசனத்தைப் பெற முடியாது. மேற்கத்தியர்களுக்கும் எந்த வாய்ப்பும் இல்லை.**”

“இங்கே அமர்ந்து உங்களைப் பார்த்துக்கொண்டு இருந்தாலே போதும்” என்று முன் வரிசையில் அமர்ந்திருந்த கிட்டி டேவி குரல்கொடுத்தார்.

பாபா அவருக்கு இவ்வாறு பதிலளித்தார், “**சமுத்திரத்தைப் பார்ப்பது ஒன்று, அதில் உங்கள் கால்களை நனைப்பது என்பது வேறொன்று! எதுவாயினும், தரிசனம் செய்பவர்களை தரிசனம் செய்யுங்கள்!**”

தொடர்ந்து கூட்டம் திரள்திரளாக முடிவில்லாமல் வந்துகொண்டிருந்தது. மாலை 4:45 மணிக்கு, பாபா, மேற்கத்திய அன்பர்களிடம் கூறினார், “**நீண்ட**

**காலத்திற்குப் பிறகு, பூனா அன்பர்களுக்கு எனது பாதங்களில் தலை வணங்கும் வாய்ப்பை நான் வழங்குகிறேன். 1956 ஜனவரி மாதத்தில், நான் பூனாவில் எனது கடைசி பொது தரிசனத்தை வழங்கினேன். இன்று நான் மீண்டும் பூனா மக்களை எனது தரிசனத்திற்கு வர அனுமதித்தேன். இது முடிந்ததும், மழை பொழியவில்லை என்றால், உங்களுக்கும் ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.**"

ஹாரி கென்மோரிடம், "உங்கள் எண்ணங்கள் உள்ளளவில் என்னைப் பற்றியது" என்று பாபா குறிப்பிட்டார்.

மாலை 5:30 மணிக்கு பாபா இவ்வாறு அறிவித்தார், "**அனைவரும் என் அருகில் வந்து, எனது பாதங்களில் தலை வணங்குவது இயலாத காரியம். வரிசைகளில் கூட்டம் இருந்த இடத்திலேயே உள்ளது. இவ்வளவு நேரமும் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். எனது பிம்பத்தை இதயத்தில் ஏந்திச் சென்று, முடிந்தவரை அடிக்கடி பாருங்கள்.**"

கண் பார்வையற்ற ஹாரி கென்மோர், கிறிஸ்டின் வைஸின் (CHRISTINE WISE) உதவியுடன், நீண்ட தரிசன வரிசைக்கு நடந்து சென்றார். அவரைப் பார்த்த பாபா வெளிப்படையாகத் தெரிவித்தார், "**நீங்கள் வரிசையில் செல்லும் அளவுக்குத் துணிச்சல் மிக்கவர், ஆனால் அதற்கு நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்!**"

ஆறு மணிக்கு குருபிரசாத்தின் வாயில்கள் மூடப்பட்டன, இருப்பினும் தரிசனத்திற்காகக் காத்திருந்தவர்களின் வரிசைகள் வெகுதூரம் நீண்டுகொண்டிருந்தன. இருந்தபோதிலும், உள்ளே இருந்த அனைவரும் பாபாவைக் கடந்து செல்ல மேலும் அரை மணி நேரம் ஆனது. அமெரிக்க அன்பர் ஒருவர் நடனமாடினார், லியோனார்ட் வில்லோபி ஒரு பாடலைப் பாடினார்; இறுதியாக, ஒரே குரலில், அனைவரும் ஆரத்தியில் இணைந்தனர். மாலை 7:00 மணிக்கு விவரிக்க முடியாத கிழக்கு-மேற்கு சகவாசம் நிறைவுக்கு வந்தது. "**நீங்கள் அனைவரும் என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்**" (ALL OF YOU, TAKE ME WITH YOU) என்பது பாபாவின் இறுதி வார்த்தைகள், அவர் கைகளை உயர்த்தியபடி அனைவரிடமும் பிரியாவிடை பெற்று சென்றார்.

சிறிது நேரத்தில் பாபா கூட்டத்தினூடே காரில் அழைத்துச் செல்லப்பட்டார். குருபிரசாத்தின் கதவுகள் மூடப்பட்டிருந்தாலும், அவரைப் பார்க்க வேண்டும் என்ற தீவிர ஆர்வத்தில் கூட்டம் அவற்றை உடைத்தெறிந்தது. காரின் உள்ளே இருந்துகொண்டே பாபா அவர்களைப் பார்த்து கைகளை அசைத்து, தன்னில் ஒரு குறுகிய காட்சியை வெளிப்படுத்தினார், அனைவரும் அவருடைய ஆசீர்வாதத்தை அடையப் பெற்றனர்

ஜான் ஹெய்ன்ஸ், டான் ஸ்டீவன்ஸ் மற்றும் சில பாலே நடனக் கலைஞர்களுடன் சற்று முன்னதாகவே நியூயார்க்கிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். சகவாசத்தின்போது, பாபா அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக எப்படி நேசிக்கிறார் என்று ஜான் யோசித்துக் கொண்டிருந்தார்.

பல்லாயிரம் பேர் பாபாவை நேசிக்கும்போது, பாபா அவர்களின் ஒவ்வோர் ஆத்மாவையும் அறிந்திருப்பது என்பது நம்பமுடியாததாகத் தோன்றியது, மேலும் அவர்களும் வெகுஜனங்களில் ஓர் அங்கமாக நின்றுகொண்டிருந்தனர். ஜான் பாபாவை சோதிக்க முடிவு செய்தார். அப்போது ஜான், பாபாவின் இதயத்தில் தோன்றிய ஒருவித அடையாளம், ஒரு சில சான்றுகள், சில உறுதிப்படுத்தல் ஆகியவற்றை விரும்பினார்.

கூட்டம் வெளியேறும் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, பாபா, எரச் சொல்வதைக் கேட்டுக்கொண்டே சாய்ந்து அமர்ந்திருந்தார். பந்தலை விட்டு வெளியே செல்லும் இந்த மக்கள் மத்தியில், கதவுக்கு அருகில் நின்றுகொண்டிருந்த ஜான், கைகளை உயர்த்தி, முன்னும் பின்னுமாக அசைத்த வேளையில், பாபா விடையளிப்பாரா என்பதைப் பார்க்கும் ஆர்வத்தில் இருந்தார். உடனே கூட்டம் ஒரு கணம் பிரிந்த அந்த இடைவெளியில், பாபா திரும்பி, புன்னகைத்து, தனது பரிபூரணத்தின் அடையாளத்தை சைகையால் தெரிவித்தார். சில வினாடிகளுக்கு முன்னர் அவர் வேறு வழியில் திரும்பினார். ஜான், தான் விரும்பியதை பாபா வழங்கிவிட்டதால் அவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

இந்தத் தனித்துவம் நிறைந்த சகவாசத்தின் இனிமையான நினைவுகள், அவர்களின் மனங்களில் நிரம்பி வழிந்தன; மேலும் பிரியமான பாபாவின் பிரசன்னத்தால் அனைவரின் இதயங்களும் நிறைவாக இருந்தன; அன்பர்கள் குருபிரசாத் மைதானத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர். அவர்களிடமிருந்து ஒரே ஒரு மென்மையான குரல் எதிரொலித்தது: “பாபா ... பாபா ... பாபா! மீண்டும் எப்போது சந்திப்போம்?”

1962 நவம்பர் 5ஆம் தேதி திங்கட்கிழமை காலை, இறுதி சந்திப்பிற்காக, மேற்கத்திய அன்பர்கள் குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டனர்; பாபா அவர்களின் உடல்நிலை மற்றும் பிற விஷயங்களைக் குறித்த வழக்கமான விசாரணைகளைத் தொடர்ந்தார். மரியன் ஃப்ளோர்ஷெய்ம் வருத்தமாக இருப்பதாகக் கூறினார். பாபா வினவினார், “**நீங்கள் ஏன் வருத்தமாக இருக்க வேண்டும்? என்னை உங்கள் இதயத்தில் (இல்லத்திற்கு) எடுத்துச் செல்லுங்கள். கிழக்கத்திய மக்களில் பலர் நேற்று இரவு என்னைப் பார்க்காமல் சென்றிருப்பார்கள், எனவே நான் காரில் சென்று அவர்களுக்கு தரிசனம் வழங்கினேன், அவர்கள் மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.**”

மஹாராணி ஷாந்தாதேவி உள்ளே நுழைந்து பாபாவின் அருகில் தரையில் அமர்ந்தார். அங்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான அன்பர்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ராமகிருஷ்ணன் எப்படிச் செய்ய வேண்டியிருந்தது என்பதை பாபா தொடர்ந்து விவரித்தார்; மேலும் இன்று காலை கூட்டம் நிறைவடைந்ததும் நெட் ஃபுட்டைத் தவிர அனைவரும் இங்கிருந்து கலைந்து

செல்ல வேண்டும், அவருடன் ஐந்து நிமிடங்கள் பேச விரும்புவதாக பாபா கூறினார்.

மேலும் அதிகமான மக்கள் மண்டபத்திற்குள் நுழைந்ததும், பாபா, **“நீங்கள் அனைவரும் நலமாக இருக்கிறீர்களா?”** என்று கேட்டார். ஒரு சிலருக்கு சளி பிடித்திருந்தது. பாபா அவர்களிடம் கூறினார், **“மெஹராபாத்தில் நான் இறுதியாக ஓய்வெடுக்கும் எனது எதிர்கால சமாதியையும், மெஹராஸாத்தில் அமைந்த என் இருப்பிடத்தையும் பார்வையிடுவதற்காக நாளை நீங்கள் பயணம் செய்வீர்கள். நீங்கள் அனைவரும், உடல் நலம் சீராக இருந்தால் அங்குச் செல்ல வேண்டும். மெஹராபாத்தில், நான் எனது பூத உடலைத் துறந்து அங்கு ஓய்வெடுப்பேன். இப்போது அந்த இடம் பாலைவனம் போல் உள்ளது. 100 ஆண்டுகளுக்குப் பின்னர் இது புனித யாத்திரை ஸ்தலமாகத் தழைத்தோங்கும். உலகம் முழுவதிலுமிருந்தும் மக்கள் தங்கள் வாழ்நாளில் இதைப் பார்க்க வருகை தருவார்கள். இங்கு அனுகூலமிக்க திட்டவட்டமான சூழல் வியாபித்திருக்கும். மெஹராஸாத் இப்போது எனது வாழ்விடம். மெஹரா பூந்தோட்டத்தை கவனித்துக் கொள்கிறார்.”**

பாபா கேட்டார், **“உங்களில் யார் யார் நாளை அஹமதுநகருக்குச் செல்லவில்லை?”** பல்வேறு காரணங்களுக்காக சுமார் 20 பேர் பூனாவில் தங்கயிருந்தனர்.

பாபாவின் சைகைகளுக்கு விளக்கம் அளித்த எரச், **“ஜீன் (ஷா), நீங்களும் செல்ல வேண்டும் என்று பாபா விரும்புகிறார். இந்தப் புனித பயணத்தில் நீங்கள் உயிரைத் துறந்தால் என்னவாகும்? நான் இறுதியாக ஓய்வெடுக்கும் இடத்திற்கு செல்லும் வழியில் நீங்கள் உயிரைத் துறப்பதானால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.”** ஜீன் சிரித்துக் கொண்டே தலையசைத்தார்.

மோனா, மனோகர் ஸாக்கரே இருவரும் பாபாவிடமிருந்து விடைபெற உள்ளே நுழைந்தனர். அவர்கள் கண்ணீருடன் அவரைத் தழுவியபோது, பாபா அவர்களின் முதுகில் லேசாகத் தட்டினார். கூட்டத்தின் ஒரு கட்டத்தில், பாபா, மோனாவை மேடைக்கு அழைத்தார். பாபா மீது கோபமாக இருந்ததால், முதலில் அவர் வர மறுத்துவிட்டார். மோனாவின் உடல்நிலை சில காலமாக மோசமாக இருந்தது; அவர் மருத்துவமனைகளுக்கு பலமுறை அலைய வேண்டியதாயிற்று. அவரை மேடைக்கு அழைத்து வர பாபா, எரச்சை அனுப்பியபோது அவர் வந்தார். பாபா அவரிடம், **“நீங்கள் எவ்வளவு கஷ்டங்களை எதிர்கொண்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் எனக்காக நீங்கள் இந்தக் கடுகளவு கஷ்டத்தைக் கூட தாங்க மாட்டீர்களா? முழுப் பிரபஞ்சத்திற்காகவும் நான் துன்பங்களை அனுபவிக்கிறேன். எனது துன்பத்தில் நீங்கள் சிறிதளவேனும் பகிர்ந்து கொள்ள மாட்டீர்களா?”** மோனா அடக்கமுடியாமல் கதறி அழுதார். பாபா அவரது கைக்குட்டையைக் கொடுத்து, கண்ணீரைத் துடைத்து, அவருக்கு ஆறுதல் கூறினார்.

பாபா அணிந்திருந்த மலர்மாலை ஒன்றை எலிஸபெத்திடம் கொடுத்து, மர்டில் பீச் மையத்திற்கு எடுத்துச் சென்று, பாதுகாப்பாக வைக்குமாறு அறிவுறுத்தினார்.

கிட்டி டேவி இந்தியாவில் பாபாவுடன் பதினைந்து வருடங்கள் (1937-1952) வாழ்ந்தார்; ஆனால் 1952ஆம் ஆண்டு பாபாவின் அமெரிக்க விஜயத்தின் போது, அவரை மர்டில் பீச் மையத்தில் தங்குமாறு அறிவுறுத்தினார். குருபிரசாத்தில் இருந்த இந்தத் தருணத்தில், கிட்டி, பாபாவிடம், 'இந்தியாவிற்குத் திரும்பி வந்து அவருடன் இருக்கும் வாய்ப்பை பாபா வழங்குவாரா?' என்று கேட்டார். அவர் '**மர்ட்டில் பீச் மையத்தில் தங்கி எலிஸபெத்திற்கு தொடர்ந்து உதவியாக இருக்க வேண்டும்**' என்று பாபா பதிலளித்தார். இங்கிலாந்தில் வாழும் அவரது சகோதரர் ஹெர்பர்ட்டை சந்திப்பதற்காக, அவர் திரும்பிச் செல்லும் பயணத்தை லண்டன் வழியாக மேற்கொள்ள அனுமதித்தார்; மேலும், வில் பேக்கெட் அவரது உடல்நலக் குறைவு காரணமாக, சகவாசத்தில் கலந்து கொள்ள இயலாததால் அவரையும் சந்திக்க பாபா அனுமதித்தார். கிட்டி டேவி எப்படி உணர்ந்தார் என்பதை நினைவு கூர்ந்தார்:

இது எனது வாழ்க்கையின் மிகவும் சோகமான நாள் என்பதை ஒப்புக்கொள்வேன் என்று நான் நினைக்கிறேன், 'நான் நிச்சயமாக திரும்பி வந்து முழு மனதுடன் மேற்கில் என் இல்லத்தை உருவாக்க வேண்டும்' என்பதை உணர்ந்த சோகம். 1962ஆம் ஆண்டு வரை, ஒரு நாள் பாபா என்னை அழைப்பார், நான் மீண்டும் இந்தியாவிற்குத் திரும்பி வந்து, அவர் அருகாமையில் வாழ்வேன் என்ற மங்கலான நம்பிக்கை ஒன்று இருந்தது.

இனி பாபாவைப் பார்க்க முடியாது என்று கிட்டி உணர்ந்தார், அவர் உணர்வு சரியாகத்தான் இருந்தது. கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான மேற்கத்திய அன்பர்களுக்கு, பாபாவின் சகவாசத்தில் இருப்பது அவர்களின் இறுதி வாய்ப்பாகும்.

மறுநாள் அஹமதுநகருக்கு அவர்களின் பேருந்து பயணத்தைப் பற்றி தொடர்ந்து கூறிய பாபா, "**டான் மற்றும் டாக்டர் பரூச்சா உங்களுடன் வருவார்கள். ஃபிரான்சிஸ், நீங்கள் செல்கிறீர்களா? வழியில் எவரும் உயிரைத் துறக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாக ஜீன்**," என்று அவர் கிண்டல் செய்தார், "**கவலைப்படுவதைக் கைவிடுங்கள்!**"

பாபா மேலும் கூறினார், "**நீங்கள் அனைவரும் நாளை காலை ஆறு மணிக்குப் புறப்படுவீர்கள். 'உங்களுக்கு, பேருந்தில் சிற்றுண்டி வேண்டுமா அல்லது உங்கள் ஹோட்டல் அறைகளில் தேநீரும், ரொட்டியும் வேண்டுமா?' என்று மெஹர்ஜி அறிய விரும்புகிறார்**" பாபா அவராகவே, "**சிற்றுண்டி வேண்டாம்!**" என்று முடிவு செய்தார்.

பாபா, சார்லஸ் பர்டமிடம், "**என்ன யோசனை செய்கிறீர்கள்? ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?**" என்று கேட்டார்.

“ஏனெனில் இதுவே கடைசி தருணம்” என்று சார்லஸ் பதிலளித்தார்.

நான்கு பேர் பாபாவிடமிருந்து விடைபெற உள்ளே நுழைந்தனர்; பாரசீக மொழியில் பேசி, ஈரானில் அவரது பணியைத் தொடர பாபாவிடம் பிரார்த்தனை செய்தனர். பாபா அங்கிருந்த அனைவருக்கும் இவ்வாறு கருத்துரைத்தார்:

**முகமதியர்கள் வெறியர்கள். ‘கடவுள் மனித உருவில் பூமியில் வந்துள்ளார்’ என்று ஈரானில் எவரேனும் கூறுவதானால், அவர் படுகொலை செய்யப்படுவார். பெரிய துணிச்சல் வேண்டும். மீண்டும் மீண்டும் அவதார புருஷர் பூமியில் வருகிறார் என்ற கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளும் இந்தியாவைப் போல் இல்லை. ஆனால் முஸ்லிம்களின் இதயங்கள் கூட மாறிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் புரிந்துகொள்ளும் அடுத்த கணமே, ஒருவேளை நான் என் உடலை கைவிடும் நேரத்தில் அவர்களில் ஒரு பெரிய கூட்டம் உருவாகும். அவர்களின் வெறித்தனமான இயல்பு காரணமாக, அவர்கள் இங்கு, பயண ஆவணங்கள் இல்லாமல் கூட வருவதைத் தடுக்க முடியாது!**

**இவை அனைத்தும் அறியாமை. கடவுள் ஒருவரே உண்மையானவர், உளதாயிருப்பவர். ஒருமுறை நீங்கள் ஏக இறைவனான அவரை உங்களுக்குள் பார்க்க முடிந்தால், அப்போது அனைத்தும் ஆனந்தம். இந்த ஆனந்தம் கற்பனை செய்ய முடியாதது.**

**அந்த ஆனந்தத்தை உங்களால் கற்பனை செய்ய முடியாத போது, அந்த எல்லையற்ற அறிவைப் பற்றி என்னென்பது? நொடிப்பொழுதில் அடையப்பெறும் அந்த அறிவு! கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய அறிவு! இந்த எல்லையற்ற அறிவே கடவுளை சர்வ வல்லமையுள்ளவராக ஆக்குகிறது. அவர் எல்லாவற்றையும் அறிந்திருப்பதால், அவர் ஒன்றை அறிவதற்காக எதையும் செய்ய வேண்டியதில்லை. இந்த அறிவு, மனதின் செயல்பாட்டிற்கு அப்பாற்பட்டது.**

அமெரிக்க ஸூஃபிகளில் சிலர், இன்று காலை பாபாவுக்காக ஒரு குறும் நாடகத்தை நிகழ்த்த முடியுமா என்று மணியிடம் கேட்டனர், பாபாவிடம் அந்த யோசனையை முன்வைத்த போது அவர் அதற்கு இணக்கம் தெரிவித்தார். கலீத் அல்-ஃபாகிஹ் (KHALED AL-FAQIH), கேரி முல்லின்ஸ் (GARY MULLINS), பிரைனர் மெல் (BRYNER MEHL) ஆகியோருக்கு பாபா பரிந்துரைத்த மூன்று தொழில்களைக் குறித்து நையாண்டி செய்யும் விதத்தில், முந்தைய நாள் இரவு தன்னிச்சையாக உருவாக்கப்பட்ட குறும் நாடகம் இது. இந்த நிகழ்ச்சியின் தலைவர் சார்மியன் டியூஸ் (CHARMIAN DUCE) ஒலிவாங்கியில் இவ்வாறு தொடங்கினார்: “இன்று காலை பாபாவின் குழந்தைகளில் சிலர் ‘உங்கள் மீதான எங்கள் சிறிய நகைச்சுவைகளை மன்னிப்பீர்களாக! கடவுளே, நாங்கள், எம்மீதான உமது பெரிய நகைச்சுவையை மன்னிப்போம்’ என்ற தலைப்பில் ஒரு சிறிய பொழுதுபோக்கு நாடகத்தை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறார்கள்!” கலீத் மருத்துவர் வேடமிட்டு வந்து, பாபாவின் இதயத்துடிப்பைக் கேட்க, அவர் மீது சாய்ந்து, “ஓ பாபா, உங்கள்

இதயம் மிகவும் பெரிதாக உள்ளது!"…. அவரது நாடித் துடிப்பை உணர்ந்த அவர், "ஓ பாபா, உங்களுக்கு மிக அதிகமான இரக்க அழுத்தம் (HIGH GRACE PRESSURE) உள்ளது!… பாபா, நான் உங்கள் தொண்டையின் நிலையை சோதிக்க வேண்டும். தயவுசெய்து உங்கள் வாயைத் திறந்து 'ஓம்' என்று சொல்லுங்கள்!" என்ற வசனங்களை மொழிந்தார்.

பாபா மிகவும் பணிவுடன் தலையை அசைத்து மறுத்தார். பின்பு, கலீத், பாபாவைக் குணப்படுத்த மருந்துச் சீட்டு எழுதித் தருவதாகக் கூறினார். நாடகத்தின் உச்ச கட்டத்தில் நுழைந்த பாபா, தனது கைகளை விரித்து, அத்தகைய வாய்ப்பை நினைத்து பயந்து போவது போல நடித்தார். கலீத் வெளியேறத் தொடங்கிய வேளையில், பாபா அவரை மீண்டும் அழைத்து, "டாக்டர், 700 ஆண்டுகளுக்கு என்னைத் தூங்கவிடாமல் தடுத்தால், நான் நீங்கள் பரிந்துரைத்த மருந்துச் சீட்டை எடுத்துக் கொள்கிறேன்!" என்றார்.

டாக்டர் கலீத் அவருக்கு உறுதியளித்த போது, சார்மியன் தேவையான மருந்தின் பட்டியலை வாசித்தார்: "… 2 சிசி அளவு 'அதீத ஆர்வம்' (URGE)… 1 பெரிய தரிசனத்தின் தெய்வீக மதுபான கலவை (DARSHAN COCKTAIL)…" பாபா இதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அப்போது 3-பி மாடு வேடமிட்டு உள்ளே நுழைந்தார். பிரைனர் மெல், கிருஷ்ணர் வேடத்திலும், கலீத் ஓர் 'அழகான' கோபியாகவும் நடித்தனர்.

பெஹ்ராம் கிழக்கு-மேற்கு சகவாசத்தை காணொளி படமாக்கிக் கொண்டிருந்தார், மேலும் குருபிரசாத்தின் படிக்கட்டுகளில் பாபா மற்றும் மேற்கத்திய அன்பர்களின் சில 'பிரியாவிடை' காட்சிகளைப் புகைப்படம் எடுக்க விரும்பினார். நாடகம் நிறைவடைந்ததும், அனைவரும் பாபாவுடன் சூரிய ஒளியில் வெளியே செல்லவே, காணொளி படப்பிடிப்பு நடந்தது.

காலை 9:25 மணிக்கு, பக்கவாத்திய கலைஞர்கள் கோல்வல்கர், காமத் இருவரும் முறையே ஸாரங்கி மற்றும் தபேலாவில் ஒரு மணி நேரம் இசை நிகழ்ச்சியை நடத்த முன்வந்தனர். பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க, இசைக்கலைஞர்கள் பாரம்பரியமான 'மணமகள்' பாடலை வாசித்தனர், இது ஒரு புதிய இந்திய மணமகளின் திருமணத்தைச் சித்தரிக்கும் ஒரு மகிழ்ச்சியான காட்சி, ஆனால் அவளுடைய பெற்றோரின் இல்லத்தை விட்டு வெளியேறுவது வருத்தத்தை வெளிப்படுத்தியது. பெரும்பாலான மேற்கத்திய அன்பர்கள் எப்படி உணர்ந்தனர் என்பதற்கு பொருத்தமான ஓர் இசைத் தேர்வு.

பென் ஹெய்மனிடம் பாபா கேட்டார், **"பென், இன்று உங்கள் மகிழ்ச்சியின் அளவீடு எவ்வளவு?"**

டாக்டர் ஹெய்மன் பதிலளித்தார், "நூற்றைம்பது சதவீதம்!"

ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தங்கள் இறுதி அரவணைப்பைப் பெற வருமாறு பாபா சைகையால் தெரிவித்தார். சிலர் உடனடியாக முன்னோக்கிச்

சென்றனர், பிறர் அங்கேயே நின்றனர். ஒரு சிலர் பாபாவின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினர். சிலர் பாபாவின் பாதங்களில் முத்தமிட்டு, பிரிவை நினைத்து அழுதனர், மற்றும் சிலர் துயரார்ந்து உறைந்து நின்றனர். பாபா அவர்களிடம் கூறினார்: "**மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் இருங்கள்**!"

93 வயதான ரத் ஒயிட் இடைப்பட்ட நடைபாதை வழியாக உதவியின்றி நடந்து வந்து பாபாவைத் தழுவியபோது, அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். "**எனது படை வீரர்**!" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

ஜேன் ஹெய்ன்ஸ் பாபாவின் பாதங்களை முத்தமிட்ட பின்னர் ('எனது முழு வாழ்க்கையின் உச்சம் அந்தத் தருணத்தில் இருந்தது, என்று அவர் கூறினார்), பாபா அவரிடம், "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா**?" என்று கேட்டதற்கு, அவர் தலையசைத்ததும், பாபா அவரிடம் உறுதிப்பட தெரிவித்தார், "**நான் கிறிஸ்து, நான் கிறிஸ்து, உங்கள் கண்களைத் திறந்து என்னை எனது உண்மை ரூபத்தில் பாருங்கள்**."

பாபா அவருக்கு ஒரு சிறு குழந்தையைப் போலத் தோன்றினார், "மிகச் சிறியவர், நீங்கள் அவரை மிகவும் இலகுவாகத் தூக்கி இருக்கலாம்," என்று அவர் நினைவு கூர்ந்தார்.

ஜேன் ஹெய்ன்ஸின் மகள் வெண்டி, இசை நிகழ்ச்சியின் போது பாபாவின் நாற்காலிக்கு அருகில் தரையில் அமர்ந்திருந்த சிறுமியை, பாபா எழுப்பும் வரை சில நிமிடங்கள் தூங்கி விழுந்தார். இந்தப் பயணத்தில் பாபாவை சந்திக்கும் முன்பு, வெண்டி வெட்கமாகவும், தன்னைப் பற்றி பிறர் எண்ணுவது குறித்த சுய உணர்வுடனும் இருந்தாள். அந்த சிறுமிக்கு இப்போது வயது பதினொன்று, மேலும், பாபா யார் என்பதை நன்கு அறிந்திருந்தார். ஆனால், அந்த முதல் நாள் சந்திப்பில் பாபா அவளைத் தழுவியதும், அவளது கூச்சம் மறைந்து மீண்டும் அவருடன் இருக்கும் ஆர்வத்தில் இருந்தாள். ஒரு கட்டத்தில், அவள் மிகவும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்துக்கொண்டும் இருந்தாள், பாபா அவளை தனது '**துள்ளி ஓடும் மான்**' என்று அழைத்தார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா வெண்டியிடம், "**உங்கள் அம்மா, பாபா இருவரில் யாரை நீங்கள் அதிகம் நேசிக்கிறீர்கள்**?" வெண்டி, 'அம்மா…' என்று சொல்லப் போனவள், தன்னைத்தானே கட்டுப்படுத்தி, "ஓ, நீங்கள் பாபா!" என்றதும், பாபா சிரித்துக்கொண்டே, "**உங்கள் தாயின் மீதான உங்கள் அன்பு எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. என் அன்பில் எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

அவர் தனது இறுதி அரவணைப்புக்காக முன் வந்தபோது, வெண்டி ஹெய்ன்ஸ் இவ்வாறு விவரித்தார்:

எனது முறை வந்ததும், நான் பாபாவின் ஓர் அடி இடைவெளிக்குள் வந்தேன்; திடீரென நான் கீழே அல்லது பாபா மேலே பார்க்கையில் எங்கள் கண்கள் சந்தித்தன. எல்லாமே நின்றுவிட்டது போன்ற ஓர் உணர்வு. அறையில் இருந்த அனைத்தும் மறைந்தன. நானும் காணாமல் போனது போல்

உணர்ந்தேன். நான் அங்கு இல்லை, ஆனால் பாபாவிடமிருந்து அத்தகைய அன்பை உணர முடிந்தது; எங்களுக்கிடையே ஓர் அன்பின் வட்டம் ஓடுவது போன்ற ஒருமைப்பாடு; ஆனால் என்னைப் பற்றிய உணர்வு எனக்கு இல்லை. பாபாவின் கண்களில் மூழ்குவது போல் உணர்ந்தேன். நான் உண்மையில் பின்னோக்கி விழுகிறேன் என்று நினைத்த அந்த கணத்தில், நான் அடையப்பெற்ற அனுபவம் நின்றுவிட்டது. பாபா என்னைப் பார்த்தார், அவருடைய கண்கள் "அது எப்படி?" என்று கேட்பது போல மின்னியது. அதன் பின்பு நான் என் அரவணைப்பைப் பெற முன்னால் சென்றேன்.

நான் பாபாவுடன் இருக்கும் போதெல்லாம், நேரம் நின்றுவிட்டதாக உணர்ந்தேன். ஆரம்பம், முடிவு என்ற உணர்வு எனக்கு இல்லை. அது என்றென்றும் என்னில் நிலைத்திருப்பதாகத் தோன்றியது.

ஆன் கான்லன் தரிசனத்தின் போது, பாபா அவர் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தாத கலக்கத்தில் இருந்தார். பாபா உண்மையில் அவரிடமிருந்து விலகத் தொடங்கியதைப் போல் அவர் உணர்ந்தார். ஒரு முறை, மதிய நிகழ்ச்சியின் போது, பாபா தன்னைப் பார்க்கும் வரை நகர வேண்டாம் என்ற உறுதியுடன், மேடையின் தாழ்வாரத்தில் நிற்கச் சென்றார். அவர் மீது பாபா சுழற்றிய ஒரு பார்வை, '**சரி**, **நான் உங்களைப் பார்த்துவிட்டேன்**; **இப்போது போய் அமருங்கள்**!" என்று கூறுவது போல் இருந்தது.

பாபாவின் கடைசி அரவணைப்பைப் பெற்றுக்கொண்டு, அவரிடமிருந்து விடைபெறுவதற்கு முன்பு, பாபாவை முத்தமிட குனிந்தபோது, பாபா அவரைத் தழுவி இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்; ஆன் மகிழ்ச்சியில், "நன்றி, பாபா, நன்றி" என்று கிசுகிசுத்தார். பாபாவின் வெளிப்பாடு ஒளிமயமாக இருந்தது. அவர் தலையை அசைத்தார், ஆன் அவர் கூற விரும்புவதை அறிந்துகொண்டார்; "**நீங்கள் வந்ததைப் போல மகிழ்ச்சியாக சென்று வாருங்கள்**, **அதுவே வழி**!"

பாபா தனது இருக்கையிலிருந்து எழுந்து, '**அன்று மதியம் எவரும் குருபிரசாத்திற்கு வர வேண்டாம்**' என்று எச்சரித்தார். மேலும், "**ஹாரி**, **தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளாதீர்கள்**!" தனது பார்வையை ஒருமுறை சுழற்றி, பாபா மெதுவாகத் தன் அறைக்குச் சென்றார். அனைவரும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர், அவர் வெளியேறும் அந்த நிமிடத்தில் அவர்கள் கண்ட பாபாவின் உருவத்தை தங்கள் இதயங்களில் தக்க வைத்துக் கொள்ளும் ஆர்வத்தில் இருந்தனர்.

காலம் இதை இவ்வாறு கூறி முடித்தது: "கிழக்கு-மேற்கு சகவாசம், பல பறவைகளுக்கு இறைவனின் தோட்டத்தைப் பற்றி அறியும் வாய்ப்பாக அமைந்தது; மேலும், அதன் மலர்களின் வாசனையை நுகர்ந்து, பறவைகள் தத்தமது உறைவிடங்களுக்குச் சென்றன. ஆனால் அங்கு அவை தங்கள் கூடுகளைக் கட்டி நிரந்தரமாக வாழத் தொடங்குவதற்கு முன்னதாக, அவை பூக்கள், பழங்கள், மரங்கள், நீர், சூரிய ஒளி - வேறுவிதமாகக் கூறினால்,

கீழ்ப்படிதல் மற்றும் சரணடைதல் பற்றி கற்றறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது."

காலையில் நடந்த கூட்டத்திற்குப் பின்னர், ஐந்து நிமிடம் நெட் ஃபுட்டுடன் பாபா ஒரு குறிப்பிட்ட விஷயத்தைத் தனியாக விவாதித்தார். கூட்டத்தின் போதும், இதர நேரங்களிலும் அவருடன் தனிப்பட்ட முறையில் பேசினார். நெட் அதை நினைத்து ஆச்சரியப்பட்டார். "பாபா ஏன் என்னுடன் இவ்வளவு நேரம் செலவிடுகிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை," என்று எலிஸபெத்திடம் அவர் குறிப்பிட்டார். "என்னை விட ஆன்மீகத்தில் முன்னேறியவர்கள் நிறைய பேர் இங்கே இருக்கிறார்கள்."

"ஓ, அது மிகவும் எளிது," எலிஸபெத் பதிலளித்தார். "பாபா 'கச்சா' பொருட்களை (RAW MATERIALS) அதிகம் விரும்புகிறார்!"

அன்று பிற்பகல் அடெல் வோல்கின் பாபாவை மீண்டும் தனது செவிலியர் மருத்துவப் பணியைப் பற்றிக் கேட்க சந்தித்தார்; மேலும், மருத்துவப் பொருட்களையும் பரிசாக வழங்கினார். மும்பையில் செவிலியர் படிப்புக்காக இந்தியா வர அடெல், பாபாவால் அனுமதிக்கப்பட்டார். ஏறக்குறைய ஒரு வருடமாக இது பற்றிய கடிதப் பரிமாற்றம் நடந்து கொண்டிருந்தது. முதலில், அவர் ஜூன் மாத இறுதியில் ஆறு மாதங்களுக்காக வர வேண்டியிருந்தது, ஆனால் பாபா அவரது வருகையை 1962 அக்டோபர் 19 வரை ஒத்திவைத்தார். அவர், மும்பை, பரேல், வாடியா மகப்பேறு இல்லத்தில் (WADIA MATERNITY HOME IN PAREL) ஒரு வேலையை ஏற்றுக்கொண்டார்.

பாபா அப்போது அவரிடம் குறிப்பிட்ட சில விஷயங்கள்: **"ஒரு வருடத்திற்குள், நான் எனது மௌனத்தைக் கலைப்பேன், பின்னர் என் உடலைக் கைவிடுவேன். எனது மகிமை ஒரு வருடம் நீடிக்கும். எனது மௌனத்தைக் கலைக்கத் தேவையான உந்துதலுக்காக, என்னைத் தயார் செய்ய நான் பொறுமையிழந்த நிலையில் இருக்கிறேன்.**"

அடெல் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவரிடம், **"நீங்கள் அக்னிப் பெருங்கடலைக் கடந்து, உயிருடன் வெளியே வர வேண்டும்"** என்றார்.

அன்று மதியம் 5:00 மணியளவில் பாபாவைப் பார்த்த மற்றுமோர் அன்பர் சார்லஸ் பர்டம் ஆவார்; அவர் பாபாவின் முதல் ஆங்கில வாழ்க்கை வரலாறு 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) தொகுப்பின் திருத்தம் செய்யப்பட்ட பதிப்பைப் பற்றி விவாதித்தார் (பின்னர் விரிவுபடுத்தப்பட்டு 'தி காட்-மேன்' - (THE GOD-MAN) என வெளியிடப்பட்டது). பாபா அவரை ஒரு மணி நேரம் சந்தித்து, புத்தகத்திற்கான சில கருத்துகளை விளக்கினார். (ஆதி, பால் நாத்து இருவரும் கையெழுத்துப் பிரதியை வாசித்து திருத்தம் செய்து கொண்டிருந்தனர்.)

ஒரு கட்டத்தில் பர்டம், பாபாவிடம் அவருடைய பெயரில் ஓர் 'இயக்கம்' அல்லது 'தேவாலயம்' நிறுவுவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார், **"உருவ வழிபாடு மற்றும் சடங்கு**

**சம்பிரதாயங்கள் குறித்து நான் கூறியது போதுமானது.**" பின்னர் அவர் தோள்களைக் குலுக்கிக் கூறினார், "**ஆனால் மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்று உங்களுக்குத் தெரியும்.**"

பர்டம் புறப்படுவதற்கு முன்னர், அவர் பாபாவைப் பார்ப்பது இதுவே கடைசி முறை என்பதை அறிந்த பாபா அவரது இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்.

1962 நவம்பர் 6 செவ்வாய்கிழமை காலை 6:00 மணிக்கு, மேற்கத்திய அன்பர்கள் நான்கு பேருந்துகள் மற்றும் ஐந்து கார்களில் மெஹராபாத், மெஹராஸாத் மற்றும் அஹமதுநகர் மையத்திற்குச் சென்றனர்.

முதலாவதாக அவர்கள் மெஹராஸாத் சென்ற போது, அங்கு காக்கா, ஃபிரான்சிஸ் இருவரும் அவர்களை ஒரு சுற்றுப்பயணத்தில் அழைத்துச் சென்றனர். மஸ்தை ஒத்த மனிதர் பாராகோட்டியும் அங்கே இருந்தார். அடுத்ததாக, அஹமதுநகர் மையத்திற்குச் சென்றபோது, அங்கு ருஸ்தம் காக்கா பஜனைகள் பாடவே, நடன நிகழ்ச்சியுடன் ஆராதனை நடைபெற்றது. விலூ வில்லாவில் காலை சிற்றண்டி மற்றும் மதிய உணவை ஸரோஷ் வழங்கினார். பின்னர் அவர்கள் மெஹராபாத்திற்கு விஜயம் செய்தபோது, அங்கு அவர்கள் பாதிரி, டாக்டர் டான் ஆகியோரால் சுற்றுப்பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேற்கத்திய அன்பர்கள் ஒவ்வொருவரும் பாபாவின் சமாதியில் மரியாதை செலுத்தி வணங்கினர்.

அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு, பூனாவிற்குத் திரும்பி வந்து, அவர்கள் குருபிரசாத் அரண்மனையைக் கடந்து செல்லும் போது, 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று எழுப்பிய குரல் முழக்கத்தை, பாபாவும் கேட்டுக் கொண்டிருந்தார். தனது அறையில் அமர்ந்த வண்ணம், ஒவ்வொரு பேருந்தும் கடந்து செல்லும் போதும், பாவ் கல்சூரியை அனுப்பி, கைகளை அசைத்து தனது அன்பை வெளிப்படுத்தினார். அன்பால் நிரம்பி வழிந்த பாபா, அன்பர்களில் பலரை நினைத்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரின் இதயத்தையும் தன்னுடன் வைத்து அன்புடன் வழிபட்டு வந்தார்.

பெரும்பாலான மேற்கத்திய அன்பர்கள் மறுநாள் அதிகாலையில் பூனாவை விட்டு வெளியேறினர். எஞ்சியிருந்தவர்கள், டைகர் பள்ளத்தாக்கில் அமைந்த பாபாவின் குகையைப் பார்க்க பஞ்சகணி மற்றும் மஹாபலேஷ்வருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கராச்சி குழுவினர் பாகிஸ்தானுக்குத் திரும்புவதற்காக அன்றிரவு புறப்பட்டுக் கொண்டிருந்தனர், பாபா அவர்களை பகலில் குருபிரசாத்தில் இறுதி முறையாக சந்தித்தார்.

1962 நவம்பர் 7ஆம் தேதி, பூனா மையத்தின் சேவகர்களை குருபிரசாத் வருமாறு பாபா அழைத்தார். அவர்களில் பெரும்பாலோர் பள்ளிக்கூடங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் பல்வேறு ஏற்பாடுகளுக்காக ஏதாவது ஒரு கடமையில் ஈடுபட்டிருந்தனர், மேலும் அவர்களுக்கு பாபாவை சந்திக்கும்

வாய்ப்பு குறைவாகவே இருந்தது. அனைவரும் இரவும் பகலும் கடுமையாக உழைத்தனர், பாபா ஒவ்வொருவரையும், குறிப்பாக, ராமகிருஷ்ணனைப் பாராட்டி அரவணைத்தார். மேற்கத்திய அன்பர்களுக்கு வேண்டியவற்றை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டிருந்தவர்களையும் பாபா சந்தித்தார் (ஜால்பாய், ஜெஹாங்கு, மெஹர்ஜி மற்றும் மெஹர்வான்). ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக இருந்தன, மேலும் அனைத்தும் வசதியாகவும் திருப்திகரமாகவும் அமைந்தன. பாபா அவர்களுக்காக சில வார்த்தைகளை மொழிந்து பாராட்டினார். மேலும், சகவாச நிகழ்ச்சிகளின் போது பஜனைப் பாடல்களில் பங்கெடுத்த மதுசூதன், சுபத்ரா, பிரதாப், நரேந்திர தாடே ஆகியோருக்கு பாபா தனது பாராட்டுக்களை வழங்கினார். அன்று காலை மும்பை குழுவையும் பாபா சந்தித்தார்.

நவம்பர் 7ஆம் தேதி மதியம், தாமதமாக வந்த ஆஸ்திரேலிய அன்பர்களையும் பாபா சந்தித்தார். கிளாரிஸ் ஆடம்ஸ் அழைக்கப்பட்டபோது, பாபா அவரது கணவர் ஸ்டானைப் பற்றி கேட்டார். “பாபா, அவரால் இன்னும் சிரிக்க முடியும் என்பதை உங்களுக்குத் தெரிவிக்குமாறு அவர் கூறுகிறார்,” என்று கிளாரிஸ் பதிலளித்தார்.

பாபா, கிளாரிஸைத் தழுவி, “**நீங்கள் இல்லம் திரும்பியதும், ஸ்டானையும் ஒவ்வொரு குழந்தைகளையும் கட்டித் தழுவுங்கள். அது அவர்களுக்கு பாபாவின் அரவணைப்பாகவும் அன்பாகவும் இருக்கும்**” என்று சைகையால் தெரிவித்தார்.

பில் லே பாஜின் மகன் மைக்கேலுக்கு உடல்நிலை சரியில்லாததால், பாபா அவரையும் அவரது தாயார் ஜோனையும் நவம்பர் 8ஆம் தேதி சந்தித்தார்.

1962 நவம்பர் 10 சனிக்கிழமையன்று பாபா, ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து மெஹராஸாத் திரும்பிச் சென்றார். ஆதி, பாபாவை மெஹர்ஜியின் காரில் அழைத்துச் செல்லவே, அனைவரும் பின்தொடர்ந்தனர். காலை 8:00 மணிக்கு பூனா அன்பர்கள் ஒன்றுதிரண்டிருந்த பந்த் கார்டனில் பாபா சிறிது நேரம் நின்றார். எலிஸபெத், கிட்டி, ஜேன், வெண்டி-சார்லஸ் ஹெய்ன்ஸ், டார்வின் ஷா குடும்பத்தினர், ரத் ஒயிட், பிலி ஈட்டன் உட்பட சுமார் 65 மேற்கத்திய அன்பர்களும் அவருக்காக அங்கே காத்திருந்தனர். அவர்கள் திரும்பிச் செல்லும் விமானங்களை முன்பதிவு செய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அவர்கள் தாமதமாக வந்தனர். பாபா சிறிது நேரம் நாற்காலியில் அமர்ந்து ஆரத்தி நிகழ்த்திய பின்பு, புறப்பட்டுச் சென்றார். பாபாவின் அன்பர்கள் காரிலிருந்த பாபாவின் கையில் முத்தமிட அவரது காரைச் சுற்றி வந்தனர்.

காலம் இதை இவ்வாறு அவதானித்தது. கிழக்கு-மேற்கு சகவாச காட்சிகள் மெய்சிலிர்க்கும் விதத்தில் மகிழ்ச்சியாக இருந்தது. பாபாவின் அன்பில், ஏராளமான தனிநபர்கள் ஒரே குடும்பமாக உருவெடுத்தனர்; இதன் மூலமாக ஜாதி, இனம், பிரிவு, வர்க்கம் மற்றும் மத வேறுபாடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. இந்தக் காலச் சுழற்சியில் முதன்முறையாக காலம் இது

போன்ற ஒரு காட்சியைக் காண நேர்ந்தது. முழுப் பிரபஞ்சத்தின் தந்தை மற்றும் அதன் அனைத்து குடிமக்களும் அவரது குழந்தைகள் என்று அவதார புருஷர் பறைசாற்றியபோது, காலம் அதற்கு கவனத்துடன் செவிமடுத்தது. கிழக்கும் மேற்கும் மட்டுமல்ல, மனிதகுலத்தின் ஒரு சிறிய பகுதி ஒரே குடும்பமாக மாறியது; இது பல ஆண்டுகளாக, அனைத்து மனிதகுலத்தின் உலகளாவிய குடும்பமாக தழைத்தோங்கும். இதை எளிதாக்க உதவும் வகையில் காலம் அதன் பதிவுக்காக பல பொருட்களை சேகரித்தது.

ஜேன் ஹெய்ன்ஸ் இந்த தனித்துவம் நிறைந்த சகவாசத்தில் பங்கெடுத்த பலரின் உணர்வை அவர் இவ்வாறு சுருக்கமாகப் பதிவு செய்தார்:

கிழக்கு-மேற்கு சகவாசம் முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஒரு சம்பவம். பாபா, ஒருமைப்பாடு என்று அழைப்பதை நாங்கள் எங்கள் வாழ்வில் அனுபவித்த ஒரே காலகட்டம். நீங்கள் அதைப் பற்றி கேள்விப்பட்டு, பாபா கூறுவதுபோல், அவரை எல்லோரிடமும் காண முயற்சி செய்ய வேண்டும், நாம் அனைவரும் ஒன்று என்பதைப் பற்றிப் படித்துப் புரிந்து கொள்ள முயல வேண்டும், ஆனால் நமது தவறான சுய அகந்தையின் காரணமாக, அதைக் கேட்பது ஒன்று, அனுபவிப்பது மற்றொன்று.

நாங்கள் உண்மையில் ஒரே கூரையின் கீழ் ஒருமைப்பாட்டை இதயப்பூர்வமாக அனுபவித்தோம். இனம், ஜாதி, நிறம் என அனைத்து இனத்தவர்களும் ஒன்றாகக் கலந்து கொண்டனர். ஆனால் அங்கே அமர்ந்திருந்த அன்பிற்குரியவர் இசைக் கச்சேரி நடத்துநரைப் போல், அழகான கை அசைவுகளுடன் அதைச் செய்தபோது, அது ஒரே இதயத் துடிப்பாகத் தோன்றியது. நாங்கள் அனைவரும் ஒரு நபராக அங்கு அமர்ந்திருப்பது போன்ற உணர்வு. ஒவ்வோர் ஆத்மாவும் முழு உலகிலும் தான் மட்டுமே இருப்பதாக உணர்ந்தது, மேலும் பாபா ஒவ்வொருவருக்கும் ஏதாவது விசேஷமான ஒன்றைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவருடைய தெய்வீகம் நம்மை அப்படி உணர வைத்தது.



பந்த் கார்டன் (BUND GARDEN) நவம்பர் (NOVEMBER) **1962**



**மேற்கத்திய அன்பர்களுடன், 10 நவம்பர் 1962**
(WITH THE WESTERNERS, 10 NOVEMBER 1962)



மெஹர் பாபா, குருபிரசாத், **1962** (MEHER BABA, GURUPRASAD**,** 1962)



**பிறரை வெறுக்கவும், பிறரைக்
கண்டு பொறாமைப்படவும்,
பிறரைக் கவலையுறச்
செய்யவும் சிலர்
வாழ்கின்றனர்; பிறரை
நேசிக்கவும், பிறரை
மகிழ்விக்கவும் சிலர்
வாழ்கின்றனர். கடவுளோடு
ஐக்கியமானவர் நல்லவர்,
தீயவர் அனைவருக்காகவும்
வாழ்கிறார். மேலும்
கடவுளோடு ஐக்கியமாக,
ஒருவர் தனது சுயத்தை தவிர
வேறு எதையும் துறக்க
வேண்டியதில்லை.**



-அவதார் மெஹர் பாபா